# பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்

முனைவர் தமிழ்க்குடிமகன்

# பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்

(1967 - 1976)

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

வானதி பதிப்பகம்

# பத்தாண்டுத்
# தமிழ்க் கவிதைகள்

(1967 – 1976)

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

வானதி பதிப்பகம்
13, தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : ஆகஸ்டு, 1986
இரண்டாம் பதிப்பு : டிசம்பர், 1997

© T. VETRICHELVI

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 90.00

- TITLE : PATHTHANDU TAMIZH KAVITHAIGAL (1967–1976)
- AUTHOR : Dr. M. TAMILKUDIMAGAN
- LANGUAGE : TAMIL
- SUBJECT : A critical study of the Tamil Poems
- EDITION : SECOND EDITION, DECEMBER 1997
- TOTAL PAGES : xxviii + 324
- PUBLISHED BY : VANATHI PATHIPPAKAM
  13, Deenadayalu Street,
  Thyagaraya Nagar, Chennai – 17.
- PRICE : Rs. 90.00

Laser Typeset at : LKM Computer Prints, Chennai – 17.
Printed at : Ravi Raja Offset, Chennai – 14.

# அணிந்துரை

டாக்டர் வா. செ. குழந்தைசாமி
முன்னாள் துணைவேந்தர்,
அண்ணா பல்கலைக் கழகம், சென்னை

பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (1967–1976) எனும் தலைப்பில் வெளிவரும் இந்நூல் டாக்டர் தமிழ்க் குடிமகன் அவர்களின் ஆய்வுப் படைப்பு; அரிய படைப்பு என்றும் தயங்காது கூறலாம். புதுக்கவிதை, காப்பியங்கள், நாடகங்கள், சிற்றிலக்கியங்கள், குழந்தைப் பாடல்கள், பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள், ஒருவர் பாடிய உதிரித் தொகுப்புகள், தனிப்பாடல்கள் என எட்டு வகைகளாகப் பத்தாண்டுக் கவிதைகளைப் பிரித்துக் கொண்டு ஆராய்கிறார். ஆய்வு செய்யப்பட்ட கவிதைகளின் நோக்கங்கள் பலவாயினும், அவற்றுள் "சமுதாய சீர்திருத்த உணர்வு" பற்றி மட்டும் ஒரு அத்தியாயம் எழுதியுள்ளார். எடுத்துக் கொண்ட காலப் பகுதியில் வெளியான கவிதைகளின் கருப் பொருளில், சமுதாய சீர்திருத்த உணர்வு எல்லாவற்றினும் சற்று அதிகமாக இடம் பெற்றிருப்பது ஒரு காரணமாக இருக்கலாம்.

ஆய்வு செய்த முறை, ஆய்வின் முடிவுகள், அவை கூறப்பட்டிருக்கும் விதம் போன்றவை ஒரு புறமிருக்க, நூலைப் பற்றிப் பொதுவாகக் கூறப்பட வேண்டிய சில கருத்துக்கள் பின்வருவன. பொறுமையோடும், ஆழ்ந்தும், அறுநூறுக்கு மேற்பட்ட கவிதை நூல்களைப் படித்திருக்கிறார். ஒவ்வொன்றின் கருப்பொருள் பற்றிச் சிந்தித்திருக்கிறார். அவற்றின் உள்ளடக்கம் முழுமையையும் மனத்திற்கொண்டு, அறிவு நிலையில் செரிமானம் செய்து, கவிதை நூல்களை எட்டு வகைகளாகப் பிரித்திருக்கிறார். இவை பெரும் பிரிவுகள். ஒவ்வொரு வகையிலும் பல உட்பிரிவுகளை வகுத்துள்ளார். நூலில் இடம் பெற்றுள்ள கருத்துக்களின் தரம், தகுதி ஒருபுறமிருக்க, ஆசிரியர் படித்துப் பயன்படுத்தியுள்ள நூல்களின் பரிமாணம் நம்மைத் திகைக்க வைக்கிறது. டாக்டர்

பட்ட ஆய்விற்குப் பரந்த Literature Survey தேவை என்பதை உணர்கிறோம். எனினும் டாக்டர் தமிழ்க் குடிமகனின் உழைப்பு குறிப்பிடப் பட வேண்டிய ஒன்று.

தலைமுறை தலைமுறையாக நமது முன்னோர்கள் ஆய்வு முயற்சியில் ஈடுபட்டு வந்திருக்கின்றனர்; ஆய்வுணர்ச்சி உள்ளவர்களாக இருந்திருக்கின்றனர். எனினும் இன்று இலக்கியத் துறையாகட்டும், அறிவியல் துறையாகட்டும் ஆய்வு என்னும் பொழுது நாம் அதற்கு மேலை நாட்டார் வகுத்த நெறி முறைகளையே பயன் படுத்துகிறோம்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு

எனும் குறட்பாக்கள் பதவுரை, பொழிப்புரை காணப் பயன்பட்ட அளவிற்குத் தமிழ்ச் சமுதாயத்தின் நடைமுறைக்குப் பயன்படுத்தப் படவில்லை. மொழித் துறையில் பலர் இக்கருத்தை முற்றும் புறக்கணித்து விட்டனர் என்றாலும் மிகையாகாது. ஒரு ஆய்வின் முடிவில் உருவாகும் உண்மை, நமது நம்பிக்கைகட்கும் விழைவுகட்கும் எதிரானதாகத் தோன்றும் பொழுது, அதைத் திறந்த மனத்துடன் ஒப்பும் அறிவியல் பார்வை நம்மிடம் வலுவடையவில்லை. பல சமயங்களில் ஒரு சில கருத்துகளை நம் மனத்தில் வலுப்படுத்திக் கொண்டு அவற்றிற்கு ஆதாரம் தேடுவதையே ஆய்வாக எண்ணுகிறோம். இந்தச் சூழ்நிலையில் டாக்டர் தமிழ்க் குடிமகனின் அணுகுமுறையும், பார்வையும் ஆய்வுலகம் ஒப்பும் நிலை பெற்று நிற்கின்றன.

உண்மை காண்பதற்கு, விருப்பும், வெறுப்பும் எதிரானவை. பற்றும், பாசமும் கூட உண்மையை மறைக்கும் திரைகளே. ஆய்வாளர்கள் விருப்பையும், வெறுப்பையும் துறந்தவர்கள் அல்லர்; பற்றையும் பாசத்தையும் கடந்தவர் களல்லர். தங்கள் ஆய்வில் எந்த அளவிற்கு இவற்றை அடக்கி ஆள்கிறார்கள் என்பதைப் பொறுத்தே ஆய்வின் தரம் அமைகிறது. டாக்டர் தமிழ்க் குடிமகன் தமது மொழிக் கொள்கை, சமுதாயக் கொள்கை ஆகியவற்றுக்குத்தான் ஆளாகாது, அவற்றைத் தனக்குள் அடக்கிப் பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகளை அளவிடுகிறார். இது பாராட்டப்பட

வேண்டிய கூறுபாடு. காய்தல் உவத்தல் இல்லாது காண்பது என்பது, தனக்கென எந்தக் கருத்தும் இல்லாது காண்பது அல்ல. உலகு ஏற்கும் உரைகல்லை வைத்து, ஒவ்வொரு அணிகலனையும் அதன்மாற்று, வடிவ அமைப்பு தோற்ற அழகு ஆகியவற்றின் அடிப்படையில் எடைபோடுவதாகும். ஒவ்வொரு தலைப்பிலும் இடையிடையேயும், பின்னர் இறுதியிலும் தான் கூற வேண்டியவற்றைத் தெளிவாகவே கூறுகிறார். கண்டனமும் பாராட்டும் பண்போடு இருக்கின்றன.

புதுக்கவிதையை விரிவாகவே ஆய்ந்திருக்கிறார். சுமார் மூவாயிரம் ஆண்டுப் பாரம்பரியம் உள்ள தமிழ்க் கவிதை இலக்கியத்தில், புதியவடிவம் என்பது இருபதாம் நூற்றாண்டில்தான் தோன்றியது என்பதில்லை. அகவலி னின்றும் வெண்பா புதிது: வெண்பாவினின்றும் விருத்தம் புதிது: விருத்தத்தினின்றும் நொண்டிச்சிந்து புதிது. தமிழ்க் கவிதையின் வடிவங்கள் பல. காலந்தொறும் தமிழ்க் கவிதை புதிய வடிவங்களைப் பெற்றே வந்திருக்கிறது. ஆனால் ஒவ்வொரு கவிதை வடிவும் ஒரு புதிய மரபை உருவாக்கி யிருக்கிறது. எந்த மரபுமே இல்லாமையை வேண்டுமானால் இன்றைய புதுக்கவிதையின் மரபாகக் கூறலாம். மரபு என்பதே வளர்ச்சியின் அறிகுறி. காட்டு மிராண்டிச் சமுதாயத்திற்கு அவ்வளவாக மரபு கிடையாது. புரட்சியென்பதும், புதுமை யென்பதும் இருக்கின்ற மரபை மாற்றிப் புதிய மரபை உருவாக்குவதேயன்றி, மரபே இல்லாத நிலையை உருவாக்குவ தல்ல. தனிமனிதனாகட்டும், சமுதாயமாகட்டும் தாமாகச் சில தளைகளை ஏற்றுக் கொள்வதன் விளைவுதான் பண்பாடு. கற்பு என்பது ஒரு தளைதான்; திருமணம் என்பதும் தளைதான். திருமணத்திற்கு விலக்களிக்கும் சமுதாயமும் அந்த விலக்கிற்குச் சில விதிகளை உருவாக்கியிருக்கிறது. வாலி கூறியதுபோல, "உணர்வு சென்றுழிச் செல்லும் ஒழுக்கம்" தான் மரபற்ற நிலை. அது மனித நிலையல்ல.

கலைஉலகில் வாணவேடிக்கை புதுமையாகலாம்; அது புரட்சியாகாது. எந்தப்பெரிய மாற்றத்தையும் ஒரு சமுதாயத்தின் வாழ்வில் அது ஏற்படுத்த முடியாது.

**"கற்பனையின் திறன் நாளை இயலும் வாழ்வைக்**
**காணுவது; செயல் உலகக் கண்கள் இன்றிச்**

சொற்சிலம்பம் ஆடுவதும் சூனி யத்தில்
சொர்க்கத்தைக் காணுவதும் புரட்சி அன்று"

தமிழ், கவிதைக்கென்றே உருவாக்கப்பட்ட மொழி; அதன் மூவாயிரம் ஆண்டு இலக்கிய வளர்ச்சியில் கவிதைவளர்ச்சியும் இணைந்தே இருக்கிறது. இந்தப் பெருமை தமிழ் உரைநடைக்கு இல்லை. ஆங்கிலத்தில் இருக்கும் blank verse, sonnet, lyric, limerick, ballad போன்ற எந்தக் கவிதை வடிவத்தையும் தமிழில் எழுதலாம். ஆனால் ஆங்கிலத்தில் வெண்பா எழுத முடியாது. விருத்தம் எழுத முடியாது. காட்டு மரம் கலப்பை செய்யப் பயன்படும். கண்ணன் சிலை செய்யப் பயன்படாது. தேக்கு மரத்தில் கலப்பையும் செய்யலாம்; கண்ணன் சிலையும் செய்யலாம். தேக்கு மரம் போன்று எண்ணற்ற வேலைப் பாட்டுக்கு இடமளிக்கும் ஒரு கவிதை மொழியை நமது முன்னோர்கள் நமக்குத் தந்திருக்கிறார்கள். இழைக்கவும் தெரியாதவர்கள் எளிதில் செய்யும் தரத்தில் அமைந்த ஒரு பொருளை முன்வைத்து, இந்தப் பொருளே முதலும், முடிவும், என்று எழுதுவதும் பேசுவதும் முறையுமாகாது; முதிர்ச்சியுமாகாது. பாரதியை மகாகவி யாக்கியது அவரது வசனகவிதையல்ல. இந்த நூற்றாண்டின் இரண்டாம் பகுதியிலும் உயிர்வாழ்ந்த பாரதிதாசனுக்கு அவர் உள்ளத்தில் பீறிட்டெழுந்த உணர்ச்சி வெள்ளத்தை எழுத்துருவில் கொட்ட மரபு தடையாக இருக்கவில்லை. சிலருக்கு மரபு தடையாக இருக்கலாம்; தளையாக இருக்கலாம். ஆனால் அது எல்லோருக்கும் தடை; எல்லோருக்கும் தளை என்பது ஏற்கத் தக்கதல்ல. மரபைப் படைக்கும் ஆற்றலுள்ளவர்களுக்கு அது தளையாகாது. தமிழ்க்கவிதை எண்ணற்ற வடிவம் பெற்று வந்திருக்கிறது. ஒவ்வொரு புதுவடிவமும் பழைய வடிவம் எனும் தளத்தின் மேல் அமைந்த புதிய தளமேயன்றிப் பழைய வடிவத்தின் சமாதியில் அமைந்த புதிய சின்னம் அல்ல. தமிழ்க் கவிதையின் வடிவ வளர்ச்சியில் புதுக்கவிதையும் ஒரு கட்டம். அந்த அளவில் அது வரவேற்கத் தக்கதே. புதுக் கவிதை ஏதோ மரபுக் கவிதையின் சமாதியில் எழுதப்பட்ட மாளிகை என்பது போல எண்ணுவதும் பேசுவதும் தமிழ்க்கவிதையின் முழுப் பரிமாணத்தையும் அதன் நுண்மையையும், பரிணாம வளர்ச்சியையும் உணர்ந்ததாகாது. டாக்டர் தமிழ்க் குடிமகனின் 'புதுக்கவிதை' என்ற தலைப்பில் அமைந்த அத்தியாயம் ஒரு சிறந்த திறனாய்வு. புதுக்கவிதையில்

பத்தாண்டுப்படைப்பை விரிவாக நுட்பமாக ஆய்ந்திருக்கிறார். அதன் நிறை. குறைகளை நிதானத்துடனும், புதியன காணும் முயற்சிகளை வரவேற்கும் மனப்பான்மையுடனும் அளவிடுகிறார். இதன் தொடர்ச்சியாக 1977 முதல் 1986 வரையிலான பத்தாண்டுப் புதுக்கவிதைகளை ஆராய்ந்து ஒரு நூலாக அவர் வெளியிட்டால் அது பயன்தரும் பணியாகும்.

'காப்பியங்கள்' என்ற தலைப்பில் வருவனவற்றுள் கிட்டத்தட்ட எழுபது நூல்கள் ஆய்வில் இடம் பெற்றுள்ளன. சமயக் காப்பியம் இரண்டு: புராண இதிகாசக் காப்பியம் ஐந்து: மற்ற அனைத்தும் வரலாறு, சமுதாயம் பற்றியனவாகவே அமைந்துள்ளன. இந்தக் காலப் பகுதியில் கவிஞர்களைக் கவர்ந்த கருப்பொருள் எது என்பது இதிலிருந்து விளங்கும். தனி நபர் புகழ் பாடலும், தமிழினப் பெருமை பேசலும் கவிதையில் கணிசமாகவே இடம் பெற்றிருக்கின்றன என்பது இந்த அத்தியாயத்தில் நமக்குக் கிடைக்கும் செய்தியாகும். சமுதாயச் சீர்திருத்தக் காப்பியங்கள் என்ற தலைப்பில் இடம் பெறும் 13 நூல்களில் இன்றைய சமுதாய, பொருளாதாரப் பிரச்சினைகள் இடம் பெறுகின்றன. இக்காப்பியங்களில் மேலை நாட்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளமை; பல காப்பியங்களில் தனி நபர் புகழ் பேசுதல் (Hero Worship) மேலோங்கியிருத்தல்; காதல் முக்கியமான கருப்பொருளாகப் பல காவியங்களில் அமைந்திருக்கும் தன்மை பற்றிய அவரது முடிவுகள் எண்ணத் தக்கன.

நாடகங்கள் என்ற தலைப்பில் 37 படைப்புகளை ஆய்ந்திருக்கிறார். அவற்றை 34 பக்கங்கட்குள் சுருக்கித் தந்திருப்பதும் ஒரு சாதனையே ஆகும். வரலாற்று நாடகங்களில் மனோன்மணீயத்தின் தாக்குரவு கணிசமாக இருப்பதாகக் காண்கிறார். வரலாற்று நாடகங்களில் துன்பியல் முடிவும் (Tragedy) இன்பியல் முடிவும் (Comedy) சமமாக இடம்பெற, சமுதாய நாடகங்கள் முழுவதும் இன்பியல் முடிவுள்ளனவாகவே அமைந்திருப்பதைக் குறிப்பிடுகிறார். அதற்கு அவர் யூகிக்கும் காரணம் இன்னும் ஆழ்ந்து நோக்க வேண்டிய ஒன்று. பொதுவாக நமது மேடைகளில் துன்பியல் முடிவு கொண்ட சமுதாய நாடகங்களும், திரைகளில் துன்பியல் முடிவு கொண்ட சமுதாயப் படங்களும் இடம் பெறுவதில்லை. அவை இன்பியல் முடிவு கொண்டவையாகவே உள்ளன. நமது அன்றாட இன்னல்களில் இருந்து விடுதலை தரும் புகலிடமாகச் சமுதாயக் காப்பியங்களை அணுகுகிறோமோ என்பது எண்ண வேண்டிய ஒன்று.

சிற்றிலக்கியங்களான குறவஞ்சி, பரணி, உலா, ஆற்றுப்படை, தூது, கலம்பகம், கோவை, பாவை, பிள்ளைத்தமிழ், அந்தாதி, மாலை, பதிகம் ஆகியன உருவத்தில் பழையனவெனினும், உயிரில் புதுமை பெற்று நிற்கின்றன. புதிய பொருள்களைப் பாடப் பயன்படுத்தப்பட்டுள்ளன. மரபு பழையது எனினும் வாழ்வு புதியது. இலக்கியத்தில் புதுமை என்பது முதலில் கருத்தைப்பற்றியது. வடிவமாற்றமும் ஒரு வளர்ச்சியேயாகும். ஆனால் அது இன்றியமையாததல்ல.

தமிழ்க் கவிதையில் இருபதாம் நூற்றாண்டு கண்ட முக்கியமான புதிய பரிமாணம், உயர்ந்த திருப்பம் குழந்தைப் பாடல்கள். பொதுவாக இலக்கியம் என்பது ஏதோ அறிஞர்கள், புலவர்கள் உலகிற்கு மட்டுமே சொந்தமானது என்பது போன்றும், அந்தத் தரத்தில் எழுதப்படுவனதாம் இலக்கியம் என்பது போன்றதுமான கருத்துப் பரவலாக இருந்து வந்திருக்கிறது.

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மேலே ஏறி வா
மல்லிகைப் பூக் கொண்டு வா

என்ற பாடலைக் கேட்டுக் குழந்தை மெய்ம்மறந்திருக்கிறது. அது அடையும் இன்பம் இலக்கிய இன்பம் தான். கிராமியப் பாடல்களில் சிலர் கதை சொல்வதை மக்கள் இரவு முழுவதும் கண்விழித்துக்கேட்டு அநுபவிக்கிறார்கள். அவர்கள் அளவில் அது இலக்கியம்தான். எனவே, இலக்கியம் என்பது ஒரு மெல்லியகோடு போன்றது அல்ல. அது வானவில் போன்ற அகலமானபட்டை. வயதுக்கும், முதிர்ச்சிக்கும், கல்விக்கும் ஏற்ப அனைவரும் அநுபவிக்கும் இலக்கியப் பாரம்பரியம் ஒரு சமுதாயத்தில் உருவாக வேண்டும். அந்தக் கோணத்தில் பார்க்கும்பொழுது குழந்தைப் பாடல்கள் முக்கியமானவை. இத்துறையில் பத்தாண்டு கால வளர்ச்சியை விரிவாக ஆய்ந்திருக்கிறார். "அறிவியல் கருவிகளின் பெருக்கம் குழந்தைப் பாடல்களின் பாடுபொருள்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைச் செய்துள்ளது" என்ற உண்மை மனதிற்கு நிறைவளிக்கிறது. பொதுவாக குழந்தைப் பாடல்களில் அவர்களது வயதுக்கு மீறிய நீதிபோதனைகள் ஆங்காங்கு சற்று அதிகமாகவே இடம்பெறுகின்றன. இது நாம் எண்ண வேண்டிய ஒன்று.

பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள், ஒருவர் பாடிய உதிரித் தொகுப்புகள் என்ற இரு அத்தியாயங்களிலும் பாடல் தொகுப்புகளை ஆய்ந்துள்ளார். சமுதாயப் பிரச்சினைகள், தமிழ்ப் பாதுகாப்பு, தமிழின் சிறப்பு, அரசியல், பொருளாதாரம், தனிமனிதச் சிறப்பு போன்ற கருப் பொருள்களைக் கொண்டவை இத்தொகுப்புகள். தனிப்பாடல்கட்கு ஒரு அத்தியாயம் ஒதுக்கியுள்ளார். பொதுவாகத் தமிழ்க் கவிதையில், பாடப்படும் பொருள் எதுவாயினும் மிகைப்படுத்தும் தன்மை சற்று மேலோங்கி நிற்கிறது. இது கண்டனத்துக்கும் பொருந்தும்; பாராட்டுக்கும் பொருந்தும். "தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை ஒட்டி எழுந்த தொகுப்புகளில் தலைவர்களின் ஆளுமை வெளிப்படுகிறது. எனினும் அவற்றுள் மிகை உணர்வு தென்படுகிறது. உண்மைகள் குறைந்தும் புகழ்ச்சி மிகுந்தும் காணப்படுகின்றன" என்கிறார் ஆசிரியர். அரசியல் கட்சி, சமுதாய இயக்கம், சமயம் ஆகிய எத்துறையாயினும், அதில் ஆளுமை பெற்றவரைப் பற்றி உரைநடையிலோ, கவிதையிலோ எதில் எழுதினாலும் போட்டிபோட்டுக்கொண்டு புகழ்வதே காணப்படுகிறது. விதி விலக்குகள் மிகக் குறைவு. சமுதாயம், பொருளாதாரம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள நலிவுகளைப் பாடுவதிலும், அதற்குக் காரணங்கள் காண்பதிலும், காரணமாக இருப்பவர்கள் என்று கருதப்படுபவர்களைக் கண்டிப்பதிலும் கூட மிகை உணர்வு மிகுந்து நிற்கிறது. இந்தக் கூறுபாட்டை ஆசிரியர் சற்று நிதானமாகவே விமர்சித்துள்ளார். "உள்ளத்திலும், வாக்கிலும் உண்மை ஒளி" இல்லையெனின் அந்த எழுத்தாலும் பேச்சாலும் சமுதாயம் பயன்பெறாது. அந்த உரைநடையும், கவிதையும் காலம் கடந்து நில்லா. இந்த அம்சத்தில் தமிழ்க் கவிதை உலகம் சற்று வளர வேண்டும்; முதிர்ச்சி பெற வேண்டும்.

பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் ஒரு சிறந்த ஆய்வு; நல்ல படைப்பு. தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஈடுபாடு உள்ளோர் தவறாது படிக்க வேண்டிய நூல். 1976-முடிய வெளிவந்த பத்தாண்டுக் கவிதைகள் ஆராயப்பட்டுள்ளன. அடுத்த பத்தாண்டுக் கவிதைகள் ஆய்வு ஒன்றை ஆசிரியர் மேற்கொண்டால் தமிழ் உலகம் நன்றி கூறும். ஆசிரியருக்கு மனம் நிறைந்த பாராட்டுதல்கள்.

**வா. செ. குழந்தைசாமி**

**அண்ணா பல்கலைக் கழகம்**
**சென்னை 600 025**
**9—9—1986**

# வாழ்த்துரை

**முனைவர் ச.வே. சுப்பிரமணியனார்**

முன்னாள் இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுடைய 'பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்' என்ற நூலைப் படிக்கும் வாய்ப்புக்கிடைத்துப் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தேன்.

தமிழகத்தில் சங்க காலம் முதல் இன்றுவரை கவிதைகள் இடையறா ஆற்று ஒழுக்காக வந்துகொண்டே இருக்கின்றன. தமிழ் மொழியில் கவிதை, வரலாற்றுப் பெருமை உடையது. தற்காலக் கவிதைகள் எழுச்சியும் கருத்து ஆழமும் நுணுகிப் பார்த்துணரும் தகுதியுடையனவாக அமைகின்றன. அவற்றைச் சமுதாயக் கோணத்தில் கண்டு பல புதிய கருத்துக்களைத் தந்துள்ளார் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள்.

அவருடைய இடையறாத ஐந்தாண்டு உழைப்பினை இந்த நூலில் பார்க்கிறோம். முனைவர் தமிழ்க்குடிமகன் ஒரு சொல்லேர் உழவர். இப்போது அவர் எழுத்தேர் உழவராக அமைவதை இந்த நூல் வடிவில் காண்கிறோம்.

அவர் தமிழ்த்தொண்டு வாழ்க! வளர்க! என வாழ்த்துகிறேன்.

**சென்னை** **ச.வே. சுப்பிரமணியன்**
**21—8—1986**

# வாழ்த்துரை

**முனைவர் கணக்காயர் தமிழண்ணல்**

**தமிழியல் துறை முன்னாள் தலைவர்**

**மதுரை காமராசர் பல்கலைக்கழகம்**

முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்கள் சிறந்த தமிழ்ப் பேராசிரியர்; ஊக்கம் மிக்க தமிழார்வலர்; உலகம் போற்றும் பேச்சாளர்; உணர்வு ததும்பும் எழுத்தாளர்; திறமை மிக்க முதல்வர்; பழகுதற்கு இனியவர்; பண்பாளர்.

தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்

என்பார் பாவேந்தர். தமிழ்க்குடிமகனார் முனைவர் பட்டம் பெற முயன்று கற்று, ஆய்வு செய்தபோதே, இத்தகையர் முனைவர் பட்டம் பெறுதலால், அப்பட்டத்திற்கும் உரிய சிறப்புக் கிடைக்கும் என நான் உணர்ந்தேன். முதல்வராய்ப் பேராசிரியராய் ஓய்வின்றிச் சுழன்றபோதும், முறைப்படி படித்துப் பலகால் எழுதிச் செம்மை செய்து அவர் அரிதின் முயன்றகாலை, அதனை வளர்ந்துவரும் இளைஞர் பலர் தமக்கு எடுத்துக் காட்டாகக் கொள்ள வேண்டும் என எண்ணியதுண்டு. வாயளவில் தமிழை வளர்த்தால் போதாது; வாய்மையாகவே தமிழை வளர்க்கவேண்டும். நாமும் கற்க வேண்டும்; கற்றாரைப் போற்ற வேண்டும்; தமிழ்க் கல்விச் சூழலை வளர்க்கவேண்டும். தமிழ்க்குடிமகனார் இம்மூன்று முனைகளிலும் உழைத்துவருகிறார். அவரது இந்நெறி அவருடன் இணைந்து பணியாற்றும் பேராசிரியர்களிடம் எல்லாம் காணப்படுகிறது; அவருடைய மாணவர்களிட மெல்லாம் பரவி வருகிறது. இப்படி ஒரு பரம்பரையே உருவாகி வருவதைக் கண்டு நான் மகிழ்கின்றேன். 'பாரதிதாசன் பரம்பரை ஒன்று அன்று தோன்றி வளர்ந்ததுண்டு; நானெல்லாம் அதில் பாட்டெழுதிப் பங்கு கொண்டதுண்டு. இன்று யாதவர் கல்லூரி வாயிலாகவும், 'அறிவு', 'கைகாட்டி'

ஏடுகள் வழியாகவும், சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள் மூலமாகவும் ஒரு தமிழியக்கப் பரம்பரை வளர அவர் ஒரு தளபதியாகக் காட்சியளிக்கிறார். இப்பரம்பரை வளரவளரத் தமிழ் வாழும் என வாழ்த்துகின்றேன்.

பத்தாண்டுக் கவிதைகளை எடுத்துக்கொண்டு, 614 நூல்களைப் பார்த்து, படித்து, கற்று, ஆய்வுசெய்து பட்டம் பெற்றதுடன், அவ்வாய்வேட்டினை நூல்வடிவாக்கி அவர் இன்று தமிழுலகிற்கு வழங்கியுள்ளார். பார்த்து, படித்து, கற்று என்பன அடிக்கோடு இடுதற்குரியன. இன்று தமிழ் முதுகலை மாணவர்கள், வினாக்குறிப்போர், விடையெழுதுவோர் உட்பட யாரும் தொடர்புடைய நூல்களைப் படிப்பதில்லை. படிப்பவரும் அவற்றை ஐயம் திரிபறக் கற்பதில்லை.

இந்நூலைப் படிப்பவர்கள், இவ்வாய்வாளர் இத்தனை நூல்களையும் சொந்தமாக வாங்கிப் பார்த்திருப்பதை, பார்த்ததோடன்றிப் படித்துக் கற்றிருப்பதை நன்குணர்வார்கள்.

புதுக்கவிதை பற்றிய ஆய்வு சிறப்பாக உளது. விருப்பு வெறுப்பற்ற நடுநிலை ஆய்வு அது. தங்களை முழுதும் பாராட்டவில்லையே என்று புதுக்கவிதைக்காரர்களே குறைப்பட வழியில்லை. 'கோட்டைக்குள்ளேயே குத்து வெட்டு' நடப்பதை ஆசிரியர் நன்கு எடுத்துக்காட்டுகிறார். அதில் புதுமை என்ன குறை என்ன என்பதை நன்கு எடுத்துக் காட்டும்போது, உணர்ந்து இந்நூலைப் படிப்பதால், குற்றத்தின் நீங்கி நல்வழியில் இப்படைப்பு வளர வாய்ப்புண்டு என்று தோன்றுகிறது. புதுக் கவிதையாளர்கள்தான் அதை உணர வேண்டும்.

மரபுக் கவிதை பற்றியும் ஆசிரியரின் பாகுபாடுகள், திறனாய்வுகள் போற்றத்தக்கன. 'பலர் பாடியகவிதைத் தொகுப்புக்கள்', 'ஒருவர் பாடிய உதிரித் தொகுப்புக்கள்,' 'சமுதாய சீர்திருத்த உணர்வு' போல்வன இன்றையக் கவிதை இலக்கிய வளர்ச்சிப் போக்கை நினைவூட்டுவன. மரபுக் கவிதையின் தேக்க நிலையை, மந்தத்தன்மையை ஆசிரியர் நன்கு எடுத்துக் காட்டுகிறார். புதுக்கவிதை வளர்ச்சியை 'ஓர் அதிர்ச்சி வைத்தியம்' என்று இவர் குறிப்பது சிந்திக்கத் தக்கது. இன்றும் சிறுசிறு காப்பியங்கள் தோன்றியுள்ளன. அவை இன்றைய சமுதாயப்போக்கை இனங்காட்டுவன. மேலை இலக்கியத் தாக்குரவால் இதன் வளர்ச்சியில் சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்பது இவ்வாசிரியரின் கணிப்பு.

காப்பியங்களைச் சமய நோக்கோடு எழுதிய காலம் போய்ச் சமுதாய நோக்கோடு எழுதும் மரபுகள் எவ்வாறு தோன்றி, எவ்விதம் வளர்ந்துள்ளன என்பதை இவ்வாசிரியர் நன்கு எடுத்துக்காட்டுகிறார்.

நாடகங்களின் வளர்ச்சியில் மனோன்மணீயத்தின் பங்கு குறிக்கப்படுகிறது. முன்னைய மரபும் இன்றையப் புதுமையும் நன்கு காட்டப்படுகின்றன. இன்றும் சிற்றிலக்கியங்களுக்குக் குறைவில்லை என்பதை இந்நூலால் அறிகிறோம். பாடுபொருளிலும் பாட்டு முறையிலும்தான் சிற்சில புதுமைகள் தலைதூக்கி உள்ளன. இன்று அண்ணா பற்றியும் பெரியார் பற்றியும் கலைஞர்பற்றியும் தோன்றிய சிற்றிலக்கியங்கள் கூடுதலாகும் என அறிகிறோம்.

குழந்தைப் பாடல்கள் பற்றிய இந்நூற் கட்டுரையும் மிகச் சிறப்பாகவுளது. "குழந்தைப் பாடல்கள் எழுதும் முயற்சியில் புதுக்கவிதை வெற்றி பெறவில்லை; குழந்தைகளைத் தாலாட்டும் பெண் எழுத்தாளர்கள் எவரும் அத்துறையில் வெற்றி பெறவில்லை" என்பன போன்ற பல தீர்க்கமான முடிவுகளை இந்நூலிற் காணலாம்.

இந் நூலைப் படித்து முடித்ததும் இக்காலக் கவிதையுலகில் ஒருமுறை உலாவந்தது போன்ற உணர்வைப் பெறுகிறோம். சீரான ஆற்றொழுக்குநடை, விறுவிறுப்பான கருத்துக் கூறுகள், நடுவுநிலை சார்ந்த முடிவுகள் யாவும் இந்நூலுக்கு அணிசேர்க்கின்றன.

தமிழ்க்குடி மகனால் தமிழ்மொழி தழைக்கவும்
தமிழ்மொழியாலவர் தழைத்துச் செழிக்கவும்
தமிழியக்கம் ஒன்று வளர்வதை
என்னென்று சொல்வேன் ! என்னென்று சொல்வேன் !!

எனப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

'ஏரகம்,' தமிழண்ணல்
சதாசிவநகர்–மதுரை–20
21—8—1986

# நன்றியுரை

மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் இசைவுடன் 'பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் *(1967—1976)*' என்னும் தலைப்பில் ஆய்வு செய்யப் பணித்த பெருமை உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர் முனைவர் ச.வே. சுப்பிரமணியனார்க்கு உண்டு. முதலில் "தொல்காப்பியம் குறுந்தொகைத்" தொடர்பான தலைப்பில்தான் ஆய்வைத் தொடங்கினேன். பல்கலைக்கழகமும் ஏற்றுக்கொண்டது. ஒரு நாள் பேராசிரியர் ச.வே.சு. வுடன் கலந்து பேசிய போது என்னைத் திசை திருப்பி விட்டார். பழையவற்றையே மீண்டும் மீண்டும் கிண்டுவதைவிடப் புதுமை நோக்கிப் புறப்பட்டால் என்ன என்பது அவர் வினா. இக்கால இலக்கியத்தில் எதிர் எதிர் மேடைகளில் முழங்கியும் வளர்ந்தும் வருகிற கவிதைத் துறையை ஆய்ந்தாலென்ன என்று குறிப்பும் காட்டினார். அறை கூவலாக ஏற்றுக் கொண்டேன். ஏற்கனவே கவிஞர்களோடு உள்ள தொடர்பு — நானே கவிஞனாக இருக்கிறேன் என்ற நம்பிக்கை — இவற்றின் பேரில் ஆராய்ச்சியைத் தொடங்கிவிட்டேன். 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது' என்பதை ஏற்று *600*-க்கு மேற்பட்ட நூல்களைத் திரட்ட நேர்ந்தது. அந்த வகையில் யானையையும் நான் தப்பவிடவில்லை என்றே நம்புகிறேன். இந்த வெற்றிக்கு வழிகாட்டி, இன்று வாழ்த்துரையும் வழங்கிய முனைவர் ச.வே.சு. அவர்கட்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

முனைவர் ச.வே.சு. அவர்களது சார்பிலும், மூதறிஞர் குழுவில் உறுப்பினர் எனும் முறையிலும் என் கட்டுரைகளை எல்லாம் பொறுமையுடனும் பொறுப்புடனும் படித்துச் செம்மைப் படுத்திய மதுரை காமராசர் பல்கலைக்கழகத் தமிழியல் துறைத்தலைவர் முனைவர் தமிழண்ணல் அவர்கட்கு என் நன்றி உரியது; நட்புணர்வோடும் ஆய்வுக் கண்ணோட்டத்துடனும் அவர்கள் அளித்த வாழ்த்துரைக்கும் ஒரு தனி நன்றி உரியது.

கவிஞன் உள்ளத்தை உணர மற்றொரு கவிஞரால் தான் முடியும். அறிவாராய்ச்சியாக வெளிவரும் ஆய்வேட்டை மதிப்பிட ஓர் அறிஞரால்தான் முடியும். சமுதாய சீர்திருத்தக் காலமாக இன்று என்னால் மதிப்பிடப்பட்டிருக்கும் இக்காலத்தில் வெளியான கவிதைகளின் உள்ளடக்கத்தை உணர்ந்து உரைக்க ஒரு சமுதாயச் சிந்தனையாளரால்தான் முடியும். இத்தனையும் இணைந்து ஒருருவான அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் வா.செ. குழந்தைச்சாமி அவர்கள் அணிந்துரை வழங்கவேண்டும் என்று விரும்பினேன்; வேண்டினேன்; அன்புடன் இசைந்தார்; அவர் அளித்துள்ள அணிந்துரைக்கு என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

நான் ஆசிரியனாக இருந்தபோதே ஆய்வு செய்யப் பணித்து, தன் காலத்தில் எனக்கு எல்லா வகையிலும் உதவிய என் முதல்வர் பேரா. தி.அ. சொக்கலிங்கனார்க்கு என் நன்றி உரியது. அவர் பல்கலைக்கழகத்தின் மேல் நிலையராகப் பணியாற்றிய காலத்திலும் ஆய்வுக்கான பல உதவிகளைச் செய்துள்ளார் என்பதையும் நினைந்து மகிழ்கின்றேன்.

என் கை ஓய்ந்த போதெல்லாம் என் இரு கைகளாகவும், நான் கண்மயங்கிய போதெல்லாம் என் இருகண்களாகவும் இயங்கிய என் துறைப் பேராசிரியர்களான முனைவர் இராமலிங்கம், முனைவர் இராமசாமி ஆகிய இருவர்க்கும் என் நன்றி.

ஒல்லும் வகையெல்லாம் உதவிய திருவாட்டி கண்ணாத்தாள், என் இனிய மாணவனும் இன்றைய ஒரிசா மாநிலத்தின் துணை ஆட்சித் தலைவருமாகிய இரெ. பாலகிருட்டிணன் இ.ஆ.ப., நூல்களைப் பேரன்புடனும் உவகையுடனும் வழங்கிய உலகத் தமிழாராய்ச்சி நிறுவன நூலகர், மதுரை மாவட்ட மைய நூலகர், அலுவலர்கள், முனைவர் இரா. இளவரசு, பழநி இளங்கம்பன், என் கல்லூரி நூலகர் மு. முனியசாமி, உதவியாளர் சி. மாயாண்டி ஆகிய அனைவர்க்கும் என் நன்றி.

தன் இல்லத்தில் உள்ள கவிதை உலகத்தை என் கையிலேயே ஒப்படைத்து உதவியதோடன்றி, தமிழ் வளர்ச்சி இயக்குநர் எனும் முறையில் என் ஆய்வேடு வெளிவருவதற்குப் பொருளுதவி பெற்றுத்தந்தும் சிறப்புச் சேர்த்த சிலம்பொலி செல்லப்பனார்க்கு என் சிறப்பு நன்றி உரியது.

நான் நூல்களைத் திரட்டியபோது முன்வந்து அனுப்பி என்னைக் களிப்புக் கடலில் ஆழ்த்திய கவிஞர்கள் அனைவர்க்கும் என் நன்றி உரியது; எல்லாருடைய கவிதைகளும் இதில் திறனாயப்பட்டுள்ளன எனினும் ஆய்வேட்டுப் பக்க வரையறை கருதிச் சுருக்க வேண்டியதாயிற்று. விரைவில் அனைவரையும் விரிவாகப் பார்ப்பேன்; வெளியுலகத்துக்குச் சொல்வேன்.

முதல்வர் பணிக்கிடையிலும் என் ஆய்வில் மூழ்குவதற்கும் முனைப்புடன் ஈடுபடுவதற்கும் ஒத்துழைத்த முன்னாள் தாளாளர்கள் அண்ணன் அரங்கசாமி, திரு. சொ. கோவிந்தராசன், முன்னாள் பொருளாளர் திரு. தெ. நாகேந்திரன், இன்றைய தலைவர் திரு. க. சுந்தரராசன், தாளாளர் திரு. இரெ. பன்னீர்ச் செல்வம் ஆகிய அனைவர்க்கும் நன்றி கூறிக் கொள்கிறேன்.

கவிதைத் துறையில் இது முறையான முழுமையான ஆய்வு. இதனைத் தொடர்ந்து பல ஆய்வுகள் வரலாம். ஒரு சில நூல்களை மட்டும் எடுத்துக் கொண்டு ஆய்வை முடிக்காமல் 700 நூல்களையும் இழுத்து இணைத்து இந்த ஆய்வை முடிப்பதற்குள் நான் பட்ட பாடு... அந்தக் களைப்பெல்லாம் இந்த நூலைப் பார்த்ததும் பறந்து போய்விட்டது.

இந்நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிடும் வானதி திருநாவுக்கரசு அவர்களுக்கும், அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும் நன்றி பல.

இந்நூலுக்கு முகப்போவியம் வரைந்த ஓவியர் மருது அவர்களுக்கும், மற்றும் இந்நூல் வெளிவருவதற்குத் துணை செய்த அனைவர்க்கும் நன்றி.

அன்பன்
**தமிழ்க்குடிமகன்**

# உள்ளுறை


| | |
|---|---|
| அணிந்துரை | v |
| வாழ்த்துரை 1 | xii |
| வாழ்த்துரை 2 | xiii |
| நன்றியுரை | xvi |
| உள்ளுறை | xix |
| சுருக்கக் குறியீட்டு விளக்கம் | xx |
| ஆய்வு முன்னுரை | xxi |
| நூல் | |
| 1. புதுக்கவிதை | 1 |
| 2. காப்பியங்கள் | 50 |
| 3. நாடகங்கள் | 84 |
| 4. சிற்றிலக்கியங்கள் | 120 |
| 5. குழந்தைப் பாடல்கள் | 161 |
| 6. பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள் | 187 |
| 7. ஒருவர் பாடிய உதிரித் தொகுப்புகள் | 215 |
| 8. தனிப்பாடல்கள் | 230 |
| 9. சமுதாய சீர்திருத்த உணர்வு | 247 |
| ஆய்வு மேற் சிந்தனைகள் (பின்னிணைப்பு 1) | 280 |
| பின்னிணைப்பு 2 | 281 |
| பின்னிணைப்பு 3 | 282 |
| கருவி நூற்பட்டியல் | 283 |

# சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| இளம். | — | இளம்பூரணம் |
| உ.ஆ. | — | உரை ஆசிரியர் |
| கழகம். | — | சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் |
| காரிகை. | — | யாப்பருங்கலக்காரிகை |
| குறள். | — | திருக்குறள் |
| குறுந். | — | குறுந்தொகை |
| தண்டி. | — | தண்டியலங்காரம் |
| தொ.ஆ. | — | தொகுப்பு ஆசிரியர் |
| தொல். | — | தொல்காப்பியம் |
| நச். | — | நச்சினார்க்கினியம் |
| நற். | — | நற்றிணை |
| பட்டின. | — | பட்டினப்பாலை |
| பதி.ஆ. | — | பதிப்பு ஆசிரியர் |
| பரி. | — | பரிபாடல் |
| பு.பொ.வெ.மா. | — | புறப்பொருள் வெண்பா மாலை |
| புறம். | — | புறநானூறு |
| பொருள். | — | பொருளதிகாரம் |
| மு.நூ. | — | முந்து நூல் |
| மொ.பெ.ஆ. | — | மொழி பெயர்ப்பு ஆசிரியர் |
| வி.உ. | — | விற்பனை உரிமை |

நாடகத்தில் 'ii : 3 : 88–89' என்றால் அங்கம் ii, களம் 3, வரிகள் 88–89 என ஆகும்.

கவிதை நூலின் பின் ': 10' என்று வரின் பாட்டு எண் என்றும்

இலக்கண நூலின் பின் ': 10' என்று வரின் நூற்பா எண் என்றும்,

உலா முதலிய நூலின் பின் ': 10' என்று வரின் கண்ணி எண் என்றும் கொள்ளப்படும்.

நூலின் பெயருக்குப் பின்னால் பக்கஎண் குறிப்பிடப் படவில்லை எனில் நூலினுள் பக்க எண் அச்சிடப்படவில்லை என்று பொருளாகும்.

# ஆய்வு முன்னுரை

## ஆய்வுப் பொருள்

'பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள்' (1967–1976)' என்னும் இவ்வாய்வில் 1967 முதல் 1976 முடியவுள்ள பத்தாண்டுக் காலத்தில் அச்சிடப் பெற்று நூல் வடிவில் வெளிவந்துள்ள கவிதைகள் எடுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன.

## முன் ஆய்வுகள்

இக்காலப் படைப்புகளில் புதுக்கவிதைபற்றி வல்லிக் கண்ணன் 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் நூலையும், நா. வானமாமலை 'புதுக்கவிதை - முற்போக்கும் பிற்போக்கும்' என்னும் நூலையும், தமிழவன் 'இருபதில்கவிதை,' 'புதுக்கவிதை நாலு கட்டுரைகள்' ஆகிய இரு நூல்களையும், ஆ. செகந்நாதன் 'புதுக்கவிதை ஒரு திறனாய்வு' என்னும் நூலையும், ந.வீ. செயராமன் 'புதுக் கவிதையியல்' என்னும் நூலையும், பாலா 'புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை' என்னும் நூலையும் நந்தன் பிரபு 'நா. காமராசன் கவிதைகள் (ஒரு புதிய சகாப்தம்)' என்னும் நூலையும், எம்.எசு. தியாகராாசன் 'நா. காமராசன் கவிதைகள் (ஒரு திறனாய்வு)' என்னும் நூலையும் இயற்றியுள்ளனர். ஞானியின் 'இன்றைய தமிழ்க் கவிதையில் ஒரு தேக்கம்', புவியரசின் 'புதுக்கவிதையின் புதிய நெருக்கடி,' பாலாவின் 'ஒரு கவிதை உருவாகிறது,' ச. மருதநாயகத்தின் 'புதுக்கவிதை,' சி.இ. மறைமலையின் 'புதுக்கவிதை,' மீராவின் 'உருவம்,' அபியின் 'கற்பனை,' மு. மேத்தாவின் 'கருத்தோட்டம்,' சிற்பியின் 'சொல்லாட்சி' ஆகிய குறிப்பிடத்தக்க ஆய்வுக் கட்டுரைகளும் இப்பொருள் பற்றி வெளிவந்துள்ளன. அருச்சுன தட்சிணாமூர்த்தியால் 'தமிழன்பன் புதுக் கவிதைகள் — ஓர் ஆய்வு' எனும் தலைப்பில் எம்.பில். பட்டத்திற்குப் படைக்கப்பெற்ற ஆய்வுரையும் குறிப்பிடத் தக்கது.

'காப்பியத்துள் காப்பியம் — குறுங்காப்பியம்' எனும் தலைப்பில் முத்துச்சண்முகன், இரா. பிரேமா ஆகியோர் இக்காலக் காப்பியங்கள் பற்றி ஆய்வு செய்துள்ளனர்.

இரா. குமரவேலனின் 'தமிழ் நாடக ஆய்வு,' 'கவிதை நாடகம் ஒரு கண்ணோட்டம்' ஆகிய ஆய்வு நூல்களும் சக்திப் பெருமாளின் 'தமிழ் நாடக வரலாறு' என்னும் பிஎச். டி. பட்டத்திற்கான ஆய்வு நூலும், தமிழண்ணல் எழுதிய 'அனிச்ச அடி ஆய்வுரை,' 'அறுபதாண்டுகளில் கவிதை நாடகங்கள்,' ஏ.என். பெருமாள் எழுதிய 'அறுபதாண்டுகளில் அருந்தமிழ் நாடகம்' ஆகிய திறனாய்வுக் கட்டுரைகளும் கவிதை நாடகங்களைப் பற்றிய செய்திகளைத் தருவன.

வெ. கிருட்டிணசாமியின் 'குழந்தைக் கவிஞரின் இலக்கியத் திறன்' முத்துச் சண்முகன் & வெ. கிருட்டிணசாமி எழுதிய 'குழந்தை இலக்கியம்,' குழந்தை எழுத்தாளர் சங்கம் வழங்கியுள்ள 'குழந்தை இலக்கியம் ஒரு மதிப்பீடு' ஆகிய நூல்கள் குழந்தைப் பாடல்கள் பற்றிய முன் ஆய்வுகள் ஆகும்.

இரா. தண்டாயுதத்தின் 'தற்காலத் தமிழ் இலக்கியம்,' மா. இராமலிங்கத்தின் 'இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்', து. மூர்த்தியின் 'இக்காலக் கவிதைகள் — மரபும் புதுமையும்,' ஆகிய நூல்களும் ஏ. ஆலீசு மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு எம். பில். பட்டத்திற்கென அளித்த 'கண்ணதாசனின் கவிதை நடை' என்னும் ஆய்வேடும், தி.மனோன்மணி மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் எம். பில் பட்டத்திற்கென அளித்த 'கண்ணதாசனின் கவிதைகளில் பெண்மை' என்னும் ஆய்வேடும், இரா. சேது சென்னைப் பல்கலைக் கழகப் பி.எச்.டி. பட்டத்திற்கென அளித்த '20 –ஆம் நூற்றாண்டுச் சமுதாய மறுமலர்ச்சிக்கு அண்ணாத்துரையின் சிறுகதை, புதினங்களின் கொடை' என்னும் ஆய்வேடும், ஆ. செகந்நாதனின் 'கண்ணதாசன் ஒரு கண்ணோட்டம்' சாலை இளந்திரையனின் 'புதிய தமிழ்க் கவிதை' ஆகிய நூல்களும், பி.யோகீசுவரனின் 'அறுபதாண்டுத் தமிழ்க் கவிதை (1920—1980)' என்னும் கட்டுரையும் குறிப்பிடத்தக்க முன்னாய்வுகளாகும்.

## ஆய்வின் நோக்கம்

இங்குக் காட்டிய ஆய்வு நூல்களும், ஆய்வுக் கட்டுரைகளும், பொதுவாகச் சில கவிதைகளைக் குறித்தும், குறிப்பிட்ட கவிஞர்களைப் பற்றியும் எழுந்தவை. இக்காலக்

கவிதைப் பரப்பு முழுவதையும் உள்ளடக்கிய விரிவான ஆய்வு எதுவும் இதுவரை மேற்கொள்ளப்பெறவில்லை. பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகளில் கிடைப்பன அனைத்தையும் ஒரு சேரக் கொண்டு இலக்கிய வகைமை அடிப்படையில் பகுத்தும் பாடுபொருள் அடிப்படையில் விளக்கியும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## அடிப்படைகள்

இக்காலத்தில் நூல் வடிவில் வெளிவந்த அறுநூற்றுப் பதினான்கு கவிதை நூல்களும், அவை தொடர்பான எண்பத்தொரு திறனாய்வு நூல்களும் இவ்வாய்வுக்கு அடிப்படையாக எடுத்துக் கொள்ளப் பெற்றன. இதழ்களில் வெளிவந்தனவும், கவியரங்கு, வானொலி, பொதுமேடை ஆகிய இடங்களில் பாடப் பெற்று அச்சேறாதனவும், இக்கால எல்லையில் அயல் நாடுகளில் வெளிவந்தனவும் இவ்வாய்வில் இடம் பெறவில்லை.

## ஆய்வின் எல்லை

பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகளை வகைதொகைப் படுத்தி, அவற்றின் உள்ளடக்கத்தையும் கட்டமைப்பினையும் காட்டும் முயற்சியாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

## அணுகுமுறை

இக்காலக் கவிதைகள் விளக்கமுறை (Descriptive)யிலும், திறனாய்வு முறை (Critical)யிலும் ஓரோவழி ஒப்பீட்டு நிலையிலும் ஆய்வு செய்யப் பெறுகின்றன.

## இயல் பகுப்புகள்

இக்காலக் கவிதைகளை வடிவ அடிப்படையில் புதுக்கவிதை, மரபுக்கவிதை எனப் பகுக்கலாம். மரபுக்கவிதையினை இலக்கிய வகைமை கருதியும், இயைபு குறித்தும் காப்பியங்கள், நாடகங்கள், சிற்றிலக்கியங்கள் என வரிசைப்படுத்தலாம். இந்த நூற்றாண்டில் சிறப்புப் பெற்றுள்ள இலக்கிய வகையாகிய குழந்தைப் பாடல்கள் அடுத்து எண்ணப்படும். இந்த வகைகளில் அடங்காதனவற்றைப் பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள், ஒருவர் பாடிய உதிரித் தொகுப்புகள், தனிப் பாடல்கள் என மூவகையாகப் பிரித்துக்

காணலாம். அனைத்திற்கும் பொதுவான சமுதாய சீர்திருத்த உணர்வு இறுதியில் பேசப்படுகிறது.

இவ்வாய்வு ஒன்பது இயல்களைக் கொண்டுள்ளது.

1. புதுக்கவிதை
2. காப்பியங்கள்
3. நாடகங்கள்
4. சிற்றிலக்கியங்கள்
5. குழந்தைப் பாடல்கள்
6. பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள்
7. ஒருவர் பாடிய உதிரித் தொகுப்புகள்
8. தனிப் பாடல்கள்
9. சமுதாய சீர்திருத்த உணர்வு

## இயல் விளக்கங்கள்

### 1. புதுக்கவிதை

இக்காலத்தில் வளர்ச்சி பெற்றுள்ள புதிய இலக்கிய வகை, யாப்பு வடிவமின்றி அமையும் புதுக்கவிதை ஆகும். முதற்கண் பேசப்பெறும் இவ்வியலுக்குப் பின்னணியாகப் புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய செய்திகள் அமைவதனால், அவை இங்குச் சுட்டப்படுகின்றன. புதுக்கவிதைப் படைப்பாளிகளை 1. 'மணிக்கொடி'க் காலத்தினர், 2. 'எழுத்து'க் காலத்தினர், 3. 'மானுடம் பாடும் வானம்பாடி' இயக்கத்தினர் என மூன்று அணியினராக ஈண்டுப் பகுத்து அவர்தம் தனித்தன்மைகளும் கோட்பாடுகளும் விளக்கப்படுகின்றன.

மானுடம்பாடும் வானம்பாடி இயக்கக்கவிஞர்கள் 1. மரபறிந்து வெற்றி பெற்றவர், 2. மரபுச் சார்பும் பின்னர்ப் புதுக்கவிதைச் சார்பும் உள்ளவர் 3. நேரடி வகையினர், 4. தரக்குறைவினர் என உள்பாகுபாடு செய்தும் பேசப்படுகின்றனர். அடுத்துப் புதுக்கவிதைக்கும் மரபுக் கவிதைக்குமுள்ள ஒப்புமை பேசப்படுகின்றது.

### 2. காப்பியங்கள்

கதைப்பாடல்களாக விளங்குகின்ற காப்பியங்கள் 1) வரலாற்றுக் காப்பியங்கள் 2) வரலாற்றுக்கற்பனைக்

காப்பியங்கள் 3) சமுதாயக் காப்பியங்கள் 4) சமயக் காப்பியங்கள் 5) புராண, இதிகாசக் காப்பியங்கள் என ஐந்து வகையாகப் பாகுபாடு செய்து விளக்கப் பெறுகின்றன. வீரர் வழிபாடு, இந்தி எதிர்ப்பு, இந்தியப்போர் முதலிய செய்திகள் காப்பியங்களின் உள்ளடக்கமாக விளங்குதல் எடுத்துக் காட்டப்படுகின்றது. வர்க்கப் போராட்டம், கற்பழிப்புக் கொடுமை, தற்கொலை முயற்சி, திரைப்பட வேட்கை, வரதட்சிணைக் கொடுமை ஆகிய சமுதாயச் சிக்கல்கள் காப்பியங்களில் அமைந்துள்ள திறனும் விளக்கப்படுகின்றது.

## 3. நாடகங்கள்

கதை நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட நாடகங்கள் அடுத்து விளக்கப் பெறுகின்றன.

1) வரலாற்றுக் கவிதை நாடகங்கள்;

2) சமுதாயக் கவிதை நாடகங்கள்;

3) தத்துவக் கவிதை நாடகங்கள்;

4) இதிகாசக் கவிதை நாடகங்கள்;

5) தேசிய ஒருமைப்பாட்டுக் கவிதை நாடகம்

என ஐவகையாக அமைந்த நாடகங்கள் நூல்வாரியாக இவ்வியலில் ஆய்வு செய்யப்பெறுகின்றன.

## 4. சிற்றிலக்கியங்கள்

இக்காலக் கவிதைகளில் குறவஞ்சி, பரணி, உலா, ஆற்றுப் படை, தூது, கலம்பகம், கோவை, பாவை, பிள்ளைத் தமிழ், அந்தாதி, மாலை, பதிகம் ஆகிய பன்னிருவகைச் சிற்றிலக்கியங்களுடன், சிற்றிலக்கியத் தன்மை கொண்டுள்ள பாடல்களும் இவ்வியலில் விளக்கப் பெறுகின்றன. காலத்திற்குத் தக இவ்விலக்கிய வடிவங்களின் பாடுபொருள் களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டப் பெறுகின்றது.

## 5. குழந்தைப் பாடல்கள்

குழந்தைப் பாடல்கள் உள்ளடக்கத்தின் அடிப்படையில், பொருள் நிரல், வடிவ நிரல், அகவை நிலை, சொற்கள், ஒப்பீடு என ஐவகைப்படுத்தப்பட்டு, குழந்தை மனத்தில் பதியும்படி பாடுதல், சொல் தேர்ச்சி, எளிய நடை, உளநூல் அணுகுமுறை,

சந்த இனிமை, பாடுபொருள் என அறுவகை அடிப்படையில் விளக்கப்படுகின்றன.

குழந்தைப் பாடல்கள், குழந்தைகளைப் பற்றிய பாடல்கள், குழந்தையாகப் பாவித்துப் பாடுதல் என மூவகை நிலைகளிலும் குழந்தைப் பாடல்களின் இடம் குறித்து வரையறுக்கப்படுவதுடன், விடுகதை, வில்லுப்பாட்டு, கதைப் பாடல்கள் முதலியனவும் விளக்கப்படுகின்றன.

## 6. பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள்

இவ்வியலில் ஒரு பாடுபொருள் குறித்துப் பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள், தலைவர்களின் பிறந்த நாள் விழாவை ஒட்டியவை, அறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையிலானவை, கவியரங்குகளில் பாடப்பட்டவை, போட்டிக்காக எழுதப்பட்டவை, விருப்பத்தால் எழுந்தவை, மணவாழ்த்துகள் என அறுவகைப் பாகுபாட்டுக்குள் அடக்கப்பட்டு விளக்கப் பெறுகின்றன. தனிப் பட்ட முறையில் நூல் வெளியிட வாய்ப்பில்லாத கவிஞர்களுக்கு மன்றங்கள் தந்த வாய்ப்பும், ஆற்றிய பணியும் சுட்டப்பெறுகின்றன.

## 7. ஒருவர் பாடிய உதிரித் தொகுப்புகள்

பல்வேறு பாடுபொருள் குறித்து ஒருவர் பாடிய பாடல்கள் இவ்வியலில் பேசப்படுகின்றன. அவை, *1.* கவியரங்கு ஏறியவை *2.* விற்பனை நோக்கில் தொகுக்கப் பெற்றவை *3.* இயக்கச் சார்பில் எழுந்தவை என்னும் அடிப்படையில் ஆராயப்படுகின்றன. அவற்றுள் மேலோங்கி நிற்கும் தமிழுணர்வு, காதல், இயற்கை, சமுதாயநிலை, தத்துவம் ஆகிய குறிப்பிடத்தக்க கருத்துகள் எடுத்துக் காட்டப் பெறுகின்றன.

## 8. தனிப்பாடல்கள்

ஒரு பொருள் குறித்து ஒருவர் பாடிய தனிப்பாடல்கள் இதனுள் ஆய்வு செய்யப்பெறுகின்றன. தலைவர்கள், கொள்கைகள், நாடு, கலை இலக்கியச் சிறப்புகள், வரலாற்று நிகழ்ச்சி, அறிவுரைகள், பாராட்டுகள், வாழ்த்து முதலிய செய்திகள் தனிப்பாடல்களின் உள்ளடக்கமாக அமைந் திருத்தல் இயம்பப் பெறுகின்றது. இங்குச் செய்யுள் உரைவடிவம் பெறுதல் என்னும் மரபினின்று மாறுபட்டு

உரைகள் செய்யுள் வடிவம் பெறுதல் என்னும் புது நெறி சான்றுகளுடன் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

## 9. சமுதாய சீர்திருத்த உணர்வு

புதுக்கவிதை, காப்பியம், நாடகம், சிற்றிலக்கியம், குழந்தைப் பாடல், தொகுப்பு ஆகிய இலக்கிய வகைகள் அனைத்திலும் இழையோடிக் கிடக்கின்ற 'சமுதாய சீர்திருத்த உணர்வு' இவ்வியலில் நிரல்படப் பேசப்படுகின்றது. அரசியல்வாதிகள், அதிகாரிகள், வணிகர்கள், மக்கள் ஆகியோரால் சாதி, சமயம், சடங்கு ஆகியவற்றின் பெயரால் நிகழ்த்தப் பெறும் சீர் கேடுகளும், அவற்றுக்கு மாற்று மருந்தாகிய பகுத்தறிவுக் கொள்கையும் இங்குத் தெளிவுறுத்தப்படுகின்றன. பெண்களுக்கு இழைக்கப்படும் சமுதாயத் தீங்குகளாகிய பரத்தைமை, கற்பழிப்பு, சாதிப்பாகுபாடு வரதட்சணை ஆகியனவும், அவற்றுக்குரிய தீர்வுகளாகிய கலப்புமணம், விதவை மறுமணம், குடும்பநலம் ஆகியனவும் எடுத்துக்காட்டப் பெறுகின்றன.

# 1

# புதுக்கவிதை

கவிதை என்றால் அது 'மரபுக் கவிதை' என்றுதான் பொருள்படும். இதனைப் புதுக்கவிதைத் தொகுப்பான 'கறுப்பு மலர்கள்' எனும் நூல் தலைப்புக்குக் கீழே 'கவிதைகளும் சில வசன கவிதைகளும்' என வருவன போன்ற ஆட்சிகளால் தெளியலாம்.

கவிதையின் தொடர்ச்சியாக ஆனால் யாப்பு வடிவமின்றி அல்லது வடிவ அமைப்பில் முற்றிலும் மாறுபட்டு அமைவது புதுக்கவிதை. பாரதியார் 'வசன கவிதை' என்ற பெயரில் எழுதினார். சாலை இளந்திரையன் 'உரை வீச்சு' என்கிறார். ஆங்கிலத்தில் 'பிளாங்கு வெர்சு' (Blank Verse) என்றும் பிரெஞ்சு உலகில் 'வெர்சுலிபர்' (Verse Libre) என்றும் பெயர் பெற்ற இக்கவிதையை நாம் வசன கவிதை (Prose Lyrics) என்கிறோம்.

வசன கவிதையும் யாப்பு, சந்த வேறுபாடு போலப் பலவகைப்படுகிறது. பாரதியாரின் வசன கவிதையினின்றும் புதுக்கவிதை வேறுபடவே செய்கிறது. புதுக்கவிதையில் சமுதாய உணர்வு அங்கத அமைவு மிகுதி. 'முன்பு மரபுக் கவிதை காதால் கேட்கப் பாடப்பட்டது; இன்று புதுக்கவிதை கண்ணால் பார்க்க எழுதப்படுகிறது' என்ற விளக்கமும் கருதத் தக்கது. புதுக்கவிதை, கருத்துக்கு ஏற்ப இடம்விட்டு, மாற்றி மடக்கி எழுதப்படும் போது சித்திரகவி நினைவிற்கு வருகிறது.

இவற்றிலிருந்து கவிதை வேறு, வசனகவிதை வேறு என்று அனைவரும் நினைத்தனர் என்பதே உண்மை. ஆனால் இன்றைய நிலையில் புதுக்கவிதையும் கவிதையும் ஒன்றே என ஒப்புக்கொள்ளும் வேகமும் வளர்ச்சியும் ஏற்பட்டுவிட்டன. எனினும் ஒரு வகையான பரபரப்பும், சலசலப்பும் உடைய தாகவே 'புதுக்கவிதை' வளர்ச்சி காணப்படுகிறது. இந்த

ஆர்ப்பாட்டம் மரபுக் கவிதைகளைப் பின்னுக்குத் தள்ளி விட்டது போன்ற ஒரு பெருமித எக்களிப்பைத் தோற்று வித்துள்ளது. செய்தித்தாள்கள், திறனியர் (Critics) முதலியோர் தரும் வாய்ப்பும் விளம்பரங்களும் அவ்வாறே காட்டுகின்றன. ஆனால் நமது ஆய்வுக்குட்பட்ட *614* நூல்களில் *65* மட்டுமே புதுக்கவிதை நூல்களாகும் என்பதும் கருதற்குரியது.

## தோற்றமும் வளர்ச்சியும்

பாரதியார் மறுமலர்ச்சிக் கவிதைகள் பலவற்றைத் தோற்றுவித்தவர். இன்றைய புதுக்கவிதையின் தோற்றத்திற்கும் பாரதியாரே ஒரு வகையில் அடிக்கல் நாட்டியவர் எனலாம். பாரதியாரின் வசனகவிதைகள் இவ்வகையில் தொடக்கப் படைப்பாகும்.

ஆங்கிலக் கவிதைகளின் தாக்குரவும் (Influence) பாரதியார் காலத்தில் தொடங்கி விட்டது. பாரதியாரே 'ஷெல்லிதாசன்' எனப்பெயர் வைத்துக் கொள்ளும் அளவுக்கு ஒரு புது வேகம் உண்டாகியது. ஆங்கிலக் கவிதை வடிவமான 'சானட்'டின் (Sonnet) சாயலில் பாரதியாரும் எழுதத் தொடங்கினார்.

ஆங்கில இலக்கியத்தில் 'வால்ட் விட்மன்' எழுதிய 'புல்லின் இதழ்கள்' (Leaves of Grass) என்ற புதுக்கவிதை, கவிதை உலகில் புகழ் பெற்றது. நா. காமராசனின் 'புல்' என்ற தலைப்பை இதன் தாக்குரவாகக் கொள்ளவும் இடமுண்டு.[1] பாரதியாரும் வால்ட் விட்மனை அறிந்துள்ளார். மேலை நாட்டில் எசுராபவுண்டு என்பவர் கட்டுப்பாடற்ற கவிதை இயக்கத்தைத் தொடங்கினார். அதனைத் தொடர்ந்த டி.சு. எலியட்டின் 'பாழ்நிலம்' (Waste Land) எனும் கவிதை நோபல் பரிசு பெற்றதும் புதுக்கவிதைக்கு உலகச்செல்வாக்கு ஏற்பட்டு விட்டது. இதன் பிறகே தமிழிலும் இதன் தாக்குரவு நிகழ்ந்தது.[2]

## முன்னோடிகள்

சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் பாரதிக்குப் பின் புதுக்கவிதையினைத் தொடர்ந்தவர் ஆவார். அவர் எழுதிய சில கவிதைகள் அங்கதச் சுவையோடு விளங்கின. உணர்ச்சி யின்றி, பொருண்மைச் சிறப்பின்றி உரைநடைக் கோவையாக

1. நா. காமராசன், கறுப்பு மலர்கள், ப.40.
2. தமிழவன், இருபதில் கவிதை, ப. 123–124.

விளங்கினவும் உள. "சந்தர்ப்பவசத்தால் இவர் சிலரைக் கிண்டல் செய்யவும் சில கேலி விளையாட்டுக்களைக் காட்டவும் கவிதைகள் எழுதினார். இவரது மொழியில்-இவர் கவிதைகளாகிய கொட்டாவி விட்ட கூறு தமிழ்ப்பாட்டுகளில் வடிவம் புதியதாக மாறினாலும் உள்ளே கனமான கருத்து இல்லாததால் வெறும் சப்த சருகுகளாக இந்தப் புதிய வடிவம் உதிர வேண்டிய நிலையில் அமைந்து விட்டது.[3]

## முதல் அணியினர்

ந. பிச்சமூர்த்தி (ந.பி.) இத்துறையில் பெரும்பங்கு பெறுகின்றார். வால்ட்விட்மனின் 'புல்லின் இதழ்கள்' தான் அவருக்கு உணர்வைத் தோற்றுவித்தது. பாரதியாரின் வசன கவிதைகளும் அவருக்கு உரமளித்தன. இந்த அடிப்படையில் எழுதப்பட்ட அவருடைய கவிதைகளில் சமுதாயப் பார்வை யும் இயற்கை எழிலை எடுத்தியம்பும் தனிப்போக்கும் கலந்து நிற்கின்றன. நம்பிக்கை வறட்சி அவருடைய கவிதைகளில் இல்லை. குறியீட்டுத் தன்மைகளை (Symbolism) மிகுதியாகக் கையாண்டுள்ளார். இதனைப்,

"பத்தரை மாற்றுச் சொர்ணப்
பொடி போல ரவி
ஏற்ற மணல் காடு
அங்கங்கே மின்னிற்று
மின்னல்கள் சிரித்து
மேகத்தைக் கொளுத்தின
கூதலெனும் நாகம்
குடையோடு சீறிற்று"[4]

எனவரும் பாடற்பகுதியால் உணரலாம். இது போன்ற இனிய உவமைகளும் உருவகங்களும் அவர் கவிதைகளில் அமைந்துள்ளன. பழைய கதைகளில் சிறந்தவற்றை எடுத்தாளும் போக்கும் அவரிடம் காணப்படுகிறது. அவருடைய கவிதைகளில் கலப்படம் செய்து மக்களை ஏமாற்றுகின்ற 'பெட்டிக்கடை நாரணன்' கூடப்

"பாவம் என்றேதேதோ
பேப்பரில் வந்தது

3. மேலது, பக். 16–17.
4. ந.பி., வல்லிக்கண்ணன், 'புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' நூலில் மேற்கோளாக வந்துள்ளது. ப. 64

பாவமொன்றில்லா விட்டால்
பாருண்டா
பசியுண்டா
மண்ணில் பிறப்பதற்கு
நெல் ஒப்பும்போது
களிமண்ணில் கலந்திருக்க
அரிசி மறுப்பதில்லை"[5]

எனத் தத்துவம் பேசுகின்றான். 1934 முதல் 1944 வரை புதுக் கவிதை எழுதிய அவர் பின்னர் 15 ஆண்டுகள் எதுவுமே எழுதாமல் இருந்துவிட்டார். அவருடைய கவிதைகளுக்கு வரவேற்பில்லை என்பதே அதற்குக் கரணியமாகும். மீண்டும் 1959 முதல் அவர் எழுதிய கவிதைகளின் உள்ளடக்கம் மாறி யுள்ளது என்பதற்குக் 'காலண்டர்' 'மகப்பேறு நிலையம்' 'பம்பரம்' 'தேசப்பறவை' என்னும் தலைப்புகளே சான்று களாகும்.

ந. பிச்சமூர்த்திக்குப் பின்னால் கு.ப. இராசகோபாலன் புதுக் கவிதைத் துறையில் முனைந்து நின்றார். பிறகு அவர் சிறு கதைத் துறையில் ஆழ்ந்து போய் விட்டார். அடுத்து வல்லிக் கண்ணன் இத்துறையில் முழுமையாக ஈடுபட்டார். அவர் படைப்புகளில் மனப்புழுக்கமே மிகுதி. 'அமர வேதனை' என்னும் நூலின் தலைப்பே இதனை உணர்த்தும். இன்றைய சமுதாயத்தின் சீர்கேடுகளே அவருடைய கவிதைகளின் உள்ளடக்கமாகும். அவற்றில் நம்பிக்கை வறட்சி மிகுதியாக உள்ளது. எளிய நடையில் எல்லோரும் உணர்ந்து கொள்ளும் வண்ணம் உருவகப்பாங்கை விட்டுக்கொடுக்காமல் அவர் கவிதைகளை இயற்றியுள்ளார். இவ்வுண்மையை,

"உண்மைக்காக
உரிமைக்காக
மனிதருக்காக
செத்த சாக்ரடீஸ், லிங்கன்,
புத்தன் வகையறா... ....
அத்தனை பேரின் ஆன்மாவும்
அமைதியற்றுத் தவிக்கும்
என்றும் என்றும் !"[6]

5. பிச்சமூர்த்தி கவிதைகள், ப. 85
6. வல்லிக்கண்ணன், அமரவேதனை, ப. 18

என்ற பாடலின் மூலம் அறியலாம். அவருக்கு வேதனையை வெளிப்படுத்தும் சமுதாயப் பார்வையே கூர்மையாக அமைகிறது. விடுதலைக்கு முன்னும் பின்னும் உழைக்கும் இனம் சுரண்டப்படுகிறது என்பதை,

"அன்று போல் இன்றும்
ஏழையாய் தரித்திரமாய்,
பட்டினிப் படையினராய்,
உண்ண உணவும்
உடுக்க உடையும்
உறையுள் வசதியும்
பெற்றிட இயலாப் பூச்சிகளாய்
உழைத்துச் சலித்து
வரிகளும் உயர்விலைகளும்
கொடுத்துச் சோர்ந்து
புலம்பித் தவிக்கிறீர் !"[7]

என வரும் பாடல் உணர்த்துகிறது.

படைப்பாளராகிய இவர் "புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' எனும் நூலை எழுதி 1978 ஆம் ஆண்டின் சாகித்திய அகாதெமி பரிசும் பெற்றார் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

1930 முதல் 1945 வரை உள்ள காலகட்டத்தை மணிக் கொடிக் காலம் என்பர். இக்காலத்துக் கவிஞர்கள் மரபுக் கவிதைகளை வெறுத்தோ சலிப்புக் கொண்டோ இத்துறைக்கு வரவில்லை. ஒரு புது இலக்கியத் துறையைத் தோற்றுவிக்க வேண்டும் என்ற நல்ல சிந்தனையுடனேயே வந்தார்கள். புதுக் கவிதை மாளிகையின் அடித்தளத்தை உருவாக்கிய இவர்களுக்கு முதலில் கடுமையான எதிர்ப்பு இருந்தது. இதனை "இம்முயற்சி ஆற்றில் எதிர்நீச்சல் போடும் காரியம்; பாதையில்லாக் காட்டில் பயணம் செய்யும் முயற்சி"[8] என்றும் "பழைய ஓசை இன்பக் கவிமரபை மறந்து விட்டுக் கவிதையைப் படித்துப் பாருங்கள்"[9] என்றும் குறிப்பிடுவதன் மூலம் அறியலாம். எனினும் இவர்கள் "வசனகவிதை என்னும்

7. மேலது. ப. 10
8. ந. பிச்சமூர்த்தி, வரலாறு, பிச்சமூர்த்தி கவிதைகள், ப. 6
9. வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 57

வடிவத்திலே நெஞ்சைப் பறிகொடுத்து நின்றனரேயன்றிப் புதிய பொருளிலோ அன்றித் திட்டவட்டமான இலக்கியக் கொள்கையிலோ ஈடுபாடு கொண்டிருந்தனர் அல்லர்"[10] எனும் கருத்தும் சிந்திக்கத்தக்கது.

## இரண்டாம் அணியினர்

புதுக்கவிதை முன்னோடிகளின் படைப்புகளையும் அவர்களுக்குப் பின் வந்தோர் படைப்புகளையும் தொகுத்து நூலாக்கி வெளியீட்டுத் திறனாய்வு செய்து புதுக்கவிதை இயக்கத்தின் செயலாளர் போலத் திகழ்பவர் சி.சு. செல்லப்பா. இவர் தொடங்கிய 'எழுத்து' இதழில் புதுக்கவிதை எழுதியவர் கள் ஒரு பெரிய அணியாகத் திரண்டனர். 1959 முதல் 1970 வரையிலான கால கட்டத்தை 'எழுத்துக் காலம்' எனலாம். "மரபுக்கவிதைகளின் தொய்ந்து போன யாப்புச் சடங்கி லிருந்து தமிழ்க் கவிதையை இவர்கள் விடுவித்தனர்."[11] இந்த அணியினர் எழுதிய கவிதைகளின் பொதுப்பண்புகளை ந.வீ. செயராமன் எடுத்துக் கூறுகின்றார். "ஆங்கிலச் சொற்களையும் சொற்றொடர்களையும் பொருள் தொடர்பற்ற நிலையிலும் கவிதையின் உள்ளீட்டிலும் தலைப்பிலும் பயன்படுத்தினர். கவிதையின் உள்ளடக்கப் பொருண்மையில் அப்பட்டமான உண்மைகள் என்ற போர்வையில் அநாகரிக உணர்வு வெளிப்பாடும், குரூரமான பாலியல் தொடர்புப் பொருண்மை களும் நிர்வாணமாக வெளிப்பட்டன"[12] என்கின்றார்.

"நடைமுறையில் தேவைக்கு ஏற்ப வேறுபடும் ஓசை நயத்தை உண்டாக்கிக் கொள்ளக் கூடிய தமிழ்மொழிப் பயிற்சியும் பரிச்சயமும் செல்லப்பா குழுவினருக்கு என்றுமே இருந்ததில்லை. எனவேதான் 'ஸர்ரியலிஸம்', 'இமேஜிஸம்' முதலிய ஆங்கிலச் சொற்களை அடிக்கடி உச்சரித்த வண்ண மிருந்தனர். மொத்தத்தில் வார்த்தைகளைப் பிளந்து முறித்துப் போட்டு எழுதும் சுயதிருப்தி முயற்சியாகவே அவர்களது புதுக் கவிதை அமைந்தது"[13] என அவர்களுடைய குறைகளைக் க. கைலாசபதி சுட்டிக் காட்டுகின்றார்.

10. க. கைலாசபதி, முன்னுரை, தமிழன்பன், தோணி வருகிறது. ப. XII
11. ஞானி, முன்னுரை, வெளிச்சங்கள், ப. 2
12. ந.வீ. செயராமன், புதுக்கவிதையியல், ப. 47
13. க. கைலாசபதி, முன்னுரை, தமிழன்பன், தோணி வருகிறது, ப. XII

சி.சு. செல்லப்பாவுடன் சி. மணி, கே. இராசகோபால், தி.சோ. வேணுகோபாலன், பசுவய்யா, தருமு ஔரூப் சிவராம், டி.கே. துரைசுவாமி, வைத்தீசுவரன் ஆகியோர் எழுதிய கவிதைகள் நூல் வடிவம் பெற்று நம்கால எல்லைக்குள் வெளி வந்துள்ளன. தம்மையும், தம்மோடிருந்த கவிஞர்களையும் பற்றிச் சி.சு. செல்லப்பா, "தற்கால வாழ்க்கைச் சூழல் எனக்கும் திருப்தி தரவில்லை. எனவே என் கவிதைகள் ஏக்கம், வேதனை, தார்மீகக் கோபம், மனப்புழுக்கம், குமைவு கொண்டதாகவே இருக்கும். ஆனால் நான் நம்பிக்கை கொண்டவன் (Optimist) என்பதை மட்டும் சொல்லி நிறுத்திக் கொள்கிறேன்"[14] எனக் குறிப்பிடுகின்றார். அவருடைய 'மாற்று இதயம்' இந்தப் போக்கினைத் தெளிவுபடுத்தும். பெரும் பகுதி பிற மொழிக் கவிதைகளை இதில் மொழி பெயர்த்துத் தந்திருக்கிறார். பழந்தமிழ்ப் பாடல்கள் சிலவற்றுக்கும் புதுமெருகு கொடுத்துள்ளார். 'மாடர்னிட்டி' என்ற ஆங்கிலச் சொல் ஒரு கவிதையின் தலைப்பாக அமைந்து உள்ளது. 'அதற்கு' என்பதை 'அதுக்கு' என்று பேச்சு மொழியாகவே எழுதியிருக்கிறார். அவரது வாழ்க்கைப் பார்வை காந்திய ஈடுபாடு கொண்டதாக உள்ளது. அந்த மனிதர் வாழ்ந்த அடிச்சுவடே இல்லாது போய் விடுமோ என்ற ஏக்கத்துடன், 'நீ இன்று இருந்தால்!' என்னும் தலைப்பில் ஒரு குறுங்காப்பியம் படைத்துள்ளார். இந்தியா விடுதலை பெற்ற நாளன்று காந்தியடிகள் தலைநருக்கு வர வில்லை. அப்பொழுது காந்தியடிகளின் மனநிலையைப்,

> "பெற்ற சுதந்திரத்தில் உனக்குத் திருப்தி இல்லை;
> கொண்டாட்டத்தில் கலக்க உனக்கு மனம் இல்லை.
> கோலாகலத் தலைநகருக்கு வரவே இல்லை;
> உன்னவர்கள் அழைத்தும் மறுத்து விட்டாய்
> ................................
> சுதந்திர தினத்தன்று
> பாயசம் வைத்து
> நாடே மகிழ்ச்சியில் மூழ்கி இருக்கையில்
> அன்றைக்கு உபவாசம் இருந்தாய்"[15]

என்ற பாடற்பகுதியில் காட்டுகிறார்.

14. சி.சு. செல்லப்பா, முன்னுரை, மாற்று இதயம்.
15. சி.சு. செல்லப்பா, நீ இன்று இருந்தால், ப. 28

"சிப்பந்திகள் குடியிருப்பை முற்றுகையிட்டு
குடி நீர்க் குழாயை ஒடித்து
குழந்தைக்குப் பால் மறுத்து
நாள் கணக்கில் செய்த கேரோவில்
அகிம்சை, வாய்மை, கடமை, அன்பு
இரக்கம், மனிதாபிமானம், சகோதரத்வம்
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு
அத்தனையும் காற்றில் பறந்தாச்சு
அவை பற்றி இனிப்பேச வாயில்லை"[16]

என இன்றைய நாட்டு நடப்பை மனம் வெதும்பிக் குறிப்பிடு கிறார்.

கே. இராசகோபால் 'எழுத்து' இதழின் இறுதிக் காலத்தவர். 57 தலைப்புகள் கொண்ட 'பசப்பல்' எனும் நூலில் லென்ஸ், போர்டு, போகஸ்லைட் எனப் பல்வேறு சொற்கள் தாராளமாகக் கையாளப்படுகின்றன. படிமம், குறியீடு ஆகியவற்றைக் கையாளும் முயற்சி அவரது நூலில் உள்ளது.

இவ்வணியினரில் பசுவய்யாவினுடைய நடையும், செய்திகளை அணுகும் முறையும் தமிழுக்கு ஆக்கம் தருவனவாய் அமைந்தில. 'மந்த்ரம்' என்று ஒரு கவிதைக்குத் தலைப்பிட்டுள்ளார். அக்கவிதை,

"நீ
நான்
அவள்
இவள்
அவன்
பூனை
புண்
பூ
புழு"[17]

என வருகின்றது. இம்முறையினால் நிறைய இடைவெளி விட்டுத் தாளை விரயமாக்கினால் புதுக்கவிதையாகிவிடும் என்ற தவறான நம்பிக்கை உருவாகிறது.

16. மேலது. ப. 63
17. பசுவய்யா, நடுநிசி நாய்கள்

புதுக்கவிதையாளர்கள் தங்களுக்குள்ளேயே திறனாய்ந்து கொள்ளுவதையும் இங்கு நினைவு கூர்தல் ஏற்புடையதாகும்.

"பூமித் தோலில்
அழகுத் தேமல்
பரிதி புணர்ந்து
படரும் விந்து"[18]

'விடிவு' என்னும் தலைப்பில் உள்ள இக்கவிதை படிமச் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகப் பலரால் கையாளப்பட்டுள்ள தாக வல்லிக்கண்ணன் குறிப்பிடுகிறார். ஆனால் இதே பாடலை 'உலகம் முழுமைக்கும் உரிய ஓர் அழகான காலைப் பொழுதை இப்படித் தன் சின்னக் கவிதை வரியால் சிறுமைப் படுத்தி விடுகிறார் சிவராம்''[19] என மு. மேத்தா திறனாய்கின்றார். இருப்பினும்,

'லாபமீன் திரியும்
பட்டணப் பெருங்கடல்
தாவிக் குதிக்கும்
காரியப் படகுகள்
இயற்கைக்கு ஓய்வு ஓயாத்
மகத் சலித்த அதன்
பேரிரவு"[20]

என்பன போன்ற உருவகப் பாங்கு மிளிரும் படிமச் சிறப்புள்ள கவிதைகளையும் அவர் இயற்றியுள்ளார்.

இக்கால கட்டத்தைச் சேர்ந்த சி. மணி புதுக் கவிதையில் நெடுங்கவிதை புனைகின்ற முயற்சியில் இறங்கி 'நரகம்' என்ற சிறப்பான படைப்பை உருவாக்கினார். இந்தக் கவிதை 'எழுத்'தில் வெளிவந்தமையால் அவ்விதழ் பெருமை அடைந்து 'நரகம் புதுக் கவிதையில் ஒரு மைல் கல்'[21] என்று பாராட்டிய தாக வல்லிக்கண்ணன் குறிப்பிடுகிறார். அதே சமயத்தில் சி. மணியினுடைய 'ஒளிச்சேர்க்கை' 'வரும் போகும்' என்ற இரு தொகுதிகளையும் பற்றி 'எழுத்து கால கட்டத்திலும் 'நடை' யுகத்திலும் கொடி கட்டிக் கொண்டிருந்த சி. மணி அந்தக்

18. தருமு ஔரூப் சிவராம். கைப்பிடியளவு கடல். ப. 23
19. மு. மேத்தா, கருத்தோட்டம், அன்னம், ப. 21
20. தருமு ஔரூப் சிவராம், மு.நூ., ப. 28
21. வல்லிகண்ணன், மு. புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், 103

காலக் கவிதைகளையே பெரும்பாலும் இந்தத் தொகுப்பில் தந்திருக்கிறார். ஆனால் என்ன வித்தியாசம்! காலப்பாம்பு பல கவிதை முட்டைகளைக் குடித்து வெறும் ஓடாக உதறிவிட்டது'[22] என்று 'வானம்பாடி' இயக்கம் திறனாய்வு செய்துள்ளது.

இருபது ஆண்டுகட்கு முன்வந்த புதுக்கவிதையை அதுவும் இப்போது உயிர்வாழும் ஒருவரது கவிதையையே, புதுக் கவிதையில் வேகமான முயற்சியில் இறங்கி நடக்கும் ஓர் அணி முற்றிலும் சாடுகின்றது. இருபது ஆண்டுகளிலேயே காலப் பாம்பு பல முட்டைகளைக் குடித்து வெறும் ஓடாக்கி விட்டதென்றால் அவை காலத்தை வென்று நிற்பது எப்படி என்பது சிந்திக்கத்தக்கது.

இரண்டாவது அணிக்குப் பின்னால் இயக்கம் என்ற அளவில் வானம்பாடி இயக்கமே மூன்றாவது அணியாக நிற்கிறது. என்றாலும் இரண்டாவது அணியை ஒட்டி—1970ஐ ஒட்டி இடைநிலையில் தோன்றியும் கவிதைகளை வெளியிட்டும் எழுதியும் வந்த இதழ்களையும் கவிஞர்களை யும் பற்றிக் குறிப்பிடத்தக்க செய்திகள் உண்டு. 'எழுத்து' இறுதிக் காலத்திலும் தொடர்ந்தும் தோன்றிய 'நடை' 'குருச்சேத்திரம்' 'கணையாழி' 'கசடதபற' போன்ற இதழ்கள் வாயிலாகப் புதுக்கவிதை இயக்கம் தொய்வுறாமலும் தொடர்ச்சி பெற்றும் வளர்ந்தது எனலாம்

நீல பத்மநாபன், சண்முக சுப்பையா, நகுலன், பாலகுமாரன் கலாப்பிரியா போன்றவர்கள் தலை தூக்கினர். ஞானகூத்தன் இங்குக் குறிப்பிட்டுச் சொல்லும்படியான சில முத்திரைகளைப் பெற்றார். அவரது புதுக்கவிதைகள் நாடோடிப் பாடல்களின் சாயலைப் பெற்றிருந்தன. தலைப்பு இல்லாக் கவிதைகள் பல உண்டு. "பேச்சில் அடிபடுகின்ற சாதாரண வழக்குச் சொற்களைக் கோத்து உயிரும் உணர்ச்சி யும் வேகமும் உள்ள கவிதைகளைப் படைத்து விடும் திறமை ஞானக்கூத்தனுக்கு இருக்கிறது.....பரிகாசத் தொனி அவர் கவிதைக்குத் தனித்தன்மை சேர்க்கிறது.[23] பேச்சாளரைக் கிண்டல் செய்யும் அவரது கவிதை சிறப்புக்குரியதெனினும் பல கவிதைகள், புரியாத்தன்மை கொண்டவை. படிப்பவர்

22. வானம்பாடி இதழ்: 14
23. வல்லிக்கண்ணன்: புதுக் கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 160

களைக் குழப்புபவை. மறைக்கப்பட வேண்டிய கமுக்கங்களை யும் வெளிப்படையாகத் தருபவை. கீழவெண்மணி அநாகரிகத்தை நன்கு காட்டும் இவர் இன்று அரசு அலுவல கங்களில் பலர் தூங்கி வழியும் நிலையைத் தொடங்கி வைத்த பெருமை மோசிகீரனாரையே சாரும் என்கிறார்.

மக்கள் தொகைப் பெருக்கம் பற்றிக் குறியீட்டுச் சிறப்புத் தோன்றப் 'பூவும் நாகமும்' என நீல. பத்மநாபன் எழுதி யுள்ளார். இவரது கவிதைகளில் பாலியல் உணர்வுகளே பெரிதும் வெளிப்படுத்தப்படுகின்றன. கலாப்பிரியா, சண்முக சுப்பையா ஆகியோரின் கவிதைகள் விடுகதைப் போக்கில் துணுக்குகளாகவே அமைந்துள்ளன.

1970க்குப் பின்னும் பலர் ஆர்வத்தோடு புதுக்கவிதை புனைந்து இயக்கத்தின் விறுவிறுப்புக் குன்றாமல் காத்து வந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

## மூன்றாம் அணியினர்

இரண்டாவது அணியினரின் வெற்றிக்கும் தோல்விக்கும் பின்னால் சிறு இடைவெளிவிட்டு ஒரு பெரும் கூட்டமே புதுக் கவிதை உலகில் புகுந்து போராடியும் புதியன விளைத்தும் வெற்றிக்கொடி நாட்டியது எனலாம். ந.பி. தயக்கத்துடன் பயணம் மேற்கொண்டது போலன்றி எதுவரினும் ஏற்போம் எனும் எதிர்நீச்சல் உணர்வுடன் தோன்றியதுதான் மூன்றாவது அணி. இதனை 'மானுடம் பாடும் வானம்பாடி இயக்கம்' எனலாம். இக்காலப் புதுக்கவிதையாளர்கள் அனைவருமே இந்த அணியை ஒட்டி அமைவர் என்பதால் இதனை ஏற்றுக் கொள்வதில் தவறில்லை.

"சொற்களில் புதிய வர்ணச் சேர்க்கை, உருவக நிறைவு, படிம அமைப்பியல், நவநவமான உத்திகள், மரபில் காலூன்றிப் புதுமை வானில் கிளைபரப்பும் கவிதைப் போக்கு, மனிதப் பண்பின் மலர்ச்சி—இவற்றில் நம்பிக்கை கொண்ட ஒரு கூட்டத்தைச் சேர்ந்தவன் நான்"[24] என்று சிற்பி கூறுகிறார்.

"யாப்புத் தெரியாதவர்கள், யாப்பைத் தடையாகக் கருதியவர்கள், பழமையாப்பியல் வடிவங்களை வெறுத்தவர் கள், புதுமை வேட்கையாளர்கள், சமுதாயக் கோணல்களை வெளியிடுவதற்கு இதுவே சிறந்த கருவி எனத் தெரிந்தவர்கள், அனுபவத்தையும் உணர்ச்சியையும் அப்படியே சிறிதும் மாற்ற

24 சிற்பி, முன்னுரை, ஒளிப்பறவை. ப. V

மின்றி வெளியிடத் துணிந்தவர்கள், கவிதை அமைப்பை விடக் கருத்து வெளிப்பாட்டுக்கே கவலைப் பட்டவர்கள், மரபுகளை உடைத்தெறிய வேண்டும் என்ற கருத்தாளர்கள், மரபுகளை மீற வேண்டும் என்ற புரட்சியாளர்கள், கால மாற்றத்திற்குத் தக உருவாகிய கவிதையின் புதிய வடிவமாக இதனை ஏற்றுக் கொண்டவர்கள், எல்லோராலும் கவனிக்கப்படுவதற்கு இதுவே சிறந்த வழி என்று கருதியவர்கள்"[25] ஆகிய அனைவரும் இந்த அணியில் திரண்டனர். அவர்களது பொதுப்பண்புகளாக இந்தப் போக்குகளைக் கொள்ளலாம்.

நிர்வாண நிலைகளில் அடிபட்ட இரண்டாவது அணிக்குப் பின் புதுக்கவிதையை வானம்பாடிகள் தூக்கி நிறுத்தினர். 1970 முதல் தொடங்கும் இவர்கள் தமக்கு முந்திய காலகட்டக் கவிஞர்களிலிருந்து மாறுபடுகின்றனர். "எதிர்கால நம்பிக்கை, கொள்கைத்தெளிவு, தேசப்பற்று, நேர்மை, தமிழ் மரபுணர்ச்சி, எளிமை, பொறுப்புணர்ச்சி, சமுதாய நேயம், கூட்டுறவு மனோபாவம் முதலியன மூன்றாவது கட்டத்துக் கவிஞரிடத்தில் குறிப்பிடத்தக்க விகிதத்தில் பரவலாய்க் காணப்படுகின்றன எனத்துணிந்து கூறலாம்"[26] என்கிறார் க. கைலாசபதி.

'வானம்பாடிப் பரம்பரைக் கவிஞர்கள் இறந்த காலப் பிடிப்பும் நிகழ்காலச் சிந்தனையும் எதிர்காலக் கண்ணோட்டமும் பெற்றுள்ளார்கள். தெளிவான உள்ளடக்கத்தாலும் புதுவகை உத்திப் பயன்பாடுகளாலும் புதுமை தோய்ந்த உருவகச் சிறப்புகளாலும் அளவும் அழகுமுடைய படிமம், குறியீடு, ஓசை நயம் போன்ற அணிகளாலும் இன்றைய வானம் பாடிக் கவிதைகள் புதுக்கவிதை உலகின் விடி வெள்ளிகளாகப் போற்றப்படுகின்றன'[27] இவ்வியக்க காலத்தில் காந்தியத்தைக் கேலி செய்யும் போக்கும் மார்க்சியத்தைப் போற்றும் போக்கும் வளர்ந்துவிட்டன. ஏ.தெ. சுப்பையன், பரிணாமன், ப. வேலுசாமி போன்றவர்களின் புதுக்கவிதைகளிலும் தணிகைச் செல்வனின் மரபுக் கவிதையிலும் இவை ஓங்கி நின்றன என்பது மட்டுமன்றித் 'தாமரை' இதழும் இந்தப் போக்கிலான புதுக்கவிதைகளை வெளியிட்டு ஊக்கம் தந்தது. நா. வானமா

25. ந.வீ. செயராமன், புதுக்கவிதையில் ப. 27
26. க. கைலாசபதி, முன்னுரை, தமிழன்பன், தோணி வருகிறது. ப. XIII
27. ந.வீ. செயராமன், புதுக்கவிதையியல், ப. 52

மலை, க. கைலாசபதி போன்ற திறனியரும் கூட மார்க்சியச் சிந்தனை படைத்தவர்களாக இருந்தது ஒரு வாய்ப்பாக அமைந்துவிட்டது.

மூன்றாம் அணியைச் சேர்ந்தவர்களாகப் பல கவிஞர்கள் உள்ளனர். நா. காமராசன், மீரா, சிற்பி, அப்துல் ரகுமான், மு. மேத்தா, தமிழன்பன், அபி, தமிழ்நாடன், புவியரசு, கங்கை கொண்டான், அக்கினிபுத்திரன், சக்திக்கனல், ஞானி, பாலா ஆகியோரும் வேறு சிலரும் குறிப்பிடத்தக்கவர்கள் என்பது மட்டுமன்றிப் பெரும் வெற்றிப் படைப்பைத் தந்தவர்கள் என்றும் பாராட்டலாம்.

அவர்களது பார்வைகள் தெளிவானவை. சமூக உணர்வு கொண்டவை. முன்னையோரின் குறைபாடுகளை உணர்ந்து ஏற்றமிகு எதிர்காலத்தைச் சமைப்போம் எனும் கொள்கை வெறியுடன் பாடும் கவிஞர்கள் அவர்கள். 'வானம்பாடிக் கவிஞர்கள் இன்றைய சமுதாயத்தின் ஏற்றத் தாழ்வுகளையும் சீரழிவுகளையும் கண்டு கோபம் கொள்கிறார்கள்; பரிகசிக்கிறார்கள்; பழித்துக் குறை கூறுகிறார்கள். இன்றைய இழிநிலை மாறவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். சுரண்டலையும் சுரண்டல் சமுதாயத்தைப் பாதுகாக்கும் தத்துவங்கள், கடவுள்கள், சாதி, சமயங்கள் முதலியவற்றையும் கண்டிக்கிறார்கள். விமர்சனம் செய்கிறார்கள். காந்தியையும் ஏசுவையும் கண்ணனையும் புதிய நோக்கில் கண்டு சிந்தனைகளை வளர்க்கிறார்கள்'[28]

வானம்பாடி இயக்கக் கவிஞர்களுக்கிடையே ஒரு தனித்தன்மை உண்டு. வெற்றி பெற்று முன்னணியில் நிற்கும் கவிஞர்கள் பலரும் மரபுக் கவிதைகள் எழுதிப் பெயர் பெற்றவர்கள்; மரபுணர்ந்து மரபு மீறினால் ஏற்படும் புத்தாக்கச் சிறப்புக்களைப் புரிந்து கொண்டவர்கள். ந. பிச்சமூர்த்தி காலத்தில் ஒரு முயற்சியாகவும், சி.சு. செல்லப்பா காலத்தில் பரவலான வெளியீடுகளாகவும் அமைந்த புதுக்கவிதை அவர்கள் கையில்தான் அதன் உண்மையான சிறப்புத் தன்மைகளை எய்தியது.

எனினும் இந்தக் காலகட்டத்தினரை நான்கு வகையாகப் பிரித்துக் கொள்வது பொருந்தும்.

28. வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், பக். 219–220

## 1. மரபறிந்து வெற்றி பெற்றவர்

மரபுக் கவிதைகள் எழுதி நல்ல பெயர் பெற்றுச் சில முத்திரைகளையும் பொறித்து விட்டுப் புதுக்கவிதைத் துறைக்கு வந்து இதிலும் சிறப்புப் பெற்றவர்கள் பலர். நா. காமராசன், மீரா, அப்துல் ரகுமான், தமிழ்நாடன், மு. மேத்தா ஆகியோர் இவ்வகையினர்.

## 2. மரபுச் சார்பும் பிறகு புதுக்கவிதைச் சார்பும்

மரபுக் கவிதை பாடுங்காலத்தில் புதுக்கவிதையைக் கடுமையாகத் தாக்கி விட்டு இப்போது புதுக்கவிதை எழுதத் தொடங்கியதும் மரபுக் கவிதையைச் சாடுபவர் உளர். சிற்பி இவ்வகையினர்.

## 3. நேரடி வகையினர்

நேரடியாகப் புதுக்கவிதைத் துறைக்கு வந்தோ அல்லது மரபுக் கவிதை பற்றிப் பெரிதும் கருதாமலோ சிறப்புறச் செய்பவர்கள் பலர்.

இன்குலாப், அபி, புவியரசு, கங்கை கொண்டான், அக்கினி புத்திரன், சக்திக் கனல், ஞானி, பாலா. ஏ.தெ. சுப்பையன், பரிணாமன் ஆகியோர் இவ்வகையினர்.

## 4. தரக்குறைவினர்

மா. தட்சிணாமூர்த்தி, தேவதேவன் போன்றவர்கள் இவ் வகையினர்.

முதல் வகையினரில் நா. காமராசன் பீறிட்டுக் கிளம்பிய உணர்ச்சிக் கொந்தளிப்போடு அறிமுகமானவர். சட்டத்தை எரித்துச் சிறை செல்ல வைத்த வேகம் இப்படி ஆக்க நிலையில் மாறி அவரை மேலோங்கச் செய்து விட்டது எனலாம். அவரது 'சூரிய காந்தி' மரபுக் கவிதைப் படைப்பு. 'கறுப்பு மலர்கள்' மரபும் புதுமையும் கலந்த நூல். 'இலக்கண வேலியைத் தாண்டி இலட்சிய வேலியை அமைத்துக் கொண்டு புள்ளி மான்கள் போல் துள்ளி ஓடும் கவிதைகளை அமைக்கின்றார் அவர். முதலில் நல்ல மரபுக் கவிதைகளைப் பாடியவர் அவர்.

> "பூவின் கனவெடுத்துப் புயலின் தினவெடுத்துப்
> போதைக் கவிவடித்த பாவலன் – மனத்
> தீவின் அலைக்கரத்தைத் திக்கெட்டிலும் விரித்துத்
> தியாகப் பயிர் வளர்த்த காவலன்"[29]

29. நா. காமராசன், சூரியகாந்தி, ப. 39

என்று பாடும் கவிஞன் புதுக்கவிதையிலும் பெயரெடுக்க முடிகிறது. ஆனால் மொழி பெயர்ப்புச் செய்யும் போதுதான் இவருக்குப் புதுக் கவிதைப் போக்கு ஒட்டிக் கொண்டதோ எனும்படி அவரது படைப்புகள் உள்ளன.

இயல்பான நிலைகளைப் பாடும்போது சந்தமும் மரபும் கலந்து பாடும் அவரால் மறுமுனைக்கு மாறவேண்டிய தேவை ஏன் ஏற்படுகிறது என்பது சிந்திக்கத்தக்கது.

மலையாளக் கவிஞர் சங்கர குரூப்பின் கவிதையை மொழி பெயர்க்கிறார் 'சூரியகாந்தி' எனும் தலைப்பில்,

> **"நாணச் சுகத்தில் கவிழ்ந்த என்முகம்**
> **ஒரு தீண்டுதலில் நிமிர்ந்தது"[30]**

என்கிறார். ஏதிலிகளை, நடைப்பிணங்களை, பிச்சைக்காரியை, ஊமையைப் பாடுவதிலிருந்து தான் ஒரு சமூகக் கவிஞன் என்பதை உணர்த்துகிறார். தன்னை ஏழைகளின் கவி என்று சொல்லிக் கொள்ளுவதில் பெருமை அடைகிறார்.

> **"ஏழைகளின் கவியை**
> **அவர்களுடைய சுடுகாட்டினிடமே**
> **பத்திரமாக ஒப்படைத்து விடுங்கள்"[31]**

என்கிறார். அவரது 'விலை மகளிர்' கவிதை விலை மதிப்பற்றது. அது புதுக்கவிதை உலகிற்கு ஒரு மணிமகுடம் எனலாம். தன்னை ஒரு சோசலிஸ்ட்டாக அறிமுகப்படுத்திக் கொள்ளும் நா. காமராசன் சிலகாலம் கவிஞர்களுக்கேயுரிய மனப்புழுக்கத் தோடு சாவைப்பற்றியும் சிந்திக்கிறார்.

மீரா எழுதிய 'மூன்றும் ஆறும்', தொகுத்தளித்த 'புகழ் மண்டபம்' இரண்டும் மரபுக் கவிதைப் பதிப்புகள், பின்னால் வந்த கனவுகள் +கற்பனைகள் =காகிதங்கள், 'ஊசிகள்' ஆகியவை புதுக்கவிதை நூல்கள்.

மனப்பக்குவத்தோடு மாறியிருப்பவர் அவர். சண்முகராசா மறைவு குறித்த அவர் கவிதை 'மன்னர் நினைவில்' என்ற தலைப்பில் வருகிறது. 'சாவை' அவர் சாடும்போது மரபுக் கவிதையின் சிறப்பு மிளிர்கிறது. அவரே புதுக்கவிதைகள் எழுதும்போது அதன் உத்திகளை நன்கு கையாளுகிறார். மரபின் ஆழம் கண்டவர்தான்

30. நா. காமராசன், சூரியகாந்தி, ப. 55
31. நா. காமராசன், கறுப்பு மலர்கள், ப. 79

புதுக்கவிதையிலும் வெற்றி பெறமுடியும் என்பதை அவர் மெய்ப்பிக்கிறார்.

அவரது 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்' எனும் நூல் காதலியை அடைய முயலும் காதலனின் ஏக்கப் பெருமூச்சுகளைக் கொண்டது. இஃது உவமைகளும் உருவகங்களும் பொங்கித் ததும்பும் வளமான படைப்பு. காதலில்கூடச் சமத்துவத்தைக் காண விரும்புகிறார்.

"என்னால் உனக்குப் பெருமை வரும்
உன்னால் எனக்கு வாழ்வு வரும்"[32]

என்கிறார். உவமைகளைச் சரமாரியாகப் பொழிகின்ற சிறப்பு அவரிடம் உண்டு.

"விடியற்காலைச் சந்திரனைப் போல்
வெளிறிப்போன என் முகத்தைப்பார்
ஏகாதிபத்தியத்தின் கொடுமைக்கு
இரையாகும் ஒரு சிற்றரசைப்போல்
வாடி வருந்தும் என் மேனியைப்பார்
கடைந்தெடுத்தபின்
வெண்ணெயில்லாத
வெறுந்தயிர் போலிருக்கும்
என் சாரமற்ற இளமையைப் பார்
அன்புத் தறியில் நெய்யப்படும்
அழகிய ஆடையாகும்
என்று எதிர்பார்த்த என் வாழ்க்கை
நெருப்பில் விழுந்த
எண்ணெய்த் துணிபோல்
பொசுங்கிக் கொண்டிருப்பதைப் பார்"[33]

'உலகப் புதுக்கவிதை மரபு தரும் படிம உத்திகளால் கனவுகளையும் கற்பனைகளையும் சித்திரங்களாகவும் அகப் படிமங்களாகவும் ரசவாதம் செய்து மீரா அளிக்கும் புதுக் கவிதைகளின் தாக்கம் நமது ரசிகர்கள் உள்ளத்தில் இனிய மலர்களாக மலராமற் போகாது'[34] என்கிறார் திறனியர் நா. வானமாமலை.

32. மீரா, கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், ப. 9
33. மேலது. ப. 84
34. நா. வானமாமலை, புதுக்கவிதை முற்போக்கும் பிற்போக்கும், ப. 64

மீராவின் 'ஊசிகள்' அங்கதப் போக்கில் அமைந்தது (Satirical Verses). 'சமுதாயத்தின் நோய்க்கிருமிகளைப் பார்க்கிற போது சங்கடப்படுகிறேன். கோபமும் வருகிறது. ஒரு சுகாதாரமான சமுதாய ஆசைதான் இந்த ஊசிகளை உருவாக்கியது'[35] என்று ஆசிரியரே கூறுகிறார். 'கடமையைச் செய்' 'நன்றே செய்க' ஆகியவை நாடு போகிற போக்கை நறுக்கென்று குத்திக் காட்டுகின்றன. மிக எளிய சொற்களால் எந்த வகையான பிசிறுமின்றிச் செல்லும் கவிதைகள் இவை.

தமிழ்ப் புதுக்கவிதை எதுகை மோனையைக் களைந்து விட்டாலும் உணர்ச்சிக்கேற்ற ஒலி நயத்தை விட்டுவிட முடியாது என்று கருதுபவர் மீரா. அவரது கவிதைகள் அவரது கொள்கையோடு ஒத்துப்போவதைக் காணலாம். எவருடைய தாக்குதலுக்கும் ஆளாகாமல், பரபரப்பின்றி, ஒரே சீராக நின்று சிறப்படைபவர் மீரா.

அப்துல் ரகுமான் பல்வேறு பாட்டரங்குகளில் கலந்து கொண்டு மரபுக் கவிதை பாடியவர்; புதுக்கவிதையில் இறங்கி வெற்றி பெற்றுள்ளார். படிமங்களையும் குறியீடுகளையும் கையாளுவதில் வல்லவர். 'சமாதானதேவதை'யின் ஊர்வலம் நல்ல எடுத்துக்காட்டு. 'சிறகுக் குடைகள்' (போர் விமானங்கள்) ஒலிமலர் சொரிய, சங்கிலிச் சக்கரநாதசுரங்கள் (டாங்கிகள்) மேளம் கொட்ட எனவரும் கவிதைப் பகுதிகளால் அவரது சிறப்பைக் உணரலாம்.

"மாயமான்களின் மோகத்தில்
இராவணர்களிடம்
சோரம் போகும்
சீதைகள்"[36]

என்பதில் குறியீடுகள் துல்லியமாக அமைந்து சமுதாய நிலையைப் படம் பிடிக்கின்றன.

புதுக்கவிதை பற்றிய அவரது கருத்து சிந்தித்து ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும். 'வெறும் மரபு மாற்றமோ யாப்பிலிருந்து விடுதலையோ புதுக்கவிதையை உண்டாக்கி விடாது. பழைய மரபுக் கவிதைகள் சாதிக்க முடியாதவற்றைச்

35. மீரா. ஊசிகள், ப. 1
36. அப்துல் ரகுமான், கலியுக இதிகாசம், பால்வீதி

சாதித்துக் காட்டாவிட்டால் புதுக்கவிதையின் இருப்புக்கு நியாயம் கிடைக்காது"[37] என்கிறார்.

தமிழன்பன் தமிழகப் பாட்டரங்குகளில் புகழ் வாய்ந்தவர். எனவே மரபுணர்ந்து பாடுபவர். அரசியல் தொடர்பும் இருந்ததால் அவரது புதுக்கவிதைகளிலும் அரசியற் கவிதைகள் பல உள்ளன. தமிழன்பன் போலிகளை வெளிப்படையாகவே சாடுகிறார். திட்டங்கள் ஏழைகளைக் கடைத்தேற்றவில்லை என்பதைக் குத்திக் காட்டுகிறார். உழைப்பவனை வஞ்சிப்பவர்களை ஒழிக்க வேண்டும் என ஆர்ப்பரிக்கிறார். புரட்சி மூலமே எதையும் நிலைநாட்ட முடியும் என்று உறுதியாக நம்புகிறார்.

"முள்களை விதைக்கின்ற
முட்டாள்கள் ஒருவிடியல்
புரட்சி அறுவடைவாள்
பூசைக்குப் பலியாவார்"[38]

படிமங்களையும், குறியீடுகளையும், மிகச் சிறப்பாகக் கையாண்டு வெற்றி பெறுபவர் இவர். அகவயப் படிமம், அடுக்குப் படிமங்கள், உவமைபடிமமாதல், அலங்காரப்படிமம் என வகை வகையாகக் கவிதை வழங்கியுள்ளார் என்பதனை அருச்சுன தட்சிணாமூர்த்தி நிறுவியுள்ளார்.[39] அவரது ஆட்சி எல்லை மீறிக் கூடப் போய் விட்டது எனலாம். படிமங்களில் மிகுதியான பொருட்செறிவு இருந்தால் இருண்மை (Obscurity) தோன்றி விடும். அந்தக் குறை இவரிடத்தில் கொஞ்சம் உண்டு. அவர் (தமிழன்பன்) அவற்றை ஆள்வதற்குப்பதிலாக அவை அவரை அடிமைப்படுத்தி விடுகின்றனவோ என்னும் ஐயம் எனக்குத் தோன்றுவதுண்டு............[40] என்கிறார் கைலாசபதி. ஆனால் தமிழன்பனின் கொள்கைகள் தெளிவானவை. இவரோ மானுடத்தை மறவாது எண்ணுபவர். கவிதையை இயன்றளவு வெளிப்படையான தொடர்பு சாதனமாகக் கையாள்பவர்'.[41]

37. அப்துல் ரகுமான், முன்னுரை அன்னம், ப. 6
38. தமிழன்பன், தோணி வருகிறது, ப. 38
39. அருச்சுன தட்சிணா மூர்த்தி, தமிழன்பன், புதுக்கவிதைகள்– ஓர் ஆய்வு பக். 37–55
40. சு. கைலாசபதி, முன்னுரை, தமிழன்பன், தோணி வருகிறது. ப. X
41. மேலது. ப. XVIII

"வெள்ளையன் இடமிருந்து
விவாகரத்து வாங்கி
அளகா புரியின்
அந்தப் புரங்களில்
ஆசை நாயகியாய்
வேசியாய்..................."[42]

என்று நடைமுறைக் கோணல்களைக் கடுமையாகச் சாடுகிறார்.

தமிழ்நாடன் புதுக்கவிதையாளர் மட்டுமன்றிப் புத்தோவியமும் (Modern art) வரைபவர்; சமுதாயப் பார்வை, முற்போக்குச் சிந்தனை எல்லாம் உண்டு. 'வேள்வி' அவரது மரபுக்கவிதைகளைக் கொண்ட நூல். இடையிடையே தான் புதுக்கவிதைகள் தருகிறார். 'மண்ணின்மாண்பு' முற்றிலும் புதுக்கவிதைகளைக் கொண்டது. சமுதாய இழிவுகளை நன்கு சுட்டிக் காட்டுகிறார். என்றாலும் ஆங்கில, வடமொழிச் சொற்களை எந்த வரையறையுமின்றிக் கலந்து 'தமிழ்க் கவிதை' இயற்றலாம் எனும் போக்கு அவரிடம் மிகுதியாகவே காணப்படுகிறது.

"சேலம் டு டெல்லி
வயா சென்னை
நத்தைக்கும் பைலுக்கும்
ஓட்டப் பந்தயம்"[43]

"இம்பார்டன்ட் லீடர்ஸ்
ஆப் மாடர்ன் இண்டியா
என டிக்டேஷன் போட்டால்
இம்பொடன்ட் லீடர்ஸ்
என்றே
எழுதித் தொலைக்கிறதுகள்
இறுதியாண்டு பயிலும்
மாணவ மணிகள்"[44]

'காமரூபம்' நூலிலோ முற்றிலும் பாலியல் கவிதைகள் உள்ளன. அவை அருவருப்பான படிமங்கள்; உடல் உறுப்புக்களை முற்றிலும் உரிந்த நிலையில் காட்ட விரும்பும்

42. தமிழன்பன், தோணி வருகிறது, ப. 50
43. தமிழ்நாடன், மண்ணின் மாண்பு, ப. 39
44. மேலது. ப. XI

போக்குடையவை. தலைப்புகளோ 'தமிழை'த் தூக்கி விழுங்கக் கூடியவை. 'டிரஸ், இன்வென்சன், ஸ்கேல், Generation Gap, Interview என்பன போகத் தமிழ் என்னும் தலைப்பிலேயே வருஞ்செய்தி மேற்கோள் காட்டப்படமுடியாத தன்மையது. இந்நூலில் கேலி செய்யும் போக்கு இருந்தாலும் இத்தகைய முயற்சிகள் 'எழுத்து'க் காலக் கவிஞர்களின் காமக் கையாளலை விடத் தரம் தாழ்ந்தவை என்பது குறிப்பிடத் தக்கது.

மு. மேத்தாவிடத்தில் ஒரு தெளிவு இருக்கிறது. 'யாப்புக்கு முதன்மை தருவது மரபுக்கவிதை. கருத்துக்கு முதன்மை தருவது புதுக்கவிதை" எனும் அவரது கருத்தே நல்ல சிந்தனை தான். கவிதைகளும் சமுதாயச் சிந்தனையுடையவை தாம். 'செருப்புடன் ஒரு பேட்டி' சிறந்த படைப்பாகும். 'தேசப் பிதாவுக்குத் தெருப் பாடகனின் அஞ்சலி'யில் விடுதலைக்குப் பின் நடைபெற்றிருக்க வேண்டிய நல்ல பணிகள் இடையிலேயே சிதைந்து ஏழைகளை ஏமாற்றி ஏங்க வைத்து விட்ட நிலையைச் சிறப்பாகப் பாடுகிறார். காந்தியடிகளைப் பார்த்து,

"அமுத சுரபியைத்தான்
நீ தந்து சென்றாய்
இப்போது
எங்கள் கைகளில் இருப்பதோ
பிச்சைப் பாத்திரம்.

அணைக்கட்டுகளில்
திறக்கப்படும் தண்ணீர்
பள்ளங்களை ஏமாற்றிவிட்டு
மேட்டை நோக்கியே
பாய்கிறது.

சேரிகளில் மட்டுமே
யாத்திரை செய்வாய்
என்பதைத்
தெரிந்து கொண்டதால்
உன்னை நேசித்தவர்கள்
தேசத்தையே
சேரியாக மாற்றிவிட்டார்கள்"[45]

45. மு. மேத்தா, கண்ணீர்ப் பூக்கள், ப. 29

என்று குமுறுகிறார். நடைமுறை உலகியலிலும் அன்றாடச் சிக்கல்களிலும் கண்ணோட்டம் செலுத்துவது அவரது சிறப்பு.

குருவிக்கரம்பை சண்முகம் இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டுக் கவிதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற மரபுக் கவிஞர். 'செந்நெல் வயல்கள்' எனும் நூலில் வசன கவிதைகளும் புதுக் கவிதைகளும் இடம் பெறுகின்றன.

'வெண்மணி'யை எண்ணி உருகும் முற்போக்கு—வியத்நாமில் புரட்சி அரசு தோன்றியதை வாழ்த்தும் பாங்கு — வங்கத்தை எண்ணும் மனநிலை—பெரியாரை வாழ்த்தும் துடிப்பு இவைபோகத் தமிழக அரசியல் சிறப்பு, தோல்வி பற்றிய செய்திகளும் இடம் பெறுகின்றன.

பிற புதுக்கவிஞர்கள் பழந்தமிழ் நூல்களையும் பிறமொழி நூல்களையும் பார்த்தெழுதும் பழக்கத்தை மேற்கொண்டுள்ள தாகக் குற்றம் சாட்டுகிறார். மேலும் "புதுக்கவிதைகளை இதுவரை யாரும் உருப்படியாக எழுதவில்லை. கவி உள்ளம் இல்லாத பபூன்கள் சிலர் புதுக்கவிதைத் துறையில் புகுந்து கொண்டு வேடிக்கை காட்டிக் கொண்டிருக்கிறார்கள்"[46] என்கிறார்.

மரபுக் கவிதைகளையும் உணர்வு ஏதுமின்றித் தேவைக் கேற்ப எழுதிய சூ. இன்னாசி ஏதோ ஒரு மனநிலையில் நான்கைந்து புதுக்கவிதைகள் எழுதியுள்ளார். 'V' வாய்மைக்கே V', புதுயுக Stores' எனும் தலைப்புகள் 'ஆறு புரட்சிப் பாஷை. Wordings' எனும் நடை ஆகியவை அவரைக் கவிதைக்கே தொடர்பற்றவராக்கி விடுகின்றன. இத்துறையை இவர் விட்டு விடலாம் எனும்படியான படைப்புகள் அவை.

வான்முகில் முற்றிலும் மரபுக் கவிதைகளே பாடியிருந் தாலும் ஒன்றிரண்டு புதுக்கவிதைகள் பாடி உள்ளார். புதுக் கவிதை மரபுக் கவிதை பற்றிய பிரிவினைப் பேச்சையே அவர் ஒப்புக் கொள்ளவில்லை. புதுக்கவிதையை அவர் 'கவிதை போலில்லாக் கவிதை' எனக் கருதுகிறார்.

பல்லவன் ஆளும் பேருந்து நாட்டினில்
இந்தப் பெண்கள் இடிதாங்கிகளே[47]

46. ஏ. சண்முகம், செந்நெல் வயல்கள், பக். 79–80
47. வான்முகில், கடற்கரைக் கவிதைகள், ப. 9

என்று நமது பாரதப் பெண்களின் இரங்கத்தக்க நிலையைக் குறிப்பிடுகிறார்.

மரபுக் கவிதை பாடியுள்ள மு. வை. அரவிந்தனின் 'வெள்ளை மலர்கள்' புதுக்கவிதை என்பதைவிட உள்ளீடற்ற வெள்ளைக் கவிதை என்று குறிப்பிடலாம். 'வேர்கள் மரத்தின் வாய்கள்' என்றும் திரைப்படம் 'மணத்தை நுகரும் ரசிகர்க ளைக் கொல்லும் பூநாகம்' என்றும் பாடுவதுடன், காவல் துறை இல்லாமலேயே கட்டுப்படும் எறும்புகளின் ஒழுங்கைப் பாராட்டுவதும் சட்டம் இருந்தும் கட்டுப்படாத மக்களின் ஒழுங்கின்மை பற்றிக் கேலி செய்வதும் நன்றாக உள்ளன.

காவிரி நாடன் மரபுக்கவிதையில் காப்பியமே உருவாக்கியவர். மரபுகளை, அவை நடைமுறை வாழ்க்கையின் உண்மைகளை உணர்த்தத் தடையாக இருப்பதாலேயே மீறுகிறார். அது 'துணிச்சலான துளிர்கள்' ஆகிறது; தான் கடவுளின் தூதுவனாக இருப்பது தற்சிந்தனையற்றது என்பதை யும் கடவுளின் குழந்தை எனப்படுவது பெற்றோரைக் கேவலப் படுத்துவது என்றும் கூறி தன் பகுத்தறிவுப் போக்கை வெளிப் படுத்துகிறார். உலகத்தைச் சிவப்பாக்க வேண்டும் எனும் வேட்கையும் வெளிப்படுத்தப்படுகிறது. நூலே அத்தகைய முயற்சியாளர்களுக்குத்தான் காணிக்கையாக்கப்படுகிறது. ஒழுக்கம், நாணயம், தன்னலமற்ற தொண்டு ஆகியவை வலியுறுத்தப்படும் தெளிவான உள்ளடக்கத்தைக் கொண்டு விளங்குகின்றன அவரது கவிதைகள். வினா விடை வடிவமான புதுக்கவிதை இந்நூலின் தனிச்சிறப்பு.

மரபுக் கவிதை, குறுங்காப்பியத்துடன் புதுக்கவிதைகளை யும் வெளியிடுகிறார் தி.இரா. தாமோதரன். விடுதலை வாங்கிக் கொடுத்ததுதான் காந்தியடிகள் செய்த தவறு என்றும், தற் காலப் பெண்கள் கூட உடையணிவதில் காந்தியின் வாரிசுகள் என்றும் வருணிக்கிறார்.

இரண்டாவது வகையினரில் குறிப்பிடத்தக்கவர் சிற்பி ஒருவர் தான். அவர் இன்று வானம்பாடி இயக்கத்தில் குறிப்பிடத்தக்கவர். 'வானம்பாடி' இதழை வெளியிடுபவர்; அகராதிப் புரட்டர்களை அடித்துத் துரத்திவிட்டு மறுவேலை பார்க்க வேண்டும் என்று நினைப்பவர்.

'சிரித்த முத்துக்கள்' எனும் அவரது மரபுக் கவிதை நூலில் அவரே எழுதிய முன்னுரையில் புதுக்கவிதையினை வன்மையாகச் சாடுகிறார்.

கத்தரித்துப் போட்ட வறட்டுத் துணுக்குகளை எல்லாம் புதுக்கவிதை என்று பொய் மேளம் கொட்டும் தலைவிரி கோலத் தாண்டவம். இதனாலும் தமிழ்க்கவிதை பயன் பெற வில்லை. தமிழ்மண்ணின் மணமோ, நினைவில் நிற்கும் சொற் சிற்பமோ, அலையாடும் வாழ்க்கைப் பரப்பைக் கலையாக்கிக் காட்டும் ஆற்றலோ அவற்றில் இல்லை. எழுதியவனுக்கு மட்டுமே புரிகின்ற படிமங்களும் குறியீடுகளும் புதுக்கவிதை கொண்டிருந்தால் அதை அவனே வைத்துக் கொள்ளட்டும். மனித நெஞ்சின் உயிர்த் துடிப்பை, ஆசைப்புயலை, வெற்றி தோல்விகளை, தேம்பலை, திமிரின் உணர்ச்சியை, ஏற்றத்தை, எழுச்சியை எந்தக் கவிதையால் ஓசை நயத்துடனும் உருவச் சிறப்புடனும் சொல்ல முடியுமோ அந்தக்கவிதைதான் தமிழுக்கு வாழ்வுதரும் கவிதை"[48] அவரே புதுக்கவிதை எழுதத் தொடங்கிய பின் "சிற்பியின் கவிதைகள், கற்பனைவளம், கலை நயம், கவிதா வேகம், உணர்வு ஓட்டம் கொண்டு சிறந்து விளங்குகின்றன"[49] என்று வல்லிக்கண்ணன் வழங்கும் பாராட்டைப் பெறுகிறார். 'சிகரங்கள் பொடியாகும்,' 'சர்ப்ப யாகம்' போன்றவை சிறந்த சிந்தனைப் போக்குடையவை. 'எப்போதும் இருப்பவர்கள்' என்ற தலைப்பில் 'இயேசுநாதர்' சிறந்த சித்திரமாக அமைகிறது. உள்ளடக்கத்தில் 'சிகரெட்' கூட இடம் பெறுகிறது. வழக்குமன்றம் காதுகேளாத நடுவர்களால் வாய்பேசாத வழக்கறிஞர்களால் நிரம்பிக் கிடப்பதைக் கேலி செய்கிறார். விரிவான பார்வையும், சமுதாய உணர்வும் விரவி வரும் படைப்புகள் அவருடையவை. பௌராணிகர்களின் பழமைச் செய்திகளே குறியீடுகள் ஆகின்றன. தொடக்கத்தில் இருந்ததை விடப் பின் பகுதியில் வடமொழி ஆங்கிலச் சொற்களை மிகுதியாகவும் அந்தந்த ஒலி நயத்திலும் கையாளும் போக்கு அவரிடம் மிகுந்துள்ளது. சொப்பனம் கூட 'ஸ்வப்நம்' என்றே வருகிறது. மாற்றங்கள் வேண்டும் எனும் மாளாத விருப்பம் அவருக்கு இருக்கிறது. மலையாள மின்னல் களால் தன் கண்களுக்கு வெளிச்சம் கிட்டியதாகவும் நினைக்கிறார். புதுக்கவிதை என்றாலும் சந்த ஒழுங்கோடு சொற்கள் விழுவதை அவரிடம் காணலாம். அவரது 'ஒளிப் பறவை' இத்தன்மை உடையதுதான்.

48. சிற்பி, முன்னுரை, சிரித்த முத்துக்கள், ப. VI

49. வல்லிக்கண்ணன், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், ப. 218

"முகம் சிவந்த வையம்
முத்தரும்பும் வேளையிலும்
மொக்கின் அலகிலொரு
மோகனப்பண் பூக்கிறது"[50]

*எதுகை மோனையை அவர் புறக்கணித்தாலும் அவரது கவிதையில் அவை இயல்பாகி விடுகின்றன.*

"வட்டக் குளம்படி
பட்ட இடத்தில் தீ
மட்டுப் படாமல் தெறிக்கிறது
சட்டக் கயிறுகள்
வெட்டுக் கடிவாளம்
விட்டுக் குதிரை பறக்கிறது"[51]

*"சிற்பி தமிழ் மரபோடு கவிதை எழுதுகிறார். அந்த மரபை மீறாமலேயே புதுமை செய்யவேண்டும் என்று முனைகி றார். இவருக்கு உண்மையான நாட்டம் புதுமையிலா, மரபிலா என்று எனக்குப் புரியவில்லை"[52] என்கிறார் செயகாந்தன். சிற்பி தமக்குக் கைவரப் பெற்ற மரபினை உதறுவது போல வெறுப்பது போலப் பேசினாலும், மரபு அவரின் உள்ளுக்குள் ளேயே ஆட்சி செலுத்துவதை 'ஒளிப்பறவை'யிலும் மரபினை வலிந்து உதறி எறியும் போக்கினைச் 'சர்ப்பயாக'த்திலும் காணலாம்.*

*இனி, மூன்றாம் வகையைச் சேர்ந்தவர்களை ஆராயலாம். நேரடியாகப் புதுக்கவிதைத் துறைக்கு வந்தவர்கள் அவர்கள். அபியின் 'மௌனத்தின் நாவுகள்' படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றில் சிறந்து நிற்கிறது. புரட்சிக்கு அமைதி யான முறையில் படைதிரட்டும் நூலாக இஃது உள்ளது. நீலாம்பரி, 'ஒரு நம்பிக்கை செத்துக் கிடக்கிறது' போன்றவை நல்ல படைப்புகள். அவரது கவிதைகள் நம்பிக்கைப் போக்கு டையவை. கற்பனைகளுக்கு அடியில் உள்ளார்ந்த மனிதப்பற்று இருப்பதைக் காணலாம். காமத்தை, இராப்பிச்சைக்காரனாகப் பார்ப்பது சிறந்த படிமம் ஆகும்.*

50. சிற்பி, ஒளிப்பறவை, ப. 5
51. சிற்பி, ஒளிப்பறவை, ப. 37
52. செயகாந்தன், முன்னுரை, சிற்பி, மு. நூ. ப. X

"வாழ்வின் மடியிலிருந்து
சருகுகளாய் உதிர்வதிலும்
மரணத்தின் மடியிலிருந்து
விதைகளாய்ச் சிந்தலாமே"[53]

எனும் பாடற்பகுதியில் நடப்பியலிலிருந்து பெறும் படிப்பினை வித்தூன்றி நின்று விளைவைத் தரவேண்டுமே தவிர வெறுமனே உதிர்ந்து சலசலத்து விடக்கூடாது என்று கூறுவதிலிருந்து அவரது கூர்மை தெரிகிறது. கண்ணீர், உறக்கம், கனவு, முதலியவை சிறந்த குறியீடுகளாக அமைகின்றன.

"இவைகள் அசலாக இருப்பதன் காரணம் இவைகள் கருவறைகளிலிருந்து வந்திருக்கின்றன. ஒப்பனை அறையிலிருந்து அல்ல. இவைகள் பாதையை உண்டாக்கும் பாதங்கள். எனவே எந்தப் பழைய பாதையின் புழுதியும் இவற்றை அழுக்காக்கவில்லை"[54] என்கிறார் அப்துல் ரகுமான்.

கூர்மையான சமுதாயப் பார்வை உடைய புவியரசு மரபைத் தாக்கியே கவிதை புனைந்திருக்கிறார். "சிலுவைப் பாடு' போன்றவை அழகாகவும் அமைந்துள்ளன. குண்டு வீச்சுக்கு ஆளாகிக் குறைவு பட்ட சிலுவையையும், அதில் அறுபட்டுத் தொங்கிக் கொண்டிருக்கும் இயேசு உருவத்தையும் எண்ணிக் குமுறுகிறார். கவிஞன் உள்ளத்தில் ஒரு குமுறல் ஏற்பட்டால் அதுதான் உண்மையான கவிதையாக அமையும் என்பதற்கு அஃது எடுத்துக்காட்டு. எனினும் தலைப்பு 'ஏலி ஏலி லாமா சபக்தானி' என்று அமைவதுதான் புதிராக உள்ளது. மற்றொரு கவிதைத் தலைப்பு: 'A Truth Paste' என்பதாகும். கங்கை கொண்டான் 'கூட்டுப் புழுக்கள்' எனும் நூலில் படங்களும் கவிதைகளுமாகக் கலந்து கொடுத்துள்ளார். அதனுள் இவருடைய மேல்நிலைக்கல்வி நமக்கு விளங்கும் படியுள்ளதே தவிர, தாழ்ந்துகிடக்கும் சமுதாயம் மேல்நிலைக்கு வருவதற்கான வழிமுறைகள் எவையும் இல்லை. 'PA' Fabric;Dreams' 'Time Capsule' போன்றவை சில தலைப்புகள்.

(நிர்மாணம் +நிதி)/நிர்வாகம் =நிர்மூலம் + நிவாரணம் - இதுவும் ஒரு தலைப்புத்தான். வியட்நாமையும் அவர் விடவில்லை. 'சில நைலான் கனவுகள் எரிகின்றன' ஒரு நல்ல படைப்பு ஆகும். வர்க்க முரண்களை அகற்றுவதில் அக்கறை

53. அபி, மௌனத்தின் நாவுகள், ப. 91
54. அப்துல் ரகுமான், முன்னுரை, அபி. மு. நூ. ப. 12

காட்டி, சமகாலச் சிக்கல்களை எண்ணி எழுதும் பாங்கு சக்திக் கனலிடம் உள்ளது. இவர் ஒதுக்கினாலும் மரபுவழிப்பட்ட சந்தக் கவிதைகள் வந்து விழுகின்றன. அயல்மொழிச் சாயலில் புதுக்கவிதைகளைச் செய்வோரைத் திறனாய்வு செய்வது 'ஒரு விமரிசனம் நடக்கிறது' எனும் கவிதை. 'ரோடு ரோலரின் பவனி' அவருக்குப் புகழ் தந்த படைப்பு. இது சிறந்த குறியீட்டுக் கவிதை என்று அனைவராலும் பாராட்டப் படுகிறது. இந்தியாவிலும் குண்டு செய்து வெடிக்கத் தொடங்கி விட்டோம் என்பதை 'உனக்குப் பிடித்த பூ' எனும் பெயரில் எழுதுவது சிறப்பாக உள்ளது.

குறிப்பிட்டுச் சொல்லும்படி இல்லாவிட்டாலும் துரை சீனிச்சாமியின் 'அந்தி' எனும் நூல் 'எழுத்து' வெளியீடாக அமைவதாலேயே நம் பார்வையில் விழுகின்றது. புதுக்கவிதை என்றாலும் பண்டைய 'இணைக்குறள் ஆசிரியப்பா'வை மனதில் வைத்து எழுதுவதாகக் கூறுகிறார்.

போலிகளைக் கேலி செய்யும் போக்கு சிறப்பாக உள்ளது. 'சோசலிசம் வாங்கித் தரும் தரகர்', 'கல்வித் துறைக்குள் குரங்குகளை அனுப்பும் புத்திசாலிகள்' 'அதிகார அறிஞர்கள்' என்ற தொடர்களே அவரது உணர்ச்சியினைத் தெளிவு படுத்தும். போலிச் சமதரும வாதிகளை ஆழமாகவே சாடுகிறார். 'தமிழ்ப் பண்பாடு' என்பது சிறந்த அங்கதக் கவிதை எனலாம்.

இராமியின் 'புள்ளிகள் கோடுகள் கோணங்கள்' வெறுந் தாளை விலையுயர்த்தி விற்கும் நூல். சனநாயக சோசலிசத்தின் பொய்ம்மை தகர்த்து உண்மையைக் காட்டும் சில இடங்கள் தவிரக் குறிக்கத் தகுந்த வேறு சிறப்புக் கூறுகள் எவையுமில்லை. தமிழ் நடையைக் கொலை செய்து அதனை அரங்கேற்றம் செய்து படிப்போரைத் தவறான திசை நோக்கி இட்டுச் செல்லுகிறது நூல். ஆய்வுரை எழுதிய கோ. இராசாராம் 'முழுப்புத்தகத்தில் ஒன்றே ஒன்றுதான் கவிதைக்கு அருகில் வர முயல்கிற தன்மைகளைக் கொண்டுள்ளது. இது அவ்வளவு சந்தோஷமான விஷயமில்லை'[55] என்கிறார்.

தம்பி சீனிவாசன் மரபுக்கவிதை எழுதியிருந்தாலும் மரபறிந்தவராகவோ, புரிந்து கொண்டு புதுக்கவிதைக்கு வந்ததாகவோ தெரியவில்லை. 'அட்டாச்ட்', 'கங்கிராசு

55. கோ. இராசாராம், முன்னுரை, இராமி. புள்ளிகள்–கோடுகள் கோணங்கள் ப. IX

லேஷன்ஸ்' போன்ற தலைப்புகள் தமிழைப் பாழ்படுத்துவதை அவர் உணரவில்லை.'ஏடெடுத்தேன் கவி ஒன்று வரைந்திட' எனும் பாரதிதாசன் வரியையும் படித்து விட்டு இந்நூலுள் உள்ள 'ஏடெடுத்தேன்' கவிதையைப் படித்தால் வேறுபாடு விளங்கி விடும்.

"இஷ்டம் போல
ஸ்டேஷன் போட்டு
கஷ்டம் இன்றி
எதையும் காண்பேன்."[56]

என்னும் மனநிலையே அவரது கவிதைகளிலும் ஊடாடி நிற்கிறது.

மரபின் மீது தொடர்பும் புதுக்கவிதை உறவும் கொண்டவர் இன்குலாப். தான் ஒரு பொதுவுடைமையாளர் என்பதை அவரே தெளிவுபடுத்துகிறார். 'நீங்கள் என்னைக் கம்யூனிஸ்டு ஆக்கினீர்கள்' என்பதோடு இதனை ஒப்பிட்டுப் பார்க்கலாம். மற்றவர்கள் தங்கள் கவிதைகளில் வல்லாண்மைக்காரர்களை, பூர்சுவா மனநிலை படைத்தவர் களைப் பொதுவாகத்தான் சாடுகின்றனர். ஆனால் இன்குலாப் சிம்சன் தொழிலாளர் அடிபட்ட நிகழ்ச்சியைக் கொதிப்போடு பாடுவதோடு நிற்காமல் காங்கிரசு, தி.மு.க.வை நேரடியாகச் சாடுகிறார். தன்னை ஒரு சர்வ தேசிய உணர்வு கொண்ட 'கம்யூனிஸ்ட்' ஆகக் காட்டிக் கொள்ளாமல், தமிழகக் 'கம்யூனிஸ்ட்' கட்சி உறுப்பினராகக் காட்டியுள்ளமை அவரது கவித்தன்மையைக் குறைத்து விடுகிறது.

அவரது கவிதைகளின் உள்ளடக்கம் முழுவதும் 'சர்வ தேசப் பாட்டாளி வர்க்க விடுதலை' என்கிற—வாழும் உலகுக்கான தேவையான கொள்கைகளே"[57] ஆகும்.

உயிர்த்துடிப்போடு கூடிய கவிதை வரிகள் சிறப்பாகவே அமைகின்றன.

"நீங்கள்—
சூரியனிலிருந்து புறப்பட்ட சூறாவளியால்
சரித்திர மேட்டில் சாம்பலாவீர்கள்"[58]

56. தம்பி சீனிவாசன், காலக்கறையான். ப. 8
57. இளவேனில், முன்னுரை, இன்குலாப் கவிதைகள், ப. 12
58. மேலது, ப. 57

"சேரிப்புதல்வர்களின் சிவந்த விழிகளில்
பிர்லா மாளிகைகள் சாம்பலாகின்றன"[59]

'தவாரிஷ்' எனும் தலைப்புக்கும் கவிதைக்கும் உள்ள தொடர்பு விளங்கவில்லை. கற்றவர்களைத் தொடமுடியாத இது போன்ற தொடர்கள் ஏழைகளைத் தொட்டு எழுப்பிப் போர் வீரர்களாக மாற்றும் என்று எதிர்பார்ப்பது தவறாகும்.

"தொங்கு தோட்டத்தில், நெடுஞ்சுவரில், தாஜ்மகாலில், ஏழைகளின் வேர்வையும் கண்ணீரும் ரத்தமும் கொட்டிக் கிடக்கின்றன. அவர்களின் மண்டையோடுகளில், எலும்புத் துண்டுகளில் இவற்றுக்கு அஸ்திவாரம் போடப் பட்டுள்ளது"[60] என்பதுதான் அவரது பார்வை.

ஏ.தெ. சுப்பையன், பரிணாமன் போன்றோர் நேரடியாகப் புதுக்கவிதைத் துறைக்கு வந்தாலும் மார்க்சியச் சிந்தனையோடு பாட்டாளிகளின் குரலை எதிரொலிக்கும் படைப்பாளிகளாவர்.

"மரணத்தைப் பற்றிச் சிந்திக்கக் கூடாது என்பதற்காகவே நான் மக்களைப் பற்றிச் சிந்திக்கிறேன்" என்று தொடங்குகிறார் ஏ.தெ. சுப்பையன். சிந்துகளும் சந்தங்களும் விரவி வரினும் 'முறையீடு' ஒரு புதுக்கவிதைத் தொகுப்பே. முதலாளித்துவச் சுரண்டல் இந்திய விடுதலைக்குப் பின் தெளிவாகவே உள்ளது என்பதால் உலகத் தொழிலாளர்களை ஒன்றுபடக் கூவுவதே 'முறையீடு' எனலாம். இரு முகாம்களின் போராட்டங்கள் கவிதை உலகைப் பெரிதும் பாதித்துள்ள நிலையில் இந்நூல் நசுக்கப்பட்ட மக்களின் போர்க்குரலாகவும் முனகல் ஒலியாக வும் உள்ளது. சோசலிஸ்ட், கம்யூனிஸ்ட் ஆவதில் விருப்பம் உள்ளதைப் பெருமையோடு ஒப்புக் கொள்கிறார். 'நீங்கள் என்னை மார்க்சிஸ்ட் ஆக்கினீர்கள்' என்கிறார். நா. காமராசனின் தாக்குரவு இவரிடம் அதிகம் உள்ளது. 'பாரதமாதாவின்' இன்றைய நிலையினைக் குறித்து,

"குஜராத்திப் புரோகிதன்
துணையுடன்
பிரிட்டிஷ்காரனிடம்
விவாகரத்துப் பெற்று
பிர்லாவுக்குத் தாலி கட்டிக் கொண்டவள்

59. மேலது, ப. 60
60. மேலது, ப. 78

கோடிக் கணக்கான புதல்வர்களைப்
பட்டினிபோட்டு விட்டு
கொஞ்சிக் கொண்டிருக்கிறாள்
டாட்டாவுடன்,"[61]

என்கிறார்.

"திருஞான சம்பந்தனைத்
தேடிப் பிடித்துப்
பால்புகட்டிய
பராசக்தி
சென்னை நகரத்
தெருவாழும் கிம்பந்தன்
பசித்தழும் போது
கைப்புறம் ஏந்திக்
கச்சவிழ்ப்பாளா"[62]

என்று கேட்கிறார். புரட்சி ஒன்றே புதிய சமுதாயத்தைப் படைக்கும் என்பதால், வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் கொழுந்து விட்டெரியும் சமூக அமைப்பில் உழைக்கும் மக்கள் ஒற்றுமையாக ஒரே அணியில் திரண்டு போராட அழைக்கிறது அவரது நூல். இருந்தாலும் சில இடங்கள் முற்றிலும் உரைநடையாகவே காட்சியளிக்கின்றன.

பரிணாமன் ஒரு பொதுவுடைமைக் கவிஞர் என்ற முறையிலேயே அறிமுகம் ஆகிறார். மக்கள் பணி ஒன்றே மாபணி என்பதால் தமிழ் சிலகால் தள்ளி விடப்படுகிறது. 'ரைஸ் எகயின்ஸ்ட் ரெப்ரஷன்' என்பது ஒரு தலைப்பு.

ஆகச்டில் ஏற்பட்ட ஏமாற்றம் அக்டோபரைக் (உருசியப் புரட்சியும் அதன் விளைவுகளும்) காண அவாவுகிறது. 'பரிணாமன் முதலில் ஒரு கம்யூனிஸ்டு; பிறகுதான் கவிஞர்'[63] என்கிற மீராவின் கூற்று நோக்கத்தக்கது. 'வர்க்கப் போராட்ட ஆயுதம் ஏந்துங்கள்' எனும் கவிதைத் தலைப்பே அவரை நமக்கு உணர்த்திவிடும். தொழிலாளிக்கும் உழைப்பாளிக்கும் சொல்ல வேண்டிய செய்தியை (message) அவர் உள்ளடக்கமாகக் கொள்ளுகிறார்.

61. ஏ.தெ. சுப்பையன், முறையீடு. ப. 54
62. மேலது, ப. 30
63. மீரா, பின்னுரை, பரிணாமன், ஆகஸ்டும் அக்டோபரும், ப. 102

வானம்பாடிக் கவிஞர்கள் பெரும்பாலும் சோவியத்தைச் சார்ந்தும், பொதுவுடைமை பூக்க வேண்டும் எனும் விருப்பத்தை ஏந்தியும் செயற்படுகின்றனர். அவர்களது கவிதை களில் ஆங்காங்கே இந்தக் கருத்துக்கள் தோன்றுவதோடன்றி முற்றிலும் இந்திய சோவியத் நட்புறவுக் கவிதைகளாகவே பலர் பாடியும் உள்ளனர். 'சிநேக புஷ்பங்கள்' எனும் தொகுப்பில் இந்தியப் பெண்களை வாலெண்டினாவாகவும் குரூப்சு சாயாவாகவும் ஆக்க விரும்புகின்றனர். மு. மேத்தா முற்றிலும் பாரதக் கதையையும் கதைமாந்தர்களையும் குறியீடாகக் காட்டிப் புதிய குருச்சேத்திரப் போரை எதிர்நோக்குகிறார். எட்டுக் கவிஞர்கள் தங்கள் நெஞ்சம் திறந்து புகழ்மொழிகளை அள்ளிவீசிச் சோவியத்தை வலம் வந்து இந்தியாவை இறுக்க மாப் பிணைக்கின்றனர்.

வானம்பாடிகளின் கூட்டுக் குரலாக வெளிவந்துள்ளது 'வெளிச்சங்கள்' எனும் தொகுப்பு. பல கவிஞர்களின் குறிப்பிடத் தக்க படைப்புகள் இதனுள் தொகுக்கப் பட்டுள்ளன.

> "ஆனால் நாங்களோ
> ஜீவ மகரந்தம் சுமந்து
> செழுந்தேன் பிலிற்றுகின்ற
> சிவப்பு ரோஜாக்கள்
> எமது அமுத தாரகைகளால்
> கூரைக்குடில்களின்
> மண்குடங்களை
> இளைய வேனிலின்
> கனவுக் கிண்ணங்கள் ஆக்குவோம்.
> கனைத்துக் கறுத்த சேரிப்புறங்களுக்காக
> எமது புல்லாங்குழல்களால்
> கீதாஞ்சலிகள் புனைந்து கொடுப்போம்"[64]

என்று வானம்பாடிகள் தங்களை அறிமுகப்படுத்திக் கொள்ளுகின்றனர்

சாலைக் கடவுள்கள் புதிய சுரண்டலுக்கு வழிவகுப்பதை அழகுறக் காட்டுகின்றனர். இன்றைய மக்களாட்சியைப் பற்றி,

64. சிற்பி, நாங்கள், வெளிச்சங்கள், ப. IX

பித்தர்கள் குத்தும்
முத்திரைப் பெருக்கில்
பெரும்பான்மையிடம்
கற்பிழப்பவள்
ஆசை கொண்டவர்
அணைத்துச் சுவைக்கவும்
ஆர்ப்பரித்தவர்
ஆண்டு களிக்கவும்
ஜனனம் எடுத்த
சரித்திரச் செல்வி"[65]

*தான் 'ஜனநாயகி' என்கின்றனர்.*

*அன்று அயலவரால் கொள்ளையடிக்கப்பட்ட இந்தியா, இன்று நம்மவர்களாலேயே கொள்ளையடிக்கப்படுவதை அனைவரும் உணர்த்துகின்றனர்.*

"அடுத்த குழந்தை
இப்போது வேண்டாம்
இரண்டிற்குப் பிறகு
எப்போதும் வேண்டாம்
அரசு விளம்பரங்கள்
கண்ணைப் பறித்தன
ஆமாம் இரண்டுக்கு மட்டும்
என்ன திட்டம்
போட்டுள்ளார்களாம் ?"[66]

*என்பது போன்ற கடுமையான வினாக்களின் வடிவமாய் இக் கவிதை நூல் துலங்குகிறது.*

*'எழுத்து' இயக்கத்தில் தொடர்புடைய சிலரோடு வானம்பாடி இயக்கத்தோடு தொடர்பில்லாது இங்குமங்குமாக இயங்கும் சிலரும் சேர்ந்து செய்த தொகுப்பு 'நாற்றங்கால்'.*

*உள்ளடக்கத்தில் ஒருங்கிணைப்போ, கொள்கைச் சாயலோ இல்லாததால் கவிதையின் உள்ளடக்கம் சிதறலாக, வெவ்வேறு திசைகளை நோக்கி ஓடுவதாக உள்ளது. மரபில் சிக்கிக் கொள்ளவே கூடாது எனும் வலிந்த முயற்சி*

65. சகுந்தலா கதிரேசன், மு.நூ; ப. 30
66. ஓடை, பொ. துரையரசன்; மு.நூ. ப. 79

இருப்பதோடு உரைநடை ஒடிப்பு, இருண்மை முதலிய போக்குகள் அதிகம் மண்டிக் கிடக்கக் காணலாம்.

'விதி' எனும் தொகுப்பில் நூற்று ஆறு கவிதைகள் அடங்கியுள்ளன. வானம்பாடி இயக்கத்தவர், எழுத்து இயக்கத் தவர், முற்றிலும் புதியவர்கள் என மூவகையினரின் படைப்பு களும் வருகின்றன. பட்டிமன்றம் பேசுபவர்களைப் பட்டிகள் என்ற வைகிறார் அக்கினிபுத்திரன்.

"இவர்கள்
கற்றுச் சொல்லிகள்
கட்சி மாறிகள்
காலம் தின்னிகள்
சமூக உண்ணிகள்
இலக்கிய அலிகள்"[67]

என்கிறார்.

"சனநாயக சோசலிசம்" கேலி செய்யப்படுகிறது. பசியால் சோரம் போகும் பெண்களைக் காவல்துறையும் வேட்டையாடு கிறது என்பதை 'அபராதத்துடன் தண்டனை' எனும் கவிதை காட்டுகிறது. வானம்பாடிகளை வரவேற்றும் ஊக்கமூட்டியும் த.பீ. செல்லம் 'வானம்பாடிகளே பாடுங்கள்' என்று பாடுகிறார்.

"நாங்கள் சேற்றில்
கால் வைக்கா விட்டால்
நீங்கள் சோற்றிலே
கை வைக்க முடியாது"[68]

என்ற 'சோதி'யின் பாட்டு தனிமுத்திரையுடன் திகழ்கிறது. வானம்பாடி இயக்கம் 'அகரம்' வெளியீடுகளாக வெளிக் கொணர்ந்த புதுக் கவிதை நூல்களே மிகுதி. 'அன்னம்' (1976 ஆம் ஆண்டு) மலர் ஒரு திறனாய்வரங்கத்தோடு சில புதுக் கவிதைகளையும் தொகுத்து வழங்குகிறது. 'உதயகீதங்கள்' எனும் தலைப்பில் பாரதிதாசன் சிறப்பினை எடுத்துக்காட்டி நால்வர் பாடியுள்ளனர். மரபுக்கவிதையில் சிறப்புற்ற கவிஞரைப் புதுக்கவிதை கொண்டு பாராட்டுவது புதுமைதான்.

67. அக்கினிபுத்திரன் விதி, ப. 12
68. சோதி, விதி, ப. 45

"...........நீ
சுயநலக்காரனாக
இருந்திருந்தால்
சுகமாக
வாழ்ந்திருப்பாய்"[69]

என்கிறார் செந்தில். இதில் பாரதிதாசன் மனமும் வாழ்வு நிலையும் தெளிவாக்கப்படுகின்றன. தொடர்ந்து சமுதாய இழி நிலைகளையும் பாடுகின்றனர்.

"ஆக்டோபஸும் நீர்ப்பூவும்' எனும் தொகுப்பில் ஆறு பேர் பாடுகின்றனர்.

"மிஸ் தமிழ்த்தாயே
நமஸ்காரம்"[70]

என்று புதுமுறை வணக்கம் தோன்றுகிறது. இத்தொகுப்பின் நோக்கத்தை அவர்களே தெளிவு படுத்தியிருக்கிறார்கள். இந்த உலகின் சுயமைத் தன்மைகளைக் கண்டு பொறுக்க முடியாமல் பொங்கி எழுந்த கவிதைகளாக இவற்றைச் சுட்டுகிறார்கள்.[71]

ஆசிரியர்கள் செய்ததும் செய்ய மறந்ததும் எவை எனத் தமிழவன் தெளிவுபடுத்துகிறார்.

"ஒற்றெழுத்து இட
வருந்தி எழுத்தறிவித்தோனே
சோறில்லா ஏழைக்குச்
சோறிடும் வழியை
ஏன் சொல்லித் தரலை ?"[72]

என்கிறார்.

ஆராய்ச்சியாளர்கள் எழுதி வாங்கும் டாக்டர் பட்டத்தையே தீர்த்தங்கரன் ஏளனம் செய்கிறார்.

69. செந்தில், உதய கீதங்கள், ப. 21
70. ஆக்டோபஸும் நீர்ப்பூவும், ப. iii
71. 'இவ்வுலகில் பல வேஷங்களைக் காப்பியடித்துப் பிழைக்கத் தெரியாமல் இந்த உலகின் பகல் வேஷம், பச்சோந்தித்தனம், அயோக்கியத்தனம், கையாலாகாத்தனம் இவைகள் அடியெடுத்துக் கொடுக்க நெஞ்சு பொறுக்காமல் தங்கள் கவித்வ கோபத்தை ரவை வைத்துப் பாட்டாக்கியிருக்கிறார்கள்' மேலது, ப. IV
72. மேலது, ப. 11

"டாக்டர்
எங்களூர் கோமாளிகள்
வெற்றிலைக் கடை முகப்பில் போட
வாங்கும்
டாக்டர் பட்டத்திற்கு
நாங்கள் கண்டுபிடித்தது
பண்டாரகர் என்பது"[73]

என்கிறார்.

மாணவர்களிடையே போட்டி அறிவிப்புச் செய்து அதன் வழிப்பெறப்பெற்ற புதுக்கவிதைகளின் தொகுப்புகள் சில. 'செவ்வந்தி', 'மயானத்தில் ஒரு தொட்டில்' 'இலவசத்திற்கு ஒரு விலை' ஆகிய அனைத்தும் வாணியம்பாடி மாணவர்கள் பாடியவை. ஆம்பூர் மாணவர்கள் 'ஊருணி' என்ற தொகுப்பை அளிக்கின்றனர். மதுரை மாணவர்கள் கடந்து செல்லும் இனிய கல்லூரி நாட்களின் நினைவாக அளிப்பது 'மரத்தடி மகாராஜாக்கள்'. இதில் முபாரக் எழுதிய 'நாங்கள் மாணவர்கள்' எனும் கவிதை உண்மையான படப்பிடிப்பாகும்.

"எங்களில் சிலர்
வேலைநிறுத்தம் செய்வர் காரணமின்றி
நாங்கள் அவர்களைப் பின்தொடர்வோம்
செம்மறி ஆடுகள் போல"[74]

நடப்பியல், சமுதாயம், காதல் என அவர்கள் பார்வை விரிகிறது.

பாரதிதாசனைப் போல் சமுதாய உணர்வும் புதுக் கவிதையாளர்களைப் போல் முற்போக்கும் தமிழில் புதுமை வேண்டும் எனும் நோக்கும் படைத்த சாலை இளந்திரையன் 'உரை வீச்சு' எனும் பெயரில் ஒரு கவிதை நூலையும் வெளியிட்டுள்ளார். நாட்டு மக்களின் இயல்பான பேச்சு நடையிலேயே எள்ளல், அங்கதம், வீரம், நகை முதலான சுவை நலங்களும் விடுகதை, ஒப்பாரி முதலிய வகை வளங்களும் இருப்பதை உணர்த்துகிறார். 'மக்களின் அன்றாடப் பேச்சு நடையை ஊன்றிக் கவனிப்பார்களானால் உரைவீச்சு என்பதே

73. ஆக்டோபஸும் நீர்ப்பூவும், ப. 45
74. முபாரக், மரத்தடி மகாராஜாக்கள், ப. 5

இதற்குப் பொருத்தமான பெயர் என்பதை அவர்களும் ஏற்பார்கள் என்பது திண்ணம்'[75] என்கிறார்.

எவர் வழியிலும் சார்ந்து நடக்காமல் சொந்தச் சிந்தனையில் துணிந்து தனிவழி நடக்கும் போக்கு உள்ளது. முற்றிலும் அரசியல் சமுதாய சீர்திருத்த உணர்வோடு படைப்புகள் அமைந்துள்ளன.

"கறையான் எலியான் காதலில் பிறந்த
தேளான் என்னும் புதுப்பணக்காரன்
வாலை உயர்த்திக் கொட்ட வருகிறான்"[76]

என்பதில் வர்க்கப் பார்வை தெரிகிறது. சோசலிசம் பலர் பார்வையில் பல வடிவம் எடுத்தாலும் விளைவு போலித்தன மாகவே உள்ளது என்பதனை,

"சோசலிசச் சுவருக்குள்ளே
சொந்தத் தனிநலம் நாடும்
நடையே இங்கு நடைமுறை"[77]

என்று சுட்டுகிறார். அதிகச் சம்பளம் வாங்குபவர்கட்கே தொடர்ந்து ஊதிய உயர்வும் சலுகைகளும் தரப்படுகின்றன. ஆனால் ஏழைகளுக்கான ஏற்றம் எளிதில் வாய்ப்பதில்லை.

"எழுந்து நடக்கும் இவர்கள்
இடறி விழுந்ததும் அடிபட்டதுவும்
உண்மைதான் என்றே உணரும் அரசு
விழுந்தது விழுந்தபடியே கிடக்கும்
வெறுமைக் கூட்டத்தை நினைப்பதே இல்லை
... ... ... ... ... ... ... ... ...
அது அங்கே வயிற்றில் அனலை வளர்க்கையில்
இது இங்கே தொந்திக்குச் சந்தனம் பூசுகிறது"[78]

என்கிறார்.

நாரணோ செயராமனின் 'வேலி மீறிய கிளை'யில் 'லெவல் கிராஸிங்' போன்ற தலைப்புகள் இடம்பெறுகின்றன. வைத்தீசுவரனின் 'உதய நிழல்' தனிமனித விடுதலையின்

75. சாலை இளந்திரையன், உரைவீச்சு, முன்னுரை, பக். 6–7
76. சாலை இளந்திரையன், உரைவீச்சு, ப. 86
77. மேலது, ப. 60
78. மேலது, ப. 40

தேவையை வற்புறுத்துகிறது. செந்தாழை இரானின் 'ஆத்ம வேதனை'யில் 'Mother India' 'மை பொலிட்டிகல் டாக்' போன்ற தலைப்புகள் வருகின்றன. 'இயக்கம்' நூலில் சோசலிசச் சிந்தனைகள் உள்ளன. 'நல்ல உரைநடையில் ஒவ்வொரு பக்கமும் நலம் பயக்கும் ஏடாக' இஃது அமைவதாகக் கோவேந்தன் முன்னுரை வழங்குகிறார். ஆயினும் 'ஏ! ஞாயிற்றே!' என்று அழைப்பது மொழிச் செப்பமின்மையைக் காட்டுகிறது.

## தரக்குறைவினர்

வானம்பாடி இயக்கத்திலும் ஈடுபடாமல் மரபுக்கவிதை, புதுக்கவிதை ஆகியவற்றின் போக்கும் நோக்கும் அறியாமல் தம் மனம் போன போக்கில் சிலர் புதுக்கவிதைகளை வெளியிட்டுள்ளனர்., முற்றிலும் புதிய அவர்கள் சிலநேரம் மின்னல் வீச்சுக்களைப்போல் சில கவிதைகளைத் தந்தாலும் பெரும்பாலும் சொல்லடுக்குகளை, மனக் கோணல்களை, பாலியல் வேட்கைகளை ஆசைதீர வெளிப்படுத்தப் புதுக் கவிதை வாய்ப்பாக உள்ளது என்ற நினைப்பில் இயங்கு கின்றனர்.

தேவதேவனின் 'குளித்துக் கரையேறாத கோபியர்கள்' என்ற நூலில் சமுதாயச் சிந்தனைகளோ பிறநோக்கங்களோ காணப்படவில்லை. அவரது கவிதை முயற்சி பற்றி 'வானம்பாடி' இதழ் தரும் மதிப்புரையே பொருத்தமாக அமைகிறது.

"புத்தகத்தில் தாராளமாகவே அம்மணம் அடிபடுகிறது. நமது தேசத்தில் கோடானுகோடி ஏழ்மைக் குடில்களின் நிர்வாணக் கோபியர்கள், கண்ணீர்க் குளங்களில் மூழ்கிக் கொண்டிருக்கையில், இந்த அவலத்திற்குக் காரணமான கண்ணபிரான்கள், 5 ஸ்டார் ஓட்டல் அறைகளின் டிம்லைட்டில் ஸ்காட்ச் தீர்த்தம் பருகி, ஜாஸ் இசையில், போதைகளின் மடியில் கிடந்து புரள்கையில், நமது தலைவிதி களை இவர்கள் பிராந்தியில் தொட்டு எழுதுகையில், நம் தேவ தேவன் இப்படிப் பாராமுகமாய்ப் பார்வை திருப்பி ஓடி ஒதுங்கி குளக்கரைப் புதர் மறைவில் ஒளிந்து நிற்கிறாரே... இதெல்லாம் நமக்கு எவ்வளவு பெரிய இழப்பு..."[79]

79. வானம்பாடி இதழ், 14

அடுத்து, 'திவ்ய தரிசனம்' என்ற நூல் பற்றித் திறனியர் ஆ. செகந்நாதன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"திவ்ய தரிசனம் என்ற பெயரில் ஒரு புதுக்கவிதை நூல் வந்திருக்கிறது. எந்த மஞ்சள் பத்திரிகையிலும் கூட இது வரை வந்திருக்க முடியாத, விமர்சனத்திற்காகக் கூட மேற்கோள் காட்ட முடியாத சாக்கடைச் சிந்தனைகள் நிறைந்த நூல் அது... தமிழ்க் கவிதைத் திறனாய்வாளர்கள் எதையும் அனுமதிப்பார்கள் என்ற துணிவே இந்நூல் எழுந்ததன் காரணம்"[80] என்கிறார். இவ்வகையில் புதுக்கவிதை எழுதுபவர்களில் இவர்கள் கடைசி அணியினர் ஆவர். இவர்களைப் பற்றி அப்துல் ரகுமான் "யாப்பு வேலி அகற்றப் பட்டதால் கண்டவர்கள் எல்லாம் கவிதையை எளிதாக மேய வந்து விட்டார்கள்"[81] என்று குறிப்பிடுகிறார்.

## புதுக்கவிதையின் நிறைகள்

### குறியீடு (Symbolism)

புதுக்கவிதைக்குச் சிறப்பளிப்பது குறியீட்டுத் தன்மை ஆகும். செய்திகளை நேரடியாகச் சொல்லாமல் மற்றொரு குறியீட்டின் வழி வெளியிடும் சிறப்பு கவிதைக்கு ஏற்றம் தருகிறது.

**"எங்கள் தலைவர்
எட்டி உதைத்தார்
வறுமை
வேக வேகமாய்
வெளியேறிற்று—
பரட்டைத் தலையும்
எலும்பும் தோலும்
கிழிந்த கந்தையுமாக"[82]**

### படிமம் (Imagism)

புதுக்கவிதையினைப் பிறவற்றிலிருந்து வேறுபடுத்திக் காட்டிச் சிறக்கச் செய்வது படிமம் ஆகும்.

80. ஆ. செகந்நாதன், புதுக்கவிதை ஒரு திறனாய்வு, பக் 38–39
81. அப்துல் ரகுமான், முடிவுரை, அன்னம், ப. 34
82. மீரா. ஊசிகள், ப. 14

"விழிப்பு விரல்துடைக்கும்
விழியின் வியர்வைகள்
சுழிப்பின் முனைப்புகள்
தோண்டும் சுரங்கங்கள்"[83]

எனவரும் கவிதையில் படிமச் சிறப்பைக் காணுகிறோம்.

## உள்ளடக்கம்

தொடக்கத்தில் மழை, அழகு, வானம், கனவு, சிந்தனை என்ற அளவிலேயே உள்ளடக்கத்தைக் கொண்டிருந்த புதுக் கவிதைகள் வஞ்சிக்கப்பட்டோர், வறுமை, சுரண்டல் எனச் சிந்திக்கும் போக்கில் மாறிவிட்டன. அலிகள், பிச்சைக்காரர் கள், அநாதைகள், குடிகாரன், ஊமைகள், விலைமகளிர் எனச் சமுதாயத்தின் பல்வேறு பகுதியினரையும் பார்க்கும் பார்வை உள்ளது. நீதிமன்றத்தையே கூண்டிலேற்றிக் குடிகாரனே திறனாயும்படி கவிதை அமையும் புரட்சிப் போக்கு அமைந்து விட்டது. மண்ணுலகில் மானுடம் பாடும் கவிஞர்களாகவே பலர் காட்சியளிக்கின்றனர்.

காதல், வீரம், என்ற நினைப்புள்ள சங்க காலத்தையும், சமயம், கடவுள் எனும் இடைக்காலத்தையும் தாண்டிச் சமுதாயத்தை நேரடியாக நினைத்து நெகிழும் உள்ளடக்கப் போக்குகள் இக்காலப் புதுக்கவிதைகளின் சிறப்பாகும். மனமுறிவு, அவநம்பிக்கை அதிக அளவில் இடம் பெறும் வாய்ப்பாகப் பல புதுக்கவிதைகள் அமைகின்றன.

## கூர்மையும் தெளிவும்

சுற்றி வளைக்காமல் நேரடியாகச் சொலலி விடுதல்; பளிச்சென்று விளங்க வைத்தல் ஆகியன புதுக்கவிதைச் சிறப்பு களாகும்.

"யாஹ்யாகானின் வீதிகளில்
நம்தாய்கள் கற்பிழக்க
காகிதத்துக் கண்ணகிக்குச்
சிலையெடுத்தா மகிழ்ந்திடுவீர் ?"[84]

என்பது பரிணாமனின் கூர்மைக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

83. தமிழன்பன், தோணி வருகிறது, ப. 61
84. பரிணாமன், ஆகஸ்டும் அக்டோபரும், ப. 49

### சுருக்கம்

"இரவிலே வாங்கினோம்
இன்னும் விடியவே இல்லை"[85]

*எ. அரங்கநாதன் தரும் அழகிய கவிதை இது. நம் விடுதலையின் தன்மையைச் சுருக்கமாகச் சொல்லி விளக்குகிறார். ஆனால் இந்த வரிகள் மூலமாக இல்லாமல் தழுவலாக அமைந்துள்ளன. 15-8-1947 அன்றே பாரதிதாசன் விடுதலையின் எதிர்கால விளைவுகளில் நம்பிக்கையின்றி இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.*

"இரவில் வாங்கும் இந்திய விடுதலை
என்று விடியுமோ யார் அறிகுவரே !"[86]

*எனினும் இத்தகைய உத்திகளால் புதுக்கவிதை சிறப்பான இடத்தை எட்டிப் பிடித்திருக்கிறது எனலாம்.*

*புதுக் கவிதையின் குறைகளாகக் குறிக்கப்படுபவை பல.*

### பிரமை உடைப்பு

*எதையும் பச்சையாகச் சொல்லி விடுதல் என்பது நாகரிகம் அன்று. அப்படிச் செய்தல் போலிமைத் தோலுரிப்பு என்றோ பிரமை உடைப்பு என்றோ பாராட்டுதல் அதனினும் கேடு. நாகரிகம் கருதியாவது ஓர் இரட்டை நிலையை எல்லாவற்றிலும் பின்பற்றியே ஆகவேண்டும்.*

### இருண்மை (Obscurity)

*படிமங்களையும் குறியீடுகளையும் அளவுக்கு மீறிக் கையாண்டு படிப்பவர்களை ஒரு புரியாத் தன்மை நோக்கி நகர்த்திக் குழப்புவது பெருங்குறை. புதுக்கவிதையின் சிறப்பாளர்கள் என்று பாராட்டப்படுபவர்களிடமே சில நேரம் இந்தக் குறை நேருகின்றது. இதைப் பயன்படுத்திப் பலர் புரியாமல் எழுதுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது.*

### சொல்லுடைப்பு

*சண்முக சுப்பையா, சி. மணி போன்ற சிலரின் கவிதைகள் இந்தக் குறைகளோடு வெளிவந்துள்ளன.*

85. எ. அரங்கநாதன், விதி, ப. 118
86. பாரதிதாசன், நாள் மலர்கள், ப. 84

"பண்டிதன் கணக்குப் படி ஆ
கமொத்தம்"[87]

## இயைபின்மை (Discontinuity)

நா. காமராசன் எழுதிய 'நான் மரணத்தைப் பற்றிச் சிந்திக்கிறேன்' எனும் கவிதையின் கருத்தோட்டத்தில் இயைபின்மை மிகுந்து காணப்படுகிறது. சிறந்த கவிதையைக் கூட இது சீர்குலைத்து விடுகிறது.

## அருவருப்பான படிமங்கள்

பலர், பாலியல் தொடர்பான சிந்தனைகளைத் தருவதாக எண்ணிக்கொண்டு அருவருப்பானவற்றைத் தந்து விடுகின்றனர். புதுக்கவிதையின் நல்ல நோக்கத்தையும் சிறந்த எதிர்காலத்தையும் இந்தக் குறைபாடுகள் சீர்குலைக்கின்றன.

## தாள்வீணடிப்பு

"பாட்டாளி வர்க்கத்தை மேம்படுத்துவதற்காகவே எங்கள் கவிதைகள் பிறக்கின்றன" என்று புதுக்கவிதை யாளர்கள் மார்தட்டினாலும் நூல்களை விலை கொடுத்து வாங்குவோர்க்குக் கவிதை கால்பங்கும் வெறுந்தாள் முக்கால் பங்குமே கிடைக்கின்றன. இதை வேறு கோணத்தில் புவியரசு ஒப்புக் கொள்கிறார். (பின்னிணைப்பு-2)

"பாட்டாளி வர்க்கம் புதுக்கவிதையை எட்டிப்பிடிக்க முடியாத நிலையில் புதுக்கவிதை குறைந்த பட்ச சமரசத்தோடு குறைந்த பட்ச ஒலிநயத்தோடு கீழிறங்கி நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் இக்காலத்தில் எதார்த்த நிலை"[88] என்கிறார்.

## திறனாய்வு நிலை

மரபுக் கவிதையினருக்குள் ஒருவர் மீது மற்றொருவர்க்குக் கருத்துவேறுபாடும் பொறாமையும் இருக்குமேயன்றி, மரபுக்கு மாறாக எவரும் குரல் கொடுத்ததில்லை. கருத்துத் தெரிவித்ததும் இல்லை. புதுக்கவிதையாளர்களிடத்தில் புதுக் கவிதை பற்றியும் ஒவ்வொருவரது போக்குப் பற்றியும் மிகப்பெரிய கருத்து வேறுபாடு உள்ளது.

87. சி.மணி. ஒளிச்சேர்க்கை,
88. வானம்பாடி, இதழ் 15

புதுக்கவிதையாளர்கள் கவிஞர்களாக மட்டுமன்றித் திறனியராகவும் (விமரிசகர்கள்) விளங்குகின்றார்கள். அவர்கள் பிறரைத் திறனாய்வு செய்வதை விடத் தங்களுக்குள்ளேயே செய்து கொள்ளும் திறனாய்வு நோக்கத்தக்கது. தருமு ஔரூப் சிவராம் பற்றி வல்லிக்கண்ணன் "சிவராம் ஒரு தன்னகங்காரத் தற்சிறப்பு மோகி என்பதை அவர் ஒவ்வொரு கட்டுரை மூலமும் அம்பலப்படுத்தி வருகிறார்... அவருடைய கருத்தின் படி தமிழ்நாட்டில் அவர் ஒருவரே சுத்த சுயம்பிரகாசத் தனிப் பெரும் ஜோதி என்பதை அவர் தம்பட்டம் அடிக்கத் தவற வில்லை"[89] என்கிறார்.

"விமர்சன மேதாவிகள்" என்ற பகுதியில் ஞானியைப் பற்றிய மதிப்பீடு மிகவும் சரி; எல்லாம் தெரிந்ததாகப் பாவலாப் பண்ணும் இந்தக் குழப்ப வாதியை—பிளவு வாதியை—மேலாதிக்க வாதியை—அராஜக வாதியை— தொடர்ந்து அம்பலப்படுத்துங்கள்"[90] என்று ஞானியைப்பற்றித் தி.க. சிவசங்கரன் குறிப்பிடுகிறார். உண்மையில் ஞானி ஒரு திறனியர்—'வானம்பாடி'களின் வரலாற்றில், ஓர் உறுப்பாக இருந்தவர். வானம்பாடிகளைப் பற்றி ஞானி கூறிய திறனாய்வுரைகளுக்கு இப்படியொரு சாடல் எழுகிறது.

"தான் சொல்லுவதற்கெல்லாம் தலையாட்டிப் பொம்மைகள் இருக்க வேண்டும் என்று ஆசைப்படும் பரமார்த்த குருவைப் போல் படைப்பாளிகளை ஆட்டி வைப்பதில் அடைந்த தோல்வியால் ஆத்திரங்களை விமர்சன மாக்கித் தந்திருக்கிறார்.

வானம்பாடிகள் கூச்சலிடும் ஆரவாரக்காரர்கள்— தத்துவம் தெரியாதவர்கள் என்று அவசியமில்லாமலே அளந்திருக்கிறார் எல்லாம் தெரிந்த இந்த ஏகாம்பரம்... ... உண்மைகளைத் தரிசிப்பது மேதையின் வேலை, உறுமுவதும் கனைப்பதும் இருமுவதும் ஆரோக்கியத்தின் அடையாள மில்லை."[91]

## மரபும் புதுமையும்—ஓர்—ஒப்பீடு

மரபுக் கவிதைகள் என்ற முறையில் அச்சில் வெளிவந்த நூல்களை மட்டுமே கணக்கில் எடுத்துக் கொண்டு பேசுவதால்

89. வானம்பாடி, இதழ் 81
90. மேலது
91. வானம்பாடி இதழ் 17

இவ்வளவுதான் தமிழில் உண்டு என்பது முடிவாகாது. இன்று நாட்டில் பாட்டரங்குகள் மிகுதி. ஆனால் அவற்றில் பங்கு பெறும் மிகச் சிறந்த கவிஞர்களின் எந்தப் படைப்பும் நம் ஆய்வுக்குள் வரவில்லை. அச்சிடப்பெறாத ஒரே கரணியத்தால் கவிதை வளரவில்லை என்று கூறிவிட முடியாது. குறிப்பாகக் கூறத்தக்கவை, கு.மா. பாலசுப்பிரமணியம், இளங்குமரன், தமிழண்ணல், ஆ. பழநி, ம. முத்தரசு, அ. செகதீசன், புத்தூரான் ஆகியோர்தம் நயம் வாய்ந்த தனிக் கவிதைகளாகும்.

## சந்தங்கள்

> "மொட்டுமடல் மேனியது விட்டு வில காதபடி
> தொட்டழகு பார்த்திருக்கும் நெஞ்சம்—பட்டுக்
> கட்டுடல்கள் ஒன்றையொன்று கட்டிவிளை யாடுவதைக்
> கண்டுபெரு மூச்சுவிடும் மஞ்சம்"[92]

எனும் கவிதை சந்தத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

## ஓர் ஒப்புமை

கவிஞர் கண்ணதாசன் கருத்துகள் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கவை: "கவிதையின் தனிச்சிறப்பு தாளமும் சந்தமும் நிறைந்திருப்பதுதான். தமிழ் இலக்கணம் தாளங்களை வைத்தே வரையறுக்கப்பட்டுள்ளது. ஓசையை அடியாகக் கொண்டே எதுகையும் மோனையும் தோன்றின. யாரும் எழுதக்கூடிய வகையில் தமிழ் இலக்கணம் எளிமையாகப் பின்னப்பட்டிருக் கிறது.

இருந்தும்கூட இலக்கண வரம்பே இல்லாத கவிதைகள் புதுக்கவிதைகள் என்ற பெயரில் இன்று வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இயற்கையாகவே தாளம் வந்து விழுந்தாலும் செயற்கை யாக அதை ஒதுக்கி எழுதுகிறார்கள் புதுக் கவிதைவாசிகள். அவர்களுக்கிடையிலும் மரபுக் கவிதை எழுதுவோர் நிறையத் தோன்றிக் கொண்டேயிருப்பது தமிழுக்கு இன்னும் நல்ல காலம் இருப்பதைக் காட்டுகிறது."[93]

ஆனால் புதுக்கவிதைக்காரர்கள் சந்தங்கள் பற்றியும் மரபு பற்றியும் என்ன கருதுகிறார்கள் என்பதையும் பார்க்க

92. இரா. வைரமுத்து, வைகறை மேகங்கள், ப. 32
93. கண்ணதாசன், அணிந்துரை, இரா. வைரமுத்து, மு.நூ. ப. 3

வேண்டும். "சுலபமாக இருக்க வேண்டும் என்பதற்காக நமக்குத் தென்பட்டவைகளை மரபாக மாற்றிவிட வேண்டும் என்று பார்க்கிறோம். இதனால் ஒருவன் தான் ஸ்தாபித்த மரபுக்குள்ளேயே சிக்கிக் கொண்டுவிடுகிறான்.

முதலில் அது (கவிதை) சந்தத்தை அறவே உதறியாக வேண்டும்.

வெகுகாலமாக சந்தத்தைத்தான் கவிதை என்று நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோம்"[94]

"இப்படி நம்மைப் பழக்கப்படுத்துகிற ஒன்றை நாம் தாண்டியாக வேண்டும். அதைக் கடக்காத வரையில் அதிசயங்கள் நமக்குப் புலப்படப் போவதில்லை."[95]

ஆக, தங்களை முற்றிலும் அவிழ்த்து விட்டுவிட வேண்டும் என்று புதுக்கவிதையாளர்கள் விரும்புகிறார்கள். அது மட்டுமன்றி இருக்கும் எல்லாவற்றையும் உதறிவிட வேண்டும் என்றும் துணிகின்றார்கள்.

இந்த நிலையில் மரபுக்கவிதையின் பிற நிலைகளையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மரபுக் கவிதைகள் சிலநேரம் வெறும் சொற் கூட்டமாகக் காட்சியளிக்கின்றன.

**"எங்கும் எங்கும் இன்பம்**
**எதிலும் எதிலும் இன்பம்**
**இன்பம் இன்பம் இன்பம்**
**இன்பமின்றி எதுவுமில்லை"[96]**

இது வெற்றெனத் தொடுத்தல் என்பது தெற்றென விளங்கும். மரபும் உணராமல், கற்பனையோ, உணர்ச்சியோ, வடிவமோ புரியாமல் பலர் எழுதி விடுகின்றனர். ஒடித்துப் போட்டு அச்சிட்டுவிட்டாலே அது கவிதையாகிவிடும் என்ற நினைப்பு மரபுக் கவிதையினரிடத்தும் உள்ளது. இவற்றை யெல்லாம் பார்த்துத்தான் மரபுக் கவிதைகளை 'வற்றிச்செத்த வார்த்தைகள்' என்று புதுக்கவிதையாளர்கள் தாக்குகிறார்களோ என்று தோன்றுகிறது.

94. ந. முத்துச்சாமி, முன்னுரை நாற்றங்கால், பக் 3–4
95. மேலது, ப. 4
96. வெற்றிவளவன் கவிதைகள், ப. 155

## தடுக்கும் நோக்கம்

பொதுவாக மரபுக் கவிஞர்கள் தங்கள் மரபுப் போக்கை விட்டு விடவோ மாற்றிக் கொள்ளவோ விரும்பவுமில்லை; முனையவும் இல்லை. புலவர் குழுவின் சார்பில் நடைபெற்ற தொல்காப்பியர் மாநாட்டில் கூறப்பட்ட முன்னுரை மிகவும் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

"புதுக்கவிஞர்கள் சிலர் கூடி இலக்கணக் கட்டுக் கோப்பை உடைத்தெறிவோம் என்கிறார்கள். இந்தப் போக்கு வாய்த்தால் மரபுகள் கெட்டு ஒரு தாறுமாறான நிலை ஏற்படும். இதைத் தடுப்பது புலவர் குழுவின் பொறுப்பு"[97]

எனவே தொல்காப்பியர் மாநாடு மரபுக் கவிதைக்கு எடுக்கப்பட்ட மாநாடு என்பது பொருந்தும்.

## புதுக்கவிதை பற்றி

**"ஒரு மோசமான சொல்லடுக்கு"[98]**

என்று செயகாந்தனும்

**"செத்துக் கொண்டு வரும் மரபுவழிக்**
**கவிதைக்கு மட்டும் பண்டிதக்**
**கூட்டம் ஜே போடுவதும் துளிர்க்க**
**முடியாமல் திக்கித் திணறித் துவண்டு**
**விடும் புதுக்கவிதைக்கு மட்டும்**
**புதுமைக் கூட்டம் ஜே போடுவதும்**
**ஏறக்குறைய ஒரே காரியம் தான்"[99]**

என்று கிருட்டிணன் நம்பியும் கருதுகின்றனர். புதுக்கவிதைகளின் போக்கைப் புலப்படுத்தும் இந்த மேற்கோள்கள் சில உண்மைகளைத் தெளிவுபடுத்தி விடுகின்றன. இந்த நிலையில் புதுக்கவிதை என்றால் என்ன என்பதை நாம் தெளிய முடியும்.

"சொற்களை ஆயுதங்களாகக் கையாளும் பக்குவம், பழைய யாப்பில் உள்ளதைவிட அர்த்த ஆழமுள்ள சந்த நுட்பம், சுண்டக் காய்ச்சிக் கடைசி நிலைக்குக் கெட்டிப்படுத்தும் வடிவ அமைப்பு, உள்ளடக்கமே வளர்ந்து

97. திருச்சி, தொல்காப்பியர் மாநாடு–நேரில் கேட்டது, நாள், 23–10–1977
98. முன்னுரை, அன்னம், ப. 4
99. அன்னம், ப. 4

அமையும் உத்திப்புதுமை, இவை எல்லாவற்றையும் விடப் புதிய பார்வை, புதிய உள்ளடக்கம்—இவை புதுக்கவிதையின் அவசியத் தேவைகள்"[100] என்று அப்துல்ரகுமானும்—

"இலக்கணச் செங்கோல், யாப்புச் சிம்மாசனம், எதுகைப் பல்லக்கு, மோனைத் தேர்கள், பண்டித பவனி, தனிமொழிச் சேனை இவை எதுவும் இல்லாத, கருத்துக்கள் தம்மைத் தாமே ஆளக் கற்றுக் கொண்ட புதிய மக்களாட்சி முறையே புதுக்கவிதை"[101] என்று மு. மேத்தாவும் குறிப்பிடுகின்றார்.

## சில தாக்குதல்கள்

புதுக்கவிதையாளர்கள் மரபாளர்களைத் தாக்குகின்றனர். வழி காட்டிகளைப் படித்துத் தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்றும், யாப்பு எனும் துருப்புச் சீட்டினைக் கையில் வைத்திருக்க விரும்புகிறார்கள் என்றும் கூறுகின்றனர். 'புதுக்கவிதையாளர்கள், யாப்பு பயங்கரமான ஆயுதம் என்று நினைத்து அருகில் வர அஞ்சுகின்றனர்' என்று மரபாளர்கள் தாக்குகின்றனர்.

மரபுக்கவிஞர் குயிலன் புதுக்கவிதையைச் சாடுகிறார்:

"வாசகர்கள் நாவல்களைப் படிக்கிறார்கள். சிறுகதைத் தொகுப்புகள் இரண்டாம் இடம் பெறுகின்றன. பிறகு சில வகை அறிவு நூல்களும், அறிவு விரோத நூல்களும், ஆனால் கவிதைக்கு இடமே இல்லை.

இந்த லட்சணத்தில் வசன கவிதைகள் (புதுக்கவிதைகள்) என்று சொல்லிக்கொண்டு சொந்தக் காசைச் செலவழித்து உயர்ந்த ரகத் தாள்களில் பக்கத்திற்கு ஐந்தோ எட்டோ வரிகளுடன் (வரிக்கு மூன்று நான்கு எழுத்துக்கள் போதும்) விளங்காத வார்த்தைகளை அச்சடித்து மிகக் கனமான அட்டைகளையும் அலங்கோலமான படங்களையும் போட்டுத் தாங்களும் கவிஞர்கள்-வசன கவிஞர்கள் (புதுக்கவிஞர்கள்) என்று சொல்லிக்கொள்வதில் திருப்தி அடையலாம். மக்கள் இந்த ரகங்களைப் பற்றிக் கவலைப் படுவதே இல்லை என்கிறார்"[102]

100. அப்துல் ரகுமான், முன்னுரை, மு.நூ. ப. 6
101. மு. மேத்தா, கருத்தோட்டம், மு.நூ. ப. 20
102. சமூக நிழல் இதழ் மார்ச்சு 80

இப்படி ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டு வரும் போக்கு சற்று மிகுதியாகக் காணப்படுவதால் புதுக்கவிதையின் சில படைப்புகள் தமிழுக்கு ஆக்கம் தரவில்லை என அவர்களே உணருகின்றனர் என உய்த்துணரலாம்.

"நான் இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை. ஆயின் நம்மைச் சுற்றி நச்சுப்புகை அதிகமாகிவிட்டது. நம்முடைய குறிக்கோள்கள் சிதைந்து போவதை நாம் உணர்கிறோம். உயர்ந்த மலையும் பரந்த கடலும் மனித ஜாதியின் நிலையாமையைச் சுட்டிக் காட்டுகின்றன"[103]

இது நல்ல உரைநடை என்பதை மறுக்க முடியாது. ஆனால் இதை ஒடித்துப்போட்டுப் புதுக்கவிதை என்று காட்டப்பட்டுள்ளது. இதை உரைநடையாகவே ஒப்புக் கொள்ளாமல் புதுக்கவிதை என்று வலியுறுத்துவது வரம்பு மீறிய போக்காக உள்ளது.

## வடசொல் வழங்குதல்

புதுக்கவிதை வாழ்விழந்து போன மணிப்பிரவாள நடையின் மறுபிறவியோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**"புதுக்கவிதைகள் பிரசவம் ஆகின்றன"**

**"ஓ வசந்த புத்ரியே !"**

இஃது ஒரு கவிதையின் தொடக்கம்.

**"ஓ சர்வ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தினிகளே !"**

என்பதும் புதுக்கவிதை வரிதான்.

இன்னும் தாராளமாக இந்தக் கலப்படம் நடைபெறு கிறது.

## ஆங்கிலச் சொல் வழங்குதல்

**"அதுதானே வழக்கமென ஆடிட்டிங் செய்கையிலே"**

இப்படியொரு வரி உள்ளது.

**"ரேஷன் கடை வாசலில்**
**கெரோஸின் டிப்போவில்**
**லைன்கள் குறையா"[104]**

103. ஐராவதம் நாற்றங்கால், ப. 8
104. தீபப்ரகாசன், நாற்றங்கால், ப. 23

இதுவும் ஒரு கவிதைதான். இது தமிழ்க் கவிதையாகப் பல நூற்றாண்டுகட்குப் பின்னும் நிலைத்திருக்குமா என்பது வினா.

## வழூஉச் சொற்கள்

பலர்க்குத் தமிழறிவே இல்லாத நிலையில் அவர்கள் இயற்றும் கவிதைகள் வாயிலாகப் பிறர் தமிழறிவு பெறுதல் இயலாததொன்றாகும்.

**"தரையில் நான் சுவற்றில் பல்லி"**

என்பதனுள் 'சுவரில்' எனும் சொல் தவறாகக் கையாளப் பட்டுள்ளது.

## உரை கூறவும் முடியாத நிலை

எழுத்தை எண்ணி அகராதிகளின் சொற்களை எடுத்துப் போட்டுக் கவிதையாக அடுக்குகின்றார்கள் என்று மரபாளர் களைத் தாக்கும் புதுக்கவிஞர்கள் எழுதுகிற சில கவிதைகளுக் குக் கட்டாயம் உரை வேண்டும். அதுவும் கவிதை எழுதுகிற வர்களே உரையும் எழுதி விட வேண்டும்.

**"... ... ... ... ... சிக்காது,**
**விரட்டலில் தப்பியவர்கள் தஞ்சம் புகுவார்களென்று வளை**
**மறைந்திருக்கும். தேடியலையும் காலடிகளுக்குத் தென்படாது**
**வெற்றியின், தோல்வியின் அல்லது வெளியே போய்வந்ததின்**
**சின்னமாய், தப்பி உள்ளே வந்தவர்கள் வளையின் வாசலில்**
**விட்டுவிடுவது தங்களின் ரத்தக் கறைகளை ... ..."[105]**

## மீண்டும் புராண, இதிகாசம்

மரபுக் கவிதைகள் பழையவை, கொஞ்சம் கூடப் புதுமையைச் சிந்திக்காதவை என்று சாடுகிற புதுக்கவிஞர்கள் சொல்லுகிற உவமை உருவகங்கள், எல்லாமே புராண, இதிகாசங்களிலிருந்துதான் வரும். பௌராணிகர்கட்கும் இவர்கட்கும் இதில் பெரிய வேறுபாடு இல்லை.

**"இந்திரக் கண்களை எடுத்துப் பதித்த ஆடைகள்'**

**'வட்டி வாமனன் மகாபலி கொள்வான்'**

**'ஆதிசேசன் ஒப்பனையில் வாழும் பரமபதப் பாம்புகள்'**

105. ஏமத்த், மு.நூ. ப. 47

'தன் வாமன வடிவத்துக்குள் திரிவிக்கிரம விசுவ
ரூபங்களை உறைய வைத்திருப்பது சொல்லின்
மகத்துவம்'

என வருவன மேற்கூறிய கருத்தினை வலியுறுத்துவனவாகும்.

## முடிவுரை

சுருங்கக்கூறின் புதுக்கவிதைகள் உடனடியான, நேரடியான சிந்தனைக் கிளர்ச்சிக்குப் பயன்படும். மரபுக் கவிதைகள் சுற்றி வளைத்து வரும் நிலை ஒன்று உண்டு. நல்ல கவிஞர்கள், இரண்டிலும் நிலை பெறுகின்றனர். செறிவும், தரமும் அற்றவர்கள் இரு தரப்பிலும் உண்டு. மரபுக் கவிதைகள் சந்தங்களால் நெஞ்சைத் தொடுவது போல் புதுக்கவிதைகள் நினைவைத் தொட்டு நிலைப்பதில்லை. யாப்பு ஆணவம் இல்லாமையும் இவற்றின் பிறப்புக்கு ஒரு கரணியம்.

"சிறுகதையை ரசிப்பதற்கு எப்படிச் சில காலம் சென்றதோ அதே போல இப்புதுக்கவிதையையும் ரசிக்க சில காலம் போக வேண்டி இருக்கலாம்"[106] என்கிறார் ந.பி.

இஃது உண்மை எனவே கொள்ளலாம். காலம் வளர, வளர, புதுக்கவிதை பல்வேறு உத்திகளுடன் வளர்ந்து சிறப் படையவும் அனைவரையும் கவரவும் ஆன ஒரு வாய்ப்பை எய்தி வருகிறது.

## முடிபுகள்

யாப்பு கவிதைக்கு வேலி என்றாலும் யாப்பு மட்டுமே கவிதையன்று. வெறும் ஓசையின்பமே கவிதையன்று. சந்தமும் ஒரு கூறாக மட்டுமே நிற்க முடியும்.

புதுக்கவிதைக்குப் பாரதியார் வித்திட்டார் என்பதற் காகவே பெரும்பாலும் பிராமண சமூகத்தைச் சேர்ந்த தமிழறிஞர்கள் எடுத்துக் கொண்ட கடும் முயற்சியாக இத்துறை உள்ளது. ந. பிச்சமூர்த்தி, தி.க. சிவசங்கரன், க.நா. சுப்ரமணியம், கு.ப. இராசகோபாலன், திருலோக சீத்தாராம், வல்லிக் கண்ணன், சி.சு. செல்லப்பா, சி. மணி போன்றவர்கள் முதலில் ஈடுபட்டாலும் இன்று இத்துறையில் எல்லாத்தரப்பினரும் ஈடுபட்டுள்ளனர். வடமொழி ஆங்கிலச் சொற்களைத் தாராளமாகக் கலந்து புதிய மணிப்பிரவாள நடையை

106. வல்லிக்கண்ணன், புநா, ப. 58

உருவாக்குவதற்குப் புதுக்கவிதை பெரும் வாய்ப்பாக உள்ளது. இப்போக்கு தமிழுக்குப் புதிய தீங்கை விளைவிக்கும் என்பது உறுதி.

புதுக்கவிதையில் காப்பியங்கள், மற்ற வகைச் சிற்றிலக்கியங்கள் எதுவும் பிறக்க வழியில்லை. அவை உதிரிக் கவிதைகளாகத்தான் நிற்கமுடியும். விதிவிலக்காக 'நீ இன்று இருந்தால்' எனும் குறுங்காப்பியம் தோன்றியிருப்பினும் அது சிறப்படையவில்லை.

பாட்டரங்குகளில் பாடி உணர்ச்சி எழுப்பும் வாய்ப்பு இன்மையால் எடுத்துச் சொல்லும் பாங்கு, கருத்து ஆகியவற்றால் மட்டுமே மக்களை ஈர்க்க முடியும்.

எனினும் தமிழ்க் கவிதையுலகில் ஒரு பரபரப்பையும் மந்த நிலை மாற்றிடும் புதுவேகத்தையும் புதுக்கவிதைகள் உண்டாக்கியுள்ளன. கவிதை இயற்றவும், கவிதையை அனைவரும் விரும்பிப் படிக்கவுமான ஒரு மறுமலர்ச்சியை இவை தோற்றுவித்துள்ளன. இதனை 'ஓர் அதிர்ச்சி வைத்தியம்' என்ற அளவிலேயே தமிழகம் ஏற்றுக் கொண்டிருப்பதாகக் கூறலாம். எனினும் அதன் எதிர்காலம் அதனிடத்தில்தான் உள்ளது.

# 2

# காப்பியங்கள்

தொல்காப்பியத்துள் வனப்பு வகையில் ஒன்றான தொன்மை, காப்பிய இலக்கணம் உரைப்பதாகக் கருதப்படுகிறது.[1] காப்பியங்களைப் பெருங்காப்பியம், காப்பியம் என வகைப்படுத்தி இலக்கணம் உரைப்பது தண்டியலங்காரம்.[2] பிளாக்கி (Blackie) என்பார் பழங்காலக் காப்பியங்களை அமைப்பின் அடிப்படையில் ஐவகைப்படுத்தி யுள்ளார்.[3] இலக்கணம் கூறும் காப்பிய உறுப்புகள், இலக்கியம் உணர்த்தும் காப்பியக் கூறுகள் ஆகியவற்றை ஆராய்ந்த ச.வே. சுப்பிரமணியன் காலத்திற்குத்தக இலக்கியப் பொருண்மையும் மாறும் இயல்பினது என்றும் காப்பியப் பொருண்மை கால, இட, சமய, சமுதாயச் செல்வாக்கிற்குத்தக மாறுபட்ட நிலையினைத் தமிழ்க் காப்பியங்கள் உணர்த்துகின்றன என்றும் குறிப்பிடுகின்றார்.[4]

ஆய்வுக்குட்பட்ட காப்பியங்களை அளவு கருதியும் நூலாசிரியர் குறிப்புரை கொண்டும் காப்பியமாகவும், குறுங்காப்பியமாகவும் பாகுபாடு செய்யலாம். பாடுபொருளின் அடிப்படையில்,

1. வரலாற்றுக் காப்பியங்கள்;
2. வரலாற்றுக் கற்பனைக் காப்பியங்கள்;
3. சமுதாயக் காப்பியங்கள்;
4. சமயக் காப்பியங்கள்;
5. புராண, இதிகாசக் காப்பியங்கள்;

---

1. தொல். பொருள். இளம்: 538
2. தண்டி. பொதுவணியியல்: 7–10
3. மு. வரதராசன், இலக்கிய மரபு, பக். 55–56
4. ச.வே. சுப்பிரமணியன், காப்பியப் புனைதிறன், ப. 44

என ஐவகைப் படுத்தலாம். இவற்றைக், கிளைக்கதைகள் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் (Supernatural elements), புராணக்கூறுகள், வருணனைகள், பின்னோக்கு உத்தி (Flash Back), முன்னோக்கு உத்தி (Fore shadowing), நாடகப்பாங்கு முதலிய காப்பியப் பண்புகளின் அடிப்படையிலும், தொடக்கம், முடிவு, இடை நிகழ்ச்சிகள், காண்டம், படலம், காதை, இலம்பகம் முதலிய கட்டமைப்புகளின் அடிப்படை யிலும் ஆராயலாம்.

## 1. வரலாற்றுக் காப்பியங்கள்

வரலாற்று நிகழ்ச்சிகளையும் வரலாற்று மாந்தர்களையும் மையமாகக் கொண்டு காப்பியச் சுவைக்காகச் சிறிதளவு கற்பனை கலந்து இயற்றப்பட்டவை வரலாற்றுக் காப்பியங் களாகும்.

'மகாத்மா காந்தி காவியம்,' 'உதயம்,' 'தோழனைப் பாடுவேன்,' 'லெனின்,' 'பகவான் மகாவீரர்,' 'அண்ணா வனப்பியம்,' 'அண்ணா காவியம்,' 'கலைஞர் காவியம்,' 'தீக்குளித்த செம்மல் சின்னச்சாமி,' 'ஆட்டனத்தி ஆதிமந்தி,' 'சோழமா காவியம்,' 'பனித்துளிகள்,' 'நூர்சகான் தோல்வி,' 'தமிழ்த்தாயின் ஆணை' ஆகிய பதினான்கும் இவ்வகையின.

## காந்தியடிகள்

பெருங்காப்பியங்கள் பாடும் வழக்கம் இக்காலத்தும் உண்டு என்பதற்குப் பத்தாயிரம் பாடல்களைக் கொண்டு இயற்றப் பட்ட 'மகாத்மாகாந்தி காவியம்,' சான்றாகும். இக்காப்பியம் "வாழ்க்கைச் சூறாவளி எவ்வளவு பரபரப்பாகச் சுற்றியடித்தாலும் அதைப் பொருட்படுத்தாது, நிரந்தரத் தத்துவங்களையே தமக்கு வழிகாட்டிகளாகக் கொண்டு, அவை காட்டும் புனித நெறியிலே மலை கலங்கினும் மனம் கலங்காது நடந்து காட்டிய மகான்களும் இம் மண்ணுலகில் அவதரித்திருக்கிறார்கள்"[5] என்ற உண்மையின் வெளிப் பாடாகும்.

அதிகாரங்கள் எவையுமின்றி நம் நாட்டு மக்களின் தலைவராயிருந்தவர் காந்தியடிகள். அவரது வரலாறு திட்ப நுட்பத்துடன் முப்பது காண்டங்களில் காப்பியமாகப்

5. எஸ். மகாராசன், முன்னுரை, டி.கே. இராமாநுசக் கவிராயர், மகாத்மா காந்தி காவியம், ப. iii

படைக்கப்பட்டுள்ளது. நமக்குக் கிடைத்த நூலில் இளம்பருவ காண்டம் நேதள காண்டம் ஆகிய இரண்டும் இடம் பெற்றுள்ளன.

பிறப்பு, திருமணம், பனி நாட்டுப் பயணம், தன்னாடு மீட்சி, தான் கொண்ட தொழிலைக் கைவிட்டு அரசியலில் நுழைந்தமை ஆகிய தலையாய செய்திகள் இடம் பெற்றுள்ளன.

மரபுப்படி ஆற்றுப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம் முதலிய வருணனைப் பகுதிகளும் சேர்க்கப்பட்டிருக் கின்றன. நன்மணம் புணர்தல், மந்திரம் போன்ற மரபு நிலைகள் உள்ளன. வரலாற்றை மட்டுமே நோக்காகக் கொண்டிருப்பதால் இயற்கை இகந்த நிகழ்ச்சி எதுவுமின்றி ஆற்றொழுக்காக நூல் அமைந்துள்ளது.

காந்தியடிகளைப் பற்றிய மற்றொரு காப்பியமாகிய 'உதயம்' அவரை ஓர் 'அவதார' மாந்தராகக் காட்டினும் பிற பகுதிகள் முற்றிலும் வரலாறாகவே அமைகின்றன.

முப்பது காதைகளாக அமைந்துள்ள இக்காப்பியத்தின் முற்பகுதியில் கடவுள் வாழ்த்து, பாயிரம், அவையடக்கம் ஆகியன மரபு வழி இடம் பெற்றுள்ளன. சிலம்பின் சாயலில் 'நினைவு மாலை' 'வழக்கு உரைத்த காதை' 'வஞ்சினம் உரைத்த காதை' எனும் தலைப்புகள் உள்ளன.

மழை வரவு, ஆற்று வெள்ளம், ஞாயிறு, அம்புலித் தோற்றங்கள் ஆகியவையும் இடம் பெறுகின்றன. கவிஞர் இந்திய விடுதலை ஈகமறவர்களுக்கு இமயமலையையே நடுகல்லாக அமைக்கும் திறத்தை,

**"ஈடறியாத் தியாகத்தைக்**
**கோ(டு) உயர் இமாசலமே**
**ஈசன் இட்ட நடுகல்லாய்**
**எடுத்துரைக்க நிற்பதுகாண்"[6]**

என வரும் பாடற்பகுதியால் அறியலாம்.

இந்தியாவின் பஞ்சநிலை, காந்தியடிகள் சிறைப்படுதல், வழக்குரைத்தல், நாட்டின் போலி நிலைகள், அண்ணல் மனவேதனை, நேரு, சுபாசு ஆகியோர் வருகைபுரிதல், ஆகச்டுப் புரட்சி, நவகாளிக்கலவரம், சமாதானப் பயணம்,

6. கலைவாணன், உதயம், ப. 214

கோட்சேயின் குண்டுக்குப் பலியாதல் ஆகியன இடம் பெறுகின்றன.

நிலமா மடந்தை வீற்றிருக்கும் அரசவையில் உலகமங்கையர் ஒவ்வொருவராக வருதல் — இங்கிலாந்தினியும் அமெரிக்க மாதும் பிரெஞ்சுமாதும் உருசிய சக்தியும் வந்து அமர்தல் ஆகியநிகழ்ச்சிகளின் பின்னர் பாரததேவி வந்து தனக்குரிய இருக்கையில் அமரப் போகும்போது 'அடிமைக்குச் சரியாசனம் தரலாகாது' என இங்கிலாந்தினி அதட்டுகிறாள்; வெளியே தள்ளப்பட்ட பாரததேவி நிலை குலைந்து அரற்றுகிறாள்; தன் பழஞ்சிறப்பெல்லாம் நினைக்கிறாள்; தனக்குப் பெருமை சேர்த்த கண்ணன், இராமன், வள்ளுவன், கண்ணகி எல்லாரும் அவள் நினைவில் ஊசலாடுகின்றனர். சாலியன் வாலாபாக் கொலை நிகழ்ச்சியும் நினைவில் நிழலாடுகிறது. சினங்கொண்டாள் பாரத சக்தி. அச்சீற்றத்தில் காந்தியடிகள் பிறப்பு எடுக்கிறார். அன்னையின் கட்டளைப்படி இங்கிலாந்தின் படைகளுடன் போரிட்டு வெற்றிபெறுகிறார்.

சுதந்திரக் கோயில் நிறுவப்படுகிறது. ஆனால் அங்கே வெகு விரைவில் பாவங்கள் தலை விரித்தாடுகின்றன. சமயப் பிணக்குகளையும் சாதிச் சழக்குகளையும் போக்க அறிவுப் பயணம் மேற்கொள்ளுகிறார். இறுதியில் கலியுகப் பேயின் கையாளான புல்லனால் தெய்வச் சாவு பெறுகிறார்.

காந்தியடிகள் வரலாற்றை முழுமையாகக் கொண்டாலும் இந்தியாவின் இன்றைய அவல நிலையையும், போலிகளை நம்பி உண்மைகளைப் புறக்கணிக்கும் போக்கையும் நயம்பட எடுத்துரைக்கும் காப்பியம் இது.

இடையில், ஏசு பெருமான் இழுத்துச் செல்லப்பட்டுச் சிலுவையில் அறையப்பட்ட கிளைக்கதையும் உள்ளது. துறக்கத்தில் ஆதி தேவன் தீட்டும் ஓவியத்தில் 'உதயமாகும்' காந்தியடிகள் உருவத்துடன் காப்பியம் முடிகின்றது.

மில்ட்டனின் துறக்க வீழ்ச்சி, துறக்க மீட்சி ஆகிய காப்பியப் பகுப்புகளைப் போன்று பாரதநாட்டின் வீழ்ச்சி, பாரத நாட்டின் தோற்றம் என இரு பகுப்புகளைக் கொண்டு இக் காப்பியம் விளங்குகின்றது. மில்ட்டன் காப்பியத்தின் உச்சத்தில் இயேசு விளங்குதலும் 'உதயத்' தின் உச்சத்தில் காந்தியடிகள் விளங்குதலும் ஒப்பிட்டுக் காணற்குரியன.

## இலெனின்

இந்திய விடுதலைக்குத் தந்தையாக விளங்கும் காந்தியடிகளைப் போலவே உலக அரங்கில் இன்று ஒரு பெரும் தத்துவத்தினைச் செயற்படுத்தியவராகவும், உருசிய விடு தலைக்குப் பாடுபட்ட வீரராகவும் இலெனின் காட்சி யளிக்கிறார். அவரது வரலாறு குறித்து இரு காப்பியங்கள் எழுந்துள்ளன.

மானுடத்தை வாழ்விக்க வந்த மாமனிதன் இலெனின் எண்ணங்களையும் செயல்களையும் தொகுத்தளிப்பது 'தோழனைப் பாடுவேன்.'

பிராவ்தாவும் இலெனினும், அக்டோபர் புரட்சி, இலெனின் சுடப்பட்டுத் தப்பியது, போர்முனையில் அவரது வீரச் செயல்கள், எண்ணங்களைச் செயற்படுத்திக் காட்டியவகை ஆகியவை இக்காப்பியத்தின் தலைமைக் கருத்துகள் ஆகும்.

இலெனினுக்குச் சார் மன்னன் தந்த இடையூறுகளும் தமையன் தூக்கிலிடப்பட்டதால் ஏற்பட்ட மன எழுச்சியும் கார்ல் மார்ச்சு தந்த கருத்துப் புரட்சியும் அவனை வீரனாக்கின. அவன் செய்த நேர்முக, மறைமுகப் போர்களால் 1917இல் உருசியப்பாட்டாளி அரசு மலர்ந்தது. இவை 'லெனின்' காப்பியத்தின் கருப்பொருள்கள் ஆகும். இதில் இலெனின் காதல் வாழ்வும் பின்னப்பட்டுள்ளது.

இரண்டுமே காப்பியங்கள் ஆனாலும், கருத்துப் புரட்சிக்கே முதன்மை தரப்பட்டுள்ளதால் கற்பனையோ, பிற காப்பியப் பண்டுபுகளோ அவற்றுள் இல்லை.

## மகாவீரர்

மகாவீரர் அரச வாழ்வைத் துறந்து சமயகுரவராக மாறிய சுருக்கமான வரலாறாக 'பகவான் மகாவீரர்' அமைகின்றது. இது பாட்டுடை நடனமாகப் பரதநாட்டியம் ஆடுவதற்கேற்ற கவிதைச் சந்தத்தில் அமைக்கப்பட்டுள்ளது. வீடுபேறடைதல் எனும் நூற்பயனோடு, பிற அறவினைப் பண்புகளும் மேலோங்கி நிற்கும்படி காட்டப்பட்டுள்ளன.

## அண்ணா

திராவிட இயக்க அரசியல் தலைவராகவும், சமுதாயத் தலைவர் தந்தை பெரியாரின் தளபதியாகவும் 1967இல் தமிழக

முதல்வராகவும் மிகச் சிறந்த இலக்கியவாதியாகவும் விளங்கிய அறிஞர் அண்ணா பற்றிய காப்பியங்கள் இரண்டு. அவரது பிறப்புக் காலம் முதல் உலகத்தமிழ் மாநாடு நடத்தி ஆட்சிபுரிந்த காலம் வரை விளக்குவது 'அண்ணாவனப்பியம்' 1968இல் வெளியானதால் அண்ணாவின் இறுதியாண்டு இடம் பெறவில்லை.

இந்நூலில் அண்ணா வடநாட்டுக்கு அறிமுகமாதல், மாநிலங்களவையில் நிகழ்த்திய சொற்பொழிவின் சிறப்பு ஆகியவற்றுடன் அண்ணா தமிழ்த்தாயுடன் உரையாடுதல் போன்ற கற்பனைச் செய்திகளும் இடம் பெறுகின்றன. கிளைக்கதைகளைப் போல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் 'ஆற்றோரம்' 'பழமையும் புதுமையும்' 'நிலையும் நினைப்பும்' 'ஏ! தாழ்ந்த தமிழகமே!, என்ற தலைப்புகளில் அண்ணா பேசிய செய்திகள் விரித்துரைக்கப்பட்டுள்ளமை காப்பியப் போக்கைத் தடைசெய்வதாக உள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தொண்டுகள், தமிழிசை வளர்த்த பான்மை, இடையில் தேவ நேயப் பாவாணர், ம. பொ. சிவஞானம் போன்றவர்களைப் பற்றிய சிறப்புரைகள் ஆகியவை தொடர்பின்றி வருகின்றன. உலகத் தமிழ் மாநாடு பற்றிய செய்திகள் மிக விரிவாக உள்ளன.

'அண்ணா காவியம்' மிகைப்படுத்தப்படாத வரலாறாக அமைகின்றது. அவரது எழுத்து, பேச்சு, நடிப்பு முதலிய திறன்களுடன் தமிழ்க்காப்பு, ஆட்சிமுறை அனைத்தும் இதனுள் அடங்கியுள்ளன. அண்ணாவின் திருமணம், பெரியாருடன் தொடர்பு, இந்திப் போர், தி.க. அமைப்பு, தி.மு.க அமைப்பு, தேர்தல் ஈடுபாடு, பிரிவினை நிலை, முதல்வர் பொறுப்பு, நோய்வாய்ப்படுதல், விடைபெறுதல் ஆகிய நிகழ்ச்சிகள் சொல்லப்படுகின்றன. இந்நூலில் தமிழ்த்தாய் வாழ்த்து, வணக்கம், பாயிரம் முதலிய பகுதிகள் தொடக்கமாக அமைந்துள்ளன.

1974இல் தி.மு.கழக வெள்ளிவிழா ஆண்டில் வெளியான இக்காப்பியம் தன்னேரிலாத தலைவனைப் பாடுவது.

> **"நாட்டில்
> ஒப்பாரும் மிக்காரும் இல்லா வண்ணம்
> உயர்ந்து விட்ட என்தலைவன்"[7]**

என்ற வரியே பொருந்தும்.

7. ஆனந்தம், அண்ணா காவியம், ப. 128

'வாழ்க வசவாளர்!' என்னும் கட்டுரை எழுதிய அண்ணாவின் கண்ணியம் நன்கு சுட்டப்பட்டுள்ளது. 'திராவிடநாடு திராவிடருக்கே!' என்னும் முழக்கமும் பின்னர் அது கைவிடப்பட்டதற்கான கரணியமும் விளக்கப்பட்டு உள்ளன. அரக்கரை அழிக்க இராமனும், பூபாரம் தீர்ப்பதற்காகக் கண்ணனும் உலகில் பிறப்பெடுத்தது போல, தமிழகம் தடம் மாறிப் போய் விட்டதால் பொறுமை மீறிய அருமைத் தமிழ்மகள், வள்ளுவரையே மீண்டும் காஞ்சியில் பிறக்குமாறு ஆணையிட்டாள் என்று 'அண்ணா காவியம்' நுவலுகிறது. பகுத்தறிவியக்கத் தலைவரான அண்ணாவைப் பற்றிய இந்த 'அவதாரச் சிந்தனை எண்ணுதற்குரியது.'

## கலைஞர்

'கலைஞர் காவியம்' அவரது வாழ்க்கை வரலாற்றையும் ஆட்சிச் செயல்களையும் தனித்தனித் தலைப்பில் தருகின்றது. கதைப் போக்கில் அமையாமல் அறுபத்தேழு தனித்தனிக் கவிதைகளின் தொகுப்புப் போல் அமைந்தாலும் காவியப் பெயரைத் தாங்கியுள்ளது. மாணவப் பருவத்தில் காட்டிய இந்தி எதிர்ப்புணர்ச்சி, தி.க. கொடி அமைப்பைக் காணுதல், திரைப்பட உரையாடல், முதல்வர் பதவி, வறட்சிப் பணி முதலிய செய்திகளை இக் காப்பியத்தில் காணுகின்றோம். சிலப்பதிகாரத்தைப் போல் இந்நூலில் கதிரவன், நிலவு, மழை ஆகியன வாழ்த்தப் பெறுகின்றன. அடுத்துத் தமிழ்த்தாய் வாழ்த்தும் இடம் பெறுகின்றது. அ.இ.அ.தி.மு.க. பிரிவதற்கு முன்னெழுந்த நூலாதலின் எம்.சி. ஆரைப் பற்றிய புகழ்ச்சியும் மிகுதியாக அமைந்துள்ளது.

## சின்னச்சாமி

தமிழைக் காத்தல், இந்தியை எதிர்த்தல் என்ற முறையில் தீக்குளித்து இறந்த சின்னச்சாமியின் வரலாற்றை உரைப்பது 'தீக்குளித்த செம்மல் சின்னச்சாமி' என்னும் காப்பியமாகும்.

"நாட்டைத் துறந்து நற்றமிழ்ச் சிலம்புப்
பாட்டை இளங்கோ பாடி மகிழ்ந்தான்;
தமிழுக் காகத் தன்தலை தந்து
குமணன் பெரும்புகழ் கொண்டு சிறந்தான்;
செந்தமிழ்க் கலம்பகம் செப்பிடக் கேட்டு
நந்திவர்மன் நல்லுயிர் விட்டான்;

தாளமுத்து நடரா சனுயிர்
மாளக் கண்டோம் வண்டமிழ்க் காக"[8]

என்ற சிந்தனையில்,

"தமிழைக் காக்கத் தனிப்பெருந் தொண்டை
இமைப்பினில் செய்வது எப்படி எனயான்
எண்ணிய வாறே இருந்தேன்; உடனே
மண்ணுக் குடலையும் வண்டமிழ்க் குயிரையும்
ஈவதைப் போன்றே இருநில மீது
மேவிய சிறப்பு வேறெதும் இல்லை,
என்ற முடிவுக் கியானும் வந்தேன்,"[9]

எனச் சொல்லிச் சின்னச்சாமி தீக்குளித்ததாக, இக்காப்பியம் கூறுகின்றது.

சின்னச்சாமி, தாய் தங்கத்தம்மாள், மனைவி கமலா, மகள் திராவிடச் செல்வி ஆகியோர் கூற்றாக இக்காப்பியம் பாடப் பெற்றுள்ளது. பழுவூரில் அண்ணாவின் பேச்சு, வடமொழி, ஆங்கிலக் கலப்பால் தமிழ் பெற்ற கலப்பும் இழப்பும், இந்நிலையில் இந்தியும் புகுந்தால் ஏற்படும் கேடு, அன்றைய முதல்வர் பக்தவத்சலத்தை அணுகி முழங்கிய சின்னச்சாமி சிறைப்படுதல், தமிழ் விடுதலைச் சிந்தனை, திருச்சி வருதல், தன்னை ஒளிப்படம் எடுத்துக் கொள்ளுதல், தகரக் குடுவையில் கல்நெய் (Petrol) வாங்குதல், நண்பர்கட்கு எழுதுதல், தொடர்வண்டி நிலையத்தின் எதிரில் உடலில் கல்நெய் ஊற்றி நெருப்பிட்டுக் கொண்டு 'தமிழ் வாழ்க' என்று முழங்கி மடிதல் ஆகிய செய்திகள் இதனுள் இடம் பெறுகின்றன.

வியட்நாமில் பௌத்தமதம் காக்கச் சில பிக்குணிகள் தீக்குளித்ததைச் சொல்லிச் 'செந்தமிழ்க்கு இதுபோன்ற செயலை யார் செய்வார்?' என்று நண்பனிடம் கேட்பானாம் சின்னச்சாமி. பிற்காலத்தில் — தானே இதைச்செய்யப் போகிறான் என்று உணர்த்தும் இப்பகுதி முன்னோக்கு உத்தியாகும்.

8. மா. புதுமைவாணன், தீக்குளித்த செம்மல் சின்னச்சாமி, ப. 17
9. மேலது, ப. 21

## காதல்

காதலை மையமாகக் கொண்டு புனையப்பட்ட மூன்று வரலாற்றுக்காப்பியங்கள் ‘ஆட்டனத்தி ஆதிமந்தி’ ‘சோழமா காவியம்’ ‘பனித்துளிகள்’ ஆகியன. இவற்றுள் ‘ஆட்டனத்தி ஆதிமந்தி’ காதலால் விளைந்த போரை விளக்குவதாகும்.

> “இருபுறமும் இருமாதர்; இடையில் அந்த
> இளைய மகன்; சுவையான கதைத்து வக்கம்”[10]

என்று ஆட்டனத்தியை, ஆதிமந்தியும் மருதியும் காதலித் தலைச் சித்திரிக்கின்றார் கண்ணதாசன். மருதியின் அழகு கண்டு நல்லிடிக்கோன் காதல் கொள்ளுகின்றான். மருதி, இசையாது போகவே அத்தியை ஒழித்தால்தான் அவளை அடைய முடியும் எனக் கருதிப் போர் தொடுக்கின்றான். போரில் நல்லிடிக் கோன் அழிந்துபட, அத்தி ஆதிமந்தி திருமணம் நிகழுகின்றது. மருதி துறவியாகிறாள். காவிரி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட அத்தி நாகையில் மருதியின் இருப்பிடத்தை அடைகின்றான். அத்தி, ஆதிமந்தி காதல் வாழ்வில் குறுக்கிட விரும்பாது மருதி கடலில் மூழ்கி மடிகின்றாள்.

‘சோழ மாகாவிய’மும் ‘பனித்துளிகளும்’ அம்பிகாபதி அமராவதியின் காதல் கதையினைக் கருவாகக் கொண்டவை. அம்பிகாபதி அமராவதி காதல், சோழப்பேரரசின் வீழ்ச்சிக்குக் கரணியமாய் அமைந்தது எனும் உண்மையைச் சோழ மா காவியம் கூறுகின்றது. நூறு பேரின்பப் பாக்கள் பாடினால் அம்பிகாபதி அமராவதியை மணக்கலாம் என்ற கட்டளையை ஏற்றுத் தொண்ணூற்று ஒன்பது பாடல்களைப் பாடி முடித்ததும் அமராவதி தலைகாட்டியதால் நூறாவது பாடல் அகத்துறையில் அமைந்துவிட அவர்கள் காதல் தோல்வியடை கிறது என்ற கதைக் கருவினை அடிப்படையாகக் கொண்டது ‘பனித்துளிகள்.’

‘ஆட்டனத்தி ஆதிமந்தி’யில் மந்திரம், தூது, இகல், வென்றி போன்ற காப்பியக் கூறுகள் காணப்படுகின்றன. ஏனைய இரண்டிலும் இத்தகைய காப்பியக் கூறுகள் காணப்பெறவில்லை. ‘ஆட்டனத்தி ஆதிமந்தி’ கதை ‘சேரதாண்டவம்’ என்னும் பெயரில் பாரதிதாசன் இயற்றிய நாடகமாகவும், ‘அம்பிகாபதி அமராவதி’ காதல் கதை அதே

10. கண்ணதாசன், ஆட்டனத்தி ஆதிமந்தி, ப. 15

பெயரில் மறைமலையடிகளார் இயற்றிய நாடகமாகவும் வெளிவந்திருத்தல் ஈண்டு நினைவு கூரற்பாலது.

### வீழ்ச்சி

மொகலாய வரலாற்றின் ஒரு பகுதியைக் கூறுகிறது 'நூர்சகான் தோல்வி' எனும் குறுங்காப்பியம். சகாங்கீர் நூர்சகானைக் காதலித்தல், அக்பர் கண்டித்ததால் சேர் ஆப்கனை நூர்சகான் மணத்தல், அக்பர் இறந்தபின் ஆட்சி பெற்ற சகாங்கீர் சேர் ஆப்கனைக் கொலை செய்துவிட்டு நூர்சகானை அடைதல், அவளுக்கு முதல் உறவில் பிறந்த பெண்ணை, சகாங்கீர் உறவில் பிறந்த சரியாருக்கு மணமுடிக்க முனைதல், காதலில் மட்டுமன்றி அரசியலிலும் அவள் வீழ்ச்சி அடைதல் ஆகிய செய்திகள் இக்காப்பியத்தில் பேசப்படுகின்றன. கதைக்கரு பழையதெனினும் கவிஞர் தம் பாட்டுத்திறத்தால் இதற்குப் புது மெருகு ஊட்டுகின்றார்.

### இந்திப்போர்

*1938* முதல் *1971* வரையிலான முப்பத்து மூன்று ஆண்டு கால இந்தி எதிர்ப்புப்போர் வரலாற்றைத் 'தமிழ்த் தாயின் ஆணை' எனும் பெயரால் குறுங்காப்பியமாக வடித்துள்ளார் தஞ்சைவாணன். இதனுள் *1967*, *1971* ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களையும் இந்திப் போர்களாகவே உருவகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2. வரலாற்றுக் கற்பனைக் காப்பியங்கள்

வரலாற்று நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்டும் வரலாற்று மாந்தர் பெயர்களை மட்டும் பயன்படுத்தியும் முற்றிலும் கற்பனையாகப் புனையப் பெற்ற நூல்கள் வரலாற்றுக் கற்பனைக் காப்பியங்களாகக் கொள்ளப்படும்.

'குமரிகள்' 'மறத்தி' 'கயல்விழி' 'வீரகாவியம்' 'தாய்மண்' 'வெற்றிமாலை' 'சிரித்த முத்துக்கள்' 'புகழ்க்கவிதை' 'பறவைகள் மாநாடு' 'நடுகல்' 'வழக்குரைகாதை' 'தெய்வீகக் காதல்' 'துறையச் செல்லம்' ஆகிய பதின்மூன்றும் இதனுள் அடங்கும்.

### இந்தியப் போர்

'குமரிமகள்' 'மறத்தி' ஆகிய இரு குறுங்காப்பியங்களும் முறையே இந்திய சீனப் போரையும், வங்கதேச விடுதலைப்

போரையும் பின்னணியாகக் கொண்டு, கற்பனை மாந்தர்களைப் படைத்துப் புனையப் பெற்றவையாகும்.

வேலன் விடைபெற்றுப் போர்முனை செல்தல் — போர்க்களச் செய்தியை மடலாக அனுப்புதல் — நாட்டுப்பணிக்கு மக்கள் நல்லன செய்தல் — போர்க்காட்சிகள், குமரியின் ஏக்கம் — வேலன் வெற்றி பெறுதல், — வேலனும் சிலரும்பிடிபடல் — பின் தப்பித்து வருதல் — 'சிலுகுரி' நகரில் அவர்களுக்கு மக்கள் வரவேற்பு — வேலன் விடுப்பில் ஊர் வருதல் — வேலன் குமரி சந்திப்பு — வேலன் மீண்டும் போர்க்களம் செல்லுவதால் மணம் ஆகாத குமரியும் போர்க்களத்தில் தாதிப் பணியாற்றத் தொடருதல் ஆகியன 'குமரிமகள்' காப்பியத்தின் கதை நிகழ்ச்சிகளாகும். இதனுள் ஈக உணர்வும், நாட்டுப்பற்றும் மேலோங்கி நிற்கின்றன.

'குமரிமகள்' காப்பியத்தின் கரு புதுமையானது. போர்க்காட்சி, வேலன் தப்பித்து வரும்போது மலைச்சரிவில் ஏற்படும் நிகழ்ச்சிகளை வருணித்தல் ஆகியவை சிறப்பாக உள்ளன.

மற்றொரு காப்பியமான 'மறத்தி'யில் குருதிப் பொய்கையில் மலர்ந்த வங்கமலர் அடிக்கருத்தாக நிற்கின்றது. இவ்வளவு இழப்புகள் நேராமல் அறவழியில் வங்கம் மலர்ந்திருந்தால் எப்படியிருக்கும் என்ற கற்பனையில் முகிழ்த்த காப்பியம் இது. மனிதன் விடுதலையோடு வாழ்ந்தாக வேண்டும் என்பதே தலைமைக் கருத்து என்பதனை,

'நண்டுக் கொருவளை; நாய்க் கொருமுலை;
வண்டுக் கொருமலர்; வற்றல் மரமோ
பறவைக் குண்டு; பன்றிக் கென்றொரு
உறவாய்ச் சாய்க்கடை உண்டு வாழ்ந்திட;
எல்லா உயிர்க்கும் இருக்கும் இடமெலாம்
ஒல்லும் வகையெலாம் உரிமையாம்; ஆனால்
இருகால் உயிராய் இருக்கும் மாந்தனோ
வருவார்க் கெல்லாம் அடிமையாய் வாழ்கிறான் !
தனக்கென் றுரிமை, தனக்கென் றுறவு
தனக்கென் றிவையெல்லாம் தன்முன் னோர்கள்
தந்தன எனவே தானறி யாமல்
விந்தைப் பிறவியாய் விளங்குவான் ! இந்த

ஈன மாந்தரை மாற்றுதல் எப்படி ?
மான மறவராய் மலர்த்துதல் எங்ஙனம் ?'[11]

எனவரும் பாடற் பகுதி உணர்த்தும்.

காப்பியக் கட்டமைப்பு முறையில் கதைத் தலைவி செங்கனி முதலில் அறிமுகப்படுத்தப் படுகிறாள். பிறகு கதைத்தலைவன் தென்னன் வருகிறான். அவனிடத்தில் காதல் உணர்வும், அவளிடத்தில் நாட்டுணர்வும் விஞ்சி நிற்கின்றன. வந்தவர் வளரச் சொந்த நாட்டார் சோர்ந்த காரணியம் பற்றிச் செங்கனியின் சூடான பேச்சு தலைவனை ஆட்கொள்ளுகிறது. ஒரு கட்டத்தில் தலைவன் தற்கொலைக்கு முயன்றபோது செங்கனி வன்மையாகக் கண்டிக்கிறாள். மகளிர் தங்களை ஒப்பனை செய்து கொள்ளாமல் ஆடவரைப் புறக்கணித்தால் நாட்டு விடுதலைக்காக அவர்கள் கிளர்ந்தெழுவர் எனும் கருத்து இக்காப்பியத்தில் உணர்த்தப்படுகிறது. செங்கனி பேச்சு அமைச்சர் அறிவுரை போன்றவை தவிர நீண்ட வருணனைகள் காப்பியத்தில் இடம் பெறவில்லை. விடுதலை உணர்ச்சி பொங்கும் வேகமான கதைக்குத் தடை விளைவிக்காமல் வருணனைப் பகுதிகள் தவிர்க்கப்பட்டுள்ளன. 'விடுதலை மிகப் பெரிய விலை கொடுத்துப் பெறவேண்டிய ஒன்று' என்பதனை மாற்றி மனவுறுதியாலும் அறவழியிலும் நாட்டு விடுதலையைப் பெறமுடியும் என்று காட்டுகிறார் கவிஞர்.

## வடநாாட்டுப் போர்

காவா நாவிற் கனகவிசயரை அடக்குதற்குச் சேரன் செங்குட்டுவன் வடநாட்டின் மீது படையெடுத்தான் என்பது வரலாறு. தென்னவன், அவன் மனைவி அஞ்சுகம், தங்கை நாட்டியக் கலையரசி கயல்விழி ஆகிய மூவரும் வடநாட்டுக்குக் கலைத்தூது செல்லுவதாகவும் அங்கே கயல்விழியின் கற்புக்குக் களங்கம் விளைந்ததனைக் காரணியமாகக் காட்டிச் சேரன் படையெடுத்ததாகவும் கற்பனை செய்து 'கயல்விழி' என்னும் காப்பியத்தைப் புனைந்துள்ளார் தென்னவன். படையெடுப்பு, வாட்போர், சிலையெடுத்தல் போன்ற செய்திகளை உள்ளடக்கியதாய்ப் பதினைந்து உட் பிரிவுகளோடு விளங்குகிறது இக்குறுங் காப்பியம்.

11. அரிமதி தென்னகன், மறத்தி, ப. 5

## வீரவுணர்வு

வரலாற்றுப் பெயர்களை மட்டும் தாங்கி முற்றிலும் கற்பனைப் புனைவுகளையே கொண்டு பெருமிதச் சுவை மிளிருமாறு விளங்குகின்ற காப்பியங்கள் 'வீரகாவியம்' 'தாய்மண்' ஆகிய இரண்டுமாகும்.

மகனைப் பற்றித் தந்தையும், தந்தையைப்பற்றி மகனும் அறிந்து கொள்ளாமையால் ஏற்பட்ட போரை மையமாகக் கொண்டு எழுந்தது வீரகாவியம். மூவக நாட்டுக்கும் நாவல நாட்டுக்கும் உள்ள பகைமை உணர்வே கதைத்தொடக்கமாக அமைகின்றது. மாவேழன் என்னும் படைத் தலைவனுடைய வீரம், காதல், கடிமணம், மகப்பேறு ஆகியனவும் அவனுக்கும் அவன் மகன் கோளரிக்கும் இடையில் நிகழ்ந்த போர். தந்தையும் மகனும் இறத்தல், மாவேழன் மனைவி வேல்விழி மடிதல் ஆகியனவும் இந்நூலை நிகழ்ச்சி நிறைந்த காப்பியமாக உயர்த்தியுள்ளன. மாவேழன் 'மிக்காரும் ஒப்பாரும் காணாச் செம்மலா' கக் காட்டப் பெறுகின்றான்.

காட்சி, திருமணம், மகப்பேறு, படையெழுச்சி, போர் என ஐந்து படலங்களையும் நூற்றுப் பதினெட்டு இயல்களையும் கொண்டு, காப்பியக் கூறுகளாக நாட்டுவளம், இருசுடர்த் தோற்றம், தூது ஆகியன இடம் பெறுதலோடு குறியிடம் கூறுதல், படர் மெலிந்திரங்கல் (விரகதாபம்) முதலிய அகப் பொருட்கூறுகளும் நிறைந்துள்ளன. காதலில் உவகைச் சுவையும் போர் மோதலின் போது பெருமிதச் சுவையும் வஞ்சினங் கூறும்போது வெகுளிச் சுவையும் இறுதி இழப்பில் அவலச் சுவையுமாகக் காப்பியம் முழுவதும் எண்சுவையால் நிறைந்து நிற்கிறது. இந்நூல் ஆங்கிலத்தில் மாத்யூ அர்னால்டு (Mathew Arnold)எழுதிய 'சோராப்பும் ருஸ்தமும் (Sohrab and Rustum) என்ற கதையின் தழுவலாக எழுதப் பெற்றது. புலவர் குழந்தையின் 'காமஞ்சரி' நாடகமும் இக்கதையினைத் தழுவியதே என்பதும் ஈண்டு நினையத்தகும்.

'தாய்மண்' என்னுங் காப்பியம் தாய் நாட்டுப்பற்றை மிளிரச் செய்யும் நோக்கில் படைக்கப் பட்டது. தாய் நாட்டை விட்டுப் போக விரும்பாத செம்மல் மற்றொரு நாட்டு இளவரசியின் மீது கொண்ட காதலையும், அந்நாட்டின் ஆட்சிப் பொறுப்பேற்கும் வாய்ப்பினையும் கூட உதறி எறிகின்றான் எனினும் அவன் காதலி வஞ்சிக்கொடி அரச வாழ்வைத் துறந்து செம்மலுடன் இணைகின்றாள். மரபு

வழிப்பட்ட இக்காப்பியத்தில் காதலும் வீரமும் கலந்து நடைபோடுகின்றன. காப்பியக் கூறுகளில் ஒன்றான நாட்டு வருணனையினை வளநாடு, செந்திருநாடு ஆகியவற்றை அறிமுகப் படுத்தும் பகுதிகளில் காணுகின்றோம்.

**காதல்**

வரலாற்றுப் பெயர்களை மட்டும் கொண்டமைந்த கற்பனைக் காப்பியங்கள் 'வெற்றிமாலை' 'சிரித்த முத்துக்கள்' 'புகழ்க் கவிகை' ஆகிய மூன்றுமாகும்.

'வெற்றிமாலை' காதலை மையமாகக் கொண்டு வீரமும் விளங்குமாறு படைக்கப்பட்ட குறுங் காப்பியமாகும். வேலனைக் காதலிக்கும் செல்வியைப் புரவிப்படைத்தலைவன் காந்தனும் விரும்புகின்றான். பல்வேறு சூழ்ச்சிகளைச் செய்து காந்தன் வேலனைக் கொன்று விடுகின்றான். பிரிவாற்றாத செல்வியும் காந்தனைக் கொன்று விட்டுத் தானும் உயிர்விடுகின்றாள். இத்தகைய நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய இக்காப்பியத்தினுள் உழுதொழில் சிறப்புப் பேசப்படுகிறது.

"உறைவிட்டு என்றவன்வாள் கிளம்புமாயின்
உதிரத்தின் சுவைபார்த்தே ஓய்வு கொள்ளும்."[12]

என்று வேலன் கூறும் பகுதி வீரம் நிறைந்ததாகும். காதலுடன் இருக்கும் போதே,

"இப்புவி தன்னிலே இந்நாள் வரையிலும்
எப்போ தேனும் அன்பால் இணைந்தோர்
எளிதாய் மன்றல் எய்திய துண்டா ?"[13]

என்று செல்வி உரைப்பது சிறந்த முன்னோக்கு உத்தியாகும்

**வர்க்கமுரண்**

வறுமையில் வாடும் செம்படவன் நோயில் தவிக்கும் தன் மனையாளைக்காத்தற்காகப் புலித்துறையில் முத்துக்குளித்து மன்னனிடம் பரிசில் பெற்றுத் திரும்பும்போது மனையாள் மாண்டது கண்டு தானும் உயிர்விடுகின்ற அவல நிகழ்வினைச் சித்திரிக்கிறது 'சிரித்த முத்துக்கள்.'

12. பாரி, வெற்றி மாலை, ப. 32
13. மேலது, ப. 14

'தொத்திவிட்ட நோய்மாற்ற வழியில் லாமல்
துடிதுடித்துச் செத்திட்டாள் ஒருத்தி; இங்கே
சித்திரத்துப் பசுங்கிள்ளை மற்றொ ருத்தி
செருக்காலே எங்களைத்தான் வெறுத்தெ றிந்தாள்;
இத்துயர நிலைகாணீர் ! காணீர் !" என்றே
எழில் முத்தம் சிரித்தனவாம் பொருள்கு றித்தே."[14]

என்றவாறு, அரசியினால் தரையில் வீசப்பட்ட முத்துகளின் கூற்றாக வைத்து வர்க்க முரண்களைக் கண்டித்துக் காப்பியம் நடக்கிறது.

## புகழ்

புகழுக்கு நாணிப் பச்சைமலையடிவாரத்தில் உள்ள பாவூரில் வாழும் தமிழ்க் கவிஞரின் படைப்பினை அவரது மாணவன் வெளிக்கொணர்ந்து அக்கவிஞருக்குப் பெருமை சேர்க்கும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கியது 'புகழ்க் கவிதை' என்னும் குறுங்காப்பியம்.

"செந்தமிழ்ப் பாடல் செய்த மெய்ப்புலவர்
தம்மையும் இந்தத் தண்டமிழ் நாட்டையும்
ஏய்த்துப் பிழைப்பார் யாவரே யாயினும்
தலையெடுக் காமல் தண்டிக்க வேண்டும்"[15]

எனும் கருத்தினை உயிரோட்டமாகக் கொண்டு விளங்குகிறது எனினும், இதனுள் காப்பியத்திற்குரிய வலுவான கதைக்கரு காணப்பெறவில்லை.

## இந்த எதிர்ப்பு

இனி, இந்தி எதிர்ப்பை மட்டுமே அடிக்கருத்தாகக் கொண்டு எழுந்த குறுங்காப்பியங்கள் மூன்றைக் காணலாம். 1937இல் தொடங்கிய இந்தித் திணிப்பு எதிர்ப்புணர்வு 1965இல் உச்ச கட்டத்தை எய்தியது. 1968இல் சட்டமன்றத்தில் நிறைவேறிய 'இருமொழித் தீர்மானத்துடன்' இதன் சூடு தணிந்தது.

'பறவைகள் மாநாடு' இந்திய நிலையினை உணர்த்தும் உருவகக் காப்பியமாகும். மொழி வல்லாண்மை அறிவுக்குப் பொருந்தாது என்னும் உண்மையை இக்காப்பியம் எடுத்துக்

14. சிற்பி, சிரித்த முத்துக்கள், ப. 130
15. திருலோக சீத்தாராம், கந்தருவ கானம், ப. 102

காட்டுகிறது. "உயிரறத்தை வெறுமையாக்கும் மொழி யடிமையை எதிர்த்துப் போராட ஒரு சிட்டுக்குருவிக்கும் வல்லமை உண்டு. இயற்கைச் சட்டம் மாற்றப்படும்பொழுது அக்குருவியே யானையின் வன்மைகொண்டு போரிடுகின்றது.

அரசியல் வலிமை, பொருள் வலிமை இவற்றால் வரும் அதிகார வல்லாண்மைகள் யாவும் அக்கால் சிதறடிக்கப் படுகின்றன."[16] பறவைகளின் அரசனாகிய கழுகு, 'கழுகு மொழியை' யே அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டுமென வற்புறுத்துதலையும், மற்ற பறவைகள் மறுக்க முடியாமல் தடுமாறுதலையும், சிட்டுக்குருவி மட்டும் சீறியெழுந்து பேசுதலையும் மற்றபறவைகள் அதனை ஏற்பதனையும் காட்டுவது இக்காப்பியம்.

இணையத் துடித்த இரண்டு இளம் உள்ளங்கள் தமிழ் காக்கவும் இந்தியை எதிர்த்தும் போராடிச் சிறைப்படுகின்றன. இறுதியில் அவர்கள் தம்மை வாழ்வித்துக் கொள்ள முடியாமலேயே 'நடுகல்' ஆகின்றனர்.

'நடுகல்' காப்பியத்தில் சிறையிலிருக்கும் முத்தன் தன் காதலி முத்தழகிக்கு மடல் எழுதுதல், அவள் விடை எழுதுதல், அவளும் இந்தி எதிர்ப்பில் சிறைசென்று நோய்வாய்ப்பட்டு இறத்தல் — அவள் மறைவுக்காக அவனும் இறத்தல் ஆகியவை நிகழ்ச்சிகளாகும்.

1964இல் வெளியான இக்காப்பியத்தில் 'நடுகல்'லில் பொறிக்கப்பட்ட

**'வெட்டுண்டு சாயும் விறல்சேர் தமிழ்க்குடியை**
**முட்டுண்டு தாங்க ஒருவன் முளைப்பானோ ?**
**ஆர்க்கும் தமிழ்நா டரசமைத்தே, இந்தியினைத்**
**தீர்க்கின்ற வல்லான் திருவுருவம் காணோமோ ?'[17]**

என்ற அடிகள் 1967 இல் நனவாகின என்பதனால் கவிஞரின், தொலை நோக்கு விளங்குமாறு காப்பியம் அமைந்துள்ளது.

'வழக்குரை காதை', இந்தித் திணிப்பை எதிர்த்துச் சிறைப்பட்ட வேல்மார்பன் அறமன்றத்தில் உரிமைக்குரல் எழுப்பி வழக்காடுவதாகவும் இறுதியில் தூக்குத் தண்டனை பெறுவதாகவும் அமைந்த காப்பியமாகும். அரசுச் சார்பு

16. துரை–மாணிக்கம், பாவியக் கொத்து, ப. 44
17. மேலது. ப. 88

வழக்குரைஞரின் குற்றச்சாட்டும், வேல்மார்பனின் விளக்கமான உரையும் மாறிமாறி அமைந்து சிறக்க நிற்பதைக் காணலாம்.

### போற்றுதல்

அகத்துறைச் செய்திகளோடு பாட்டுடைத் தலைவர் வேலூர் கந்தசாமிக் கண்டரின் புகழ்பாடும் போக்கில் அமைந்தது 'தெய்வீகக் காதல்' எனும் குறுங்காப்பியம். இதனுள் கவிஞர் கடைதிறப்புப் பகுதியிலும் காவிரியின் நீர்வளத்தை வருணிப்பதிலும் தம் திறம் காட்டியுள்ளார்.

### தழுவல்

காதலும் வீரமும் விரவி வருமாறு படைக்கப்பெற்ற 'துறையச் செல்லம்' Helen of Troy' என்னும் மேலைநாட்டுக் கதையினைத் தழுவியதாகும். Hercules, Priam என்னும் ஆங்கிலப் பெயர்களை முறையே கற்கூளியன், 'பொறையன்' எனத் தமிழாக்கம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மொழி பெயர்ப்புக் காப்பியமாயினும் "நோக்கது மருந்தும் நோயும் ஆகக்கொள்மங்கை மாரே!"[18] எனக்கதைத் தலைவியின் எழிலைப் பாராட்டும் பகுதியில் திருக்குறள் *(1091)* கருத்தினைப் புலப்படுத்தியுள்ளார். துறையப் போர் நிகழ்ச்சியின்போது பாடப்பெறும் நூறு பாடல்களும் தாழிசைச் சந்தத்தில் அமைந்து வேகம் காட்டுதல் சிறப்பாகவுள்ளது.

## 3. சமுதாயக் காப்பியங்கள்

சமகால சமுதாயச் சிக்கல்களைப் பாடுபொருளாகத் தேர்ந்து நடப்பியலுக்குப் பொருந்தும் வண்ணம் கதையை அமைத்து வளர்த்துச் சென்று நிறைவு செய்வன சமுதாயக் காப்பியங்கள் எனலாம். இவற்றைக் காதல் காப்பியங்கள், சமுதாய சீர்திருத்தக் காப்பியங்கள் என இருவகையாகப் பகுத்துக் காணலாம்.

### 3.1. காதல் காப்பியங்கள்

'குருடர் காதல்' 'சடங்கு' 'மணமகன்' 'சாந்தி' 'காதலின் இரவு' 'காதல்காவியம்' ஆகிய ஆறும் இன்பியல் முடிவையும் 'கண்ணீர்த் தவம்' 'கனவுப் பூக்கள்' 'ஓலைச் சுவடி' 'பூங்கோதை' 'பூமழை' 'ஐயை' 'அபலையின் கடிதம்' 'ஓர் இதயத்தின் ஏக்கம்'

18. அ.கு. ஆதித்தர் துறையச் செல்வம், ப. 24

ஆகிய எட்டும் துன்பியல் முடிவையும் கொண்டுள்ள காதல் காப்பியங்களாகும். 'சாகாத காதல்' 'காதலர் சமாதி' 'கொள்ளைக்காரன்' 'விதியின் உருவம்' 'மதுக்கிண்ணம்' 'வாசவதத்தை' ஆகிய ஆறும் துன்பியலில் முடிகின்ற தழுவல் காப்பியங்களாகும். 'எண்சுவை எண்பது' எனும் காப்பியம் புதுவகையான அமைப்புக் கொண்ட காதல் காப்பியமாக உள்ளது. ஆண் பெண்ணாகிய குருடர் இருவர் எதிர்பாரா வகையில் சந்தித்து உணர்ந்து ஒன்றுபடுதல் தவிர வேறு எந்தச்சிக்கலும் இன்றி உணர்வுவழி இயங்குவது 'குருடர் காதல்'. "காதலுக்கு விழியை விட மொழியும், உள்ள உணர்வுமே தேவையானவை. விழி அழகில் மொய்க்கும்; உள்ளத்தைச் சுவைப்பதில்லை. உணர்வே உள்ளத்தைச் சுவைப்பது"[19] என்னும் கருத்து விளக்கம் பெறுகின்றது.

வழக்கமாகச் சாவடிக்கு வந்துபடுக்கும் முத்தன் எனும்குருடன் காலில் நங்கை ஒருத்தி மிதிபடுகிறாள்; அலறுகிறாள். உரையாடலுக்குப் பின் அவளும் குருடி என்று தெரிகிறது. அன்புணர்ச்சி மேலிடுகிறது.

இருவரது உணர்வும் வெளிப்படுத்தப் படுகின்றன உருக்கமாக. ஒளியும் இருளும் கருதாமல் அவன் முன் நடக்க, அவள் அவன் தோள்பற்றி நடக்கிறாள். ஆற்றொழுக்கான நடையில் உணர்வுக் கயிற்றில் நடந்து செல்லும் ஒரே காட்சியாக அமைவதால் காப்பியத்துக்கான வேறு எந்த அமைப்பையும் கொள்ளவில்லை.

ஒரு பழமையின் அந்திக்காலமும் ஒரு புதுமையின் விடியலும் சந்திக்கின்ற நேரத்தின் சித்திரமாக விளங்கும் 'சடங்கு' எனும் காப்பியம், முதியவர்கள் சடங்குகள் எனும் பெயரால் வளர்த்துக் கொண்டு வரும் மூடத்தனத்தைத் தகர்த்தெறிகின்ற சீர்திருத்தப் போக்குடையது. ஈழ மண்ணில் பிறந்த கதை என்பதனால் நடையிலும் சொல்லாட்சியிலும் அந்தச் சாயல் படிந்துள்ளது,

'மணமகன்' காப்பியத்தில் அழகன் எப்போதோ ஒரு பெண்ணுக்கு உதவி அவள் யாரென்று தெரியாமல் மனத்தில் போற்றி நாள் கடத்துகிறான். நண்பன் வேலவனின் தங்கை திருமணத்திற்குச் சென்ற வேளை, மணமகன் வந்து சேரவில்லை என்பதால் நண்பனை மதித்து இவன் மணமகன் ஆகிறான். அவன் மனத்தரங்கில் வாழ்ந்தவளே மணவரங்கில்

19. துரைமாணிக்கம், பாவியக்கொத்து, ப. 36

அமருகின்றாள். கண்பார்வையற்ற கவிஞரின் ஒளிமிக்க எழுத்தாகவே இக்குறுங்காப்பியம் அமைகின்றது.

சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைப் பின்னணியாகக் கொண்டு இயற்றப்பட்ட காப்பியம் 'சாந்தி.' 'சிந்தாமணி' திரைப்படத்தைப் பார்த்தபின் ஏற்பட்ட உந்துதலில் கதைப்போக்கினை மாற்றிக் காட்டுவதற்காக எழுதப்பட்டது. 'காதலின் இரவு'[20] 'காதல் காவியத்தில்' வழுச்சொல் புணர்த்தல் (சொல்லட்டா ப.39), யாப்பிலக்கணம் இன்மை ஆகிய குறைபாடுகளைக் காணுகின்றோம்.

## துன்பியல் காப்பியங்கள்

'கண்ணீர்த் தவம்,' 'கனவுப் பூக்கள்' ஆகிய இரு காப்பியங்களும் சமூக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளையும் இழிந்த பாலுணர்வுகளையும் உள்ளடக்கமாகக் கொண்டவை. செல்வர் வேலப்ப முதலியாரின் புதல்வி கோதையும் கணக்கர் கண்ணனும் காதலிப்பதும், தகாத உறவு கண்டு தமையன் வீராசாமி கண்ணனைக் கொலை செய்வதுமான அவல முடிவினைக் கொண்ட காப்பியம் 'கண்ணீர்த் தவம்.' மரபு வழியிலான தரமான நடையும், விறுவிறுப்பான கதைப் பின்னலும் உடைய 'கனவுப் பூக்கள்' சாதி வேறுபாடுகளைக் கடுமையாகச் சாடுகின்றது.

மாதர் கற்பினை அடிப்படையாகக்கொண்டு எழுந்த காப்பியங்கள் 'ஓலைச்சுவடி'யும் 'பூங்கோதை'யும் ஆகும். இக்கால அரசியலும், செப்பமற்ற கவிதையும் 'ஓலைச் சுவடி'யின் சிறப்பைச் சிதைக்கின்றன. 'பூங்கோதை' அன்னம்மா, பூபாலன், பூங்கோதை என்னும் இன்றியமையாத மூன்று கதை மாந்தர்களைச்சுற்றிப் பின்னப் பட்டுள்ளது. கற்பழிக்கப்பட்ட பெண்ணை மணமுடிக்க முன்வரும் முற்போக்கு எண்ணங்கொண்ட கதைத் தலைவனையும், இதனை வாய்ப்பாகக் கருதாது மனம் உடைந்து மடிந்துவிடும் கதைத் தலைவியையும் காணுகின்றோம்.

பித்தளைக்குவளையில் தரப்பட்ட மோர் சற்று நேரமானதால் கைத்துப்போகிறது. பூபாலன் குடிக்கும் போது பூங்கோதை தடுக்கிறாள். இந்த ஒரு நிகழ்ச்சியிலேயே மூவரது நிலையும் விளக்கப்பட்டுள்ளது.

20. ந.பி. தூண்டுதல், குயிலின் சுருதி, ப. 2

'கைத்துப் போகும்: விரைந்து குடியுங்கள்' என்று கூறாதிருந்து விட்ட அன்னம்மாள் குறையும்,

அவள் சொல்லாததால் காலந்தாழ்த்தி விட்ட பூபாலன் குறையும்,

இது கைத்துப் போகும் என்று தெரிந்திருந்தும் 'உடனே குடித்து விடுங்கள்' என்று சொன்னால் உள்ளுறைப் பொருளாகத் தன்னை மணந்து கொள்ளச் சொல்லித் தானே கூறுவது போல் ஆகுமோ என நாணும் பூங்கோதையின் குறையும் காப்பியத்தின் அவல முடிவுக்கு வித்தாகின்றன.

'பூமழை' கதை கூறும் வகையில் புதிய உத்தியை உடையது. இதன் கதை உரையாடல் பாங்கில் சொல்லப் படுகிறது. இதனுள் வருகின்ற கதைத்தலைவன் குறைபா டுடையவனாகக் காட்டப்படுகின்றான். ஆலை முதலாளியால் கற்பழிக்கப்பட்ட தன் காதலியை மறந்து விட்டு அரசியல் வாதியாகி விடுகின்றான்.

'ஐயை' காப்பியத்தின் கதைக்கு கரு காதல் தோல்வி யாகும். தான் ஒரு காலத்தில் காதலித்த தலைவனுக்கும் மற்றொருத்திக்கும் பிறந்த மகனை முறையாக வளர்த்து ஏற்ற ஒரு பெண்ணை மணமுடித்து வைக்கின்றாள் ஐயை. அவளது ஈக உணர்வைப் பாராட்டும் வகையில் அவ்வளர்ப்புப் பிள்ளை அவளுக்குச் சிலையமைத்துச் சிறப்புச் செய்தல் புதுமையாக உள்ளது. உள்ளுணர்வை வெளிப்படுத்த ஆசிரியர் கையாளும் சொல்லாட்சியும், நடைமுறை நிலைகளைச் சுட்டிக்காட்டிக் கூறப்படும் கருத்தும் காப்பியத்துக்கு அணி செய்கின்றன.

அக்காளின் காதல் உள்ளத்தை அவள் காதலனுக்கு அறிவுறுத்த அவளுடைய தங்கை எழுதிய கடிதமாக அமைந்த 'அபலையின் கடிதம்' நிறைவேறாத ஆசைகளை நெஞ்சில் சுமந்து புலம்பும் பாங்கில் அமைந்த 'ஓர் இதயத்தின் ஏக்கம்' ஆகிய இரண்டும் காதலுணர்வை மட்டும் உள்ளடக்கமாகக் கொண்டவை.

## தழுவல் காப்பியங்கள்

'சாகாத காதல்' 'விதியின் உருவம்' இரண்டும் பாரசீகக் கதையின் தழுவலாகவும் 'காதலர் சமாதி' எகிப்தியக் கதையின் தழுவலாகவும்' 'கொள்ளைக்காரன்' 'மதுக்கிண்ணம்' இரண்டும் ஆங்கிலக் கதையின் தழுவலாகவும் அமைந்தவையாகும். புத்தமதத் தொடர்புடையதாகவும், இந்தியில் கோவிந்த

வல்லப பந்த் என்பவரால் 'மிலன்முகூர்த்' என்னும் பெயரில் எழுதப்பெற்ற கதையின் தழுவலாகவும் அமைந்தது 'வாசவதத்தை.'

அமைச்சர் மகள் செந்திரு, சிற்பி சுந்தரனைக் காதலிக்க அரசனும் அவளை விரும்புகிறான். சிற்பியைப் பிரிக்கச் சூழ்ச்சி செய்த அரசன் மலைகுடைந்து கால்வாய் அமைத்துக் கலைமன்றம் அமைத்தால் செந்திருவை மணக்கலாம் என முறைவகுக்கிறான். பன்னீராண்டு உழைப்புக்குப்பின் அப்பணி முடித்த சிற்பி தன் காதலி மாரடைப்பில் மாண்டு விட்டாள் என்னும் பொய்ச்செய்தி கேட்டு உயிர்நீக்கின்றான். அவன் காதலியும் வஞ்சகம் அறிந்து மாளுகின்றாள். நிசாமி என்னும் பாரசீகக் கவிஞர் இயற்றிய 'கோஸ்ரு சிரீன்' என்ற காப்பியத்தைத் தழுவி இயற்றப் பெற்றது 'சாகாத காதல்.'

சமூகத்தை எதிர்த்துப் போராட முடியாத காதலர். வேற்று நாட்டுக்குத் தப்பி ஓட முடிவெடுத்து இடங்குறிக்கின்றனர். குறித்த இடத்திற்கு முதலில் வந்த காதலியை ஓர் அரிமாவிரட்ட, மேலாடை மட்டும் சிதைந்த நிலையில் அவள் தப்பிச் செல்லுகிறாள். பின்னர் வந்த காதலன், சிதைந்த மேலாடை கண்டு காதலி மாண்டாள் என நினைத்து மாய்கின்றான். திரும்பி வந்து பார்த்த காதலியும் மாய்கின்றாள். இத்தகைய நிகழ்ச்சிகளைக் கொண்டமைந்த குறுங்காப்பியம் 'விதியின் உருவம்.'

பேரரசனுக்காகப் பிரமிட் கட்டுகின்ற அடிமையைத் தாதியொருத்தி காதலிக்கின்றாள். பிரமிட்டில் முடிக்கல்லைப் பொருத்த விடாமல் தடுக்கும் படிக்கல்லை முனை முறிக்கும் செயலில் ஈடுபடும் எவரும் பலியாக நேரிடும். தன் காதலன் அச் செயலில் முனைகின்றான் எனும் செய்தியறிந்து காதலி முந்திக்கொண்டு வினைமுடித்துப் பலியாகின்றாள். தலைவனும் தொடர்ந்து பலியாகின்றான். இந்நிகழ்ச்சிகளைக் கொண்டு அமைந்தது சான் ரசல் என்ற ஆங்கிலக் கவிஞர் எழுதிய, எகிப்தியக் கதையின் தழுவலாகிய 'காதலர்சமாதி.'

முல்லை ஒரு கொள்ளைக்காரனைக் காதலிக்கின்றாள். முல்லை மீது காமுற்றிருந்த ஒரு கயவனின் சூழ்ச்சியால் அவள் துப்பாக்கி முனையில் நிறுத்தப் படுகின்றாள். அவளுடைய காதலன் சந்திக்க வரும்போது துப்பாக்கி விசையை முல்லையின் விரல்கள் தட்ட, அது கேட்டுத் தப்பி ஓடியகாதலன், பின்னர் முல்லை மாண்ட செய்தி கேட்டுத்

தானும் உயிர்விடுகின்றான். இத்தகு செறிவான நிகழ்ச்சிகளால் பின்னப்பெற்றது ஆல்பிரட் நோய்சு எனும் ஆங்கிலக்கவிஞரின் ஐவேமேன் (Highway man) என்ற கதையின் தழுவலாக அமைந்த 'கொள்ளைக் காரன்.'

எழிலனைக் காதலித்த தத்தையை வேறொருவனுக்கு மணமுடிக்க அழைத்துச் செல்லும் போது, செய்தியறிந்து வந்த எழிலன் அவளைத்தன் குதிரைமீது அமர்த்திக்கொண்டு விரைகின்றான். பெற்றோர் விரட்டிச் செல்ல, காதலர் காட்டாற்று வெள்ளத்தில் சிக்கி மடிகின்றனர். காதலர் உயிருக்குப் போராடும் வேளையில் அவர்தம் காதலை ஏற்றுக் கொள்ளப் பெற்றோர் எண்ணினாலும் விதி அவர்களை வாழ வைக்க வில்லை. இந்நிகழ்ச்சிகளை உள்ளடக்கமாகக் கொண்ட 'மதுக்கிண்ணம்' தாமசு காம்ப்பெல் என்ற ஆங்கிலக்கவிஞரின் 'Lord Ullin's Daughter' என்னும் கவிதையைத் தழுவியது.

'வாசவதத்தை' புத்த சமயக் கோட்பாடுகளே மனித உள்ளங்களுக்கு அமைதி நெறி காட்ட வல்லன எனும் அறக்கருத்தை உடையது. ஆணவமிக்க கணிகையாகிய வாசவத்தை, உபகுப்தன் எனும் புத்த பிக்குவை விரும்புகிறாள். அவனை அடையமுடியாத வெறுப்பு நிலையில் அவள் ஒரு செல்வனைக் கொலை செய்ய நேர்கின்றது. கொலைக் குற்றத்திற்காக அரசனால் அவளது அழகுறுப்புகள் துண்டிக்கப் படுகின்றன. இந்த நிலையில் அவளை உபகுப்தன் எடுத்துச் சென்று புத்த மதத்தில் சேர்க்கிறான். உபகுப்தன் அவளது காதலை ஏற்காமலும் மறுக்காமலும் 'காலம் வரும்' என்று காட்டியே அவளது ஆணவத்தை அழியச் செய்யும்பாங்கு கருதத்தக்கது. இதனுள் வரும் கார்கால வருணனையும் இசைப்பாடல்களும் காப்பியப் பண்புகளாக நின்று சுவையூட்டுகின்றன.

### எண்சுவை

மேற்குறித்தவற்றினின்றும் வேறுபட்ட நிலையில் அமைந்தது தாய் கூற்றாக அமைந்துள்ள 'எண்சுவை எண்பது.' இதனுள், தாய் தன் மகளைப் பற்றி எண்ணுவதும் காண்பதும் உரைப்பதும் கதையாகப் பின்னப்பட்டுள்ளன. எட்டுச் சுவைகளும் எட்டு இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

மகளின் சிறப்புக் கண்டு பெருமிதம்; காதல் உறவு கொண்ட மகள் தன்னையும் உணவையும் உறக்கத்தையும் வெறுத்தல் கண்டு வியப்பு; உடன் போக்குச் சென்ற மகளை

நினைந்தும், வழியும் பழியும் நினைந்தும் ஏற்படும் அச்சம்; மகள் பிரிவால் தான்படும் அவலம்; ஊரார் பழிப்பால் ஏற்பட்ட 'இளிவரல்', வேற்றூர் சென்று மணந்துகொண்ட மகளும் மருகனும் தன் முன்வந்து நிற்கும்போது ஏற்படும் உவகை; மகளும் மருகனும் நெருக்கமாக வாழும் போக்கைத் தாயும் பிறரும் கண்டு நகைக்கும் நிலை ஆகியவை இக்காப்பியத்தின் பெயருக்குத் தக அமைந்துள்ளன.

## 3.2. சமுதாய சீர்திருத்தக் காப்பியங்கள்

இன்றைய சமுதாயத்தில் பல்வேறு பகுதிகளில் பல ஏழை எளியவர்களை, மெலியாரை, கீழ்ச்சாதியினர் எனப்படுவாரை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்ற சிக்கல்கள் காப்பியக் கருவாக அமைந்துள்ளன. வீரம், காதல் போன்ற உணர்வுகளில் இறங்காமல் நேரடியாகச் சமுதாயச் சிக்கல்களைச் சாடுகின்ற தன்மையே இவற்றில் மிகுதியாகக் காணப்படுகிறது. இவ்வகையில் அமையும் பதின்மூன்று காப்பியங்களும் வர்க்கப் போராட்டம், திரைப்பட வேட்கை, வரதட்சிணைக் கொடுமை போன்ற ஒன்பது வகையான பாடுபொருளைக் கொண்டவை.

### வர்க்கப் போராட்டம்

வர்க்கப் போராட்டம் பல நாடுகளில் நிலவும் சிக்கலாகும். முதலாளித்துவ நாடுகளுக்கும் பொதுவுடைமை நாடுகளுக்கும் இடையே கூட இந்தமோதல் நிலவுகின்றது. 'நீரும் நெருப்பாகும்' எனும் காப்பியத்தில் நீராகத் தோன்றிய ஒருத்தி, சமுதாய அட்டூழியங்களைத் தாங்க முடியாமல் நெருப்பாகி ஒரு பண்ணையாரை ஒழித்துத் தானும் அழிகிறாள்.

> **"அலைகடலும் கொடும்புயலும் அஞ்சும் எரிமலையும்**
> **குலைநடுங்கும் பூகம்பக் கோளுமிவை தன்னிடத்தில்**
> **கொண்டிருந்தும் அறியாத கோழை மனத்தவர்கள்**
> **வண்டிவண்டி யாய்விதியை வரித்தே அழிந்தவர்கள்"[21]**

என்று அறியாமையில் அமிழ்ந்து கிடக்கும் வர்க்கத்தை அறிமுகப் படுத்துகிறார் ஆசிரியர்.

> **"...ஏரியில்**
> **கண்கள் பிதுங்கியே அழுகி மிதப்பது**
> **கனத்த பண்ணையார் மேனியோ ?**

21. உதயை மு. வீரையன், அக்கினிக்குஞ்சுகள், ப. 10

பெண்ணொ ருத்தியும் இறுக அவர்கரம்
பிடித்திருந்ததும் தெரிந்ததே !"[22]

என ஆசிரியர் கதையினை முடித்திருக்கும் பாங்கு வர்க்கப் போராட்டத்தின் உச்சநிலையைக் காட்டுகிறது.

## கற்பழிப்புக் கொடுமை

வலிமை மிக்க ஆண் ஒருவனாகவோ பலரோடு சேர்ந்தோ வலிந்தும் தன் அதிகார பலத்தால் வளைத்தும் பெண்டிரின் கற்பைச் சூறையாடி வருகிறான். இக்கொடிய விலங்குத் தன்மை இப்போது அதிகமாகிக் கொண்டு வருவதாகவே தோன்றுகின்றது. எட்டுப்பேர், பதினாறுபேர் சேர்ந்து ஒரு பெண்ணைச் சூறையாடும் நிகழ்ச்சிகள் செய்தித் தாள்களில் வருகின்றன. இந்த நிலையினைக் கருவாகக் கொண்டும், அதன் தொர்டர்பாக வேறு சில உண்மைகளைச் சுட்டியும் அமையும் காப்பியங்கள் 'அத்திப்பூ' 'வில(ா)ங்கு' ஆகியன.

'அத்திப்பூ' காப்பியத்தில் ஒருவனால் கெடுக்கப்பட்ட பெண்ணுக்குத் திருமணம் நடைபெறுகின்றது. அவள் முதலிரவில் கணவனிடம் உண்மையை வெளியிடுகிறாள். கணவன் மனங்குலையாது அவளை வாழ்விக்க மாற்றுவழி காண்கிறான். அவளைக் குலைத்தது தானே என்று பொய்கூறித் 'தவற்றை'யும் சரியாக்கி விடுகிறான். ஒருநாள் 'அவளைக் கெடுத்தது தன் நண்பனே' என்று அறிந்து அவனையும் மன்னிக்கிறான். பிழை புரிந்த நண்பனால்,

"தித்தித்த நெஞ்சுணர்வால் தீயதையும் மன்னிப்போர்
அத்திப்பூப் போல அறியார்க் கறியாராய்
வல்லார் ஒருசிலரும் வாழ்கின்றார் இவ்வுலகில் !
அல்லார் அவரை அறிவதில்லை"[23]

என்று பாராட்டவும் படுகின்றான்.

"பிழையே செய்யாதவருக்கிருப்பதை விடப் பிழையைச் செய்து, அதற்காக வருந்தித் திருந்துபவருக்கு மிகவும் மனவலிவு வேண்டும்; இவரைவிடப், பிழை செய்வோரைப் பொறுத்துக் கொள்பவருக்கு மிக்க மனவலிவோடு அருளும் வேண்டும்; இவரினும் பொறுத்துக் கொண்ட

22. மேலது. ப. 19
23. துரைமாணிக்கம், பாவியக் கொத்து, ப. 27

பிழையை மறப்பவருக்கு மிகுந்த மனவலியும், அருளும், தெளிந்த அறிவும் வேண்டும்.

பிழை செய்யாதவர் தம்முடைய வாழ்வை மட்டும் நிலைப்படுத்துகின்றார்; அதைச் செய்து வருந்தித் திருந்துபவர் பிறர் வாழ்வை நிலைப் படுத்துகின்றார்; பிறர் செய்யும் பிழையைப் பொறுத்துக் கொள்பவரோ, தம் வாழ்வோடு பிறர்வாழ்வையும் நிலைப்படுத்துகின்றார். அதனை மறந்து விடுபவரோ, மக்கள் குலத்தையே நிலைப்படுத்துகின்றார்."[24]

என, நூலாசிரியரே வழங்கிய முன்னுரை இதற்கு மிகப் பொருத்தமாக அமைகின்றது. இக்காப்பியத்தில்,

"களிப்பாளென் றெதிர்பார்த்தேன்; காணேன்; இன்பக்
காதலெனும் உணர்வுவெள்ளத் தவளும் வந்து
குளிப்பாளென் றெதிர்பார்த்தேன்; குறியுங் காணேன்;
கூடலுக்கு முன்ஊடல் காட்டி முத்தம்
அளிப்பாளென் றெதிர்பார்த்தேன்; அதுவுங் காணேன்;
அருகுநுனி விளக்கொளிக்கும் உடலைக் காட்டா
தொளிப்பாளென் றெதிர் பார்த்தேன்; ஒன்றுங் காணேன்;
ஒசிந்துவிட்ட மலர்க்கொடியாய்க் கால்வீழ்ந் தாளே"[25]

என்னுமாப் போல், எதுகையும் மோனையும் சொல்லும் பொருளும் ஆழமுடைத்தாய் விளங்குகின்றன.

நல்லவர் போல் வாழ்ந்து வாய்ப்புக் கிட்டும்போது தீயராய் மாறிவிடுவோர் விலாங்கு போல்வர் என்பதனை விளக்குவது 'வில(ா)ங்கு' எனும் காப்பியம். திருமணமான ஆசிரியையைப் பொய் சொல்லிப் பள்ளிக்கு வரவழைத்துக் கெடுத்து விடுகிறான் ஒருவன். அவள் தன் கணவனோடு அறங்கூறவையம் சென்று முறையிடுகின்றாள். "ஆங்கே, மங்கையின் கற்பை மாய்த்த வெங்கொடுங் கயவனே வீற்றிருந்தான்."[26] கற்பழிப்புக் கொடுமையோடு வேலியே பயிரை மேய்கின்றது என்ற உண்மையினையும் இதனுள் காணுகின்றோம்.

24. துரைமாணிக்கம், மு.நூ. ப. 9
25. மேலது, ப. 17
26. மேலது, ப. 58

## தற்கொலை முயற்சி

உணர்ச்சித் தடுமாற்றங்கள் வாழ்வில் பல சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன. வாழ்வில் வெறுப்புற்றுத் தற்கொலை செய்து கொள்ள முயன்ற ஒருவனைத் தக்க நேரத்தில் சான்றோன் ஒருவன் காப்பாற்றும் கதை 'பட்டமரம்.' இதனுள் தற்கொலை முயற்சி கடியப்படுவதுடன் தமிழுணர்வும் வலியுறுத்தப் படுகிறது.

## உணர்ச்சிப் போராட்டம்

ஒருவருக்குள் எப்போதோ எழும் உணர்ச்சி சில நொடிகள் அவரை அலைக்கழித்து ஓய்கின்றது. இத்தகைய உணர்ச்சிப் போராட்டத்தையே கருவாகக் கொண் டமைந்தவை 'காளாம்பி,' 'மணல்திட்டு' ஆகிய இரண்டும்.

ஒருகாலத்தில் தன் காதலியாக இருந்தவள் அவள் கணவனோடும் குழந்தையோடும் தொடர்வண்டியில் செல்லுவதைக் காணுகின்றான்.

**"தன்னை விழைந்தவன் தன்னை மறந்து**
**தன்னை மணந்தவன் தன்னை விழைந்து"[27]**

வாழுபவள் அப்பெண்.

அப்பொழுது அவ்விருவருக்கும் ஏற்பட்ட உணர்ச்சிப் போராட்டங்களை நுட்பமாகச் சித்திரிக்கின்றது 'காளாம்பி.' காதலனும் காதலியும் எதிர்பாராமல் சந்திக்கும்போது பின்னோக்கு உத்தியாக அவர்களது பழையகாதல் உறவு காட்டப்படுகிறது.

'மணல்திட்டு' காப்பியத்தில் பிரிவை ஆற்றிக்கொள்ளும் பீடுடைய பெண்ணொருத்தியின் மனம், அவளுடைய கணவன் வரைந்த மடலைப் படித்துக்காட்டும் இளைஞனிடம் செல்லுகிறது.

**"சூழலில் பெய்த எண்ணத் தூறலில்**
**காலூன் றிற்று கயமைக் காளான்"[28]**

என அவளுக்கு அப்பொழுது ஏற்பட்ட உணர்வினைச் சுட்டு கின்றார் ஆசிரியர்.

27. துரைமாணிக்கம், மு.நூ., ப. 33
28. மேலது, ப. 71

எதிர்பாராத வகையில்,

**"உங்களைப் பற்றி ஊரில் யாவரும்
எப்படிப் பெருமையாய் இயம்பினர்; தெரியுமா ?"[29]**

எனத் தன் தோழி கூறும்போது தடுமாற்றத்தினின்றும் விடுபடுகின்றாள். புகழ்ச்சி மனிதனை நெறிப்படுத்தும் அறிவுக் கருவி என்னும் உண்மையை இந்நூல் உணர்த்தி நிற்கிறது.

## திரைப்பட வேட்கை

'முல்லை மலருக்கு நிகராக வாழவேண்டிய முத்தமிழ்ச் செல்வியர் கள்ளிப் பூக்களாகக் காட்சி தருதல் கூடாது'[30] என்பதனை வலியுறுத்தும் காப்பியம் 'கள்ளிப்பூ.'

திரைப்பட வேட்கையால் பெண்ணின் பெருமை சீரழிகிறது என்பதனைக் காட்டும் இக்காப்பியம், திரைப்படம் ஒரு கலைப்படைப்பாக இல்லாமல் சமுதாயத்தைச் சீரழிக்கும் ஒரு நோயாக வளர்ந்து நிற்கும் நிலையினைக் கருவாகக் கொண்டது. இக்காப்பிய ஆசிரியர் திரைப்படங்களை ஒழித்தே ஆக வேண்டும் எனும் நோக்குடையவர் அல்லர் என்பதனை, "நான் வெறுப்பது ஓவியத்தில் படிந்திருக்கும் தூசையே தவிர ஓவியத்தையே அல்ல"[31] எனவரும் ஆசிரியர் கூற்றால் தெளியலாம்.

கணவன் தேநீர் போட்டுவைத்து மனைவியை எழுப்புதலோடு காப்பியம் தொடங்குகின்றது. பெண் பார்க்க வருபவர்களைப் பார்த்துக் கொள்ளுமாறு தந்தையை ஏற்பாடு செய்துவிட்டுத் தாயும் மகளும் படம் பார்க்கப் போகின்றனர். மணமகன் வந்து பார்த்து இவர்கள் நிலையினை உணர்ந்து வெறுக்கின்றான். இதனுள், 'திரைக்கதாநாயகனுக்கு' மகள் எழுதிய காதல் கடிதம் ஒரு திருப்பமாகவும் உச்சமாகவும் அமைகின்றது. தாயும் மகளும் ஒரே நடிகனை எண்ணி ஏங்குதலும், தந்தை அவர்கள் இருவரையும் கடுமையாகக் கண்டித்தலும் நாடகப்போக்கில் அமைந்துள்ளன. இறுதியில் அத்தந்தை தூக்கில் தொங்குகின்ற காட்சி அவன் தன் முயற்சியில் தோற்றுவிட்டான் என்பதனைக் காட்டுகிறது.

29. மேலது, ப. 73
30. கோ. தென்னன், என்னுரை, அரிமதி தென்னகன், கள்ளிப்பூ.
31. அரிமதி தென்னகன், முன்னுரை, மு.நூ.

இந்நூல், செயகாந்தன் புதினவடிவில் தந்துள்ள 'சினிமாவுக்குப் போன சித்தாளு' கதையினை நினைவூட்டு கிறது.

## நடுத்தரக் குடும்ப நிலை

ஓர் எழுத்தரின் தனிமொழியாக அமைந்திருப்பது 'குமாஸ்தா பாட்டு'. தன் பிறப்பு முதல் இன்றைய துயர் நிலைவரை எடுத்துக்கூறி, வறுமையை ஒழிக்க வழிதெரியாமல் திண்டாடும் ஒரு நடுத்தரக் குடும்பத் தலைவனின் இன்னல்கள் தெளிவுறுத்தப் படுகின்றன.

## குடும்பப் பெண்கள்

பெண்பாலரைப் பற்றி எழுந்தவை 'பெண்ணல்லள்,' 'மும்மலர்கள்,' 'குருவிக்கூடு' ஆகிய மூன்று காப்பியங்கள்.

'பெண்ணல்லள்' 'தற்கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' (குறள். 51) என்னும் அடிக்கருத்தை மையமாகக் கொண்டு எழுந்தது. திருந்துவதற்கு முன் 'பெண் அல்லள்' என்றும், திருந்தியபின் 'பெண் நல்லள்' என்றும் பொருள் தோன்றுமாறு ஆசிரியர் நூலுக்குப் பெயரிட் டுள்ளமை பொருத்தமாகவுள்ளது.

தாமரை, அல்லி, உரோசா ஆகிய மலர்கள் தம்முள் உரையாடும் பாங்கில் பெண்டிர் கற்பின் பெருமை பேசும் நூல் 'மும்மலர்கள்.'

வறுமையில் வாடும் நிலையில் கூட, வந்தவர்க்கு விருந்தளிக்கும் பெண்ணின் பெருமையைப் பேசுகிறது 'குருவிக்கூடு.' கடனுக்கு ஈடாக வீட்டைப் பறிமுதல் செய்யும் நிலையில் வெளியேறும் பெண்ணுடன் அவ்வீட்டில் வாழும் கூட்டுக் குருவிகள், மிட்டாதாரனைக் கேலி செய்துவிட்டுத் தாமும் வெளியேறுகின்றன. குருவிகளின் பேச்சு அம்மிட்டா தாரனை மனமாற்றம் கொள்ளச் செய்கிறது.

## கொள்கை வெற்றி

நன்மைக்கும் தீமைக்கும் நடைபெறும் போராட்டத்தில் இறுதியில் நன்மையே வெற்றி பெறுகிறது என்னும் கருத்தினை விளக்கும் காப்பியம் 'கவிஞன்.' தீயோனாகிய நாகப்பனை, அவன் தம்பி நந்தனின் துணைகொண்டு, கதைத்தலைவனாகிய கவிஞன் தன் கொள்கை உறுதியால் மனம் மாறச்செய்து நல்லறங்களைப் பள்ளிக்கூடம் கட்டச் செய்ததன் மூலம்

இந்நூல் சமுதாய சீர்திருத்தத்திற்கான சரியான பணியைச் செய்கிறது எனக் கொள்ளலாம்.

## வரதட்சிணைக் கொடுமை

இன்று அரசின் தலையாய ஒழிப்புத் திட்டங்களில் ஒன்றாகவும், சமுதாயத்தைச் செல்லரிக்க வைக்கும் மிகப்பெரிய கொடுமையாகவும் விளங்குவது 'வரதட்சிணை'ச் சிக்கலாகும். இன்று பெண்கள் இந்தக் கொடுமைக்கு இரையாகி அகவை மூத்தும், இளமை அழிந்தும், வெறிகளுக்கு இரையாகியும், நெறிகளுக்குப் புறம்பாகியும் சிதைகின்றனர். இக் கொடுமையை விளக்குவது 'சுந்தரிசபதம்.'

> இல்லற வாழ்வில் தன்னோடு
> இணையவந் திடும்நங் கைக்குச்
> சில்லரை கேட்கு மிந்தச்
> சிறுமை"[32]

என, இக்கொடுமை கண்டிக்கப்படுகிறது. 'ஒவ்வொரு தன்மானமுள்ள இந்திய இளைஞனுக்கும் யுவதிக்கும் அனுப்பப்பட்டு இருக்கும் அவசரத் தந்தி இது.'

பெண் பார்க்க வரும்போது மாப்பிள்ளை வீட்டார் வரதட்சிணைப் பேரம்பேசுதலும், இதனை எதிர்க்கும் கதைத்தலைவி சுந்தரி இதனையே ஒரு தன்னுணர்வியக்கமாக வளர்த்தலும் இவளைப் பெண்பார்த்துச் சென்ற மாப்பிள்ளை சுந்தரனும் வரதட்சிணைக் கொடுமை நீங்கும் வரை இணைந்து போராடுவதெனச் 'சபதம்' எடுத்தலும் இக் காப்பியத்தின் கதை நிகழ்ச்சிகளாகும்.

'சுந்தரி'யின் குடும்ப நிலை அறிமுகத்தில் தொடங்கி, சுந்தரியும், சுந்தரனும் வரதட்சிணைக் கொடுமைக்கெதிராக எடுக்கும் சூளுரையில் முடிகின்ற இந்நூலில்

> "சங்கச் சுந்தரியே! சபதம் நிறை வேறி,
> தங்கத் திருத்தாலி, தாங்குவையோ என்றேனும்?
> நிசமான ஓராணே! நினைப்பெல்லாம் சுந்தரியின்
> வசமான சுந்தரனே! வாழ்வுனக்கும் வந்திடுமோ?"[33]

32. விசாகன், வாழ்த்துக்கவி, கோ. மணிவண்ணன், சுந்தரி சபதம்
33. கோ. மணிவண்ணன், மு.நூ. ப. 36

என்று 'இரங்கற்பா' அமைத்திருத்தல் புரட்சிச் சூட்டுக்கும் உள்ளே புதைந்திருக்கும் அவலச் சுவையினை வெளிப்படுத்து கிறது. சமுதாய சீர்திருத்த நோக்கோடு பிற காப்பியங்கள் அமைந்திருந்தாலும் சமுதாய உடனடிச் சிக்கலைத் (Burning problem) தொடுவதில் இது முதலிடம் பெறுகின்றது.

## 4. சமயக் காப்பியங்கள்

சமயச் சிறப்புக் கூறும் நோக்கத்தால் சமயப் புதுமைகளை இணைத்து இயற்றப் பெற்றவை சமயக் காப்பியங்கள் ஆகும். 'பாண்டிமாதேவி,' 'வரந்தரும் அன்னை' ஆகிய இரண்டும் இதனுள் அடங்கும்.

மதுரை மீனாட்சியம்மன் கோயில் அறங்காவலர் குழுவினர் 1973—இல் நடத்திய பொற்கிழிக் காப்பியப் போட்டியில் உருபா, 1000/— பரிசு பெற்ற மரபுவழிக் காப்பியம் 'பாண்டிமா தேவி'. சமணத்தின் வீழ்ச்சியும் சைவத்தின் எழுச்சியும் காட்டுவது இந்நூல். பாண்டியன் நெடுமாறன் சமணம் சார்ந்து நின்றபோது அவன் மனைவி மங்கையர்க் கரசியார், அமைச்சர் குலச்சிறையாரின் உதவியோடு சைவத்தை நிலைநாட்டுகிறார். திருஞானசம்பந்தரை மதுரைக்கு வரவழைத்து மன்னனையும் சைவத்துக்கு மாற்றிக் காட்டுகிறார் அரசியார். கண்ணகிக்கு உயிரூட்டிய 'சிலப்பதிகாரம்' போல் மங்கையர்க்கரசியாரை ஏற்றிப் புகழ்ந்து 'பாண்டிமாதேவி' யாக்கியுள்ளது இக்காப்பியம்.

"மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைமட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தோறும் பரவப்
பொங்கு அழல் உருவன் பூத நாயகனால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே—"

என்ற பாட்டே, இக்காப்பியத்திற்கு அடிப்படையாக அமைகின்றது.

நாடு, நகர், இருசுடர்த்தோற்றம் பற்றிய வருணனைகளும் தூது, காண்டப்பாகுபாடு ஆகிய காப்பிய நலன்களும் இதன் கண் சிறப்பாக அமைந்துள்ளன.

"தேய்வதுவோ பாதை ஒன்றே
தேங்குவதோ செல்வம் ஒன்றே
சாய்வதுவோ மூடத் தன்மை
சாம்புவதோ மலரின் கூட்டம்"[34]

என்பன போன்ற பொருட்சுவை மிக்க பகுதிகளை மிகுதியாகக் காணுகின்றோம்.

'வரந்தரும் அன்னை,' வேளாங்கண்ணி மாதாவின் பெருமையைக் கூறும் காப்பியமாகும். கோயில் தோன்றுதற் கான கரணியத்தோடு இடைச்சிறுவன் பால் கொண்டு போன போது ஏற்பட்ட நிகழ்ச்சி, சப்பாணிச் சிறுவனுக்கு முடம் நீக்கிய செய்தி, போர்ச்சுகல் வணிகரைப் புயலினின்றும் காத்தருளியமை ஆகியன இதனுள் இடம்பெறுகின்றன. இயேசு பெருமான் வரலாறு கிளைக்கதையாகச் சொல்லப்படுகிறது.

## 5. புராண, இதிகாசக் காப்பியங்கள்

புராண, இதிகாசக் கருவினை அடிப்படையாகக் கொண்டும், கதை மாந்தர்களைச் சிறப்பித்தும் புனையப்பெற்ற காப்பியங்கள் இப்பகுதியில் இடம்பெறுகின்றன.

புராணக் காப்பியமாக அமைவது 'அனங்கன் பிறப்பு.' சிவன், காமனை எரித்த புராணக்கதையைத் தழுவி எழுதப்பெற்றது இது. ந.பி., உடலைப் பற்றியிருந்த பாலுணர்ச்சி உள்ளத்தைப் பற்றியதாக மாறிவிட்டது என்ற கருத்தினை விளக்குவதற்காக இக்காப்பியத்தினைச் செய்துள்ளார்.

இதிகாச மாந்தர்களைச் சிறப்பித்துப் புனையப்பட்ட காப்பியங்கள் 'உடையவர்,' 'மச்சகந்தி' 'போரியல்' 'கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே' ஆகிய நான்குமாகும். மகா பாரதப்போர் முடிந்தபின் நடந்த நிகழ்ச்சியினைப் பாடுவது 'உடையவர்.' கண்ணன் ஆடும் கபடநாடகமே இக்காப்பியக் கருவாகும். துவாரகையில் யாதவர்கள் தங்களுக்குள் பொருதிக்கொண்ட நிலைமாற்ற அருச்சுனனும் வீமனும் செல்லுகின்றனர். காண்டீப ஆற்றலும், கதையின் ஆற்றலும் கண்ணனை அடைகின்றன. பூசல்களை மாற்றியபின் கண்ணன் மரநிழலில் அமர்ந்திருக்கும்போது காற்பெருவிரலிற் கணையொன்று பாய்ந்து மாய்கின்றான். இத்தகு நிகழ்ச்சிகளுடன் திகழும் இக்காப்பியத்தில் பாணன் — விறலி,

34. அரு. சோமசுந்தரம், பாண்டிமாதேவி, ப. 28

சகாதேவன் — தருமன், கண்ணன் — பலராமன், தருமன் — திரௌபதி ஆகியோரின் உரையாடல்கள் சுவையூட்டுகின்றன.

மகாபாரதத்தில் பிதாமகனாகப் பெயர்பெற்ற வீடுமனின் வரலாற்றை உரைப்பது 'மச்சகந்தி.' வீடுமன், தந்தையின் இன்பம் கருதித் தன் இன்பத்தைத் துறந்த ஈகமே காப்பியக் கருவாகும். காதலும் வீரமும் கலந்து வரும் இக்காப்பியத்துள் மும்முறை வரும் தூது நிகழ்ச்சி தனிச்சிறப்புடையது.

'போரியல் என்னும் பெயரிய காப்பியம் அசுவத்தாமன் உபபாண்டவர்களின் தலைகளைக் கொய்து கொண்டுவரும் மகாபாரதக் கதையினைக் கருவாகக் கொண்டதாகும். அசுவத்தாமனின் செயலைக் கண்டித்ததன் மூலம் துரியோதனனுடைய மனிதப் பண்பினைப் புலப்படுத்து கின்றார் ஆசிரியர்.

வான்மீகி இராமாயணத்திலும் கம்ப இராமாயணத் திலும் வரும் கும்பகருணனது 'ஒட்டிய உறவினை' மையமாகக் கொண்டு புனையப்பெற்ற காப்பியம், மூதுரைக்கருத்தினைத் தலைப்பாகக் கொண்ட 'கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே' ஆகும். வீடணனுக்குப் படைத்தலைமை நல்காமை குறித்து இராவணனிடம் கேட்டல், இராவணனின் போக்குக் குறித்து மண்டோதரியிடம் முறையிடல் போன்ற புதிய கதைப்பகுதிகளை இந்நூலாசிரியர் படைத்துள்ளார். சூர்ப்பனகையைச் 'சூரணங்கு' எனச் சுட்டல் புதுமையாக உள்ளது.

"இன்பத்தில் நின்ற தம்பி
இடரிலும் துணையி ருந்தான்
என்பதை உலகம் காணும்; —
யானதை விரும்பி நின்றேன் !"[35]

என்று வீடணனிடம் கும்பகருணன் கூறும் பகுதி இக்காப்பியத்தின் உச்சநிலையாகவுள்ளது.

முன்னரே புகழ்பெற்றுள்ள இலக்கியக் கதையினைப் புதுமெருகு தந்து புனையப்பட்டமையால் எழுந்த காப்பியங்கள் 'மாதவி காவியம்', 'அணைந்த விளக்கு' ஆகிய இரண்டுமாகும்.

35. சாலை இளந்திரையன், கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே ப. 125

மாதவி பற்றி எழுந்த 'மாதவி காவியம், பழைய கருவினைப் புது மெருகுடன் தருவது.

"வீழ்ந்து கிடந்தனள் கோவலன் மார்பினில்
வீட்டிற் பழுத்தபலா !– இதை
ஆழ்ந்து ரசித்தது சாளரத் தின்வழி
அன்றைக்கு வந்த நிலா !"[36]

என்ற பகுதியில் பாரதிதாசனை ஊன்றிப் பயின்ற பாங்கினையும் ஆசிரியருக்கேயுரிய நடைஅழகினையும் காணுகின்றோம். ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றாகிய 'குண்டலகேசி'யின் கதையினைக் கருவாகக்கொண்டது 'அணைந்த விளக்கு.'

கள்வனைக் காதலித்துக் கணவனாகக் கொண்ட இளவரசி அவனைக் கொன்றபின் முடியரசைக் குடியரசாக்கி அதனையும் பொதுவுடைமை அரசாக மாற்றிட முனைதல் இக்காப்பியத்தின் புதுமையாகும்.

கதைக்கட்டுக்கோப்பும், காப்பியப் பண்புகளும் இந்நூலுள் நிறைந்துள்ளன. பெண் பேச்சாகத் தரப்படும் வருணனையில் திறமை பளிச்சிடுகிறது. உவமைகள் பல உள்ளன. அறநெறிக் கருத்துகள் அதிகமாகவே சொல்லப்படு கின்றன. ஆசிரியர் தம் தமிழ்ப்பற்று விளங்குமாறு பல இடங்களை அமைத்துக் காட்டுகிறார்.

"முத்தை உணராமல் முட்புதருள் வீசுதல் போல்
பச்சைக் கிளியொன்றைப் பார்த்திருந்தும் பூனைகையில்
வைச்சுக் கொடுப்பவர்போல், வற்றாமல் தேன்சிந்தும்
நல்லமலர் மாலை நாசமுறத் தாவுமொரு
பொல்லாக் குரக்கினிடம் போடுவதுபோல்..."[37]

என அடுக்கடுக்காக உவமைகளை அமைத்திருத்தல் இந்நூலின் தனிச்சிறப்பாகும்.

## முடிபுகள்

காப்பிய மரபுகளைக் கண்மூடிப் பின்பற்றாமல் மேலைநாட்டுத் தாக்குரவால் தற்போதைய காப்பியங்கள் சிலமாறுதல்களைப் பெற்றுள்ளன.

36. பொன்னிவளவன், மாதவி காவியம், ப. 36
37. சாமி. சிதம்பரனார், அணைந்த விளக்கு, ப. 115

சிலப்பதிகாரத்தின் தாக்குரவு இக்காலக் காப்பியங்களில் மிகுதியும் உள்ளது. கதிரவன், நிலவு, மழை பற்றிய வாழ்த்துகள் இத்தன்மையில் அமைந்துள்ளன.

காந்தியடிகள், இலெனின், அண்ணா, கலைஞர் ஆகிய தலைவர்களைப் பற்றியும் இதிகாச மாந்தர் பற்றியும் எழுந்துள்ள காப்பியங்களில் வீரர் வழிபாடு (Hero Worship)மேலோங்கி நிற்பதனைக் காணலாம்.

ஆட்டனத்தி - ஆதிமந்தி, அம்பிகாபதி - அமராவதி ஆகிய காதல்கதைகள் இக்காலக் காப்பியங்களில் மேலாண்மை செலுத்துகின்றன.

இந்தி எதிர்ப்பு 'தீக்குளித்த செம்மல் சின்னச்சாமி,' 'தமிழ்த் தாயின் ஆணை,' 'பறவைகள் மாநாடு,' 'நடுகல்', 'வழக்குரைகாதை' எனும் ஐந்து காப்பியங்களுக்குக் கருவாகியுள்ளது. இவற்றுள், துரை - மாணிக்கம் எழுதிய 'பறவைகள் மாநாடு' குறியீட்டுத் தன்மை பெற்றுத் தனித்து நிற்கின்றது.

தழுவல்களாக அமைந்த சமுதாயக் காப்பியங்களில் கதைப்போக்கும் திருப்பங்களும் மிகுந்த விறுவிறுப்புடன் அமைகின்றன. இதற்கெனத் தெரிந்தெடுத்துக் கொண்ட மூலக்கதைகள் அனைத்தும் செறிவும் செப்பமும் வலிவும் உடையன என்பது குறிப்பிடத்தக்கது.

தழுவல் காப்பியங்கள் கதைநிகழ்ச்சிகளுக்கு முதன்மை தருவதனையும், சமுதாய சீர்திருத்தக் காப்பியங்கள் வாழ்க்கைச் சிக்கலுக்கு முதன்மை அளிப்பதனையும் காணுகின்றோம்.

கட்டுக்கோப்பைப் பொறுத்தமட்டில் குறுங் காப்பியங்கள் அனைத்தும் ஒரு கருத்தினையோ, ஒரு நிகழ்ச்சியினையோ சுற்றி அமையும் சிறுகதை போலவும், ஓரங்க நாடகம் போலவும் விரிவான காப்பியப் பண்புகள் எவையுமின்றி அமைகின்றன.

முற்றிலும் சமய நோக்கோடு எழுதப்பட்ட காப்பியங்கள் இக்கால எல்லையில் குறைவு. அதனைக்கொண்டு, சமய உணர்வுகள் பெரிதும் குன்றிவிட்டனவோ என எண்ணத் தேவையில்லை. சமய இலக்கியங்கள், சிற்றிலக்கிய வடிவிலும் தனிப்பாடல் வடிவிலும் மிகுதியாகத் தோன்றியுள்ளன.

பன்னிரண்டு காப்பியங்களை இயற்றிப் பல்வேறு தனித் தன்மைகளை நிலைநாட்டிய வகையில் துரை - மாணிக்கம் தனித்து நிற்கிறார்.

# 3

# நாடகங்கள்

## முன்னுரை

நாடகக் கலை ஆற்றலும் செறிவும் மிகுந்ததாகும். நாடகம் இயற்றுதல் சிக்கலானது. அதிலும் கவிதை நாடகம் இயற்றுதல் இன்னும் சிக்கலானது. ஏனெனில் படைப்பாளன் நாடக ஆசிரியனாக மட்டுமல்லாமல் கவிஞனாகவும் இருக்க வேண்டும். கவிதை நாடகங்களில் மூவகையான குரலைக் கேட்கின்றோம். அவை. (1) கவிஞன் எதிரில் யாரும் இல்லாதபோது தனக்குத்தானே பேசும் குரல். (2) எதிரில் உள்ள மக்கட்கூட்டத்தை நோக்கிக் கவிஞன் எழுப்பும் குரல். (3) ஒரு பாத்திரத்தைக் கவிதையில் பேசுமாறு செய்யும் போது எழுப்பும் குரல். இந்த மூவகைக் குரல்களும் இயைந்து ஒலிக்கின்ற கவிதை நாடகம் வெற்றிபெறும். இன்று தமிழ்க் கவிதை நாடகத்துறை வளர்ந்து வருகின்றது. கவிதை நாடகங்களை வடிவம், பாடுபொருள் ஆகிய அடிப்படைகளில் பகுத்து ஆராய்கின்ற ஆய்வு முறையும் வளர்ந்து வருகின்றது.

ஆய்வாளருக்குக் கிடைத்த கவிதை நாடகங்களைப் பாடுபொருள் அடிப்படையில் பின்வருமாறு பகுத்துக் காணலாம்.

1 வரலாற்றுக் கவிதை நாடகங்கள் 10;

2 சமுதாயக் கவிதை நாடகங்கள் 22;

3 தத்துவக் கவிதை நாடகங்கள் 2;

4 இதிகாசக் கவிதை நாடகங்கள் 2;

5 தேசிய ஒருமைப்பாட்டுக் கவிதை நாடகம் 1

"சமூக நாடகங்களைக் காண மக்கள் விரும்பியது அவர்களின் மனவுணர்வு நாட்டத்தின் போக்கை நன்கு

விளக்குவதாகும். முன்பு தெய்வக் கதைகளையும் நம்பவியலாக் காட்சிகளையும் கண்டுகளிக்க நாடிய மனிதன் மனமாற்றம் கொண்டு தான் வாழும் சமுதாயக் காட்சிகளைக் காணவிரும்புவது அவனுடைய வாழ்க்கை முன்னேற்றப் போக்கினையே காட்டுகிறது. பொய்மையை மறந்து மெய்ம்மை காணவிரும்பியுள்ள தன்மையை அறியலாம்"[1] என்பார் கூற்றினையும் நினைவிற் கொண்டு கவிதை நாடகங்களை ஆராயலாம்.

அறுபதாண்டுக் கவிதை நாடகங்களை *(1920—1980)* ஆய்ந்த இராம. பெரியகருப்பன் 'மனோன் மணீயம்' தமிழ் நாடக வளர்ச்சியில் ஒரு மணிமரபினைத் தோற்றுவித்தது என்பதனைச் சான்று காட்டி நிறுவியுள்ளார்.[2]

நாடகங்களை ஆயப்புகுமுன் இக்கருத்தினையும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

## வைரமூக்குத்தி

கோ. மோகனரங்கன் வானொலியில் ஒலிபரப்புவதற்காக எழுதிய 'வைரமூக்குத்தி,' 'இன்பப்பெருவாழ்வு,' 'ஒருமனம்' 'கலையும் சிலையும்' ஆகிய நான்கு கவிதை நாடகங்களை ஒரே நூலாக வெளியிட்டுள்ளார்.

'வைரமூக்குத்தி' நாடகத்தில் வரதட்சிணைக் கொடுமை ஆழமாக விளக்கப்படுகிறது. கேட்டதெல்லாம் கேடில்லாது அளித்த பின்னும் வைரமூக்குத்தி இல்லாமையால் வனப்பே இல்லை எனக் குறைப்பட்டுப் புதுமனை வந்த மணமகளைப் பிறந்த வீட்டுக்கே அனுப்பும் கொடிய சம்பந்தி செயல் நம் மனதில் வெறுப்பைத் தோற்றுவிக்கிறது. பணக்கார வீட்டு மருமகளாக்கி மகிழ ஆசைப்பட்ட பெற்றோரைப்,

> "பணத்தைப் பார்த்தே பல்லை இளித்தீர்
> பணமோ உம்மைப் பார்த்துச் சிரித்தது"[3]

என நையாண்டி செய்யும் கதைத் தலைவி மலர்க்கொடி நம் சிந்தையைக் கவருகின்றாள்.

---

1. ஏ.என். பெருமாள், அறுபதாண்டுகளில் அருந்தமிழ் நாடகம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழக மணிவிழா மலர், ப. 32
2. இராம. பெரிய கருப்பன், அறுபதாண்டுகளில் கவிதை நாடகங்கள், மு.நூ. ப. 98
3. கோ. மோகனரங்கன் வைரமூக்குத்தி, ப. 15

மாமனார் கேட்ட வண்ணமே வைரமூக்குத்தியுடன் கணவனிடம் வருகின்றாள். தந்தையைத் திருத்த முடியாமல் சிந்தை வாடிய அவள் கணவனும் அவளோடு வாழ அணியமாய் இல்லை என்கின்றான்; வைரமூக்குத்தியை அப்பாவுக்கு அஞ்சலில் அனுப்பிவிட்டு மனைவியுடன் பம்பாய்க்குச் செல்லும் திட்டத்தையும் மடல் மூலம் தெரிவிக்கின்றான். பிள்ளைப் பாசத்தால் வாடிய அவன் தந்தை மனமாற்றம் பெறுகின்றார்.

> **"உன்னிலும் எனக்குப் பணமா உயர்ந்தது ?**
> **பொன்னெலாம் உனக்கே! பொருளெலாம் உனக்கே!**
> **உன்னுளம் விரும்பி ஒப்பா தென்றால்**
> **இன்றே சம்மந்தி இல்லம் செல்வேன்**
> **சீரும் சிறப்பும் செய்ததற் காகப்**
> **பாரில் அவர்கள் பட்ட கடன்கள்**
> **அனைத்தும் தருவேன்"[4]**

என்ற அளவுக்குப் போய் விடுகிறார்.

## 'இன்பப் பெருவாழ்வு'

வெள்ளிப் பணத்தாலும் நண்பர்கள் கூட்டத்தாலும் இன்பம் பெற முடியாமல் தவிக்கின்ற ஒருவனுக்கு வாழ்க்கைத் தத்துவத்தை உணர்த்தி இன்பப் பெருவாழ்வு பெறவைத்தலே இந்நாடகத்தின் மையக் கருத்தாகும். நிகழ்ச்சிகள் எவையுமின்றி வெறும் உரையாடல் மூலமே நாடகம் முடிந்து விடுகின்றது. இந்நாடகத்தில்.

> **"மனத்தினால் வாழ்வுண்டு; மாசிலா நல்வாழ்க்கை**
> **மனத்தின் நெறிகளே வாழ்வில் வழிகாட்டும்**
> **அன்புதான் வாழ்க்கை! அறமே பெருவாழ்க்கை!**
> **இன்பமாம் ஈதல் இனிதாகும் பண்புடைமை!"[5]**

என அறவுரை சொல்லும் பகுதி கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

4. மேலது, ப. 24
5. மேலது, ப. 35

**'ஒருமனம்'**

தம் பிள்ளைகளாகிய இருவருக்கு இளம் வயதிலேயே மணமுடிக்கப் பெற்றோர் பேசி முடிவு செய்கின்றனர். கால ஓட்டத்தில் தலைமகன் வேறொரு பெண்ணையும், தலைமகள் மற்றோர் ஆணையும் காதலித்துத் தம் விருப்பப்படியே மணம் புரிந்து கொள்ளுகின்றனர். பிள்ளைகள் பெரியவர்களாகு முன்பே அவர்கள் திருமணம் குறித்துப் பெற்றோர் எடுத்துவிடும் பதற்ற முடிவுகளின் அலங்கோலத்தை இந்நாடகம் சிறப்புறச் சித்திரிக்கின்றது.

**'கலையும் சிலையும்'**

சிற்ப வல்லான் ஒருவன் தன் காதலியின் சிலையையே சிற்பமாய் வடிக்கின்றான். ஊடலால் அவ்வெழிற் சிலையை உடைத்து விடுகிறாள் காதலி. தெருவில் கிடந்த சிலை மன்னன் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரியதாகின்றது. அதனை வடித்த சிற்பியைத் தேடி மன்னன் ஆட்களை விடுக்கின்றான். அச்சிலை வடித்த சிற்பி பரிசினைப் பெறுகின்றான். காதலர் இருவரும் ஒருமனதாகின்றனர்.

**புது மனிதன்**

கோ. மோகனரங்கனின் கவிதை நாடகங்களின் மற்றொரு தொகுப்பு 'புதுமனிதன்.' இத்தொகுப்பில் 'அறிவுச் செல்வன்' 'மறை அன்பு,' 'அமைதி,' 'புதுமனிதன்,' 'பெரியவர்' ஆகிய ஐந்து நாடகங்கள் அடங்கியுள்ளன. இவ்வைந்தும் அறிவூட்டும் நல்ல நாடகங்கள்.

**'அறிவுச் செல்வன்'**

குடும்பங்களில் பெரும்பாலும் மாமியும் மருமகளும் இருவேறு உலகங்களாக இருக்கின்றனர். அவர்களை ஒருலகமாக்கச் செய்த முயற்சியில் பிறந்தவனே அறிவுச் செல்வன்.

> "நாளும் பொழுதும் நஞ்சு சேர்ப்பவள்
> தேளாய் இங்கே திரியும் மருமகள்"[6]

என்று புறங்கூறும் மாமியார்,

6. கோ. மோகனரங்கன், புதுமனிதன், ப. 8

"ஆட்டுகின்றாள் என் மாமி, ஆடுகின்றேன் எப்பொழுதும்!"[7]

எனப் புகையும் மருமகள்,

"தாயும் வேண்டும், தாரமும் வேண்டும்"[8]

என நடுநிலைமை தாங்கும் மகன் ஆகியோரின் உணர்ச்சிப் போராட்டங்களை இந்நாடகத்தில் காண்கின்றோம். தாய்க்குத் தெரியாமல் மனைவியோடு தனிவீட்டில் சின்னாள் வாழ்வதோடு தாயைப் பார்ப்பதையும் தவிர்க்கின்றான் கதைத் தலைவன் அறிவுச் செல்வன்; அதன் விளைவாக மருமகள் மாமி வழக்குகள் முடிகின்றன.

**'மறை அன்பு'**

இலக்கிய உலகில் இணையற்ற நட்பு வாழ்க்கைக்கு உரிமையாளர்களாகப் பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும் விளங்கினர் என்பதை மறக்க இயலாது. அவர்களுடைய சிறப்பு மிக்க வாழ்வை 'மறை அன்பு' கூறுகின்றது.

"மாண்புகள் அனைத்தும் வாய்ந்த என் மனைவி,
காண்பதற் கரிய கற்பின் செல்வி;
மைந்தர் களெல்லாம் மட்டிலா அறிவும்
சிந்தையில் பண்பும் செறிந்திடப் பெற்றவர்;
ஏவலர் யாவரும் எண்ணம் அறிந்து
சேவகம் புரியும் திறமை வாய்ந்தவர்;
காவலன் பாண்டியன் கனிவுடன் காப்பவன்;
கொடுமைகள் இன்றியே கொற்றம் நடத்துவான்;
சான்றோர் பலர்என் ஊரில் வாழ்வதால்
நான் இன்னும் நரைதிரை யின்றி வாழ்கின்றேன்!"[9]

என நாடகமாந்தராகிய பிசிராந்தையார் தன் முதல் மாணவனுடைய ஐயத்தைப் போக்குகின்றார். 'யாண்டு பலவாக நரையில வாகுதல்' (புறம்:191) என்ற பாட்டின் பொருளாகவே இவ்வுரையாடல் அமைந்து விடுகின்ற சிறப்பைச் சுவைக்கின்றோம். கோப்பெருஞ்சோழனை, தாம் பெற்ற மக்களேயானாலும், 'பண்பிலா அவர்கள் பாரை

7. மேலது, ப. 24
8. மேலது, ப. 21
9. மேலது, ப. 34

யாள்வதா?' எனக் குமுறும் அறங்காவலனாக நாடக ஆசிரியர் படைத்துள்ளார். தீமைக்கு முன்னர் நன்மை தோற்று அழிகின்றது. சோழன் வடக்கிருந்து மடிகின்றான். அவனுடைய கல்லறையை அடைந்த அவனுடைய நண்பர் பிசிராந்தையார்.

**"உண்ணாமல் நோன்பிருந்தே ஒப்பற்ற மன்னவனைக்**
**கண்ணாரக் காண்பதற்குக் காற்றினிலே பறந்திடுவேன் !"[10]**

என்று சொல்லி இறக்கின்றார்.

**"சாவுகலம் செல்வதற்கு நானுமிதோ வருகின்றேன்"[11]**

என இரங்கிப் பொத்தியாரும் உயிர் துறக்கின்றார். இந்த அவல முடிவு நம் நெஞ்சைத் தொடுகின்றது.

**'அமைதி'**

குற்றம் புரிந்தவன் பொன்னாலும் புகழாலும் வெளியுலகின் கண்களை மறைத்தாலும் தன் மனக்கண்ணி லிருந்து தப்பி அமைதி பெற்றுவிட முடியாது என்னும் பாடத்தை 'அமைதி' நாடகம் உணர்த்துகிறது. "பணத்தினால் முடியாப் பணிகளும் உளவோ?"[12] என்று செருக்குடன் கேட்டவர்.

**"இன்பமே நெஞ்சில் இல்லை**
**இனிவரும் வழியும் இல்லை**
**பொன்னிலும் மகிழ்ச்சி இல்லை**
**புகழிலும் மகிழ்ச்சி இல்லை**
**துன்பமே வாழ்க்கை யாகிச்**
**சோர்வுடன் வீழ்ந்து விட்டேன்**
**என்றுமே அமைதி காண**
**எனக்கொரு வாய்ப்பே இல்லை !"[13]**

எனப் புலம்ப வேண்டிய சூழ்நிலையையும் அடைகின்றார். தன் நண்பனோடு பல்லாண்டு ஒன்றாய்த் தொழில் புரிந்து ஈட்டிய செல்வத்தையெல்லாம் தானே அடைதற் பொருட்டு உத்தமன் போல நடித்து நண்பனைக் கொன்றுவிடுகிறான். மனசாட்சி வாட்டி வதைத்தலைப் பொறாதவனாய்த் தவிக்கும் அவன்,

10. மேலது, ப. 36
11. மேலது.
12. மேலது, ப. 39
13. மேலது, ப. 45

கொலை செய்யப்பட்ட நண்பனுடைய மகனிடமே எல்லாச் செல்வத்தையும் கொடுத்துவிடுகின்றான். தன் மகளையும் அவனுக்கு மணமுடித்து வைக்கின்றான். அவன் அகத்தில் அமைதியும் மகிழ்வும் நிறைகின்றன.

## 'புதுமனிதன்'

கல்விக்கும் செல்வத்துக்கும் ஏற்பட்ட போராட்டத்தை விளக்குகிற நாடகம் 'புதுமனிதன்.'

> "நூலுக்கும் இல்லாத நுண்ணாற்றல் என்பணத்தின்
> காலுக்கே உண்டென்று காட்டுகிறேன் நாளைக்கே"[14]

என அறைகூவல் விடுத்த சீராளன்,

> "சொல்லாலே கொல்லுகிறார் சோர்வோடு சாய்கின்றேன்"[15]

எனத் தன்னிலையினின்றும் இழிகின்றான். இவ்வாறு கல்வியின் முன் செல்வம் பணிகின்றது. நல்லுரைகள் பெற்ற சீராளன் மதிநிறைந்து 'புதுமனிதன்' ஆகின்றான்.

## "பெரியவர்"

அகவை முதிர்ந்தவர்களின் அனுபவ உரைகள் எத்தகைய ஆற்றல் வாய்ந்தவை என்பதனைப் 'பெரியவர்' நாடகம் விளக்குகிறது. பெற்றோரும் மனைவியும் இருவேறு துருவங்களில் இழுப்பதால் துன்புறும் தலைவன் முதியவர் நல்லுரை கேட்டு நன்மை பெறுகின்றான்.

'அறிவுச் செல்வன்,' 'மறை அன்பு,' 'அமைதி,' 'புது மனிதன்' ஆகிய நான்கு நாடகங்களில் இருக்கும் துள்ளுநடை, பொருளமைதி, விறுவிறுப்பான கதையோட்டம் ஆகிய சிறப்புகள் 'பெரியவர்' நாடகத்தில் குறைவென்றே சொல்லவேண்டும். முதல் நான்கு நாடகங்கள் நல்ல கதையமைப்பும் எளிய இனிய நடையும், ஆழமான உரையாடல்களும், கற்பனை வளமும் பெற்றுள்ளன. பொதுவாக ஐந்து நாடகங்களிலுமே யாப்பிலக்கணம் பிழையின்றி அமைந்துள்ளது. இசைப்பாடல்கள் படிப்போருக்கும் கேட்போருக்கும் இன்பம் பயக்கின்றன. சொற்கள் இக்கவிஞருக்கு ஏவல் செய்திருக்கின்றன.

---

14. மேலது, ப. 53
15. மேலது, ப. 62

## 'யாருக்குப் பொங்கல்'

கோ. மோகனரங்கனுடைய 'யாருக்குப் பொங்கல்' நாடகத் தொகுதியில் இடம்பெறும் எட்டுக் கவிதை நாடகங்களும் வானொலிக்காக எழுதப்பட்டவை. அன்றாட வாழ்வில் நடை பெறும் நிகழ்ச்சிகளையே மையமாக்கி முற்றிலும் யாப்பு மரபுகளை வைத்துப் பல்வேறு சந்தங்களில் பாடியுள்ளார்.

இந்நாடகங்கள் கதைத் தொடர்பும் ஆற்றல் வாய்ந்த உரையாடல்களும் கொண்டு படிக்கவும், கேட்கவும், நடிக்கவும் வாய்ப்பாக உள்ளன. எட்டு நாடகங்களிலும் ஒன்றுக்கொன்று மாறுபட்டும் வேறுபட்டும் நிற்கும் பல கதை மாந்தர்களை இனம் காண முடிகின்றது. 'தாய்மண்' என்ற முதல் நாடகம் உடன் பிறந்த மூவர் மூன்று வகைகளில் வாழ்க்கை நடத்திய கதையினைக் கூறுகின்றது. 'அன்புக்கடல்' எனும் நாடகம் பிறருக்குத் தெரியாமல் உழைத்துப் பொருளீட்டித் தன் அண்ணனுக்காக மிதிவண்டி வாங்கித் தரும் தங்கையின் ஈகத்தை விளக்குகின்றது.

அண்டை வீட்டுக்காரருக்கு உடனடித் தேவைக்கு பத்து உரூபாய் கடன்கொடுத்து உதவாதவன்; பக்கத்து வீட்டில் அம்மைநோய் கண்டு துன்புறும் சிறுவனுக்கருகில் தன் மனைவியை அனுப்புதற்கும் இசையாதவன் கனலோன். அப்படிப்பட்ட தன்னலக்காரனுடைய இரக்கமில்லாத பண்பினை எத்தனையோ முறை அவன் மனைவி இடித்துரைக்கின்றாள். அவன் திருந்துவதாயில்லை. அவர்களுடைய ஒரே மகனுக்கும் அம்மை நோய் வந்து விடுகின்றது. கனலோன் மனந்திருந்திப் பொதுநல உயர்வு பெற்று அம்மைத் தடுப்பூசியை ஊரெங்கும் போடுவதற்கு ஏற்பாடு செய்கின்றான். இப்படி ஒரு புதிய மனிதனைத் 'தன்னலம்' நாடகத்தில் காண்கிறோம்.

களவாடும் இழிசெயலைக் கருத்தாலும் நினைந்தறியா அருளனைத் திருடனென முதலாளி விரட்டி விடுகின்றான். சில வீணர்கள் வழியில் கண்டபோதெல்லாம் அருளனை இழித்தும் பழித்தும் பேசுகின்றனர். தன்னுடைய மகளைப் பற்றிய பழிப்புரைகளும் அவன் காதில் விழுகின்றன. இக் கொடுமைகளைப் பொறாதவனாய்த் தற்கொலை செய்து கொள்ளத் துணிகிறான். செய்தியை அறிந்த மகளுடைய காதலன், என்ன நேரிடினும் அருளன் மகளை மணந்து

கொள்வதாக உறுதி அளிக்கின்றான். அருளன் தன் மீது வீசப்பட்ட பழிச்சொற்களை மறந்து நம்பிக்கையுடன் வாழ விழைகின்றான் என்பதனை 'பழிச்சொல்' நாடகம் விளக்குகின்றது.

செல்வர் மகளொருத்தி தன்னை நெஞ்சாரக் காதலித்த ஏழை ஒருவனை மணக்கின்றாள். பணத்திற்கே ஆசைப்பட்டுத் தன் மகளை அவன் மணந்தான் என்று கூறி ஒரு துரும்பும் அவனுக்குக் கொடுக்கப் போவதில்லை என்று மாமனார் முடிவு செய்கின்றார். தன்மான வீரனான மருமகனும் தனக்கு விடப்பட்ட முள் நிறைந்த காட்டை அழித்து நெல் விளையும் வயலாக்கிக் கள்ளி நிலத்தில் வளமான கன்னலைக் காட்சிதர வைக்கின்றான். அவன் மாமனாரோ ஆசைப்பட்டு அவன் தோட்டத்துக் கரும்பொன்றைத் திருடிவிடுகின்றார். கையுங் களவுமாய்ப் பிடித்த பின்னும் மருமகன் அவர் நாண நன்னயம் புரிகின்றான். இனிய பொங்கலன்று எல்லோரும் இணைகின்றனர். மகளையும் மருமகனையும் இனிது வாழ்த்தி ஏற்றுக் கொள்ளுகின்றார் அச்செல்வர். பணத்தால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடு நிலையானதன்று என்னும் உண்மையைப் 'பொங்கல் கரும்பு' நாடகம் விளக்குகிறது.

இத்தொகுப்பில் இடம்பெறும் 'மாதரசி,' 'அகிலத்தின் திசைகளிலே அரும்பணிகள் ஆற்றுவதில் புகழ்மிகுந்தோர் ஆண்குலமா, பெண்குலமா' எனும் பொருளில் நடக்கும் ஒரு பட்டிமண்டபத்தை மையக் கருவாகக் கொண்டது. உத்திவகையில் பிற நாடகங்களினின்றும் இது மாறுபட்டதாகும். பட்டிமண்டபத்தில் வெற்றி பெற்ற மணிமாறன், மாதரசியை விரும்புகின்றான். தோல்வியுற்ற மாதரசி அவனைப் புறக்கணித்துக் கயமை நிறைந்த ஒருவனைக் கணவனாக ஏற்கிறாள். காலம் சுழல்கிறது. மணிமாறன் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சேர்கிறான். இல்லற வாழ்வில் ஏற்பட்ட ஏமாற்றங்களினால் நெஞ்சு நோய்க்கு ஆட்பட்ட மாதரசியும் அதே மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறாள். பட்டிமண்டபத்தில் வென்று பரிசுபெற்ற மணிமாறன் வாழ்க்கையில் வெற்றிபெறவில்லை. அவனிடம் தோற்ற நங்கை அவனையும் வீழ்த்திவிட்டுத் தானும் அழிந்து விடுகிறாள். விளையாட்டாய் வேடிக்கையாய் நடந்துவிடும் நிகழ்ச்சிகளைப் பெரிதுபடுத்திக் கொள்ளுவதால் வரும் கேடு இந்நாடகத்தில் சுட்டப்பட்டுள்ளது.

'பொங்கல் நாள் கரும்புக்கே,' 'சோறளிக்கும் பெரும்பணியில், தொடர்ந்துழைக்கும் மாட்டுக்கே!,' 'கள்ளமிலா உள்ள நிறை இளைஞர்க்கே!' எனப் பலருக்கும் மகிழ்வூட்டும் பொங்கல் திருநாளின் சிறப்பே 'யாருக்குப் பொங்கல்' நாடகத்தில் முழுமையும் பேசப்படுகிறது.

நேற்றைய பட்டறிவுகளை இன்றைய படிப்பினையாக்கி நாளைய வாழ்க்கைக்குப் பாதையமைத்துக் கொள்ள வேண்டும் என்ற வாழ்க்கை உண்மையை 'நேற்று இன்று நாளை' என்னும் நாடகம் உணர்த்துகின்றது. இதனைச்,

> **"சென்றநாள் வாழ்க்கையிலே செய்துவிட்ட பிழையெல்லாம்**
> **இந்நாளில் திருத்துவதே ஏற்றமிகு செயலாகும்**
> **கடமைகளை இன்றுநாம் கருத்தாக ஆற்றிவந்தால்**
> **நடந்துவரும் நாளையநாள் நன்னாளாய் மாறி வரும்!"[16]**

என வரும் நாடகப் பகுதியால் அறியலாம். இவ்வெட்டு நாடகங்களிலும் பல வகையான பாக்களை ஓசைநயம் பிறழாமல் அமைத்திருக்கின்றார். ஆசிரியப்பா, விருத்தம், கலி வெண்பா, சிந்து ஆகிய பாவினங்களைக் கையாண்டிருக் கின்றார். இவ்வாறு பல்வகைப் பாக்களும் விரவி வருவதால் நாடக உரையாடல்கள் சுவைமிக்கனவாய் உள்ளன.

## கயமையைக் களைவோம்

வானொலித்த ஆறு நாடகங்கள் அடங்கிய 'கயமையைக் களைவோம்' என்ற கவிதை நாடகத் தொகுப்பைக் கோ. மோகனரங்கன் வெளியிட்டுள்ளார். வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி நடைபெறும் காட்சிகளை உணர்ச்சித் துடிப்புடன் உள்ளம் வெடிக்கும் உரையாடல்கள் மூலம் இதனுள் விளக்குகின்றார். கள்ளிப்பால் விரும்புகின்ற சமுதாயத்தின் திசையை மாற்றி அதன் கைகளிலே செங்கரும்பைக் கொடுத்து மகிழுவதற்கு அவர் துடிக்கும் துடிப்பே 'கயமையைக் களைவோம்' நாடகத்தின் அடிக்கருத்தாக அமைந்துள்ளது.

> **"முள்வளர்த்தால் பெருமையில்லை நெஞ்சில் நீங்கள்**
> **முக்கனிகள் வளர்த்தால்தான் உலகம் வாழ்த்தும்!"[17]**

16. கோ. மோகனரங்கன், யாருக்குப் பொங்கல், ப. 120
17. கோ. மோகனரங்கன், கயமையைக் களைவோம், ப. 20

என மாணவர்க்கு அறிவுரை வழங்கும் ஆசிரியராக வரும் பண்பழகன் கயமை எங்கெங்கே கால்வைக்கின்றதோ அங்கெல்லாம் அஞ்சாமல் நின்று எதிர்ப்புக் குரல் கொடுக்கின்றார். சமுதாய நலத்தில் அவருக்குள்ள ஆர்வத்தையும், அதற்காகத் தம் உயிரையே இழக்கவும் துணிந்து நின்று போராடும் திண்மையையும் இந்நாடகத்தில் பல இடங்களில் காணலாம்.

"................... கோழிக்குஞ்சாய்
மட்டுமே வாழ்ந்தால் வையகம் நசுக்கும்
தொட்டால் நெருப்பாம்; சூழ்ந்தால் வேங்கையாம்;
முட்டினால் புயலாம்; மோதினால் மலையாம்!
என்றே வாழ்ந்திட எண்ணுவோமானால்
சின்ன மனிதரின் சேட்டைகள் அடங்கும்!"[18]

என்று கயவரை எதிர்க்கப் புறப்படுகிறார். ஊராரின் எதிர்ப்பு ஒரு பக்கம். சாதி முறைகளை ஏற்கவில்லை என்பதனால் உறவினரின் எதிர்ப்பு மறுபக்கம்' இவற்றிடையில் மனைவியும் சமயம் வாய்க்கும் போதெல்லாம் கணவனின் புதுமை ஆர்வத்தைக் குறை கூறுகின்றாள். எதற்கும் பண் பழகன் பின்வாங்குவதாய்த் தெரியவில்லை.

"முறை கெட்ட செயல்களுக்கு
முடிவு கட்டிப் பார்ப்பதிலே
முதலில் நிற்பேன்!
குறைகண்டால் கொதித்தெழுவேன்!
கொடுமைகளின் திரைகிழிக்கக்
குரல் கொடுப்பேன்!"[19]

என்று வீரத்துடன் உரைக்கிறார். சொல்லிய வண்ணம் செய்து காட்டி வெற்றி பெறுகின்றார். நாடெல்லாம் புகழ்பாட நலமுடனே வாழ்கின்றார். இந்நாடகத்தில் நன்மையின் முழு வெற்றியைக் காண்பதில் படிப்போருக்கு இன்பச் சுவையே மிகுகின்றது,

**'சிற்பி'**

இலட்சியக் கலைஞன் புகழேந்தியைச் செல்வர் ஒருவர் வீதியிலே தனக்குச் சிலை நிறுவ வேண்டுமென்று

18. மேலது, ப. 15
19. மேலது, ப. 35–36

கேட்கின்றார். தன் மனம் விரும்பாத எதனையும் செய்ய முடியாதென மறுத்து விடுகின்றான் புகழேந்தி. பத்தாயிரம் உரூபாய் தருவதாய்ச் செல்வர் கூறியும்

**"என்னுள்ளம் ஏற்காத எதையுமே சிலைசெய்யேன் !**
**உண்மைக் கலைஞனுக்கே உரித்தான பண்பிதுவே"**[20]

என்றும்

**"எத்தனைதான் கொடுத்தாலும் என்னுள்ளம் ஏற்காதே !"**[21]

என்றும் மறுத்து விடுகிறான். இலட்சிய மனிதர்களை விலை போட்டு வாங்க முடியாது என்னும் உண்மையை இந்நாடகம் உணர்த்துகிறது.

**'சட்டத்தின் கண்கள்'**

கொலை வழக்கொன்றை வெற்றிகரமாக நடத்திக் குற்றவாளி கருப்பையனுக்கு விடுதலை பெற்றுத் தருகிறார் வழக்கறிஞர் உலகநாதர். அதனை எதிர்க்கிறாள் மருத்துவரின் மகள் கனகா.

**"அழுகிவிட்ட கனிகளுக்கா அரசாங்க மரியாதை ?**
**புழுதிபட்ட சொறிநாய்க்கா பொன்னாடை பாரர்ட்டு ?**
**ஈயத்தை எத்தனைநாள் வெள்ளியென எடுத்துரைப்பீர் ?**
**ஆய்ந்தறியும் அறிஞரெலாம் அப்படியே நம்புவரோ ?**
**உண்மைக்குப் பகைவர்கள் ஊருக்கு நண்பர்களா ?**
**அன்புலகை அழிப்பவர்கள் அறங்காக்கும் வேலிகளா ?"**[22]

இந்தக் கேள்விகள் வழக்கறிஞரின் உள்ளத்தில் புரட்சியை ஏற்படுத்தியதால்,

"சட்டத்தின் கண்களுக்குத் தப்புகிற கொடியவர்கள்
கெட்டதையே விதைப்பார்கள்; கேடுகளை வளர்ப்பார்கள்
தொத்துகிற நோயாவார்; துரத்துகிற நஞ்சாவார் !
இத்தரையில் குற்றமுள்ளோன் என்றறிந்தால் அதன் பொருட்டு
வழக்காட ஒருநாளும் வழக்குமன்றம் செல்லேன் நான் !"[23]

என்ற முடிவுக்கு வருகின்றார்.

20. மேலது, ப. 103
21. மேலது, ப. 104
22. மேலது, ப. 108
23. மேலது, ப. 118

**'மாமனிதன்'**

உடல் வலிமை மிகுந்த பீமண்ணன் புகழ்பெற்ற ஒரு குத்துச் சண்டை வீரன். அவனைத் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளத் துடிக்கின்றார் ஒரு செல்வந்தர். அவனைக் கொண்டு வாணிகத்தில் தனக்குப் போட்டியாக இருக்கும் பகைவனுடைய பொருள்களுக்குத் தீ வைக்க வேண்டு மென்பது அவருடைய திட்டம். ஆனால் நல்ல உடம்பைப் போலவே நல்ல உள்ளமும் அமையப் பெற்ற பீமணன்,

"சுட்டெரித்த என்சாம்பல் தொடமறுக்கும் உம்பணத்தை !
பீரங்கி வந்தாலும் பிளக்காத நெஞ்சமையா !
யாரென்று நினைத்தீர்கள் ? அடக்கமாய்ப் பேசுங்கள் !
உயரத்தில் இருப்பவரே, உமக்கிந்தக் கெடுமதி ஏன் ?"[24]

என்று கேட்கின்றான். அவனை,

"பாருக்கே நீர்ஓர் படிப்பினை ஆனீர் !
மலைகளும் வியக்கும் மாமனி தரே,
நிலவும் புகழுடன் நிலத்திலே வாழ்கவே !"[25]

என ஊரே வியந்து பாராட்டுகிறது.

**'தன்மானம்'**

அன்பு வண்ணன் துணிக் கடையில் பணிபுரியும் ஓர் ஏழை, அன்போடு மனைவியை அழைக்கின்றான். அவளோ பேசாமல் இருக்கின்றாள். மீண்டும் கொஞ்சு மொழியில் மனைவியை அணுகுகின்றான். அவள்,

"எத்தனையோ மனக்குமுறல் ! எத்தனையோ துயர்க்கடல்கள் !
நித்தமிங்கு நிலவுவதைச் சற்றேனும் நினைத்தீரா ?"[26]

எனக் கேட்கின்றாள். அவளுக்கு மகிழ்வூட்ட முதலாளியிடம் பணிந்து கெஞ்சி மூலையில் கிடந்த சேலையொன்றைத் தவணையில்வாங்கி வருகின்றாள். தன் கணவனுடைய மானமே பெரிது எனக்கூறி அச்சேலையைத் திருப்பிக் கொடுத்துவிடச் சொல்லுகின்றாள். பெருமிதங்கொண்ட கணவனும்,

24. மேலது, ப. 129
25. மேலது, ப. 135
26. மேலது, ப. 137

> "தன்மானம் காத்தவளே, தடையின்றிப் புறப்பட்டேன்
> சேலையினை இப்போதே திருப்பிக் கொடுக்கின்றேன் !"[27]

என்று சொல்லிப் புறப்பட்டுப் போகின்றான்.

**'சொல்லும் சுவையும்'**

சுவை குறைந்த உணவுச்சாலையின் பணியாட்களைத் தன் சொல் நயத்தினால் மாற்றுகின்ற மதிமாறனை இந்நாடகத்தில் காண்கின்றோம். மிகவும் எளிமையான கதைக்கருவினைக் கொண்ட இந்நாடகம் உணவுச்சாலைகள் நடத்தும் முதலாளிகளுக்கும் அங்குப் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், பொது மக்களுக்கும் மிகுந்த பயன் விளைவிக்குமென நம்பலாம்.

**'தண்டனை'**

'உலகநாதனின் கவிதைகள் ஐந்தாம்தொகுதி'யாகிய 'அமுத கலயத்தில்' இடம்பெறும் 'தண்டனை' வரலாற்று ஓரங்க நாடகமாகும். மனோன்மணீய நாடகத்தைப் படித்தபோது ஏற்பட்ட மன எழுச்சியும் சிலம்பின் வஞ்சிக்காண்ட நிகழ்ச்சியும் இந்நாடக ஆக்கத்திற்குத் துணையாயின என்று முன்னுரையில் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

செங்குட்டுவனும் இளங்கோ வேண்மாளும் இலவந்திப் பள்ளி வெள்ளி மாடம் விட்டு வந்து மலைவளம் கண்டு களிக்கின்றனர்.

> "தண்சுனை நீரைத் தன்பிடி உண்ண
> எண்ணிடும் களிறோ எவ்விதம் துதிக்கையை
> உண்ணுதல் போன்றும் உறிஞ்சுதல் போன்றும்
> பண்ணிடும் பொய்ச்செயல் பார் ! பார் !"[28]

எனச் சேரன் வேண்மாளுக்குச் சில காட்சிகளைக் காட்டி உவப்பூட்டுகின்றான். வேட்டுவர் மலைவிளை பொருட் குவைகளை மன்னவர்க்கு அளிக்கின்றனர். வேடுவன் ஒருவன் கண்ணகி மலைநாடு வந்து விண்ணகம் புகுந்த புதுமையைத் தெரிவிக்கின்றான். அவண் நின்ற சாத்தனார் கண்ணகி கதையினை முழுமையும் புகலுகின்றார். காவா நாவின் கனக விசயரைப் போரில் வென்று கண்ணகிக்குக் கல்லெடுத்துக்

27. மேலது, ப. 151
28. மு. உலகநாதன், அமுதக் கலயம், ப. 47

கொணர்ந்த நிகழ்ச்சியோடு கதை முடிகின்றது. தமிழரசரை இகழ்ந்த ஆரிய அரசர்க்குக் கற்புக் கண்ணகியின் சிலை சுமத்தலே தண்டனையாகும் என்பதைச் சேரன்,

"........................... பைந்தமிழ்ப் பாவை
படிமம் தூக்கின் பழியும் மறையும்!
போ! போ! 'தண்டனை' புதுவிதம் செல்! செல்!"[29]

எனக் குறிப்பிடுகின்றான்.

இக்கவிதை நாடகத்தில் கனகவிசயர் விருந்துக் காட்சியைத் தவிரச் சிலப்பதிகார நிகழ்ச்சி அப்படியே கவிதை உரையாடலாக அமைந்துள்ளது.

## 'நெடுங்கிள்ளி'

'உலகநாதன் கவிதைகள்' தொகுதியில் 'நெடுங்கிள்ளி' என்ற வரலாற்று ஓரங்க நாடகம் இடம்பெறுகின்றது. ஒரே குடியில் தோன்றிய சோழமன்னர்களான நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் பகைமை ஏற்படுகின்றது. நலங்கிள்ளி உறையூரையும் நெடுங்கிள்ளி ஆவூரையும் முறையே தலைநகராக்கி ஆண்டு வருகின்றனர். ஆவூர் தமக்கே உரியதென நலங்கிள்ளி முற்றுகையிடுகின்றான். ஆவூர்க் கோட்டையை அடைத்து நின்ற நெடுங்கிள்ளியின் பால் பரிசில் வேண்டி வந்த புலவன் இளந்தத்தனை ஒற்றனென ஐயுற்றுச் சிறைப் படுத்துகின்றான். கோவூர்கிழார் தலையிட்டு நெடுங்கிள்ளிக்கு அறநெறிகளை எடுத்துரைத்து இளந் தத்தனைச் சிறைவீடு செய்கின்றார்.

நலங்கிள்ளி தம் நாட்டை முற்றுகையிட்ட நெடுங் கிள்ளியைத் துரத்தியடித்துக் காரியாற்றில் கொலை செய்கின்றான்.

"நிலமகள் அவனுடன் நித்திரை கொள்ளவே
கொலைப்படச் செய்தாள்"[30]

எனப் புலவர்கள் கண்ணீர் வடிக்கின்றனர். எஞ்சா மண்ணாசை கொண்ட வேந்தன் அழிந்தான் என்று நாம் நினைக்கின்றோம். ஆனால் நாடக ஆசிரியர்,

29. மேலது, ப. 60
30. உலகநாதன் கவிதைகள், ப. 12

"மேவிய சிறப்பின் நெடுங்கிள்ளி மேன்மை
நிலமெலாம் பரவுக ! நீடுபுகழ் வாழ்கவே !"[31]

என வாழ்த்தி முடிக்கின்றார்.

**'கனகை'**

இராமாயணத்தில் வரும் கும்பகருணன், தெளிவும் திடனும் அஞ்சாமையும் வஞ்சகமின்றிக் கடனாற்றும் பண்பும் செய்ந்நன்றி அறிதலும் மிகப்பெற்றவன். அப்பாத்திரப் படைப்பில் ஈடுபாடு கொண்ட ஆசிரியர் அவனையே மையமாக்கிக் 'கனகை' என்ற கவிதை நாடகத்தை வடித்து, இது போன்று இராமாயணத்தின் பல கட்டளைகளைக் கவிதை நாடகமாக அமைத்தற்கு வழிகாட்டியுள்ளார்.

கும்பகருணனின் வீரச்சாவும் அவன் மனைவி கனகையின் அவலமுடிவும் நம்மை ஆட்கொள்ளுகின்றன. இராமாயணக் கதையில் வரும் கனகை, கும்பகருணன் அளவுக்கு ஏற்றிப் படைக்கப்பட்ட பாத்திரமாய்த் தெரிய வில்லை. ஆனால் இக்கவிதை நாடகத்தில் வரும் கனகை, கும்ப கருணனோடு எல்லா வகையிலும் ஒப்ப வைத்து எண்ணத் தக்க பொருத்தமுடையவளாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறாள். அவளுடைய உயிர்த்தோழியராய் வரும் வாமையும் கேதகை யும் ஆசிரியரால் படைக்கப்பட்ட புதிய கதை மாந்தர்கள். நாடகத்தில் இடையிடையே வரும் இனிய இசைப்பாடல் களைக் கொண்டு ஆசிரியருக்கு இருக்கின்ற இசைக்கலை ஆர்வத்தைத் தெரிந்து கொள்ளலாம். அவ்விசைப் பாடல்கள் அளவில் மிகுதியாக இருப்பினும் அவ்வக் காட்சிப்பின்னணிக் கும் கதை மாந்தரின் மனநிலைக்கும் ஏற்ற வண்ணமாக உள்ளன. "இது படித்துச் சுவைக்க வேண்டிய நாடகமாதலால் இசைப்பாடல்கள் தடையாவது எங்ஙனம்?"[32] என்பதன் மூலம் இக்கவிதை நாடகம் படித்துச் சுவைத்தற்கு மட்டுமே உரியது என்பது பெறப்படும். கம்பன் கையாண்ட சொற்களும், கருத்துகளுமே ஈண்டு உரையாடற் பகுதிகளாகத் தீட்டப் பெறுகின்றன.

"பொன்றுதல் வந்ததிப் புகழும் போனதோ ?
வன்றிறல் ஆட்சியோர் வரம்பைத் தொட்டதோ ?
நன்றல வென்றுநான் குறித்ததும் வறியதோ ?

31. மேலது.
32. கா. அரங்கசாமி, முன்னுரை, கனகை, ப. 4

**கொன்றொழி நெறியிதைக் குறித்ததென் ? அறத்தினை**
**உன்வழி யாக்குதல் கூடுமா ?[33]**

எனும் உரையாடற் பகுதி "ஆனதோ வெஞ்சமம்... ..." என்னும் கம்பன் கவிதையையே எதிரொலிக்கின்றது.

கா. அரங்கசாமி, கம்பன் கவிதையிலும் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீய நாடக அமைப்பிலும் இருந்த தோய்வை முதலாக வைத்து மொழிப்போக்கிலும் சுவைநிலையிலும் அவர்வழி நின்று தமிழ்த்தாய்க்கு ஒரு புதிய அணியைச் சூட்டியுள்ளார்.[34]

## பால்மதி

பம்மல் சம்பந்த முதலியாருடைய நாடகங்களை ஆய்வு செய்து முடித்த ஏ.என். பெருமாள் 'பால்மதி'யைப் படைத்துள்ளார். ஓர் ஆய்வாளன் சிறந்த படைப்பாளனாகவும் விளங்க முடியும் என்பதனை இந்நாடகத்தின் மூலம் மெய்ப்பித்துக் காட்டி இருக்கின்றார். காதலுக்குக் குழிபறித்துத் தீங்கிழைக்கவும், உரிமையுள்ள சொத்தைப் பறித்துக் கொள்ளவும் திட்டமிடும் தீயோர் முயற்சிகளைக் கதைத்தலைவன் தோல்வியுறச் செய்கின்றான். இடையில் சிற்றன்னை கொடுமை என்ற சிக்கலும் வருகின்றது. இன்றைய வாழ்க்கைச் சிக்கலைத் தம் பட்டறிவுடன் ஆசிரியர் சித்திரித்துக் காட்டி வெற்றி பெற்றிருக்கின்றார். சூழ்ச்சியினைப் புரிந்து கொண்டு வீரத்துடனும் விவேகத்துடனும் செயல்படுகின்ற இக்காலப் புதுமைப் பெண்களை இந்நாடகத்தில் காண்கின்றோம். மேலாளருடைய காமக் கண்களில் சிக்கிய முரண் மிகுந்த பாத்திரமாகிய வளலி தன் சூழ்ச்சியால் தொடக்கத்தில் வெற்றி பெற்றாலும் அவள் எதிர்பார்த்தபடி அவளுடைய ஆசை நிறைவேறாது போகவே நஞ்சுண்டு தற்கொலை செய்து கொள்ளுகிறாள். அவளால் ஏற்பட்ட குழப்பங்கள் அவள் எழுதிய கடிதத்தினாலும் அவளுடைய தற்கொலையினாலும் தெளிவாகின்றன.

அடுக்கடுக்கான நிகழ்ச்சிகளையுடைய இவ்வின்பியல் நாடகத்தில் முருகன் என்ற கதை மாந்தனை இறுதியில் புகுத்தி, எப்போதோ ஓடிப் போன கதிர்வேலனாக்கிக் காட்டி ஆசிரியர் முடித்துள்ளார். நல்லவர்களைக் காப்பாற்ற முயன்று

33,. கா. அரங்கசாமி, கனகை, ii: 3: 85–89
34. கா. மீனாட்சி சுந்தரம், வாழ்த்துரை, கா. அரங்கசாமி, கனகை

அக்கடமையில் வெற்றி பெற்ற முருகனும் பைங்கொடியும் நம் நெஞ்சில் நிற்கின்றனர். இந்நாடகத்தில் 'கதைமாந்தர்களின் பெயர்களே நல்ல குறியீடுகளாக அமைகின்றன. பால்ராசு, முருகன், வளர்மதி, பைங்கொடி போன்றவை நல்மனம் காட்டும் பெயர்கள், உலுத்தன், இகலன், போத்தன், கல்மதி போன்றவை இருள்மனம் காட்டும் குறிகள். எனினும் மனிதன் வளர்வும் தேய்வும் பால்மதியின் பான்மை கொண்ட நிலையை இந்நாடகம் வெள்ளிடை மலையாக விளக்குகின்றது'[35]

இச்சமூக நாடகத்தில் பயின்று வரும் தனித்தமிழ் உரையாடல்கள் நறுக்குத் தெரித்தாற் போல் அமைந்துள்ளன என்பதைப் பின்வரும் நாடகப் பகுதியால் அறியலாம்.

| | | |
|---|---|---|
| "போத்தன் | : | வாடீ கண்ணே ! வளலிப் பெண்ணே ! |
| வளலி | : | நாடி வருவ னாளைக் காலையே ! |
| போத்தன் | : | ஊடி விடுவே னுவந்து வருவாய் ! |
| வளலி | : | ஊடல் காமத் தின்பம் ! |
| போத்தன் | : | அதற்கு ? |
| வளலி | : | கூடி முயங்கப் பெறலே ! |
| போத்தன் | : | கண்ணே ! |
| வளலி | : | அரிய செயலை யாற்றி முடித்த<br>பெரிய நிலையைப் பெற்றீர் !<br>உரிய முறையி லுவகை யளிப்பேன் !"[36] |

## கவிதாஞ்சலி

தேசிய ஒருமைப்பாட்டுக்குக் கண்ணதாசன் செலுத்தும் அஞ்சலியாகக் கவிதாஞ்சலி நாடகம் அமைந்துள்ளது. இஃது ஒரு நாட்டிய நாடகம் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது. பதினான்கு மொழிகளுக்கும் பதினான்கு பெண்களை உருவகப் படுத்திக் கவிஞர் அறிமுகப்படுத்துகின்றார். தமிழ்த்தாய் வாழ்த்தும் அதனைத் தொடர்ந்து 'சிரித்த முகம்காட்டி' என்று தொடங்கும் பாட்டும் முடிந்த பின் கவிஞரே மேடையில் தோன்றுகின்றார். அவரே ஒரு கதை மாந்தனாக அமைந்து இந்நாட்டிய நாடகத்தின் அடிக்கருத்தை விளக்கிக் காட்டுகின்றார்.

35. தா. வே. வீராசாமி, அணிந்துரை, ஏ.என். பெருமாள், பால்மதி, ப. X
36. ஏ.என். பெருமாள், பால்மதி, II:1: 442–456

"மொழிபதி னான்கென முளைத்தநம் நாட்டின்
வழிமுறை கூறவும் வாழ்வில் அனைவரும்
ஒன்றெனக் கூறும் ஒருமைப் பாட்டினை
நாட்டிய வழியில் நாட்டிக் காட்டவும்
பாட்டியல் முறையில் பாடிக் காட்டவும்
ஆக்கிய கவிதை அஞ்சலி தானிது!"[37]

*முதலில் வருகின்ற காசுமீரத்துக் கன்னி அந்நாட்டின் இயற்கையெழிலைப் பாடுகின்றாள். அடுத்துவரும் அசாமியப் பெண் நாட்டின் அழகொடு எல்லையில் இருக்கும் பகையினை யும் சுட்டிக்காட்டுகின்றாள். வங்காளப்பெண் தன் தாய் நாட்டை*

"சித்த ரஞ்சனின் தியாக மண்டலம்
அரவிந்த முனிவரின் அன்புத் தாயகம்"[38]

*என்று போற்றுகின்றாள்.*

*ஓரிசாப் பெண் சோழமண்டலத் தளபதி கருணாகரன் சிறப்பையும், களம்பலகண்ட அசோக மன்னன் புத்தனடி சேர்ந்த பெருமையையும் கூறுகின்றாள். அடுத்து வருகின்ற மராத்தியப் பெண்ணைச், "சிறுமதி யாளரைப் புறமுது கோட்டிய சிவாஜி மகளே"[39] என வாழ்த்திக் கவிஞன் ஆடப் பணிக்கின்றான். 'இந்திப் பெண்ணை' அறிமுகம் செய்வதன் மூலம் கவிஞர் தம் மொழிக் கொள்கையையும் அரசியல் கொள்கையையும் வெளிப்படுத்துகின்றார். சொற்கள் மிக எச்சரிக்கையாக வந்து விழுகின்றன.*

"புதியபா ரதத்தின் பெரிய சகோதரி
அன்பால் பிறரை அணைக்க மறந்து
அவசரங் காட்டி ஆத்திர மூட்டி
ஆளுங் கட்சியை அவதிக் குள்ளாக்கிய
அழகு மயிலே!"[40]

*என வாழ்த்தி 'ஆடுக மெதுவாய்' எனத் தம் உள்ளக்கிடக்கை யைப் பக்குவமாகப் புலப்படுத்துகின்றார். 'படைவீரர் விளையாடும் பெரிய தேச'மான பஞ்சாபையும், 'காந்தி மகான்*

37. கண்ணதாசன், கவிதாஞ்சலி, ப. 10
38. மேலது, ப. 16
39. மேலது, ப. 19
40. மேலது, ப. 20

தனைப் பெற்ற' குசராத்தையும், 'கோதாவரி கிடக்கும்' தெலுங்கு நாட்டையும், 'திப்புசுல்தான் பகைகடிந்த' கன்னட நாட்டையும், 'சிலம்புசெய்த சேரன்தம்பி பிறந்த' மலையாள நாட்டையும், அந்தந்த நாட்டு மங்கையர் பாடுகின்றனர்.

பொங்கும் தமிழ் மரபில் வந்த தமிழ்ப்பெண்,

"பொன்னும் நாடார் பொருள் நாடார்
பொய்சொல் வோரின் துணைநாடார்
தன்னலம் நாடார் தனைநாடார்—அந்தத்
தலைவன் பிறந்த பூமியடி"[41]

எனக் காமராசர் புகழ் பாடுகின்றாள். உருதுச் சகோதரியும் வடமொழி மங்கையும் ஆடி முடித்தபின் மற்ற பன்னிரு பெண் களும் சேர்ந்து பாடியாட நாடகம் முடிகின்றது.

காட்சிகளைத் தனித்தனியே அமைத்துக் காட்டாமல், விளக்கு அணைதலைக் காட்சியின் முடிவாகவும் மீண்டும் விளக்கு எரிதலை மறுகாட்சியின் தொடக்கமாகவும் அமைத்து ஒரு புதிய நாடக உத்தியை ஏற்படுத்தியதன் மூலம் கவிஞர் தம் தனித்திறனை நிலை நாட்டிவிட்டார்.

## தர்மம் எங்கே ?

உரையாடலும் இசைப்பாடலும் கலந்த ஒரு தத்துவ நாடகமும் 'கவிதாஞ்சலி'யில் இடம் பெற்றுள்ளது. 'உலகத்தில் எல்லாம் வெளிச்சத்தில் இருக்கின்றன. அதனால் தர்மம் இருட்டிலே இருக்கிறது' என்று பண்டிட் சுதர்சன் எழுதிய ஒரு குறிப்பை மையமாகக் கொண்டு இது வரையப் பெற்றது.[42]

"இருப்பவனுக்கு உலகம் கையளவு; இல்லாதவனுக்குக் கையே உலகளவு"[43] எனும் பொருளாதாரத் தத்துவமும்,

"உடலூரில் வாழ்ந் திருந்தேன்
உறவூரில் கலந் திருந்தேன்
கருவூரில் குடி புகுந்தேன்
மண்ணூ ரில் விழுந்து விட்டேன்
கண்ணூ ரில் வளர்ந் திருந்தேன்
கையூரில் தவழ்ந் திருந்தேன்

41. மேலது, ப. 28
42. மேலது, முன்னுரை, ப. 3
43. கண்ணதாசன், மு.நூ. ப. 48

காலூ ரில் நடந்து வந்தேன்
காளையூர் வந்து விட்டேன் !"[44]

"கீழூரில் வாழ்வ தற்கும்
கிளி மொழியாள் இல்லையடா !
மேலூரு போவ தற்கும்
வேளை வர வில்லையடா !"[45]

எனப் பிறப்பு, வளர்ப்பு, இறப்புத் தத்துவங்களும் இந் நாடகத்தில் குறிப்பாக இடம் பெறுகின்றன.

**'வெண்புறா'**

கவிதாஞ்சலியில் இடம் பெறும் 'வெண்புறா' எனும் நாடகம் கலிங்கப் போரில் அசோகன் பெற்ற மனமாற்றத்தைக் கூறுவதாகும். வெண்புறா அமைதியின் சின்னம் என்பது ஈண்டு நினைவிற் கொள்ளத் தக்கது. அமைதி எந்நாட்டவர்க்கும் எக்காலத்தும் வேண்டிய ஒன்று எனும் உண்மையை அடிக் கருத்தாக்கி இந்நாடகம் புனையப்பட்டுள்ளது.

**'சாவிலா வீட்டில்...'**

கண்ணதாசன் கவிதைகள் ஆறாந்தொகுதியில் இடம் பெறும் 'சாவிலா வீட்டில்' என்னும் கவிதை நாடகம் புத்ததேவன் வரலாற்றில் ஒரு நிகழ்ச்சியைச் சுட்டுகின்றது. புத்தர், 'அன்பின் சக்தியே ஆண்டவன் தத்துவம்' எனும் உண்மையைச் சீடர்க்கு உணர்த்துகின்ற பகுதி இந்நாடகத்தின் தொடக்கமாக அமைந்துள்ளது. அங்குத் தலைவிரிகோலமாகப் பதறியபடிக் கிருட்டிணகௌதமி என்ற பெண் இறந்துபோன தன் ஒரே ஆண் மகவைக் கையில் எடுத்துக்கொண்டு ஓடி வருகிறாள். அவளுடைய மனக்குறைபற்றிப் புத்தர் வினவ, அவள் தன் மகன் நாகம் தீண்டி இறந்த செய்தியைச் சொல்லிப் பிள்ளையைப் பிழைக்க வைக்க வேண்டுமென்கிறாள்.

"ஜனனம் உன்வழி
தாயே ! இவனது
மரணம் அவன்வழி !
மற்றிதன் நடுவே

44. மேலது, பக். 44–45
45. மேலது, ப. 45

இவனைத் தருவது
என்வழி யல்லவே !"[46]

எனப் பல்லாற்றானும் ஆறுதல் சொல்லியும் அத்தாய் கேட்ப தாயில்லை.

"அன்னையே நீபோய்
ஊரில் உளவோர்
ஆயிரம் மனையில்
சாவிலா வீட்டில் ...
சாம்பல் வாங்கிவா !
சாம்பல் வந்ததும்
தருகிறேன் உயிரைநான் !"[47]

எனச் சொல்லி அனுப்புகின்றார். 'மரணம் இலாததோர் மனையே காணாதவளாய்த்' திரும்பிய அத்தாய்க்குப் புத்தர் உலக இயற்கையைச் சொல்லி நெறிப்படுத்துகின்றார். இக்கவிதை நாடகம் ஒரே காட்சியாக அமைந்திருப்பதோடு, மின்னல் வேகத்தில் தொடங்கி முடிந்து விடுகின்றது. பள்ளிச் சிறார்களும் எளிய அறிவினரும் படித்தும் நடித்தும் காட்டு தற்குப் பொருத்தமான நாடகம், பண்டிதர் தமிழை ஏழை எளியவரிடம் எடுத்துச்சென்று பரப்பி வெற்றி பெற்றார் கண்ணதாசன் என்பதற்கு இதனைத் தக்கதோர் எடுத்துக் காட்டாய்க் கூறலாம். இவரைப்போன்று வாழ்க்கைத் தத்துவங் களை எளிமையாகவும் அருமையாகவும் எடுத்துரைத்த புலவர்களைக் காண்டல் அரிது.

## தியாகத்தாய்

அரசுதாசனின் 'அழகுமலர்' என்னும் கவிதைத் தொகுப்பில் இடம்பெறும் 'தியாகத்தாய்' வரலாற்று ஓரங்க இசை நாடகமாகும். தமையனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றிய பன்பீரும், அவனது பொல்லாத அமைச்சனும் தமையனின் ஒரே பிள்ளையினையும் கொல்லத் துணிகின்றனர். செவிலியாகிய புன்னா இளவரசனைத் தன் தோழியிடம் கொடுத்துக் காட்டுக்கு அனுப்பிவிட்டுத் தான் பெற்ற குழந்தைக்கு இளவரசனுடைய ஆடைகளைப் பூட்டித் தொட்டிலில் கிடத்துகின்றாள். உருவிய வாளுடன் ஓடிவந்த பன்பீர் சினங்கொண்டு தொட்டிலில் கிடக்கும் குழந்தையைக் கொலை செய்து விடுகிறான். தன் குழந்தையை ஈகம் செய்த

46. கண்ணதாசன் கவிதைகள்–ஆறாந் தொகுதி, ப. 256
47. மேலது

புன்னா, காட்டுக்குச் சென்று மன்னவன் பெற்ற மாணிக்கத்தைக் கண்டு உச்சி மோந்து முத்தக் கனிகளை ஈகின்றாள். ஈகத்தாயான புன்னாவுக்கு அவள் தோழி புகழாரம் சூட்டுகின்றாள்.

மண்ணாசையும் கொலை வெறியுமாகிய இழிந்த உணர்வுகள் விஞ்சி நின்றாலும் இந்நாடகத்தில் வரும் புன்னாவின் ஈகச் செயல் நம் நெஞ்சில் முழுமையாகப் பதிந்து விடுகிறது.

## சூழ்ச்சியின் வீழ்ச்சி

அரசுதாசனின் மற்றுமோர் நாடகம் 'சூழ்ச்சியின் வீழ்ச்சி' ஆகும். இது பாரதக் கதையில் கண்ணன் அருளால் பாஞ்சாலி துர்வாச முனியையும் அவர் சீடர்களையும் பசி தீரச் செய்த நிகழ்ச்சியைக் கூறுகின்றது. துரியோதனனும் சகுனியும் சேர்ந்து செய்த சூழ்ச்சியைக் கண்ணன் வீழ்ச்சியுறச் செய்கின்றான் என்பதே இந்நாடகத்தின் அடிக்கருத்தாகும்.

## காமஞ்சரி

கி.மு. ஆறாம் நூற்றாண்டில் நடந்ததாகக் கூறப்படும் ஒரு பாரசீகக் கதையை, கி.பி. பத்தாம் நூற்றாண்டில் பிர்தோசி (Firdausi) என்னும் பாரசீகக் கவிஞர் 'சோராபின் கதை' எனும் பெயரில் வழங்கினார். இதனைத் தழுவி மாத்யூ அர்னால்டு (Mathew Arnold) 'சோராப்பும் ருஸ்தமும்' (Sohrab and Rustum) எனும் நூலைச் செய்தார். இவ்வாங்கில நூலைத் தழுவியே புலவர் குழந்தை 'காமஞ்சரி' என்னும் வரலாற்றுக் கவிதை நாடகத்தை இயற்றியுள்ளார்.[48] என்றாலும் தமிழ் மரபுக்கேற்ப அதனைத் தமிழ்நாட்டுக் கதையாக்கிச் சொல்லுகின்றார் ஆசிரியர். தமிழக வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு மூலக்கதையில் வரும் இடங்களையும் நடிகர் பெயர்களையும் தமிழாக்கி நாடக வழக்கிற்கேற்பச் செய்துள்ளார்.[49]

48. புலவர் குழந்தை, காமஞ்சரி, முன்னுரை, ப. 5
49. "மேலை நாட்டு வட நாட்டு நாடகங்களைத் தமிழாக்குவது என்பது எளிய செயல் அன்று. ஆங்கில நாடகங்கள் தமிழருக்கு முற்றிலும் புதிய மாறுபட்ட பண்பாட்டினையும் பழக்க வழக்கங்களையும் வெளிப்படுத்தக் கூடியவை. ஆகவே இவற்றைத் தமிழ் மண்ணிற்கேற்ப மாற்றாது உள்ளவாறே கொண்டு தமிழாக்குவது, இந்நாடகங்களைப் படிப்போருக்கு, மருட்சியைத் தோற்றுவிப்ப தாகும்–சக்திப் பெருமாள், தமிழ் நாடகவரலாறு, ப. 275

வடகொங்கு நாட்டை ஆண்டு வந்த பல்வேற்கட்டியின் 'பாடலம்' என்னும் அடங்காக் குதிரையொன்றை நறையூர்க் கிழான் மைந்தனான பழையன் அடக்கிப் பல்வேற்கட்டியின் நன்மதிப்பைப் பெறுகின்றான். மைசூர் நாட்டு வீரகங்கன் தன் படைத்தலைவன் தெற்காணம்பி என்பானைக் கொங்கு நாட்டின் மேல் படையெடுக்கும்படி செய்கின்றான். ஒற்றர் வாயிலாகப் பகைவர் படையெடுப்பை அறிந்த பல்வேற்கட்டி சூழ்ச்சியும் வீரமும் மிக்க பழையன் தலைமையில் பெரும்படை யொன்றை அனுப்புகிறான். பழையன் மைசூர்ப்படையைப் புறங்காட்டி ஓடச்செய்து மீளுகின்றான். வெற்றிவீரனான பழையன் தலைமையில் நாட்டு வடக்கெல்லையான காவிரியின் தென்கரையில் காவற்படையொன்று நிலையாக நிறுத்தப் படுகின்றது.

பழையன் ஒரு நாள் தன் பாடலத்தின் மீதேறித் தென்பாலி நாட்டைச் சென்றடைகின்றான். அந்நாட்டு இளவரசி காமஞ்சரிக்கும் பழையனுக்கும் களிறுதருபுணர்ச்சி நிகழுகின்றது. பின்னர் இரவு ஓரிடத்துத் தங்கியிருக்கும் பொழுது பழையனுடைய பரி, களவு போய்விடுகின்றது. குதிரை கிடைக்கும் வரை பழையன் தென்பாலி நாட்டிலேயே தங்கி விடுகின்றான். அவ்வாறு இருக்குங்காலத்தில் அரண்மனைப் பூங்காவில் காமஞ்சரியும் பழையனும் கண்டு இன்புற்று மணம் புரிந்து கொள்ளவும் முடிவு செய்கின்றனர். அவர்களுடைய காதலை நற்றாய் வழி அறிந்த மன்னன் அவர்தம் திருமணத்தை இனிது நிறைவேற்றி வைக்கின்றான். இந்நிலையில் காணாமல் போன பரியும் கிடைக்கின்றது. சில திங்கள் காமஞ்சரியுடன் தங்கியிருந்து விட்டு உடல் நலமில்லா திருந்த தன் தந்தையைக்காணப் பழையன் புறப்படுகின்றான். அப்பொழுது கருவுற்றிருந்த காமஞ்சரியைப் பார்த்து, 'ஆண் குழந்தை பிறந்தால் நான் என் மகன் என அடையாளங் கண்டு கொள்ள இக்குளிசத்தை அதன் கையில் கட்டி என் நாட்டுக்கு அனுப்பு. பெண்குழந்தை பிறந்தால் இங்கேயே இருக்கட்டும்' எனக் கூறிச் செல்லுகின்றான்.

காமஞ்சரிக்கு ஆண் குழந்தையே பிறக்கின்றது. குழந்தையைப் பிரிய மனமில்லாதவளாய்த் தனக்குப் பெண் குழந்தை பிறந்துள்ளது எனப் பொய்ச் செய்தி விடுக்கின்றாள். குழந்தைக்குக் 'கொங்குவேள்' எனப் பெயர் சூட்டி வளர்க்கின் றாள். வட கொங்கு நாடடைந்த பழையன் எதிர்பாராத வகையில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் காமஞ்சரியைப்பற்றிக்

கவலை இல்லாதவனாய்க் கடமையாற்றுகின்றான். கட்டிளங் காளையாக வளர்ந்துவிட்ட கொங்குவேளிடம் காமஞ்சரி உண்மையைக் கூற நேருகின்றது.

பொறாமை கொண்ட புதிய படைத்தளபதி மழவன் சூழ்ச்சியால் பழையன் பதவி இழந்து நறையூர் சென்று அமைதியாக இருந்து வருகிறான். பல்வேற் கட்டிக்கும் வீர கங்கனுக்கும் மீண்டும் போர் மூளுகிறது. இச்சமயத்தில் நாட்டுப்பற்று மிக்க பழையன் போரில் கலந்து கொள்ளுகின் றான். தனிப்போருக்கு அறைகூவல் விட்ட கொங்குவேளைக் களத்தில் சந்திக்கின்றான். ஒருவரையொருவர் கண்டதும் தந்தை மைந்தன் என்ற அன்புணர்ச்சி உண்டாகிறது என்றாலும் விரைவில் மோதிக் கொள்ளுகின்றனர். கொங்கு வேள் ஒரு தண்டினால் தாக்க நிலைகுலைந்த பழையன் கீழே விழுகின்றான். விழுந்தவன் ஒரு கணப்போதில் வெகுண்டெழுந்து 'நான் பழையனா!' என இடி போல முழங்குகின்றான். கொங்குவேள், இப்பெயரைக் கேட்ட மாத்திரத்தில் உணர்விழந்து படைக்கலங்களைக் கீழே போட்டு விடுகின்றான். பழையன் அவன் மார்பில் ஈட்டியைப் பாய்ச்சி விடுகின்றான். 'எந் தந்தை பழையன் இதனைக் கண்டால் பழிவாங்காது இரார்' என்று கொங்குவேள் கூற தனக்கு மகன் இல்லை என்கிறான் பழையன். கொங்குவேள் தான் கட்டியிருந்த குளிசத்தைக் காட்ட அவன் தன் மகனே என்பதை அறிந்து துடிதுடித்துப் பழையனும் தன் உயிரை மாய்த்துக் கொள்ள முனைகின்றான். அவனை மகன் தடுத்து விடுகின்றான். தந்தையும் மகனும் தாமே எதிர்த்துப் போர் புரிவர் என்று ஐயுற்ற காமஞ்சரி அவ்வேளை போர்க்களம் வந்து சேருகிறாள். தந்தையையும் தாயையும் இணைத்து வைத்து விட்டுத் தான் பிறவிப்பயனை அடைந்துவிட்டதாகக் கூறிக் கொங்குவேள் இறக்கின்றான்.

எட்டுக் களங்களையும் நாற்பத்தொரு காட்சிகளையும் கொண்ட இப்பெரு நாடகத்தில் நிகழ்ச்சிகள் செறிவாக இருந்தாலும் கதை முரண் (Conflict) வலிமை உடையதாய்த் தோன்றவில்லை. கதைத்தலைவி தன் மகனைக் கணவனிடம் அனுப்பி வைக்கவில்லையென்றாலும் பிறந்திருப்பவன் ஆண் பிள்ளை எனும் செய்தியைச் சொல்லி அனுப்பியிருக்கலாம். நாடகத்தின் இறுதிக்கட்டத்தில் வஞ்சகத்தால் விரட்டியடிக்கப் பட்ட பழையன் தாய் நாட்டுக்காகப் போரிட வந்தான் என்பதும், தனிப்போர் என்ற பேரில் உண்மையை மறைத்து

*மகனிடமே மோதினான் என்பதும் நம்பகத் தன்மையை அளிக்கவில்லை. கதை முரண் இயற்கையாக அமையவில்லை. இக்குறைகள் இருந்தபோதும்,*

"இருபகை நாட்டின் எல்லையா யமைந்த
வருபுனற் காவிரி மடக்கொடி! இன்றோ
இருகரை யுதிர்தரு மரமுதிர் மலரும்
பொலந்தொடி மகளிர் கலைந்தெறி மலரும்
ஆடிடு மகளிர் கூடிடு கலவையும்
தேனிமிர் குழலார் மேனியார் விரையும்
வஞ்சியர் பூசிய மஞ்சமும் பிறவும்
கமழ்தரப் பளிங்கின் இமிழ்தரு நன்னீர்
ஆடினை பண்ணை ஓடி யாடி
இன்புறு கின்றனை தென்புறு பாவாய்!"[50]

*என வரும் இயற்கை வருணனைகளும்,*

"கிடுகிடு கிடுவென உடுவுதிர் படமுக
டுடைபடு முடனென வெடிபடு பிடியென
அடிமுர சடிசெவி படுகுது வானை
எடுபுதி தாடை உடுதலை வாரி
விடுகழல் அடியில் தொடுசெலெ னவிடை
கொடுமென தன்னாய்! அடுகள நோக்கிக்
கடுகியே சென்று முடுகிமுன் நின்று
அடையலர் படையடி யொடுபட
முடிதரு வாகை யொடுவரு வேனே"[51]

*என வரும் போர்க்கள வருணனைகளும் நம் சிந்தையைக் கவருகின்றன.*

*செந்தமிழ் நடையிலமைந்த இந்நாடக நூலுக்கு நூலாசிரியரே எழுதிய நீண்ட குறிப்புரையும் உள்ளது. இது போன்ற குறிப்புரை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிற நாடகங்களில் காணப்பெறவில்லை என்பதும் ஈண்டுக் கருதற் பாலது.*

"எந்தமிழ்ப்பண் பாடுறநாட் காலை யெழுவோம்–புலத்
தேரினாற் பழந்தமிழ் வயலையுழு வோம்
செந்தமிழ்ச்சம் பாவிதையைத் தெள்ளி யெடுப்போம்–நறுந்

50. புலவர் குழந்தை, மு.நூ. 8:28: 52–61
51. மேலது, 2: 8: 92–100

தீந்தொடையாப் பாருமணிச் சேற்றில் நடுவோம்
முந்துறநன் னீர்பாய்ச்சிக் காத்து வருவோம்–அயல்
மொழிச்சொற் களைகளைக் களைந்தெறிகு வோம்
வந்தவிருந் தாளிகட்குச் சிந்தை மகிழ–நால்
வகைச்செய்யு ளாந்தமிழ்ச்சோ றாக்கிப்படைப் போம்"[52]

என, வயலுக்கும் தமிழுக்கும் சிலேடை அமைத்துச் சிந்து நடையில் உழவர் உரையாடும் பகுதியில் நாடக ஆசிரியனின் உள்ள வெளிப்பாட்டைக் காணுகிறோம்.

சிறுபான்மை வெண்பா, கலிப்பா, சிந்து முதலிய பாவகைகளையும் பெரும்பான்மை ஆசிரியப்பாவையும் பயன் படுத்திச் சுவைகுன்றாமல் நாடகத்தைத் தீட்டியுள்ளார். தமிழ்க் கவிதை நாடக வரலாற்றில் காமஞ்சரி மிகவும் குறிப்பிடத் தக்கது என இரா. குமரவேலன் தமது ஆய்வுரையில் சுட்டியுள்ளார்.[53]

## வேங்கையின் வேந்தன்

த.அ. சுந்தரராசன் இயற்றிய வரலாற்றுக் கவிதை நாடக மாகிய 'வேங்கையின் வேந்தன்' பேராசிரியர் பெ. சுந்தரம் பிள்ளையின் மனோன்மணீயத்தோடு ஒருங்கு வைத்து எண்ணு மளவுக்குச் சுவைகளும், கற்பனை உவமை முதலிய நயங்களும் அமைந்து திகழுகின்றது.[54] விசயாலயனை வேங்கையின் வேந்தனாகப் படைத்துள்ள இந்நாடகம் படிப்பதற்கும் நடிப்பதற்கும் ஏற்றது.

விசயாலயனுடைய மதியமைச்சர் கொடும்பாளூர் வேளிர் மன்னன் கருத்துப்படி இளவரசன் ஆதித்தனையும் முத்தரையனையும் பாண்டி நாட்டுக்கு ஒற்றர்களாக விடுக்கின்றார். அவர்கள் முறையே வாணன், வேலன் என்னும் புனை பெயர்களோடு அந்நாடு சென்று கவிஞர் சேந்தனாரிடம் தமிழ் பயிலுகின்றனர். பாண்டிய மன்ன னுடைய தங்கை மகரதேவி வாணனையும், புலவர் மகள் தேன்மொழி வேலனையும் காதலிக்கின்றனர். ஆதித்தன் மகர தேவி மேல் தனக்குக் காதல் இல்லை என்பதைத் தெளிவாக்கிய பின்னும் அவள் மனம் மாறவில்லை. பாண்டிய

52. மேலது, ப. 70
53. இரா. குமரவேலன், கவிதை நாடகம் ஒரு கண்ணோட்டம், ப. 43
54. சி. பாலசுப்பிரமணியம், மதிப்புரை, த.அ. சுந்தரராசன், வேங்கையின் மைந்தன், ப. 111

மன்னனைக் கொல்ல முயன்ற வாணனும் வேலனும் மகரதேவியினால் சிறைபிடிக்கப்பட்டுப் பின் சோழநாட்டுக்கே அனுப்பப்படுகின்றனர். இதற்கிடையில் பல்லவன் மகளை ஆதித்தனுக்கு மணம் முடிக்க விசயாலயன் இசைந்து விடுகின்றான். ஆனால் ஆதித்தனோ இராட்டிரகூட மன்னன் மகளாகிய இளங்கோப்பிச்சியைக் காதலிக்கின்றான். ஆதித்தனைக் கொலை செய்வதற்காகப் பாண்டியன், மகர தேவியை அனுப்புகின்றான். ஆனால் அவளோ ஆதித்தனைப் பல ஏதங்களிலிருந்தும் காப்பாற்றுகின்றாள். இந்நிலையில் பாண்டியருக்கும் சோழருக்கும் பெரும்போர் மூளுகிறது. அப்போரில் மகரதேவி கொல்லப்படுகின்றாள். பாண்டியன் தோற்றோடி விடுகின்றான். போர் நடக்கின்ற சமயத்தில் கொற்றவை மண்டபத்திலிருந்த இளங்கோப்பிச்சியைக் கொல்லச் சூழ்ச்சி நடக்கிறது. அவள் கொற்றவையின் வேலைக் கொண்டே தன்னைக் கொல்ல வந்த தீயோனைக் கொன்று விடுகின்றாள். முடிவில் ஆதித்தனுக்கும் இளங்கோப்பிச்சிக்கும் நன்மணம் நடைபெறுகின்றது. முத்தரையன் தேன்மொழியை மணக்கின்றான்.

தமிழில் சிறந்து விளங்கும் கவிதை நாடகங்களுள் ‘வேங்கையின் வேந்தன்’ தனிச் சிறப்புப் பெற்றுள்ளது. கதைக் கருவிலும் கதைப் போக்கிலும் சிறந்து விளங்குகின்றது. இதனுள் பஃறொடை வெண்பா, நேரிசை ஆசிரியப்பா, எண்சீர் விருத்தம், மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆகிய செய்யுள் வகைகள் விரவி வந்து செவிக்கு இன்பம் பயக்கின்றன. மனோன்மணீயத்தை மற்ற கவிதை நாடகங்கள் பின்பற்ற முனைந்தன. அவ்வாறன்றி இந்நாடகம் தனித்தன்மை யோடு விளங்குகின்றது.

நாடகம் முழுவதும் வீரச்சுவை விஞ்சி நிற்கின்றது. ‘வீசு கத்திக்கு விழி இமைக்கா’ வீரனாகவும், ‘தொண்ணூற்றாறு விழுப்புண்களை மார்பில் தாங்கிய கோலத்தானாகவும் ‘வீரத்தைக் காதலித்துச் சாவை மண’க்கின்ற வீரர்தம் தலைவ னாகவும் கதைத் தலைவன் காட்டப்படுகின்றான். அவனை, ‘ஈட்டிமுனை புண்ணால் இசை வரைந்த மார்பினன்’ எனப் போற்றுகின்றனர். அவனுடைய வெற்றி வாளை,

> ‘முத்தரையர் முற்காத்த தஞ்சை முழுமலரைக்
> கொத்தோடு கொத்திவந்த போதினில்நான் உம்தனித்த
> வாள்வீச்சைக் கண்டிருந்தேன்.”[55]

55. த.அ. சுந்தரராசன், வேங்கையின் வேந்தன் i:1 101–103

எனவும்,

"மார்தட்டி வந்துநின்ற மாறவர்மன் மற்றும்வாள்
கூர்தட்டி வீழ்ந்தான் குளிரரிசில் ஆற்றருகே"[56]

எனவும் வேளிர் பாடுகின்றார். இத்தகைய வீரம் பொருந்திய விசயாலயன் கைக்குள் அடங்கும் காவிரி நாட்டைக் கடலுக் கடங்கா நாடாய் விரிக்கின்றான்.

"கோழைகள் கூடஇச் சோழ மாளிகையின்
காற்றை ஒரேமுறை ஏற்றால் போதும்
வீரனாய்ச் செல்வார்; இல்லை யேல் சாவார்!"[57]

என்பதன் மூலம் சோழரின் வீர உணர்வை அறிகின்றோம்.

சோழரைப் போலவே பாண்டியரும் வீரம் மிக்கவர்கள். பகைவர் பெயரைச் சொன்னால் பாண்டி நாட்டில் 'சூலுள் வாழும் கருவும் வாள் எடுக்குமாம்'[58] பாண்டியர்கள் கைவாள்முன் தலை காட்டினால் கூடத் துண்டித்துவிடுவாராம். மொத்தத்தில் "வீரர் இறந்திடலாம்; வீரம் இறக்காது! பாரில் கதையாகிப் பாட்டில் உயிர் எடுக்கும்"[59] என்னும் வரலாற்றுண்மையை இதன் மூலம் அறிந்து கொள்ளுகின்றோம். இத்தகைய வீரச் சுவையோடு ஆங்காங்கே காதற் சுவையும் கலந்து நிற்கின்றது. தென்றல் எத்திசை நோக்கியும் வீசலாம்; காதலுக்கு நாடு வேலியாகாது என்பதனைப்,

"பகைநிலம் என்பதற் காகப் பயந்து
முகம்காட் டாதோ காதல் முளையும்!"[60]

என வரும் உரையாடற் பகுதி சுட்டுகின்றது.

காவிரி பாயும் சோழவள நாட்டில் 'இட்ட ஓர் நெல் கட்டுக் கதிராகும்'[61] என்பதும், பாண்டி நாட்டில் 'பிறக்கும் பாம்பும் தமிழ் எனப் பேசினால் கொத்தாது; ஆனால் கும்பிடும்!'[62] என்பதும், 'சுவைக் கவிதை ஒலி தொடின்

56. மேலது, 105–106
57. மேலது, V: 37–39
58. மேலது, ii:1: 37–39
59. மேலது, V:5: 67–68
60. மேலது, ii 3:108–109
61. மேலது, i: 1: 17–18
62. மேலது ii: 52–53

தாமரை உடன் பூக்கும்[63] என்பதும், 'யாப்பிலக்கணம் வெறும் பூப்பல்லாக்கு'[64] என்பதும் நாடக ஆசிரியனுடைய கற்பனை வளத்துக்கு எடுத்துக்காட்டுகளாகும். இவ்வாசிரியர் கதை மாந்தர்க்கேற்ற மொழி நடைகளைக் கையாளுவதில் வல்லவர் என்பதற்குப் பின் வரும் நாடகப் பகுதி சான்றாகும்.

முருகன்: தோப்பனாரை சின்ன வயசிலேயே தோசி அவன்
பாக்கு முடிச்சிட்டான். பாவண்ணு அவன்மாமன்
தெம்பாண்டிச்சீமைக்கித் தூக்கிப்போய்த்தன்வீட்டில்
அம்பா வளர்த்திட்டான், அப்போதான் இப்பேச்சு!

காத்தன்: ஓகோ, அதானேநான் பார்த்தேன்! அதோபார்ணே!
வேகமா ஓடிவர்றான் அந்தஉத வாக்கரை!

முருகன்: ஏண்டாநீ இம்புட்டு நாழி கழிச்சிவந்தே.
வேண்டாம் முதுகுத்தோல் பார்நீ உரிஞ்சிபோகும்![65]

## அனிச்ச அடி

இந்நாடகம் பல்வேறு உத்திகளும் பாங்குறக் கொண்டதாக அமைந்து, கற்போர்க்கு இன்பந்தர வல்லதாயுள் ளது. ஆசிரியப்பா நடையால் ஆற்றொழுக்குப்போல் கருத்தை விரித்துரைப்பதாலும், திருக்குறளையும் பழமொழிகளையும் எடுத்தாளுந்திறத்தாலும், குறிப்புப் பொருளும் உள்ளுறையும் இரட்டுற மொழிதலும் உவமைச் சிறப்பும் இயற்கைப் புனைவும் இன்ன பிறவும் அமைந்துள்ளமையாலும் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் நனிசிறக்க எடுத்தோதுவதாலும் இதனை மனோன்மணீயத்தின் வழிப் பட்டது என்று கூறலாம். எனினும், அதனின் வேறாய்த் தனக்கெனத் தனிப்பண்புகள் பலவும் கொண்டு திகழ்வதனால், இதனைப் படிக்குங்கால் 'மற்றொன்றின் சாயல் படிந்தது' என்ற எண்ணமே நமக்குத் தோன்றுவதில்லை.[66]

பெண்கொலை புரிந்த நன்னனைப் பற்றிய குறிப்பினைப் பழந்தமிழ் இலக்கியத்தில் (குறுந். 29) காணுகின்றோம். தன் தோட்டத்து மாவின் பசுங்காயினைத் தின்றதற்காகப் பைந்தொடி ஒருத்தியை நன்னன் கொலை புரிந்தான் என்பது

63. மேலது, 99–101
64. மேலது, ii:2: 17
65. மேலது iv 3: 11–18
66. இராம. பெரியகருப்பன், ஆய்வுரை, ஆ. பழநி, அனிச்ச அடி, ப. 7

வரலாறு. இந்நாடகத்தில் பல திருப்பங்களைத் தந்து அவனை நல்லவனாக்கிக் காட்டுகிறார் ஆசிரியர். பெண்மைப் பண்புக்கு அரண் செய்து காப்பாற்றும் அரியதொரு கவிதை நாடகமாகவும் இதனைப் படைத்திருக்கின்றார்.

சேரநாட்டுப் படைத் தலைவன் ஆய் எயினனுக்கும் அவன் மனைவி அணிவளைக்கும் மகளாகத் தோன்றிய சுரும்பார் குழலியைப் (குழலி) படைத்துணைத் தலைவன் அருளாழி மணமுடித்து மகிழுகின்றான். சின்னாட்கள் கழித்துச்சூலுற்ற குழலியும் அருளாழியும் துளுநாட்டு மன்னன் நன்னனின் பிறந்த நாள் விழாவிற்கு மாறுவேடத்தில் செல்லுகின்றனர். குழலி நன்னனுடைய நறவுப் பட்டினத்தில் ஆற்றில் புனலாடும்போது கையிற்கிடைத்த மாங்கனியைப் பிறர் தடுத்தும் கேளாமல் உண்டு விடுகின்றாள். முன்னர் அவளை மணக்க முயன்று ஏமாந்த மிஞிலி அவள் ஒற்றறிய வந்தவள் என்று கூற, நன்னன் அவளுக்குக் கொலைத் தண்டனை விதிக்கின்றான். அன்பு மனைவியை இழந்த அருளாழி மிஞிலியின் எலும்பைத் தூணாக நிறுத்திக் குழலியின் ஈமத்தில் கூரை வேய்வதாக வஞ்சினம் உரைக்கின் றான். நன்னனுடைய மாந்தோப்பினை மதயானையை ஏவி விட்டு அழித்தபோது அருளாழி யானையால் தாக்குண்டு கணியன்கீரன் வீட்டில் சேர்க்கப்படுகிறான். கணியன் மகள் அனிச்ச அடி, அவன் மீது காதல் கொள்ளுகிறாள். சேரனுக்கும் நன்னனுக்கும் போர் மூளுகின்றது. போரில் சேரன் வெற்றி பெறுகின்றான். மிஞிலிக்கும் அருளாழிக்கும் நடந்த தனிப் போரில் மிஞிலி கொல்லப்படுகிறான். அருளாழியினுடைய சூளுரை நிறைவேறுகின்றது. வெற்றிச் செய்தியைப் பரணர் கூறக்கேட்டு அலறிய அனிச்ச அடி குருதிக் குழல் வெடித்து உயிரிழக்கிறாள். அவள் இறந்த செய்தி கேட்டு மயங்கி விழுந்து அருளாழியும் உயிர் துறக்கின்றான்.

இக்கவிதை நாடகம் ஆய் எயினனின் குடும்பம் அழிவுற்ற செய்தியினைத் தொடக்க முதல் முடிவுவரை விரிவாகக் கூறுகின்றது. குழலி கருக்கொண்ட இனிய செய்தியோடு தொடங்கும் முதல் அங்கம் அவள் இறந்தபின் தனிமையில் தவிக்கின்ற அருளாழியைக் காட்டி முடிகின்றது.

> **"உறவினால் உறுவது ஒழிகலாத் துன்பமே**
> **இறவினால் பெறுவது எண்ணிலா இன்பமே"[67]**

67. ஆ. பழநி. அனிச்ச அடி. 4:1:148–149

என்ற அடிகள் இக்கதையின் உயிர்நாடியாக விளங்குகின்றன. காதல், சூழ்ச்சி. வஞ்சினம், போர் முதலியன இடம் பெற்று நிகழ்ச்சிச் செறிவும் கட்டுக்கோப்பும் உடையதாய் விளங்குகிறது. இதன்கண் எண்சுவைகளும் ஆங்காங்கே அமைந்துள்ளனவெனினும் அவலம் ஒன்றே முதலிலிருந்து இறுதிவரை ஊடுருவி நிற்கிறது.

மகள்தாயாகப் போவதை அறிந்து இன்பக் கண்ணீர் உகுக்கின்ற அணிவளையைப் பார்த்து,

> "அன்னாய் அணிவளை! அவலம் என்னை?
> ஒன்னார் தந்த உறுதுயர் உண்டுகொல்?"[68]

எனப் பரணர் கேட்டு விடுகின்றார். இக்கூற்று பின்னால் நிகழவிருக்கும் அவல நிகழ்ச்சியைக் குறிப்பால் உணர்த்துவது போல் அமைந்திருக்கிறது. இதேபோன்று குழலியும் அருளாழியும் நறவுப்பட்டினம் சென்றபோது அங்குப் பெண்கள் இட்டு வைத்திருந்த கோலங்களின் அழகைக்கண்டு,

> "செல்வாரை எல்லாம் சிறைசெயும் தரையில்
> நல்லார் இட்ட நன்னிறக் கோலம்"[69]

எனக் தீக்குறியாய்ப் பேசுகிறான். இப்பகுதிகளை எடுத்துக் காட்டி இவையெல்லாம் நாடகக் குறிப்பு மொழிகளாய் (Dramatic irony) அமைந்து பின்னர் வரும் பேரவலத்தினை முன்னரே மறைமுகமாக அறிவுறுத்தி நிற்கின்றன என இராம, பெரியகருப்பன் தமது ஆய்வுரையில் குறிப்பிடுகின்றார்.[70]

மேலும், நார்முடிச் சேரலை வென்று பூழிநாட்டைக் கைப்பற்றிய நன்னனை இசையரங்கிற் புகழ்ந்து பாடிய பாடலைக் கேட்டதும் அருளாழி கொதித்தெழுகின்றான். இசையரங்கா இது? ஏதிலார்ப் பழிக்கும் வசையரங்கம்' என்று கூவுகின்றான். இதனைக் கண்ட குழலி பதறிப்போய், தம்மை யாரென வெளிப்படுத்திக் கொண்டால் 'வெருகின் கையில் வீழ்ந்த கிளி யாவோம்' என்று கடிகின்றாள். 'கலத்தொடு கவிழ்ந்த பால் எனக் கழிதல் நன்றோ' என முறையிடுகின்றாள்; 'மீளா அவலம் மேவுமே' என்கின்றாள். இதனைக் கேட்டுத் தன் தவற்றையுணர்ந்த அருளாழி, 'நல்லூழ் வயத்தால் தான்

68. மேலது, 1:1:96–97
69 மேலது, 1:2:19–20
70. இராம. பெரியகருப்பன், ஆய்வுரை, பழநி, மு.நூ, பக். 10–11

கூறியதை யாரும் கேட்டிலர்' என்றும் 'அல்லூழ் ஆயின் கருதவும் அஞ்சுவென்' என்றும் கூறி அமைதியுறுகின்றான். ஆனால் இதற்கு நேர் முரணாக அடுத்த காட்சியிலேயே, குழலி ஆற்றிற்கு நீராடச் சென்றவிடத்தில் மாங்காயைத் தின்று, சிறைப்பட்டுத் தான் அச்சுறுத்திய அனைத்தையும் தானே விளைவிப்பவள் ஆகின்றாள். 'ஊழின் வலிமை இருந்தவாறு என்னை?' என்று நாமும் வியக்கின்றோம். இவ்விடத்தில் ஆசிரியரின் நாடகவுத்தி பாராட்டத் தக்க வகையில் அமைந்துள்ளமையைக் காண்கின்றோம்.[71]

ஐந்து அங்கங்களையும் இருபத்தொரு காட்சிகளையும் கொண்ட இந்நாடகத்தில் ஆசிரியம், விருத்தம் ஆகிய பாவகைகள் இடம் பெறுகின்றன. நாடகத்துள் வரும் அகப் பொருள்துறைக்குரிய விளக்கங்கள் நூலின் பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன. நாடகத்துள் வரும் மேற்கோள்களுக்கு விளக்கங்களையும், இலக்கியப் பகுதிகளையும் நிரல்படுத்தி நூலாசிரியரே பின்னிணைப்பில் தந்துள்ளார்.

## முல்லை மாடம்

ஐந்து அங்கங்களையும் இருபத்தொன்பது களங்களையும் கொண்ட 'முல்லை மாடம்' நாடகத் தமிழ் இலக்கணங்களையெல்லாம் பெற்று மரபுவழிப் பட்டதாய் விளங்கும் வரலாற்று நாடகமாகும். மாறன்வழுதி என்னும் பாண்டிய வேந்தனுக்கும் குட்டுவன் கோதை என்னும் சேர மன்னனுக்கும் நடைபெற்ற போரினை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டது. நாடகத் தலைவன், நாடகத் தலைவி, ஆகிய கதை மாந்தர்களை மாசற்றவர்களாகக் காட்டாமல் சில குறைகளும் உடையவர்களாகக் காட்டியுள்ள ஆசிரியரின் புதுமைப் போக்கு பாராட்டுதற்குரியது. இவ்வாறு தலைமை மாந்தரைப் படைத்துள்ளமையால் கதை நிகழ்ச்சிகள் நடப்பியல் பாங்கு (Realism) உடையன போலத் தோன்றுகின்றன. நாடகத்தில் நாத்திகராய் வரும் அகடரும் ஆத்திகராய்வரும் விகடரும் கதையோடு ஒன்றியவரல்லரெனினும் அவர்தம் உரையாடல்கள் படிப்போர்க்கு அறிவைக் கொளுத்துகின்றன. அவர்கள்,

71. மேலது, ப. 11

"உழைப்பால் வருந்தியோர் உழைப்பை விடுத்துக்
கன்றொடு பிறவும் கடவுளெனக் காட்டி
ஏய்த்து வாழ்ந்திட ஏதுபல செய்தார்"[72]

எனவும்,

"மக்கள் தொகையே மன்பதை யுலகில்
சிக்கற்குக் காரணம்; சிந்தித்து அறியும்"[73]

எனவும் காலத்துக்கேற்ற கருத்துகளை வழங்குகின்றனர்.

மாறன் வழுதி தன் காதலி செல்வியோடு அரண்மனையில் உரையாடிக் கொண்டிருக்கும்போது கத்தியொன்று சாளரத்தின் வழியாக வந்து பாய்தல்; உளவு பார்க்கவந்த 'திருட்டு விழி' பாண்டியச் சேவகனைக் கத்தியால் குத்த மற்றவர்கள் அவனை வளைத்துப் பிடித்தல்; செல்வியின் தோழியாம் முல்லையின் வீட்டைக் கொள்ளையர் தாக்கி முல்லையை இழுத்துப் போக முனைதல்; அவளுடைய தாயின் தாலியைப் பறித்தல்; வீட்டுக்கு எரியூட்டுதல், அவ்வேளை அங்குவந்த மாறன் வழுதியின் படையினர் அக்கொள்ளையரை அடித்து விரட்டுதல்; கொலை செய்யப்பட்ட குட்டுவன் மனைவி காமக்கண்ணி தந்திரத்தால் மாறன் வழுதியைப் பழிவாங்கிவிட்டு மின் வெட்டும் நேரத்தில் ஆற்றினுள் குதித்துத் தற்கொலை செய்து கொள்ளுதல் ஆகியன நிறைந்த இந்நாடகத்தை, நிகழ்ச்சிகள் நிறைந்த நாடகம்' (Dramaofaction) எனலாம்.

தலைமை மாந்தரான மாறன் வழுதி, குட்டுவன் கோதை, காமக்கண்ணி ஆகியோரின் அவல முடிவுகளை உளங்கொண்டு இதனைத் துன்பியல் நாடகமாகக் கொள்ளுகின்றோம்.

மற்றும் இந்நாடகத்துள்,

"ஓங்கலைப் போற்றுதும் ஓங்கலைப் போற்றுதும்
வீங்கிய மாரியை விண்ணின்று சான்றோர்க்கு
வாங்கி யளித்துவர லான்"[74]

என வரும் சொல்லாட்சி முறையான் சிலப்பதிகாரத்தையும்,

72. ஐசக் அருமைராசன், முல்லை மாடம், ப. 74
73. மேலது, ப. 121
74. மேலது, ப. 1

"அயரா மாந்தர் அரசுவீற் றிருக்கும்
நன்செய் நாடதில், நரியும் புலியும்
ஒன்றெனக் குலவி ஒருங்கிருக்கு மென்பர்"[75]

என வரும் நாஞ்சில் நாட்டு வருணனை முறையான் மனோன் மணீயத்தையும் நினைந்து பார்க்கின்றோம்.

## முடிபுகள்

### 1. பாடுபொருள்

சமுதாய நாடகங்களில் காதல் மணம், வரதட்சிணைக் கொடுமை, பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், மருமகள்–மாமி பூசல், தன்மான உணர்வு, கயமைச் செயல்கள், சிற்றன்னை கொடுமை, சமுதாய ஏற்றத்தாழ்வுகள் ஆகியன பாடுபொருள் களாய் அமைகின்றன.

### 2. கதைக்கரு

மண்ணாசை, சூழ்ச்சி, வீரம், காதல், கொடை, நட்பு ஆகியன வரலாற்று நாடகக் கதைக் கருத்துகளாக அமைகின்றன.

### 3. தாக்குரவு

மனோன்மணீயத்தினுடைய தாக்குரவு பொதுவாக அதற்குப் பின்னால் எழுதப்பட்ட வரலாற்று நாடகங்களில் காணப்படுகிறது. 'வேங்கையின் வேந்தன்' மட்டுமே இதனினின்றும் விலகி நிற்கின்றது.

### 4. தனித்தன்மை

தேசிய ஒருமைப்பாட்டுத் தத்துவத்தை அடிக்கருத்தாகக் கொண்டு, பதினான்கு மொழிகளுக்கும் பதினான்கு பெண்களை உருவகப்படுத்திக் காட்டுவதிலும், காட்சிக்குக் காட்சி வேறுபடுத்திக் காட்டப் புதிய உத்திகளைக் கையாண்ட வகையிலும் கண்ணதாசன் தனித்தன்மை பெறுகிறார்.

### 5. அனிச்ச அடி

நாடகத்தின் மூலம் முன்னோக்கு உத்திகளை நுட்பமாகக் கையாண்டு தனி முத்திரையைப் பதித்திருப்பவர் ஆ. பழநி.

75. மேலது, ப. 84

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வரலாற்று நாடகங்களுள் பாதி அவல முடிவையும் (Tragedy) மீதி இன்பியல் முடிவையும் (Comedy) கொண்டிருக்கச் சமூக நாடகங்கள் அனைத்துமே இன்பியல் முடிவைப் பெற்றுள்ளன. துன்பியல் நாடகங்களைப் படிப்பதனால் ஏற்படும் பாதிப்பு மக்கள் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடும் என்ற நோக்கில் அவல நாடகங்கள் மிகுதியாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்த்து வைத்து மக்களைத் திருத்தி வழிகாட்டிப் பயன் தர வேண்டும் என்ற நோக்கில் எழுதப் பட்டமையால் சமூக நாடகங்கள் இன்பியல் முடிவைப் பெற்றுள்ளன எனலாம்.

# 4

# சிற்றிலக்கியங்கள்

## 1. குறவஞ்சி

குறமகளாகிய ஒருத்தியின் பெயரால் தோன்றி நாடெங்கும் சிறப்புப் பெறும் இசை நாடகமாகக் 'குறவஞ்சி' இலக்கியம் திகழ்ந்தாலும் கதைத் தலைவி மற்றொருத்தியாகக் காட்டப்படுகிறாள்.

இறைவன் வீதியுலா வருதலின் தொடர்பாகிய கற்பனை வடிவமே குறவஞ்சி இலக்கியமாகும். தலைவன் உலா வருதல், தலைவி கண்டு மகிழ்தல், மயங்குதல், காமநோய்த் துன்பம், குறவஞ்சியாகிய சிங்கி வருதல், குறிசொல்லுதல், சிங்கியைக் காணாது சிங்கன் தேடுதல், இறுதியில் கண்டு மகிழுதல் போன்ற கூறுபாடுகளைக் கொண்டு சிறப்பான கட்டமைப்பு டன் 'குறவஞ்சி' அமையும்.

முத்தமிழில் ஒன்றாகிய நாடகத்திற்குச் சான்றாக விளங்குவது குறவஞ்சி இலக்கியம். சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாக உருப்பெறுமுன் இதன் கூறுகள் தொல்காப்பியம் முதலியவற்றிலும் சுட்டடப்பட்டுள்ளன. 'குறவஞ்சி' தொண்ணூற் றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகச் சேர்க்கப்படவில்லை என்பது கருதத்தக்கது. எனினும் 'குறத்திப்பாட்டு' எனும் பெயரில் அஃது இடம் பெற்றிருந்ததாகவே கொள்ளலாம். 'குறம்' என்பது கலம்பக உறுப்புகளுள் ஒன்றாக அமைந்துள் ளது. குறவன், குறத்தியின் வாழ்வை மட்டும் தனியே பிரித்துக் 'குளுவ நாடகம்' எனும் பெயரில் தனியொரு வகைச் சிற்றிலக் கியமும் தோன்றியது.

'குறவஞ்சி' இலக்கியத்தை முதலில் எழுதியவர் திரிகூட ராசப்பக் கவிராயர் என்றும், குமரகுருபரர், புகழேந்திப்புலவர் ஆகியோரே 'குறவஞ்சி'யைத் தொடங்கி வைத்தவர்கள் என்றும் இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. 18ஆம் நூற்றாண்டில்

பாடப் பெற்ற 'திருக்குற்றாலக் குறவஞ்சி' தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலைத்த புகழைப் பெற்றுள்ளமையால் "இசைத் தமிழ் இன்பமும், எதுகை மோனைகளும், சொல்லடுக்குகளும், பிராசம் எனும் வழியெதுகைத் தொடை நலங்களும் வெள்ளமெனக் கரைபுரண்டோட, பொருள் அமைதியும் அணி வகைகளும் நிரம்பிக், கற்றவர் கல்லாதவர் எவருள்ளத் தையும் ஈர்க்கவல்ல திருக்குற்றாலக் குறவஞ்சி.."[1] என்று பாராட்டப்படுகிறது. குற்றாலநாதர் மீது பாடப்பெற்ற இந்நூலும், குடந்தை ஈசராகிய கும்பேசர் மீது பாடப்பெற்ற கும்பேசர் குறவஞ்சியும், தஞ்சையை ஆண்ட மகாராட்டிர மன்னராகிய சரபோசியின் புகழ்பாடும் 'சரபேந்திர பூபாலக் குறவஞ்சியும்' தமிழில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை. தமிழில் இன்றுவரை நாற்பத்து மூன்றுக்கு மேற்பட்ட 'குறவஞ்சி' நூல்களே தோன்றியுள்ளன.

ஆய்வுக்குள் வருகின்ற 'குறுக்குத்துறைக்குறவஞ்சி' குறுக்குத் துறை முருகன் புகழ்பாடுகின்றது. இது பண்ணோடு பாடும் பாங்கில் அமைந்து உள்ளது. இந்நூலைப் பயில்வார் பிறப்பு வினையறுத்து முக்தி எய்துவர் என்ற கருத்தில் 'தாய்வயிறு சேராமல் சேயடிசேர் வாரே!'[2] என்பது சிறப்பாக உள்ளது. காவடிச் சிந்துப் பாடல்கள் பல உள. 'திருக்குற்றாலக் குறவஞ்சி' அடிகள் சில பயின்று வந்துள்ளன. இந்நூல் தொண்ணூற்றைந்து பாடல்களைக் கொண்டது.

> "கொத்தார் மலர்க்குழ லாளைக்–குற்றாலத்தின்
> கொம்பேர் இடையுடை யாளை
> வித்தாரக் கள்ளியினை வீசும்பே ரொளிமின்னை
> வியனா ருலகந்தன்னில் வீதிவீதி யாய்ச்சென்று"[3]

சிங்கன் சிங்கியைத் தேடுவதாகக் கூறப்படுகின்றது. இதனுள் முன்னையோர் இலக்கியச் சாயல் படிந்திருப்பதைக் காணலாம்.

பிறிதொன்று 'கூட்டுறவுக் குறவஞ்சி' எனும் இசை நாடகமாகும். கூட்டுறவு இயக்கத்தைத் தலைவியாகவும் மக்கள் அரசைத் தலைவனாகவும் உருவகம் செய்து குறத்தி, சிங்கன் எனும் துணைப் பாத்திரங்களையும் கொண்டு பன்னிரண்டு

1. அ. இராசகோட்டியப்பன், திருக்குற்றாலக் குறவஞ்சி, சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (3) ப. 214–215
2. தி.சு. ஆறுமுகம், குறுக்குத்துறைக் குறவஞ்சி, ப. 3
3. மேலது, ப. 85

காட்சிகளில் அமைந்துள்ளது. சிங்கி எனும் மற்றொரு துணைப் பாத்திரமும் இந்நூலுள் வருதல் எண்ணத்தக்கது. இதனுள் கட்டியங்காரன் இல்லை. கூட்டுறவை வளர்த்த ஊரவரிடம் குறி சொல்லுவதும் அதன் வாயிலாகத் தலைவியின் (கூட்டுறவு) பெருமை கூறுவதும் இதன் போக்காகும். கூட்டுறவு நாணயச் சங்கம், சிறுசேமிப்புச் சிறப்புகள் கூறப்படுகின்றன. குறத்தி தன் இளைய மகளை அறிமுகப்படுத்துவது புதுமையாகும்.

'குறுக்குத் துறைக் குறவஞ்சி' முன்னைய குறவஞ்சிகளின் அடியொற்றி நடக்கும் பான்மையது. 'கூட்டுறவுக் குறவஞ்சி' ஓரளவு 'குறவஞ்சி' இலக்கியக் கட்டமைப்பு உடையதெனினும் உருவகக் கற்பனையும் கொள்கை பரப்பும் நோக்கும் உடையதாக அமைகிறது எனலாம்.

## 2. பரணி

சிற்றிலக்கியங்களுள் சந்த வகையாலும் கற்பனை வளத்தாலும் பெருமிதச் சுவையாலும் சிறந்து நிற்பவை பரணி நூல்கள். தினைப்புனத்தில் பரண்மீதிருந்து காவல்புரிவது போன்று போர்க்களத்தில் யானைமீதிருந்து எதிரிகளைத் துரத்துவதால் பரணி எனப்பெயர் பெறுவதாகவும், அரசனின் வில், வேல், வாள் ஆகிய படைக்கலங்களால் அமைக்கப்பட்ட பரண் மீதிருந்து புலவர் இந்நூலைப்பாடுவதால் பரணியாகும் எனவும், காளிக்கும் கூற்றுவனுக்குமுரிய நாள்மீன் பரணியாக லின் அதனையொட்டி அமைந்ததாகவும், இன்னும் பல்வகை யிலும் பெயர்க் காரணங்கள் கூறப்படுகின்றன.[4] தமிழில் இதுவரை பதினேழுக்கும் மேற்பட்ட பரணி நூல்கள் வெளி வந்துள்ளன. பதினொன்றாம் நூற்றாண்டில் தொடங்கிய இவ்விலக்கிய வகை இக்கால இலக்கியங்களுள் அருகியே காணப்படுகின்றது.

'ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி' என்பது அரசர்கள் ஆட்சியும், யானை, குதிரை, முதலிய படைகளும் இருந்த காலத்துக்குப் பொருந்தும். மக்களாட்சியும், அணுக் கருவிகளும் பெருகி அமைந்துள்ள இக்காலத்தில் பரணியின் அமைப்பும் மாறித்தான் அமையும் என்பதில் ஐயமில்லை.

'தமிழ்காத்த போர்ப்பரணி', 'இந்திப்பரணி' ஆகிய இரண்டும் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களைச்

4. ந.வீ. செயராமன், சிற்றிலக்கியச் செல்வங்கள், ப. 114

சிறப்பிப்பதாக உள்ளன. போர்முறை கூட, மறியல், வழக்கு, சிறைத்தண்டனை, விடுதலை, பாராட்டு என்றவாறு மாறி அமைகின்றது. மற்றொரு நூலான 'வங்கத்துப்பரணி' வங்க தேச மக்கள் விடுதலைப்போராட்டத்தில் இந்திய வீரர்கள் காட்டிய வீரத்தையும் போர் முறையினையும் படம் பிடிப்பது ஆகும்.

தாழிசைகளில் அமைந்து சந்தத்தில் தவழ்வது பரணியின் பொது இலக்கணம் ஆகும். இவ்வகையில் பாசவதைப்பரணி, தக்கயாகப்பரணி, கலிங்கத்துப்பரணி ஆகியவை பெரும் சிறப்புப் பெற்றவையாகும். கலிங்கத்துப் பரணியில் மட்டும் ஐம்பதுக்கு மேற்பட்ட சந்த மாறுபாடுகள் அமைந்து சிந்தையைக் கவருகின்றன.

வங்கத்துப்பரணி தாழிசையில் அமைந்து சிறப்புறுகிறது. தமிழ் இலக்கண விதிகளையே உவமை காட்டிப் பாடுதல் இதன் தனிச் சிறப்பாகும். பொதுவாகப் பரணி நூல்கள் பேய் உலகு, மக்கள் உலகு என இருபகுதிகளையும் காட்டுவன. கலிங்கத்துப் பரணி கடவுள் வாழ்த்தோடு தொடங்கிப் பதின் மூன்று பகுதிகளைக் கொண்டு இயலுகின்றது. வங்கத்துப் பரணி மட்டும்தான் பழைய மரபுகளை விடாது போற்றும் பாங்கில் அமைந்துள்ளது. இது பதினோருறுப்புகளைக் கொண்டுள்ளது. பாக்கித்தான், வங்கநாட்டைத் தாக்கிய போது இடையில் புகுந்து வங்கத்திற்காகப் போரிட்ட இந்தியாவைப் பாராட்டுகிறது. போர்க்களக் காட்சிகளும் பாக்கித்தான் படைக் கொடுமைகளும் நன்கு விளக்கப்படுகின்றன. உரோசன்ரா பேகம் எனும் பெண்ணின் ஈகம் ஓர் உருக்கமான பகுதியாகும். செஞ்சொற்கள் விரவி நின்று, புதுவகைக் கற்பனைகளுடன் மிளிருவது இந்நூல். நாட்டுப்பற்றை ஊட்டும் நோக்கமுடைய இந்நூல் கவிதை மரபினைக் கற்க விரும்பு வோருக்கு ஒரு கையேடாகவும் அமைகின்றது. வங்க நாட்டைச் சார்ந்து எழுந்ததால் கடவுள் வாழ்த்தில் அல்லாவும் அமைந்து சிறப்புறுவதைக் காணலாம். வெப்பத்திற்குப் பொறாமைத் தீயையும் வங்கச் சினத்தீயையும் உவமை கூறுதல் சிறப்பாகும். பேய் முறைப்பாட்டில் உலகின் பெயர் பெற்ற போர்கள் சுட்டப்படுவதுடன், இந்திய விடுதலைக்குப் பாடுபட்ட காந்தியடிகள், 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமிழைத்து' வென்ற பாங்கினை அங்கதச் சுவை தோன்றக் கூறியிருத்தல் மிகச் சிறப்பாகும்.

"வாளிற் பொராமற் குருதிநதி
மண்ணில் விழாமற் பகைவரையும்
கேளிர் ஆக்கும் அகிம்சையினாற்
கெடுத்தான் காந்தி; கெட்டோமே!"[5]

என்று பேய்கள் தங்கட்கு ஏற்பட்ட வாய்ப்புக் குறைவுக்கு வருந்துகின்றனவாம். இதனுள் பாட்டுடைத் தலைவர்களாக வங்க விடுதலைத் தலைவர் முசிபுர் ரகுமானும் இந்தியத் தலைமையமைச்சர் இந்திராகாந்தியும் காட்டப்படுகின்றனர்.

'இந்திப் பரணி'யில் இவ்வகைப் பாகுபாடுகள் அமைய வில்லை. இந்தி எதிர்ப்புப் போரில் அண்ணா, கலைஞர் ஆகியோரின் பங்கும், வெற்றியும் பற்றிய பாராட்டாகவே நூல் அமைகின்றது.

"அண்ணா ஆணையிட்டார்
கலைஞர் எழுந்தார்
இந்தி வீழ்ந்தது
இந்திப் பரணி எழுந்தது
அன்று காவிரிச் சோழன் மன்னன்
கருணாகரத் தொண்டைமான் படைத்தலைவன்
இன்று காஞ்சிபுரத்துத் தொண்டைமான் மன்னர்
கருணாநிதிச் சோழர் படைத்தலைவர்"[6]

என்று, கலிங்கத்துப் பரணியை ஒப்பிட்டுக் காட்டும் பகுதி சுவைமிக்கது.

இதனுள் பதின்மூன்று பகுப்புகள் உள்ளன. 1937 தொடங்கி 1967 வரையிலான இந்திப் போர்கள் தொகுத்துக் காட்டப்படுகின்றன.

"இந்திமகள் வெறியாட்டம்
எதிர்ப்பதற்குத் தீப்பாய
நந்திமகன் இல்லையெனில்
நாங்கள் உளோம் என்பது போல்"[7]

எழுந்த வீரர்களைப் பாடுவதாக இப்பரணி நூல் அமைகின்றது. மற்றொன்று, 'தமிழ் காத்த போர்ப்பரணி'யாக அமைகின்றது.

5. அரங்க சீனிவாசன், வங்கத்துப் பரணி, ப. 36
6. இளந்தேவன், இந்திப்பரணி, ப. 3
7. மேலது, ப. 29

எனினும் இருவகையில் இது முற்றிலும் மாறுபட்டு அமைகின்றது. துயிலெழுப்புதல் எனும் பகுதியைக் கடை திறப்புப் பகுதியாகக் கொண்டு அழுத்தமாகப் பாடுவதால் இது 'வயது வந்தோர்க்கு மட்டும்' எனும் இலச்சினை பொறித்து வெளிவந்துள்ளது. மற்றொன்று இதன் இலக்கண நுட்பமாகும்; தமிழுக்காக உயிர் கொடுத்தவர்களைப் பற்றிப் பாடும் இந்நூல் வெற்றித் தலைவன் தேரைச் சுற்றி நின்று குரவைக் கூத்தாடி மகிழுதல் எனும் இலக்கண விரிவாக இயலுவது.[8]

துயிலெழுப்புதல் முதல் பின் தேர்க்குரவை ஈறாக விருந்தென்னும் விதிப்படி நூல் அமைகின்றது. எல்லாம் தமிழாக வேண்டும் எனும் அவா இந்நூலில் மேலோங்கி நிற்கிறது. கதிர், மதி, வையம், தமிழ் வாழ்த்துகள் அமைகின்றன.

**"அன்னை மொழியைக் காப்பதற்கு**
**அணிகொண் டேகிப் பகைமுடித்த**
**வண்ணம் பாடி மகிழ்வதற்கு**
**வாசற் கதவம் திறமினோ,"**[9]

எனவரும், கடைதிறப்புப் பகுதி இதன் உயிர்நாடியாகும்.

வரவேற்பு, இல்லத்தாருடன் இன்புற்றிருத்தல், இந்தி எதிர்ப்பு, காடுபாடியது, ஆணவப் பேய் பாடியது, அறிவு பாடுதல், தவத்தால் உதித்த தண்டமிழ்ச் செல்வர்களின் படைச்சிறப்பு ஆகியவை உள்பகுதிகளாக அமைகின்றன. 'தமிழ்நாடு எனும் பெயர் வேண்டி நோன்பிருந்து மறைந்த சங்கரலிங்கனார், மற்றும் 'காஞ்சித் தலைவர்' 'தஞ்சைத் தலைவர்' ஆகியோரின் சிறப்புகள் இயம்பப்படுகின்றன.

**"ஏழையில்லை எளியரில்லை**
**என்று உலகை மாற்றுவோம்**
**கோழையின்றிக் கொடுமையின்றி**
**வாழவைக்கக் கூடுவோம் !'**[10]

என்னுமாப்போல, 'செய்வன கூறிக் குரவையாடுதல்' எனும் பகுதி கொள்கை முழக்கமாக அமைகின்றது.

8. "பெய்கழலான் தேரின்பின் மொய்வளை விறலியர் வயவரோ டாடின்று" பு.பொ.வெ.மா. வாகைப் படலம், கொளு எண் 8.
9. பா. இராமச்சந்திரன், தமிழ்காத்த போர்ப்பரணி, ப. 10
10. மேலது, ப. 34

## 3. உலா

உலா இலக்கியத்தில் பொருட்சிறப்புத் துள்ளும் கவிதை யோட்டம் மிளிரக் காணலாம். கி.பி. 8ஆம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் நாயனார் இயற்றிய 'திருக்கைலாய ஞான உலா'வே காலத்தால் முந்தியது. பன்னிரண்டாம் நூற்றாண்டில் ஒட்டக்கூத்தரால் இயற்றப்பெற்ற 'மூவருலா' (இராசராச சோழன், குலோத்துங்க சோழன், விக்கிரம சோழன்) இன்றும் சிறந்து நிற்கக் காணுகிறோம். இருபதாம் நூற்றாண்டில் அ.கு. ஆதித்தர் இயற்றிய 'காமராசர் உலா' குறிப்பிடத்தக்கதாகும். இன்றுவரை அறுபத்தெட்டுக்கு மேற்பட்ட உலாநூல்கள் தமிழில் வெளிவந்துள்ளன.

வீதியில் உலா வருகின்ற இறைவன் திருவுருவத்தையோ மன்னனையோ சிறப்பிக்கும் வகையில் அவனது வீரம், வெற்றி, பண்பு, செல்வம், புகழ் முதலியவற்றைப் போற்றி, முன்னுரை அமைத்துக்கொண்டும், அவர்களைக் காணத் திரளும் பெண்டிருள் எழுபருவத்தினர் கொள்ளும் காதலுணர்வினை நயம்பட உரைத்தும் புனைந்துரைகளோடு மிளிர்வது உலாவாகும்.

உலா இலக்கியம் இடைக்காலத்தில் வாழ்ந்த குறுநில மன்னர், பெருஞ்செல்வர் ஆகியவர்களைப் பற்றி எழுந்ததாக லின் புலவர்கள் அக்காலத் தேவைக்கேற்பக் காமச்சுவை தோன்ற இயற்றினர். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என எழுவகை மகளிரும் கொள்ளும் உணர்வை அகவைக்கும் உளவியலுக்கும் ஏற்ப வேறுபடுத்திக் காட்டி உணர்த்துவதில் புலவர்கள் தம் கை வண்ணத்தைக் காட்ட வாய்ப்பாக உலா இலக்கியம் அமைந்துள்ளது. பெரும்பாலும் பாட்டுடைத் தலைவனைக் கண்டு மகளிர் கொள்ளும் காதலைப் பற்றி உணர்த்துவதால் ஒரு தலைக்காமமாகிய கைக்கிளையின் பாற்பட்டதே இவ்விலக்கியம் ஆகும். உலா கலிவெண்பாவால் அமைய வேண்டும் என்பது பொது இலக்கணம்.

"தலைவன் ஒருவன் உலாவருதலைக் கண்டு மகளிர் பலரும் காதல் கொண்டு மயங்குவதாகப் பாடுவது, அவர்தம் கற்பொழுக்கத்திற்கு மாசு கற்பிப்பதாய் முடிதலின், உலா நூல் கள் தமிழர் பண்பாட்டிற்குப் பெரும் களங்கமாய் விளங்குவன வாகும் எனச் சிலர் இந்நாளில் உலா நூல்களைக் குறை கூறி

எள்ளி நகையாடி இகழ்ந்துரைப்பர்."[11] எனினும் ஒழுக்க நிலையை வற்புறுத்துவது இதன் வேலையன்று என்றும், மன மகிழ்ந்து கற்பனை செய்தல் ஒன்றே நோக்கம் என்றும் கூறி அமைதிப்படுத்துவர். இக்கால உலா இலக்கியங்களை ஆராய்கின்ற பொழுது மேற்சொன்ன குற்றச்சாட்டு, கவிஞர்கள் மனத்தைத் தைத்திருப்பதாகவே கொள்ளலாம். ஆய்வு எல்லைக்குள் கலைஞர் மீது பாடப்பெற்ற உலாக்கள் இரண்டும் சி.பி. சிற்றரசு மீது பாடப்பெற்ற உலா ஒன்றும் வருகின்றன.

"பிற்காலப் பிரபந்த வகையில் ஒன்றான உலா நூல்களில் தமிழ்ப் பண்பாட்டிற்கு மாறான ஒன்று காணப்படுகிறது. உலா வரும் தலைவன் மீது ஏழுபருவ மகளிரும்—மணமான பெண்கள் உட்பட நகரத்துப் பெண்டிரெல்லாம் காதல் கொள்வதாகப் பழைய உலாக்களில் காணப்படுகிறது. இதனை நீக்கிச் சில மாற்றங்களையும் இந்நூலில் செய்துள்ளேன். தமிழுக்கு ஊறுநேரா வகையில் புதியன புகுத்துவதை வரவேற்கும் தமிழ்ச் சான்றோர்கள் இந்த என் முயற்சியை ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்."[12] எனக் குமணன் தம் 'கலைஞர் உலா' எனும் நூல் முன்னுரையில் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார். எனவே நூலில் எழுவகைப் பருவ மகளிர் நிலைதனை மட்டுமே கூறியுள்ளார். இவற்றோடு உலாக் காண்பவர்களுள் மாணவர், தொழிலாளி, உழவர், பிறமாந்தர் என நால்வகையைக் காட்டுதல் முற்றிலும் புதுமையாகும்.

இறைவனைத் தலைவனாகக் கொள்ளும் இலக்கியங்கள் பல தோன்றியுள்ளன. ஆனால் தனியொரு மனிதனை இறைவன் அளவுக்கு உயர்த்தி அவன் சிறப்புகளை வியந்து பாடித் தூக்கி நிறுத்தியபோதிலும் இறைவனைத் தலைவனாக்கிய உலா இலக்கியத்தில் வரும் விரசக் கற்பனை மனிதனைத் தலைவனாக்கிய உலாக்களில் மிகுதியும் கையாளப்படவில்லை என்றே கூறலாம். எனினும் பழைய போக்குகளிலிருந்து முற்றிலும் விடுபடவில்லை என்பதனையே இக்கால உலாக்களும் காட்டுகின்றன.

**"மங்கை மனம்பறித்துச் சென்றான் வருத்தமின்றி**
**இங்கோநான் ஏனோ இருக்கின்றேன்"[13]**

11. முருகவேள், திருக்கைலாய ஞான உலா, சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (1) ப. 45
12. குமணன், முன்னுரை, கலைஞர்கள் உலா, பக். 10–11
13. குமணன், கலைஞர் உலா, கண்ணி 440

என்று கலைஞரைக் கண்ட பெண் புலம்புவதாகக் காட்டுதல் மறுபடியும் பழைய போக்கு நோக்கியே வழுக்கிச் செல்வதைக் காட்டுகிறது. குமணன் பாடிய 'கலைஞர் உலா' தொள்ளாயிரத்து இருபது கண்ணிகளையும், ச. பாலசுந்தரம் பாடிய 'கலைஞர் உலா' நூற்றுத் தொண்ணூறு கண்ணிகளை யும் கொண்டுள்ளன. ச. பாலசுந்தரம், காலத்திற்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் ஏற்பச் சிறிது வேறுபடுத்தி அமைத்துள்ளார்.

"கலைஞரின் அரசியற் பாரம்பரியம், செயற்றிறன், ஆட்சித் திறன், பண்புநலன் ஆகியவற்றை ஏழுபருவ மகளிரின் அமைப்பிலே குறிப்பாகவும் சிலேடையாகவும் ஓரளவு புலப்படுத்தப் பெற்றதே"[14] அவ் வேறுபாடாகும். கலைஞரின் தொண்டு, பேச்சு, எழுத்து, நாடக நடிப்பு, கவிதை, அமைச்சுப் பணி, தலைமை ஆகியவற்றை முறையாக எழுவகை மகளிராக உருவகித்துப் பாடியுள்ளமை முற்றிலும் புதுமையாகும்.

தி.மு. கழகத்தில் நெடுநாள் இருந்தவரும், சட்டமன்ற மேலவைத் தலைவராக இருந்து மறைந்தவருமாகிய சி.பி. சிற்றரசு பற்றிய உலாவைப் படைத்த வே. கபிலனும் பழைய மரபுகளை உதறி எறிந்து புதுமை படைக்கவே முனைந்துள்ளார். "ஆனால் அந்த முறையில் இந்நூலை இயற்றாமல் வாழ்க்கை வரலாற்றையும் அதனுடன் தொடர்புடைய செயல்களையுமே மையமாகக் கொண்டு புனைந்துள்ளேன்"[15] என்று கூறுகிறார். யாப்பும் உலாவுக்குரிய கலிவெண்பாவாக இல்லாமல் எண்சீர் விருத்தத்தில் அமைந்துள்ளது. நாட்டுப் படலம், நகர்ப்படலம், வீட்டுப் படலம், வினைநீங்கு படலம் என்ற நூல் பகுப்பும் உலா இலக்கியத்துக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை.

முந்தைய இரண்டுமே இவ்வகையில் எண்ணப்படுவ தற்கு உரியன. இறைவனை எல்லா உறவுகளிலும் ஒப்பிட்டுப் பார்க்க நம் சமுதாயம் நெகிழ்வளித்துள்ளது. ஏனெனில், இறைவன் (1) உருவமில்லாதவன் (2) மனிதனல்லன் (3) அவன் நடத்தை பற்றி மக்களுக்குக் கவலை இல்லை (4) கடவுளுக்குக் கணவன் மனைவி உறவு கொடுத்து உட்பூசல்களைப் பகிரங்கப் படுத்தி அதற்காக விழாக்கள் கொண்டாடுகிறோம் (5) இறைவன் நெறி தவறியதாக இருந்தாலும் அஃது அவனது

14. ச. பாலசுந்தரம், கலைஞர் வாழ்க, ப. 13
15. வே. கபிலன், முன்னுரை, சி.பி.சி. உலா, ப. 1

சிறப்புகளில் ஒன்றாகக் கருதப்படுகிறதே ஒழிய மனிதர்களைப் போல் நெறிதவறல் என்று கருதப்படவில்லை.

எனவே வாழும் மனிதனை, மக்களாட்சிக் காலத்தில் நமக்குள்ளிருந்து வளர்ந்து தலைமை பெறும் ஒருவரை, சீர்திருத்தவாதியை, பிறர் துன்பம் துடைக்க முன்வருபவரை மீண்டும் 'உலா'த் தலைவனாக்குதல் ஏற்புடையதன்று.

## 4. ஆற்றுப் படை

சிற்றிலக்கியங்களுள் காலத்தால் முந்தியதாக ஆற்றுப் படை இலக்கியமே விளங்குகின்றது. பன்னிருபாட்டியல் ஆற்றுப் படையின் இலக்கணத்தைப் பின்வருமாறு நுவலும்:

"புரவலன் பரிசில் கொண்டு மீண்ட
இரவலன் வெயில்தெறும் இருங்கா னத்திடை
வறுமை யுடன்வருஉம் புலவர் பாணர்
பொருநர் விறலியர் கூத்தர்க் கண்டப்
புரவலன் நாடூர் பெயர்கொடை பராஅய்
ஆங்குநீ செல்கென விடுப்பதாற் றுப்படை"[16]

"ஓங்கிய அதுதான் அகவலின் வருமே"[17]

"புலவராற் றுப்படை புத்தேட்கு முரித்தே"[18]

சங்ககாலத்தில் தோன்றிய ஆற்றுப்படைகள் யாவும் இவ் விலக்கணப்படியே அமைந்துள்ளன. எனினும் சங்ககாலத் துக்குப்பின் 17 ஆம் நூற்றாண்டில்தான் ஆற்றுப்படை இலக்கியம் மீண்டும் தோன்றியுள்ளது. சங்ககாலம் முதல் இந்நூற்றாண்டு வரை பதினைந்து நூல்களே வெளிவந்துள்ளன. ஆய்வுப் பகுதியில் நான்கு நூல்கள் இடம்பெறுகின்றன. மீண்டும் ஆற்றுப்படை இலக்கியங்கள் முனைந்து தலைதூக்கத் தொடங்கியுள்ளதாகவே கொள்ளலாம். பாட்டுடைத் தலைவர் பெயராலோ, அல்லது யார் ஆற்றுப் படுத்தப் படுகிறார்களோ அவர்கள் பெயராலோ ஆற்றுப்படை நூல்கள் பெயர் பெறும். இக்கால இலக்கியத்தில் இதிலும் ஒரு புதுமை இருப்பதைக் காணலாம். 'இளந்தமிழ் திருமுருகாற்றுப்படை' என இருவகை யிலும் சேர்ந்த ஒட்டுப்பெயர் அமைகின்றது. 'அழகு ஆற்றுப்

16. பன்னிருபாட்டியல்: 202
17. மேலது: 203
18. மேலது: 204

படை' மட்டும் வழியின் இயல்பு முதலிய கூறுகளின்றி ஆதி பரா சக்தி பெருமை கூறும் அளவிலேயே நின்று விடுகிறது.

சங்க காலத்தில் தோன்றிய ஆற்றுப்படைகள் பண்பாட்டுக் கருவூலங்கள் ஆகும். மக்களின் பழக்க வழக்கங்கள், நடை, உடை, விருந்தினரை ஓம்பும் பாங்கு, உணவு வகைகள் ஆகியவற்றை அறிந்து கொள்ள அவை உதவுகின்றன.

அவ்வாறே ஒரு குறிப்பிட்ட இனத்தவரின் (செட்டி மக்கள்) வாணிபமுறை, பணிவு, கொடைத்தன்மை, இலக்கியத் தொண்டு, மகளிர் வனப்பு, அவ்வினத்தவரின் பிரிவுமுறைகள், புலவர் காலத்தில் சிறந்து விளங்கிய மக்கட் குறிப்பு ஆகியவற்றைப் 'பூம்புகார் ஆற்றுப்படை' வாயிலாகவும், அறு படை வீடுகளின் சிறப்பு அமைப்பு, வழிபாட்டு முறை (பேய்மகள், வேலன் வெறியாட்டு), இறைவனின் தோற்றம், விழாக் காண்போர் வருணனை, அந்தணர் வழிபாட்டு முறை, இசைக்குறிப்பு ஆகியவற்றை 'இளந்தமிழ் திருமுருகாற்றுப்படை' வாயிலாகவும் அறிந்து கொள்ள முடிகின்றது. ஒரே தெய்வம் காசியில் விசாலாட்சியாகவும், காஞ்சியில் காமாட்சியாகவும், மதுரையில் மீனாட்சியாகவும் காட்சியளிப்பதனை 'அழகு ஆற்றுப்படை' வாயிலாகவும், சோவியத்து அரசின் சிறப்பு, சோவியத்தின் புகழ், கனிவளம், கல்வி, தொழில், மின்வசதி, மருத்துவம், உணவு உற்பத்தி வகையில் சோவியத்து நமக்குச் செய்த உதவி, நெருக்கடி கால உதவிகள் ஆகியவை பற்றிச் 'சோவியத் நாட்டிற்குத் தென்றலாற்றுப்படை' வாயிலாகவும் அறிய முடிகின்றது.

## அமைப்பு

'சோவியத் நாட்டிற்குத் தென்றலாற்றுப்படை' அறுசீர் ஆசிரிய விருத்தத்திலும் ஏனைய நூல்கள் ஆசிரியப்பாவிலும் அமைந்துள்ளன.

**"முழுமதி முகமும் முயற்கரைத் திலகமும்
செழியசெங் குமுதவா யிதழுந் செக்கர்
வானமின் னுடையும் மையிருட் குழலும்
ஊனமில் விண்மீன் ஒளிதரும் ஆரமும்
திகழ்தரக் கொழுநனைத் தேடி மதன்மனை
மகள்வந் தாளென வந்தது மாலை"[19]**

19. பெரி. இலக்குமணச் செட்டியார், பூம்புகார் ஆற்றுப்படை: 317–319

என, மாலை நேர வருகையைப் பெரி. இலக்குமணச் செட்டி யார் வருணிக்கிறார்.

> **"மாலை மார்ப, நூலறி புலவ,**
> **அந்தணர் வைப்பே, அறிஞர்தம் நிதியே**
> **மங்கையர் கணவ, மைந்தரின் ஏறே"[20]**

எனவரும், 'இளந்தமிழ் திருமுருகாற்றுப்படை' அடிகள் திரு முருகாற்றுப்படையை ஒத்துள்ளன. தமிழ் மக்களின் வழிபாட்டு முறைகளும் நக்கீரரைத் தழுவி உரைக்கப்பெற் றுள்ளன.

'பூம்புகார் ஆற்றுப்படை' பெற்றார், பெறாதார் எனும் உறழ்ச்சியின்றி 'நினைவுபெற்றார்', 'பெறாது அயர்ந்தார்'க்கு உரைக்கும் நீர்மையுடையது. மறந்து போன வரலாற்றை நினைவூட்டி இனத்தை எழுச்சி பெறச் செய்யும் நோக்கம் உடையதெனினும், ஒருவகையில் இது சாதிப் பார்வையுடைய தாகும்.

நமது நாட்டாருக்குச் சோவியத்து நாட்டார் மீது தோன்றி வளர்ந்து வரும் நட்புணர்வை வெளியிடுதல் 'சோவியத் நாட்டிற்குத் தென்றலாற்றுப்படை'யின் உள்ளடக்க மாகும். ஜார்வீழ்ச்சியும், பாரதி அதனைப் பாடிய பாங்கும் நினைவு கூரப்படுகின்றன. நம் நாட்டு நிலையும் சோவியத்தின் உதவியால் நாம் வளர்ந்துள்ள பாங்கும் காட்டப்படுகின்றன. பிலாய் ஆலை அனல் மின் நிலையப் படங்களும் இணைக்கப் பட்டுள்ளன.

> **"உலகநாட் டவையில் எம்மை ஒழித்திட முயன்றபோது**
> **விலக்குவர் உரிமை கொண்டு; வேறெவர் பாய்ந்த போதும்**
> **கலக்குவர்"[21]**

எனப் போர் நெருக்கடிக் காலத்தில் சோவியத்து நமக்குக் கைகொடுத்த தன்மை புலப்படுத்தப் பெறுகின்றது. ஆற்றுப் படுத்தப் பெறும் தென்றல் பயனேதும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

விசாலாட்சியை எழில்தடங்கண்ணி எனவும், காமாட்சியை இன்மலர்க்கண்ணி என்வும், மீனாட்சியை

20. அ.கு. ஆதித்தர், இளந்தமிழ் திருமுருகாற்றுப்படை: 291–293
21. பா. இராமச்சந்திரன், சோவியத் நாட்டிற்குத் தென்றலாற்றுப்படை, ப. 13

அங்கயற்கண்ணி எனவும் தமிழாக்கித் தருதல் அழகு ஆற்றுப் படையின் தனிச்சிறப்பாகும்.

## 5. தூது

தூது செல்லும் பொருள், தம் உள்ள வேட்கையைப் பிறருக்கு உரைக்காது எனத் தெரிந்தும் அதனைத் தூதாக விடுத்தல் புலவர் போற்றிய நெறியாகும். இறைவனோ, மனிதனோ பாட்டுடைத்தலைவனாக அமைய, அவர்தம் உயர்வையும், தூதுசெல்லும் பொருளின் பெருமையையும் பேசியபின், கவிஞர் தம் வேட்கையை இறுதியில் புலப்படுத்து கிறார். இவ்வாறு இலக்கிய வழக்கு ஏற்ற தூது, காமம் மிக்க கழிபடர்கிளவியின் பக்கமே சார்ந்துள்ளது.[22]

தூது செல்லும் பொருள், யாப்பு ஆகியவற்றை,

"பயிறருங் கலிவெண் பாவி னாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
சந்தியின் விடுத்தல் முந்துறு தூதெனப்
பாட்டியல் புலவர் நாட்டினர் தெளிந்தே"[23]

என, இலக்கண விளக்கம் உரைக்கும்.

தூது செல்லும் பொருள்கள் எவையெவை என்பதனை யும் பின்வருமாறு உணர்த்தியுள்ளனர்.

"எகினமயில் கிள்ளை எழிலியொடு பூவை
சகிகுயினெஞ் சந்தென்றல் வண்டு — தொகைபத்தை
வேறுவே றாப்பிரித்து வித்தரித்து மாலைகொண்டன்பு
ஊறிவா வென்றல் தூது."[24]

எனவரும் பா சுட்டும் பொருள்களைத் தவிரப் பணம், தமிழ், மான், வசனம், சவ்வாது, நெல், புகையிலை, விசிறி, துகில், காக்கை, கழுதை, பழையது, அன்பு, செருப்பு, முதலிய பல்வேறு பொருள்களைத் தூதுவிடுப்பதாக அமைந்த நூல்கள் இன்று எழுந்துள்ளன.[25] ஆய்வுப் பரப்பில் பொடி, பா, ஆனை முதலியனவும் தூதுப் பொருள்களாகியுள்ளன. 'கிளி விடு தூது'

22. சொ. சிங்காரவேலன், தமிழ்விடுதூது, சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் ப. 391
23. இலக்கணவிளக்கம் பாட்டியல்: 874
24. ந.வீ, செயராமன், மு.நூ., ப. 146இல் மேற்கோளாக வந்துள்ளது.
25. ந.வீ. செயராமன், மு.நூ., ப. 147

அறுசீர் விருத்தத்தில் அமைய, ஏனைய அனைத்தும் கலி வெண்பாவினாலே இயற்றப்பட்டுள்ளன.

இக்காலத் 'தூது' இலக்கியங்களுள்; 'பாவிடுதூது' 'மயில் விடுதூது' ஆகியவற்றில் இடையிடையே தலைப்புகளிட்டு அதன் கீழ் 'கருத்துரைத்தல்' என்னும் முறை காணப்படு கின்றது. தூது இலக்கியத்தின் இலக்கணம் கூறும் நூல்கள் 'கடவுள் வாழ்த்து' 'காப்பு' என்னும் உறுப்பு அமைந்து வர வேண்டும் என்று வரையறை கூறவில்லை. ஆயினும், ஸ்ரீ குன்றக்குமரன் 'பொடிவிடுதூது' 'மயில்விடுதூது' ஆகியவற்றில் காப்புச் செய்யுட்கள் பாடப்பட்டுள்ளன.

செந்தமிழ், பெரியார், அண்ணாதுரை ஆகிய மூவரிடமும் காப்பு வேண்டி, மு.ஆ, சண்முகன் மேல் இயற்றப் பட்ட 'முகில்விடு தூது' நூலில் வெண்பாக்கள் அமைந்துள்ளன. கடவுளைக் காப்பாக்காது, தலைவர்களைக் காப்பாக்கியிருக்கும் இந்நூலின் போக்குப் புதுமையானது.

## பெயர் பெறும் முறை

தூது இலக்கியங்கள் பெரும்பாலும் தூது செல்லும் பொருளாலே பெயர்பெற, சிறுபான்மையாகப் பாட்டுடைத் தலைவர்களின் பெயர் சேர்த்தும் கூறப்படும். இம்மரபினை ஒட்டி, கிளிவிடுதூது, முகில்விடுதூது, மயில்விடுதூது என்று தூதுப்பொருளை மட்டும் குறித்ததாகப் பெயர்பெற்றும் 'ஸ்ரீ குன்றக்குமரன் பொடிவிடுதூது' 'டாக்டர் கலைஞர் மு. கருணா நிதி தோழிவிடுதூது' என்று பாடப்படுவோர் பெயர் பெற்றும் நூல்கள் வந்துள்ளன.

## தூதுப் பொருள்

இக்காலத் தூதுநூல்கள் அஃறிணைப் பொருள்களைப் பெரும்பாலும் தூது செல்லும் பொருள்களாகக் கொண்டுள் ளன. தோழி இரண்டு நூல்களில் மட்டும் தூதாக அமைகிறாள்.

## தூதின் கருத்து—மாற்றம்

முன்னைய தூது நூல்கள் அகப்பொருள் சார்ந்தன வாகவே அமைந்துள்ளன. கவிஞன் தன்னைத் தலைவியாக்கி இறைவனைத் தலைவனாக்கிப் புனைதலே தூது இலக்கியம் ஆகும். இக்காலக் கவிஞர்கள் இம்மரபினைப் போற்றியதாகத் தெரியவில்லை. இறைவனிடம்,

**"கூந்தலினார் காமக் குழியில் வீழ்ந்—தாழாமல்**
**தீந்தமிழ்ப்பா விற்றுத் திரியாமல்—சேந்தநின**
**தின்புகழ் நூ லன்றி யேனைப்புன் னூ லோதிப்**
**புன்பொழுது போக்காமற் பூசனையு—மன்புமிகு**
**நல்ல செபஞ் சேவடியி நாட்டமுத லாயநலம்**
**வல்லைபெற வந்து வரமருளி—யெல்லையில்பே**
**ரானந்த வீடுமவனுக் கருள்புரிக"[26]**

*என்று கவிஞன் தன்னைத் தொண்டனாக்கித் தன் குறை நீக்கிப் பக்தி நிறைவுற வேண்டித் தூது அனுப்புதல் மரபின் மாற்றத்தைப் புலப்படுத்துகிறது.*

*இதனைத்தவிர முகில்விடுதூது, பாவிடுதூது ஆகியவற்றில் பாட்டுடைத் தலைவர்களாகக் கொள்ளப்பட்ட தலைவர்களின் உயர்வுகள், சிறப்புகள் கூறப்படுவதோடு, கவிஞன் தன் அன்பையும் நன்றியையும் எடுத்துரைத்து வாழ்த்துச் சொல்லி அனுப்பும் செய்திகளே அமைகின்றன. பாட்டுடைத் தலைவர்கள் மீது புலவர்கள் கொண்டுள்ள ஈடுபாட்டை எடுத்தியம்புதலே நோக்கமாதலால்தான், தூதின் பாடுபொருள் நெகிழ்வுடையதாய் இருக்கின்றது.*

**உள்ளடக்கம்**

*தூது இலக்கியத்தில் பாட்டுடைத் தலைவர்களின் தோற்ற வருணனை இடம் பெறுதல் வழக்கம். "கடவுளைப் பாதாதி கேசமாகவும், மானிடரைக் கேசாதிபாதமாகவும் வருணிக்க வேண்டுமென்னும் விதிமுறையைத் 'தமிழ்விடுதூது' ஆசிரியர் நன்கு அறிந்துள்ளார்"[27]*

*'பாவிடுதூதி'ல் பேகன், கலைஞரைப் பாதாதிகேசமாக வருணித்து மரபை மீறி,*

**"நாடுதுயர் நீக்க நடக்கும் திருவடியும்**
**தேடரிய செல்வம் திருநாட்டில்—கூடிவர**
**மாறாமல் எண்ணும் மணிமார்பும் !—மாற்றாரைத்**
**தேர்தலிலே வென்ற திருக்கையும் !"[28]**

*எனப் பாடுகிறார்.*

26 கு. நடேச கவுண்டர், மயில்விடுதூது: 384–387
27. உ.வே. சாமிநாதையர் (பதி.ஆ.) முன்னுரை, தமிழ்விடுதூது
28. பேகன், பாவிடுதூது, ப. 6

ஆனை. நரசிங்கப் பெருமாளின் 'டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி தோழி விடு தூது' மாநிலத் தன்னாட்சி முழக்கமாக அமைகிறது. கம்பன், இளங்கோ, இராசராசன் ஆகிய மூவரும் ஓருருப் பெற்றே 'கருணாநிதி'யாகியிருப்பதாகவும் அதனால் அவர் 'புலமைத் தலைமைப் புலவன்' ஆவார் என்றும் வருணிக்கிறார். தமிழக வீழ்ச்சி பற்றிக் கூறும் போது,

**"தடமாறிப் போனார் தமிழர்—நடைமெலிந்து**
**நல்லோர்கள் கல்வி நலமிழந்து நின்றார்கள்**
**பொல்லார் நலமுற்றுப் பொய்விற்றார்"[29]**

என்கிறார்.

அங்கயற்கண்ணிக்கு ஆனையைத் தூது விடும் நெல்லை ஆ. கணபதி யானையின் பல்வேறு பெயர்களையும் யானையின் பெயரால் வழங்கும் பழமொழிகளையும் குறிப்பிடுகிறார். நூலினுள், முதலமைச்சராகிய கலைஞரையும், அவரது அமைச்சரவையில் உள்ளவர்களையும் பெயர் சுட்டிப் பாராட்டுகின்றார்.

## 6. கலம்பகம்

ஒருபோகு, வெண்பா, கலித்துறை ஆகிய இவை முதலுறுப்பாக அமைய, புயம் முதலாகத் தவம் ஈறாக உள்ள பதினான்கு உறுப்புகள் வெண்டுறை, வஞ்சித்துறை, இன்னிசை வெண்பா, அகவல், விருத்தம் ஆகியன விரவிவர அந்தாதியாக முடிவது கலம்பகம் ஆகும்.[30] 'நந்திக் கலம்பகம்' முதலாக ஏறத்தாழ அறுபத்திரண்டுக்கு மேற்பட்ட கலம்பக இலக்கியங்கள் தோன்றியுள்ளன. இப்பகுதியில், 'அன்புக் கலம்பகம்', 'குறுக்குத்துறைக் கலம்பகம்', 'இசைத் தமிழ்க் கலம்பகம்' ஆகியன ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. அவற்றுள் அன்புக் கலம்பகம் கலிப்பா, வஞ்சிப்பா, மருட்பா யாப்பிலும், அவற்றின் இனங்களிலும் யாக்கப்பெற்றுள்ளது. இக் கலம்பகத்தின் பாடுபொருள் அறிவுரை, வாழ்த்துரை, எனப் பலநோக்கம் கொண்டதாக அமைந்துள்ளது. 'தமிழின் தனிச் சிறப்பு', 'தமிழகப் பண்பு', 'சித்தர்களின் பேராற்றல்', 'அறிவின் தெளிவு', 'மாமி மருமகளுக்குப் புத்தி புகட்டல்', 'தாயும் மகளும்', என்றிவ்வாறே தலைப்புகளிட்டுக் கவிதைகள்

29. ஆனை, நரசிங்கப் பெருமாள், டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி தோழி விடுதூது, ப. 9
30. பன்னிருபாட்டியல்: 129

படைக்கப்பட்டுள்ளன. "பாக்களாலும், பொருளாலும், உறுப்பூாலும் கலவை நிலை பெற்று விளங்குகின்ற இவ்விலக் கியங்களை இக்காரணம்பற்றியே 'கலம்பகம்' என்ற பெயரால் முன்னோர் அழைத்திருக்க வேண்டும்"[31] என்பார் கூற்றும் இவண் நினையத்தக்கது.

கலம்பக உறுப்புகள் பதினெட்டு எனப் பாட்டியல் நூல்கள் கூறினும், அன்புக் கலம்பகத்தில் அவ்வுறுப்புகள் பயின்று வரவில்லை.

'பொதுநீதி' எனும் தலைப்பில்,

"ஆவதும் அழிவதும் அறிவதே அறிவு
மானமும் ஞானமும் மாத்திரை ஒன்றே
பெருமையும் சிறுமையும் பெற்றவர் அறிவர்
இன்பம் கண்டோர் துன்பம் விரும்பார்
நண்பு முதிர்ந்தால் பண்பு தோன்றும்
கலக்க மில்லா விளக்கம் ஞானம்
மக்கள் வாழ்வு சிக்கல் மிக்கது
தெளிந்த குடிமை தேர்வது கடமை
ஆய்ந்து தெளிந்தோர் தேய்ந்து நலியார்
செழிக்க உண்டு சிறக்க வாழ்வாய்"[32]

என்றவாறு வாழ்க்கைத் தத்துவத்தை அடுக்கிச் சொல்கின்றார் கி. அரங்கசாமி.

குறுக்குத் துறைக் கலம்பகம் முருகன் பெருமையைப் பேசுகின்றது. சித்திரக்கவி, சம்பிரதம் முதலிய பதினெட்டு உறுப்புகளையும் கொண்டியலுகின்றது. நால்வகைப் பாக்கள், பாவினங்கள், அந்தாதித் தொடையுடன் அணியழகு தோன்ற அமைந்துள்ளன.

"தூதோது தத்தைத்தீ தோதூ தித் தீதேதோ
தே தாதைத் தீதேதோ தூ தத்தை — தீதேதோ
தொத்தித் ததைத்ததே தித்தி ததிதுதித்துத்
தத்தைத் துதைத்ததே தா."[33]

எனத், தகர வர்க்க நேரிசை வெண்பாவில் கவிஞர் தம் ஆற்றலை வெளிப்படுத்துகிறார்.

31. கு. முத்துராசன், சிற்றிலக்கியச் சிந்தனைகள், ப. 214
32. கி. அரங்கசாமி, அன்புக்கலம்பகம், 57
33. தி.சு. ஆறுமுகம், குறுக்குத்துறைக் கலம்பகம், ப. 46

இசைத்தமிழ்க் கலம்பகம், கலம்பக இலக்கண அடிப்படையில் அமையவில்லையெனினும், தமிழ், தமிழர், தமிழ்நாடுபற்றிய முந்நூற்று மூன்று பாடல்களைக் கொண்டு விளங்குகின்றது.

## 7. கோவை

கற்பனைத் தலைமக்கள் இருவரைக் களவு, கற்பு எனும் கைகோள்களில் நானூறு கட்டளைக் கலித்துறையில் பாடுவது 'கோவை'யாகும். பாட்டியல் நூல்கள் பகரும் அகப் பொருளை மட்டும் இயம்புவதால் 'அகப்பொருட் கோவை' என்றும், நானூறு பாடல்களைக் கொண்டு அமைவதால் 'நானூற்றுக் கோவை' என்றும் கோவை நூல்கள் சுட்டப் பெறும்.[34]

ஆய்வில் இடம்பெறும் 'அண்ணாத்துரைக் கோவை'யும், 'அண்ணாக்கோவை'யும் பாட்டெண்ணிக்கை அளவில் வேறு பட்டாலும் அமைப்பில் ஒற்றுமையுடையன. 'கலைஞர் மும்மணிக் கோவை', 'இசையரங்கு இன்னிசைக்கோவை' 'சில்லரைக் கோவை' ஆகிய மூன்றும், கோவை இலக்கணத் திலிருந்து முற்றிலும் மாறுபட்டு, அகப்பொருள் துறையும் இன்றி அமைந்துள்ளன.

## கோவை இலக்கியத்தின் துறைகள்

"கோவை இலக்கியத்தின்கண் உள்ள துறைகள் அனைத்தும் கைக்கிளை முதலாகப் பொருள் வயிற்பிரிவு ஈறாக முப்பத்து மூன்று கிளவிகளில் அடக்கிக் கூறப்படும். சில சமயங்களில் நானூறு என்ற எண்ணைத் தாண்டியும் சில கோவை நூல்களில் காணப்பெறுகின்றன."[35]

'அண்ணாத்துரைக் கோவை' இருபத்தைந்து கிளவிகளாகப் பகுக்கப்பட்டு நானூற்றிருபது துறைகளை உடையதாய் விளங்குகின்றது. 'அண்ணாக்கோவை' பதினெட்டுக் கிளவிகளை உடையதாய் இருநூற்று எண்பது துறைகளைக் கொண்டுள்ளது.

தஞ்சைவாணன் கோவையில் 'இடந்தலைப்பாடு' என்னும் கிளவி ஏழாவதாக அமைந்துள்ளது. அண்ணாக் கோவை இதன்வழியே அமைந்திருக்க, அண்ணாத்துரைக் கோவையில் இடந்தலைப்பாடு முதல் கிளவியாக வந்துள்ளது.

34.. மு. சண்முகம் பிள்ளை, சிற்றிலக்கிய வளர்ச்சி, ப. 94
35. ந.வீ. செயராமன், மு.நூ., ப. 65

அண்ணாத்துரைக் கோவையில் கற்பியல் மட்டும் கூறப் பட்டுள்ளது என்றாலும் இடந்தலைப்பாடு, இயற்கைப் புணர்ச்சி முதலிய களவிற்குரிய கிளவிகளும் காணப்படு கின்றன. அண்ணாக் கோவையில் களவியல் என்ற பகுதி மட்டுமே உள்ளது. கற்பியல் இணைக்கப்படவில்லை.

## 8. பாவை

'பாவை' என்பது மணலிற் செய்த ஓர் உருவைக் குறிக்கும். 'பாவை' என்ற சொல்லிற்குப் பதுமை, பெண், நோன்பு, இஞ்சிக் கிழங்கு, கருவிழி, கூத்து, குரவம் முதலிய பல பொருள்கள் இருப்பினும் இவ்வனைத்துப் பொருள்களுக்கும் அடிப்படை 'உருவ அமைப்பு' எனக் கொள்ளுதல் ஏற்புடையதாகும். கண்ணின் கருவிழியில் பிறர் உருவமும் காண முடியுமாகை யால் அதனையும் பாவையென்று அழைத்திருக்கலாம். பதுமை போன்று புனைவு செய்து ஆடிய கூத்தும் பாவைக் கூத்தென ஓதப்பெறும். வண்டல் மண்ணால் பெண் வடிவாகிய உருவத்தை அமைத்துப் பெண்கள் வழிபட்டு நோற்றதால் அந்நோன்பு 'பாவை நோன்பு' என அழைக்கப் பெற்றது. பாவைப் பாடல்களின் அடிவரையறை பற்றிய குறிப்பைப் பேராசிரியர் உரையில் காண்கின்றோம்.[36]

சங்க இலக்கியத்துள் பாவை என்பது மகளிர் விளையாட்டுகளுள் ஒன்று என்பது தெளிவாகவுள்ளது.[37] பரிபாடல்களில் சமயத் தொடர்புடன் பாவை விளையாட்டு அயர்தல் விளக்கப் பெறுகின்றது.

"பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டின் சைவ வைணவக் கன்னிப் பெண்கள் மழைவளங் குறித்தும், சிறந்த கணவனைப் பெறுதற் பொருட்டும் மார்கழித் திங்களில் நீராடிப் பராசக்தி யாகிய கௌரியை வழிபட்டு நோன்பு மேற்கொண்டொழுகி னர் என்பது மணிவாசகர் அருளிய திருவெம்பாவையாலும் ஆண்டாள் அருளிய திருப்பாவையாலும் அறியத்தக்கது."[38] ஆய்விற்குட்பட்ட நான்கு பாவை நூல்கள் தமிழன்னையின் கலைக்கோலத்தை மேலும் மெருகூட்டுகின்றன. அவை முந்தைய பாவை இலக்கியங்களின் மரபினை வடிவமைப்பி

36. தொல். பொருள், பேரா: 461
37. நற்: 179, பட்டின: 101–102; புறம்; 11; பரி; 11
38. மு. கதிரேசஞ் செட்டியார், திருவெம்பாவை (கதிர்மணி விளக்கம்) ப. 2

னால் ஏற்றுக் கொண்டிருப்பினும் பாடுபொருளில் தனித் தன்மையைக் கொண்டு விளங்குகின்றன.

"காலமும் நாகரிகமும் மாற்றம் பெற்ற இன்றைய நிலைக்கு ஏற்ப நான் பாவைப் பாடல்களைச் சமய காவியங்களாக அமைக்காது மக்கள் சமுதாயத்திற்குப் பயன்படு காவியமாகத் தந்துள்ளேன்"[39] எனத் தமிழரசன் தன் 'காதல் பாவை'யில் முன்னுரைத்தலும் ஈண்டுச் சுட்டத்தக்கது.

## கன்னிப்பாவை

இறையரசன், 'கனாத்திறமுரைத்தல்' முதலாக 'அறத்தொடு நிற்றல்' ஈறாக ஒன்பது தலைப்புகளில் பல்வேறு யாப்புகளில் இந்நூலை யாத்துள்ளார். பத்திமை உணர்வினைக் காதல் உணர்வாக மாற்றிக்கொண்டு இறைவனைக் காதலனாக வும் ஆன்மாவைக் காதலியாகவும் அமைத்துப்பாடும் நெறியினை (Bridel Mysticism) நாயன்மார்களும் ஆழ்வார் களும் போற்றியுள்ள நெறியில் நின்று ஏசுபிரானைப் பாடியுள்ளார்.

ஆன்மா எனும் கன்னிப்பெண் தான் கண்ட கனவைத் தன் தோழியர்க்கு உரைத்தல், வைகையில் நீராடிய பின்னர், பிற பெண்களையும் எழுப்பி, குழந்தை உருவில் வந்திருக்கும் தலைவனைக் காணச் செல்ல வேண்டுதல், ஏசுவாம் குழந்தை யைக் கண்ட ஆன்மா தாயாக மாறித் தாலாட்டுப் பாடுதல், ஏசுபிரான் சிலுவையில் அறையப்பட்ட பின்னர், ஆன்மத் தாய் மகனுக்காகப் புலம்புதல் ஆகியன இந்நூற் செய்திகளாகும்.

> "அச்சச்சோ ஈதென்ன
> கோலம் ! கோலம் !
> ஆரடித்தார் என்னரசை ?
> அடித்துக் கொன்றார் !
> அச்சச்சோ ஈதென்ன
> குருதி வெள்ளம் !"[40]

என வரும் 'அன்பின் புலம்பல்' அவலச் சுவை கொண்டு நிற்பதனை உணருகின்றோம்.

---

39. தமிழரசன், காதல்பாவை, ப. 1
40. இறையரசன், கன்னிப்பாவை, ப. 23

## தைப்பாவை

கண்ணதாசனின் 'தைப்பாவை' அமைப்பு நிலையில் ஆண்டாளையும், மாணிக்கவாசகரையும் பின்பற்றி முகிழ்த்தாலும் பொருள் நிலையில் தனித்தன்மை பெற்றுப் பொலிகின்றது. பண்டைத் தமிழர்கள் தைத்திங்களையே புத்தாண்டின் தொடக்கமாகக் கொண்டனர். சமயக் கொள்கைகளும் இக்கருத்திற்கு அரண் செய்யும். உழவர்களின் அறுவடைத் திங்களாகத் திகழும் தைத் திங்களையும், அத்திங்களில் தமிழர்களால் கொண்டாடப்பெறும் பொங்கல் புதுநாளையும் பெண்ணாக உருவகித்துக் கொண்டதே தைப்பாவை. அகப்பொருட் செய்திகட்கு உயிரோட்டமாகத் திகழும் காதல் உணர்வுகளே இந்நூலுக்கு ஊற்றாக உள்ளன. களவொழுக்கத்தில் ஒழுகும் காதலர் இருவருக்குக் கற்பு வாழ்க்கையினை இடையூறின்றி அமைத்துக் கொடுக்கத் தைப்பாவையினை வேண்டுகிறார் கவிஞர்.[41]

அடியவன் ஒருவன் ஆன்மீக வாழ்வில் இறைவனிடத்திலே தான் பெற்ற இன்பத்தினை அனைவரும் பெற வேண்டி அழைப்பது இயற்கை. ஆன்மீகத்தின் உயிர் நிலையாகவும், பொது நிலையாகவும் அது போற்றப்படும். தலைவன் ஒருவன் தான் தலைவியிடம் துய்த்த இன்பத்தினைப் பாவையும் பெறுமாறு வேண்டும் போக்கில்,

> "நீளத் தழுவும்
> நெய்வாசப் பூங்குழலை
> நீயுந் தழுவாயோ
> நிறைந்த சுகத் தைப்பாவாய்"[42]

என்ற பாடல் அமைந்திருப்பது புதுமரபாகத் தோன்றுகிறது.

## காதல் பாவை

தமிழரசனின் 'காதல் பாவை' நூற்று அறுபத்திரண்டு பாக்களைக் கொண்டு இலங்குகிறது. பல்வேறு மண அரங்குகளிலும், கிழமை இதழ்களிலும் வெளிவந்த பாடல்களாயிருந்தாலும் தமிழருக்கு வளவாழ்வு வேண்டுதலே இப்பாவையின் நோக்கமாகும். இவ்வாசிரியர் மும்மூன்று பாக்களுக்கு ஒவ்வொரு தலைப்பிட்டுள்ளார். பதிற்றுப்பத்தினைப் போலப் பாக்களுள் பயிலும் அருந்தொடர் ஒன்றால் பெயர் சூட்டியுள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

41. கண்ணதாசன், தைப்பாவை, ப. 14–15
42. மேலது ப. 34

"தூங்கித் துரும்பெனவே சோம்பிக் கழித்ததெலாம்
ஈங்குத் தவிர்த் தெழுவாய் ஈட்டி முனையாவாய்
... ... ... ... தீங்கின் முகங்கிழித்து
வேங்கைப் புலியாக வாராயோ எம்பாவாய்"[43]

எனவரும் அடிகளில் சமுதாய எழுச்சிக் குரல் எதிரொலிப்பதை உணருகின்றோம். பலவிடங்களில் பொது வுடைமைக் கருத்துகளையும் வலியுறுத்திச் சென்றுள்ளார்.[44] பலவிடங்களில் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திச் சமுதாயத்தின் பழிகளாகக் காட்சி தரும் மடமை எண்ணங்களைக் கடுமையாகச் சாடிச் செல்லுகின்றார். இதனை

"மாயநெறி பேசும் பண்டை மணமுறைகள்
தீயநினை வுகளாய்த் தீய்ந்து மரித்தழிய
ஆயப்பணி செய்வோம் கண்விழி நீ எம்பாவாய்"[45]

என வரும் பகுதி உணர்த்தும்.

## தமிழ்ப்பாவை

இந்நூலில் பாவையர் நலம், தமிழின் சீர்மை, வழிபடு முறை, பெறலரும் பயன் முதலியவை கூறப்படுகின்றன. 'துயிலெழுப்பல்' இரட்டுற மொழிதலாக அமைதல் வேறு எந்த நூலிலும் இல்லாத சிறப்பாகும். துயிலும் பாவையை எழுப்புதலோடு, தொடர்ந்து தூங்கிக் கொண்டிருக்கும் தமிழர் களையும் எழுப்ப வேண்டும் என்ற கருத்தோட்டத்தில் நூல் அமைந்துள்ளது. நூலில் வரும்,

"தன்னுடைய
எண்ணம் தமிழாகி, ஏற்குமுயர் செய்கையினால்
வண்ணத் தமிழ்வளர்க்கும் வள்ளலையே என்வாழ்வின்
கண்ண வனாய்ஏற்றுக் களித்திடுவேன் ! என்றுரைக்கும்
பெண்ணே !"[46]

என்ற பகுதியில் தமிழ்ப் பற்றை அழுத்தமாக வலியுறுத்தி யுள்ளார்.

43. தமிழரசன், மு.நூ. ப. 7
44. மேலது, ப. 13, 43, 55
45. மேலது, ப. 34
46. செ. வரதராசன், தமிழ்ப்பாவை, ப. 9

தமிழைப் பாவையாக உருவகித்த பாங்கிலும், உள்ளடக் கத்திலும் கவிஞர் தம் தமிழன்பை வெளிப்படுத்தியுள்ளார்.

## 9. பிள்ளைத்தமிழ்

மரபில் காலூன்றிப் புதுவானில் கிளைபரவும் தமிழ்ச் சீர்மையை நிறுவும்வகையில் ஆய்வுக்களமாய் அமைந்த கால கட்டத்தில் பிள்ளைத் தமிழ் நூல்கள் எழுந்துள்ளன.

'குழவி மருங்கினும் கிழவதாகும்'

என்று (தொல். பொருள். நச்: 84) தொல்காப்பியத்தில் வித்தூன்றப் பெற்று, நச்சினார்க்கினியர் உரையால் விளக்கம் பெற்று, ஐயனாரிதனாரின்[47] அரவணைப்புக்குப் பின் வளர்ந்த பிள்ளைத்தமிழ்ச் செடி ஆழ்வார்களின்[48] பக்தி இலக்கியங் களைப் பற்றி வளர்ந்து விட்டது. எனினும் 'குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்' பாடி முழுவடிவில் பிள்ளைத் தமிழின் இலக்கியத் தகுதியை நிலை நிறுத்திய பெருமை ஒட்டக்கூத்தரையே சாரும். அன்று முதல் இன்று வரை இவ்விலக்கியவகை புதிய வரவுகளுடன் பெருமை பெற்றுத் திகழ்கிறது.

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிள்ளைத் தமிழ் நூல்கள் இருபத்தாறு ஆகும். இங்குப் பிள்ளைத்தமிழ் நூல்களின் உருவ உள்ளடக்க நிலைகளில் காணப்படும் சிறப்புக்கூறுகள் ஆராயப்படுகின்றன.

### யாப்பு எண்ணிக்கை

ஒவ்வொரு பருவத்திற்கும் பப்பத்துப் பாடல்கள் வீதம் பத்துப் பருவங்களை அமைத்துப்பாடுதலே பெரும்பாலான பிள்ளைத்தமிழ் நூல்களில் காணப்படும் பொதுவான அமைப்பு முறை. பாட்டியல் நூல்களும் இம்மரபையே இலக்கணமாக்கி மொழிகின்றன.[49]

---

47. பு.பொ.வெ.மா. பாடாண் படலம், கொளு எண்: 50
48. வி.என். தேவநாதன் (பதி.ஆ) நாலாயிர திவ்வியப்பிரபந்தம், ப. 7–16
49. "காப்பொடு செங்கீரை தால்சப் பாணி
யாப்புறு முத்தம்வருக என் றல்முதல்
அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்
நம்பிய மற்றவை சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்"–பன்னிருபாட்டியல்: 102

கலைவாணன், 'காவை முருகன் பிள்ளைத்தமிழ்' என்னும் நூலில் பதின்மூன்று பருவங்களை அமைத்துள்ளார். மரபுப்படி அமைந்த பத்துப்பருவங்கள் தவிரத், 'துயிலெழற் பருவம்' 'தகர் அடக்கு பருவம்' 'வேலோச்சு பருவம்' முதலிய புதிய பருவங்களை இந்நூலாசிரியர் சேர்த்துள்ளார். ஒரு பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் என்ற பொதுமரபிற்கு மாறாக ஒரு பருவத்திற்கு ஐந்து பாடல்களை மட்டும் இந்நூலாசிரியர் இயற்றியுள்ளார். இவ்வாறு காவை முருகன் பிள்ளைத்தமிழில் பருவங்களின் எண்ணிக்கை பாடல்களின் எண்ணிக்கை ஆகிய இரு நிலைகளிலும் பொதுநிலை மாறிய புதுமை உள்ளது. ஆனால் பாடல்களின் எண்ணிக்கை மாறுபாட்டிற்கு முந்தைய எடுத்துக்காட்டு உள்ளது. 'திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழில்' ஒவ்வொரு பருவத்திற்கும் ஐந்தைந்து பாடல்கள் வீதம் காணப்படுகின்றன. அந்த மரபு மாற்றமே இதிலும் தொடர்கிறது எனலாம்.

'வைகைப் பொன்மலை முருகன் பிள்ளைத்தமிழ்' 'கலைஞர் பிள்ளைத்தமிழ்' 'திருவைகுந்தம் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ் அமுது' ஆகிய நூல்களில் பருவத்திற்கு ஒரு பாடல் வீதம் பாடப்பட்டுள்ளது. முழு நூலுமே பத்துப் பாடல் களில் முடிந்து விடுகிறது. சோழன் பாடிய 'பாரதி பிள்ளைத் தமிழி'ல் பருவத்திற்கு இரண்டு பாடல்கள் உள்ளன. அம்புலிப் பருவத்தில் மட்டும் மூன்று பாடல்கள் உள்ளன. இதில் சீர்மை பின்பற்றப்படவில்லை. 'புதுக்கோட்டை நாரதர்மலை மாரியம்மன் பிள்ளைத்தமிழி'ல் காப்புப் பருவத்தில் பன்னிரண்டு பாடல்களும் ஏனையவற்றில் பத்தும் இடம் பெறுகின்றன. இத்தகைய அமைப்பிற்கு வ.சு. செங்கல்வராய பிள்ளையின் 'திருஞான சம்பந்தர் பிள்ளைத் தமிழும்' மு.கோ. இராமன் எழுதிய 'திருநாவுக்கரசர் பிள்ளைத் தமிழும்' வழிகாட்டிகளாகும். மு.கோ. இராமன் இயற்றிய 'ஸ்ரீ குருவாயூரப்பன் பிள்ளைத் தமிழ்' பருவத்திற்கு மூன்று பாடல்கள் வீதம் அமைந்துள்ளது.

'இருடியர்பட்டிக் குருநாதர் பிள்ளைத்தமிழ்' நூலில் பொது அமைப்புப்படி, பருவத்திற்குப் பத்துப்பாடல்கள் வீதம் அமைந்த நூறுபாடல்களுடன் நூன்முகத்தில் தனியாகவும் பருவத்திற்கு ஒரு பாடல் வீதம் பத்துப்பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

ஒவ்வொரு பருவத்தையும் ஒவ்வொரு கவிஞர் பாடி அவற்றை அக்கவிஞர்களுள் ஒருவர் தொகுப்பாசிரியராய் நின்று தொகுத்து வெளியிட்டுள்ள நிலையினைத் 'திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ்' நூலில் காணலாம். இம்முறை கவியரங்கங்கள் கண்டெடுத்த புதுமை எனலாம். புலவர்கள் ஒருங்கிருந்து நூலாய்ந்த சங்கப் பழமையும், ஆளுக்கொரு திணையாய் ஐந்திணை படைத்த ஐங்குறுநூற்று, கலித்தொகை நிலையும் இறையனார் அகப்பொருளுக்கு ஒரே நேரத்தில் பலர் உரை கண்ட கதையும் இவண் நினைவு கூரத்தக்கவை.

## பருவங்களின் வைப்புமுறை

பிள்ளைத்தமிழ் நூலில் பத்துப்பருவங்கள் இடம் பெறும் என்று எல்லாப் பாட்டியல் நூல்களும் ஒருமித்துக் கூறுகின்றன. ஆனால் பருவங்களின் வைப்பு முறையில் பாட்டியல் நூல்கள் முரண்படுகின்றன. இந்த வைப்புமுறை முரண்பாடு சிற்றில், சிறுபறை, சிறுதேர் ஆகிய மூன்று பருவங்களில்தான் காணப் படுகின்றது. சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பது பன்னிரு பாட்டியல் கூறும் வைப்புமுறை. சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்பது சிதம்பரப் பாட்டியல், பிங்கலந்தை ஆகிய நூல்கள் கூறும் வைப்புமுறை. ஆனால் ஆய்வுப் பரப்பில் அடங்கும் நூல்களில் சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்ற வைப்பு முறையே பின்பற்றப்பட்டுள்ளது. காவைமுருகன் பிள்ளைத் தமிழின் பருவவைப்பு முறையில் அம்புலியை அடுத்து வருகையும் அதனைத் தொடர்ந்து சிற்றில், துயிலெழல், சிறுபறை, சிறுதேர், தகர் அடக்கு, வேலோச்சு முதலிய பருவங்களும் அமைந்துள்ளன. இதில் சிற்றில் பருவத்தை அடுத்துத் துயிலெழல் என்ற புதிய பருவம் அமைந்துள்ளது. இப்புதிய பருவத்தை விலக்கிவிட்டுப் பார்த்தால் மற்ற நூல்களில் உள்ளது போன்று சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்ற வைப்பு முறை அமைந்திருப்பதையே காணலாம். ஆனால் அம்புலிப் பருவத்தை அடுத்து வருகைப்பருவம் வந்துள்ளமை இந்நூலின் வைப்புமுறைப் புதுமையாகும். ஏனெனில் பாட்டியல் நூல்கள் வருகைப் பருவத்தை அடுத்தே அம்புலியை அமைத்துள்ளன. இவ்வகையில் மற்ற பிள்ளைத் தமிழ்நூல்களும் பாட்டியல் காட்டிய பாதையில்தான் செல்லுகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

இனிப், பிள்ளைத் தமிழ்நூல்களின் உள்ளடக்கப் போக்கில் காணப்படும் சிறப்புக் கூறுகளை இங்குக் காணலாம்.

## காப்புப் பருவம்

திருமால் முதல் பல்வேறு தெய்வங்களையும் பரவிப் பிள்ளைத் தமிழின் பாட்டுடைத் தலைவனையோ தலைவி யையோ காக்குமாறு பாடப்பெறுவது காப்புப்பருவமாகும். காப்புப்பருவத்தில் முதற்கடவுளாகத் திருமாலைப் பாட வேண்டும் என்பது பாட்டியல் மரபு. ஆனால் இம்மரபு போற்றப்படவில்லை.

'தமிழ்த்தாய்', 'சிவன்' காப்புப் பாடல்களையடுத்துக் 'கண்ணன்' காப்பு அமைந்துள்ளதைத் திருவள்ளுவர் பிள்ளைத் தமிழிலும், சிவன், முருகன் காப்புகளையடுத்துக் கண்ணன் காப்பு அமைந்துள்ளதை 'அண்ணா பிள்ளைத் தமிழி'லும் காணலாம். திருமால் காப்பை முதலாகக் கொண்ட பாட்டியல் மரபு 'கனககிரி பிள்ளைத்தமிழ்', 'சந்த்ரசேகரேந்த ஸ்வாமி பிள்ளைத்தமிழ்' ஆகிய நூல்களில் போற்றப்பட்டுள்ளது. திருவள்ளுவர் பிள்ளைத்தமிழிலும், 'பாவேந்தர் பிள்ளைத் தமிழி'லும் தமிழ்த்தெய்வம் முதற்கடவுளாய்ப் போற்றப் பட்டுள்ளது. வைகைப்பொன்மலை முருகன் பிள்ளைத் தமிழிலும், இருடியார்பட்டிக் குருநாதர் பிள்ளைத் தமிழில் பத்துப் பாடல்களிலும் விநாயகர் காப்பே இடம் பெற்றுள்ளது. திருமாலை முதற்காப்பாகப் படைக்கும் சிறப்பு இலக்கிய நெறியை விட, நூன்முகத்தில் விநாயகர் காப்பு பாடித் தொடங்கும் நெறி ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றே கொள்ளலாம்.

திருவள்ளுவர் பிள்ளைத் தமிழில் காப்புப் பருவத்தின் இறுதிப் பாடலாகக் 'காமன் காப்பு' அமைந்துள்ளது புதுமையாகும். காமத்துப்பால் திறன் கருதிக் காமன் வாழ்த்து இடம் பெற்றது எனக் கருத இடமுண்டு. கலைஞர் பிள்ளைத் தமிழில் தமிழ்த் தெய்வமும், 'வள்ளற் பெருமான் பிள்ளைத் தமிழி'ல் சம்பந்தர், நாவுக்கரசர், சித்தர் முதலானோரும் 'காமாட்சியம்மை பிள்ளைத்தமிழி'ல் தமிழ்த்தாயும், 'ஶ்ரீமத் சுவாமி இராமதாஸர் பிள்ளைத்தமிழி'ல் நடேச சுவாமிகள், சுந்தரக் கன்னி ஆகியோரும் 'ஶ்ரீ ஆதிசங்கரர் பிள்ளைத்தமிழில்' எண்திக்குப்பாலகர், காமாட்சி ஆகியோரும், 'ஶ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பிள்ளைத்தமிழி'ல் அடியார்கள், தமிழ்த்தாய் ஆகியோரும், 'கொங்குக்குமரி பிள்ளைத்தமிழி'ல் தமிழ்த்தாய், மாரி, நீத்தார், புத்தர், அருகன், இயேசு, நபி, எனப் பல சமயக் கடவுளரும் காப்புத் தெய்வங்களாகப் பாடப்படுகின்றனர். புதுக்கோட்டை நாரதர் மலை மாரியம்மன் பிள்ளைத்தமிழி'ல்

பேச்சியாயி, சத்தமாதர்கள், முப்பத்து மூவர் ஆகியோர் காப்புத் தெய்வங்களாகின்றனர். மறைமலையடிகள் பிள்ளைத் தமிழில் ஆங்கிலச் செவிலித்தாயும் காப்புக் கடவுளர் வரிசையில் பாடப்பெறுவது புதுமையாகும்.

**தமிழுக்குப் பலபுதுமை விஞ்ஞானம் தந்தவளே!**
**தமிழர்க்குச் செவிலித் தாயே![50]**

என்கிறார் அரு. சோமசுந்தரம். அண்ணா பிள்ளைத் தமிழில் பொதுவான தெய்வத்தைப் பரவிப்பின் 'திருவருளே' என விளித்துப் பின்வரும் அனைத்தும் 'தமிழ்த்தாயே' என முடியும் போக்கைக் காணலாம். இந்நூலாசிரியர் அண்ணாவின் கொள்கை வழி நின்று காப்புப் பாடியிருத்தல், மனங்கொள்ளத் தக்கது.

'பாவேந்தர் பிள்ளைத் தமிழில்' அண்ணா வணக்கத்தின் பின் ஞாயிறு, திங்கள், மழை வாழ்த்து இடம்பெற்றுள்ளமை சிலம்பு நெறியின் சீர்மையைக் காட்டுகிறது. காரைக்கால் அம்மையார், நாவுக்கரசர், மெய்கண்டார், சிவஞான முனிவர், வள்ளலார், இளங்கோ, கம்பன், திருவள்ளுவர், காந்தியடிகள், பெரியார் ஆகியோரைக் காப்புப் பருவத்தில் அமைத்துப் பாடும் போக்குப் புதியதன்று. 'சேக்கிழார் பிள்ளைத் தமிழி'ல் காப்பிற்குரிய தெய்வங்களையெல்லாம் விடுத்து, திருத் தொண்டர் தொகைச் செய்யுள் முறைப்படி அமையும் அடியார்களைக் காப்புப் பருவத்தில் வைத்துப் பாடப்பட்டுள்ளது. அப்புதுமை படிப்படியாய் வளர்ந்து, கடவுள் மறுப்புக் கொள்கையுடைய பெரியாரைக் காப்புப் பருவத்தில் பாடும் உச்சத்தை அடைந்துள்ளது.

## அம்புலிப் பருவம்

'பிள்ளைக்கவிக்கு அம்புலி புலி' என்பது ஒளவை வாக்கு. அம்புலியில் மனிதன் அடிவைத்த காலகட்டத்தில் இயற்றப் பட்ட இப்பிள்ளைத் தமிழ் நூல்களில் அம்புலி பற்றிய புதிய அணுகுமுறை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**'பலகற்றும் விஞ்ஞானி செய்கின்ற இராக்கெட்டில்**
**பறக்கின்றார்; பயிலுகின்றார்'[51]**

என்று திருவள்ளுவர் பிள்ளைத் தமிழும்,

50. அரு. சோமசுந்தரம், மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ், ப. 17
51. அரு. சோமசுந்தரம் (தொ.ஆ) திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ் ப. 55

" 'ஒன்றுக்கும் உதவாமலே
உயரத்து இருக்கின்ற கற்பாறைதான்' என்று
உணர்த்திவிஞ் ஞானம் எங்கள்
கண்ணைத் திறந்திட்ட பின்னரும் ஏய்ப்பதேன் ?' "[52]

*என்று காவைமுருகன் பிள்ளைத் தமிழும்,*

"கமழ்கின்ற விஞ்ஞானக் கலையறிஞர் கணக்குக்குட்
கட்டுண்ட அடிமையானாய்
கடுகிவரும் அமெரிக்கர் கால்பட்டுத் தூள்பட்டுக்
கரித்துகள் போலவுள்ளாய்'[53]

*என்று அண்ணா பிள்ளைத் தமிழும்,*

ஆரமுதம் என்றார்கள், அழகினுரு என்றார்கள்;
அத்தனையும் இன்று பொய்யாம்!
அமெரிக்கர் உருசியர் அணுகியா ராய்ந்தபின்
அங்கேதும் இல்லை யென்றார்"[54]

*என்று ஆநந்தரங்கன் பிள்ளைத் தமிழும்,*

"ஆல்டிரின் எட்வினீல் ஆம்ஸ்ராங்கு மைக்கல் போல்
அன்பர் பலர் உன்னிடம்பாய்ந்
தடிகொடுமி தித்திடுவர் கொடிகொண்டு குத்திடுவர்
அள்ளுவார், கல்லுமண்ணும்"[55]

*என்று வள்ளற் பெருமான் பிள்ளைத் தமிழும் பேசுகின்றன.*

*உருசியரும் அமெரிக்கரும் நிலவைப் பிடிக்கும் முயற்சியில் இறங்கி வென்றதை முரண்தொடை நயத்தோடு காட்டுகிறது 'ஸ்ரீ குருவாயூரப்பன் பிள்ளைத்தமிழ்'.*

"பொதுவா முடைமைக் கொள்கையினைப்
போற்று வாரும் முதலாளிப்
போக்கை விரும்பும் மாந்தர்களும்
போட்டியிட்டு நினைப் பிடிக்க"[56]

*முயலுவதாகக் காட்டுகின்றார்.*

52. கலைவாணன், காவைமுருகன் பிள்ளைத் தமிழ், ப. 43
53. பொன்மாரி, அண்ணா பிள்ளைத் தமிழ், ப. 68
54. அரிமதி தென்னகன், ஆநந்தரங்கம் பிள்ளைத் தமிழ், ப. 44
55. மா.சு. காமாட்சிநாதன், வள்ளற் பெருமான் பிள்ளைத்தமிழ், ப. 58
56. முத்து.கோ. இராமன், ஸ்ரீ குருவாயூரப்பன் பிள்ளைத்தமிழ், ப. 19

"அழைக்கும் போது வாரா விட்டால் வெண்ணிலாவே
அமெரிக்காவை ஏவி ஆள்வாள் வெண்ணிலாவே"[57]

என்று அம்புலியையே அச்சுறுத்துகிறார் செங்கைப் பொதுவன்.

அறிவியல் வளர்ச்சியுற்ற இக்காலத்தில் இயற்கை இகந்த கற்பனைகள் சிறப்புடையனவாகாவாதலால் இக்காலப் பிள்ளைத் தமிழ் நூல்களின் அம்புலிப் பருவத்தில் அறிவியல் உண்மைகளின் தாக்குரவு காணப்படுகிறது. எந்தவொரு படைப்பாளரும் தாம்வாழும் சமுதாயத்தையும், காலத்தையும் புறக்கணித்துவிட முடியாது என்பதனை இப்போக்கு, காட்டுகிறது.

மனிதன் அம்புலியில் கால் வைத்தது 1969 ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 29 ஆம் நாள் ஆகும். ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நூல்களில் 1969 ஆம் ஆண்டிற்கு முற்பட்டவற்றில், மனிதனின் விண்மண்டல ஆய்வுபற்றிய செய்திகளும், அதற்குப் பிற்பட்டவற்றில் அமெரிக்கர் அம்புலியில் கால்வைத்த செய்தியும் இடம் பெறுகின்றன. இவ்வகையில் இவ்விலக்கியங்கள் வரலாற்றுப் பதிவேடு என்ற நிலைக்கு உயர்கின்றன.

பாவேந்தர் பிள்ளைத் தமிழ் நூலாசிரியர் இன்னும் ஒருபடி மேலே போய் விண்மண்டல ஆய்வு நிகழ்த்தப் போகும் செயல்களையும் கணித்துக் கூறுகிறார்.

"வருநாளில் உன்னையிட மாக்கொண்டு புவியுள்ளோர்
வந்துகுடி யேற நிற்பாய்"[58]

என்கிறார் புலமைப்பித்தன்.

## 10. அந்தாதி

தொல்காப்பியத்திற்குப் பின்னர் சங்க இலக்கியத்திலும் சிலப்பதிகாரத்திலும் அந்தாதியின் சில அடிப்படைக் கூறுகள் தலைகாட்டின. கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் அந்தாதி தனியொருவகைச் சிற்றிலக்கியமாக உருப்பெற்றது.[59] அந்தாதியைத் தனியொரு சிற்றிலக்கியமாக்கிய பெருமை காரைக்காலம்மையாரையே சாரும். அவர் பாடிய 'அற்புதத் திருவந்தாதி'யே முதல் அந்தாதியாகும். நூற்று எட்டுக்கு மேற்பட்ட அந்தாதி நூல்கள் தமிழில் உள்ளன. ஆய்வுக்காலப் பரப்பில் எட்டு அந்தாதி நூல்கள் இடம் பெறுகின்றன.

57. செங்கைப் பொதுவன், கொங்குக்குமரி பிள்ளைத்தமிழ், ப. 70
58. புலமைப்பித்தன், பாவேந்தர் பிள்ளைத் தமிழ், ப. 66
59. ந.வீ. செயராமன், மு.நூ; பக்.50–51

நெட்டுருச் செய்ய வாய்ப்பாகவே அந்தாதித் தொடை கொள்ளப்பட்டுள்ளது. 'அந்த முதலாத் தொடுப்பதந்தாதி' எனக் காரிகை கூறும். ஒரு செய்யுளின் முடிவில் நிற்கும் எழுத்து, அசை, சீர், அடி ஆகியவற்றுள் ஒன்று அடுத்த செய்யுட்கு முதலாக வரத் தொடுப்பது அந்தாதி. இது பதிற்றுப்பத்தந்தாதி, யமக அந்தாதி, திரிபந்தாதி, நிரோட்டக யமக அந்தாதி, கலியந்தாதி, ஒலியந்தாதி, அந்தாதித் தொகை எனப் பல்வகைப்படும். பதிற்றந்தாதி, நூற்றந்தாதி என்று பெயர் பெறுவனவும் உள்ளன.

இவ்வெட்டு அந்தாதி நூல்களில் பெரும்பான்மை யானவை பாட்டுடைத் தலைவர் பெயர் கொண்டு அமைகின்றன. ஆறு நூல்கள் நூறு பாடல்களைக் கொண்டிருக்க 'அழகன் அந்தாதி' முப்பத்தொரு பாடல்களை யும் 'மாணவர் அந்தாதி' இருபத்திரண்டு பாடல்களையும் கொண்டுள்ளன.

'ஸ்ரீ கிருஷ்ண அந்தாதி'யில் முதலில் உள்ள 'காப்பு' எனும் கவிதையில் காப்புக் கடவுளாகவும் கண்ணனையே கொள்ளுகின்றார் கவிஞர். பாடு என்று தொடங்கிப் பாடு என்று முடித்துள்ளார்.

'அருகன் அந்தாதி' பத்துப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு 'அருகனே தெய்வம்' 'இருபத்து நால்வர்துதி' முதலிய தலைப்பு களில் பாடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நூல் 'முச்சகம்' என்று தொடங்கப்பட்டு முச்சகம் என்று முடிக்கப்பட்டுள்ளது.

'திருவருள் அந்தாதி'யில் முதலில் 'நூற்பயன்' என்ற தலைப்பில் நான்கு நேரிசை வெண்பாக்கள் உள்ளன. அடுத்துப் 'பாயிரமும்' அமைந்துள்ளது. அது கலிதீர் கலிவெண்பாவில் அமைந்துள்ளது. இந்நூல் 'திரு' என்று தொடங்கித் 'திரு' என்று முடிகிறது.

'பழநிஅந்தாதி'யில் விநாயகர், சுப்பிரமணியர், கலைமகள், சிவபெருமான், திருமால், சான்றோர் முதலியோரைப் பற்றிய காப்புச் செய்யுட்கள் உள்ளன. இந்நூல் 'முருகா' என்று தொடங்கி 'முருகா' என்று முடிக்கப்பட்டுள் ளது.

உருவ அமைப்புச் சிறப்பால் செல்வாக்குற்ற இலக்கியம் அந்தாதி ஆகும். 'அன்னை கருமாரியம்மன் அந்தாதி'யில் 'அவையடக்கம்' என்றொரு பாடல் உள்ளது. 'அவையடக்கம்' பாடப்பட்டுள்ள அந்தாதி இந்நூல் மட்டுமேயாகும். இந்நூலின்

'பாயிரப்' பகுதியில் கணநாதன் வணக்கமும், முருகன் வணக்கமும் அமைந்துள்ளன.

## படைப்பின் நோக்கம்

அந்தாதி இலக்கியங்கள் தெய்வத்தையே பாட்டுடைத் தலைவனாகவும், தலைவியாகவும் கொண்டு இயற்றப்பட்டுள் ளன. வேண்டுதலைத் தெரிவிக்கும் துதிப்பாடல்களைப் போன்று இவை உள்ளன.

1. இறைவனுடைய புகழைப் பாடுதல்;
2. இறைவனை இறைஞ்சுவதால் கிடைக்கும் பயனைப் பிறருக்கு உணர்த்துதல்;
3. காத்தருளுமாறு கடவுளிடம் வேண்டுதல்;
4. மழை பொழிந்து உலகம் செழிக்க வேண்டும் என இறைவனை வேண்டுதல்;
5. அந்தாதி படைக்க அருள்வாய் என்று கெஞ்சுதல்.

மாணவர் அந்தாதியும் கலைஞர் நூற்றந்தாதியும் இந் நோக்கங்களினின்றும் மாறுபட்டு அமைகின்றன.

## உள்ளடக்கம்

அந்தாதி நூல்களின் உள்ளடக்கத்தை இருவகையாகப் பகுத்துக் காணலாம். தெய்வத்தைப் பற்றிய நூல்களில் புராணக் கூறுகளும் தத்துவக் கருத்துகளும் அமைந்துள்ளன. மனிதரைப் பற்றிய நூல்களில் நீதிக்கருத்துகளும், செய்நன்றியறி தலும் வெளிப்படுகின்றன.

> **"ஞானப் பழத்தினையே நாடாமல் நீயேமெய்**
> **ஞானப் பழத்தை நாடினாய்"[60]**

எனவரும் பாடற்பகுதியில் புராணக்கூறும் தத்துவக்கருத்தும் பின்னிப் பிணைந்துள்ள பாங்கினைக் காண்கிறோம்.

> **"குமிழிகள் நீரிற் குழைவெனச் செல்வக் கொடுவினையை**
> **உமிழும் பிறப்பை ஒழிக்க அவனை உணருவீரே"[61]**

60. க.மு. சுந்தரகணேசன், புதுக்கோட்டை நாரதர்மலை – மாரியம்மன் பிள்ளைத் தமிழ், பாடல், 55
61. ஆனை. நரசிங்கப் பெருமாள், அருகன் அந்தாதி, ப. 11

என்பன போன்ற நிலையாமைக் கருத்துகளும் இடம் பெறுகின்றன.

## அரசியல் தாக்குரவு

**"ஆண்டுவருங் காங்கிரஸ் ஆட்சிவரை நெல்நாற்று**
**மாண்டழிந்து போனநிலை வந்ததில்லை"[62]**

இப்பாடற் பகுதியில் அரசியல் தாக்குரவு காணப்படுகிறது.

## வரலாற்றுச் செய்தி

**"விரைந்துவந்து போரிட்ட வெம்பாக்கித் தானர்**
**இரைந்தோடிப் பின்முதுகிட்டே — கரைந்தபுளி**
**போன்றொழிந்தா ரிங்கு புயல்பொழிந்து நல்லநிலை**
**தோன்றச்செய் கண்ணா தொடர்ந்து"[63]**

எனவரும் பாடற் பகுதியில் இந்திய-பாக்கித்தான் போர் நிகழ்ச்சி சுட்டப் பெறுகின்றது.

## 11. மாலை

பன்னிருபாட்டியல், பல்சந்த மாலை, இணைமணி மாலை, மும்மணி மாலை, நான்மணி மாலை, கலம்பக மாலை, நாமமாலை, இரட்டை மணிமாலை, நவமணிமாலை, கைக்கிளை மாலை, தாரகை மாலை, செந்தமிழ் மாலை, வருக்க மாலை எனும் பன்னிரண்டு மாலை வகைகளைக் கூறுகின்றது. உற்பவமாலை, அங்கமாலை, தானை மாலை, வஞ்சி மாலை, வாகை மாலை, புகழ்ச்சி மாலை, அனுராக மாலை, காப்பு மாலை, வசந்த மாலை, வேனில் மாலை, மணிமாலை, பெரும் புகழ்ச்சி மாலை, தண்டக மாலை, விரக மாலை முதலிய மாலை வகைகளும் உண்டு என்பதனைப் பொருட்டொகை நிகண்டு உரைக்கும்.[64]

நான்மணிமாலை இரண்டும், புகழ் மாலை இரண்டும், குளிர் மாலை ஒன்றும், சித்திரகவி மாலை ஒன்றும், மணிமாலை ஒன்றும், பாமாலை ஒன்றும், இரட்டை மணி மாலை ஒன்றும் ஆய்வுக்குட்படுகின்றன.

62. வி.ஸ். வீரநாதக் கோனார், திருவருள் அந்தாதி, ப, 15
63. மேலது, ப. 19
64. பொருட்டொகை நிகண்டு, 975, மு. சண்முகம்பிள்ளை, சிற்றிலக்கிய வளர்ச்சி, பக். 127–128இல் மேற்கோளாக வந்துள்ளது.

நான்கு வகைப்பாக்கள் கலந்தோ அல்லது தனியொரு வகைப் பாவாலோ மாலை இலக்கியம் படைத்தல் மரபாகும். மாலை இலக்கியங்கள் இறைவனைப்பற்றி எழுந்தவையாகும். 'சித்திரகவிமாலை' மட்டும் இராமச்சந்திர ஐயர் மீது பாடப் பெற்றதாகும்.

குளிர்மாலை, சித்திர கவிமாலை இரண்டும் மேற்சொன்ன மாலை வகைகளுள் அடங்காதவை.

**நான்மணிமாலை**

"வெண்பாக் கலித்துறை அகவல் விருத்தம்
நண்பாய் வருவது நான்மணி மாலை"[65]

என்பதும்

"அகவலும் அகவல் விருத்தமும் நாற்பது
அகவலை முன்வைத் தறைவது கடனே"[66]

என்பதும் 'நான்மணி மாலை' இலக்கணமாகும். 'நவக்கிரக நான்மணி மாலை' இவ்விலக்கணத்தை முற்றிலும் பின்பற்றிச் செய்யப்பட்டுள்ளது.

"பணிகின்ற மனங்கொண்ட பக்த ரெல்லாம்
பார்மீது பெறுகின்ற பகுமை என்னே!
கணிக்கின்ற சோதிடத்தில் கறையே இல்லாக்
கடவுளர்கள் ஒன்பதுபேர் காப்பர் உண்மை!"[67]

எனவரும் பாடலில் ஆசிரியரின் சோதிட நூற்புலமை வெளிப்படுகின்றது.

'நாகநாதர் நான்மணி மாலை'யில் காப்பும், அவையடக்கமும் வெண்பாவில் இயற்றப்பட்டுள்ளன.

"நாகநா தன்வளர் நயினார் கோயில்
எனும்பெய ரோங்கும் எழிலார் நகரந்
தனைக்காண் பவர்பழ வினை நீங்கியவரே"[68]

என நாகநாதர் பெருமை பேசப்படுகிறது.

65. பன்னிருபாட்டியல்: 153.
66. மேலது: 154
67. தி. எதிராசன், நவக்கிரக நான்மணிமாலை, ப. 1
68. எஸ். கேசவராமசாமி, நாகநாதர் நான்மணிமாலை, ப. 2

### புகழ்மாலை

ஆண்டாள், மணிவாசகர், நபிகள் மூவரையும் புகழ்ந்து புகழ் மாலை நூல்கள் தோன்றியுள்ளன. 'ஆண்டாள், மணி வாசகர் அரும்புகழ்மாலை' இருபத்தொரு வெண்பாக்களால் பாடப்பட்டது. இந்நூலில் திருப்பாவை, திருவெம்பாவையில் உள்ள தொடர்கள் அவ்வாறே எடுத்தாளப்பட்டுள்ளன. 'நபி புகழ் மாலை' இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன்றிலும் நூறுநூறு பாடல்கள் அமைந்துள்ளன.

### குருவாயூரன் குளிர்மாலை

இந்நூல் ஐம்பத்தோர் ஆசிரிய விருத்தங்களால் இயன்றது.

**"தேவ ரெல்லாம் தொழுந்தேவ !**
**தெவிட்டா இன்பம் தருமாலா !"[69]**

என்றிவ்வாறு ஆசிரியர் உளம் உருகப் பாடுகின்றார்.

### சித்திரகவிமாலை

சித்திரங்கள் வரைந்து அதற்குள் எழுத்துவரும்படி பாக்களை அமைத்தல் சித்திரகவி எனப்படும். நேரிசை ஆசிரியப்பா, நிலை மண்டில ஆசிரியப்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, விருத்தம், இணைக்குறள் ஆசிரியப்பா என்ற யாப்புகளில் 'சித்திரகவிமாலை' அமைக்கப்பட்டுள்ளது. தேர், மலை, தாமரை, நாகம், மயில், சதுரக்கட்டம் முதலிய படங்களில் எழுத்துகள் அமைக்கப்பட்டுள்ளன. சித்திரங்க ளுடன் அமைக்கப்பட்ட கவிதைகளுக்குச் சித்திரத்துடன் சேர்த்துப் பந்தம் என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது.

**"மாரி பாரி காரி பாரிலே**
**மாகை யீகை மாலே வாம**
**ராஜா ராமச்சந்திரன் நாமா."[70]**

என்றவாறு இந்நூல் இராமச்சந்திர ஐயரின் புகழ் மாலை யாகவே அமைந்துள்ளது.

### இரட்டை மணி மாலை

வெண்பா, கட்டளைக் கலித்துறை, விரவிவர இருபது பாடல்களைக் கொண்டது 'முருகன் இரட்டை மணிமாலை'.

69. அடியன் மணிவாசகன், குருவாயூரன் குளிர்மாலை, ப. 10
70. அப்துல்கபூர் சாஹிப், சித்திரகவிமாலை, ப. 28

### மணிமாலை

வெண்பா இருபதும் கலித்துறை நாற்பதுமாக விரவி வருதல் மணிமாலை இலக்கணமாகும். நபிபெருமானார் வரலாற்றுத் துணுக்குகளை நூற்று இருபத்தாறு பாடல்களில் தரும் 'நபி மணிமாலை' இவ்விலக்கணப்படி அமையவில்லை. சில இடங்களில் 'ஜக்தாத், ஹஜ்ஜு' முதலிய உருதுச் சொற்கள் விரவி வந்தாலும் எளிய நடையில் குழந்தைகளும் புரிந்து கொள்ளுவதற்கேற்ற பாங்கில் பாடல்கள் அமைந்துள்ளன.

### பாமாலை

மயிலை முண்டகக் கண்ணி அம்மன் மீது பாடப்பெற்ற 'பாமாலை' ஈரெதுகை விருத்தங்கள் நூறு கொண்டதாகும்.

## 12. பதிகம்

பத்து, நூறு முதலிய எண்தொகைகளில் பாடல்களைப் பெயர் கொடுத்து வழங்குவது பழந்தமிழ் மரபு. அவ்வகையில் பத்தினால் ஆனதாகவும் இருபதினால் ஆனதாகவும் கொண்டு பாடப்படுவது பதிகம் ஆகும். அஃது ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம், வெண்பா ஆகிய யாப்புகளில் அமையும் எனப் பன்னிருபாட்டியல் கூறுகிறது.[71]

அமலன் பாடிய 'இரங்கல் இருபது', 'பூண்டி புதுமை மாதா பதிகம்' 'சந்தன மாதா பதிகம்', 'பக்திப் பத்து', 'மரியாள் பதினொன்று', 'வேளை நகர்ப் பதிகம்' ஆகிய ஆறு நூல்களும் அன்னை மரியாளைப் பற்றிய போற்றிப் பாடல்களாகும்.

'திருப்பதி வேங்கடேசப் பெருமாள் பதிகம்', 'இராமானந்த சற்குரு மூர்த்தியின் வரவேற்புப் பதிகம்' 'முருகப் பெருமான் வருகைப் பதிகம்' ஆகிய மூன்றும் அரங்கமுத்து வால் பாடப் பெற்றவை. அவற்றுள் திருப்பதி வேங்கடேசப் பெருமாள் பதிகம் மட்டும் நாற்பது பாடல்களைக் கொண்டுள்ளது. இந்நூலில் இறைவனின் புகழ் பேசப்படுவதுடன், தமிழின் பெருமை, தமிழ் அறிஞர்களின் சிறப்பு, தமிழோடு தொடர்புடைய புராணக்கதைகள் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன. இராமானந்த சற்குரு மூர்த்தியின் வரவேற்புப் பதிகத்தில்

71. பன்னிரு பாட்டியல்: 197

"மின்னே வருக கனகசபை
விமலா வருக தூயுளத்தர்
வித்தே ராமா னந்தகுரு
வெந்தாய் வருக வருகவே"[72]

என அவரது புகழே பேசப்படுகிறது.

பெரி. இலக்குமணச் செட்டியார் ஐயனார், முருகன், விநாயகர் ஆகிய கடவுளர்மீது ஒவ்வொரு பதிகம் பாடியுள்ளார்.

கோவை இளஞ்சேரனின் 'கலைஞர் பத்து' தெய்வங்கள் தெய்வீகச் சார்புடைய சான்றோர் எனும் நிலைக்கு அப்பால் அரசியல் தலைவர் மீது பாடப்பட்ட பதிகமாக அமைந்துள்ளது.

## 13. தனி நூல்கள்

சிற்றிலக்கியங்களில் குறிப்பிடத்தக்க கட்டமைப்புக்குள் வாராமல் உதிரியாக அமைந்து நிற்கும் நூல்கள் சில இக்காலத்தில் தோன்றியுள்ளன.

'குறுக்குத் துறைக் கொச்சகக்கலிப்பா' முருகன் மீது பாடப் பெற்ற நூறு கொச்சகக் கலிப்பாக்களை உடையது. பாடல்கள் அனைத்தும் நாலடித் தரவு கொண்டவை.

சிவனம்மாள் எனும் தன் மனைவியின் மறைவு குறித்து அவரது கணவர் தி.சு. ஆறுமுகம் பாடிய நூலில் மடக்கு, திரிபு சொல்லணி, விருத்தம், வெண்பா, இசைப்பாடல் என அனைத்தும் இடம் பெறுவதால் 'சிவனம்மாள் செய்யுள் திரட்டு' என்று பெயர் பெறுகிறது.

சிவனம்மாள் இறந்தது கேட்ட தோழி நித்தியானந்த புட்பம் அதிர்ச்சியில் மாண்டார். இதுகுறித்து,

"மனம்பதைக்க மாதாவைப் பறிகொடுத்து
மண்மீது மயங்கி வாடித்
தினம்பதைக்கும் என்மக்கள் துயரமதைத்
தீர்த்தவரைத் தேற்றிப் பேணக்
கனம்பதைக்கும் பூங்குழலி யுள்ளென்று
கலக்கமற்றுக் களிகூர்ந் தேனே!

72. அரங்கமுத்து, இராமானந்த சற்குரு மூர்த்தியின் வருகைப் பதிகம் (பசுந்தமிழ்ப்பண்பு) ப. 23

இனம்பதைக்க அவள்தனையும் இரக்கமின்றி
எமனெடுத்தான் என்செய் வேனே !"[73]

என உருக்கமாகப் பாடுகிறார் கவிஞர்.

காப்பு முதலாக எட்டு வண்ணப் பாடல்களைக் கொண்டது பெரி. இலக்குமணச் செட்டியார் இயற்றிய 'தேனிமலை ஸ்ரீமுருகக் கடவுள் திருப்புகழ் வண்ணப் பாடல்கள்' எனும் நூல். இது விருத்தப் பாக்களில் அமைந்துள்ளது.

நயினார்கோவில் நாகநாதர் பெருமை கூறுவதாக அமைந்த 'நாகநாதர் பதிற்றுப்பத்து' 'நாணிக்கண் புதைத்தல்' எனும் அகப்பொருள் துறையில் அமைந்தது. இதில் தெய்வத்தின் பெருமை, முகவைச் சேதுபதி மன்னர்களின் சிறப்புகள் ஆகியன பேசப்படுகின்றன. மனிதனின் நிலவுப் பயணம். காந்தி சுடப்பட்ட நிகழ்ச்சி ஆகியனவும் இடையிடையே கூறப்படுகின்றன.

'திருக்கை வழக்கம்' எனும் பெயரில் வெண்செந்துறை யாப்பில் பேகன் இயற்றிய நூல் கலைஞர் கைவண்ணத்தைப் பாராட்டுமுகத்தான் அமைந்துள்ளது.

## முடிபுகள்

### 1. குறவஞ்சி

அரசுக் கொள்கையை விளக்கிட, நாடகப்பாங்கில் 'குறவஞ்சி எனும் இலக்கிய வகை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

### 2. பரணி

பரணி நூல்களில் புத்துலகுக்கேற்பப் பாடுபொருளும், படைக்கருவிகளும், போர்க் களங்களும் மாறி அமைகின்றன.

இக்காலத்தில் நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் விளங்கும் வகையில் மட்டுமே பரணி நூல்கள் தோன்றியுள்ளன.

### 3. உலா

உலா இலக்கியங்களைப் பாடுதல் மிகவும் அருகியே காணப்படுகிறது.

73. தி.சு. ஆறுமுகம், சிவனம்மாள் செய்யுள் திரட்டு, ப. 13

எழுபருவ மகளிரை இக்காலக் கவிஞர்கள் பழைய போக்கில் பாடவிரும்பவில்லை. எனவே, அவர்களுக்குப் புதிய கற்பனைகளைப் புகுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

மக்களாட்சித் தலைவனைப் பண்டே போல் பாட்டுடைத் தலைவனாக்குதலைக் கவிஞர்கள் பயனும் வாய்ப்பும் கருதிச் செய்யும் முயற்சியாகக் கொள்ளலாம்.

## 4. ஆற்றுப்படை

இறைவன் பாலும் அரசன் பாலும் ஆற்றுப்படுத்தும் போக்கிலிருந்து மாறுபட்டு ஒரு நாட்டின்பால் ஆற்றுப்படுத்தும் புதுமை குறிப்பிடத்தக்கது.

## 5. தூது

தலைவன் தலைவி காதல் என்று மட்டுமன்றித் தலைவர் மீது தொண்டர் கொள்ளும் பற்றும் இன்றைய தூது இலக்கிய உள்ளடக்கமாக அமைகின்றது.

மரபு மீறியும் பாதாதி கேச வருணனை அமைந்துள்ளது.

## 6. கலம்பகம்

கலம்பக இலக்கணப்படி அமைந்த நூல் 'குறுக்குத் துறைக் கலம்பகம்' ஒன்றே. கலம்பகம் இயற்றும் போக்கு அருகிக் காணப்படுகிறது.

## 7. கோவை

'கோவை' இலக்கணத்தை அடியொற்றி எழுந்த நூல்கள் இரண்டு. ஏனையவை பெயரளவில் மட்டுமே கோவை நூல்களாகக் குறிக்கப்பட்டுள்ளன.

'கலைஞர் மும்மணிக் கோவை' அதற்குரிய இலக்கணக் கட்டுக் கோப்புடன் திகழுகின்றது.

இக்காலக் கோவை நூல்களில் கிளவிகளின் எண்ணிக்கையும் அகப்பொருள் செய்திகளும் குறைந்து காணப்படுகின்றன.

## 8. பாவை

ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்ற நான்கு நூல்களில் தமிழரசனின் 'காதல் பாவை'யில் சமுதாய நலம், சமுதாய சீர்திருத்தம், தமிழ்ப் பண்பாடு, மாந்தர் பொருள் நிலையில்

நிறைவு பெறுதல் முதலியன மிகுதியும் வலியுறுத்தப்படுகின்றன. தன் துணைவியைத் துயிலெழுப்புவதாக உள்ள இந்நூலில், மக்களைத் தெய்வமாகக் காட்டியிருத்தல் குறிப்பிடத்தக்கது.

## 9. பிள்ளைத்தமிழ்

பிள்ளைத் தமிழ் நூல்களின் அமைப்பில் மரபு வழியான பொது நெறியும், பொது நெறி மாறிய புது நெறியும் போற்றப் பட்டுள்ளன.

பத்துப் பருவங்களுக்கும் மேலாக மூன்றைச் சேர்த்துக் 'காவை முருகன் பிள்ளைத் தமிழ்' புதுமையாக அமைநதுள்ளது. ஒவ்வொரு பருவத்தையும் ஒருவர் பாடி ஒருங்கிணைந்த தொகுப்பாகத் 'திருவள்ளுவர் பிள்ளைத் தமிழ்' அமைகின்றது.

காப்புப் பருவத்தில் ஒவ்வொருவரும் தத்தம் கொள்கைக்கும் விருப்புக்கும் ஏற்ப வழிபடு தெய்வங்களையும் தலைவர்களையும் அமைத்துக் கொள்கின்றனர்.

ஆங்கிலச் செவிலித்தாயைப் போற்றுவதில் மறைமலை யடிகள் பிள்ளைத் தமிழும், பெரியாரைப் போற்றுவதில் பாவேந்தர் பிள்ளைத் தமிழும் தனித்து நிற்கின்றன.

சிவன், முருகன், கண்ணன் ஆகிய கடவுளருடன் பெரியாரைப் பாடியிருப்பது கருதற்குரிய முரணாகும். (Contrast). சிவன் முதலிய இந்துக் கடவுளருடன் இயேசு, நபி, அருகன், புத்தன் முதலிய பல சமயக் கடவுளரைப் பாடியுள்ளமை சமயப் பொறைக்குச் சான்றாகும்.

அம்புலிப் பருவம் பற்றிப் பாடும்போது அறிவியல் உண்மைகளை மனத்திற்கொண்டு பாடியிருப்பது காலத்துக் கேற்ற இலக்கியக் கருத்தோட்டமாகும்.

பாட்டுடைத் தலைவன் பற்றிய வரலாற்றுச் செய்திகளைத் தொகுப்பதே குறிக்கோளாகி விடுவதால் பிள்ளைத்தமிழ் நூல்கள் கவிதை வடிவில் எழுதப்பட்ட வரலாறோ என்ற ஐயத்தை எழுப்புகின்றன. இதுவரை நூற்றைந்துக்கு மேற்பட்ட 'பிள்ளைத் தமிழ் நூல்களையும், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற புகழ்மிகு நூல்களை யும் கொண்டிலங்கும் தமிழ், இக்காலக் கவிதையுலகிலும் இவ்வகை இலக்கியத்தை விடாது வளர்த்து வருதல் சிறப்பாகும்.

சிற்றிலக்கிய வகைகளில் இக்காலத்தில் மிக அதிகமான வளர்ச்சி பெற்றிருப்பது 'பிள்ளைத் தமிழ்' ஆகும். பொதுவான ஒன்றும், பெண்பாற் பிள்ளைத்தமிழ் நான்கும் ஆண்பாற் பிள்ளைத் தமிழ் இருபத்தொன்றும் வெளிவந்துள்ளன. சிவகாமியம்மை, காமாட்சியம்மை, முருகன், சுந்தரகணேசர், மாரியம்மன் முதலிய தெய்வங்களும் வள்ளலார், ஆதிசங்கரர், பாம்பன்சுவாமிகள், சுவாமி இராமதாசர் முதலிய சமயப் பெரியார்களும் திருவள்ளுவர், அண்ணா, கலைஞர், பாரதியார், பாரதிதாசன், மறைமலையடிகள், வீரமாமுனிவர், ஆநந்த ரங்கன் போன்ற இலக்கிய, அரசியல் தலைவர்களும் பாட்டுடைத் தலைவர்களாக உள்ளனர். தெய்வங்களில் முருகனும், தலைவர்களில் அண்ணாவும் ஒன்றுக்கு மேற்பட்ட இலக்கியங்கட்குக் கருவாகியுள்ளனர்.

## 10. அந்தாதி

இக்காலப் புலவர்கள் அந்தாதி இலக்கியக் கட்டமைப்பில் கவனம் செலுத்திய போதிலும் பாட்டியல் நூல்களில் கூறப்பட்ட இலக்கண முறைப்படி பாடவில்லை.

## 11. மாலை

'சித்திரகவிமாலை' நீங்கலாக ஏனைய மாலைகளில் பல்வேறு கடவுளர்களும், அடியார்களும் புகழ்ச்சிக்குரியவ ராகப் போற்றப் பெறுகின்றனர்.

சித்திரகவிமாலை, குளிர்மாலை ஆகிய இரண்டும் முந்தைய இலக்கண நூல்களில் காணப்படாத மாலை வகைக ளாகும்.

மணிமாலை, பாமாலை முதலியவை முற்றிலும் 'மாலை' இலக்கணக் கட்டுப்பாட்டுடன் அமையாமல் பெயர் மட்டும் தாங்கி நிற்கும் பொதுத் தன்மை உடையனவாகும்.

## 12. பொது

பெரும்பாலும் தெய்வங்களைப் போற்றி செய்வதாகச் சிற்றிலக்கியங்கள் அமைந்தாலும், அதே அளவில் அரசியல் தலைவர்களைப் பாராட்டும் வகையிலும் அவை அமைந்துள்ளமை இக்காலக் கவிதை உலகின் நிலையாகும்.

பன்னிரண்டு வகைச் சிற்றிலக்கியங்களே இக்காலக் கவிஞர்களால் எழுதப்பட்டுள்ளன.

பரணி, உலா, கோவை, பாவை நீங்கலாக ஏனையவற்றுள் முருகன் இடம் பெறுவதும், குறவஞ்சி, ஆற்றுப்படை, கலம்பகம், பாவை, மாலை நீங்கலாக ஏனையவற்றுள் கலைஞர் இடம் பெறுவதும் குறிப்பிடத் தக்கவையாகும்

# 5

# குழந்தைப் பாடல்கள்

குழந்தைப் பாடல்கள் (Limirics) தமிழுக்குப் புதியவை என்று சொல்வதற்கில்லை. குழந்தையை நினைந்துருகி, அதன் அருமை பெருமைகளைப் பாடும் பாங்கும், தன் மனத்துக் குகந்த இறைவனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடும் பாங்கும் தொன்மையானவையே. ஆனால் குழந்தைகள் படிப்பதற்காக, குழந்தை மொழியிலேயே இலக்கியம் உருவாகியது இக்காலத்தில்தான். குழந்தைகட்குரிய நாட்டுப் பாடல்களும் இத்தகைய தன்மைகளைக் கொண்டிலங்குவது சிந்தனைக்குரியது.

குழந்தை இலக்கியம் படைப்போர் 'குழந்தை' என்ற சொல்லை மட்டுமன்றி மழலை, சிறுவர், பாப்பா, சேய், வாண்டு, மலர், பள்ளிப் பறவை குஞ்சு, பிள்ளை என்றவாறு சில சொற்களையும் பயன்படுத்துகின்றனர். இத்தகைய பெயர் களுடன் தொடர்புபடுத்தி நூல்களுக்குப் பெயரிட்டுள்ளமை குறிக்கத்தக்கது. "குழந்தை என்ற சொல் முற்றிலும் பொருந்தா விட்டாலும் அதிகமான பொருத்தத்தைப் பெற்றிருப்பதால் குழந்தை என்ற சொல்லையே பயன்படுத்தலாம்"[1] என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

மூன்று அகவைக் குழந்தை முதல் பதினான்கு அகவை யுள்ள சிறுவர்வரை உள்ளடக்கிப் பாடும் மரபு குழந்தை இலக்கியங்களில் உள்ளது. பாரதிதாசன் போன்றவர்கள், இலக்கியம் என்றும், நாச்சிகுளத்தார் 'மாணவர்க்கு' என்றும்- எழுதிக் குழந்தைப் பருவம் கடந்தவர்களையும் தொட்டுள்ளனர்.

---

1. முத்துச் சண்முகம் (மு.ச.) வெ. கிருட்டிணசாமி (வெ.கி.) தமிழில் குழந்தைப் பாடல்கள், ப. 13

குழந்தை இலக்கியத்தின் தொடக்கத்தை இருவகையாகக் கணிக்கலாம். குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாய் பாடும் தாலாட்டுப் பாடலிலிருந்து இலக்கியம் பிறக்கிறது. அவள் கற்பனை செய்து கட்டிய பாட்டு நாடோடி இலக்கியமாகிறது. அது பலபேர் நாவிலும் இடம்பெற்று இன்று வளஞ்செறிந்த இலக்கியமாக மதிக்கப்படுகிறது.

ஔவையார் பாடிய 'ஆத்திசூடி'யும் 'கொன்றை வேந்தனு'ம் எளிய நடையில் குழந்தைகட்கான பாங்கில் அமைந்திருந்தாலும் அவை குழந்தைகட்காக மட்டும் பாடப் பெற்றன என்று கூற இயலாது.

பாரதியாரின் 'புதிய ஆத்தி சூடி', 'பாப்பாப்பாட்டு', பாரதிதாசனின் 'இளைஞர் இலக்கியம்' கவிமணியின் 'குழந்தைச் செல்வம்' ஆகியவை இவ்வகையில் முன்னோடிப் படைப்புகள் ஆகும். குழந்தைப் பாடல்களை உள்ளடக்கத்தி னடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

## 1. பொருள் நிரல்

விலங்குகள், பறவைகள், இயற்கை, விளையாட்டு, செயற்கை (வானூர்தி போன்றவை), பண்பாளர்கள் எனக் குழந்தைகட்கு முன்னரே அறிமுகமானவை எளிய நடையில் விளக்கப்படுவதும்; புதியவை அறிமுகப்படுத்தப்படுவதும் இப்பகுதியில் அடங்கும்.

## 2. வடிவ நிரல்

யாப்பு வழுவாக் கவிதைகளாகவும் சந்தம் மாறாப் பாடல்களாகவும் குழந்தைப் பாடல்கள் அமைகின்றன. அறுசீர் விருத்தம், ஆசிரியம், சிந்து, இயைபு (ஈற்றெதுகை முறை) ஆகியவை பெரும்பாலான குழந்தைப் பாடல்களின் வடிவ மைப்பாகின்றன.

'பரிசு', சிந்து யாப்பிலும் 'சுடர்விளக்கு' சந்தத்திலும் 'குழந்தைகட்கு லெனின் கதைகள்' அறுசீர் விருத்தத்திலும் அமைவதைக் காணலாம். வில்லுப்பாட்டு அமைப்பும் சில வற்றில் உண்டு.

## 3. அகவை நிலை

சில கைக் குழந்தைப் பாடல்களாகவும், சில மழலையர் பாடல்களாகவும் அமைகின்றன. பல கதைப்பாடல்கள் சிறுவர்க்கேற்ற தகுதியினவாகும். அறிவியல், அறவுரைச் செய்தி

கள் வளர்ந்த குழந்தைகட்குப் பொருந்துவன. சில நூல்கள் மட்டும் 'காப்பியமாக'ச் சுட்டப்படுகின்றன.

சிலர் 'தொடக்கப் பள்ளிக்கு' 'வளர்ந்த பிள்ளைகட்கு' என்று பிரித்துக் கொண்டும் பாடுகின்றனர்.

## 4. சொற்கள்

சொல் தேர்ச்சி (Vocabulary) நிலையில் பெரிதும் கவனம் செலுத்த வேண்டியது குழந்தைப் பாடல்களில்தான். விலங்கு கள், பறவைகள், திணைகளை அறிமுகப்படுத்தும் போதும், கல்வி நோக்கம் காட்டும் போதும், நீதி நோக்கத்தை நிலை நாட்டும் போதும், பயிற்சி நோக்கில் பாடும் போதும், எளிதில் விளங்கும் சொற்களையும், அகவைக்கேற்ற சொற்களையும் கையாள வேண்டும்.

## 5. ஒப்பீடு

குழந்தைப் பாடல்கள் எழுதி முன்னரே பெயர் பெற்றுள்ளவர்கள், வேறு நூல்களையும் இயற்றிக், குழந்தைப் பாடல்களையும் பாடியவர்கள் ஆகியோரின் படைப்புகளை ஒப்பு நோக்கிப் பார்ப்பதும் பயன்தரும்.

இனிக், குழந்தை இலக்கியம் படைப்பதற்கான அடிப்படைகளைக் காணலாம். 'இளமையிற் கல்' எனும் பழ மொழிக்கு ஏற்பக் குழந்தைப் பருவத்திலேயே மனத்தில் பசுமையாகப் பதியும்படி பாடவேண்டும் எனும் வேட்கையே முதல் அடிப்படை.

குழந்தைகட்கான சொல் தேர்ச்சி இரண்டாம் அடிப்படையாகும்.

> **"ஒருநாள் ஒருநாள் உறுகொண் கனொடு**
> **திருநாள் காண்குவை தலைநாட் டகவே"[2]**

என்று செறிந்த புலமை நடையில் பாடும் துரைமாணிக்கம் 'பள்ளிப் பறவைகளைப்' படைக்கும் போது முற்றிலும் தன் நடையை மாற்றிக் கொள்ளுதல் கவனிக்கத் தக்கது.

எளிய நடை மூன்றாம் அடிப்படையாகும். 'எளிய பதங்கள், எளிய சந்தம், இவற்றால் கவிதை உலகை ஆள நினைத்த பாரதியாரும், 'எளிய நடையில் தமிழ் நூல்

2. துரைமாணிக்கம், மகபுகுவஞ்சி, ப. 13

எழுதிடவும் வேண்டும்"[3] எனும் பாரதிதாசனும் எளிய நடையி னாலேயே தம்மை நிலைநாட்டிக் கொண்ட கவிமணியும் குழந்தைப் பாடல்களைப் புனைந்த திறத்திலிருந்து இவ்வுண்மை போதரும்.

நான்காம் அடிப்படை உளநூல் அணுகுமுறையாகும் (Psychological approach). குழந்தைகட்கு எது பொருந்துமோ, எது ஏற்குமோ, எது தேவையோ அதனை எண்ணி எழுத்தில் வடிக்க வேண்டும். 'இளமையிற் கல்' என்று புரியும்படி கூறிய 'ஆத்திசூடி' மைவிழியார் மனையகல்' என்று குழந்தைகட்கு எட்டாத, எட்டக் கூடாத செய்தியினையும் தருகிறது. குழந்தை கட்கென்றே தேர்ந்து, தள்ளுவன தள்ளி, சொல்லுவன சொல்லுபவர்களே குழந்தை இலக்கியம் படைக்க முடிகிறது.

ஓசை இன்பம்—சந்த இனிமை ஐந்தாம் அடிப்படை ஆகும். ஓசை இன்பத்திற்கு ஆட்படாத குழந்தைகளே இல்லை. பாடுபொருளினும் சந்த இனிமையே குழந்தைகளின் உள்ளத்தை முதலில் பற்றி நிறபதாகும்.

"கைவீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு"

"நிலா நிலா ஓடிவா!
நில்லாமல் ஓடிவா!"

"தட்டு நிறைய லட்டு
லட்டு மொத்தம் எட்டு"

போன்ற செவிவழிப் பாடல்கள் சந்த இனிமையோடு குழந்தை களை இன்புறுத்தி, மனத்தில் நிலைத்து, வாயால் முணுமுணுக்கச் செய்து விடுகின்றன. இதன் அடிப்படை யிலேயே கவிஞர்கள் பலர் தம் நூல்களுக்கும் 'பாட்டு' 'பாடல்' எனப் பெயரிட்டுள்ளனர்.

பாடு பொருள் ஆறாவது அடிப்படை ஆகும். குழந்தைகள் முன்னரே அறிந்த பறவை, விலங்கு முதலியவற்றைப் பற்றிச் சொன்னால்தான் குழந்தைப் பாடல் வெற்றியடையும். நம் நாட்டுக் குதிரையும், பசுவும் எலியும் பூனையும் குழந்தை உள்ளத்தைக் கவருதல்போல் அயல் நாட்டுக் 'கங்காரு' பற்றி நிற்க முடியாது. மிதிவண்டி, தொடர்வண்டி போன்ற அறிவியல் கண்டு பிடிப்புகளும்

3. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி 1, ப. 95

அறிமுகப்படுத்தப்படுகின்றன. இது காலத்தின் தாக்குரவு ஆகும்.

பாரதியார், பாரதிதாசன், கவிமணி போன்றவர்கள் பிற கவிதைகளோடு குழந்தைக்காகவும் ஓரளவு பாடியவர்களே. இன்று அழ. வள்ளியப்பா, பூவண்ணன் போன்றவர்கள் முழுமையாகக் குழந்தைகட்காகவே பாடும் குழந்தைக் கவிஞர்களாக இருக்கின்றனர். நாக. முத்தையா, இர. அய்யாச்சாமி போன்றவர்கள் இத்துறையில் பெருஞ் செயல் புரிந்துள்ளனர். மு. வரதராசனார், மா. இராசமாணிக்கனார், அ.கி. பரந்தாமனார் போன்ற அறிஞர்களும் இத்துறையில் புகுந்து சில சிறப்புகளை விளைவித்துள்ளனர்.

## மூவகை நிலைகள்

"தமிழில் குழந்தைகளைப் பற்றிய நூல்களும் உள்ளன. குழந்தைகள் படிப்பதற்கு உரிய நூல்களும் உள்ளன"[4] என்று மு. வரதராசனார் கூறுகிறார். எனவே குழந்தைப் பாடல் களோடு, குழந்தைகளைப் பற்றிய பாடல்களும் உண்டு என்ப தனை அறியலாம். இவற்றுடன் சிலரைக் குழந்தையாகப் பாவித்துப் பாடுதலையும் ஒருங்கு சிந்திக்க வேண்டும்.

1. இவை (அசல் குழந்தைப் பாடல்கள்) குழந்தைகள் தாமே பாடி மகிழ்வனவாகவும் குழந்தைகள் விரும்பும் பொருள்களை—காட்சிகளை—விளையாட்டுக்களைப் பற்றியனவாகவும், குழந்தைகளின் வயதுக்கும் அறிவுக்கும் ஏற்ற சொற்களையும், கருத்துக்களையும், சந்தங்களையும் பெற்றன வாகவும் அமைந்துள்ளன[5] என்று குழந்தைப் பாடல்களின் தன்மையினைப் பூவண்ணன் புலப்படுத்துகிறார்.

2. குழந்தைகளைப் பற்றிய பாடல் இரண்டாம் வகை; குழந்தைகள் பாடி மகிழ வேண்டும் என்ற நோக்கத்தில் அன்றிப் பொதுவாகக் குழந்தைகளைப் பற்றிய எண்ணங் கொண்ட பாடல்களைக் குழந்தைகளைப் பற்றிய பாடல்கள் எனலாம்.[6] தாலாட்டு போன்றவையும் பாண்டியன் அறிவுடை நம்பியின் புறநானூற்றுப் பாடலும், திருவள்ளுவரின் 'மக்கட்பேறு' எனும் அதிகாரமும், ஆழ்வார்கள் குழந்தைக்

4. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 351
5. பூவண்ணன் 'கவிதை' குழந்தை இலக்கியம் ஒரு மதிப்பீடு, ப. 29
6. மு.ச. வெ.கி., மு.நூ., ப. 88

கண்ணனைப் பாடிய பாடல்களும் பாரதியாரின் 'கண்ணம்மா என் குழந்தை'யும் இவ்வகையினவே.

3. தெய்வங்களையும் தாம் விரும்பும் தலைவர்களையும் பிள்ளையாகப் பாவித்துப் பாடுதல் மூன்றாவது வகை. இவை தாம் 'பிள்ளைத்தமிழ்' எனும் பெயரைப் பெறுகின்றன. எனினும் இவற்றைக் குழந்தை இலக்கியமாகக் கொள்ளும் மரபில்லை.

## பாகுபாடு

மு.ச., வெ.கி. ஆகிய இருவரும் இவற்றைப் பத்தொன்பது வகையாகப் பாகுபாடு செய்து கொள்ளுகின்றனர். அவர்கள் வகுத்த பாகுபாட்டினையே இயன்றளவு பின்பற்றுதல் பொருத்தமுடையதாகும். இக்காலத் தமிழ்க்கவிதைகளில் இருநூற்றுக்கு மேற்பட்ட குழந்தைப் பாடல்கள் வெளி வந்துள்ளன. அவற்றுள் அறுபத்தாறு குழந்தைப் பாடல்கள் மட்டுமே ஆய்வுக்குட்படுகின்றன.

## விடுகதை

"குழந்தைகளுக்கு அறிவு புகட்டும் வாயிலாகச் செயற் பட்டு வருவதாலும் குழந்தைகளாலேயே பெரும்பாலும் பயின்று பாதுகாக்கப்பட்டு வருவதாலும் விடுகதைகளைக் குழந்தை இலக்கியத்தின் ஒரு பகுதியாகக் கொள்ளலாம்"[7] என்பர் ச.வே. சுப்பிரமணியம். ஆயினும் விடுகதைப் பண்போடு கூடிய குழந்தை இலக்கியம் அவ்வளவாக வெளி வரவில்லை.

**"துச்சம் எனவே எச்செயலும்**
**துணிந்து செய்யும் முதலாளி**
**அச்சம் கொள்ளச் செய்வதுவாய்**
**அவனியில் காணும் கருவி எது?"[8]**

என்று விடுகதை போலப் பாடலை அமைத்து 'எழுதுகோல்' என விடை காணுகிறார் புவனை கலைச் செழியன்.

## நீதிப்பாடல்கள்

பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் பெரும்பாலானவை நீதி நூல்களே. நம் புலவர்கள் தொன்றுதொட்டே

7. ச.வே. சுப்பிரமணியம், தமிழில் விடுகதைகள், ப. 5
8. புவனை கலைச் செழியன், பாட்டுப் புதையல், ப. 136

அனைவர்க்கும் நீதி கூறும் போக்கை வளர்த்து வந்துள்ளனர். 'செவியறிவுறூஉ' எனும் துறையும், 'நன்னெறி' 'நல்வழி' 'நீதிநெறி விளக்கம்' எனும் நூல்களும் இத்தகு போக்கினைத் தெளிவாகக் காட்டுவன. குழந்தைகளுக்குக் கற்பிக்கப்படும் நீதிகளே எதிர் காலத்தில் அவர்களைத் தீமையிலிருந்து விலக்கி வைக்கும் வித்துகளாகின்றன. எனவே, குழந்தை இலக்கியங்களில் நீதியென்றும் நெறியென்றும் பேசப்படுதல் மலிந்த போக்காக உள்ளது. நாரா. நாச்சியப்பனின் 'செம்மை நலம்' 'கல்வி நெறி' முதலிய தலைப்புகளே இந்த நோக்கத்தை உணர்த்துவன வாகும். கதைப் பாடல்களும் சான்றோர்களைப் பற்றிய பாடல்களும் நீதியை உணர்த்துவதற்காகவே எழுதப்படு கின்றன. குழந்தை இலக்கியத்தின் உயிரோட்டமாக விளங்கு வது நீதியாகலான் இதற்கென்று தனியாக நூல் எழுத வேண்டும் எனும் தேவையின்றி, நீதிக் கருத்து அனைத்திலும் ஊடாடி நிற்கிறது.

## இறைப்பற்று

குழந்தைகள் இளமை முதலே கடவுட் பற்றோடு வளர வேண்டும் என்று பல பெற்றோர்களும் அறிஞர்களும் விரும்பு வதால் கடவுட் பற்றூட்டும் கவிதைகள் தோன்றுகின்றன. கவிஞர்கள் இறைவன் பெருமைகளைக் குழந்தைப் பாடல்களில் சுட்டியுள்ளனர். கிறித்துவ சமயத்தார் மட்டுமே இதில் முனைப்பாகவும் முறையாகவும் பாடல்கள் இயற்றிக், கோயில்களில் பயிற்சி கொடுத்துக் குழுவாகப் பாட வைத்துக் குழந்தை இலக்கியமாவும் வெளியிடுகின்றனர். 'சிறுவர் கீதங்கள்' இத்தகையதே.

## கீர்த்தனை–இசைப்பாடல்கள்

கீர்த்தனைகள் போன்ற இசைப் பாடல்கள்தாம் குழந்தை இலக்கியத்தில் மிகுதியும் ஈர்ப்புத் தன்மை உடையவை. பலர் இவ்வகையில் ஈடுபாடு காட்டியுள்ளனர். தமிழ்ஒளி, சந்தப் பாடல்களில் வல்லவராக விளங்குகிறார்.

**"வெளியிற் செல்ல**
**முடியவில்லை**
**கூதல் வெட்டுது!**
**'வேண்டும் வேண்டும்'**
**என்று மழை**
**மீண்டும் கொட்டுது!"[9]**

9. தமிழ்ஒளி, பாடுபாப்பா, ப. 12

இவ்வாறு இயைபு முறையில் பாடுதல் பாரதிதாசன் காட்டிச் சென்ற நெறியாகும். பொன் ஆசையை இளமையிலேயே கிள்ளி எறிய முனைகின்றார் தமிழ்ஒளி. "பச்சைக் கிளிக்கு நகையில்லை" என்று தொடங்கி "உனக்கேன் பாப்பா நகையெல்லாம்"[10] என்ற வினாவுடன் முடிக்கிறார்.

அழ. வள்ளியப்பா 'பாப்பாவுக்குப் பாட்டு' எனும் பெயரிலேயே ஒரு நூலினைப் படைத்துள்ளார். 'பாட்டுப் புதையல்' நூலில் இறைவன், இயற்கை, இன்பம், இலக்கியம், இதரபாடல் எனப் பிரித்துக்கொண்டு பாடுகிறார் புவனை கலைச்செழியன். அம்மாவை அவர் இறைவன் வரிசையில் சேர்த்து,

**"சும்மா சொல்லும் சொல்லென்று**
**தோழா நீயும் கருதாதே!**
**அம்மா அம்மா அம்மாவே!"[11]**

என்று முடிக்கிறார். விண்மீன் பற்றிப் பாடும்போது,

**"கோலம் போடப் புள்ளி வைத்துக்**
**கோடிழுக்க மறந்ததார்?**
**... ... ... ... ... ... ...**
**வைரத் தூளை வீசி விட்டு**
**வாரி வைக்க மறந்ததார்?"[12]**

என்று பாடுதல் சிறப்பாக உள்ளது.

## தனித்தமிழ் இயக்கம்

மறைமலையடிகளாரின் தனித்தமிழ் இயக்கத் தாக்குரவு குழந்தைப் பாடல்களிலும் உண்டு.

**"காட்சி என்றெழுது தம்பி—சிலர்**
**காக்ஷிஎன் பார்அது தப்பாம்"[13]**

என்கின்றார் பாரதிதாசன். அவரைப் பின்பற்றித் தனித்தமிழிலும் அனைவர்க்கும் புரியும் எளிய நடையிலும் குழந்தைப் பாடல்கள் எழுதியவர்கள் துரைமாணிக்கம். ம. இலெ. தங்கப்பா ஆகிய இருவரும் ஆவர். 'பள்ளிப் பறவைகள்'

10. மேலது. ப. 34
11. புவனை கலைச்செழியன், மு.நூ., ப. 24
12. மேலது, ப. 30
13. பாரதிதாசன், பன்மணித்திரள், ப. 335

எழுபத்தெட்டுப் பாடல்கள் கொண்ட நூல். குஞ்சுகளுக்கு என்று மலை, காற்று போன்றவற்றையும், பறவைகளுக்கு என்று 'அறிவுப் புரட்சி' நூலகம் போன்றவற்றையும் பாடித் தமிழ்ப் பற்றினை ஊட்டுகிறார் துரை—மாணிக்கம்.

"குழந்தைகளுக்குத் தொடக்கத்தில் வேண்டியவை பாலும் சோறும்; பாட்டும் கதையும்; ஆட்டமும் பயிற்சியும்; ஓய்வும் உறக்கமும்; வளர வளரத்தான் அவர்களுக்குக் கல்வியும் கருத்தும்; ஒழுக்கமும் உலகமும் வேண்டும்"[14] என்பதிலேயே உளவியல் அணுகுமுறை தெரிகிறது.

வீசப்பட்ட இரும்புத்துண்டு, எலும்பு, தகரம் போன்றவற்றைக் கூடச் சிலர் கவிதைப் பொருளாக்குகின்றனர்.

"துரும்பும் நமக்குப் பயன்படும்
　　தோன்றும் பொருள்கள் யாவுமே
அறிவுள்ளார்க்குப் பயன்படும்
　　அறிவிலார்க்குப் பயனில்லை"[15]

என்று கூறும் ஆசிரியர்,

"வெட்டுகின்ற கிணற்றுத் தண்ணீர்
வேகும் வீட்டிற் குதவாது
கொட்டுகின்ற மழையோ என்றும்
குளித்துக் கொள்ள உதவாது!"[16]

என, வேறொரு கோணத்திலும் விளக்குகின்றார்.

"தம்பி! நீதான் புதிய தமிழன்!
இம்மியும் கீழ்மை உன்னிடம் இல்லை
சாதிச் செருக்கைச் சகதியில் போடு
ஓதிய கல்வியும் ஒழுங்கும் கடைப்பிடி
உலகை உயர்த்துதல் உன்றன் கடமை
கலகம் செய்வோரைக் காறித் துப்பு!
..... ..... ..... ...... ..... .....
எடுத்த கொள்கையில் வெற்றியை ஏந்து!
செயல் செய்யப் புறப்படு! சீர் செய் உலகத்தை!"[17]

14. துரை—மாணிக்கம், என்னுரை, பள்ளிப்பறவைகள், ப. 6
15. மேலது, ப. 22
16. மேலது, ப. 39
17. மேலது, ப. 78–79

எனத், தமிழ்க் குழந்தை வளரவேண்டிய பாங்கினை வலியுறுத்துகின்றார்.

தன் குழந்தைகளுக்கு அறிவும், உணர்வும் ஊட்ட விரும்பித் தாமே சித்திரமும் வரைந்து பாடலும் எழுதியவர் ம.இலெ. தங்கப்பா.

"தாவி எலியைப் பிடிக்கும்
தயிரை நக்கிக் குடிக்கும்
நாவால் முகத்தைத் துடைக்கும்
நாற்கா லிக்கீழ்ப் படுக்கும்"[18]

என்று பூனையைப் பற்றிப் பாடுவதிலும்,

"உந்துவண்டி கூட
ஒதுங்கிப் போக வேண்டும்
மந்திரியைக் கூட
மதிக்காது இந்த எருமை"[19]

என்று பாடுவதிலும் எளிய இனிய தமிழ் நடை போடுவதனைக் காணலாம்

'எங்கள் வீட்டுச் சேய்கள்' எனும் பாடல் ஆழ்ந்த அனுபவப் படப்பிடிப்பு ஆகும்.

"எண்ணிக்கையில் நான்கேதான்
எங்கள் வீட்டுச் சேய்கள்—அவை
எங்களையே படுத்தும் பாட்டில்
இருபத்தேழு பேய்கள்"[20]

என்றும்

"தட்டுச் சோறு முடிவதற்குள்
நூறிடங்கள் மாறும்—வீட்டுத்
தரை முழுதும் இரைந்திருக்கும்
தண்ணீரும் சோறும்!"[21]

என்றும் குறிப்பிடுவதில் குழந்தைகளின் குறும்புத் தன்மை புலப்படுகிறது.

18. ம.இலெ. தங்கப்பா, எங்கள் வீட்டுச் சேய்கள், ப. 10
19. மேலது, ப. 13
20. மேலது. ப. 21
21. மேலது, ப. 30

## உண்மைக் குழந்தைப் பாடல்கள்

"குழந்தைகளின் அறிவுக்கும் வயதுக்கும் ஏற்ற பொருள் களையும் சொற்களையும் சந்தங்களையும் பெற்றுக் குழந்தை கள் தாமே பாடி மகிழும்படியாக உள்ள பாடல்களை உண்மைக் குழந்தைப் பாடல்கள் எனலாம்."[22]

இத்தகைய பாடல்களை முழு உணர்வோடு தோற்றுவித் தவர்கள் கவிமணி, மயிலை சிவ முத்து, பெ. தூரன் ஆகி யோராவர். சுத்தானந்த பாரதியாரின் 'குழந்தை இன்பம்' புத்தனேரி இரா. சுப்ரமணியத்தின் 'அம்புலிப் பாட்டுப் பாடாதே' போன்றவை இவ்வகையின.

சுத்தானந்த பாரதியார் சமயப் பொதுமை உணர்த்து கிறார். சமயங்களின் போக்குகளால் ஏற்பட்ட மோதல்களை

"ஆளின் பெயரை மதமாக்கி
அவரிவர் என்றே போராடி
வாளின் முனையில் அரசாக்கி
மனிதர் அமைதி கெட்டதுவே"[23]

எனச் சுட்டுகிறார்.

இக்காலக் கவிதை உலகில் தனிச்சிறப்பிடம் அழ. வள்ளியப்பாவுக்கு உண்டு. 1944 முதல் இத்துறையில் ஈடுபட்டு வரும் அவரது நூல்கள் முற்றிலும் குழந்தைகளுக்கானவை. குழந்தைகட்காக எழுதுவதே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர் அவர். 'மலரும் உள்ளம்' இரண்டு தொகுதிகளும், உண்மையான குழந்தைப் பாடல்கள் ஆகும். இரா. பொன் ராசன் 'இளைய பாரதம்' எனும் பெயரிலும் மின்னூர் சீனிவாசன் 'வண்ணவண்ண மீன்கள்' எனும் பெயரிலும் தரமான படைப்புகளை வழங்கியுள்ளனர். 'இளைய பாரதம் பரிசு பெற்ற நூலாகும். மின்னூர் சீனிவாசனின் பாடல்களில் உவமை, உருவகங்கள் சிறப்பாக அமைந்துள்ளன.

"வெள்ளையாடைப் பாதிரி—அவர்
மேனி உன்றன் மாதிரி"[24]

என்ற பாடற்பகுதியில் உவமையும்,

22. மு.ச., வெ.கி., மு.நூ. ப. 57
23. சுத்தானந்த பாரதியார், குழந்தை இன்பம், ப. 56
24. மின்னூர் சீனிவாசன், வண்ண வண்ண மீன்கள், ப. 27

"பாதி வட்டம் போட்டு வானில்
படர்ந்து வந்தாய் வில்லே!
மீதி வட்டம் எங்கோ கடலில்
விழுந்த துண்டோ சொல்லே!"[25]

என்ற பாடற் பகுதியில் உருவகமும் மிளிர்வதனைக் காணுகின்றோம்.

பூவண்ணனின் 'பாட்டுத் தோட்டம்' இனிய பாடல்களின் தொகுப்பு ஆகும். ஜவஹரின் 'தொடக்கப் பள்ளிக்குத் தொண்ணூறு பாடல்கள்' எனும் நூல் அபிநயப் பாடல் நாற்பத்தைந்தும் கதைப்பாடல் நாற்பத்தைந்தும் கொண்டது.

"பறையை அறைவார்
தட் தட தட்"[26]

எனத் தாள ஓசையுடன் பாட்டு நடைபோடுகிறது.

ஆனால் ஆங்கிலச் சொற்களைப் பயிற்றுவிக்கும் முயற்சியில் அவர் இறங்கியிருப்பது பொருத்தமாக இல்லை.

"சிறந்தது யாவும் பெஸ்ட்
சுவையை அறிதல் டேஸ்ட்
விருந்தினராகும் கெஸ்ட்
விரைந்து போதல் பாஸ்ட்"[27]

என்று பாடினும், உண்ணா நோன்பும் 'பாஸ்ட்' எனும் ஓசையுடன் வரும் போது குழந்தைகளைக் குழப்புவதாகவே இது முடியும்.

### கதைப் பாடல்கள்

'ஒரு கதையும் கூட உரைநடையில் இருப்பதை விடப் பாடலாக இருந்தால் மனத்தில் நன்றாகப் பதியும்'[28] என்ற கருத்தின் அடிப்படையில் பலர் கதைப் பாடல்களை இயற்றித் தந்துள்ளனர். இவர்களுக்குள்ளும் கவிமணிதான் முன்னோடியாக விளங்குகிறார். அழ. வள்ளியப்பா இவ்வகையினைப்

25. மேலது, ப. 19
26. ஜவஹர், தொடக்கப் பள்ளிக்குத் தொண்ணூறு பாடல்கள், பாட்டு 2
27. மேலது, பாட்டு 33
28. மு.ச. வெ.கி., மு.நூ. ப. 66

பெரிதும் பேணி வளர்த்துள்ளார். 'பாட்டிலே காந்தி கதை' 'ஈசாப் கதைப் பாடல்கள்' 'சுதந்திரம் பிறந்த கதை' எனும் நூல்களின் தலைப்பே கதைச் சார்பினை உணர்த்தும். கண்ணனுக்கு அண்ணன் சொல்லுவதுபோல் காந்தி கதை அமைந்துள்ளது.

"மாந்த ருக்குள் தெய்வம் — அவர்
வழியைப் போற்றி நடப்பேன்;
காந்தி போல வாழ்வேன் — நல்ல
கருணை மனிதன் ஆவேன்"[29]

என்னும் இச்சூளுரை ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்றதாகும்.

நாக. முத்தையா தானே நூல்கள் இயற்றியும் பிறர் நூல்களை வெளியிட்டும் சிறந்த பணி செய்துள்ளார். 'கதையும் பாட்டும்' எனும் உள்தலைப்பிட்டுக் 'குழந்தைகட்கு லெனின் கதைகள்' எனும் நூலைத் தந்துள்ளார். இலெனின் வாழ்வில் ஒன்பது நிகழ்ச்சிகளை முதலில் உரைநடையாகவும் பின்னர் பாட்டாகவும் தருகின்றார். எளிய நடையில் கதை அழகுற நகர்கிறது. பிரேம்லதாலால் 'வள்ளியும் தோழரும்' எனும் கதைப் பாடலையும் தமிழ்முடி 'பிள்ளையார் சிலை' எனும் கதைப்பாடலையும் தந்துள்ளனர். நல்வழி காட்டும் நோக்கில் இருபது கதைப் பாடல்களைத் தருகிறார் தமிழ்முடி. இந்நூலில் கூடுகட்டி அடைகாத்துக் குஞ்சு பொரிக்காத குயிலினக்கதை உருக்கமாக உள்ளது. காக்கையால் விரட்டப்படும் குயில் குஞ்சின் அவல நிலை நெஞ்சைத் தொடுகிறது.

"வீடில் லாதார் நாட்டிலே
மிகுந்த மதிப்பாய் வாழினும்
கூடில் லாமல் தவித்திடும்
குயிலைப் போல ஆவதோ ?"[30]

எனும் நீதிக் கேள்வி நிமிர்ந்து நிற்கிறது. அவரே எழுதிய 'ஆயிரமும் அஞ்சும்' எளிய நடையில் அமைந்த நல்ல நீதிக் கதையாகும்.

கோவூர் இசைதாசன் 'பூக்கூடை' எனும் நூலில் ஆறு கதைப் பாடல்களைத் தருகிறார். ஏகலைவன்—துரோணர் கதை நன்கு படைக்கப்பட்டுள்ளது.

29. அழ. வள்ளியப்பா, பாட்டிலே காந்திகதை, ப. 140
30. தமிழ்முடி. பிள்ளையார் சிலை. ப. 68

## தழுவல் பாடல்கள்

கவிமணிதான் சிறந்த ஆங்கிலப் பாடல்களை மொழி பெயர்த்தும் தழுவியும் பல குழந்தைப் பாடல்களைத் தந்தவர். அழ. வள்ளியப்பாவின் 'ஈசாப் கதைப் பாடல்கள்' தழுவல் பாடல்கள் ஆகும். பிறநாட்டார், குழந்தைகளுக்கான இலக்கியங்களைப் படைப்பதில் கையாண்டுள்ள உத்திகளைக் கணிக்க இந்நூல்கள் பயன்படும்.

## குழந்தைக் காப்பியம்

இதிகாசமாக, புராணமாகத் தொன்று தொட்டு விளங்கும் கதைகளை எளிய நடையில் காப்பியமாக ஆக்கித் தருகின்றனர் பலர். இர. அய்யாச்சாமியால் எழுதப்பட்ட 'பால இராமாயணம்' எனும் காப்பியம் குழந்தை இலக்கியத்தின் மணி முடி எனலாம். அவரே 'சிறுவர் சிலம்பி'னையும் காந்தி நூற்றாண்டு விழா நினைவாக 'மோகன காந்தி' எனும் காப்பியத்தையும் படைத்துள்ளார். அவர் ஒருவரே குழந்தை களுக்கான காப்பியங்களைப் படைத்தவர் ஆவார். அழ. வள்ளியப்பாவின் 'பாட்டிலே காந்தி கதை' சற்றுப் பெரிதான கதை எனலாமே தவிரக் காப்பிய மதிப்பினைப் பெறுவதாகக் கூற இயலாது.

## வில்லுப்பாட்டு

வில்லுப்பாட்டாகச் சில குழந்தைப் பாடல்கள் அமைகின்றன. வில்லும், பாட்டும், கதையும் குழந்தைகளைத் துள்ளிக்குதிக்க வைத்துவிடுகின்றன. இத்துறையில் வல்லவ ரான சுப்பு ஆறுமுகம் 'காந்தி வந்தார்' 'விடுதலை வேள்வி' எனும் இரு நூல்களைப் படைத்ததன் வாயிலாகக் குழந்தை இலக்கிய வரலாற்றில் சிறந்த இடத்தைப் பெற்று விடுகிறார்.

வில்லுப்பாட்டு என்ற முறையில் வில்லிசை வேந்தரான பிச்சைக்குட்டி 'காந்தி மகான் சரிதம்' எனும் பெயரிலும், கலைவாணர் 'காந்திமகான் கதை' எனும் பெயரிலும், கொத்த மங்கலம் சுப்பு 'காந்தி மகான் கதை' எனும் பெயரிலும் நடத்திய நிகழ்ச்சிகள் அவருக்கு வழிகாட்டியுள்ளன.

"பாமர மக்கள் மட்டுமே கேட்டு இன்புற்று வந்த இக்கலை, படித்தவர் மத்தியிலும் ஒலிக்கத் தொடங்கிய நிலையில் கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பினைத் தரும்

கலையாக விளங்கத் தலைப்பட்டது"[31] என்பார் கூற்றும் இவண் நினையத்தகும்.

## புதுக்கவிதை

சந்தங்களை முற்றிலும் உதறியாக வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு முன்னேறும் புதுக்கவிதையாளர்கள் சந்தங்களுக்கு வாழ்விடமான குழந்தைப் பாடல்களை எழுதுதல் ஒரு முரண்பாடான செய்கை ஆகும். சண்முக சுப்பையா எழுதிய 'கண்ணன் என் தம்பி' எனும் ஒரே நூல் குழந்தைப் பாடலாக அமைந்துள்ளது. எனினும் குழந்தைகளை ஈர்க்கும் ஆற்றல் இதனுள் குறைவாகவே உள்ளது.

## வாழ்க்கை வரலாறு

'காகமும் நரியும்' போன்ற கதைப் பாடல்கள் ஒருபுறமிருக்க, உலக வரலாற்றில் சிறப்புப் பெற்ற தலைவர்கள் அறிஞர்கள் பற்றிய அறிமுகமும் குழந்தைகட்கு இன்றியமையாத கல்வி ஆகும். சான்றோர்கள் தங்கள் வாழ்வினை நடத்தி வெற்றி கண்ட பாங்கும், அறிவியல் அறிஞர்கள் தாங்கள் கண்டுபிடித்த கருவிகட்காகப் பட்ட பாடும், நம் நாட்டுத் தலைவர்களும் உலகத்தலைவர்களும் நாடும், உலகமும் முன்னேறுவதற்காக உழைத்த வகையும் குழந்தைகட்கு அறிமுகப்படுத்தப்பட்டால் தான் இளம் பருவத்திலேயே எதிர்கால வளர்ச்சிக்கான ஓர் இலக்கை அமைத்துக் கொள்ள முடியும். நாரா. நாச்சியப்பன் 'சான்றோர்' எனும் தலைப்பிலேயே இருபத்தெட்டுச் சான்றோர்களைப் பற்றி எடுத்துக் காட்டுகிறார். இலெனின், காந்தி, சவகர்லால் நேரு போன்ற தலைவர்களின் சிறப்புகள் பாடப் பட்டுள்ளன. பெ.வா. முனிரத்தினம் 'ஜவஹர்லால் நேரு' என்ற தலைப்பிலேயே நூல் இயற்றியுள்ளார். இரா. தண்டாயுதம் 'மலரும் மலர்' எனும் தொகுப்பில் புத்தர், ஏசு, சாக்ரடீசு, லிங்கன் போன்ற உலகச் சான்றோர்களையும், பாரதியார், பாரதிதாசன், திரு. வி.க. போன்ற தமிழ்ச்சான்றோர்களையும், சேம்சுவாட், ரைட் சகோதரர்கள், எடிசன், மார்க்கோனி, கியூரி தம்பதிகள் போன்ற அறிவியல் அறிஞர்களையும் சிறப்புற எடுத்துக் கூறுகிறார்.

31. தி.சி. கோமதிநாயகம், தமிழ் வில்லுப்பாட்டுகள், ப. 87

"இரவில் படிக்க மின்சக்தி!
இருட்டைப் போக்க மின்சக்தி!
அரைக்கும் மாவை மின்சக்தி!
ஆலை இயக்கும் மின்சக்தி!
..........................................................
இவரைத் தந்த அமெரிக்கா
இன்றும் பெருமை பெறுகுதையா!
அவரைப் போல நாமெல்லாம்
அயரா துழைத்துச் சிறப்போமே!"[32]

என எடிசனையும் அவரது கண்டுபிடிப்பையும் பாராட்டுகிறார். குழந்தைகள் உள்ளத்தில் நம்பிக்கை வித்தை ஊன்றும் இந்நூல் விடுகதைப் பண்பினவாகிய புதிர்களையும் இயற்கை, செயற்கை ஆகிய பொருள்களையும் ஒருங்கே தொகுத்துத் தருகிறது. குழந்தைக் கவிஞர்களை அறிமுகப் படுத்தும் குழந்தை இலக்கியம் எனும் முறையில் இந்நூல் சிறப்புப் பெறுகிறது.

அமலனின் 'காந்தி நாற்பது' காந்தியடிகளின் வாழ்வில் குறிப்பிடத்தக்க நாற்பது நிகழ்ச்சிகளைக் கூறுகிறது.

ஏழை உழவனைப் பார்த்துக் காந்தியடிகள் தம் உடைய மைப்பை மாற்றிக் கொண்டார் என்பதனைக்,

"கண்டே நொந்த அண்ணலும்
கட்ட நான்கு முழமதே
கொண்டே வாழ்வோம் நாமெனக்
கோலம் மாற்றிக் கொண்டனர்"[33]

எனவரும் பாடற்பகுதி உணர்த்தும்.

## அறிவியல் நுற்பங்கள்

இக்காலத்தில் அறிவியல் பெருமளவில் வளர்ந்திருப்பதோடன்றி கலைக் கல்வியை விடத் தொழிற் கல்வியே அனைவருக்கும் தரப்பட வேண்டும் எனும் அளவுக்குச் சிந்தனை வேகம் பிறந்துள்ளது. தொழில்கள் அனைத்திற்கும் அடித்தளமாக உள்ள அறிவியற் கல்வியைக் குழந்தைகட்குப் பயிற்றுவிப்பதிலும் குழந்தை எழுத்தாளர்கள் ஈடுபடுகின்றனர்

32 இரா. தண்டாயுதம், மலரும் மலர், ப. 145
33. அமலன், காந்தி நாற்பது, ப. 15

எனினும் இம்முயற்சி அரும்பியிருக்கிறதே தவிர அலர்ந்து விடவில்லை.

கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய சேக் மதார் இயற்றிய 'அழகைக் கண்டேன்' எனும் நூலில் அறிவியல் சிந்தனைகளும் இடம் பெற்றுள்ளன.

**"எள்ளள வாகிலும் சோர்வடையேன்–நான்**
**எந்த வகையிலும் ஓய்வறியேன்;**
**கள்ள மின்றிக்கட னாற்றிடுவேன்–என்போல்**
**காண முடியுமோ கூறிடுவீர் !"[34]**

என்று வானொலி கூறுவதாக உள்ள பகுதி குறிப்பிடத்தக்கது.

அறிவியல் புதுமைகள் அடுக்கடுக்காய் வெளிவரும் இந்நாளில் அரு. சோமசுந்தரம் 'சிறுவர்க்கு விஞ்ஞானம்' என்று தொடங்கி வைத்ததை இக்காலக் கவிஞர்கள் எவரும் தொடர வில்லை என்பது சிந்தனைக்குரியது.

## சித்திரங்களோடு கூடிய நூல்கள்

குழந்தைப் பாடல் நூல்களில் சித்திரங்கள் இன்றியமையா இடத்தைப் பெறுகின்றன. சித்திரங்களோடு கூடிய பாடல்கள் என்றால் அவை ஒரு முழுமை பெறுகின்றன என்றே சொல்லலாம். கே.எசு. இலட்சுமணன் 'பாப்பாவுக்கு மிருகங்கள்' பாப்பாவுக்குப் பறவைகள்' எனும் நூல்களை இயற்றியதோடு அவரே பொருத்தமான சித்திரங்களையும் வரைந்து காட்டியுள்ளார்.

**"அழகாய் உள்ளது ஆட்டுக்கடா**
**உழவுக்கு ஏற்றது மாட்டுக்கடா**
**கோனார் வீட்டிலே எருமைக்கடா**
**குளத்தில் இருப்பது கூழைக்கடா"[35]**

என்று, பறவைகளும் விலங்குகளும் ஓசை நயத்துடன் அறிமுகப்படுத்துகின்றன. பனங்காடை, கவுதாரி போன்ற நாம் அடிக்கடி பார்க்கும் வாய்ப்பில்லாத பறவைகளும் விளக்கப் படுகின்றன. கழுகு, பருந்து போன்றவற்றுக்குள்ள நுட்ப வேறு பாடுகளை இந்நூலில் உள்ள சித்திரங்கள் பளிச்செனக் காட்டுகின்றன. இவ்வுத்தி மிகச் சிறப்பான ஒன்றாகும்.

34. ஷேக்மதார், அழகைக் கண்டேன். ப. 37
35. கே.எஸ். லெட்சுமணன், பாப்பாவுக்கு பறவைகள், ப. 7

## மாணவர்க்கு

*பன்னூல் ஆசிரியரான நாச்சிகுளத்தார் தங்குதடையின்றி மிகப்பல கவிதைகளை இயற்றும் வல்லமையுடையவர். 'மாணவர்க்கு' எனும் தலைப்பில் நூற்றுநான்கு உட்பிரிவுகளில்,*

"கள்ளுடன் பீடி குடித்திடவும்
கணிகையைத் தேடி நடந்திடவும்
கொள்ளையாம் திருட்டைச் செய்திடவும்
குமரியைப் பார்த்தே விடைத்திடவும்
சல்லைசேர் நண்பர் தனைச் சேர்த்து
சமர்த்தாய்ப் பேசி அழைப்பாரால்
கல்வியை உணர்ந்த மாணவனே
கருத்தாய் வாழ்வாய் புவிமீதே!"[36]

*என்பன போன்ற அறிவுரைகளை வழங்குகின்றார்.*

## பொது

*மேற்குறிப்பிட்ட வகைகளில் அடங்காது குழந்தைகட்கெனப் பொதுவான உணர்ச்சியில் எழுந்த நூல்கள் சில. அழகப்பா மாண்டிசோரிப் பள்ளியின் ஆண்டுவிழாக்களுக்கென எழுதப்பட்ட பாடல்களை 'மழலை மலர்கள்' எனும் பெயரில் மா. கண்ணப்பன் வெளியிட்டுள்ளார்.*

"நாடு காக்க ஓடி ஆடும்
நமது வீரரை
வீடு காக்கும் நீங்க ளெல்லாம்
விருந்துக் கழையுங்கள்"[37]

*என்று, பட்டாளத்து வீரரை வரவேற்குமாறு வேண்டுகோள் விடுகிறார்.*

*பழங்களைப் பற்றிப் பாடும்போது வெறும் தோற்றச் சிறப்புக்காகவோ சுவைக்காகவோ பாடாமல் அவற்றின் பயன்களை உணர்த்துதல் சிறப்பாகும்.*

"சீதளம் வந்தால் போக்கிடுவேன்
இன்புளு யென்சா மருந்தாவேன்"[38]

36. நாச்சிகுளத்தார், மாணவர்க்கு, ப. 116
37. மா. கண்ணப்பன், மழலை மலர்கள், ப. 6
38. மேலது, ப. 11

என்று எலுமிச்சம்பழமும்

"பல்லை நன்றாய்க் காத்திடுவேன்
பயோரியாவைப் போக்கிடுவேன்"[39]

என்று ஆரஞ்சும் கூறுவதாக அமையும் பகுதிகள் இக்கருத்துக்கு அரண் சேர்க்கின்றன.

கவியரங்கமாகவும் கவிதைப் பட்டிமன்றமாகவும் அமைந்த குழந்தைப் பாடல்களும் இதனுள் இடம் பெறுகின்றன.

மலை, கடல், காலம் முதலிய பதினெட்டுத் தலைப்புகளில் 'பரிசு' எனும் நூலைத் தருகிறார் குயிலன். அவற்றைக் கடவுள் தந்த பரிசுகளாகக் கொள்ளுகின்றார்.

"வீணிற் காலம் போக்கி—நீ
விரயம் செய்ய வேண்டாம்
பேணிச் செலவு செய்தால்—பலன்
பெறுவ துறுதி தம்பி"[40]

என்று காலத்தின் பெருமை உணர்த்துகிறார்.

குழந்தை எழுத்தாளர் சங்கமே பொறுப்பெடுத்து வெளியிட்ட தொகுப்பு கோவூர் இசைதாசனின் 'பூக்கூடை'.

"விடுதலைத்தீ நாட்டில் ஓங்க
வீறுகொண்டு தேச பக்திப்
பாடல்களைப் பாடியவன் யாரடி ?—தமிழ்ப்
பாட்டுக்கொரு சுப்ரமண்யபாரதி"[41]

என, வினா-விடை வடிவமாக அவரது பாடல் அமைந்துள்ளது. நாட்டுணர்ச்சியை நன்கு காட்டும் வெளியீடாக இந்நூல் அமைகிறது.

எ.வே. திருப்பதியின் 'சிறுவர் இலக்கியத்'தில் இடம் பெறும் 'உலகம் போற்றும்' என்னும் பாடல் சிறுவர்களிடத்தில் நாட்டுப் பற்றை வளர்க்கத் துணை செய்யும். 'உண்மைதான்' என்னும் தலைப்பில் உள்ள பாடலில் மொழி நலமும் பொருள் நலமும் சிறந்து விளங்குகின்றன.

39. மேலது, ப. 13
40. குயிலன், பரிசு, ப. 26
41. கோவூர் இசைதாசன், பூக்கூடை, ப.4

'கொஞ்சும் குழந்தையை வெளியிட்ட மீனவன், பழமையை அறிந்த புதுமையாளர்.

**"உழைப்பார் பலர்; கொடுப்பார் சிலர்"**
**உதவாதிது! பேதம்**
**உழைக்காதவர் எவரும் இனி,**
**உண்ணல் பெரும் பாவம்"[42]**

என்பதிலேயே அவரது வேகம் தெரிகிறது. மேலும், திருவள்ளுவர், தாகூர் போன்ற சான்றோரை அறிமுகப் படுத்துகிறார். இத்தொகுப்பில் 'அருள்துறவி' போன்ற புன்னிரண்டு கதைப்பாடல்களும் இடம்பெறுகின்றன. 'நாள் காட்டி' போன்ற நல்ல சொற்களை வழங்குகிறார். 'சைக்கிள்' என்றெழுதிய கவிமணியைவிட இக்காலக் கவிஞர்கள் தூய சொற்களை மிகுதியும் வழங்குகின்றனர். 'Tank' என்பதைக் கூடத் 'தாங்கி' என்றெழுதுவது செப்பமான பணியாகும்.

**"காலையில் வந்து கட்டிலில் கிடப்பேன்!**
**கருத்தாய்ப் பிரித்தால் செய்திகள் கொடுப்பேன்!**
**மாலையில் வந்து மீதியுரைப்பேன்!**
**மக்கள் தொண்டை மதித்தே உழைப்பேன்!"[43]**

என்று செய்தித்தாள் கூறுவதும்,

**"பரந்த சோவியத் நாடாம்**
**பாட்டாளிகளின் வீடாம்**
**சுரண்டல் தவிர்ந்த ஆட்சி**
**தோழர் லெனினின் மாட்சி"[44]**

என்று இலெனினைப் பாராட்டுவதும், 'நாகரிக அரசியலின் தலைவர்'[45] என அண்ணாவைப் பாராட்டுவதும் சிறப்பிடங்கள் ஆகும்.

மு. முத்துக்கிருட்டிணன் தன் 'அழகு மலர்கள்' என்னும் நூலில்,

**"அமுதம் போல இனிக்கும் – அதை**
**அருந்த அருந்தச் சுவைக்கும்**

42. மீனவன், கொஞ்சும் குழந்தை, ப. 88
43. மேலது. ப. 50
44. மேலது, ப. 111
45. மேலது.

நமது அன்னை வீடு – உன்
நாவினிக்கப் பாடு"[46]

என்று பாடுகிறார்.

அருஞ்சொல் விளக்கத்துடன் வெளிவந்துள்ளது. நாக. முத்தையாவின் 'பச்சை விளக்கு'.

"தம்பி தங்கை எல்லோரும்
தமிழில் திறமை கொள்வரென
நம்பி இந்நூல் வெளிவரலால்
நன்மை பெறுக இளைஞரெலாம்"[47]

என்பதே நூலின் நோக்கமாகும்; பச்சை விளக்குக் காட்டும் இந்நூலாசிரியர்,

"கரியைத் தின்றே விரைந்தோடும்
கடகட வென்றே இரைந்தோடும்
விரைந்து காற்றாய்ப் பறந்தோடும்
வேண்டும் ஊரில் நின்றோடும்"[48]

என்று தொடர்வண்டியினையும் பாடுகிறார்.

மூவேந்தன், 'சுடர்விளக்'கில் தமிழ் நிலம், புலவர்கள், அரசர்கள், ஏசு, புத்தர், சாணக்கியர், மெகஸ்தனிஸ் போன்றவர்களைப் பற்றித் தொகுத்துரைக்கிறார். குழந்தைகள் மனத்தில் எளிதாகப் பதிந்து நிற்கக் கூடிய பாடல்கள் அவை.

"தமிழாம் நமது தாய்மொழியைத்
தாங்கிச் சிறந்த நிலப்பகுதி
அமுதத் தமிழர் நாடென்று,
அறிந்து கொள்வாய் நீயின்று"[49]

என்று உணர்வோடு குறிப்பிடுகிறார்.

சி. மாணிக்கம் எழுதிய 'தேனமுதம்' எளிய நடையில் தொடங்கி இறுதியில் சற்றுச் செறிவான நடையில் முடிகிறது. குழந்தைகட்கு எளிமையாகச் சொல்லிக் கொடுத்துப் பயிற்சி தந்து பின்னர் படிப்படியாக வளர்த்துச் செல்லும் உளவியற்

46. மு. முத்துக்கிருட்டிணன். அழகுமலர்கள், ப. 5
47. நாக. முத்தையா, பச்சை விலக்கு, ப. 3
48. மேலது, ப. 19
49. மூவேந்தன், சுடர்விளக்கு, ப. 5

பாங்காக இஃது அமைகிறது. நூலின் பிறபகுதியில் கதைப் பாடல்களும் இடம்பெறுகின்றன.

நாடு, மொழி, உழைப்பு, இறை, இயற்கை முதலிய வற்றைப் பாடியுள்ள வாணனின் 'பறம்புமலை' எனும் நூல் சந்தங்கள் பலவற்றை உடையது.

**"தனிமையாக மேலிருந்து**
**தாவி விழுகுது—அது**
**இனிமையாகப் பாட்டுப் பாடி**
**இறங்கி வருகுது"[50]**

என்று அருவிபற்றி அழகாகக் கூறுகின்றார்.

இயைபு முறை இனிமையாக இருக்கும் என்றாலும் வாழப்பாடி சந்திரன் சொற்களின் உண்மை வடிவைச் சிதைப்பது பொருத்தமாக இல்லை.

**"மாடு முட்டினா பாச்சல்**
**மச்சானுக்குக் காச்சல்**
**ஆட்டுக்கு இல்லை மேச்சல்**
**அவன் குடிச்சான் தீச்சல்"[51]**

இதனுள் 'பாய்ச்சல், காய்ச்சல், மேய்ச்சல்' என்றே சொற்களைப் பயன்படுத்தியிருக்கலாம். 'தீச்சல்' என்பது குழந்தைகளின் அறிவெல்லைக்கு எட்டாத சொல்லாட்சி யாகும்.

பொன். வேங்கடேசன், பண்ணியம், வானூர்தி, மிதிவண்டி எனும் சொற்களைக் கையாளுகின்றார். 'நிலம்' பற்றிப் பாடும்போது

**"எல்லா உயிர்களும் நன்றாகப்–பல**
**இன்பங் கொண்டிடப் பொருத்தமுடன்**
**பல்வகை உணவைத் தருகின்றாய்—இந்தப்**
**பண்பினை எங்கே பெற்றாயோ ?"[52]**

என்று கேட்பதும்,

50. வாணன், பறம்புமலை, ப. 3
51. வாழப்பாடி சந்திரன், பிள்ளைக் கனியமுது, ப. 7
52. பொன். வேங்கடேசன், மழலைத்தேன், ப. 14

"வெள்ளைநி றத்தவர் உள்ளஇ ருளினைக்
கிள்ளமு ளைத்தவர் ஏசு அவர்
கள்ளமி லாமலே சொல்லிய நல்லவை
உள்ளம கிழ்ந்திடப் பேசு—தினம்
உள்ளம கிழ்ந்திடப் பேசு[53]

என்று இசையொழுங்குடன் பாடுவதும் சிறப்பாக உள்ளன.

'வளரும் உள்ளத்'தில் மு. வைத்திலிங்கம் தரமான செய்திகளைத் தொகுத்தளிக்கிறார். சில சொல்லாட்சிகள் கடுமையாக அமைந்திருப்பினும் செந்தமிழ் நடையும் கருத்துச் செறிவும் கருதி இதன் சிறப்பைப் பாராட்டலாம். இந்நூலின் உள்ளடக்கச் சிறப்பினைக் குன்றக்குடி அடிகளார் பாராட்டு கிறார்.[54]

ஐந்தும் ஒன்றும் ஆறு
அறிவு நூலில் தேறு
... ... ... ... ... ...
ஒன்பதும் ஒன்றும் பத்து
ஒழுக்கம் கல்வி சொத்து"[55]

எனவும்

மண்ணுலகின் செல்வமது பெயல்
மாந்தர்தமை உயர்த்துவது செயல்
தண்டமிழின் முன்னிருக்கும் இயல்
தமிழின்றிப் பிறவெல்லாம் அயல்"[56]

எனவும் வரும் பாடற்பகுதிகள் அவரது பாராட்டுக்குச் சான்றுகள் ஆகும்.

குழந்தைகளை நல்லவர்களாக உருவாக்க வேண்டும் எனும் விருப்பம் குழந்தைக் கவிஞர்களுக்கு இருக்கிறது.

நாரா. நாச்சியப்பன் இருபத்தெட்டுத் தலைப்புகளில் 'கல்வி நெறி' கூறுகிறார். சிறுவர்க்குரிய கருத்துகளைச் 'செம்மை

53. மேலது, ப. 59
54. குன்றக்குடி அடிகளார், அணிந்துரை, மு. வைத்திலிங்கம், வளரும் உள்ளம்.
55. மு. வைத்திலிங்கம், வளரும் உள்ளம், ப. 5
56. மேலது, ப. 58

நலம்' எனும் நூலில் தருகிறார். நாகரிகமாக ஆடை அணிய வேண்டும் என்பதனைக்,

**காண்பவர் மகிழுதற்கும்**
**கட்டுடல் பொலிவதற்கும்**
**பூண்பதாம் ஆடை தூய்மை**
**பொருந்திய தாக வேண்டும்"[57]**

என்னும் பாடல்வழிச் சுட்டுகின்றார்.

இந்தப் பொறுப்பினை உணர்ந்த மயிலை முத்தெழிலன் 'நல்லபாப்பா' 'நல்ல பையன்' 'நல்ல மாணவன்' என்னும் நூல்களை இயற்றியுள்ளார். 'நல்லமாணவன்' என்ற நூலில் 'நல்ல பெண்மணி' எனும் திரை இசையில் பாடல் அமைந்துள்ளது. இந்நூலில் சொற்களைக் கையாளும் பக்குவம் குறைவு. வெளிநாட்டு நகரங்களையே மிகுதியும் கூறுவதால் பாடல்கள் அன்னியப்படும் நிலை ஏற்படுகிறது.

குழந்தைகள் தவழுவது தாயின் மடியில்; அவர்கட்கான முதல் பாட்டு தாய் பாடும் தாலாட்டு. குழந்தைகளை அரவணைப்பதும், பாட்டுச் சொல்லித் தூங்க வைப்பதும், நிலா காட்டிச் சோறூட்டுவதும், தாய் குழந்தைப் பாடல்களை இயற்றும் வகையில் நான்கைந்து பெண் எழுத்தாளர்கள் முனைந்துள்ளார்கள் என்றாலும் குறிப்பிட்டுச் சொல்லும்படி அவர்களது பாடல்கள் அமையவில்லை.

இக்காலத்தில் அறிஞர்கள் தங்கள் நூல்களை வெளியிட்டால் வாங்குவார் குறைவாக உள்ளதால் அவர்களே வெளியிடத் தயங்குகின்றனர். இந்நிலையில் சித்திரத்துடனும் சற்றுப் பெரிய எழுத்துடனும் குழந்தை இலக்கியத்தை வெளியிட முனைவார் குறைவாகவே இருக்க முடியும். அந்த நூல்களும் விலைபோக வேண்டுமானால் பெரியவர்கள் மனம் வைத்துக் குழந்தைகட்கு வாங்கிக் கொடுக்க வேண்டும். அல்லது குழந்தைகள் அடம் பிடித்து நூல்களை வாங்க வேண்டும். ஆனால் வெடிக்கும், ஊதலுக்கும், மிட்டாய்க்கும் அடம்பிடிக்கும் குழந்தைகள் குழந்தை இலக்கியத்துக்காக் அடம் பிடிப்பார்களா என்பது சிந்தனைக்குரிய ஒன்றாகும். குழந்தைகட்கென வெளிவந்து நின்று விட்டதும், வெளிவந்து கொண்டிருப்பதுமான இலக்கிய இதழ்கள் தொண்ணூறு வரை

57. நாரா. நாச்சியப்பன், செம்மை நலம், ப. 7

இருக்கும்.[58] பெரியவர்கட்கென வரும் இதழ்களை விட இவை அதிகம் என்பதும் சிந்தனைக்குரியது.

ஆண்டுக்கு ஏழு நூல்கள் என்ற அளவில் குழந்தை இலக்கியம் வெளிவந்துள்ளது என்பது உண்மையானாலும் இது மிக மிகக் குறைவான வளர்ச்சியேயாகும்.

"1956 முதல் 1960 வரை குழந்தை எழுத்தாளர் சங்கம் இக்குழந்தையை வளர்த்தது எனலாம். மாநாடுகளைக் கூட்டியும் எழுத்தாளர்களை ஊக்குவித்தும் குழந்தைப் பாடல் போட்டி நடத்திச் சிறந்த பாடல்களுக்குப் பரிசளித்தும் வளர்த்தது எனலாம். 1961 முதல் 1965 வரை அதிகமான குழந்தைப் புத்தகங்கள் தோன்றின. இக்காலத்தில் குழந்தைப் பாடல்கள் நூல் வடிவில் வளர்ந்தன. 1966 முதல் 1970 வரை அதிகமான பாடல்கள் தோன்றவில்லை. குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய முறையில் வளரவில்லை எனலாம். 1970 முதல் குழந்தைப் பாடல் துறை வெகுவேகமாக வளர்ந்து வருகிறது. பெரியோர் பாடல்களுக்கு இணையாகச் சீரும் சிறப்பும் பெற்று வளர்ந்து வருகின்றன"[59] என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## முடிபுகள்

குழந்தைப் பாடல்களில் புதிய பாடுபொருள்கள் பல அமைந்து வருவது சிறப்பாகும்.

அறிவியல் கருவிகளின் பெருக்கம் குழந்தைப் பாடல்களின் பாடுபொருள்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைச் செய்துள்ளது.

குழந்தைப் பாடல் வாயிலாக இறை உணர்வை ஊட்டப் பெரிதும் முனைந்துள்ளது கிறித்துவ சமயமாகும்.

பொதுவாகவே இயற்கைப் பொருள்களையும், செயற்கைப் படைப்புகளையும் அறிமுகப்படுத்தி விளக்கும் முயற்சியே குழந்தைப் பாடல்களில் தலைதூக்கி நிற்கிறது.

குழந்தைகட்காகவே பாடும் பாடல்களில் பொருள்களை விளக்கிச் சொல்லி மனத்தில் பதிய வைப்பது சரியான உத்தி யாகும். அனைவரும் அதனையே கடைப்பிடிக்கின்றனர். ஒரு சிலர் மட்டும் அதற்கும் மேலே போய்ச் சமுதாய சீர்திருத்தச் சிந்தனைகளையும் தூவுகின்றனர்.

58. பூ.ச. வெ.கி., மு.நூ., ப. 207
59. மேலது, ப. 79

விடுகதைப் பண்பினவாகிய குழந்தைப் பாடல்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

குழந்தைப் பாடல்களில் கதைப் பாடல்கள் மிகுந்த செல்வாக்குப் பெற்றுள்ளன.

புதுக்கவிதைத்துறையில் குழந்தைப் பாடல்கள் எழுதும் முயற்சி வெற்றிபெறவில்லை. வாழ்க்கை வரலாறுகள் குழந்தை இலக்கியத்தில் வாய்ப்பான பாடுபொருளாக அமைகின்றன.

வேறு துறை நாடாமல் இதிலேயே முழுவதும் ஈடுபட்டுக் குழந்தைக் கவிஞர்களாகவே பலர் உருவாகியுள்ளனர். அழ. வள்ளியப்பா இவர்களுள் முதலில் வைத்து எண்ணத்தக்கவர். தனித்தமிழ்ச் சொற்களை எளிமையாகக் கையாண்டும், இலெ. தங்கப்பா, துரைமாணிக்கம் ஆகியோர் சிறப்புறுகின்றனர்.

பாட்டெழுதிச் சித்திரமும் தீட்டிக்காட்டிய கே.எசு. இலட்சுமணன் குழந்தைக் கவிஞர்கள் வரிசையில் குறிப்பிடத் தக்கவராவார்.

குழந்தைகளைத் தாலாட்டும் பெண் எழுத்தாளர் எவரும் இத்துறையில் சிறப்புப் பெறவில்லை.

நம் கால கட்டத்தின் முற்பகுதியில் குழந்தை இலக்கியம் தளர்ச்சியும், பிற்பகுதியில் விரைவான வளர்ச்சியும் பெற்றுள்ளது என்பதனைக் காணுகின்றோம்.

6

# பலர் பாடிய கவிதைத்தொகுப்புகள்

இக்கால இலக்கியத்தில் தமிழ்க் கவிதைகளின் சிறப்பான வளர்ச்சியில் தொகுப்பு நூல்கள் ஒரு புதுமையை விளைவித்திருக்கின்றன. புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை போன்றவை பலர் பாடிய கவிதைகளின் தொகுப்புகளே. இடைக்காலத்தில் கவிதை உலகம் இவ்வகையில் முயலவில்லை. இருபதாம் நூற்றாண்டில்தான் பல்சுவை பொதிந்த 'தனிப்பாடல் திரட்டு' உருவாக்கப்பட்டது. சு. வையாபுரிப்பிள்ளை 'புறத்திரட்டு' எனும் ஒரு தொகுப்பு நூலைப் பதிப்பித்துள்ளார். மேலும், அகம், புறமாகிய சங்க இலக்கியங்கள் அனைத்தையும் புலவர் வரிசையில் தொகுத்துச் 'சங்க இலக்கியம்' எனும் பெயரில் வழங்கியுள்ளார். இளங்குமரன் அண்மைக் காலத்தில் ஒரு புறத்திரட்டு, வெளியிட்டுள்ளார். இக்கால இலக்கியத்தில் கவிதைத் துறையில் மீண்டும் தொகுப்பு நூல்கள் (Anthology) வெளி வந்துள்ளன.

## வகைகள்

கவிதைகளில் ஒருவர் பாடிய உதிரிப் பாடல்கள் என்றும் பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள் என்றும் 'தொகுப்புகள்' இருவகைப்படும். ஏதாவதொரு கருப்பொருளையோ, யாராவது ஒரு தலைவரின் சிறப்பைப் பேசுகிற பாங்கிலோ பலர் இயற்றும் கவிதைகள் தொகுப்பாகியுள்ளன. ஒருவரே பல இதழ்களிலும், வெவ்வேறு சூழ்நிலைகளிலும் வெளியிட்ட கவிதைகளும் தொகுப்பாக வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் பலர் பாடிய கவிதைத் தொகுப்புகளைக் காண்போம். அவை ஆறு அடிப்படைகளில் அமைகின்றன.

(1) தலைவர்களின் பிறந்தநாள் விழாவை ஒட்டியவை;

(2) அறிஞர்களைச் சிறப்பிக்கும் வகையிலானவை:

(3) கவியரங்குகளில் பாடப்பட்டவை.

(4) போட்டிக்காக எழுதப்பட்டவை;

(5) விருப்பத்தால் எழுந்தவை;

(6) மணவாழ்த்துகள்.

இக்கால கட்டத்தில் வெளிவந்துள்ள அறுபது தொகுப்புகளில் புதுக்கவிதைத் தொகுப்புகள் பதினொன்று. அவை முன்னரே ஆராயப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள நாற்பத்தொன்பது தொகுப்புகளே இங்கு ஆராயப்படுகின்றன.

## தெரிந்தெடுக்கப்பட்டவை

'சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியக் கவிதை' எனும் வரிசையில் 'நேஷனல் புத்தக டிரஸ்டு' வெளியிட்ட சிறந்த தொகுப்பு 'தமிழ்க் கவிதைகள்' எனும் நூல். இதனைக் 'கால வகையில் 1947 ஆகஸ்டுப் பதினைந்தாம் தேதியைத் தொடக்கமாகக் கொண்டது. கருத்து வகையில் அரசியல் விடுதலை என்னும் பெரிய வரலாற்று நிகழ்ச்சியின் பின் விளைவுகளுக்கான அறிகுறிகளைத் தொடக்கமாகக் கொண்டது"[1] என்கிறார் தொகுப்பாசிரியர்.

தேசிய நீரோட்டத்தில் பலரை உருவாக்கிய பாரதியார், கவிமணி, நாமக்கல் கவிஞர் மரபினரும் சமுதாய உணர்வும் புரட்சிப் போக்கும் கொண்ட பாரதிதாசன் மரபினரும் இரு வகை நெறிகளை உருவாக்கினர். தமிழ்க்கவிதை உலகில் மறுமலர்ச்சியும் புதுமையும் விளைவித்துத் தனி முத்திரைகளைப் பொறித்த நாற்பத்தொரு கவிஞர்களின் கவிதைகள் இத்தொகுப்பில் அடங்கும். கடந்த காலத்தில் தமிழ்க்கவிதைகளை இயக்கியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களை அறிமுகப் படுத்துவதும், இந்தியர்கள் அனைவரும் அறிந்து கொள்ளுமாறு செய்வதும் இத்தொகுப்பின் நோக்கம். பலநூறு பாடல்களைப் பாடிய கவிஞர்களை இதனுள் முழுமையாகக் காட்டி விட முடியாது என்றாலும் தரமான படைப்புகள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஆசிரியர்களைப் பற்றிய குறிப்பும் அடங்கியுள்ளமை இதன் மற்றொரு சிறப்பாகும்.

1. சாலை. இளந்திரையன் (தொ.ஆ.) முன்னுரை, தமிழ்க் கவிதைகள், ப. iii

"நாய்க்குமிங்கு சோற்றுப் பஞ்சம் இல்லையிந்த நாட்டிலே
நமக்குமட்டும் ஏன்எனுமோர் ஞாயங்கேட்க நாதியார்?
வாய்க்குவந்த வாறுபேசி வம்பளக்கும் வீணர்கள்
வலிமைகுன்றி வாயடைக்கத் தலைநிமிர்ந்து வருகுவீர்!"[2]

*என்று அழைப்பு விடுகிறார் கே.சி.எசு. அருணாசலம்.*

"... ... பேரிருள்
போக்கி ஒளியைப் பொழிவதும் செய்யவல்லாய்!
ஊர்திகளும் கப்பலும், உற்பத்தி ஆலைகளும்
பேர்பெற் றியங்கப் பெரிதும் பயன்நல்கும்
எங்கள் நிலக்கரியே! ஏழை மடிதவழ்ந்த
தங்கக் குழந்தாய்! தமிழ்நாட்டுத் தாய்வளமே!"[3]

*என்கிறார் தமிழ்ஒளி.*

*இந்நூல் இந்தியா முழுவதும் பரவவேண்டும் எனும் நோக்குடன் எழுந்ததுபோலப் பாரதியார், பாரதிதாசன், முடியரசன், துரை. மாணிக்கம், ம.இலெ. தங்கப்பா, இரா. இளவரசு ஆகியோரின் நல்ல பாடல்களை 'உணர்ச்சிப் பாடல்கள்' எனும் தலைப்பில் தனி நூல்வடிவில் தொகுத்துள் ளனர். இளைஞர் மனத்தில் தமிழ் எழுச்சி தோன்றும்படியும் தேவைப்படும்போது எடுத்துச் சொல்லும்படியும் அமைந்த பாடல்கள் இவை.*

"காலம் இதுவெனக் கருதிய தால்பல் கருத்திடையே
பாலம் இடுதல் பயனுள தாமெனப் பட்டுணர்ந்து
ஞாலம் உணர்வுற நந்தமிழ் காத்திட நல்லவர் போர்க்
கோலம் புனைந்தே கொடுமை ஒழிக்கக் கொடுத்ததுவே!"[4]

*என்று தொகுப்பாசிரியர் தமிழ்க்குடிமகன் கூறுவதிலிருந்து இதன் நோக்கத்தை உணரலாம்.*

## தலைவர்களும் அறிஞர்களும்

### காந்தியடிகள்

*சிறந்த தலைவர்களைப் பற்றிப் பல கவிஞர்களையும் பாட வைத்துத் தொகுத்து வெளியிடுவதில் சிலருக்குத் தனி*

2. கே.சி.எ,ஸ். அருணாசலம், வெற்றிப்பயணம், மு.நூ. ப. 38
3. தமிழ்ஒளி, நெய்வேலி, மு.நூ., ப. 47
4. தமிழ்க்குடிமகன், (தொ.ஆ.) உணர்ச்சிப்பாடல்கள், ப. 1

ஆர்வம் இருக்கிறது. கே.எசு. இலட்சுமணன் இவ்வார்வத்தோடு, 'கவிஞர் போற்றும் காந்தி மகான்' எனும் தொகுப்பை வெளி யிட்டுள்ளார். பாரதியார் முதலிய அறுபத்திரண்டு கவிஞர்கள் காந்தியடிகளைப் பற்றிப்பாடிய கவிதைகள் அடங்கியுள்ளன. போராட்டங்களை நடத்தும் காந்தியடிகள் தொண்டர்களை மட்டும் ஏவுபவர் அல்லர்; தாமே முன் நடந்து வழிகாட்டுபவர்.

"நான் முதலில் நீபிறகு நடந்துவா என்னுடனே
சாவதெனில் சமுதாயம் முழுவதுமே சாகட்டும்
வாழ்வதெனில் எல்லோரும் வாழட்டும்"[5]

என்றுதான் காந்தியடிகள் நினைப்பார் என்று கண்ணதாசன் கூறுகிறார்.

காந்தியடிகளின் சிறப்பை வேறு வகையில் தொகுத்து வெளியிட்டுள்ளார் சேதுராமன். 'வாழ்க நீ எம்மான்' என்று பாரதியார் பாடிய அடியினையே தலைப்பாகக் கொண்ட தொகுப்பு நூல் மற்ற நூல்களின் போக்கிலிருந்து முற்றிலும் விலகி நிற்கிறது. இதன் நோக்கங்கள் இரண்டு. "ஒன்று, பிறமொழிக் கவிதைகளைத் தமிழாக்குவது; மற்றொன்று அண்ணல் காந்தி அடிகளுக்குப் பன்மொழிப் பாமாலை சூட்டுவது."[6] காந்தியடிகளைப் பற்றி இந்தியாவின் சிறந்த மொழிகள் அனைத்திலும் வெளியான இரண்டிரண்டு கவிதை களின் கருத்தை மனத்தில் வாங்கி அதனைத் தமிழ்க் கவிதையாக்கிப் படைத்தளிக்கிறார். இந்நூல் பிறமொழிக் கலைச் செல்வங்களைத் தமிழுக்கு ஆக்கித் தருகிறது. பிற மொழிக் கவிதை வளத்தோடு நம் வளத்தை ஒப்பிட்டு உண்மை காணவும் வாய்ப்பாக இந்நூல் உள்ளது. முற்பகுதியில் தாகூர், வள்ளத்தோள், சங்கர குறுப்பு போன்ற இந்தியப் பெருங் கவிஞர்களின் கருத்துக்களைக் கூறுகிறார். பிற்பகுதியில் பாரதி தாசன், சுத்தானந்த பாரதி, இராய. சொ. (இராய. சொக்க லிங்கம்) போன்ற தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

"தன்னுடைய நோன்பினிலே
தன்னம்பிக் கையைவளர்த்து

5. கண்ணதாசன், காந்தி எனும் மந்திரம், கே.எஸ். லட்சுமணன் (தொ.ஆ.) கவிஞர் போற்றும் காந்திமகான், பத். 117–118
6. வா.மு. சேதுராமன் (தொ.ஆ) முன்னுரை, வாழ்க நீ எம்மான். ப. vii

மன்னுபுகழ் உறுதியையும்
கடைப்பிடிக்கும் மற்றவன்தான்
இன்றுலகில் பிறந்துளனோ!
இவனடிமை மக்களைச்சார்
பன்னலஞ்சேர் காந்திமகான்
பார்போற்றும் பெரியோனாம்!"[7]

*காந்தியைப் புத்தனின் மறுபிறப்பு என்று காட்டும் இக்கவிதை பெஞ்சமின் காலின்சு உட்பரி எழுதிய ஆங்கிலக் கவிதையை மூலமாகக் கொண்டது.*

## பெரியார்

*பெரியாரின் சிறப்பைப் போற்றித் தொண்ணூற்றேழு கவிஞர்கள் பாடிய கவிதைகளின் தொகுப்பு 'கவிஞர் போற்றும் பெரியார்', பாரதிதாசன் பாடல் முதலிலுள்ளது. அவர்,*

"சமயவெறி தணிக என்றார்;
சாதிவெறி தணிக என்றார்;
சகோ தரர்போல்
அமைக என அறிவித்தார்!
பெண்களெல்லாம் நல்லுரிமை
அடைக என்றார்!"[8]

*என்று பெரியாரின் கொள்கையைத் தெளிவுபடுத்துகிறார். கலைஞர் மு. கருணாநிதி (கலைஞர்) தொடருகிறார்:*

"ஊன்றி வரும் தடிசற்று நடுங்கக்கூடும்
உள்ளத்தின் உரத்தினிலே நடுக்க மில்லை!"[9]

*என்கிறார் கண்ணதாசன்.*

"பொதுநலமோர் வியாபாரம்! கொள்கை எல்லாம்
பொய்ச்சரக்கு! பகுத்தறிவோ இல்லாக் கூட்டம்
இது சந்தை! தேர்தல்களோ கிராக்கி தேடும்
ஏற்பாடு! பொய்ச்சரக்கை விற்பதற்குப்
பொதுமேடை சத்தமிட்டே ஏலங் கூறப்
போகுமிடம்; என்றிருக்கும் இந்த நாட்டில்

7 பெஞ்சமின் காலின்ஸ் உட்பரி, மு.நூ. ப. 97
8. பாரதிதாசன், உயர் எண்ணங்கள், புலமைதாசன் (தொ.ஆ) கவிஞர் போற்றும் பெரியார், ப. xvi
9. கண்ணதாசன், மு.நூ. ப. 4

மதிநலத்தைப் பொதுநலத்தால் வளர்க்க வந்த
மனிதரொரே ஒருமனிதர் பெரியார் தானே ?"[10]

என்று வியந்து பாராட்டுகிறார் புலமைப்பித்தன்.

பெரியாரின் வாழ்வு, குறிக்கோள், எய்திய வெற்றிகள், ஏற்ற கண்டனக் கணைகள் எல்லாமே பல்வேறு கவிதைகளில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற தொகுப்புகளில் அவரவர் விருப்புக்கேற்ற யாப்பும், சந்தமும், கருத்தும் அமைவதால் கவிதைகளின் தரம் சிறப்பாக உள்ளது.

"ஈரோடு தான் உன் ஊர்; எடுத்தெறிந்தாய் சாதியினை
வேரோடு; எங்களையும் போராடு எனச் சொன்னாய்;
பேரோடு அதனால்தான் 'பெரியார்' என இணைத்தோம்
யாரோடு சமம்நீ! அறிவுலகம் திகைக்கிறது."[11]

என்று பொன்னிவளவன் பூரிப்பதில் ஒரு பெருமை இருக்கிறது. இதனைப்போல பெரியாரின் சமுதாயப்பணி, அண்ணாவின் அரசியல், பாவேந்தரின் இலக்கியம் என்ற 'முக்கனி'களைப் பற்றி அறுபத்து நான்கு கவிஞர்கள் எழுதியவற்றின் தொகுப்பு 'முக்கனிச்சாறு'. யார்யார் என்னென்ன துறையில் வல்லவர்கள் என்பதைத் தெளிவாகப் பிரித்தறியும் வண்ணம் பகுப்பு முறை அமைந்துள்ளது. பல புதிய கவிஞர்கள் பாடுகின்றனர். பெரியாரைப் பற்றிப்பாடும் இரா. கண்ணிமை

"ஆயிரம் ஆயிரம் ஆண்டிற்குப் பின்நாம்
அடைந்த ஒரு தலைவன் — உள்ளக்
கோயிலில் வீற்றே கண்களைத் திறந்த
கும்பிடும் முதலிறைவன்"[12]

என்கிறார். பெரியார் கோயிலையும் இறைவனையும் வெறுப்பவர்; ஆயினும் அவரைப்பற்றிப் பாடும் போது அதற்கு மாறாக அவரையே இறைவனாக உருவகித்துக் கவிதை அமைகிறது. இதனுள் பல கவிஞர்களின் பாடல்கள் உள்ளம் ஒன்றாமல் தொகுப்புக்காகப் பாடியனபோல் உள்ளன.

## பாவேந்தர்

'பாவலர் பார்வையில் பாவேந்தர்' எனும் தொகுப்பில் சாலை இளந்திரையன் தலைமையில் வா.மு. சேதுராமன்,

10. புலமைப்பித்தன் மு.நூ. 11
11. பொன்னிவளவன் மு.நூ. ப. 12
12. இரா. கண்ணிமை (தொ.ஆ.) ஒளிவிளக்கு, முக்கனிச்சாறு, ப. 2

பொன்னடியான் முதலிய ஆறு கவிஞர்கள் இயற்கை, பகுத்தறிவு, தமிழியக்கம் முதலான தலைப்புகளில் பாடியுள்ளனர். புதுவை அரசு நடத்திய கவியரங்கத் தொகுப்பாகும் இந்நூல்.

"காத்திருந்தோம் பலகாலம், — நீண்ட காலம்
காக்கைகளைக் கேட்டுக்கேட்டு அலுத்துப் போனோம்!
பூத்ததொரு புதிய குரல் புதுவை யூரில்—
புல்லரித்தது உடம்பெல்லாம்; குயிலின் கூவல்!"[13]

என்று வியக்கிறார் சாலை இளந்திரையன்.

## ஆன்றோர் புகழ்

'அருந்தமிழ் வளர்த்த ஆன்றோர் எனும் நூலுள் தனித்தமிழ் வளர்த்த பெ. சுந்தரம் பிள்ளை, பரிதிமாற் கலைஞர், இசைத் தமிழ் வளர்த்த பாரதியார், பாரதிதாசன், துரைமாணிக்கம் மேடைத்தமிழ் வளர்த்த திரு.வி.க. செய்கு தம்பிப் பாவலர், அண்ணா ஆகியோரைப் பற்றி ஒரு பெண்பாற் கவி உட்பட அறுபத்தைந்து கவிஞர்கள் பாடியுள்ளனர். அறிஞர்களின் தோற்றச் சிறப்பும், தொண்டுகளும் வெற்றிப் பெருமைகளும் விரிவாகப் பாடப்படு கின்றன.

"ஏற்றமிக்க கருத்தெல்லாம் எடுத்துரைத்த தோப்பு!
மாற்றாரின் பகைக் கெல்லாம் மலைபோலும் காப்பு!"[14]

என்று பொ. முனியப்பன் மறைமலையடிகளைப் பாராட்டு கிறார்.

"தமிழ்க்கு
உற்ற பெரும் பகையை முற்று மழித்திடப்பாய்ந்
துற்ற பெரும்புலிபா வாணர்—எழுச்சி
யுற்ற இவரறியார் வீணர்"![15]

என்று தேவநேயப்பாவாணரைச் சிறப்பிக்கிறார் புங்கனேரி யான்.

13. சாலை இளந்திரையன், பாவலர் பார்வையில் பாவேந்தர், ப. 39
14. பொ. முனியப்பன், மு. வலவன் (தொ.ஆ) அருந்தமிழ் வளர்த்த ஆன்றோர். ப. 3
15. புங்கனேரியாள், மு.நூ. ப. 26

**மு. வரதராசன்**

*மதுரை காமராசர் பல்கலைக்கழகத் துணைவேந்தராக இருந்தவரும், தமிழறிஞருமான மு. வரதராசன் பற்றி 'முயற்சி யின் வழிகாட்டி மு.வ.' எனும் தலைப்பில் பலர் கவிதை படைத்துள்ளனர். அவரது பல்வேறு தகுதிகள், சிறப்புகள், வட்டாட்சியர் அலுவலக எழுத்தராக இருந்து துணைவேந்தர் பதவிக்கு உயர்ந்த அவரது உழைப்பு முயற்சி ஆகியன தக்க வாறு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.*

"வாழ்வுதான் கால வெள்ளம்
வகுத்திடும் குமிழி என்பார்
தாழ்விலா முயற்சி யாலே
தண்டமிழ் எழுத்தைக் கல்மேல்
சூழ்தரு வரிக ளாகச்
செதுக்கினார் மு.வ."[16]

*என்கிறார் மின்னூர் சீனிவாசன்.*

**அண்ணா**

*தமிழக முதல்வராகவும் நாடகம், புதினம், சிறுகதை, உரை நடை, எனும் இக்கால இலக்கிய வகைகள் பலவற்றில் சிறந்த எழுத்தாளராகவும் இருந்த அண்ணாபற்றிப் பல்வேறு தலைப்புகளில் தனி நூல்கள் பல வெளிவந்துள்ளன. பல கவிஞர்கள் முனைந்து, ஆர்வத்தோடு படைத்த கவிதைகளின் தொகுப்பாக மூன்று நூல்கள் காணப்படுகின்றன.*

*அண்ணாவின் அறுபது ஆண்டு நிறைவு விழாவை ஒட்டி ஆறு கவிஞர்கள் தொகுத்த 'அண்ணா மாலை' சிறந்து விளங்குகின்றது.*

"கொடையானாய் தமிழெடுத்தும் கொடுத் தவனாய்
கொள்கையிலே எதிர் முழக்கம் கண்டு, துன்பம்
அடையானாய் அஞ்சானாய் அடக்குமுறை
ஆயிரங்கள் கண்டுமனம் தளராதானாய்!"[17]

*வாழ்ந்த அண்ணா பாராட்டப்படுகிறார். மேலும்,*

16. மின்னூர் சீனிவாசன், மரியவிசுவாசம், (தொ.ஆ) முயற்சியின் வழிகாட்டி மு.வ. ப. 7
17. நா. புகழேந்தி, அண்ணா மாலை, ப. 11

"நீண்டதொரு வரலாற்றில் புகழ்ம ணக்க
நெறியோடு என்றென்றும் தமிழ கத்தை
ஆண்டபல மன்னர்களின் சிறப்பெல் லாமே
அறிஞரவர் வரலாற்றில் துலங்கக் கண்டோம் !"[18]

*என்று அவரது சிறப்புப் பேசப்படுகிறது.*

"மணமுண்டு சிலமலரில் தேன்இ ருக்கா !"[19]

*என்றவாறு சில வழுக்களும் காணப்படுகின்றன.*

*'கவிஞர் கண்ட அண்ணா' எனும் தலைப்பில் எண்பத்தொருவர் கவிதை பாடியுள்ளனர். திரு.வி.க., பாரதிதாசன் ஆகிய பலரின் பாடல்கள் இதனுள் தொகுக்கப் பட்டுள்ளன.*

"புளிபட்டால் பால்திரியும்; கெட்டுப் போகும்;
புனல்பட்டால் புறந்தூய்மை ஆகும்; வாய்மை
ஒளிபட்டால் அகந்தூய்மை ஆகும்; சான்றோர்
ஒளிபட்டால் நாடுயரும்; செழிக்கும் வையம்;
...... ...... ...
உளிபட்ட வைரம்போல திட்டத் திட்ட
ஒளிபட்டார் ! உறங்காத புகழைப் பெற்றார் !"[20]

*என்று மணிமுடிச் சோழன் பாடுகிறார்.*

*'கவிஞர் நெஞ்சில் அறிஞர் அண்ணா' எனும் தொகுப்பு, அண்ணாவைப் பற்றி அறுபத்தொரு கவிஞர்களின் கவிதைகளைக் கொண்டது.*

"தூங்கிய எமை எழுப்பத்
தூங்காமல் எழுதி வந்தீர் !
நீங்கிய வண்மை மீள
நித்தம்நீர் பேசி வந்தீர் !
ஏங்கிய ஏழை மக்கள்
இதழெலாம் சிரிப்பைச் சேர்த்தீர் !

18. தி. பொன்னுச்சாமி, மு.நூ. ப. 23
19. நா. புகழேந்தி, மு.நூ. ப. 23
20. மணிமுடிச் சோழன், மூவேந்தன், (தொ.ஆ) கவிஞர்கண்ட அண்ணா, ப. 115

தூங்காத சுடரே! நீண்ட
தூக்கத்தைப் பெறச்சென் றீரா ?"[21]

என்று கா. வேழவேந்தன் கேட்கிறார். கலைஞர், சுரதா, மற்றும் இக்காலக் கவிஞர்கள் இடம் பெறுகின்றனர். அண்ணாவின் மறைவிற்குப் பின் பாடப்பட்டவை ஆதலால் போற்றுதலோடு புலம்பல் ஒலியும் கொண்ட இதனுள் அவலச்சுவையே விஞ்சி நிற்கின்றது.

## கலைஞர்

இவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் இவரைப் பற்றிய தொகுப்புகள் அனைத்தும் வந்துள்ளன. பதவியில் இருக்கும் காலத்தில் பாராட்டிப் பாடப்படும் கவிதைகளில் எவ்வளவு உயிர் இருக்கும், உண்மை இருக்கும் என்பதற்கும் இவை எடுத்துக்காட்டாகவுள்ளன. 'கவிஞர் கண்ட கலைஞர்' எனும் நூலில் புலவர் பாடும் புகழுடையோரே தலைவர்'[22] எனும் கருத்துக் குறிக்கப்படுகிறது. அண்ணாவைப் போல இவர்க்கும் புகழ்ப் பாட்டுகள் மிகுதி. உடன் பணியாற்றிய அமைச்சர்கள் தொடங்கி ஐம்பத்தைந்து பேர் பாடிய கவிதை கள் உள்ளன.

"மடமைகளைத் தகர்த்தெறிந்து கொள்கை எல்லாம்
மறைமுகமாய் அறிவுறுத்தி, வெற்றி தந்து
படவுலகில் பரபரப்பைத் தோற்று வித்த
·பராசக்தி இவன்கலைக்கோர் எடுத்துக் காட்டாம்!"[23]

என்று பாராட்டுகிறார் முடியரசன்.

கலைஞரின் சிறப்பைப் போற்றி நூறு கவிஞர்கள் பாடிய கவிதைகளின் தொகுப்பு 'நூறாண்டு வாழ்க!' கவிஞர்கள் நெஞ்சத்தின் அடித்தளத்திலிருந்து அன்பின் பூரிப்பால் மலர்ந்த கவிமலர்கள் நூறு' என்று முன்னுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.[24]

"தமிழ் மொழிக்காகத் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகத் தமிழர்களின் உயர்வுக்காகத் தன்னை ஆட்படுத்திக் கொண்ட

21. கா. வேழவேந்தன் ஆறுதல் ஏது; அன்பரசன் (தொ.ஆ) கவிஞர் நெஞ்சில் அறிஞர் அண்ணா ப. 9
22. கவிஞர் கண்ட கலைஞர், ப. 3
23. முடியரசன், கலைஞர், மு.நூ., ப. 6
24. மு. அன்பரசன், (தொ.ஆ) நுழைவாயில் நூறாண்டுவாழ்க

துணிவுள்ள தண்டமிழ்த் தொண்டர் கலைஞர். ஆகையால் வண்டமிழ்க் கவிமாலை தொடுத்து அன்புக் காணிக்கை ஆக்குகிறேன்"[25] என்கிறார் தொகுப்பாசிரியர்.

"அவன் புகழ் பரப்பும் நூல்கள்
ஆயிரம்; அவற்றி னுள்ளே
கவினுறும் நூலாய் இந்தக்
கவிதைநூல் புலவர் தந்தார்!"[26]

என்று கண்ணதாசன் குறிப்பிட்டாலும் இந்நூலிலுள்ள கவிதைகள் சில கலைஞர் பற்றிய வேறு தொகுப்பிலும் முன்னரே இடம் பெற்றுள்ளன.

"தேரோடும் கோவில் சென்று
தேவாரம் பாடி டாத
ஆரூரர்; ஆளும் கட்சி
அரசியல் அப்பர்; தீமை
தாராத கூட்ட ணிக்குச்
சம்பந்தர்; எதிர்ப்பை எல்லாம்
கூரான மதிநுட்பத் தால்
குடைசாய்க்கும் முதல்வர் நீங்கள்!"[27]

என்று சுரதா பாடுவது சொல் நயம் காட்டுகிறது.

"பெரியாரின் பாசறையில் படைபெற்றவர் –பின்
பெருங்காஞ்சிக் கழகத்தில் கலைகற்றவர்!
சரியாத புகழ் கொண்ட மலைமேருபோல்–பல
சாதனைகள் படைத்ததனால் நிகரற்றவர்..."[28]

என்று மா. எழில்முதல்வன் சந்தத்தில் பாராட்டுகிறார்.

நூறு கவிஞர்களின் படைப்புகளைக் கொண்ட மற்றொரு தொகுப்பு 'முத்தாரம்'. நல்ல தொடர்கள் பல இடம்பெறும் கவிதைத் தொகுப்பாக இஃது அமைந்துள்ளது. நூறு கவிதை முத்துகள் கோக்கப்பட்டு முத்தாரமாகக் கலைஞருக்குச் சூட்டப்படுகிறது.

'கலைஞர்க்குக் கவிதை மாலை' எனும் தலைப்பில் ஐம்பத்திரண்டு கவிஞர்கள் பாடிய தொகுப்பு வெளியாகி

25. மேலது
26. கண்ணதாசன் சிறப்புக்கவி, மு.நூ. ப. 6
27. சுரதா முப்பாலின் முதற்பால், ப. 13
28. மா. எழில் முதல்வன், பெருந்தலைவர், ப. 19

யுள்ளது. சிற்றிலக்கிய வகை கொண்டு கலைஞரைப் பாராட்டி வெளி வந்த தொகுப்பு 'கலைஞர் கவிதைக் கோவை'. பொன். வேங்கடேசன் 'நெஞ்சு விடுதூதும்' 'கலைஞர் பிள்ளைத் தமிழும்' பாடுகிறார்.

வாணிதாசன் நேரிசை வெண்பாக்களால் 'கலைஞர் நாற்பத்தாறு' பாடுகிறார். 'கலைஞர் பத்து' எனும் தசாங்க வகையும் இடம் பெறுகிறது. ச. பாலசுந்தரம் 'கலைஞர் உலா' பாடுகிறார். புகழ்மிக்க கவிஞர்களின் நற்படைப்பாக இஃது அமைகிறது.

## கலைஞர் பற்றிய கவியரங்கக் கவிதைகள்

தொகுப்புகள் உருவாவதற்குக் கவியரங்குகளும் பெரிதும் கரணியமாக அமைந்திருக்கின்றன. கண்ணதாசன் அமைப்பாளராக இருந்து கா. அப்பாத்துரையார் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் பாடப்பெற்ற கவிதைகளைக் கொண்டது 'கண்ணோட்டத்தில் கலைஞர் கருணாநிதி'. தாயாக, தந்தையாக, குழந்தையாக, நண்பனாக, சேவகனாக, தலைவனாக, காதலனாக அவர் வருணிக்கப்படுகிறார். கண்ணதாசன் அவரைக் காதலியாகப் பாவித்துப் பாடும் கவிதைகள் குறிப்பிடற்பாலன. இதனுள் சந்தப்பாக்கள் மிகுதி. பாரதியார் கண்ணனைப் பல வடிவில் கண்டு பாடியது இந்த மரபுக்கு வழிகாட்டியாகும். 'தந்தை' பற்றி மா. கண்ணப்பன் பாடுகிறார். எல்லாப் பாட்டரங்குகளிலும் பாடுகிற வழக்கமான தம் பாட்டோடு இடையில் கலைஞருக்காகச் சிறிது சேர்த்து ஒட்ட வைத்துப் பாட்டெழுதி அங்கு அரங்கேற்றியுள்ளார். யாரையும் பாராட்டிப்பாட அழைத்தால், அவர் மீது பற்றிருப்பினும் இல்லாவிடினும் ஒரு கடமைக்கெனச் செயற்கையாகப் பாடி விடமுடியும் என்ற போக்கை இத்தகையவை புலப்படுத்துகின்றன. இன்றைய ஆண்-பெண் சேவகர்கள் படுத்துகிற பாட்டைப் பற்றிக் கொத்தமங்கலம் சுப்பு பாடுகின்றார்.

## கவியரங்கக் கவிதைகள்

கவியரங்கக் கவிதைகளாக வெளிவந்தவற்றுள் 'புகழ் மண்டபம்' குறிப்பிடத்தக்கது. சிவகங்கை சண்முக மன்னர் புகழ்பாடும் கவிதைகள் அவை. தமிழண்ணல் தலைமைக் கவிதை தருகிறார். கி. சுந்தரராசன், சொ.சொ.மீ. சுந்தரம், அ. செகதீசன், முருகுசுந்தரம் ஆகியோர் அன்பு, கொடை, கல்வி, வீரம் எனும் தலைப்புகளில் பாடியுள்ளனர். இறுதியில்

*'மன்னர் நினைவில்' எனும் மீராவின் பாடல் இடம் பெற்றுள்ளது.*

"பத்திரிகைத் தூண் நிறுத்திக் காகி தத்தைப்
பரப்பி வைத்து விளம்பரமாம் மண்டபத்தை
எத்தனையோ பேரின்று கட்டுகின்றார்!
எறிகாற்றில் தம்புகழைத் தாமே தீட்டும்
செயல்வீரர் பலருள்ளார்! மாலை மற்றும்
பத்திரமும் வரவேற்க முன்னனுப்பிப்
பக்குவமாய்ப் பின்செல்லும் தலைவர் உள்ளார்!"[29]

*எனப், போலி விளம்பரப் புகழ்நிலைகளைத் தமிழண்ணல் நாகரிகமாகவும் நகைச் சுவையோடும் சுட்டுகின்றார்.*

"ஆயிரத்தைச் செலவழித்து விளம்ப ரத்தால்
அரைக்காசுக் கொடையதனைப் பெருக்கிக் காட்டித்
தாயலைய மற்றவர்க்குக் கொடையளிக்கும்
தருமவான் பலருண்டு"[30]

*என அவரே நடைமுறையையும் படம்பிடித்துக் காட்டுகிறார்.*

"தாய்மொழியிற் கல்விஎனில் இன்னும் இன்னும்
தாராள மாய்வளர்வேன்; வேலைக் காய்ச்சல்
பாய்மொழியாய் நான்படுத்துத் தூங்க மாட்டேன்!
பயிற்சியினால் பல்கலைகள் முயற்சி செய்வேன்"[31]

*என்று 'கல்வி' தன்னைத்தானே அறிமுகப் படுத்திக் கொள்ளும் பாங்கில் அ. செகதீசன் பாடுகிறார்.*

*சண்முகமன்னரைக் கொண்டு சென்ற சாவை 'மீரா' சாடியுள்ளார். அவலப்பாடல் வரலாற்றில் மேலும் இது ஓர் எல்லைக்கல் என்றே கூறலாம்.*

"பட்டமரம் வெட்டுண்டால் பரவாயில்லை;
பாதத்தில் தைக்கின்ற முள்வ ளர்க்கும்
நெட்டைமரம் வீழ்ந்திட்டால் கவலை யில்லை;
நிழல்நாடி நிற்போர்க்கு மயக்கம் நல்கும்

29. தமிழண்ணல் தலைமைக் கவிதை, மீரா (தொ.ஆ), புகழ்மண்டபம், ப. 9
30. மேலது, ப. 10
31. செகதீசன், கல்வி, மு.நூ., ப. 63

கெட்டமரம் – நச்சுமரம் நிலத்தில் வெட்டிக்
கிடந்திட்டால் வருத்தமில்லை; ஆனால் உன்கை
தொட்ட மரம் நல்லமரம் – கனி பழுத்துத்
தொங்கிக் கொண்டிருந்த மரம்; வீழ்த்த லாமா ?''''[32]

*இவ் வினாவில் உருக்கமும் இருக்கிறது; சாவின் மீது தணியாத சினமும் இருக்கிறது.*

*'விடுதலை வீரர்கள் ஐவர்' எனும் தலைப்பில் கலைஞர் தலைமையில் அரங்கேறிய கவிதைகள் தொகுப்பாகியுள்ளன.*

''விழிகளில் வீரம் சிரித்திடும் தமிழர்
விடுதலை கீதம் பாடிய கதையைக்
கவிகளின் மொழியில் கேட்டிட எழுவோம்;
கண்களில் ஒத்திக் கால்மலர் தொழுவோம்''[33]

*என்னும் முன்னுரை பொருத்தமாக உள்ளது. கட்டபொம்மன், மருதிருவர், பாரதியார், வ.வே.சு. ஐயர், வ.உ. சிதம்பரனார் ஆகியவர் பற்றி ஐவர் பாடியுள்ளனர்.*

''சட்டப் படிப்பிட்ட பட்டப் பிடிப்புக்குள்
கட்டுப் படக்குனியேன் — மானம்
வெட்டுப்படத் துணியேன் — பிறர்
துட்டப் பிடிப்பினில் கட்டுப்படுந் தாயின்
துயரை ஒழிப்பேன் என்றார் — தமது
உயிரை அளிப்பேன் என்றார்''[34]

*வ.வே.சு. ஐயரின் முழக்கமாக அப்துல் ரகுமான் தரும் இக் கவிதையில் விடுதலை உணர்வு வீறிட்டு நிற்கிறது.*

''ஆட்சித் தரப்பினில் அதிகக் கொதிப்பு !
காட்சி புரிந்தது ! கலவரம் சூழ்ந்தது !
வஞ்சகம், சூது வளர்ந்தன; ஆள்வோர்
நெஞ்சை இழந்தனர்; நஞ்சை உமிழ்ந்தனர்''[35]

32. மீரா, மன்னர்நினைவில், மு.நூ., ப. 90
33. கலைஞர் தலைமையுரை; கழகம் (தொ.ஆ) விடுதலை வீரர்கள் ஐவர் ப. 4
34. அப்துல்ரகுமான், வ.வே.சு. ஐயர், மு.நூ. ப. 40
35. இளஞ்செழியன், வ.உ. சிதம்பரனார், மு.நூ. ப. 52

என, வ.உ. சிதம்பரனார் கப்பலோட்டிய செயலால் நாட்டில் ஏற்பட்ட விளைவுகளை அருமையாகப் படம் பிடிக்கிறார் இளஞ்செழியன்.

இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நிகழ்ந்த கவியரங்கில் இருபத்திரண்டு கவிஞர்கள் பாடிய பொதுவான கவிதைகள் 'பூஞ்சோலைக் கவிமலர்கள்' எனும் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

கவியரங்குகளில் ஒரு புதுவகை, கடற்கரைக் கவியரங்குகள் ஆகும். பிற கவியரங்குகளில் தலைப்புத் தரப் பட்டு அதனுள்ளேயே நின்று பாடும் ஒரு கட்டுப்பாடு உள்ளது. அதனால் கவிஞர் தம் மனக்கற்பனையை நினைத்தபடி செலுத்த முடியாமல் தலைப்புக்குள்ளேயே வலம் வரவேண்டி யுள்ளது. ஆனால் சென்னைக் கடற்கரையில் கிழமைதோறும் ஏற்பாடு செய்யப்படும் கவியரங்குகளில் விரும்பிய கவிஞர் எவரும் அவர் விரும்பிய தலைப்பில் வந்து பாடலாம் எனும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அதனால் கவிஞர்கட்கு ஒரு விடுதலை கிடைக்கிறது. இந்த வகையில் தொகுக்கப்பட்டவை தாம் 'அலைகள் ஆயிரம்' எனும் இரண்டு தொகுப்புகளும் ஆகும்.

முதல் தொகுப்பில் இருபத்தேழு கவியரங்குகளில் ஐம்பத்தாறு கவிஞர்கள் பாடிய கவிதைகள் அடங்கியுள்ளன. இரண்டாவது தொகுப்பில் பதினாறு கவியரங்குகளில் ஐம்பத்தாறு கவிஞர்கள் பாடிய கவிதைகள் உள்ளன. முற்றிலும் முற்போக்குச் சிந்தனைகளே பளிச்சிடுகின்றன. நாள்காட்டி நாட்டியக்காரியாகவும் மாமியாராகவும் கிழவராகவும் சகுந்தலையாகவும் உருவகிக்கப்படுவது நயமாக உள்ளது.

'வளரும் பாரதம்' எனும் நூல் பதின்மூன்று கவிஞர்களின் கவியரங்கத் தொகுப்பாகும். பாரதநாடு பாங்குற வளரவேண்டும் எனும் ஆசை வெறியோடு படைக்கப்பட்ட கவிதைகளாகலின் உணர்ச்சி இருக்கிறது. சனநாயக சோசலிசம், சமாதான சகவாழ்வு, கிராம சுயராச்சியம், பஞ்சசீலம் எனும் அனைத்தும் பேசப்பட்டுள்ளன.

"முடிமன் னர்கள்
மொட்டையடிக் கப்பட்டார் பிரெஞ்சு நாட்டில்
முடிவுரையை இரஷ்யாவில் எழுதினார்கள்.

பட்டமர மாயிருந்த ஏழை மக்கள்
பச்சைமர மானார்கள். துளிர்விட் டார்கள்"[36]

என்று வே. இராமமூர்த்தி கூறுகிறார்.

"சனங்களுடை நாயகத்துப் பெண்ணை இங்கே
சமதர்மக் கொள்கையெனும் செல்வ னோடு
மனங்கலக்க கைகோர்த்து மணமும் செய்து"[37]

வைக்க வேண்டுமென விரும்புகிறார் மா.பா. குருசாமி. அப்படிச் செய்தால்,

"சாதி தகர்ந்து வீழ்ந்து விடும்—வீண்
சண்டை கலகம் நின்று விடும்
மோதி மிதிக்கப் பாதகங்கள்—மண்
மூடிடத் தூசியாய் மாறிவிடும்"[38]

என்று அவரே நம்பிக்கை கொள்ளுகிறார்.

**மன்றப்பணி**

கவிதையைச் சுவைக்கச் செய்யும் நோக்கம் கொண்ட 'திருப்பனந்தாள் பாவலர் மன்றம்' அமைக்கப்பட்டு அதன் வாயிலாகப் 'பாவலர் உலகம்' எனும் தொகுப்பு வெளியிடப் பட்டுள்ளது. புலமை பெற்றவர்களின் கவிதை என்பதால் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா, நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா ஆகிய பாவகைகளும் இதனுள் இடம்பெற்றுள்ளன.

"தலைக் கற்றை அருகம் புல்லே!
தனிநுதல் யானைப் பட்டம்!
கலைக் கண்கள்உருப் பெருக்கி!
தொலைநோக்கி! கடிவாள்மூக்கு"[39]

Microscope *(உருப்பெருக்கி)* Telescope *(தொலைநோக்கி)* போன்ற சொற்கள் தமிழில் எவ்வளவு அமைவாக வந்து இடம் பிடிக்கின்றன என்பதற்குக் 'குழந்தை' பற்றி எழுந்த இக்கவிதை சான்றாகும்.

36. வே. இராமமூர்த்தி, போர்முனை, மக்கள் இலக்கியப் பேரவை, (தொ.ஆ) வளரும் பாரதம், பக். 6–7
37. மா.பா. குருசாமி, ஜனநாயக சோஷலிஸம், மு.நூ. ப. 18
38. மேலது, ப. 20
39. ப. சங்கரலிங்கம், குழந்தை, தா.ம. வெள்ளை வாரணம் (தொ.ஆ) பாவலர் உலகம், ப. 13

இளங்கவிஞர் பலரை இலக்கண வழுவிலாமல் எழுதத் தூண்டிவரும் 'பாவலர் பாசறை'யின் முயற்சியால் வெளியிடப் பெற்றது 'பாசறைக் கவிதைகள் — தொகுதி1'. தமிழ் இனிமை, இயற்கை எழில், காதல் நெஞ்சம், இன்றைய அரசியல், குடியாட்சிக் கோட்பாடுகள், ஏழைகள், கண்ணீர், அவர் வாழ்வு வளம்பெற வழிமுறைகள், அரிய தத்துவங்கள், கவியுலக முன்னோடிகள் எனப் பாடுபொருள் பல்வேறாகப் பெருகி, உலகளாவியதாய் அமைந்துள்ளது. சிலேடைப் பாடல்களும், அம்மானைப் பாடல்களும் இடம் பெற்றுள்ளன. "கண்ணிகளும் சிந்துகளும் களிப்பூட்டுகின்றன. தேவையான அளவு உவமை, உருவக மணிகள், செய்யுள் அணிகலனில் பதிக்கப்பட்டுச் சிறப்புற ஒளி வீசுகின்றன"[40] என்கின்றார் சு. செல்லப்பன். கவிஞர்களின் ஒளிப்படங்கள், முகவரிகளுடன் அமைந்த தொகுப்பு இது.

> "பெட்டை பேடியும் நாமல்லவே — சில
> பேயர்கள் போக்குக்கு வால்பிடிக்க !"[41]

என்று கொதிக்கிறார் ப. இறையரசன்.

புத்தபிக்குகளான சில சிங்களவர்கள் தமிழருக்கு இழைக்கும் தீங்குகளை மனத்திற் கொண்டு,

> "புனித புத்தனின் கொள்கையை விட்ட
> மனிதரை நினைக்க மனமும் நாணுதே !"[42]

என்கிறார் ப. தண்டபாணி. இதனுள் தாசியும் நூலும், தாசியும் அரசியல்வாதியும் என்ற சிலேடைப் பாடல்கள் சிறப்பாக அமைந்துள்ளன.

திருவையாறு பாவலர் மன்றம் 'தமிழருவி' 'காதல் மழை' எனும் தொகுப்புகளை வெளியிட்டுள்ளது. பாரதிதாசன் தொடங்கி அறுபத்து நான்கு பாவலர்களின் கவிதைகள் அடங்கிய நூல் தமிழருவி. பாடல்கள் அகவல், வெண்பா, விருத்தம், சிந்து என யாப்பு நிலையிலும் மொழி, இனம், நாடு, காதல், இயற்கை, அறிவுவளம், பொதுமை நலம் எனப் பாடுபொருள் நிலையிலும் பலவாக விரிந்துள்ளன.

---

40. சு. செல்லப்பன், சிறப்புரை, செங்கை அழகன் (தொ.ஆ) பாசறைக் கவிதைகள், ப. 7
41. ப. இறையரசன், விழாவை நோக்கி, மு.நூ. ப. 30
42. ப. தண்டபாணி, பௌத்தரா இவர் ? மு.நூ. ப. 91

"தள்ளுங்கள்! தடுக்காதீர்! தூக்கு மேடை
தழுவட்டும்! கவலையில்லை! தமிழர் தம்மைத்
துல்லியமாய்த் திருத்தாமல் போக மாட்டேன்
தமிழர்பகை தொலைக்காமல் வாழ மாட்டேன்!"[43]

என்பதனுள் மெய்யடியான் உணர்ச்சி வீச்சைக் காணுகிறோம். இதுபோன்ற உணர்ச்சிகளே இத்தொகுப்பு முழுவதும் ஊடாடி நிற்கின்றன. சமுதாய சீர்திருத்த நோக்குடைய கவிதைகள் இதனுள் மிகுதி எனினும் செயற்பாடுள்ள உணர்ச்சிகளைத் தாராமல், கற்பனையில் துள்ளும்,பொங்கும் வெற்றுணர்ச்சி, வீறுகளையே தமிழ்க்கவிஞர்கள் கொட்டுகின்றனர், கடந்த காலப் புகழை மீட்டுவது குறைந்து நிகழ்கால நடப்பைக் காட்டுவதும் எதிர்காலப் பொதுமை நாட்டுவதுமாகிய இலக்கியப் போக்கை இத்தொகுப்பு எதிரொலிக்கிறது. இல்லாத கடவுளைப் பாடுவது இதில் இடம் பெறவில்லை. இருக்கும் மனிதனைப் பாடுவது இதன் சிறப்பு"[44] என்ற நூலின் உள்ளடக்கத்தை இரா. இளவரசு தெளிவுபடுத்துகிறார்.

"வானத்தில் தூரத்தில் உள்ள மீன்போல்
ஒளிகுன்றிப் போகாமல் நீயும் நானும்
மானத்தின் பிறப்பிடமாம் தமிழ கத்தை
மதியைப்போல் ஒளிதிகழச் செய்வோம் இன்றே!"[45]

என்பது இராம. சிதம்பரம் வழங்கும் கருத்தாழமிக்க சிந்தனை யாகும்.

தமிழர்களின் இலக்கியப் பொருளான காதல் பற்றி ஐம்பத்தாறு கவிஞர்கள் சமுதாயச் சிந்தனையோடு தரும் கவிதைகளின் தொகுப்பு "காதல் மழை". பரிசுத் திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட தகுதியைக் கவிதைகள் எவையும் பெறவில்லை என்று தொகுத்தவர்களே குறிப்பிட்டுள்ளார்கள். விலை மகளிர் உட்பட முறைமகளிர் வரையிலான எல்லா வகையினரும் பாடப்படும் பொதுநிலைச் சிந்தனைகளை மிகுதியும் கொண்ட நூல் இது.

கல்கத்தாவில் உள்ள பாரதி தமிழ்ச் சங்கம் வெளியிட்டுள்ள 'வங்கத் தமிழ்' எனும் நூலில் வங்க

43. மெய்யடியான், தள்ளுங்கள் தடுக்காதீர், பாவலர் மன்றம் (தொ.ஆ.) தமிழருவி, ப. 63

44. இரா. இளவரசு, அணிந்துரை, மு.நூ., ப. XIV

45. இராம. சிதம்பரம், பித்தலாட்டம், மு.நூ. ப. 49

எழுத்தாளர்கள் பல்வேறு இதழ்களில் எழுதிய சிறுகதை, நாடகம், கட்டுரைகள், கவிதைகள் தொகுக்கப் பட்டுள்ளன. கவிதைப் பகுதியில் பதினாறு பேர் இடம் பெறுகின்றனர். வங்க மூலத்திலிருந்து தமிழாக்கப்பட்ட 'நதி' கருத்தாழமிக்கது.

## கவிதைப்போட்டி

இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டின் போது நடத்தப் பெற்ற கவிதைப் போட்டிக்கு வந்த ஆயிரத்து இருநூறு கவிதைகளுள் பரிசுக்குரிய, பாராட்டுக்குரிய கவிதைகளும், வந்தவற்றுள் சுவையான பகுதிகள் எனக் கருதப்படும் தேன் துளிகளும் கொண்ட தொகுப்பு 'புகாரில் ஒருநாள்'. இந்நூல் விருத்தம், கலிவெண்பா, வெண்கலிப்பா முதலிய பல யாப்பிலும் அமைந்துள்ளது. ஈழத்துக் கவிஞர் பண்டித ஞானியும் மலேசியக் கவிஞர் வே. மகேந்திரனும் இடம் பெறுகின்றனர்.

**"விண்ணை மறைப்பதற்கோர் மேற்கூரை யில்லாது**
**கண்ணகி சிலையொன்று கவினிழந்துநிற்பதுவும்**
**சீர்நகரம் இன்றோர் சிற்றூராய் நிற்பதுவும்**
**யாரிடத்துச் சொல்லிடுவேன் யான் ?"[46]**

என்று கோ. திருஞானசம்பந்தன் பாடுதல் உருக்கமாக உள்ளது.

## உடன் பிறந்தார்

உடன் பிறந்தவர்களும் கவிஞர்களுமான மூவரின் கவிதைத் தொகுப்பு 'மூவர் தமிழ்'. ஐம்பத்து நான்கு தலைப்புகளோடு பலரது பாராட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.

**"என்னிதயச் சுமை கனக்க**
**எண்ணங் கூட்டினேன்—எனக்**
**கின்னலினி இல்லை யென்றே**
**எழுதிக் காட்டினேன்"[47]**

என்பன போன்ற எண்ணவீச்சுகள் இதனுள் பயின்று வருகின்றன. மேலும் இத்தொகுப்பில் இயற்கை வருணனைகள் மிகுதியும் இடம் பெறுகின்றன.

46. கோ. திருஞானசம்பந்தன், உலகத்தமிழ் மாநாட்டுக்குழு, (தொ.ஆ) புகாரில் ஒரு நாள், ப. 16
47. எதிரொலி விசுவநாதன், வருங்காலம் மூவர் தமிழ், ப. 4

## வெளி நாட்டுவிடுதலை

தேசிய உணர்வைத் தாண்டிப் பல கவிஞர்கள் உலகளாவிய உணர்வோடு இயங்குகிறார்கள் என்பதற்கு 'வெல்க வியத்நாம்' எனும் தொகுப்பு சான்றாகும். அமெரிக்க முற்றுகையை எதிர்த்துப் போராடும் வியத்நாம் நாட்டு மக்களின் நெஞ்சுரத்தைப் பாராட்டித் தமிழ்க்கவிஞர்களில் முப்பத்தறுவர் பாடியுள்ளனர்.

கே.சி.எஸ். அருணாசலம் தொடங்கிக் கண்ணதாசன் வரை அனைவரும் சிவப்புச் சாயல் காட்டியுள்ளனர்.

> **"நேசிக்கும் உறவினருள் பகைமை மூண்டால்**
> **நிலப்பாசம் தீர்ந்துவிடும்! கடல் கடந்த**
> **வேசிக்கேன் அவ்விடத்தே வேலை? மற்றோர்**
> **வீட்டுக்குள் அமெரிக்கர்க் கென்ன வேலை?"[48]**

என்று கண்ணதாசன் அமெரிக்காவைக் கடுமையாகத் தாக்குகிறார்.

## தெய்வீகம்—முருகன்

'பாட்டிலே படைவீடுகள்' எனும் தலைப்பில் முருகனது படை வீடுகளான திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், திருத்தணி, பழமுதிர்சோலை பற்றிய கவிதைகள் உள்ளன.

'இந்நூலை நாத்திகப்படை நோய்க்கு நல்லதொரு மருந்து'[49] என அணிந்துரை சுட்டுகின்றது. ஒவ்வோர் இடத்திலும் புராண, இதிகாசச் செய்திகளே கூறப்படுகின்றன.

## அன்னை ஆரோக்கியத்தாய்

வேளை நகரில் உள்ள அன்னை ஆரோக்கியத்தாயைப் போற்றி செய்து எண்மர் பாமாலை சூட்டுகின்றனர். அவை திரைப்படப் பண்களுக்கேற்றவாறு எழுதப்பட்ட பாடல்கள் ஆகலின் இதனை ஒரு முயற்சிப் படைப்பாகக் கொள்ளலாம். அமலன் பாடிய 'வேளை நகர்ப் பதிகம்' மட்டுமே கவிதைக்குரிய வீச்சோடு திகழுகிறது.

48. கண்ணதாசன், அமெரிக்கக் கொலைகாரர்கள், அறந்தை நாராயணன் (தொ.ஆ.) வெல்க வியத்நாம். ப. 78
49. சா. இலாரன்சு, அணிந்துரை, தமிழ்மன்றம், (தொ.ஆ) பாட்டிலே படைவீடுகள். ப. 5

### மணவாழ்த்து

இளங்கம்பனின் புதல்வி திருமணத்துக்குத் தலைவர்கள் அறிஞர்கள் தந்த வாழ்த்துப்பாக்கள் 'வாழ்த்துமாலை' எனும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பு மணமக்களின் நினைவுக்குப் பரிசாக அமையுமே தவிர இலக்கிய உலகிற்குப் பெரும் பரிசாக அமையாது. முப்பத்திருவரின் கவிதைகளும் நன்றிக் கவிதையும் அடங்கிய இந்நூலில் சிலரது உரை வாழ்த்தும் இடம் பெற்றுள்ளது.

## தனிச் சிறப்புத் தொகுப்புகள்

### மாதங்கள்

ஒரு தமிழ் மாதத்தை ஒருவர் வீதம் பன்னிரு கவிஞர்கள் பாடியுள்ளனர். மாதந்தோறும் ஏற்படும் இயற்கை மாற்றங்கள், சில சமுதாயச் சூழல்கள், மாதம் பற்றிய பழமொழிகள், சமயச் சார்பு விழாக்கள் படம் பிடிக்கப்படுகின்றன. எனினும் இவற்றுள் கட்டுரைத்தலும் செயற்கைக் கற்பனையும் தற்புகழ்ப் போக்கும் மிகுதி.

### எண்கள்

முன்னது போல் 'எண்கள்' எனும் தலைப்பிலும் ஒரு தொகுப்பு வெளியாகியுள்ளது. ஒன்று முதல் பத்து, நூறு, ஆயிரம், கோடி, பற்றிப் பதின்மூன்று கவிஞர்கள் பாடியுள்ளனர். கவிஞர்களைப் பற்றிய அறிமுகத்தில் கவிஞர்களின் கொள்கைகளும் பாடப்படுவது புதுமையாகும்.

"தமிழகத்தில் அங்கவையும் சங்கவையும் இரண்டு;
தமிழ்க்குமரன் தெய்வானை வள்ளி துணை இரண்டே!
அமிழ்தான சிவனுக்கும் உமை கங்கை இரண்டே!
அரிதுணைக்கே இராதையுடன் உருக்குமணி இரண்டே!"[50]

என்பதனுள் ஒரு தொகுப்பாகச் செய்தி கிடைக்கிறதே தவிர உள்ளடக்கத்திலோ, கற்பனையிலோ மிதக்கும் கவிதை கிடைக்கவில்லை. இஃது எண்கள் தொடர்பான மன எண்ண வோட்டங்களின் தொகுப்பே தவிர வேறு தனிச்சிறப்புடைய தன்று.

50. மனசை, ப. கீரன், இரண்டு, ம.வே. பசுபதி (தொ.ஆ) எண்கள், ப 27

சிலர் சோதிடத்திலும், எண் கணிதத்திலும் (Numerology) நவக்கிரக ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுக் கவிதையை மறந்து எங்கெங்கோ போய்விடுகின்றனர்.

## ஆறுகள்

தென்புல வடபுல ஆறுகள் ஒன்பது பற்றிய தொகுப்பு. இதில் ஆறுகள் தோன்றுமிடம், ஓடும் பகுதி, அப்பகுதியில் இன்றியமையாத ஊர்கள், பயன்கள், புராணவரலாற்றுச் செய்திகள், இலக்கியத் தொடர்புகள், சிறப்புச் செய்திகள் இடம் பெறுகின்றன. கவிதைப்பண்பு இந்நூலில் மிகக் குறைவாகவே உள்ளது.

## ஆயிரம் மலர்கள்

மலர்களைப் பார்த்து ஏற்பட்ட மயக்கச் சிரிப்பு இத்தொகுப்பு.

**"ஊடே இலை சிலவும் உண்டு; எனினும்**
**நல்ல மலர்க்**
**காடாகும் இத்தொகுப்பு"[51]**

என இந்நூலுக்கமைந்த மதிப்புரை நடுநிலையானது.

கோடு, கொடி, நீர், நிலப்பூக்கள் அனைத்தையும் பற்றிக் கவிதையாத்தல் வேண்டும் எனும் வேட்கை முயற்சியாய் இந்நூல் முகிழ்த்துள்ளது. மலர்களின் தோற்றம், வண்ணம், பயன் ஆகியவைகளைக் கூறுகின்ற மலர்க் களஞ்சியமாக இந்நூல் அமைந்துள்ளது என்றும் சில பாடல்களில் மலரைப் பற்றிய செய்தியை விடப் பிற செய்திகள் கூடுதலாக இடம் பெற்றுள்ளன என்றும் நூலின் நிறை குறைகளைத் திறனாய் கிறார் சு. செல்லப்பன்.[52] கூறியது கூறல், மற்றொன்று விரித்தல் எனும் குறைகளும் உள. வாகை மலரை வெற்றியழகன் பாடியிருப்பது பொருத்தம். மற்ற கவிஞர்கள் மலரின் இயற்கைத் தன்மைகளை விளக்கமாகப் பாடும்போது இவர் அவ்வாறு பாடவில்லை. இறைவணக்கப் பாட்டாக இஃது இருக்குமே தவிர மலர்ச் சிறப்புத் தரும் கவிதையாகாது. பொருளை விட்டு விட்டுப் புறம்போய் விடும் நம் நாட்டுப் புலவர்களின் போக்குக்கு இத்தகையவை எடுத்துக்காட்டாகும்.

51. துரைமாணிக்கம், ஊக்கவுரை, செங்கை அழகன், (தொ.ஆ) ஆயிரம் மலர்கள், முதல் தொகுதி, ப. 9
52. சு. செல்லப்பன், உள்ளுறையுரை மு.நூ. ப. 13

*அ.கி. பரந்தாமனார், நாரண. துரைக்கண்ணன் ஆகிய சான்றோரும் பாடியிருப்பது நூலுக்குச் சிறப்புத் தருகிறது.*

"நலங்கெடுக்கும் வினைகளிலே நாட்டங் கொண்டோர்
நாட்டினிலே எங்கெங்கும் இருக்கின் றார்கள்;
பலவிதமாய் வேடமிட்டுத் திரிகின் றார்கள்;
பலவற்றைப் பக்குவமாய்க் கலந்து விற்கும்
கலப்படத்தில் கைதேர்ந்தோர் இதிலும் கூடக்
கைவைக்க மறக்கவில்லை! தேநீர் தன்னில்
சலனமின்றி இதனிலையைக் கலக்கின் றார்கள்;
சாடிடுவோம் அன்னவரை நலமே காண!"[53]

*என்று 'மருதாணிப்பூ' வைப் பாடும் பண்பழகன் இன்றைய கலப்படச் சமுதாயத்தையும் சுட்டுகின்றார்.*

## பறவைகள்

*முப்பத்தொன்பது கவிஞர்கள் இருபத்திரண்டு பறவை களைப் பற்றிப் பாடியுள்ள கவிதைகளின் தொகுப்பு. வண்ணப் பறவைகள், மாவட்ட வாரியாகக் கவிஞர்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளனர். தஞ்சை, திருச்சி சார்ந்த கவிஞர்கள் எண்ணிக்கையில் மிகுந்துள்ளனர். வானம்பாடி, குயில், கிளி, காக்கை அதிகமாகப் பாடப்படுகின்றன. ஆந்திரக் கவிஞரும், ஒரு பெண்பாற் கவிஞரும் பாடியவையும் உள்ளன.*

## கனிகள்

*'முக்கனி' எனும் நூல் பாட்டரங்கக் கவிதைகளைக் கொண்டது என்றாலும் தலைப்பு வகை நோக்கி இங்குத் தரப்படுகிறது. தமிழகம் சிறப்புமிக்க முக்கனிகளாகிய மா, பலா, வாழை பற்றி அமைந்த தொகுப்பு இது.*

"பை விரிப்பை விரித்தால்தான் மனையாள் கூடப்
பல்விரிப்பைக் காட்டுகின்றாள்; ஆனால் எந்தன்
மெய்விரிப்பைக் காட்டுதற்குக் கத்தி கொண்டு
மிகஎளிதாய்ப் பிளந்திட்டால் இன்பம் உண்டு"[54]

*என்று பலா சொல்லுகிறது.*

53. பண்பழகன், மருதாணிப்பூ, மு.நூ., ப. 27
54. எஸ். கல்யாணசுந்தரம், பலா, அமலன் (பதி.ஆ) முக்கனி ப. 14

"கொல்லை விளை வானாலும் மாம்ப ழத்தைக்
கொள்ளை விலை என்றேநாம் ஒதுக்கு கின்றோம்
.........................................................................
செல்வர்க்கும் ஏழைக்கும் என்றும் எங்கும்
'சீப்பா'கக் கிடைப்பதாலும் வாழை ஒன்றே"[55]

எனும் இக்கவிதையில் சொல்லாட்சி அழகாக உள்ளது. கவியரங்கு கேட்போரின் காதுகளுக்கு இனிக்கும் ஒலிநயமும் உள்ளது. 'சீப்' ஆக (Cheap) மலிவாகக் கிடைக்கும் என்பது பிற மொழி வழக்காற்றலால் வந்த ஒலிநயம் ஆகும். வாழை சீப்பாகக் கிடைக்கும் என்பது தமிழாட்சி.

## நிலா

'நிலா நானூறு' எனும் தொகுப்பில் பாவேந்தர் பாடலுடன் 'நிலா' அறிமுகம் ஆகிறது. நிலவைப் பற்றிப் பாடாத கவிஞரே இல்லை எனலாம். எனவே நானூறு செய்திகள் வந்து நுழைய வாய்ப்பு ஏற்படுகிறது. நூலெங்கும் உலாவந்த நிலா, பிஞ்சு நிலா, கவிஞர் நெஞ்சில் வெண்ணிலா, இசை கேட்டு அசையும் நிலா, ஈழத்தை ஈர்த்த நிலா, மேனாட்டில் மின்னும் நிலா, வளர்நிலா, நாடோடி நிலா, முழு நிலா என்றவாறு வகைப்படுத்தப்பட்டு அழகிய ஓவியங்களுடன் உருவானதாகும் இத்தொகுப்பு.

"எட்டுத்தொகைக்குப் பிறகு வந்த ஒன்பதாம் தொகை என்று இதனை அழைக்கலாம்"[56] என்று கண்ணதாசன் கூறுகிறார். மிகவும் தரம்வாய்ந்த கவிதைகளை இத்தொகுப்பில் காணமுடிகிறது.

"ஆசை கொண்டு விண்வெளியின் மீது — மதி
ஆடையின்றி யேஉலவும் மாது — முகில்
ஓசை கொண்ட மண்டலத்தில்
ஊர்ந்துலவி வாழ்ந்து வரும்
ஊமை — வெள்ளி
ஆமை;"[57]

---

55. அயிலை தமிழ்ச்செழியன், முடிப்புக் கவிதை, மு.நூ., ப. 22
56. கண்ணதாசன், அணிந்துரை, ஆற்றலரசு & கல்லை ஆ. துரை (தொ.ஆ) நிலா நானூறு
57. சுரதா, வளர்நிலாப் பகுதி, மு.நூ.

### சுவைகள்

*'பாரதி காட்டும் சுவைகள்' என்பது ஒரு கவியரங்கத் தொகுப்பு என்றாலும் தலைப்பின் வகை நோக்கி இங்குத் தரப்படுகிறது. பாரதியாரின் கவிதைகளில் தோய்ந்து, அவர் காட்டும் வீரம், இன்பம், அவலம், நகை, மருட்கை, சாந்தம் ஆகிய சுவைகளை நயம்பட உரைக்கின்றார்.*

### பொது

*இயற்கை, செயற்கை, கவிஞர்கள் எனும் உள் தலைப்பு களில் பலகவிஞர்கள் பாடிய கவிதைகளின் தொகுப்பு 'சந்தனக்கதவு'. சுரதா வழங்கிய 'வார்த்தை வாசல்' முன்னுரை யாக அமைகின்றது.*

"அறிவியலின் கொடை அச்சுப் பொறியு மாகும்
அப்பொறியால் உலகடையும் கோடி நன்மை;
திறமான புதுமையினைக் காலப் பேயும்
தின்னாமல் காப்பதிலிப் பொறியே காவல்"[58]

*என்று அரிமதி தென்னகன் பாடுகிறார்.*

"தோட்டமலர், பனி மூட்ட மதில் இதழ்
நீட்டி விரிந்ததடா! — எழில்
காட்டி மலர்ந்ததடா! — நம்
நாட்டு வளத்தினைக் காட்டும் வயல்கதிர்
ஆட்டிக் களித்ததடா! — வெயிற்கடல்
ஆழ்ந்து குளித்ததடா!"[59]

*என்று சந்தம் இசைக்கிறார் புவனை கலைச்செழியன். 'மதித் தேர்' பற்றிய கவிதை நன்றாக இருப்பினும் சிலர் ஓசைக்காக 'ஓசி' போன்ற சொற்களை உள்ளே கொண்டுவருவது கவிதை யின் தரத்தைப் பாழ்படுத்தி விடுகிறது.*

*மூன்று பெண்கள் உட்பட ஐம்பத்தைந்து கவிஞர்களின் பொதுவான தொகுப்பு 'மகிழம்பூ'. காதல், சமுதாயச் சிந்தனைகள் இதனுள் மிகுதி. இத்தொகுப்புக்கு வரையறுத்த நோக்கம் எதுவுமில்லை, 'ரயில் வண்டி'யும் கவிதைப் பொருளாகிறது. 'ஒரு மூட்டைப் பூச்சியின் மரணமும்கூட பாடப்படுகிறது.*

58. அரிமதி தென்னகன், அச்சுப்பொதி, சந்தனக் கதவு, ப. 55
59. புவனை கலைச்செழியன், தங்கக்கனி, மு.நூ.

*அண்ணாமலைப் பல்கலைக்கழகம் புலவர் நிறை நிலை மாணவர்கள் அறுவர் தந்த படைப்புகளின் தொகுப்பு மற்றொரு மகிழம்பூ, தமிழ், காதல், இயற்கை, தெய்வம் முதலிய பொதுத் தலைப்புகளும் இன்பம், அவலம், மருட்கை முதலிய சுவைகளும் அடங்குமாறு பாடப்பட்ட கவிதைகள் பெரியார்க்குப் படையல் ஆகியுள்ளன. "பெண்ணாகப் பிறப்போர்க்குக் கண்ணீரே சொந்தம்"[60] என்றாற்போல்வன இக்காலப் பெண்கள் நிலைமை பற்றிய பார்வை உடையன வாகும்.*

*"இறக்கவே முடிவு செய்தேன்"[61] என்று முருகேசன் தரும் தலைப்பே அதிர்ச்சி தருகிறது.*

**"நாத்திக நிலா நீரும்**
**எரிந்து வீழ்ந் ததனால்;**
**ஆத்திக அமா வாசையில்!**
**பரிதவிக்கும் விண்மீனானோம்[62]**

*என்பது புதுப்பார்வையுடைய்து.*

*இரு பெண்கள் உட்பட நாற்பத்தேழு கவிஞர்களின் படைப்பு 'புத்துலகக் கவிதைகள்'. கு.மா. பாலசுப்ரமணியம் முதலிய கவிஞர்கள் இதனுள் இடம் பெறுகின்றனர். யாப்பு வகையில் இத்தொகுப்பு புதுமுயற்சி செய்துள்ளது. சுந்தரமூர்த்தி வஞ்சிப்பாவிலும், தமிழடியான் மருட்பாவிலும் கவிதை தந்துள்ளனர். மு. கனகராசன்,*

**"காலத்தி னாலே கோபுர மேறிக்**
**குடிசையை மறந்த நெஞ்சங்களே!—அந்தக்**
**காலமும் உம்மை உயர்த்திய காகம்**
**ஓரிடம் நில்லுமோ சொல்லுங்களே!"[63]**

*என்று கேட்கிறார்.*

*எங்கெங்கோ கிடப்பவர்களின் எண்ண அலைகளையும் தமிழர் நெஞ்சில் எதிரொலிக்கும் பிற எண்ணங்களையும் தொகுத்தளிப்பதே "எதிரொலிகள்" பாரதியார் நெல்லையப்பர் தொடங்கி 1925இல் பாடிய பாரதிதாசன் பாடலையும்*

60. பழநிவேல், இது ஒரு மடல், மகிழம்பூ, ப. 35
61. முருகேசன், இறக்கவே முடிவு செய்தேன். மு.நூ. ப. 45
62. இராமாநுசம், நாத்திக நிலா, மு.நூ., ப. 72
63. கனகராசன், இமையத் தமிழன் (தொ.ஆ) புத்துலகக் கவிதைகள்

கொண்டு எழுபத்தொருவரின் எண்ணங்களை இணைக்கும் நூல் இது. இயற்கை வருணனையே இதனுள் அதிகம். பகுத்தறிவு பற்றிப் பேசும் இடமும் எது பக்தி எனவினவும் இடமும் அமைந்து முரண்சுவை தருகின்றன.

## பிள்ளைத் தமிழ்

அப்துல் கபூர் தலைமையில் பத்துக் கவிஞர்கள் சேர்ந்து காப்பு முதல் சிறுதேர் வரையிலான பத்துப் பருவங்களில் திருவள்ளுவரைக் குழந்தையாகக் கொண்டு பாடிய இக் கவியரங்கத் தொகுப்பு புதுமையானதாகும்.

## முடிபுகள்

தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களை ஒட்டி எழுந்த தொகுப்புகளில் தலைவர்களின் ஆளுமை வெளிப்படுகிறது. எனினும் அவற்றுள் மிகை உணர்வு (Exaggeration) தென்படுகிறது. உண்மைகள் குறைந்தும் புகழ்ச்சி மிகுந்தும் காணப்படுகின்றன. சில தொகுப்புகள் ஒன்றுபோலவே தோன்றுதல் குறையாகும். அண்ணா, கலைஞர் பற்றிய தொகுப்புகளில் ஒரே செய்தி, நிகழ்ச்சி திரும்பத் திரும்ப இடம் பெறுகின்றன.

அறிஞர்களை, தலைவர்களை உள்ளபடியே சிறப்பிக்கும் பாட்டுகளும் உள்ளன. தலைவர்களைப் பற்றி ஒருவர் பாடும் காப்பியத்தினும், பலர் பாடும் இத்தொகுப்புகளில் பலரது பார்வைகளும் புதிய கோணங்களும் அமைவதால் ஒருவரது பண்பு நலனில் பல்வேறு கூறுபாடுகளும் வெளிப்படுகின்றன. அரசியல் தலைவர்களில் காப்பியத்தலைவராகப் போற்றப் பட்டு விரிவாகப் பேசப்படும் தலைவர் அண்ணா ஆவார். அவரை அடுத்துக் கவிஞர்கள் பாராட்டும் சிறப்புக்குரியவராக நிற்பவர் கலைஞர்.

மலர்கள், மாதங்கள், எண்கள், ஆறுகள், கனிகள் என எடுத்துக் கொண்டு ஆழமாகவும் நுட்பமாகவும் பாடும் வாய்ப்பு அமைகின்றது. எனினும் இவற்றில் கட்டுரைக்கும் தன்மை மிகுதியாக இருப்பதால் கவிதைப் பண்பு குறைந்தே காணப்படுகிறது. தமிழ், காதல் பற்றிய தொகுப்புகளில் உணர்ச்சியும் கற்பனையும் மேலோங்கி நிற்கின்றன.

இக்காலத் தமிழ்க்கவிதை வளர்ச்சியில், தொகுப்புகள், குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. தனிப்பட்ட முறையில் நூல் வெளியிட வாய்ப்பில்லாத கவிஞர்க்கும்

இம்முயற்சி நல்ல வாய்ப்பைத் தருகிறது. முன்னைப் புலவர்கள் தங்கள் பாடல்கள் தொகுக்கப்படும் என்று நம்பி இயற்ற வில்லை. இன்றைய கவிஞர்கட்கு அழைப்பே வருகிறது; நூலில் இடம்பெறும் எனும் நம்பிக்கையும் இருக்கிறது.

கவியரங்குகளின் பங்கு பெரியதாக உள்ளது. கேட்போரையும் நேரடியாக மகிழ்வித்து, அவை காற்றோடு போய்விடாமல் படிப்போரையும் இன்புறுத்தும் வாய்ப்பு இத் தொகுப்பு முயற்சியால் ஏற்படுகிறது.

போட்டிகளின் வாயிலாக மிகச்சிறந்த படைப்புகள் தோன்றித் தமிழ்க் கவிதைக்கு வளம் கூட்டுகின்றன.

தரமான கவிதைகளைத் தொகுத்து அளிப்பதில் இலக்கிய மன்றங்களின் பணி குறிப்பிடத்தக்கதாக அமைகின்றது.

# 7

# ஒருவர் பாடிய உதிரித் தொகுப்புகள்

ஒவ்வொரு கவிஞரும் வெவ்வேறு சூழல்களில் பாடிய கவிதைகள் தொகுப்புகளாகியுள்ளன. கவியரங்கச் சார்பிலும், இதழ்கள் தந்த வாய்ப்பிலும், இயக்கச் சார்பிலும், தனியொருவர் முயற்சியிலும், குழுவினர் பெயரிலும், வணிக நோக்கிலும் நூல்வடிவம் பெற்றவை இதனுள் அடங்கும். இக்கவிதைகளின் உள்ளடக்கத்தினைத் தமிழுணர்வு, சமுதாயநிலை, தத்துவம், இயற்கை, காதல், என்று பாடுபொருள் அடிப்படையில் பாகுபாடு செய்து காணலாம்.

## தமிழுணர்வு

தமிழ்க்காப்பு, தமிழ் வளர்ச்சி என்ற இருநிலைகளில் இக்காலக் கவிஞர்கள் தமிழுணர்வை ஊட்டுகின்றனர். இந்தி எதிர்ப்பு, பிற மொழிக் கலப்பு நீக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்துதல் மூலம் தமிழைக் காத்தலையும் தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பயிற்றுமொழி, அறிவியல் தமிழ், தமிழ் வழிபாடு, தனித்தமிழ் ஆகியவற்றை வரவேற்றல் மூலம் தமிழ் வளர்ச்சியினையும் வலியுறுத்துகின்றனர்.

"தன்னாட்டில் தாய்மொழியைக் காப்ப தற்குத்
தான்தேர்ந்து பதவிதரப் பெற்றுக் கொண்ட
புன்மையரால் தடைப்பட்டார்! அடிக்கப் பட்டார்!
பொருந்தாத முறையிலவர் சுடவும் பட்டார்!"[1]

எனவும்,

1. தமிழன்பன் கவிதைகள், ப. 57

"வளமார் மொழியால் வானகம் அளந்தோர்
உளத்தினை விற்று ஊர்ஊ ராகச்
சொற்பிச்சை எடுக்கும் சொரணை யற்றதோர்
பிற்போக்கு மொழிக்கா பிடரி காட்டுவோம்;
கரண்டி பிடிக்கும் கைதான் எனினும்
இரண்டில் ஒன்றினை இன்றே காண்போம் !"[2]

*எனவும்,*

"அட்டி யின்றியெத் திசையி னுந்தமிழ்
அன்னை யின்புகழ் பேசுவேன்
அயல்மொ ழிப்பகை தனைய லைகடற்
கப்பு றத்திலே வீசுவேன்"[3]

*எனவும் வரும் பாடல்கள் இந்தி எதிர்ப்பை உணர்த்துவன.*

"தாய்க்கொலை போன்றது தமிழ்க்கொலை யாகும்
தமிழ்மொழி சிதைவுறின் தமிழினம் சாகும்"[4]

*என்று பிறமொழிக் கலப்பினைச் சாடினும் இக்காலக் கவிதைகளுள்*

"நித்திரை ராணி பெற்ற குமாரி
சொப்பன சோபன சுந்தரியே
அற்புத மந்திர தந்திரியே !"[5]

*என்னுமாப் போல் அயல்மொழிக் கலப்பு மிக்கிருத்தலைக் காணுகின்றோம். செல்வபாரதியின் 'மயில் இறகுகள்' எனும் நூலுக்கு முன்னுரை வழங்கிய ஔவை. நடராசன், "ரத்தப்பூ, ராக புஷ்பங்கள், போன்ற தலைப்புகளைப் பார்க்கும்போது குருதிப்பூ என்ற குறுந்தொகைச் சொல்லும், பன்மலர் என்ற பாட்டுச் சொல்லும் பழக்கத்தில் இருக்கும்போது, கலப்புச் சொற்களைக் கையாள்வதைச் செல்வபாரதி செய்திருக்க வேண்டாம் என்று சொல்லியாக வேண்டும்,"[6] எனக் கூறுதலும் ஈண்டு நினையத் தகும். தமிழ், எங்கும் எதிலும் ஆட்சிமொழியாதலை விரும்பி,*

2. கா. வேழவேந்தன், வண்ணத் தோகை, ப. 24
3. புலவர் குழந்தை பாடல், ப. 11
4. புலவர் குழந்தை பாடல், ப. 35
5. தம்பி சீனிவாசன், காலத்தின் ஓரத்தில், ப. 47
6. ஔவை நடராசன், முன்னுரை, செல்வபாரதி, மயில் இறகுகள், ப. 10

"நானோர் தமிழ்வெறியன் நாட்டை எந்த
நாய்கழுதை ஆண்டாலும் கவலை இல்லை;
தேனான தமிழ் எங்கும் திக்கெட் டுக்கும்
தினம்முழக்கம் செய்தாலே எனக்குப் போதும் !"[7]

*என வா.மு. சேதுராமன் பாடுகிறார்.*

*தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு மாணவர்கள் படித்து முன்னேற வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில்*

"தாய்ப்பாலில் சத்தில்லை என்றார் — பின்
தாயன்பு அத்துணை சரியில்லை என்றார்;
நாய்ப்பாலில் சத்துண்டு என்றால் — நாம்
நக்கிக் குடித்திடச் சென்றிடு வோமோ ?
ஏய்ப்பார்கள் எதையேனும் சொல்லி — அது
இந்நாட்டுக் கல்வியை எரிக்கின்ற கொள்ளி !
மாய்ப்போம்என் றிளைஞர்கள் சுற்றி — ஒரு
மந்திரச் சொல்என்று கூறட்டும் ! வெற்றி !"[8]

*என உதயை மு. வீரையனும்,*

"தாய் மொழியில் — சொந்தத்
தாய் மொழியில் — கற்றால்
சாவே வரட்டுமடா — காலம்
தாழ்வை விரட்டுமடா !"[9]

*என்று தென்னவனும்,*

"அயலவரின் மொழிகற்றே இதுவ ரைக்கும்
அடிமைகளாய் வாழ்ந்திட்டோம் இனிமே லேனும்
மயலறிவு தனைநீக்கி மாண்பு மிக்க
மாத்தமிழின் வாழ்வுக்கே உழைப்போம் வாரீர்"[10]

*என்று செல்வகணபதியும் வெவ்வேறு கோணங்களில் பாடுகின்றனர்,*

7. வா.மு. சேதுராமன், எண்ணச்சுடர், ப. 51
8. உதயை மு. வீரையன், அக்கினிக் குஞ்சுகள், ப. 32
9. தென்னவன், மலர்ந்த பின்பு, ப. 25
10. செல்வகணபதி கவிதைகள், ப. 14

"ஊசி செய்யும் சிறுதொழிலின் நுட்பம் கூற
ஒருகோடி நூல்வேண்டும் தமிழில்; இந்தக்
காசினியில் இன்றுவரை அறிவின் மன்னர்
கண்டுள்ள கலைகள் எல்லாம் தமிழில் எண்ணிப்
பேசிமகிழ் நிலைவேண்டும்; விண்ணை எட்டிப்
பிடிக்கிறது மனிதஇனம்; முன்னோர் செல்வ
ஆசியிலே வாழ்கின்றோம்; காலமெல்லாம்
அதன்பெருமை பேசுகின்றோம்; அவல மன்றோ !"[11]

*என்பதன் மூலம் குலோத்துங்கன் (வா.செ. குழந்தைச்சாமி) அறிவியல் மொழியாகத் தமிழ் வளர்ந்தாக வேண்டிய கட்டாயத்தினை உணர்த்துகின்றார்.*

"சம்பந்தர் அபிராமி பட்டரெல்லாம்
தாய்மொழியாம் தமிழில்தான் வழிபட்டார்கள்
எம்பெருமான், தமிழில்வழி படாதீர் என்றே
எவரிடத்தும் இதுவரையில் சொன்ன துண்டோ ?"[12]

*என்று சுரதாவும்*

அறியாத வடமொழியை மனனம் பண்ணி
ஐந்தாறு முண்டங்கள் ஒப்பு விக்க
புரியாமல் தமிழ்மக்கள் கன்னம் நோகப்
போட்டுக்கொண் டிருப்பதுதான் பக்தி என்றால்...[13]

*என்று செல்வகணபதியும்,*

"கருவறையில் கடவுளர்க்குக் கனியமுதத் தமிழ்மொழியே
காதே றாதோ ?
திருவறையில் தீந்தமிழின் இசைப்பாக்கள் செவிமடுக்கத்
தீங்கே ஆமோ ?
தெருவறையில் நாய்கட்டிக் குலை(ரை) த்தாற்போல்
பிறமொழியின்
திணறல் ஏனோ ?
ஒருமுறையாய் ஒண்டமிழை இந்நாட்டுக் கோயிலெங்கும்
ஒலிக்கச் செய்வீர்"[14]

---

11. குலோத்துங்கன் கவிதைகள், ப. 58
12. சுரதா, துறைமுகம், ப. 19
13. செல்வகணபதி கவிதைகள், ப. 16
14. இரா. சோதிவண்ணன், ஒற்றையடிப்பாதை, ப. 37

என்று இரா. சோதிவாணனும் கடவுள் வழிபாட்டில் தமிழ் இடம் பெறுதல் வேண்டுமென வலியுறுத்துகின்றனர்.

"உதைத்துத் திருத்த ஒருபடை வேண்டும்
தமிழ்க்காளையே! —அதில்
உன்னையும் உறுப்பினனாக்கிக்கொள்வாய் இந்த
வேளையே!
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
தனித்தமிழ்த் தாளிகை பார்க்க மறுத்தும்
தமிழ்ப்பெரி யார்தம் வாழ்வைப் பழித்தும்
தனித்தமிழ் பேசின் எள்ளி நகைத்தும்
தன்னலத் திற்காய்த் தாயை விற்பானை (உதை,)"[15]

எனத் தனித்தமிழ்க் கொள்கையினை ஏற்க மறுப்பவர்களைக் கண்டித்து இரா. இளவரசு பாடுகின்றார்.

தரங்கை பன்னீர்ச் செல்வன் தன் 'நறுந்துணர்' என்னும் நூலில் அணிகங்கள் (Vehicles) தூவல் (Pen) போன்ற தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதுடன்,

"புதிய சொற்கள் ஆக்கு
புரியும் வரையும் ஊக்கு!
வதியும் தடைகள் நீக்கு,
வறட்டுப் பெருமை போக்கு!"[16]

என்று தமிழ் வளர்க்கும் வழியினையும் குறிப்பிடுகின்றார்.

## சமுதாய நிலை

இக்காலச் சமுதாயத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள், அரசியல்வாதிகள் ஆகியோரின் நிலைகளையும் மக்களிடையே நிலவும் சாதி வேறுபாடுகளையும் விளக்கிடும் வகையில் பல கவிதைகளைக் காணுகின்றோம்.

"சொல்வதுயார்? வாத்தியாரா? தூரத் தள்ளு குப்பை
தொண தொணப்ப திவரியற்கை—சாரமற்ற சக்கை!
எல்லாருக்கும் ஆசிரியன் எட்டி உதைக்கும் பந்து;
எந்திரமாய் ஆகிவிட்டார் இதயம் நொந்து நொந்து"[17]

என ஆசிரியர் நிலையினையும்,

15. இரா. இளவரசு, விடுதலை, பக் 36–37
16. தரங்கை பன்னீர்ச் செல்வன், நறுந்துணர், ப. 28
17. சிற்பி, சிரித்தமுத்துக்கள், ப. 34

"இடத்தைப் பெறுமுன்னே இவரெல்லாம் எம்மடியில்
குடத்து நீராகிக் குனிந்துதவம் கிடந்தார்கள்:
இடத்தைப் பெற்றதுமே இவரெல்லாம் எட்டாம்நாள்
மடத்தைப் பிடுங்குகிறார்: மரியாதை போச்சுதடா:
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
பத்து மாணவரை மொத்தமாய் யான்கண்டால்
சித்தம் கலங்குகிறேன்; சிறியேனின் குற்றமதா ?
தினமும் பிரச்சனைகள்; தெளிவில்லா முழக்கங்கள்
இனமே புரியாத இடையில்லாப் போராட்டம்
விடுதிச் சாப்பாட்டில் வெங்காயம் அதிகரித்தால்
சடுதிப் போராட்டம்; சமையற்காரன் ஒழிவான்"[18]

*எனக் கல்லூரி முதல்வர் கூற்றாக மாணவர் போக்கினையும்*

"பலவும் பேசி நாட்களிப்பர்
பதவி நிலைக்க மேலோரின்
மலமும் சுமக்க விரைந்திடுவார்
மக்களைக் காணில் குரைத்திடுவர்
நிலமும் சுமக்குது இவர்களையும்
நீசர்கள் இவரும் மனிதர்களோ !"[19]

*எனக் கடமையுணர்வற்ற அலுவலர்களையும்,*

"பதவிக்காக இடம் மாறி
பலரைச் சேர்ந்த 'கணிகை' நான்;
உதவி செய்யப் பணம் வாங்கி
உலகை ஏய்த்த 'திருடன்' நான்:
மதியால் ஏழை மக்களையே
மாய்த்துச் சென்ற 'கொலைஞன்' நான்
அதிகம் உண்டு பாவங்கள்
அன்புச் சுடரே மன்னிப்பீர் !"[20]

*எனப் பாவமன்னிப்பு வேண்டும் அரசியல்வாதிகளின் இழிநிலையினையும் இக்காலக் கவிதைகள் எடுத்தியம்புகின்றன.*

---

18. அரு. சோமசுந்தரம், ஐம்பொறிகள், பக். 26–27
19. என்.ஏ. வேலாயுதம், இதயமலர்கள், ப. 77
20.. கண்ணதாசன் கவிதைகள், ஐந்தாவது தொகுதி, ப. 64

"கல்லாத பெருமக்கள் பழக்கம் என்ற
காரணத்தால் சாதிவழிநிற்பர்? கல்வி
வல்லாரும், அரசினரும், மேடை யேறி
வகுப்பற்ற சமுதாய மாண்பு பேசும்
சொல்லாரும் திரைமறையில் சாதி கூட்டித்
தொடர்பேற்றுச் செயலாற்றும் கொடுமை சூழ்ந்த
பொல்லாத நிலைகண்டு, சீர்தி ருத்தப்
போர்ப் பெரியார் நெஞ்சொடிந்து சிலையா னாரே"[21]

*எனச் சாதிகள் மறைமுகமாக வளர்க்கப்படும் நிலையினையும்*

"இப்படியே பசி நீளுமென்றால் இது
என்ன சுதந்திர பூமி? — ஏன்
இத்தனை ஆயிரம் சாமி?"
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
"ஒட்டைக் குடிசைக்குள் கூட்டுக் குடும்பங்கள்
வாட்டி வதைவதை மாற்றி — அதை
மாளிகை மஞ்சத்தில் ஏற்றி — இந்த
நாட்டுப் பொருள் எங்கள் வீட்டுப் பொருள் என்று
நாட்டிடுவோம் படை கூட்டி — விழி
காட்டிடுவோம் கனல் ஊட்டி —"[22]

*என வறுமை நிலையினையும் அதனைப் போக்குவதற்கான வழியினையும் பாடுகின்றனர்.*

"தன்னுழைப்பால் உண்டு தன்நாட்டு மக்களுக்கு
முன்னோடியாய் விளங்கும் முதிர்ந்த ஞானமுள்ள
அரசியல் வாதிகள்; அன்றாடம் தவறாமல்
சரியான நேரத்தில் தானோடும் வண்டிகள்
விபத்துக்குள் ளாகா விமானங்கள்; விலைகொடுத்து
வாங்கி நூல்படிக்கும் வாசகர்கள், பணிபுரிவோர்
தூங்கி விழாத அரசின் செயலகங்கள்"[23]

*என்றவாறு நல்ல சமுதாய அமைப்பினை ஏக்கத்தோடு எதிர்பார்க்கின்ற கவிஞர்களும் உண்டு.*

---

21. குலோத்துங்கன் கவிதைகள், ப. 51
22. கண்ணதாசன் கவிதைகள், நான்காவது தொகுதி, ப. 48–49
23. குருவிக்கரம்பை சண்முகம் கவிதைகள், ப. 48

## தத்துவம்

*மக்கள் வாழ்வியலைத் தத்துவமாக வடித்துத் தருகின்ற போக்கு இக்காலக் கவிஞர்களிடம் காணப்படுகின்றது. அவர்களுக்குள்ளும் கண்ணதாசன், எளிய இனிய சொல் லாட்சிகளின் வாயிலாக வாழ்வின் ஆழ்ந்த உண்மைகளை வெளியிடுவதில் வல்லவராய்த் திகழுகின்றார். பரந்துபட்ட அரசியல் அறிவும் உலகியல் அறிவும் அவர் தத்துவக் கவிதைகள் புனைவதற்குத் துணையாக அமைந்துள்ளன.*

"வாழை, இலை
தண்டு மலர்
காய்கனிகள்
ஆனவுடன்
வாழையடி வாழை ஒன்று ஜனனம் – அது
வந்தவுடன் தாய் விழுந்து மரணம்!
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
ஒன்று மட்டும்
உண்மை அறி
ஹூற்றிலொரு
பாட்டெழுதும்
செந்தமிழ் மாகவிக்கு மரணம் – அது
வந்தபின்பு தான்பெருமை ஜனனம்"[24]

*என மனிதனது பிறப்பு, இறப்புத் தொடர்பினையும்,*

"உருவுக் குள்ளும் உருவை வைத்தவன்
கருவுக் குள்ளும் கருவை வளர்த்தவன்
இருளில் ஒளியை மறைவில் வைத்தவன்
ஒளியில் இருளை அருகில் வைத்தவன்
எவ்விட முள்ளான் என்றீரோ?
என்னிடம் வாரும் சொல்கின்றேன்!
உண்டென் பதுபோல் இல்லென்பான்
இல்லென் பதுபோல் உண்டென்பான்
நன்றென் பதுபோல் அன்றென்பான்
அன்றென் பதுபோல் நன்றென்பான்
எப்புற முள்ளான் என்றீரோ?
இப்புறம் வாரும் சொல்கின்றேன்!"[25]

24. கண்ணதாசன் கவிதைகள், நான்காவது தொகுதி, ப. 32
25. கண்ணதாசன் கவிதைகள், மூன்றாம் தொகுதி, ப. 181

*என இறைத் தத்துவத்தையும்,*

"வித்திலே தவறுண் டானால்
விளைபொருள் தவறா காதோ ?
புத்தியே பொய்யாய்ப் போனால்
புகல்வதும் பொய்யா காதோ ?
வித்தையே திருட்டாய்க் கற்றால்
வேலையும் திருட்டா காதோ ?
தத்தமக் கென்றே வாழ்ந்தால்
தத்துவம் சருகா காதோ ?"[26]

*என எதிர்மறை நிலையில் வாய்மைத் தத்துவத்தையும் கண்ணதாசன் பாடுகிறார்.*

"பனிவாடைக் காடுகளில் பகல்நேர விண்மீனைக்
கனிமேடை மீதிருந்து கைவீசித் தேடுகிறேன்.
திசைதவறிச் சென்றுவிட்ட சிறுமேகக் கூட்டமென
இசைவெளியில் பறக்கின்ற என்றனுயிர் விம்மியழ
சவமேட்டுத் தனிமைதான் சரிபங்கு தருகிறது
தவ நேரம் எனைமெல்லத் தாலாட்டி அணைக்கிறது.
நூலறுந்த பட்டமென நொந்து நொந்து சிரிக்கின்ற
காலறுந்த கனவுகளைக் காலவெளி அழைக்கிறது.
மனிதநதி பாயாத மௌனநிலம் தனிலென்னைத்
தனிமைக்கு விற்றுவிட்டுத் தத்துவங்கள் வாங்குகிறேன்"[27]

*எனத் துயரினையே இரா. வைரமுத்து தத்துவமாகப் பாடுகின்றார்.*

*'உண்மை உறங்கலாம், ஆனால் இறக்காது' எனும் உண்மையினை.*

"கலசமீது காக்கைமலம் கழிப்ப தாலே
கலசத்தின் பெருமையது மறைவ தில்லை !
அலைகடலை நாவாய்கள் கிழிப்ப தாலே
அலைகடலின் நீர்வயிறு பிரிவ தில்லை !
விலையுயர் பொற் கட்டிதனைச் சுட்ட தாலே
வியனுலகில் அதன்தன்மை குறைவ தில்லை !

26. மேலது, ப. 191
27. இரா. வைரமுத்து, வைகறை மேகங்கள், ப. 71

மலையெனவே நிமிர்ந்திருக்கும் புகழின் மேன்மை
மாற்றார்தம் பொய்ப்பேச்சில் மறைத லில்லை!"[28]

எனக் கண்மதியன் போன்ற கவிஞர்களும் தத்துவத்தைப் பாட முயன்றுள்ளனர்.

## இயற்கை

*செங்கதிரோன், விண்மீன்கள், மின்னல், முகிற்கூட்டம், மழை, தென்றல், பூ, நெற்பயிர் ஆகிய இயற்கைப் பொருள்கள் இக்காலக் கவிஞர்களுக்குக் கைவந்த பாடுபொருளாக அமைகின்றன. இயற்கைப் பொருள்களின் மீது செல்லும் கவிஞர்களின் பார்வையில் புதுமையினைக் காணுகிறோம். இவ்வுண்மையினை,*

"குத்திருட்டில் வைகறையில் யாரோ வானக்
கூரையின்மேல் போட்டசிறு நெருப்புத் துண்டு"[29]

*எனச் செங்கதிரோனையும்,*

"தைத்திங்கள் குளம்பூத்த பூவோ விண்மீன் ?
தமிழ்வேந்தர் வெளியிட்ட சின்னக் காசோ,
மைத்தடங்கண் மடமாதர் உதிர்த்துப் பின்னர்
மாலைக்குத் தேர்ந்தெடுக்கும் முல்லைப் பூவோ,
தைத்திட்ட பட்டாடை முத்தோ, தீட்டித்
தரப்பட்ட ஒளிக்கல்லோ, சரிகைச் சேலை
உய்த்திட்ட பொடிப்பூவோ, தொலைவில் தோன்றும்
ஊரிட்ட மின்விளக்கோ விண்மீன் கூட்டம் ?"[30]

*என்றும்,*

"விசும்புக் கூடையில் விழுந்த ஓட்டைகள்!
நீலக் கடலின் நெருப்புத் தீவுகள்!
மெருகிட்டு மேகம் துடைத்து வைக்கும்
வானக் கடையின் வயிரத் துண்டுகள்!"[31]

*என்ற விண்மீனையும் வருணிக்கின்றனர்.*

28. கண்மதியன் கவிதைகள் இரண்டாம் தொகுதி, ப. 67
29. தமிழ் நம்பி, இதயப் பூங்கா, ப. 10
30. வாணிதாசன், எழில் விருத்தம், ப. 35
31. தமிழன்பன் கவிதைகள், ப. 30

"கார் முகிலின் கையெழுத்து"[32]

*என மின்னலையும்,*

"முகிலா ? இல்லை; முத்தொளி மங்கையர்
துகிலா ? ஆமாம் ! சுந்தரக் கவிதைகள்
கருவான் வீதியின் கனவு ரதங்கள் !
விரிவான் குளத்தின் வெள்ளிப் படகுகள் !
கதிரவன் எரித்த கருந்தீச் சூட்டில்
கொதித்தே எரிந்த குளிர்கடல் மீது
பூத்துக் கிளம்பிய புகைக்கூட் டங்கள் !"[33]

*என்று முகிற் கூட்டத்தையும் பாடுதல் சிறப்பாகவுள்ளது.*

"உப்புக் கடல் நீரை
உறிஞ்சியதால் வான்மேகம்
உடன் விழுங்க வொண்ணாமல்
உள் தொண்டை கரித்ததனால்
துப்பிய எச்சில்தான்
தூயபெரு நிலமெங்கும்
தூறலெனச் சாரலெனத்
துளித்துளியாய்த் தெளித்ததுவோ ?"[34]

*என்று மழையினையும்,*

"காலை முதல் ஆலையிலே கடுமுழைப்பை யாற்றிப்பின்
மாலையிலே வெளிவருவோன் மனமகிழ வீசுகிற
தென்றலடா தென்றல் – இன்பத்
தென்றலடா தென்றல்"[35]

*என்று தென்றலையும் கவிஞர்கள் பாடுகின்றனர்.*

வண்டுக ளுக்கோர்
விபச்சார விடுதி
வாடைக் காற்றின்
காதற் கிழத்தி !

32. வாலி, அம்மா, ப. 38
33. இரா. வைரமுத்து, மு.நூ., ப. 67
34. வாலி. மு.நூ., ப. 24
35. சாமி பழனியப்பன், மலர்கள், ப. 23

வெண்பனித் துளியின்
கண்கவர் படுக்கை!
வசந்த காலத்தின்
விளம்பரப் பலகை!

ஈக்கள் கள்ளை
இறக்கிடுந் தென்னை!
இனிய மணத்தின்
விளைவுப் பண்ணை!"[36]

*என்று பூவினையும்,*

"ஆற்று மதகுநீர் பாயுதடி – நிலம்
அத்தனை யும்தாள் சாயுதடி!
தூற்றிப் புடைக்கநெல் சேருதடி – களம்
தொட்டு மலையென மாறுதடி!
நாற்றுச் சிரிப்பென நீளுதடி – மனம்
நல்ல விளைவெனக் கூவுதடி!"[37]

*என்று நெற்பயிரையும் அழகுபடப் பாடுகின்றனர்.*

**காதல்**

*இக்காலக் கவிஞர்கள் மரபுவழி நின்று காதலைப் பாடியிருப்பினும் கண்ணதாசன், கா. வேழவேந்தன், வாலி, இரா. வைரமுத்து, சாமிபழனியப்பன் ஆகியோர் அம்மரபில் சில புதுமைகளையும் புகுத்தியுள்ளனர். காதலுக்கு விளக்கமுரைத்தல், கலைஞரைக் காதலியாகப் பாவித்தல், வறுமையையும் காதலையும் இணைத்துப் பார்த்தல், ஆண்பெண் காதலை விடுத்துப் பிறபொருளின்மீது காதல்கொள்ளுதல், கோதுமையைக்காதலியாக உருவகித்தல் முதலியபுதுப்பார்வையுடன் காதலை அணுகியுள்ளனர்.*

"பாலுணர்வு பெரிதல்ல
காதலுக்கு! — உணர்ச்சிப்
பரிமாற்றம் பொருளல்ல
காதலுக்கு!
தோலுறவு பொருட்டல்ல
காதலுக்கு! — நெஞ்சத்

36. வாலி, மு.நூ. ப. 36
37. மா. செல்வராசன், வைகறை மலர்கள், ப. 10

தொடர்பொன்றே மூச்சாகும்
காதலுக்கு !

கல்யாணக் கட்டிடத்தைக்
கட்டுதற்கு — நான்கு
கண்கலந்து நடத்துகின்ற
கால்கோள் விழா !
இல் வாழ்வுக் காவியத்தை
இயற்றுதற்கு — முதலில்
இரு நெஞ்சம் எழுதிவைக்கும்
காப்புச் செய்யுள் !"[38]

*எனும் கவிதை, காதலுக்கு விளக்கமாக அமைகின்றது,*

*கலைஞரைக் காதலியாகப் பாவித்துப் பாடும் கண்ணதாசன் தனக்கும் அவருக்கும் தனிப்பட்ட முறையில் உள்ள நட்புறவினை,*

"தத்தையாள் ஓர்நாள் என்னைத்
தனியாகக் கேட்டு வைத்தாள்
'அத்தான் நீர் இதுவ ரைக்கும்
யார்யாரைப் பார்த்தீர்' என்றாள்.
'பத்தாண்டுக் காலத் தில்நான்
பார்த்தவர் பலபே ருண்டு;
அத்தனை பேரில் உன்போல்
ஆசைதான் எவர்க்கும் இல்லை"[39]

*என்றும்,*

"காலங்கள் மாறும்; காணும்
காட்சிகள் மாறும்; போடும்
கோலங்கள் மாறும்; கொள்ளும்
கொள்கைகள் மாறும்; இந்த
ஞாலமே மாறும் போது
நாம்மாறா திருந்தால் போதும் !
சேலமே மீண்டும் எம்மைச்
சேர்த்ததும் நீதான் ! நன்றி !"[40]

38. வாலி. மு.நூ. ப. 58–59
39. கண்ணதாசன் கவிதைகள், நான்காவது தொகுதி, ப. 140
40. மேலது, ப. 142

*என்றும் வெளிப்படுத்துகின்றார்.*

"அடுப்புண்டு சமைக்க; ஆனால்
அரிசிதான் இல்லை; நீண்ட
துடுப்புண்டு; பயணம் போகத்
தோணிதான் இல்லை; மாவின்
வடுப்போன்ற கண்கள் கொண்ட
வனிதையென் ஏக்கந் தீர்க்கப்
படுக்கைக்கு வரும்வ ரைக்கும்
பசியென்ப தெனக்கு மில்லை"[41]

*என்று காதலையும் வறுமையையும் இணைத்துப் பார்க்கின்றனர்.*

"தென்றலுக்கு மலர்மீது காதல்! பூவைத்
தேடிவரும் வண்டுக்கோ மதுவில் காதல்!
குன்றேறி ஓடிவரும் ஆற்றி னுக்குக்
குமுறி யெழும் கடல்மீது காதல்!...
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
... ... ... ... ... ... ... ...பாய்ந்து
வென்றிடுவேன் எனச் சொன்ன சேர னுக்கு
விழுப்புண்ணைப் பெறுவதிலே கொள்ளைக்
காதல்"![42]

*எனப் பாலுணர்வற்ற காதலைப் பாடும் நெறியிலும்,*

"மெல்லியலாள் கோதுமையின் கதிரே என்றால்
விண்பறக்கும் சிறுபறவை நானே யென்றால்
வெல்லமெனக் கடித்துநான் விண்ணிற் செல்வேன்
மேதினியில் அழகி அவள்! அழகி! ஆம்! ஆம்!
எழிலரசி அழகினைநான் பருகுந் தோறும்
என்னையவள் பார்த்துப்புன் முறுவல் பூப்பாள்."[43]

*எனக் கோதுமையினைக் காதலியாக உருவகிக்கும் பாங்கிலும் புதுமையினைக் காணுகின்றோம்.*

41. இரா. வைரமுத்து, மு.நூ. ப. 61
42. கா. வேழவேந்தன் மு.நூ. ப. 43
43. சாமி பழனியப்பன், மு.நூ. ப. 58

## முடிபுகள்

இக்காலக் கவிஞருள் பிறப்பு, இறப்பு, இறைமை, வாய்மை, ஆகிய தத்துவங்களைப் பாடுவதில் கண்ணதாசன் முன்னணியில் நிற்கின்றார்.

வாழ்க்கைச் சிக்கலை இயற்கைப் பொருளோடு இணைத்துப் பார்க்கும் புதிய போக்கு இக்காலக் கவிஞரிடம் உள்ளது.

தமிழ் இலக்கியப் பரப்பில் நிலையான பாடுபொருளாய் விளங்குகின்ற ஆண் பெண் காதலுணர்வினைப் பிறபொருள்கள் மீதும் ஏற்றிப் பாடிப் புதுமை சேர்த்துள்ளனர்.

# 8

# தனிப் பாடல்கள்

காப்பியம், சிற்றிலக்கியம் முதலிய வடிவங்களில் அடங்காதனவும், ஒரே கவிஞரின் குறிப்பிட்ட ஒரு பாடுபொருளைக் கொண்டு அமைந்தனவும் ஆகிய கவிதைத் தொகுதிகள் இப்பகுதியில் விளக்கப்படுகின்றன. காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், பலர் பாடிய கவிதைத் தொகுப்புகள் முதலிய இயல்களில் ஆய்வு செய்யப் பெற்ற நூல்கள் நீங்கலாக ஏனையவை இவண் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றின் உள்ளடக்கத்தினைத் தலைவர்கள், கொள்கைகள், சமயம், தமிழ், நாடு, கலை, இலக்கியச் சிறப்புகள், காதல், இயற்கை, ஆறு, வரலாற்று நிகழ்ச்சி, அறிவுரைகள், பாராட்டுகள், வாழ்த்து எனப் பகுத்துக் காணலாம்.

## தலைவர்கள்

காந்தியடிகள், நேரு, காமராசர் ஆகிய தேசியத் தலைவர்களைப் பற்றியும், பெரியார் ஈ.வெ.ரா., அண்ணா, கலைஞர் ஆகிய திராவிட இயக்கத் தலைவர்களைப் பற்றியும் எழுந்த கவிதைகள் முதற்கண் எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

'காந்திக் கவிதை,' 'காந்திமகான் பெருமை,' காந்தி மொழிக்குறள்,' 'காந்தியுகம்' ஆகிய நான்கு நூல்களும் காந்தியடிகளின் பெருமையினைப் பேசுகின்றன. இவற்றுள் 'காந்தி மகான் பெருமை' இசைப் பாடலாக அமைந்தது. காந்தியக் கொள்கைகளை,

> "ஏழை எளியவர்பால் ஒன்றிப் பணிபுரிந்தால்
> சூழும் தனையறியும் சீர்"[1]

என்றாற்போல் குறள்யாப்பில் தரும் நூல், 'காந்திமொழிக் குறள்.'

---

1. த. கோவேந்தன், காந்தி மொழிக்குறள், ப. 108

காந்தியடிகளின் வரலாற்றினைக் கூறுவதோடு இன்றைய நாட்டு நடப்பியலுக்கு வருந்திக், காந்தியம் சீர்குலைவதனைக் காட்டும் நூல் 'காந்தியுகம்.'

பெ.வா. முனிரத்தினம் 'ஜவஹர்லால்நேரு' எனும் பெயரில் எழுதிய நூலும், 'ரோஜா இனிமேல்...?' (கண்ணதாசன் கவிதைகள் ஐந்தாவது தொகுதி) என்னும் தலைப்பில் கண்ணதாசன் பாடிய கவிதையும் நேரு பெருமானுடைய புகழ்பாடுபவை.

'ஆசிய தாரகை' எனப் பெயரிய நூல் காமராசர் புகழ்பாடுகின்றது.

'அண்ணா அறுபது' எனும் பெயரிலேயே தனித்தனியாக எழுந்த நான்கு நூல்களும், 'அண்ணா நாற்பது' 'காஞ்சித் திருமகன்' 'கல்லறை ரோஜா' 'யான் கண்ட அண்ணா' சந்தனப் பேழை' 'அமைதிக்கடல் அண்ணா' ஆகிய நூல்களும் அண்ணாவின் பெருமைகளைப் பேசுகின்றன.

**"அண்ணா; நாங்கள்**
**இருபதாம் நூற்றாண்டில்**
**இருக்கின்றோம் என்பதில்**
**எந்தச் சிறப்புமில்லை:**
**உன் காலத்தில்**
**இருந்தோம் என்பதே**
**எங்களுக்குச் சிறப்பு"[2]**

என்னும் பாட்டின் வாயிலாக, அண்ணாவினால் தமிழ்நாட்டு மக்கள் பெற்ற சிறப்பினைச் சுட்டுகின்றார் முருகசுந்தரம்.

'எதையும் தாங்கும் இதயம்' படைத்தவராக அண்ணா விளங்கினார் என்னும் உண்மையினை,

**"மாற்றாரை மதிக்கின்ற பண்பு தன்னை**
**மாநிலத்தில் நீரேதான் கடைப்பிடித்தீர்**
**தூற்றுகின்ற புல்லரையும் கடிந்து சொல்லத்**
**துளியேனும் கருதாத தூயர் நீரே!**
**'மாற்றானின் தோட்டத்து மலர்ந்த பூவும்**
**மணக்கு'மென மொழிந்திட்ட மேதை யும்மைப்**

2. முருகுசுந்தரம், சந்தனப்பேழை, ப. 62

போற்றாமல் தூற்றுகின்றோர் விரைவி லேயே
புழுப்பிடித்துத் துடிதுடிப்பர் மெய்யே அண்ணா"[3]

என்ற பாடல் வழி வெளிப்படுத்துகிறார் வெற்றியழகன்.

'கலைஞர் வாழ்க!' 'கலைஞர் வெண்பா' 'களம்கண்ட கலைஞர்' 'கலைஞர் ஐம்பது' ஆகிய நான்கு தலைப்பில் அமைந்த தனிப்பாடல்கள் கலைஞரைப்பற்றி அவர் முதலமைச்சராய் இருந்த காலத்துப் பாடப் பெற்றவையாகும். 'கலைஞர் வாழ்க' எனும் நூலில் இடம் பெறும்,

"மலரளிக்கும் செடிகொடிகள் வாடக் கண்டு
மனங்கசிந்து நீர்வார்க்கும் உழவன் போல
புலமைமிகு தமிழ்க்கவிஞர் வறுமையாலே
பொலிவிழத்தல் கண்டுமனம் புழுங்கி அன்னார்
வலமுறநல் லூதியங்கள் வழங்கிக் கல்வி
வளம்பெருக்கும் நூல்களுக்குப் பரிசு நல்கி
நலமுறச்செந் தமிழ்வளர்க்கும் நயமார் செல்வ!
நாற்றிசையும் புகழ்பெருக நாளும் வாழ்க!"[4]

எனுங் கவிதை அவர் செந்தமிழ்க்காற்றிய தொண்டினைப் புலப்படுத்துகிறது.

பெயர்ப் போராட்டம் நடைபெற்ற கல்லக்குடி, மொழிப்போராட்டத்தின் போது சிறையிலிருந்த பாளையங்கோட்டை முதலியவற்றைப் போர்க்களங்களாகக் கொண்டு 'களங்கண்ட கலைஞர்' என்ற தலைப்பில் பெ. எழிலன் பாடிய நூலில் மாநிலத் தன்னாட்சி வலியுறுத்தப் படுகிறது.

நெ.அ. பூபதி அண்ணாவையும் கலைஞரையும் இணைத்தும் காவிரி நீர்ச்சிக்கல், மாநிலத் தன்னாட்சி ஆகிய செய்திகளை உள்ளடக்கியும் பாடிய நூல் 'கலைஞர் அண்ணா.'

இ. தேவநேயச் சித்திரனின் 'கலைஞர் ஐம்பது' திணை, துறை நுட்பங்களோடு அமைந்து புறப்பாடல்களைக்கொண்ட நூலாகும்.

வள்ளுவர் வழியில் இலெனின், இணையும் திறத்தைக் காட்டும் நூல் 'வைகையும் வால்காவும்', முதல் பகுதியில்

3. வெற்றியழகன், அமைதிக்கடல் அண்ணா ப. 31
4. ச. பாலசுந்தரம், கலைஞர் வாழ்க, ப. 27

குறளையும், பிற்பகுதியில் இலெனின் வாழ்வுச் சிறப்புகளையும் இணைத்து வெண்பாவாக அமைத்துப் பாடியுள்ள நெறி இந்நூலின் தனிச் சிறப்பாகும்.

"பிரித்தலும் பேணிக் கொளலும், பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு — திராஃகியைத்
தள்ளித் திறமையரைச் சேர்த்துச் செருமனியை
உள்ளி உவந்தான் லெனின்"[5]

எனும் போது வைகையும் வால்காவும் இணையும் பாங்கினைக் காணுகிறோம்.

உருசியக் கவிஞனான மயாகோவ்ஸ்கி எழுதிய நூலை இரகுநாதன் 'லெனின் கவிதாஞ்சலி'யாகத் தமிழில் தந்துள்ளார்.

'பெருமானார் அருள்வேட்டல்' 'நாயக வெண்பா' 'நபியே எங்கள் நாயகமே,' 'நபிமொழி நாற்பது', 'மக்கத்துப்பூங்கா, 'சாந்திவயல்' ஆகிய ஆறு நூல்களும் நபிநாயகத்தின் பெருமைகளைக் கூறுகின்றன.

மு. அப்துல்மசீது நபிநாயகத்தின் ஈகவுள்ளம், செயற்கரும் செயல் ஆகியவற்றை உள்ளடக்கமாகக் கொண்டு 'தோத்திரப்' பாடல்வடிவில் இயற்றிய நூல் 'பெருமானார் அருள்வேட்டல். அவரே, நபிகள் நாயகத்தின் வரலாற்றில் முதல் மூன்று காண்டங்களை மட்டும் வெண்பாக்களால் தொகுத்து 'நாயக வெண்பா' வை நமக்களிக்கிறார். காப்பியப் போக்கில் நூல் அமைந்துள்ளது. கா.மு. செரீபு இயற்றிய, 'நபியே எங்கள் நாயகமே!' நூல் நபியின் சிறப்புகளைத் தொகுத்தளிக்கிறது.

"தான்பெற்ற பிள்ளைகளில்
ஆணுக்குப் பெண்ணைத்
தாழ்வாக எண்ணுவது
சரியல்ல சமமாய்
தான்மதிக்க வேண்டும்தரும்
கல்வியிலும் செல்வம்
தன்னிலுமே தக்கநிலை
அவர்பெறுதல் வேண்டும்"[6]

5. த. கோவேந்தன், வைகையும் வால்காவும், ப. 22
6. கா.மு. செரீபு, நபியே எங்கள் நாயகமே, ப. 75

என்பது பெண்ணுரிமை முழக்கமாக அமைகிறது. நாச்சிகுளத்தார் ஹஜ் (தவம்) கடமையை முடிக்க வேண்டும் எனும் விருப்பத்துடனும் மக்கத்தைக் காணும் வேட்கையுடனும் 'மக்கத்துப் பூங்கா' வை உருவாக்கித் தருகிறார். 'ஹமீது,' 'தௌஹீது' போன்ற அரபுச் சொற்களும் இடையிடையே கலந்து வருவது பொதுவானவர்கள் புரிந்து கொள்ள இயலாத இடரினைத் தந்தாலும் கவிஞர் தம்கவித்திறனை வெளிப்படுத்தியுள்ளார். 'சாந்தி வயல்' தொகுப்பில் இசுலாமியப் பெண்மணியாகிய இறைநகர் — மறைமணி என்னும் கவிஞர் நபியின் புகழைப் பாடுகிறார்.

## கொள்கைகள்

பொதுவுடைமைக் கொள்கையும், மதுவிலக்கு, குடும்பக்கட்டுப்பாடு போன்ற அரசுக் கொள்கைகளும் அறிஞர்களின் சிந்தனைகளும் இக்காலக் கவிஞர்களுக்குப் பாடு பொருளாகியுள்ளன. சிவப்புக் குயில்கள், 'நெருப்புப் பூக்கள்' 'புதியஓர் உலகம் செய்வோம், விடியுமா?' ஆகியன பொருளியல் ஏற்றத் தாழ்வுகளைப் போக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் எழுந்தவையாகும். 'குடும்பக்கட்டுப்பாடு' குடிக்குறள்' ஆகிய இரண்டும் முறையே குடும்பநலம், மதுவிலக்கு பற்றியன. 'பாடுகின்றேன்' 'ஒன்றே உலகம்' 'கடைதிறப்பு' 'கவிதைப் பாலம்' ஆகியன அறிஞர் தம் சிந்தனைகளின் வெளிப்பாடுகளாக அமைந்துள்ளன.

'சிவப்புக்குயில்கள்' சோவியத்து நாட்டுப் பெண்பாற் புலவர்கள் அறுபத்து எண்மரின் கவிதைகளின் மொழி பெயர்ப்பாகும். முற்போக்கிற்குத் தடைக்கற்களாய் இருக்கும் சாதி, மதம், கடவுள் ஆகியவற்றை வளர்க்கும் நிலைகளைப் 'புதிய ஓர் உலகம் செய்வோம்' சாடுகின்றது. ஆட்சியாளர்கள் முதலாளித்துவத்திற்குச் சார்பாளர்களாக இருத்தலைச் சுட்டுகின்ற நூல் 'விடியுமா?'

இசைப்பாடலாக அமைந்துள்ள 'குடும்பக்கட்டுப்பாடு' மக்கட் பெருக்கத்தினால் ஏற்படும் தீமைகளைச் சொல்லித் தீர்வுரைக்கின்றது.

> ......மக்கட் பேற்றின்
> தொடர்முறையை வரையறுத்துச் சுருக்கா விட்டால்
> மிக்கமருள் தரும்பெரிய உணவுப் பஞ்சம்
> மிகவிரைவில் நம்நாட்டை விழுங்கு மன்றே"[7]

7. பெரி. இலக்குமணச் செட்டியார், குடும்பக்கட்டுப்பாடு, ப. 4

என்று தெளிவாக எச்சரிக்கின்றது.

ஆய்வுப்போக்கில் அமைத்த 'குடிக்குறள்' கள் விற்போர்கள் குடிப்போர், அதனைக் காண்போர் ஆகிய முத்தரப்பினரையும் பற்றி 'விற்போர்பால்' என்றும் 'குடிப்போர்பால்' என்றும், காண்போர்பால்' என்றும் மூன்று அதிகாரங்களில் பேசுகின்றது.

"மாவுலகம் மயங்க மகிழ்ச்சியில் மிதக்க, குடிவகையைக் கண்டாய்ந்து கொடுத்த, விற்கின்ற வள்ளல் பெருமக்களுக்கும் எண்சாண்(ன்) உடம்பெடுத்து இவ்வுலக இன்பமெல்லாம் அனுபவித்தே தீருவோம் என்ற திண்மனம் கொண்டு குடித்து மகிழும், மயக்கக் களிப்பில் மிதக்கும் மாமேதைகளுக்கும்...[8] நூல் காணிக்கையாக்கப்படுகின்றது.

"நாடி வருவோர்க்குத் தேடிக் கொடுத்தேனும்
கூடிக் குடியெனக் கூறு"[9]

என்று விற்போர்பாலிலும்

"கள்சாரா யம்கஞ்சா விஸ்கிரம் ஜின்னாறு
கொள்கின்றான் ஏறுபோன் றான்"[10]

என்று குடிப்போர்பாலிலும்

"குடிப்போட்டு ஆடிடும் கூறுகெட்ட ஆட்டம்
அடிப்பற்றி பாராதே நன்று"[11]

என்று காண்போர் பாலிலும் வரும் செய்திகள் அங்கதச் சுவை தோன்ற அமைந்துள்ளன.

"ஊனுக்கும் உடைதனக்கும், மனைவி மக்கள்
உடனுறையும் வாழ்க்கைக்கும், உடலின் வேட்கை
பேணற்கும் பெரும்பொழுதை உழைப்பை ஈந்து
பிறவெல்லாம் மரத்துவிட்ட மக்கள் நாப்பண்
காணற்குத் திறமிழவா திருக்கும் கண்கள்
களிப்பெய்தப் பாடுகின்றேன்"[12]

8. எழில்மதி, காணிக்கை, குடிக்குறள்
9. மேலது, 91
10. மேலது, 351
11. மேலது, 791
12. ம.இலெ. தங்கப்பா, பாடுகின்றேன், ப. 11

*என்று தன் 'பாடுகின்றேன்' நூலில் கூறுகின்ற ம.இலெ. தங்கப்பா,*

"இன்பம் எனும்வெறி தன்னிடை மூழ்கி நெஞ்(சு)
இற்றழி யாதவ னாய்த் — தன(து)
என்பும் பொடிபட மாந்தர்க் குழைத்திடும்
ஏந்தலே நற்புலவன்"[13]

*என்பதன் மூலம் தமிழ்ப்புலவன் மொழி நலம் பேணுவோனாக இருத்தல் வேண்டும் என வலியுறுத்துகின்றார்.*

*இக்காலக் கவிதைகளுள் ஒரு புது முயற்சியாக விளங்குகின்ற, 'கடைதிறப்பு' தன்மீது சாட்டப்பெற்ற குற்றங்களுக்குச் சாக்ரடீசு அளித்தபதில், ஏமாற்றப்பட்ட சகுந்தலை துசியந்தன் முன் வெளிப்படுத்திய நெஞ்சக் குமுறல், தன் காதலியைக் கொலை செய்வதற்குமுன் ஒத்தெல்லோ நிகழ்த்திய தனிப்பேச்சு, இங்கர்சாலின் பெண்ணுரிமை முழக்கம் அண்ணாவின் பட்டமளிப்பு விழாப்பேச்சு ஆகிய செய்திகளை உள்ளடக்கமாகக் கொண்டது.*

"நூறுமுறை சாவதற்குத் தண்டித் தாலும்
நும்முள்ளம் எனையின்று மன்னித் தாலும்
வேறுதொழில் நான்செய்யப் போவ தில்லை.
வேங்கையைப்போய் வரிக்கோட்டை மாற்றிக் கொள்ளக்
கூறுகின்றீர் நடைபெறுமா ? உயிரின் மேலாம்
கொள்கையினை நான்துறக்க மாட்டேன்; பாயும்
ஆறுகளும் திசைமாறும்; ஆனால் இந்த
அறிஞனென்றும் திசைமாறப் போவ தில்லை"[14]

*என்ற சாக்ரடீசின் முழக்கமும்,*

முழுவயிறு காணாதார், உழைத்து ழைத்து
முதுகெலும்பு முறிந்தவர்கள், பிறர்உ ழைப்பை
விழுங்குபவர் கைகளிலே பகடைக் காயாய்
விழுந்தவர்கள், ஓடப்பர் ஆகியோர் மேல்
வழிகின்ற வியர்வையினால் அன்றோ, கல்வி
வளர்க்கின்ற கலைக்கழகம் எழுப்பி யுள்ளோம் ?

13. மேலது, ப. 29
14. முருகுசுந்தரம், கடைதிறப்பு, ப. 13

எழுந்துவரும் இளஞ்சிங்க அணிவ குப்பே!
இதையுணர்ந்து பொறுப்போடு நடந்து கொள்க"[15]

என்ற அண்ணாவின் உரையும் கவிதை வடிவத்தில் பொலிகின்றன.

பெரியார் ஈ.வெ.ரா., மு. வரதராசனார், கண்ணதாசன், ப. சீவானந்தம் முதலியோர்தம் சொற்பொழிவுகளைக் கவிதைகளாக்கியும் தன் கவிதைக்கடிதங்களையும், அறிஞர்களின் விடைகளையும் இணைத்தும், 'கவிதைப் பாலம்' எனும் தலைப்பில் தருகின்றார் மனசை ப. கீரன்.

**சமயம்**

'முருகப் பெருமான் யமகம்,' 'திருவுருவமாலைச் சிலேடை வெண்பா' 'செந்தில் முருகன் சிரிக்கின்றான்' 'முருகுமுப்பது', 'முத்தமிழ் முருகன்,' 'கானாஞ்சலி,' 'உதிர்ந்த முத்துக்கள்,' 'முருகன் முறைவேண்டல்,' 'பார்வதி பாலன்,' 'பாமாலை' 'ஆறுபத்து வீடுடைய அழகன்' ஆகிய தனிப்பாடல் தொகுதிகள் முருகன் பெருமை பேசுவன.

"பிழைப்புக்கு வழிதேடிக் கட்சி சேர்ந்தேன்
பின்செய்த கேடுகளைக் கண்டாய்; மாற்றார்
அழைப்புக்கும் எனைவிற்றேன்: மானம் விட்டேன்
அரசியலில் நாற்காலி யானேன் தேவா!"[16]

என, அரசியல் மாந்தன் முருகனிடம் முறையிடும் பாங்கில் சமுதாய சீர்திருத்தம் பேசுகின்றது 'செந்தில் முருகன் சிரிக்கின்றான்' எனும் நூல்.

'முருகன் முறைவேண்டல்' என்ற நூல் தமிழ் அருச்சனை அமைப்பினை உடையது என்பது குறிப்பிடத் தக்கது. இளங்கம்பன் 'கானாஞ்சலி'யில் கண்ணனையும் முருகனையும் இசைப்பாடல் வழி ஏத்துகின்றார்.

'இறைவன் இருபத்தைந்து' இயேசு பெருமானைப் பற்றியும் 'திருவடிமலர்கள்' மரியன்னை பற்றியும் பாடப்பெற்ற கிறித்துவ சமய நூல்களாகும்.

15. மேலது, ப. 49
16. அடியன் மணிவாசகன், செந்தில் முருகன் சிரிக்கின்றான். ப. 32

'இசுலாமியப் பண்பு,' 'மனவிளக்கு' ஆகிய இரண்டு தனிப்பாடல் தொகுதிகளும் இசுலாமிய சமயத்தின் நெறிமுறைகளை விளக்குவன.

கிறித்துவரான அமலன் 'முருகுமுப்பது' என்னும் நூலில் முருகனையும்', 'திருமுறை அறுபது' என்னும் நூலில் இசுலாமிய சமயத்தையும் பாடியிருத்தல் சமயப் பொறையுடைமையைக் காட்டுகின்றது.

## தமிழ்

'தமிழன்னை' 'தமிழ் என் உயிர்,' மணித்தாமரையார் தரும் 'முழக்கம்,' வா.மு. சேதுராமன் தரும் 'தமிழ்முழக்கம்' 'பசுந்தமிழ்ப்பண்பு,' 'தமிழினிமை,' 'தமிழியற் சிறப்பு' ஆகிய ஏழுநூல்களும் தமிழின் பெருமைகளைப் பரக்கப் பேசுவன. 'புரட்சித் தீ' 'விடுதலை முழக்கம்' ஆகிய இரு நூல்களிலும் இந்தி எதிர்ப்புணர்வு இழையோடிக் கிடக்கின்றது.

தமிழ்ப்பற்றுணர்த்தும்,

"தாய்மொழிக் குரிமையென் றாலதைச் சொன்னவர்க்
கரசினர் தண்டம் உண்டாம்;
தாய்மொழிப் புலமையில் வல்லநற் றமிழரைத்
தடியினால் தாக்கு கின்றார்
நோயெனப் பிறமொழிக் கேற்றமென் என்றிடில்
நோவையே ஊட்டுகின்றார்;
பேயெனும் மொழியுமிப் பெருமைகொள் நாட்டினில்
பொருத்தமோ தமிழன் னையே !"[17]

என்னும் பாடலும்,

"பழுது நடை போடுகின்ற
வடபுலத்தார் பாதையிவ்வா
றேதொ டர்ந் தால்;
எழுதிவைத்துக் கொள்ளட்டும் !
விந்தியமோ இமயத்தை
விலக்கிக் கொள்ளும் ! !"[18]

என்னும் பாடலும்,

17. வெற்றிச் செல்வன், தமிழன்னை, ப. 15
18. புலமைப்பித்தன், புரட்சித் தீ. ப. 56

"கொடுப்பதெலாம் கொடையாமோ ? தமிழைக் காக்கக்
கொடுக்கின்ற உயிரைப்போல் கொடையு முண்டோ ?"[19]

என்னும் பாடலும் உயர்ந்த உணர்ச்சியில் விளைந்தவை.

## நாடு

'போர்க்களத்தில் பாரதம்,' 'பாரத சுப்ர பாவம்' ஆகிய இரண்டும் இந்தியா பாக்கித்தானுடனும் சீனாவுடனும் நிகழ்த்திய போர்களைப் பின்னணியாகக் கொண்டு பாடப் பெற்றவை. இவற்றுள், இந்திய பாக்கித்தானப் போரில் முனியப்பன், பெருமாள், சிவப்பிரகாசம், பாஸ்கர்ராய் போன்ற பாரத வீரர்கள் ஆற்றிய வீரச் செயல்களைப் பாடும் நூல் 'போர்க்களத்தில் பாரதம்.' 'பாரத தேசபக்திப் பாடல்', 'குயில் நீ கூவாய்' ஆகிய இருநூல்களிலும் நாட்டு நலனுக்குகந்த வளர்ச்சித் திட்டங்கள் பேசப்படுகின்றன. 'நாடும் நடப்பும்,' '23 கவிதைகள்' ஆகிய நூல்கள் நாட்டின் அவல நிலையினைப் படம்பிடிக்கின்றன.

## கலை

கலையுலகத்தில் இயக்குநராக, உரையாடல் ஆசிரியராக, பாடலாசிரியராக, நடிகராக இன்னும் பல்வேறு தொழில் நுட்பக் கலைஞராக ஆற்றல் மிக்க பலர் ஈடுபட்டுள்ளனர். இந்நாளில் நாடக, திரையுலகக் கலைஞர்களும் பாடல் பெறுதல் இக்காலக் கவிதையுலகில் புதுப்போக்காகும். கலைஞர்கட்கான தகுதி அவர்தம் வாழ்க்கை ஒழுங்குபற்றி எண்ணப்படாமல், கலைநுட்பத்திறன் ஒன்று பற்றியே பேசப்படுதல் கருதத் தக்கது.

சக்கரைப் புலவர் 'தமிழகத்தின் கலைச் செல்வங்கள்' எனத் தரும் படைப்பில், அண்ணா, கலைஞர், எம்.சி. இராமச்சந்திரன், சிவாசி கணேசன் ஆகியோருடன் ஒளிப்பதிவாளர், திரையங்க உரிமையாளர்கள் ஆகியோரும் சிறப்பிக்கப்படுவதைக் காணலாம்.

"பாத்திரத்தைப் படைத்தவனே நடிப்பைக் கண்டு
பலநூறு முறைவியக்கும் வகையில் எல்லாப்
பாத்திரங்கள் தனக்குமுயிர் அளிக்கும் மன்னன் !"[20]

19. மணித்தாமரையார் தமிழ் முழக்கம், ப. 53
20. சக்கரைப் புலவர், தமிழகத்தின் கலைச் செல்வங்கள், ப. 21

*என்று சிவாசி கணேசனைப் பற்றிப்பாடுதல் பொருத்தமாக உள்ளது.*

*இதனை ஒட்டியே சுரதாவின் 'சுவரும் சுண்ணாம்பும்' எனும் நூலையும் ஆராயலாம். நடிகைகளின் வாக்குமூலத்தை வைத்துப் படைக்கப்பட்ட ஒன்பது கவிதைகள் அடங்கியது இந்நூல். நடிகை திருமண நாளன்றி நர்ணம் கொள்ளுதல், நடிகை மழையில் நனைதல் போன்ற நிகழ்ச்சிகளை நகையாடுகின்றார் சுரதா. 'இவர்கள் மூலம் கவிதைகள் விளம்பரம் பெறலாமே'[21] தவிர நிலைபேறு அடையமாட்டா.*

*'திரை இசைப் பாடல்கள்' எனும் தலைப்பில் கண்ணதாசன் கவிதைகள் இக்காலகட்டத்தில் இருதொகுதி களாக வெளிவந்துள்ளன. காதல், இயற்கை, தத்துவம், நாடு, பக்தி, நகைச்சுவை ஆகியன அவற்றின் உள்ளடக்கமாக விளங்குகினறன.*

> "நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்
> தெய்வம் ஏதுமில்லை !
> நடந்ததையே நினைத்திருந்தால்
> அமைதி என்றுமில்லை !"[22]

*என்றும்*

> புத்தியுள்ள மனிதனெல்லாம்
> வெற்றி காண்பதில்லை !
> வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
> புத்திசாலி இல்லை !"[23]

*என்றும்*

> "பிறக்கும் போதும் அழுகின்றாய்
> இறக்கும் போதும் அழுகின்றாய்
> ஒரு நாளேனும் கவலையில்லாமல்
> சிரிக்க மறந்தாய் மானிடனே !..."[24]

---

21. சுரதா, முன்னுரை, சுவரும் சுண்ணாம்பும், ப. 4
22. கண்ணதாசன், திரை இசைப் பாடல்கள், (இரண்டாவது தொகுதி) ப. 331
23. மேலது, ப. 323
24. மேலது, ப. 310

என்றும் வரும் பாடல்கள் உலகியல் தத்துவங்களை விளக்குவன.

இசையன்பனின் 'இசைத் தென்றல்,' திருச்சி பாரதனின் 'இசைத்தென்றல்,' 'செக்கர் வானம்,' 'சித்திரப்பந்தல்,' 'ஒருகைதியின் பாடல்கள்,' 'மேகமோகம்,' 'இசைமலர்,' 'இன்னிசைஅமுது,' 'இசையமுதம்,' 'இசையணங்கு,' 'இசை மாலை,' 'பாதமலர்கள்,' 'தமிழிசைப் பாமாலை,' 'இசைத்தமிழ்ப் பாமாலை,' 'தமிழிசை மஞ்சரி,' 'தமிழ்முடி கீர்த்தனைகள்,' 'கீதாஞ்சலி கீர்த்தனைகள்,' 'தெய்வீகக் கீர்த்தனைகள்,' ஆகியன இசைப்பாடல்களின் தொகுப்புகளாகும். இறையுணர்வு, நாட்டுப்பற்று, சமூகச்சிந்தனைகள் முதலியன அவற்றின் பாடுபொருளாக அமைந்துள்ளன.

"சேலொத்த கண்ணி மாலொத்த நிறத்தாள்
தோள்தொட்டு நிற்பான் அவன்பால் சென்று
பாலொத்த சொல்லால் பாகொத்த தமிழால்
சொல்முத்துத் தந்து வாய்முத்து வாங்கிவா"[25]

என இறையுணர்வும்,

"வந்தது வேலை வாளுக்கு
வாருங்கள் வீரரே போருக்கு
சிந்துக இரத்தம் நாட்டுக்கு
தீயரை அனுப்புவோம் காட்டுக்கு !"[26]

என நாட்டுப் பற்றும்,

"ஊரே நாணயங் கெட்டுக் கிடக்கையில்
நீதி எப்படிக் கிடைக்கும் ? — அது
கிடைக்க எப்படி முடியும் ?"[27]

எனச் சமூகச் சிந்தனைகளும், பாமரரும் பொருள்புரிந்துபாடும் வண்ணம் இவ்விசைப் பாடல்களில் அமைந்துள்ளன.

## இலக்கியச் சிறப்புகள்

'குறளதிகாரம்,' 'திருக்குறள் நூற்சிறப்பு' 'குறள் நெறி இசையமுது,' கண்மதியனின் 'குறளமுதம்,' மூ. முத்துக்

25. அ. சின்னண்ணன், தமிழிசை மஞ்சரி, ப. 64
26. சு. சண்முகம், செக்கர் வானம், ப. 10
27. பொன்னடியான், ஒரு கைதியின் பாடல்கள், ப. 56

கிருட்டிணனின் 'குறளமுதம்,' 'திருக்குறள் அமுதம்,' 'திருமறை,' 'ஒரு நூறு உவமைக்குறள்' ஆகிய எட்டும் குறள்கருத்துக்களை விளக்கியும், குறளைப் பாராட்டியும் அமைந்துள்ளன.

"சிற்றினம் சேராது அஞ்சிடும் பெருமை
சுற்றமாய்ச் சூழுமே சிறுமை
வற்றிடும் கேணியோ ஆமையைக் காவாது
வாய்மையின் பகைமை பூவாது"[28]

என்ற பாடலில் குறள்கருத்து விளக்கிப் பேசப்படுதலைக் காணுகின்றோம்.

'கண்ணகி வெண்பா' சிலப்பதிகாரத்தைக் கதைத் தொடர்புடன் உணரும் பொருட்டு காதைகளைப் பத்துப் பத்து வெண்பாக்களில் அடக்கிக்காட்டும் நூலாகும்.

அரு. சோமசுந்தரம், அரு. நாகப்பன் ஆகியோர் கவியரங்குகளில் பாடிய தம்கவிதைகளை முறையே 'கம்பன் கண்ட அறநெறி,' 'கவியரங்கில் கம்பன்' என்னும் தலைப்புகளில் நூலாகத் தந்துள்ளனர்.

"நீதிசொலும் மன்றங்கள்
நீண்டநாள் வழக்குகளும்
நீதிபதி நியமனங்கள்
தகராறும் அங்கில்லை;
மூத்தவர்கள் பதவிபெறும்
முறையான பண்புதனைக்
காத்தவன்தான் கம்பனெனும்
கண்ணியவான் மறவாதீர்!"[29]

என்னுமாப்போல், கம்பன் கருத்திற்கு இயைந்த இக்காலச் செய்திகளையும் சேர்த்துப் பாடியிருத்தல் குறிப்பிடத் தக்கது.

பாரதியார் வரலாற்றைப் 'பாரதிக்கும்மி' எனும் நூலாகத்தருகின்றார் ஆ. கிருட்டிணன். பாரதியார் கஞ்சா அபினிப் பழக்கத்துக்கு அடிமைப் பட்ட கரணியத்தினை

"வாட்டும் பசிக்கொரு மாற்றென எண்ணினான்;
வாணாளோ தேய்த லறிந்திலனே

28. ப. கண்ணன், குறள்நெறி இசையமுது, ப. 34
29. அரு. நாகப்பன், கவியரங்கில் கம்பன். ப. 44

தீட்டும் கவிதை கதைகள் குறைந்தன
செந்தமிழ் நாட்டுக்கு நட்டமன்றோ !"[30]

என ஆசிரியர் சுட்டுகின்றார். சகன், 'பாரதி கண்டசமுதாயம்' எனும் நூலினை இயற்றியுள்ளார். அதனுள்,

"முத்துதரும் கத்துகடல்
நத்துபுகழ் மன்னர்
முத்தமிழின் ஆட்சி, கலை
மெத்தநலம் காத்து
முத்தமிழ்நா டித்தரையில்
முக்கொடிகள் காத்து
சத்துதமிழ் ஆட்சியுல
கத்தனையும் காத்தார்"[31]

என்னும் கவிதை, அவருக்குத் திருப்புகழ்ச் சந்தத்தில் உள்ள ஈடுபாட்டினைக் காட்டுகிறது.

## காதல்

'காதல் களஞ்சியம்.' 'நெஞ்சம் மறக்கவில்லை' ஆகிய இரு நூல்களும் காதலைப் பாடுகின்றன. காதலுணர்வினை எல்லையிகந்து பாடிய கவிஞர் 'காதல் களஞ்சிய'த்தை 'வயது வந்தவர்களுக்கு' என்ற முத்திரையுடன் வெளியிட்டுள்ளார்.

## இயற்கை

இயற்கை பற்றி எழுந்த 'அழகின் அலைகள்,' 'அழகின் அழைப்பு' ஆகிய இரு நூல்களிலும் விலங்கு, பறவை, மரம், அருவி, நிலவு ஆகியனபற்றிய பாடல்கள் இடம்பெறுகின்றன.

## ஆறு

காவிரி பற்றிக் கற்பனை கலந்து செந்தமிழ்க்கிழார் பாடிய இலக்கியம் 'காவிரி.' காவிரி வெள்ளம், துயில் எழுந்த பெண், நீராடப் புகுந்து மகிழ்ந்தவர் நிலை, மகளிரும் காளையரும் நீராடும் காட்சி, கரைக்கு வந்து உடல் துவட்டுதல் ஆகிய செய்திகளைப் பாடியுள்ளார். மதிவாணன் பாடிய 'குளிர் காவிரி' எனும் நூல் சிவசமுத்திரம், ஒகேனக்கல் முதலிய அருவிகளின் அழகினை வருணிக்கின்றது. 'உகுநீர்க்கல்' என்ற

30. ஆ. கிருட்டிணன், பாரதிக் கும்மி, ப. 10
31. சகன், பாரதிகண்ட சமுதாயம், ப. 85

தமிழ்ச் சொல்லே கன்னட மொழிச் சாயல் பெற்று 'ஒகேனக்கல்' என்று மருவிற்று என்று குறிப்பிடுகின்றார். பாடல் முழுமைக்கும் பொழிப்புரை தந்திருத்தலும், தூய தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தி இருத்தலும் இந்நூலாசிரியர் சிறப்புகளாகும்.

## வரலாற்று நிகழ்ச்சி

*1968இல் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள் அனைத்தையும் 'பூம்புகாரின் புதுவரவு' எனும் பெயரில் தொகுத்து வழங்குகிறார் கயிலை அரசன். கடற்கரையில் நடந்த தொடக்க விழா, கடற்கரையில் வரிசையாக நிறுவப்பட்ட சிலைகளின் சிறப்பு, பூம்புகாராகக் காட்சியளித்த தீவுத் திடலில் நடைபெற்ற பலநாள் நிகழ்ச்சிகள், ஊர்வலத்தில் வந்த வண்டிகளின் காட்சிகள், கண்காட்சி, ஆய்வுக் கருத்தரங்கின் தொடர் நிகழ்ச்சிகள் ஆகியவை இதனுடன் இடம் பெறுகின்றன.*

## அறிவுரைகள்

*வி.எசு. வீரநாதக் கோனார், பெரி. இலக்குமணச் செட்டியார், நாஞ்சில் சா, நன்னியூர் நாவரசன், நாச்சிகுளத்தார், முத்து-ரெங்கராசன், ஆகியோர் இக்காலச் சூழலுக்கு ஏற்ற அறிவுரைகளைக் கவிதை வடிவில் தந்துள்ளனர் என்பதனை,*

**"கொள்ளைக ளடித்துக் காசைக் குவிக்கின்ற திருடர் தம்மை**
**நல்லவ ரென்றே இந்த நானிலம் புகழ்ந்து போற்றி**
**வள்ளலாய்ப் பட்டஞ் சூட்டி மகிழுவ தன்றி நல்ல**
**கல்லிலும் சிலைகள் செய்து கைதொழல் நன்றோ நெஞ்சே !"[32]**

*எனும் பாடல் உணர்த்தும்.*

## பாராட்டுகள்

*'நன்றிக்கடன்,' 'பூந்தமிழ்ப் பொழிலின் பொன்மலர்கள்,' 'பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலர்,' 'இருமணிகள்' ஆகிய நூல்கள் பல்வேறு வள்ளல்கள், கவிஞர்கள் முதலியோரைப் பாராட்டுமுகத்தான் எழுந்தவை.*

32. நாச்சிகுளத்தார், நெஞ்சில் நிறைந்த நினைவுகள், ப. 122

## வாழ்த்து

'இசை ஏழு,' 'என்றும் பதினாறு,' 'திருமண வாழ்த்து,' 'திருமணப்பரிசு,' 'மகபுகுவஞ்சி' ஆகியவை திருமணத் தொடர்பான வாழ்த்துகளை உடையவை. அவற்றுள் 'மகபுகுவஞ்சி' கட்டுக் கோப்பிலும், கருத்துச் செறிவிலும் தனிச்சிறப்புடையது. இந்நூல் அகவியற் பத்து, புறவியற் பத்து, பொதுவியற் பத்து எனும் முப்பிரிவுகளை உடையது.

> **"அயன்மனைபுகு அதிர்சிலம்படீஇ !**
> **பயன்சுவைமொழி, பணிவுறழ்நடை**
> **மீத்துயர் – பொறை பிழைமறப்பளி,**
> **காத்துயர் நிறை, கரைசேர் களி, கொளீஇ,**
> **ஒருநாள் ஒருநாள் உறுகொண் கனொடு**
> **திருநாள் காண்குவை தலைநாட் டகவே !"[33]**

என, அகவியற் பத்திலும்,

> **"நினக்கும் தனக்கும் நினர்க்கு மல்லதை**
> **இனர்க்கும் பிறர்க்கும் இனியளா குவையே !"[34]**

எனப் புறவியற் பத்திலும்,

> **"இனிதும் துய்தும் இசையும் பிறவும்**
> **நனிவந் தடைமே நாணாங் கடையே !"[35]**

எனப் பொதுவியற் பத்திலும் வரும் பாடற் பகுதிகள் வாழ்வியற் கருத்துக்களைச் சங்க இலக்கியப் போக்கில் உணர்த்துதலை அறிகின்றோம்.

## முடிபுகள்

கலைஞரைப் பற்றிய தனிப்பாடல்களில் 'கலைஞர் ஐம்பது' எனும் நூல் புறநானூற்றினைப் போலத், திணை, துறை ஆகிய பகுப்புகளைக் கொண்டு அமைந்துள்ளமை மரபு வழித் தாக்குரவினைப் புலப்படுத்துகின்றது.

'வைகையும் வால்காவும்' எனும் நூல் முன்னிரண்டு அடிகளில் திருக்குறளையும் பின்னிரண்டு அடிகளில்

33. துரை மாணிக்கம், மகபுகுவஞ்சி, ப. 13
34. மேலது, ப. 33
35. மேலது, ப. 53

இலெனின் கருத்துகளையும் கொண்டு இருகுறள் நேரிசை வெண்பா யாப்பில் பாடப்பட்டிருத்தல் குறிப்பிடத்தக்கது.

'குடிக்குறளின்' நூல் பகுப்பு விற்போர்பால், குடிப்போர் பால், காண்போர்பால் என்று அமைந்திருத்தலும், குறள் வடிவில் செய்திகளை அங்கதச் சுவைபடத் தருதலும் புதுப் போக்கினைக் காட்டுகின்றன.

பெரியார் ஈ.வெ.ரா. மு. வரதராசனார், ப. சீவானந்தம் முதலியோர் தம் சொற்பொழிவுகளை மனசை ப. கீரன் கவிதையாக்கி அளித்துள்ளதன் மூலம், செய்யுள் உரை வடிவம் பெறுதல் என்னும் மரபினின்றும் மாறுபட்டு உரைகள் செய்யுள் வடிவம் பெறுதல் என்னும் புதுநெறிக்கு வழி வகுத்துள்ளார். த. கோவேந்தன், முருகுசுந்தரம் ஆகிய இருவரும் இப்புதுநெறியினைப் போற்றியுள்ளனர்.

இக்காலத்தில் திரையுலகக் கலைஞர்களும் பாடல் பெற்றிருத்தல் அக்கலைஞர்களுக்கு மக்களிடையே இருக்கின்ற செல்வாக்கினைப் புலப்படுத்தும்.

இக்காலக் கவிஞர்கள் சிலர் சங்கச் செய்யுள் நடையிலும் கருத்தாழத்துடனும் கவிபாடும் திறம் பெற்றுள்ளனர் என்னும் உண்மையினைத் துரை-மாணிக்கம் பாடிய 'மகபுகுவஞ்சி' எனும் நூல்வழி தெளியலாம்.

# 9

# சமுதாய சீர்திருத்த உணர்வு

இக்காலக் கவிதைகளில் சமுதாய சீர்திருத்த உணர்வு பற்றி ஆராயுமுன் இஃது எதன் செல்வாக்கால் விளைந்தது என்பதனையும் இந்நோக்கம் தோன்றிய காலப் பின்னணி எதுவென்பதையும் காணல் தகும்.

மறுமலர்ச்சி இயக்கம் என்பது முன்னைய தீமையை அகற்றிப் பின்னைய புதுமையை ஏற்பது எனச் சுருங்கக் கூறலாம். தமிழகத்தில் சமயத்திலும் சமுதாயத்திலும் சீர்திருத்தக் கருத்துகளைப் பரப்பி அறிவுரைப் போக்கில் அவ்வப்போது பலர் மறுமலர்ச்சி காண முயன்றனர். எனினும் சமுதாய சீர்திருத்தம் ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர்தான் உண்மையான வடிவத்தைப் பெற முடிந்தது. பிரெஞ்சுப் புரட்சி, இங்கிலாந்தின் தொழிற் புரட்சி, அமெரிக்காவின் உள்நாட்டுப் போர் ஆகியன மேல்நாட்டு நாகரிகத்திலும் பண்பாட்டிலும் கலைத்துறையிலும் மறு மலர்ச்சியை ஏற்படுத்தின. அத்தகைய மறுமலர்ச்சியின் தாக்குரவு ஐரோப்பிய இலக்கியங்களிலும் ஏற்பட்டமையால் கவிஞர்களுடைய பாடுபொருளின் போக்கு புதிய திசையில் திரும்பியது. பொதுவாக ஐரோப்பியர் வருகையாலும், சிறப்பாக ஆங்கிலேயர் ஆட்சியாலும் ஏற்பட்ட ஆங்கிலக்கல்வி நம்மவர்க்குப் புதிய சிந்தனையைத் தோற்றுவித்தது. இச்சூழ் நிலையில்தான் இக்காலத் தமிழ்க்கவிதைகளில் சமுதாய சீர்திருத்த உணர்வு அடிக்கருத்தாக அமைந்தது எனலாம்.[1]

1885-இல் தோன்றிய காங்கிரசு இயக்கத்தின் நோக்கம் 1906 வரை விடுதலை கேட்பதாக இல்லாமல் வேலை வாய்ப்பில் இந்தியர்க்கு அதிகப் பங்கு வேண்டுவதாகவே இருந்தது. அப்படிக் கிடைத்த வேலை வாய்ப்பிலும் கல்வித்

1. "The Social reform movement was uniquely a result of English education" – Charles H. Heimsath, 'Indian Nationalism and Hindu social reform'. P. 47.

துறையிலும் பிராமணர் அதிகப் பங்கையும் பிராமணர் அல்லாதார் சிறுபங்கையும் பெற்று வந்தனர். அதனால் இந்தியா முழுவதும் சமுதாய ஏற்றத்தாழ்வு மிகுதியாயிற்று.

இந்தியாவுக்கு விடுதலை வேண்டும் எனும் அதே நேரத்தில் சமூக சீர்திருத்தமும் காணவேண்டும் எனப் பலர் முயன்றனர். காங்கிரசுக் கட்சி நடத்திய மாநாடுகளில் சமூக மாநாடுகளும் (Social Conferences) இடம் பெறத் தொடங்கின. இடையில் ஏற்பட்ட எதிர்ப்புகளால் அவை கைவிடப் பட்டதும் உண்டு.

அன்றைய நிலையில் சமூகத்தில் நிலவி வந்த கொடிய பழக்கவழக்கங்களை ஒழிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப் பட்டது. விடுதலை உணர்ச்சிக்கு முன்பே இத்தகு சிந்தனைகள் தோன்றிவிட்டன. இந்திய அளவில் இராசாராம் மோகன்ராய், அப்போது ஆட்சிப் பொறுப்பில் இருந்த பெண்டிங் பிரபுவின் துணையுடன் பெண்டிர் உடன்கட்டை ஏறும் பழக்கத்தை ஒழித்தார். 'ஏழைகட்கும், தாழ்த்தப்பட்ட மக்கட்கும், பிராமணர் அல்லாத அனைவர்க்கும் கல்வியும் நீதியும் சமத்துவமும் மறுக்கப்பட்டன. மறுக்கப்பட்ட உரிமைகள் மக்கட்குச் சேர இராசாராம் மோகன்ராய் உறுதி பூண்டார்.[2]

சாதி ஏற்றத்தாழ்வுகள் மறைந்து சமத்துவம் நிலவ வேண்டி 'பிரம்மசமாசம்' எனும் அமைப்பைத் தோற்றுவித்தார். ஈசுவரசந்திரவித்யாசாகர் போன்றவர்களால் விதவை மறுமணம் வலியுறுத்தப்பட்டது. 1856 ஆம் ஆண்டில் இதற்கான சட்டமே வரும் அளவுக்குச் சீர்திருத்த உணர்ச்சி மேலோங்கி நின்றது. சுவாமி தயானந்த சரசுவதி ஆரிய சமாசத்தினைத் தொடங்கி அதன் வாயிலாகச் சில சீர்திருத்த முயற்சிகளை மேற்கொண்டார். கேசவசந்திரசென் 'பிரார்த்தனை சமாசம்' தோற்றுவித்தார். சாதி ஏற்றத்தாழ்வின்றி அனைவரும் சேர்ந்துண்ணல் இவ்வமைப்பின் சிறப்பான கூறாகும். இந்நிலையில் கல்வி, அதிகாரம், செல்வாக்கு மிகவுடைய மகாதேவ கோவிந்த ரானடே 'விதவைத்திருமணக் கழகம்' (Widow Marriage Association) எனும் அமைப்பின் வாயிலாகக் கடுமையாகச் செயலாற்றி வந்தார்.

2. "Justice and education were denied to the poor including the non-Brahmins and the lower castes until the Bengal Renaissance brought an impressive change and an all round reformation which shook the entire country" – JamuaNag, 'Rajaram Mohan Roy', P. 141.

## தமிழ்நாட்டு நிலை

இந்தியாவின் பொதுவான சிந்தனையே தமிழ்நாட்டின் சிந்தனையாகவும் இருந்து வந்தது. இந்திய விடுதலைக்காகக் குரல் கொடுத்த திலகர் போக்கில் பற்றுக் கொண்டு வேகமான உணர்வோடு வ.உ.சி., பாரதியார், திரு. வி.க. போன்றவர்கள் குரல் கொடுத்தனர். ஈ.வெ.ரா. பெரியார், போன்றவர்கள் பெண்ணுரிமை பற்றிப் பெரிதும் முழங்கி வந்தனர். சமயத்திலும் பொதுமை காணவேண்டும் எனும் வேட்கையும், சமுதாயம் தன் இழிவு போக்கி முன்னேற வேண்டும் எனும் அவாவும் உடைய வள்ளலார் 'சமரச சுத்த சன்மார்க்க சங்கம்' கண்டார்.

மக்கள் அனைவரும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டுமெனும் உணர்வு எழுந்தது. அதனடிப்படையில் 1909இல் தீண்டாமை எதிர்ப்பு மாநாடும் நடத்தப் பெற்றது. கல்வித் துறையிலும் வேலை வாய்ப்பிலும் பிராமணர் அல்லாதாருக்கு உதவும் நோக்கில் பி.டி. தியாகராயர், டி.எம். நாயர், டாக்டர் நடேசன் போன்றவர்கள் 1916இல் தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தை நிறுவினர்.[3] இவ்வமைப்பே நாளடைவில் நீதிக்கட்சியாக நிமிர்ந்து நின்றது. சில ஆண்டுகள் தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வாய்ப்பையும் பெற்றது.

1925இல் சுயமரியாதை இயக்கம் மேலும் வலுப்பெறத் தொடங்கியது. சாதி, மதம், வகுப்பு ஆகியவைகளின் பேரால் ஏற்பட்டுள்ள முரண்களையும் சமூகத்துறையிலும் பொருளாதாரத் துறையிலும் இருந்து வரும் உயர்வு தாழ்வு களையும் அகற்றி மக்கள் யாவரும் ஒரே சமூகமாகவும் உடன் பிறப்பு உணர்வுடனும் வாழ வேண்டும் என்பதே இவ்வியக்கக் குறிக்கோள் ஆகும்.[4]

1938இல் இவ்வியக்கம் நீதிக்கட்சியுடன் இணைந்து பின்னர் 1944இல் திராவிடர் கழகமாகியது. அரசியல் பற்றிக் கவலைப்படாமல் முற்றிலும் சமுதாய சீர்திருத்த இயக்கமாகவே செயற்பட்டு வருகிறது.

இலக்கியங்கள் சமுதாய மறுமலர்ச்சியில் பெரும்பங்கு பெறுகின்றன. இயக்கங்கள் கூட இலக்கியங்களையும் மேடைப்

3. பி.எசு. இளங்கோ, சர்.பி. தியாகராயர் முதல் டாக்டர் கலைஞர் வரை பக். 37–38
4. வே. ஆனைமுத்து (தொ.ஆ) பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள் (முதல் தொகுதி) ப. 458

பேச்சுக்களையும் தங்கள் கருவிகளாகக் கொண்டிருந்தன. "20ஆம் நூற்றாண்டுத் தமிழக மறுமலர்ச்சி என்பது மிகப் பெரிய அளவில் திராவிட இயக்கத்தையே சார்ந்துள்ளது. மேடைகளில் பேசியும் ஏடுகளில் எழுதியும் மறுமலர்ச்சிப் பணி ஆற்றிய திராவிட இயக்கத் தலைவர்களுள் அண்ணாத்துரை யின் இடம் தலைமை சார்ந்தது."[5]

இவ்வகையில் இந்திய இலக்கியங்கள் சமுதாய மறு மலர்ச்சியில் ஆற்றிய பங்கினைக் காண்பது பொருத்தமாகும். வங்க இலக்கியம் சரத்சந்திரரின் புதினங்களாலும் தாகூரின் கவிதைகளாலும் ஈசுவர சந்திர குப்தாவின் பாடல்களாலும் மறுமலர்ச்சிக்கு வித்திட்டது. மராத்திய இலக்கியங்கள் காண்டேகரின் கதைகளாலும் கேசவசுதாவின் கவிதைகளாலும் மறுமலர்ச்சிச் சிந்தனைகளை எழுப்பின. வள்ளத்தோள், குமாரன் ஆசான், உள்ளூர் போன்றவர்கள் மலையாள இலக்கிய உலகில் மறுமலர்ச்சி உணர்வை வெகு வாக வளர்த்தனர். தெலுங்கு இலக்கிய உலகில் வீரேசலிங்கம் குறிப்பிடத்தக்கவர். அவர் புதினம், சிறுகதை, கவிதை ஆகிய அனைத்துத் துறையிலும் சமுதாய சீர்திருத்த உணர்வைத் தூண்டினார். சமூகப் போராட்டங்களைப் படம் பிடித்ததோடு நடப்பியல் பாங்கோடும் தம் படைப்புகளை உருவாக்கினார்.

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்த வரையில் பேராசிரியர் பெ. சுந்தரம்பிள்ளை தம் 'மனோன்மணீய' நாடகத்தை ஒரு மறுமலர்ச்சி நோக்கோடு வெளிக்கொணர்ந்தார் எனலாம். பழையன புதுப்பித்தல், புதியன படைத்தல் எனும் நோக்கோடு ஒரு பெண் தான் விரும்பாத ஒருவரை மணக்க வற்புறுத்தலா காது எனும் கருத்தும் வலியுறுத்தப்பட்டது. வ.ரா. போன்ற வர்கள் விதவை மறுமணத்தை வலியுறுத்தி வந்தனர். புதுமைப் பித்தன் தம் சிறுகதைகளில் மறுமலர்ச்சிக் கருத்துகளை வெளிப் படுத்தினார்.

திராவிட இயக்கத்தவர் சமூக மறுமலர்ச்சியில் பெரிதும் பங்கு பற்றி உழைத்தனர். அண்ணா காலத்தில் அதே உணர்வுடைய பாரதிதாசன் தம் கவிதைகளில் சமுதாய சீர் திருத்தத்தையே பெரிதும் வலியுறுத்தினார் என்பதனை உணரலாம். பாரதியாரின் சார்பும் திராவிட இயக்க

5. இரா. சேது. 20ஆம் நூற்றாண்டுச் சமுதாய மறுமலர்ச்சிக்கு அண்ணாத்துரையின் சிறுகதை, புதினங்களின் கொடை, சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு பி.எச்.டி. பட்டத்திற்கு வழங்கப்பட்ட ஆய்வேடு, ப. 17

அடித்தளமும் பாரதிதாசனை, மூடநம்பிக்கைகளைச் சாடும் சீர்திருத்தக் கவிஞராக உருவாக்கின. மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்தால், மக்கள் விழிப்புணர்ச்சி எய்தித் தம் வறுமைப் பிணியிலிருந்தும் விடுபடுவர் எனும் கருத்து எழுந்தது.

ஈ.வெ.ரா. பெரியார் தம் இயக்கக் கோட்பாட்டை விளக்கும் போதும் இவ்வுண்மையை வெளிப்படுத்துகிறார். "மக்களைப் பிடித்துள்ள மூட நம்பிக்கைகளும் சமுதாயக் கொடுமைகளுமே அவர்களை வறுமையிலும் அறியாமையிலும் ஆழ்த்திவிட்டன"[6] என்கிறார்.

இந்த உணர்வுடன் இலக்கியத் துறைக்கு வந்தவர்கள் இக்கால இலக்கிய வகைகள் அனைத்திலும் சமூக சீர்திருத்த உணர்வு மேலோங்கச் செய்தனர். எந்தப் படைப்பாளியும் சமூகத்திலிருந்து விலகிப் போகவிரும்பவில்லை. இந்நிலையில் சமூகத் தேவைகளின் விளைவுகளாகவே இலக்கியங்கள் தோன்றின.

தமிழ்ச் சமூகப் புதினங்களின் வரலாற்றைக்கூறும் தா.வே. வீராசாமி "அரசியல் அலைகள் வெட்டித் தெறிக்கும் போது அவை பற்றிய இலக்கியங்கள் எழுவதற்கு இடம் ஏற்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட குறிக்கோள்களைக் கொண்டமைவது அவற்றின் கடமையாகவும் மாறுகிறது"[7] என்று குறிப்பிடுகிறார்.

கவிதை உலகை நோக்குமுன் அக்கால கட்டத்தில் வெளியான புதினங்களின் சமூகப் பார்வையை ஒப்பிட்டு நோக்கலாம். "சீர்திருத்த இயக்கத்தில் தோன்றிய நாவல்களின் போக்கு பொருந்தா மணத்தைச் சாய்க்கவும், பெண்ணிற் கிழைக்கும் கொடுமையைக் கண்டு அவள்மீது பரிவு கொள்ளவும், பெண்கள் சாதிக் கட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற, கலப்பு மணம் செய்யவும் தூண்டுகிறது. அத்துடன் பகுத்தறிவைப் பரப்பும் இயக்கம் வலுப்பெற வேண்டும் என்னும் சமூகசீர்திருத்த இயக்கப் போக்கே உயர் மட்டத்தில் தெரிகிறது."[8]

6. "We have always maintained that the blind superstitions and the social evils which hold the names in their grip have kept them in poverty and ignorance." – N.K. Mangla Murugesan, 'Self respect movement in Tamilnadu,' 1920 – 1940, P. 202.

7. தா.வே. வீராசாமி, தமிழில் சமூக நாவல்கள், ப. 18

8. மேலது, ப. 57

புதினங்களின் இத்தகைய சீர்திருத்த நோக்கம் பரவலாகி நிற்கின்ற காலகட்டத்தில் தமிழ்க் கவிதைகளின் போக்குப் பற்றிச் சிந்தித்தாலே உண்மை தெளிவாகும். பாரதிதாசன் ஒரு சீர்திருத்தக் கவிஞராக இருந்ததோடு அவரை ஒட்டிப் பாரதிதாசன் வழிமுறை ஒன்றும் உருவாகியது. ஆய்வுக்கால எல்லைக்கு முன்பும், எல்லைக்குள்ளும் வரும் கவிஞர்களில் மிகப் பெரும்பான்மையோர் சமுதாய சீர்திருத்த உணர்வு கொண்டவராகவே உள்ளனர்.

கி.மு. 500 முதல் கி.பி. 200 வரை சங்க இலக்கிய காலம் என்றும் கி.பி. 100 முதல் கி.பி. 500 வரையில் நீதி இலக்கியம், முற்காப்பிய காலம் என்றும் கருதலாம். கி.பி. 600—900க்குள் ளான காலத்தைப் பக்தி இலக்கிய காலமாகக் கொள்ளலாம். அதன்பின் பிற்காப்பியகாலமும் சிற்றிலக்கிய காலமும் வருகின்றன. கி.பி. 1500க்குப் பின் புராண இலக்கியங்கள் தோன்றின.[9] கி.பி. 1891க்குப் பின் மறுமலர்ச்சி இலக்கியங்கள் தோன்றின. இக்கால இலக்கியம் (Modern Literature) எனப்படும் புதினம், கவிதை, நாடகம், சிறுகதை, உரைநடை, ஆகியவற்றின் பெருகிய வளர்ச்சியே இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வெற்றி எனலாம். இந்த இலக்கியங்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு எழுந்தவை என்பதனை மனிதவாழ்வினை நேரடியாகப் பார்த்து அதனின்று இலக்கியத்தை மலர்விக்கும் போக்கு மேலோங்க நிற்பன என்பதனையும் உணர்தல் தகும். இக்கருத்தினை மு.வ. வும் உடன்படுகிறார்.[10] "சமுதாயத்தின் அல்லது சமுதாய உழைப்பினராகிய மனிதனின் போராட்டமும் இன்ப துன்பமுமே அவர்களின் எழுத்துக்கு உரிய பொருளாக ஓங்கி நிற்கின்றன"[11] என்று மேலும் அவர் வற்புறுத்துகிறார்.

சமுதாயத்தைச் சீர்திருத்த முனையுமுன் சமுதாயம் எப்படி அமைந்திருக்கிறது என்பதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டும். நோயாளியை மட்டும் அறிமுகம் செய்து கொள்ளு வதோடு நிறுத்தாது, நோய் எதுவென்று துல்லியமாகத் தெரிந்து கொள்ளுதலே சீர்திருத்திகளின் கடமை. கவிஞர்கள் நேரடியாகச் சீர்திருத்த முனைபவர்கள் என்று சொல்லிவிட

9. இராம. பெரியகருப்பன், புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு. ப. 183
10. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு ப. 314
11. மேலது.

முடியாது. தங்கள் கருத்தைச் சொல்ல வேண்டும், மனப் புழுக்கத்தை வெளியிட வேண்டும் எனும் துடிப்பே பெரிதும் முன்னிற்கிறது. அத்துடிப்பு கவிதை வடிவாகி வெளி வந்ததும் கவிஞர்களைக் கண்டுபிடிக்க முடியாமலும் போய்விடும். எனவே கவிதைகள் (1) கற்பனையாகப் பாடுதல் (2) செயல் துடிப்போடு அமைபவை என இருவகைப்படும். இந்த இரு போக்குகளையுமே நம் கவிதைகளில் காணலாம்.

## நாட்டுநிலை

"இந்தியா ஒரு நாடு !—நித்தம்
வேலை நிறுத்தம் வீட்டுக்கு வீடு !
திருப்பதி உண்டியல் நிறைந்ததில் திருப்தி !
திரும்பிய பக்கமெலாம் வாழ்வில் அதிருப்தி !
'ஐயப்பா !' என்ற பக்தர்கள் முழக்கம் !
'ஐயோ ! அப்பா !' என்ற பசித்தவர் கலக்கம் !"[12]

எனக் குருவிக்கரம்பை சண்முகமும்,

"மிகப்பெரிய தேசந்தான் நமது தேசம்,
வீரத்தின் விளைநிலந்தான் எனினும் சாதித்
தொகைக்கணக்கால், சோம்பேறித் தனத்தால், நீண்ட
தூக்கத்தால், பொறாமையினால், தொன்று தொட்டுப்
பகைப்பெருமை பேசியதால், அண்ணன் தம்பி
படையெடுப்பால், சிற்றின்ப வெறியால், நன்கு
வகுத்தமுறை வழுவியதால் வீழ்ச்சி யுற்றோம்"[13]

எனச் சுரதாவும் நாட்டின் நிலையினைத் தெளிவாகக் காட்டுகின்றனர். இத்தகைய நாட்டினைச் சீர்திருத்துவதற்குக் கவிதைகளைப் படைக்கலன்களாகக் கொண்டு முயல வேண்டும் எனும் முனைப்பு உள்ளது. அப்படைக் கலன்கள் சமுதாய நச்சு மரங்களை வெட்டி எறியவும் கொடிய மனித விலங்குகளைக் கூண்டோடு ஒழிக்கவும் பயன்படுகின்றன."[14] தக்க படைக்கலனைக் கையில் எடுத்துக் கொண்டு,

"செத்துக் கொண் டேவரும்
இத்தமிழ் நாட்டினைத்

12. குருவிக்கரம்பை சண்முகம் கவிதைகள், ப. 41
13. சுரதா, துறைமுகம், ப. 133
14. இரா. வடிவேலன், முன்னுரை, தமிழ்க்குமரன், தமிழருவி

தேற்றுவ தெப்படியோ ?—இதில்
சேர்ந்துகொண் டேவரும்
மாபெரும் நோய்களை
நீக்குவ தெப்படியோ ?"[15]

என்று கவிஞர் கேட்கிறார்.

"நான் எதையாவது பாடிவைப்பேன்; அதை நீங்கள் செயற்படுத்த வேண்டும்' என்று தூர விலகி நின்று சொன்னவர்கள் நம் பழைய கவிஞர்கள். பாரதி, பாரதிதாசன் போன்ற ஒரு சிலர் மட்டுமே இந்த விதிக்கு விலக்காக இருந்தார்கள். இன்றைய கவிஞன் சமுதாயத்தை விட்டு விலகி நிற்கவில்லை"[16] என்கிறார் சாலை. இளந்திரையன்.

"சமுதாயத்தில் பாதிக்கப்பட்டோர் பக்கமெல்லாம் தமிழ்க் கவிதை பாய்ந்தோடி அவர்தம் உணர்வலைகளை உலகோர்க்கு உணர்த்தும் ஆற்றல் பெற்று நிற்றலைப் பரக்கப் பார்க்க முடிகிறது"[17] என்பார் கருத்தும் இவண் நினையத் தகும்.

சீர்திருத்த வரும் கவிஞனின் கவிதைகளுக்குள் சமுதாயச் சிந்தனை கட்டாயம் இருந்தாக வேண்டும் எனும் உணர்வு எல்லாரிடத்தும் காணப்படுகிறது. எப்படியும் சீர்திருத்தியே ஆகவேண்டும் எனும் துடிப்புடன் அனைவரும் முரசு கொட்டு கின்றனர். நம்பிக்கை கொண்டு (Optimism) இந்த முயற்சியில் இறங்குபவர்களும் இருக்கிறார்கள். நாடு சீர்திருந்தும் என்ற நம்பிக்கை சிறிதுமின்றிச், 'சொல்ல வேண்டியது என் கடமை' என்ற அளவோடு நிற்பவர்களும் உண்டு. "இந்த நூல் உலகைச் சீர்திருத்தப் போவதாக நான் எண்ணவில்லை. வள்ளுவனும், வள்ளலாரும், பாரதியும், பாவேந்தனும் பிறந்தே திருந்தாத இந்தக் குமுகாயத்தை என் பாடல்களா திருத்திவிடப் போகின்றன! அந்த நம்பிக்கையெல்லாம் எனக்கில்லை! ஏதோ என் நெஞ்சக் குமுறல்களை இந்தப் பாடல்களின் மூலம் கொஞ்சம் கொட்டித் தீர்த்திருக்கின்றேன் அவ்வளவுதான்"...[18] என்கிறார், சுப. வீரபாண்டியன்.

15. சாலை இளந்திரையன். பூத்தது மானுடம், ப. 41
16. மேலது. முன்னுரை ப. 6
17. பி. யோகீசுவரன், அறுபதாண்டுத் தமிழ்க்கவிதை (1920–1980) கழகமணி விழா மலர். ப. 73
18. செம்பை சேவியர் சுப. வீரபாண்டியன், என்னுரை, புதுத்தென்றல், ப. 10

முதல் நூலை வெளியிடுகின்ற ஓர் இளங்கவிஞர்க்கு எடுத்த எடுப்பிலேயே இவ்வளவு மனச்சோர்வு ஏற்படக் கரணியம், நாடு அந்த அளவுக்குக் கெட்டுப்போயிருக்கிறது என்பதுதான்.

## போலிகள்

சீர்திருத்தம் மேற்கொள்ளுகிறோம் என்றும், ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கப் போகிறோம் என்றும், முன்னின்று முயற்சி எடுக்கும் பெருமக்களிடத்தும், சொல்லுக்கும் செயலுக்கும் தொடர்பில்லாத பெரியவர்களிடத்தும் காணப்படுகின்ற போலி நிலைதான் உண்மையானவர்களின் உள்ளத்தைப் புண்படுத்துகிறது. சமுதாயப் போலி நிலையைச் சுட்டுவதற்கு முன் சமுதாய சீர்திருத்தம் பேசுபவர்களே போலியாக இருக்கிறார்கள் என்பதனை உணர்த்துகிறார் கலைக்கூத்தன்.

"சமுதாய சீர்திருத்தம் பேசு வோர்கள்
சலிக்காமல் ஊரூராய் மலிந்து போனார்
சமுதாய சீர்திருத்தம் பேசு வோர்கள்
தான் திருந்தித் தானுணர்ந்து நடந்தி டாமல்..."[19]

இருப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

"பணமென்ற திரைக்குள்ளே கிடப்பார்—நாளும்
பழியென்ற சாலையிலே நடப்பார்
மணம்தந்த சோலையினை எரிப்பார்—நெடு
வையத்தை இருளாக்கிச் சிரிப்பார்
அறிவுக்கு விலங்கிட்டுத் தடுப்பார்—தூய
அன்பிற்கு நஞ்சிட்டுக் கெடுப்பார்
வறுமைக்கு வித்தாகி நிற்பார்—எங்கும்
மானத்தைவிலை கூறி விற்பார்[20]

என, இப்படியொரு போலி உலகத்தைக் கோ. மோகனரங்கன் நமக்குக் காட்டும்போதே நாம் சமுதாயத்தை அடையாளம் கண்டு கொள்ள முடிகிறது.

"எண்ணி எண்ணிப் பார்த்தேன்
எழுதுகிறேன் இப்பாட்டை

19.. கலைக்கூத்தன் கவிதைகள், ப. 123
20. கோ. மோகனரங்கன், சித்திரப்பந்தல் ப. 51

இன்றும் பொறுப்பதற்கு
என் மனமும் கல்லல்ல
நல்லமனம் உள்ளவர்கள்
நலிகின்றார் நாணுகிறார்
நயவஞ்சப் பிண்டங்கள்
நன்றாய்க் கொழுக்கின்றார்"[21]

என்று எசு.டி. சுந்தரம் சமுதாய இழிநிலை கண்டு வேதனையோடு புழுங்குகிறார். நல்ல உள்ளம் இப்படித்தான் வேதனைப்படும். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட கவிஞர் விடுதலைக்குப்பின் சமுதாயம் சீரழிவதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. 'நன்றறிவார் அனைவருமே நெஞ்சத்து அவலம் உடையவர்' (குறள் 1072) என்ற குறட்கருத்து இங்கு இழையாடுவதைக் காணலாம்.

இவை போன்ற போலிப் போக்குகள்தாம் இன்று சல்லடைக் கண்களாக எல்லாவற்றையும் அரித்துக் கொண்டிருக்கின்றன. இதனைத்தான் கவிஞர் உலகம் வன்மையாகக் கடிந்துரைக்கின்றது.

நாட்டாட்சியிலே ஊழல்கள் மலிந்து விட்டதால்தான் சமுதாயம் புரையோடிப் போய்க் கிடக்கிறது. ஏழையென்றும் அடிமையென்றும் எவருமில்லை என்ற நிலையை உருவாக்கத் தான் ஐந்தாண்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் அவற்றின் விளைவினைப் பற்றி,

"திட்டங்களின் பலன் ஏழைகளைப் போய்ச் சேரவில்லை; இத்தனை திட்டங்களுக்குப்பின் ஏழை மேலும் ஏழையாகி விட்டான்; பணக்காரன், மேலும் பணக்காரனாகி விட்டான்"[22] என்று அரசியல் தலைவர் காமராசர் ஒருமுறை குறிப்பிட்டார்.

"வரங்களே சாபங்கள்
ஆனால்
இங்கே
தவங்கள் எதற்காக ?"[23]

21. எசு. டி. சுந்தரம் கவியின் குரல். ப. 100
22. நேரில் கேட்டது
23. அப்துல் ரகுமான், பால்வீதி

என்று 'திட்டங்கள்' எனும் தலைப்பிலேயே இப்படிக் கூறுகிறார் அப்துல் ரகுமான்,

மதுவால் இந்தச் சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் சீர்கேடு ஒருபுறம்; அரசியல் வாதிகளும், வணிகர்களும் மேற்கொள்ளும் இரட்டைநிலை மறுபுறம். இதனைக் காணும் நா. காமராசன்

"மாளிகைக்குப் "பெர்மிட்டு"
சேரிக்கு மட்டும் கைவிலங்கு !"[24]

என்று கொதிப்படைகிறார்.

'தாழ்வுற்று வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்றதாமோர் பாரத தேசம் தன்னை வாழ்விக்க வந்த' காந்தியாரையே இப்போது நாம்,

"அரசியலில் நாடகங்கள் ஆடுகின்ற பொதுமேடை"[25]

யாக ஆக்கியுள்ளோம் என்கிறார் இரா. வைரமுத்து.

இந்தப் போலி நிலைகளுக்கு அரசியல்வாதிகள், வணிகர் கள், அதிகாரிகள், மக்கள் ஆகிய நான்கு தரப்பினரும் தான் பெரும் காரணமாகின்றனர்.

## அரசியல்வாதிகள்

"தான் தேய்ந்து மணமளிக்கும் சந்தனம்போல்
தனையழித்துப் பயனளிக்கும் வித்தினைப்போல்
தான் என்னும் நிலைமறந்து பொதுப்ப ணிக்குத்
தனைஈவோர் தக்கவர்கள்; பொன்னுக் காக
வானார்ந்த புகழுக்காய் போகத் திற்காய்
மற்றாங்கே வீட்டின்பம் பெறுவ தற்காய்த்
தேனார்ந்த பொதுப்பணியில் இறங்கு வோர்கள்
தீயவர்கள் ! வஞ்சகர்கள் ! கொடும னத்தார் !"[26]

என்று அரசியல்வாதிகள் எப்படி இருக்கவேண்டும் என்பத னையும் இன்று எப்படி இருக்கிறார்கள் என்பதனையும் சாமி. பழனியப்பன் தெளிவுபடுத்துகிறார்.

24. நா. காமராசன், கறுப்பு மலர்கள், ப. 39
25. இரா. வைரமுத்து, வைகறை மேகங்கள், ப. 76
26. சாமிபழனியப்பன், மலர்கள், ப. 80

"சீமான்கள் மதக்கொடுமை அன்று தொல்லை
சீர்கெட்ட அரசியலால் இன்று தொல்லை
ஏமாறும் தொண்டரினம் இவர்கள் என்றால்
ஏமாற்றும் தலைவரின்மேல் என்ன குற்றம்?
... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...
கொடிமட்டும் வான்முட்டப் பறந்திருக்க,
கொள்கையினைத் தலைவரெல்லாம் மறந்திருக்க
அடிதடியே அரசியலாய் மாறிப் போக,
ஆங்காங்கே சிலதொண்டர் அலறிச் சாக,
வெடியாத எரிமலையாய் மக்கள் வாழ
வியாபார மாயதனைச் சிலரோ ஆள
முடிவெங்கே இதற்கென்றே புரிய வில்லை
முட்டாள்தான் நாமெல்லாம் ஐய மில்லை!"[27]

*என அரசியல்வாதியின் ஆட்டத்திற்குப் பலியாகும் நாம்தான் முட்டாள்கள் என்று சுப. வீரபாண்டியன் சுட்டிக்காட்டுகிறார். அவர்கள் அப்படியே நடப்பதைக் கண்டு குமுறுகிறார் மு. உலக நாதன்.*

"ஓ! ஓ! ஓ! தலைவர்களே! ஏனிந்தக் கூச்சல்?
உருப்படியாய் இதுவரையில் நீரென்ன செய்தீர்?
தேரோடும் வீதிகளில் செத்து விழும் பிணங்கள்!
தெருவுக்குத் தெருவிங்கே குத்துவெட்டுக்
கொலைகள்
நீரோடும் காவிரிபோல் நிலமெல்லாம் செம்மை!
நிலைகொள்ளாப் பிணவாடை! இரத்தவெறி!
குமுறல்!
பேரோடு புகழோடு நீரிங்கே பவனி!
பிள்ளைக்குப் பாலில்லா நிலையுளதே அவனி!
ஏமாற்றுக் காரர்களே! எத்தனைநாள் ஆட்டம்?
எலிகூடப் புலியாகும் நாள்வரலாம்! கவனம்!"[28]

"உங்க ளுக்குத் தானிங்கே உழைக்கின்றேன் என்றே
ஊரெல்லாம் கூப்பாடு! சொற்பொழிவு! விளக்கம்!
இங்குசில பைத்தியங்கள் உம்மையெல்லாம் தங்கள்
இணையற்ற தலைவரெனத் துதிபாடும் நிலைமை!

27. செ.சே. சுப.வீ. மு.நூ. ப. 25
28. மு. உலகநாதன், அமுதக்கலயம், ப. 163

எங்களுக்குக் கட்சியிலை! தலைவரிலை! எதற்கு ?
இடிந்துவிட்ட கோயிலுக்குக் கலசம்ஏன்! தேவை ?"[29]

*அரசியல்வாதிகள் ஆடும் வரை ஆடிவிட்டு ஐந்தாண்டுக் கொரு முறை தேர்தல் நேரத்தில் மக்களை நாடிவரும் போது 'ஓ! கவுன்சிலரே!' என அழைத்து வெ. நடராசன் வரவேற்புரை நல்குகின்றார்.*

"என்னய்யா வேட்பாளரே் ஏதேது ரொம்ப நாளாய்
கண்ணெதிரே காணவில்லை; காடுமலை சென்றீரோ ?"[30]

*என்று தொடங்கி*

"நரிஉருவில் நடமாடி நல்லவன்போல் வருகின்ற
திருவாளர் கவுன்சிலரே திரும்பிப்போய் விடுவீர் !"[31]

*என்று விரட்டுகிறார்.*

*அரசியல்வாதிகளின் போக்கால்தான் சமுதாயத்தில் கையூட்டுப் பெருகி நிற்கிறது. 'லஞ்ச பூதம்' என்ற கவிதையில்,*

"அந்தநாள் கர்ணன்போல்
மக்களெல்லாம்
அக்ங்கையும் சிவக்கின்றார்
லஞ்ச மீந்தே !"[32]

*என்கிறார் செல்வகணபதி.*

*தேர்தல் நாளுக்கு முதல் நாளிரவில் வாக்காளர்களுக்குத் தரப்படும் பணத்தினை 'வேசிமகளாக'வே கருதி*

"சீரான புதுநோட்டாம்
சிறுபல்வரி சைகாட்டி
கூர்வேல் விழியாலே
கொத்திடுவாள் வாக்குகளை
ஊர்கெடுக்கும் பேய்மகளை !
ஊர்விட்டே ஓட்டுங்கள்"[33]

*என்கிறார் வெ. நடராசன்.*

29. மேலது, ப. 165
30. வெ. நடராஜன் புதியராகங்கள், ப. 81
31. மேலது, ப, 82
32. செல்வகணபதி, கவிதைகள், ப. 35
33. வெ. நடராசன், மு.நூ. ப. 40

தேர்தல் நேரத்தில் அரசியல்வாதிகள்,

"துட்டுத் தருவார் சத்தியம் பெறுவார்
சாதி உணர்ச்சியைத் தூண்டி விடுவார்"[34]

என்ற உண்மையை உரைக்கிறார் ப. சிவராம கிருட்டிணன்.

## அதிகாரிகள்

அரசியல்வாதிகளுக்குச் சில்லரை சேர வேண்டு மென்றால் அதிகாரிகள் ஒத்துழைக்க வேண்டும். பொதுத் தொண்டர் தட்டிக் கேட்பார். தவறு கண்டால் தண்டனை கிடைக்க வழி செய்வார் எனும் அச்சம் இருந்திருந்தால் அதிகாரிகள் ஊழல் புரிய வாய்ப்பிராது. ஆனால் நம் அரசியல்வாதிகளுக்குப் பண ஏற்பாடு செய்து கொடுக்கும் அதிகாரிகள் தங்கள் பங்குக்கு இந்தச் சமுதாயத்தைச் சுரண்ட முற்படுகின்றனர். கையூட்டு இந்த இடத்தில்தான் தொடங்கு கிறது. அதிகாரிகள் செய்யும் தவறுகளை என்.ஏ. வேலாயுதம் "தன் இதய மலர்" எனும் நூலில் கடுமையாகச் சாடுகிறார்.

## வணிகர்கள்

'கொள்வதூஉம் மிகை கொளாது, கொடுப்பதூஉம் குறை கொடாது' (பட்டின. வரி: 210—211) வாணிகம் நடத்த வேண்டும். "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப் பிறவும் தம்போற் செயின்" (குறள், 120) என்பது நெறி. இன்றோ கலப்படம், கள்ளக் கடத்தல், கறுப்புப் பணம், கள்ளநோட்டு, ரூபாய் நோட்டு இரட்டிப்பு, வருமான வரி ஏய்ப்பு, மோசடி போன்ற குற்றங்களை வரம்பின்றிச் செய்கின்றனர். பணம் புரளும் வாய்ப்புள்ள வணிகர்கள்தாம் அரசியல்வாதிகளுக்கும், அதிகாரிகளுக்கும் காமதேனுவாக உதவி வருகின்றனர்.

இந்நிலையில் சமுதாயம் கடுமையான சீர்கேட்டுக்கு உள்ளாகிச் சரிசெய்யவே முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. வணிகர்களின் இந்தத் தன்மைகளைப் பற்றி அரு. சோம சுந்தரம் 'செக்கிழுத்த செம்மல்' எனும் நூலிலும், தணிகைச் செல்வன் தன் கவிதைகளிலும் கடுமையாகச் சாடியுள்ளனர்.

இனி, மக்களிடம் காணும் பல்வேறு குறைபாடுகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் பற்றி இக்காலக் கவிஞர்கள் விரிவாக எடுத்துரைக்கக் காண்கிறோம்.

34. ப. சிவராமகிருட்டிணன், முத்துமாலை, ப. 33

**சாதி**

சாதி எனும் நோய் தான் இன்று நாடுமுழுவதும் ஆழ்ந்து பரவிக்கிடக்கிறது. கல்வி நிறுவனங்கள் நகர் கிராமப்புறங் களில் உள்ள குடியிருப்புகள், அலுவலகங்கள் ஆகிய அனைத்திலும் சாதியே தலைதூக்கி நிற்கிறது. தேர்தல் நேரத்தில் இச்சாதி உணர்வு முனைப்போடு நிற்றல் கண்கூடு. கட்சிகள் வேட்பாளர் தேர்ந்தெடுத்தல் தேர்தல்வேலை செய்தல்—வாக்காளர்களை வளைத்தல் ஆகிய அனைத்திலும் சாதியமே ஆட்சி செலுத்துகின்றது.

சாதியை ஒழிக்க வேண்டுமென்று பலரும் விரும்புகின்றனர். வேகம் காட்டுகின்றனர்.

"தெருவுக்குள் ஐந்தாறு கோவில்! அங்கே
சிலைமூட பொன்னாலே மணிகள் ஆடை!
கருவுக்கும் சாதிமதம் போற்று தற்குக்
கற்பிக்கும் பொய் மிகும் புராண வாடை!"[35]

என்று தமிழ்ப்பரிதியும்

"உலவிடும் சாதிகள் ஒழிப்போம் — இனி
உயர்வெனச் சொல்வது பழிப்போம்!"[36]

என்று தென்னவனும்

"சாதிசமய வழக்குகளை
சாற்றுகின்ற கயவரினை
மோதியவர் பரம்பரையை
பூண்டோடு சாய்த்திடுவோம்!"[37]

என்று கருமலைத் தமிழாழனும் சாதியைச் சாடுகின்றனர்.

**சமயம், சடங்குகள்**

சமயங்கள் கூட இன்று சாதிகளை மறைமுகமாக ஊக்குவிக்கின்றன. சமயங்கள் கற்பிக்கும் கடவுள்களின் பெயரால் நடக்கும் கேடுகள் சொல்லும் தரமல்ல. கடவுள்மீது நம்பிக்கை வருவதற்காகவே பாவம், நரகம் போன்ற கற்பனை களை வளர்த்து அவற்றின் தண்டனையிலிருந்து தப்பிக்கச்

35. தமிழ்ப்பரிதி, ஒ; புரட்சி நெஞ்சங்களே, ப. 42
36. தென்னவன், மலர்ந்தபின்பு, ப. 10
37. கருமலைத்தமிழாழன், நெஞ்சின் நிழல்கள், ப. 48

*சடங்கு முறைகளைக் கற்பித்து அவற்றின் பேரால் இந்நாட்டில் நடக்கும் சுரண்டல்கள் எண்ணில. கவிஞர்கள் சாதியோடு சேர்த்தே சமயங்கள், சடங்குகளையும் சாடுகின்றனர்.*

**"கடவுளை வளர்த்தே ஏய்க்கும்**
**கயவரை ஓட்ட வேண்டும்;**
**கடவுளின் பெயரைச் சொல்லி**
**காசுகள் பெறுகின் றோரை**
**கடவுளின் கோயி லுள்ளே**
**கடுஞ்சிறை யாக்க வேண்டும்;**
**கடவுளே தடுத்தா லும்என்**
**கருத்தினைக் கூற வேண்டும் !"[38]**

*என்பதோடு*

**"சாத்திரங்கள் கூறுகின்ற சாதி யொரு பிரிவு**
**சமயங்கள் கூறுகின்ற பேதமொரு பிளவு**
**மாத்திரைகள் உடல்நோயைக் குணமாக்கும்; ஆனால்**
**மந்திரமா குணமாக்கும் ? எத்தனை வேடிக்கை !"[39]**

*என்றும் குறிப்பிடுகின்றார் உதயை மு. வீரையன்.*

*சாதி, சமயம், சொர்க்கம், நரகம், அனைத்தையும் பற்றி*

**"சாதி மதங்கள்**
**சமயம் யாவும்**
**தாழ்வின் படுகுழிகள்**
**ஆதி முதலா**
**ளியத்தின் வலைகள்**
**உழைப்போர்க் காட்கொல்லி"[40]**

*என்றும்*

**"எங்கோ உள்ளதுவாம்**
**'சுவர்க்கம்' 'கடவுள்'**
**'தொழுவீர்' என்னும்**
**சுரண்டல் கூட்டங்கள்"[41]**

---

38. உதயை மு. வீரையன், அக்கினிக் குஞ்சுகள், ப. 34
39. மேலது, ப. 37
40. த. கோவேந்தன், புதியதோர் உலகம் செய்வோம், ப. 15
41. மேலது, ப. 28

என்றும் ஆணித்தரமாகக் கூறுகிறார் த. கோவேந்தன்.

'மதம் மக்களுக்கு அபின்' எனும் மார்க்சியக் கொள்கையில் ஊறிய கவிஞரால் இத்தகைய கொடுமைகளைப் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

## மூடநம்பிக்கை

மக்களிடையே நிலவும் மூடநம்பிக்கைதான் அவர்களை நிமிர்ந்து நிற்க விடாமல் செய்துவிடுகின்றது. மூடநம்பிக்கைகள் தொழுநோயினும் கேடானவை.

**"ஈயும் கொசுவுங் குடிவாழ**
**ஈன்ற தாயும் மனங்கோண**
**எப்பேர்ப் பட்ட மருத்துவரும்**
**எம்மா லாகா தெனச்செல்ல**
**மூயுந் துணிமேற் புழுநெளிய**
**முடையும் சீயும் குடல்பிடுங்க**
**மூடப் பழக்க வழக்கமெனும்**
**முதிர்ந்து மூத்த தொழுநோயை"[42]**

ஒழிக்க வேண்டுகின்றார் புலவர் குழந்தை. சமுதாயம் சீழ் பிடித்து நாறிக்கிடக்கிறது என்பதனைக் காட்ட இதற்கு மேல் சொற்களைப் பயன்படுத்த முடியாது.

சாதி பார்த்தும் பஞ்சாங்கம் பார்த்தும் காதல் வாழ்வினைத் தீய்ப்பது நெடுங்காலமாக நிலவிவரும் கொடுமை யாகும். இதனைக் குறித்து,

**"இனப் பொருத்தம் பஞ்சாங்கம் ஏனிங்கே வேண்டும் ?**
**மனப் பொருத்தம் அன்றோ மணம் !"[43]**

என்று சுப. வீரபாண்டியனும்

**"சாதி முறையெனும் தாழ்ந்த உரைசொலி**
**சாய்க்க முனைபவர் தெளியாரோ**
**காதல் உணர்வினர் காணும் கனவுகள்**
**காய்ந்த சருகெனல் முறையாமோ ?"[44]**

என்று கோ. மோகனரங்கனும் உருகுகின்றனர்.

42. புலவர் குழந்தை பாடல், ப. 92
43. செ.சே. சுப. வீ. மு.நூ., ப. 23
44. கோ. மோகனரங்கன், மு.நூ. ப. 32

## தீர்வு – பகுத்தறிவுக் கொள்கை

இவற்றிற்கெல்லாம் மாற்று மருந்து பகுத்தறிவுக் கொள்கை தான். ஈ.வெ.ரா. பெரியார் தமிழ்ச் சமுதாயத்தில் செய்த புரட்சியிலேயே சாதி சமயம் எல்லாம் அடியோடு ஒழிந்திருக்க வேண்டும். அவர் ஓரளவுக்கு அவற்றின் தீமையை நாடு முழுவதும் உணரச் செய்துள்ளார் எனினும் அம்முயற்சியில் முழுமையாக வெற்றி காணவில்லை. பகுத்தறிவுக் கொள்கையைப் பறை சாற்றிப் பல கவிஞர்கள் பாடியிருக்கிறார்கள் என்பதுடன் சாதியை எவரும் வாழ்த்தியோ வரவேற்றோ பாடியதில்லை என்பதும் எண்ணத் தக்கது. இந்த அளவில்தான் பகுத்தறிவுக் கொள்கை தமிழ்க் கவிதை உலகில் வெற்றிபெற்றுள்ளது.

## பெண்ணடிமை

சமுதாயத்தில் சமஉரிமை பெற வேண்டிய பெண்கள் நெடுங்காலமாக அடிமைப்பட்டுக் கிடக்கிறார்கள். பெண்கள் உரிமை பெற்று இந்த நாட்டையே ஆளும் பெருமை பெற்றிருக்கிறார்கள் என்றாலும் பெண்களுக்கு இன்னும் பல கொடுமைகள் இழைக்கப்படுகின்றன என்பது குறித்து இக்காலக் கவிஞர்கள் சிந்தித்துள்ளனர்.

## பரத்தைமை

பெண்களைப் போகப் பொருளாகவே வைத்திருக்கும் கொடுமை இச்சமுதாயத்தில் மண்டிக் கிடக்கிறது. விலை மகளிர் சமுதாய அடித்தளத்தில் தள்ளப்பட்டு மனம் புழுங்கி வாழும் இழிநிலைதனை,

"கற்புச் சிறையை உடைப்பதால்
கைது செய்யப் படுகிறோம்
... ... ... ... ... ... ... ... ... ...
எங்களுடைய நீதிமன்றத்தில் தான்
ஒழுக்கம் தண்டிக்கப் படுகிறது
நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்—
ஆடை வாங்குவதற்காக"[45] எனவும்

"நாங்கள் அடிமைகள்
அதனால்தான்

45. நா. காமராசன், மு.நூ. ப. 88

எங்கள் சாம்ராஜ்யத்தில்
சூரியன் உதிப்பதுமில்லை
அஸ்தமிப்பதும் இல்லை"[46]

எனவும் வரும் கவிதைப் பகுதியால் உணரலாம்.

## கற்பழிப்பு

இன்று சமுதாயத்தில் பெண்களுக்கு இழைக்கப்படும் பெரும் கொடுமை கற்பழிப்பாகும். துரை மாணிக்கம் 'வில(ா)ங்கு', 'அத்திப்பூ' ஆகிய குறுங்காப்பியங்களில் ஒரு கதைக் கருவாக இந்நிலையைக் காட்டுகிறார். கற்பழிக்கப்பட்ட ஓர் ஆசிரியை தன் கணவனோடு நீதி கேட்டுச் சென்றபோது அக்கயவனே அறங்கூறவையத் தலைவனாக வீற்றிருந்தமை யினைப் பின்வரும் பாடற்பகுதி உணர்த்தும்.

"சிதைக்கப்பட்ட உடலொடும் செத்துப்
புதைக்கப் பட்ட நெஞ்சோடும், தன்னால்
அருந்துயர் உற்ற கணவன் தன்னொடும்
பொருந்துயர் மன்றம் புகுந்தனள்; ஆங்கே,
மங்கையின் கற்பை மாய்த்த
வெங்கொடுங் கயவனே வீற்றிருந் தானே"[47]

வேலியே பயிரை மேய்கிறது என்பதனையும் நிலைமை இவ்வாறு தொடர்ந்தால் யாரை யார் பாதுகாக்க முடியும் என்பதை வினாவாகத் தொடுத்தும் கவிதை நடக்கிறது.

## காதலும் சாதியும்

சில இளைஞர்கள் கன்னியரின் உடலழகுக்கு ஆட்பட்டுக் காதல் வயப்படுகின்றனர். அப்போது சாதி, சமயம் ஆகியவை கண்முன் வருவதில்லை. ஆனால் திருமணம் என்று வரும்போது சாதி உணர்வுக்காட்பட்ட உற்றம், சுற்றம், பெற்றோர் எல்லாரும் திரண்டெழுந்து காதலைச் சாய்த்து விடுகின்றனர். இப்படி நேரும் என்பதனை உணர்ந்த ஒரு பெண் தன்னை விரும்பும் இளைஞனுக்கு,

சாதிகளே இல்லையென்று சொல்வார்; ஆனால்
சங்கடங்கள் வருவதெல்லாம் சாதி யால்தான்;
ஈதறிந்த நான்பிறந்த சாதி வேறு

46. மேலது, ப. 90
47. துரைமாணிக்கம், பாவியக் கொத்து, ப. 58

ஈர்க்கின்ற திறம்காட்டும் நீங்கள் வேறு
பாதியிலே முடிவதற்கா வாழ்க்கை ? வீணே
படபடப்பில் காதலித்துக் கலங்க வேண்டாம்"[48]

என்று எச்சரிக்கை விடுக்கிறாள்.

ஒரு பெண்ணைக் காதலித்தவன் சாதி வேற்றுமை கருதி அவளை மணம் செய்து கொள்ள முடியாமல் வேறொருத்தியை மணக்க முற்படுகிறான். இந்நிலையில்,

"பொருளில்லா வறியவள்நான்; சாதிவேறு
போட்டுவிடும் தடையென்றேன்; நிலையில் லாத
பொருளெதற்கு ? பண்புடைமை போதும், இன்றே
பொசுக்கிடுவோம் சாதியினை" என்று கூறித்
தெருளூட்டி மலர்விட்டு மலரை நாடித்
தேனுண்ணும் வண்டாக மாறி என்னை
இருளிட்ட புலிமுழைஞ்சில் வீழ்த்தி வேறோர்
ஏந்திழையை மணம் செய்யத் துணிந்தீர் போலும் !"[49]

என்று காதலி குமுறுகிறாள்.

## வரதட்சிணை

வரதட்சிணைக் கொடுமை இப்பொழுது இந்தியா முழுவதும் மேலோங்கி நிற்கிறது. இந்தியத் தலைமை அமைச்சரின் நேரடிக் கவனம், எச்சரிக்கை, சட்டங்கள் ஆகிய எல்லாம் இருந்தும் வரதட்சிணைக்காகக் கொலைகள் நடக்கின்றன. தமிழ்க் கவிஞர்களில் வா.மு. சேதுராமன், கோ. மணிவண்ணன், இரா. இளவரசு ஆகியோர் இதனைப் பாடுகின்றனர். கோ. மணிவண்ணனின் 'சுந்தரி சபதம்' எனும் குறுங்காப்பியம் 'வரதட்சிணை'யைக் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்டுள்ளது. தன்னைப் பலரும் வந்து பெண் பார்த்து விட்டுச் சென்றும் பணமில்லாக் கொடுமையால் மணம் நிகழத் தடை ஏற்படுகிறது என்பதனை ஒரு தலைவியின் கூற்றாக இரா. இளவரசு பாடுகிறார்.

"இத்தனை ஆயிரம் எண்ணிவைத் தால்தான்
ஏற்கலாம் பெண்ணை என்றன ராம்சிலர் !
... ... ... ... ... ... ... ... ... ...

48. சேர. சந்திரகாசன் கவிதைகள், ப. 6
49. இரா. இளவரசு, விடுதலை, ப. 52

பண்பை எவனடி பார்க்கிறான் நன்று ?
பணத்தை யல்லவோ கேட்கிறான் இன்று !
துன்பமாம் துன்பம் படித்தவன் பெரிய
தொகையெதிர் பார்த்தல் ... ... ... ... ..."[50]

எனும் பாடற்பகுதியில் பெண்கள் படும் துயரையும் படித்த ஆண்கள் தங்களை விலை நிர்ணயிக்க விட்டுவிடும் அவல நிலையினையும் காண்கிறோம்.

## தீர்வு

கதை இலக்கியத்தில் நாட்டின் நிலையை உள்ளவாறே கூறி அப்படியே விட்டுவிடுவதே பெரும்பான்மை. ஆனால் இது போன்ற கொடுமைகளுக்குத் தீர்வு என்ன என்பதனையும் கவிஞர்கள் பலர் மறக்காமல் பாடுகின்றனர்.

## கலப்பு மணம்

"கலப்புத் திருமணம் செய் தோழா !
கலப்புசெய் கலப்புசெய் கலப்புசெய் தோழா
கலப்புத் திருமணம் செய் தோழா !
... ... ... ... ... ... ... .... ... ... ... ...
'மாமன் மகன்—அடே அத்தை மகள் இவள்
மாறாத முறைப்பெண்' என்னும் பழம்பாட்டுக்
கோமாளி உறவெல்லாம் குப்பையில் போட்டிடு
குவலயத் தோடுபெண் கொண்டு கொடுத்திடு"[51]

என்கிறார் பொன்னடியான்.

## (2) விதவை மறுமணம்

விதவை மறுமணம் குறித்துப் பாரதியாரும், பாரதிதாசனும் முன்னோடிகளாக இருந்து முன்னரே உணர்ந்து பாடியிருக்கின்றனர். அவர்கள் வழி வந்த இக்காலக் கவிஞர்களும் 'கைம் பெண்'களுக்கு மறுவாழ்வு வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி

"வேனிலும் இளமை மேவிடக் கண்டு
மேதினிக் கெழில்பூ தூவிடக் கண்டு
தானுளம் வாடும் தனியிர வதனில்

50. மேலது. ப. 55
51. பொன்னடியான், ஒரு கைதியின் பாடல்கள், ப. 46

தையலின் வாட்டம் தணிந்திட இன்று
இன்னொரு கவிதை தீட்டு"[52]

என்றும்,

"இல்லாள் இறந்திடின்
தள்ளா வயதிலும்
கொள்வான் மறுமணமும் — செய்து
கொள்வான் மறுகணமே! — இந்தப்
பொல்லா உலகினில்
நல்ல இளமையில்
முல்லை விதவையடா! — அவளுக்கு
இல்லை இல் வாழ்க்கையடா!
... ... ... ... ... ... ... ... அட
நித்தம் உணர்வுகள்
கொத்திப் பிடுங்கிட
தத்தை துடித்திடவோ? — வாழ்வைச்
செத்து முடித்திடவோ"[53]

என்றும் பாடுகின்றனர். என்றாலும் இவ்விவாதம் இன்னும் வலுவாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். காதலை மனம் போன போக்கில் வாரிக் கொட்டியிறைக்கும் கவிஞர்கள் சமுதாய சீர்திருத்தத்தின் சரியான பகுதியை உறுதியாக நின்று வலியுறுத்தாதது குறையேயாகும்.

## (3) குடும்ப நலம்

மக்களை அளவிறந்து பெறுதல் பெண்களைப் பெரிதும் அடிமைப்படுத்துகிறது. இந்தியச் சமூகத்தில் மிகுதியான பாச உணர்வுக்கு ஆட்பட்ட பெண்கள் மக்கட்பேறு எய்தியபின் கணவனது ஈடுபாட்டைவிட மக்கள் மீது கொண்ட ஈடுபாட்டைப் பெரிதாக வளர்த்துக் கொண்டு குடும்பப் பிணைப்பை மிகுதிப்படுத்திக் கொள்ளுகின்றனர். குடும்ப வாழ்வுக்கு இது தேவையானது என்றாலும் அளவிறந்த பிள்ளைப்பேறு பெண்களைத் தாம் பெரிதும் தாழ்த்துகிறது. அளவோடு நின்று வளம் காணக் குடும்ப நலத்திட்டம் தக்க துணை செய்யும். அரசின் திட்டங்களில் இது குறிப்பிடத்தக்க இடம் பெறுகின்றது. பெரி. இலக்குமணச் செட்டியார் போன்ற கவிஞர்கள் இதனை வலியுறுத்துகின்றனர்.

52. மின்னூர் சீனிவாசன் கவிதைகள், ப. 35
53. தமிழ்க்குமரன். மு.நூ. ப. 28

இவ்வாறாகப் பெண்கள் விடுதலைக்கான பல கூறுகளும் கவிஞர்களின் பார்வையில் தைத்து உயிர்ப்பான வடிவம் பெறுகின்றன.

## சமத்துவம், சமூகப் பொதுமை

இனி, சமூக சீர்திருத்தத்தின் பிற கூறுகளையும் ஆராயலாம்.

பொதுவாகவே எங்கும் எதிலும் சமத்துவம் நிலவ வேண்டும் என்றும், சமூகப் பொதுமை ஒன்றே தெளிவான காட்சியை வழங்கும் என்றும் அனைவரும் கருதுகின்றனர். சமுதாய சீர்திருத்த நோக்குடைய கவிஞர்கள் இதனை வலியுறுத்தாமல் இருக்கமாட்டார்கள். ஒருபுறம் மேட்டுக் குடி வாழ்வும் மற்றொருபுறம் பள்ளத் தாக்கிலிருந்து பரம்பரை பரம்பரையாக எழுந்திருக்க முடியாத நிலையும் உள்ளன. இவற்றுக்கிடையே ஒரு சமரசம் உண்டாகவேண்டும் எனும் மனநிலையும் கொள்கையும் அனைவர்க்கும் உள்ளன என்றாலும் சமத்துவம் உண்டாக்குகிறோம் என்ற பெயரில் மேலிருப்பவர்களை வெட்டிச்சாய்ப்பது முறையாகாது என்றும் கருதுகின்றனர்.

> **"வாடுகின்ற பயிருக்குத் தண்ணீர் பாய்ச்சி**
> **வளர்ப்பதுவே முறையாகும் அன்றிச் சற்றும்**
> **வாடாமல் வளர்பயிரைத் தண்ணீரின்றி**
> **வாடவைத்துச் சமன்செய்தல் வழக்காறாமோ ?"[54]**

என்று கருத்துடன் கேட்கிறார் புலவர் குழந்தை.

> **"பாடறிந்து வாழ்வுதர மறுப்பார் தம்மைப்**
> **பாட்டாலே நீ சாடு உறுதியோடு !**
> **'வாடுகிறார் வாடுகிறார்' என்றே சொல்லி**
> **வாய்ச்சேவை செய்யாதே உன்றன் பாட்டால்"[55]**

என்று அரசுதாசன் முழங்குகிறார்.

முதலாளியும் தொழிலாளியும் புரிந்து கொண்டு செயலாற்றினால் அதுவே சமத்துவத்துக்கு வழி வகுக்கும் என்னும் கருத்தில்,

---

54. புலவர் குழந்தை பாடல், ப. 161
55. அரசுதாசன், அழகுமலர், ப. 11

"கொள்ளை அடிக்காதீர்—உழைக்கும்
கூலி மறுக்காதீர்
வெள்ளை உளமோடு—கூலி
விரும்பிக் கொடுத்திடுவீர்"[56]

எனப் பாடுகிறார் மு. உலகநாதன்.

சமத்துவமற்ற நிலை பல வகையிலும் உலகெங்கும் காட்சியளிக்கிறது என்பதனை,

"ஒருபுறத்தில் மனிதரில்லா வெறுமைப் பூமி!
ஒருபுறத்தில் புற்றீசல் மனிதர் கூட்டம்
ஒருநாட்டில் பெருவிளைச்சல் ஆன தாலே
ஒண்கடலில் எறிகின்ற காட்சி; இங்கே
ஒருநாட்டில் எச்சிலைக்குச் சொறிநா யோடே
ஓயாத போராட்டம் நடக்கும் காட்சி"[57]

என்று விரிந்த பார்வையில் காட்டுகிறார் கா. வேழவேந்தன்.

"மலையின் முடியில் ஒருவனும் – புழுதி
மண்ணில் கிடக்க ஒருவனும்
இலையெனக் கூறும் நிலையினை – நாம்
இன்றே படைத்திட வேண்டுமே!"[58]

என்கிறார் கோ. மோகனரங்கன்.

இவ்வாறாகக் கவிஞர் பலரும் சமூகப் பொதுமை பற்றிச் சரியான நெறியில் நின்று கவிதை வழங்குகின்றனர்.

## பொருளியல் பொதுமை, பொதுவுடைமை

சமவாய்ப்புகள் (Equal opportunities) அளிப்பதன் வாயிலாக ஏற்படும் பொதுமையினும் பொருளாதார நிலையில் ஏற்படும் சமத்துவமே சரியான, உடனடியான தீர்வாகும். வறுமை பலரை வாட்டுகிறது. அதனின்றும் விடுபட்டால் வாழ்வின் அடித்தளம் வலுவாக அமைந்துவிடும்.

56. மு. உலகநாதன், மு.நூ. ப. 176
57. கா. வேழவேந்தன், வண்ணத்தோகை, ப. 53
58. கோ. மோகனரங்கன், மு.நூ. ப. 25

"வறுமையப்பா பலரை வாழவிடப்பா–நாட்டை
வளமையாகக் கொஞ்சமேனும் ஆளவிடப்பா
கருமியான உனது தன்மை மாறவிடப்பா"[59]

என்று வறுமைக்கு வேண்டுகோள் விடுக்கிறார் கலைக்கூத்தன்.

"பருப்புடன் நெய்யே உண்பவன் ஒருநாள்
பாடுபட்டால் என்ன ?—தன்
பணத்திமி ராலே உழைக்கா தவன்எக்
கேடுகெட்டால் என்ன ?—இங்கு
'இருப்பவன், ஏழை' என்கின்ற இழிநிலை
மறைவதில் தடை என்ன ?—நெஞ்சு
இளைத்தவர். எல்லாம் ஒன்றுபட் டால்பின்
எழுகிற விளைவென்ன ?"[60]

இவ்வாறு பணம் படைத்தவனும் உழைக்கத் தொடங்குவது ஒரு நல்ல தீர்வும் சமத்துவம் மலர்வதற்கான அறிகுறியும் ஆகும் என்று நினைக்கிறார் தமிழ்நம்பி.

"ஒருவன் வாட, மற் றொருவன் வாட்ட
இருப்பதா வாழ்வு ? இதுவா வாழ்வு ?
... ... ... ... ... ... ... ... ... ... .. .. ..

என்றைக்கு

"ஏழ்மை, வறுமை இடுகா(டு) ஏகுமோ
சத்தியம் பூக்குமோ சமத்துவம் சிரிக்குமோ
இலட்சிய வெறிகொண் டிளைஞர் பட்டாளம்
புதிய உலகுக்குப் பூசை போடுமோ
பழைய பொய்ம்மைகள் பயந்தோ டிடுமோ
தன்னலம் மறந்து தாயகம் காத்த
மறவர் படைக்கு மரியாதை கிடைக்குமோ"[61]

அன்றுதான் சமதர்ம உலகைக் காணலாம் எனக் குறிப்பிடுகிறார் மீரா.

இந்தியா முழுமைக்கும் பொதுவுடைமை பூக்க வேண்டுமெனப் பாரதியாரும், 'எல்லார்க்கும் எல்லாமென்றி

59. கலைக்கூத்தன், மு.நூ. ப. 116
60. தமிழ்நம்பி, இதயப்பூங்கா, ப. 36
61. மீரா. மூன்றும் ஆறும், ப. 69–70

ருப்பதான இடம் நோக்கி நடக்கின்ற திறந்த வையம்' என்று பாரதிதாசனும் பாடினர்.

உலகில் பொதுவுடைமை அரசுகள் சில அமைந்து ஏற்றத் தாழ்வுகளை அகற்றிச் சமுதாய ஏற்றம் காணச் செய்திருக்கும் செய்தியை அனைவரும் உணர்வர். இந்நிலையில் எங்கு பார்த்தாலும் ஏமாற்றும், பூசலும் மண்டிக் கிடக்கும் சமுதாயத்திற்குப் பொதுவுடைமைக் கொள்கையே பொருத்தமான மாற்று மருந்து என்று பல கவிஞர்கள் கருதிப் பாடுகின்றனர். இதனை,

> "ஏற்றம் இறக்கம்
> தட்டிச் சமநிலை
> எய்திடல் நம்வேலை
> மாற்றம் என்பது
> பொருளாதார
> மடுவினைத் தூர்ப்பதுவே"[62]

என்ற பாட்டில் வலியுறுத்துகிறார் த. கோவேந்தன். பொதுவுடைமை பூப்பதற்கு முன்னால் துன்பப்படுகிற ஏழைகள் நிலையினையும், சுரண்டப்படுகின்ற தொழிலாளர்கள் நிலையினையும் இக்காலக் கவிஞர்கள் பாடு பொருளாக்கிப் பார்க்கின்றனர்.

## ஏழைகள் நிலை

ஏழைகளின் ஓலைக் கிடங்கைப் பார்க்கும் இரா. வைர்முத்து, அவை

> "ஏற்றி முடித்த இருட்டின் எச்சம்
> காற்றில் உதிர்ந்த கனவின் மிச்சம்
> வெறுமையின் நிறைவிடம் வறுமையின் ரகசியம்!"[63]

எனக் கவல்கின்றார்.

நாட்டில் அவ்வப்போது நடைபெறும் தீய நிகழ்ச்சிகள் மிகப்பலரிடம் எந்த உணர்ச்சியையும் ஏற்படுத்துவதில்லை. ஆனால் கவிஞர்கள் நெஞ்சில் அந்த நிகழ்ச்சிகள் நெருப்புப் பொறிகளாக விழுந்து விடுகின்றன. அவை நெருப்புத் துண்டங்களாகக் கனிந்து நிற்கும்போது சிறந்த சொல்லாட்சி

62. த. கோவேந்தன், மு.நூ. ப. 22
63. இரா. வைரமுத்து. மு.நூ., ப. 12

*யுடன் கூடிய கவிதைகள் உருவாகின்றன. மந்தநிலைச் சமுதாயத்துக்கும் சற்று உணர்ச்சிவரச் செய்யும் முயற்சியாக அஃது அமைகின்றது.*

"நெருப்பை நீயும் நேசிப்ப தில்லை
நெருப்பே உன்னை நேசிக் கின்றது"[64]

*என்றும்*

"எங்கும் நெருப்புப் பரவிடுதே — ஐயோ
எங்கள் விழிநீர் பெருகிடுதே!
பொங்கும் துயரில் புதைகின்றோம் — நாங்கள்
புழுதித் தரையில் அழுகின்றோம்!
கஞ்சிக் கலயம் இழந்துவிட்டோம் — பழைய
கந்தல் உடையும் பறிகொடுத்தோம்!
எஞ்சும் உயிரை இழக்காமல் — இன்னும்
ஏனோ நலிந்து கிடக்கின்றோம்?"[65]

*என்றும் உளம் நெகிழ்ந்து பாடுகின்றனர். இத்தகைய குடிசைகளில் வாழும் ஏழைகள்.*

"காட்டுமூலிகை போல்
கண்டெடுக்க முடியாமல்
ஓட்டைக் குடிசைகளில்
உயிர் வாழும் நடைப்பிணங்கள்!"[66]

*என்கிறார் நா. காமராசன். இந்த ஏழைகளுக்கு எப்படியாவது வாழ்வளித்துத் தீர வேண்டும் எனும் கவிஞர்க்கு வயல்களைப் பார்த்ததும் வளமான சிந்தனை பிறக்கிறது.*

"காலமெனும் பெருவெளியில்
காற்றைப் போல்
நீரைப் போல்
சோறிடு வோம்

*எங்கள் சபதம் இது —*

64. மேலது.
65. கோ. மோகனரங்கன், மு.நூ. ப. 49.
66. நா. காமராசன், மு.நூ. ப. 26

**"ஏழைகளின் அடுப்பெரிப்போம்**
**இல்லையெனில் சூரியனில்**
**தீக்குளிப்போம்"[67]**

*என்று வயல்கள் சூளுரைப்பதாகக் கூறுகிறார்.*

*ஏழ்மைத் துயரை உருவகமாகப் படம்பிடிக்கிறார்கள் சிலர்.*

*'கொடி மரத்துக்குக்கூட ஒரு பெருமை இருக்கிறது. அதன் உச்சியில் ஒரு துணியாவது தொங்கிக் கொண்டிருக் கிறது. ஆனால் ஏழை உடுத்துக் கொள்ள அந்த ஒரு முழத் துணி கூடக் கிடைக்கவில்லையே'[68] என்கிறார் ஒரு கவிஞர். அது மட்டுமன்றி*

**"ஏழைப் பெண்களுக்குச்**
**சூலுற்ற காலத்தில் மட்டுந்தான்**
**வயிறு நிறைகிறது"[69]**

*என்கிறார் மற்றொரு கவிஞர்.*

*ஏழைகளிலும் தண்டிக்கப்பட்டவர்களாக விளங்கும் தொழு நோயாளர்களைப் பாடுவதன் வாயிலாக அவர்களை யாரும் மறக்க முடியாதபடி செய்து விடுகிறார் இரா. வைர முத்து.*

## தொழிலாளர் நிலை

*தொழிலாளர்கட்காகப் பெரிதும் முனைந்து கவிதை படைத்துள்ளவர் முற்போக்குச் சிந்தனையாளரான தணிகைச் செல்வன்.*

**"தொழிலாளி வர்க்கத்தைத் துண்டாக்கி ரெண்டாக்கும்**
**சூழ்ச்சிகள் ஒருபக்கம்! துப்பாக்கி ஒருபக்கம்"[70]**

*என்றும்,*

**"உழவனுக்கும் பாட்டாளிக்கும் கூலிபோதலை—நாட்டில்**
**உழைக்கவரும் பிள்ளைகட்கு வேலை கெடக்கலை"[71]**

67. மேலது. பக். 84–85
68. இளங்கம்பன் – நேர்காணலில் கேட்டவை,
69. மேலது
70. தணிகைச் செல்வன் கவிதைகள், ப. 48
71. மேலது. ப. 55

என்றும் பல நிலைகளிலும் பாட்டாளிகள் படும் துயரைப் பாடுகின்றார்.

### அரிசனங்கள்

அரிசனங்கள் படும் துயரையும் இன்றும் பலவகையில் ஒதுக்கி வைக்கப்படுதலையும் கலக்கத்தோடு கூறுகிறார் தணிகைச் செல்வன்.

> "கண்ணகியார் வீசிவிட்ட மதுரைத் தீயிலே—அன்று
> கருகிப்போன மக்கள் — எங்கஜாதி மக்களே!
> கண்ணகி போய்ஒசந்த ஜாதி ஜனங்களைமட்டும்–அவ
> காப்பாத்தினாள் பிறகுயாரு ? நாங்கள்தான் மிச்சம் !"[72]

இவ்வாறு சிலப்பதிகாரக் காலத்திலேயே தாங்கள் கொடுமைக்காளானதாய் அரிசனங்கள் நினைக்கிறார்களாம்.

> "நொந்து நொந்து வெந்து வெந்து இன்று வரையில்—
> நாங்க
> நூறுநூறு ஆண்டுகளாய் இந்தப் பூமியில்
> சொந்தமென்று என்ன கண்டோம் பசியைத் தவிர—எங்க
> சொத்து என்று என்ன கண்டோம் உசிரைத் தவிர"[73]

அரிசனங்களின் முன்னேற்றத்திற்காக எவ்வளவோ திட்டங்கள் தீட்டப்பட்டாலும் நிலைமை மாறவில்லை என்பதனை இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

## அடிப்படையில் தேவைப்படும் மலர்ச்சிகள்

### 1. கல்வி

சமுதாயத்தைச் சீர்திருத்துவதில் படிப்படியான முறைகளும் உண்டு. வேகமான வழிகளும் உண்டு. கல்வி அனைவர்க்கும் கிடைக்கச் செய்வதன் வாயிலாக அறியாமையைப் போக்கி, உலகைப் புரிந்து கொண்டு, ஏமாற்றுவோருக்கு இடந் தாராமல் ஒதுக்க வழி ஏற்படுத்துவது நன்முறையாகும். இந்தியச் சூழ்நிலையில் இதுவே தக்க முயற்சியாகக் கருதப் படுகிறது.

"வடநாட்டிலும் தென்னாட்டிலும் முற்சாதியினராகிய பிராமணர்களே மிகுந்த கல்வி வாய்ப்பையும் வேலை

72. மேலது. ப. 69
73. மேலது. ப. 71

வாய்ப்பையும் பெற்று வந்தனர். இந்நிலையில் அரிசன மக்கள் போன்றவர்கட்கும் கல்வி வாய்க்க வேண்டுமென்றால் ஊர்ப்பள்ளிகளின் சூழல் மாறவேண்டும்; சாதியுணர்ச்சியற்ற பொறுப்பான ஆசிரியர் இதில் முக்கிய பங்கு வகிக்க முடியும்"[74] என்பார் கூற்றும் கருதத்தக்கது.

புதுமைவாணன் ஒரு 'புரட்சிப் பெண்'ணைப் படைக்கிறார். காளியம்மன் கோவில் கட்டிக் குடமுழுக்குச் செய்யப்போகும் வேளையில் அவ்வூர்ப் பண்ணையாரையும் மக்களையும் ஒரு பெண் கலங்க வைக்கிறாள். சாமி வந்து விட்டதாக ஆடும் பெண் அவர்களது மூட நம்பிக்கையையே கருவியாகக் கொண்டு,

"எத்தனையோ பேர்படிக்கா திருக்கும்போது
பணமீந்து கல்விதனை வளர்க்கப் பள்ளி
பலப்பலவும் கட்டியதில் ஏழை மக்கள்
உணவருந்தி இலவசமாய்க் கல்விஓத
உகந்தநற் பணிமுடிக்கா தெனக்குக் கோயில்
தனைக்கட்டி விழாவெடுக்கும் மடையா!
... ... ... ... ... ... ... ... ...
என்மக்கள் ஏழைமக்கள்! அவர்க்குக் கல்வி
ஈந்துபணி புரிந்திடுவோர் எனது பக்தர்!"[75]

என்று தெளிவுபடுத்துகிறாள்.

## 2. புரட்சி

வேகமான புரட்சி ஒன்று எழுந்தால்தான் விரைவாக வளர்ச்சி காண முடியும் எனப் பலர் நம்புகின்றனர்.

"வாழ்வைச் சுவைக்கும் வழியைத் தடுக்கும்
வல்லரண் யாவையுமே
போழ்ந்து பொசுக்கிப் புரட்சிமுன் நிறுத்திப்
புதுக்குவோம் உலகத்தை"[76]

74. "One suggestion that to make these schools more congenial to such a social environment would be the teacher. The teachers should be recruited from the Harijan Community or from among persons who have no caste prejudices." – Alladi Vagiswari, Income earning trends and social status of the Harijan Community in Tamilnadu', P. 139.
75. புதுமைவாணன், கட்டில் வீணை, ப. 42.
76. த. கோவேந்தன், மு.நூ. ப. 65

என்கிறார் த. கோவேந்தன். அரசுதாசன் 'நான்கடவுளானால்' என்று கற்பனை செய்துகொண்டு

"திறமின்றிப் பெரும்பதவி வகிப்போர் மேனி
தீபோலத் தினந்தினமும் எரியச் செய்வேன்
புறம்பேசிச் சுயலாபம் சேர்ப்போர் வாய்தான்
புழுநெளியும் சாக்கடையாய்ப் போகச் செய்வேன்"[77]

என்கிறார். வெறும் கற்பனை செய்து புது உலகம் படைத்து விட முடியாது என்பதனையும் பொங்கி எழுந்தவரே புதுமை காண்பார் என்பதனையும் சீர்திருத்திகள் கண்டு கொண்டார் கள். கற்பனையோ, போதனையோ தேவையில்லை என்று முடிவு கட்டிக் கொண்டு

"பொறுத்த தெல்லாம் பொறுத்தோம் ஒரு
புண்ணியமில்லை—காந்தி
போதனைக ளாலே எங்க புண்ணு ஆறலை
இருபத்தேழு வருஷமாக ரத்தம் சிந்தினோம்—இனி
இதுக்குமேலே ரத்தமில்லை நெருப்பைச் சிந்துவோம்."[78]

என்கிறார் தணிகைச் செல்வன். புரட்சிவேண்டும் என்று முடிவுக்கு வந்த பிறகு கூட நேரடிச் செயலில் இறங்காமல் புரட்சியை அன்புடன் அழைக்கும் மிதப்போக்கும் காணப் படுகிறது.

மா. செல்வராசன் தன் 'வைகறை மலர்களில்'

"புரட்சியே புகல், இப்போது!
பொறுப்பதோ இனியும், மேல்கீழ்ப்
புரட்டினைப் போக்க வேண்டும்;
புறப்படாய், புயல்வீ சட்டும்!
இருள்கிழி மின்னல் வெட்ட
இடியெழுந் தார்க்க வைய்ப்
பொருள் எலாம் பொதுவாய் மாற்றும்
புரட்சியே வாராய் இங்கே!"[79]

என்று அழைப்பதில் வேகம் முழுமைப்படாத நிலையாகவே நிற்கிறது.

77. அரசுதாசன், மு.நூ. ப. 65
78. தணிகைச் செல்வன், மு.நூ. ப. 72
79. மா. செல்வராசன், வைகறை மலர்கள், ப. 112

"அடிப்பவர்க்கும் முதுகெலும்பை ஒடிப்பவர்க்கும்
அன்றியிங்கே
அன்பான சொற்களுக்கோ அணுவேனும்
மதிப்பில்லை"[80]

என்று கண்டிப்புக் காட்டுகிறார் சுப. வீரபாண்டியன்.

"ஒடப்பராயிருக்கும் ஏழையப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால்"

என்று பாரதிதாசன் கூறும்போதே என்ன நடக்கப்போகிறது என்பது தெரிந்து விடுகிறது. அதே போக்கைத் தொடர்கிறார் த. கோவேந்தன். பாரதிதாசனின் உலகப் பண்பாட்டின் போக்கிலேயே

"உதைக்கும் உதையில்
உலகின் உண்ணிகள்
உறவற்று அழியட்டும்
... ... ... ... ... ... ... ... ... ...
உலுக்கும் உலுக்கில்
முதலா ளிப்பேய்
உயிர்கள் முடியட்டும்"[81]

என்கிறார் த. கோவேந்தன்.

## முடிபுகள்

சமுதாயச் சிக்கல்களுக்கான தீர்வுகள் பற்றி நம்பிக்கை வறட்சியுடன் பாடுவோர், நம்பிக்கையுடன் பாடுவோர் என இருவகையினரும் உள்ளனர். அரசியல்வாதிகள், அதிகாரிகள், வணிகர்கள், மக்கள் ஆகியோராலேயே சமுதாயச் சீர்கேடுகள் மலிவதாகக் கருதுகின்றனர். சாதி, சமயம், சடங்குகள், மூட நம்பிக்கை ஆகியவற்றைக் காட்டுகின்றனர். இவற்றிற்கு மாற்று மருந்தாகப் பகுத்தறிவுக் கொள்கை கருதப்படுகிறது.

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளாகப் பரத்தைமை, கற்பழிப்பு, சாதிமுறை, வரதட்சிணை ஆகியவை அமைகின்றன. பெண்கள் விடுதலை பெறுவதற்கான தீர்வுகளாகக் கலப்பு மணம், விதவை மறுமணம், குடும்ப நலம் ஆகியவை பற்றிக் கவிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

80. செ.சே. சுப. வீ., மு.நூ., ப. 20
81. த. கோவேந்தன், மு.நூ. ப. 27

கணவன் மனைவியர்க்குள் பிளவு ஏற்பட்டு மன ஒருமை சிதையுமாயின் மணவிலக்குப் பெற்றுக் கொள்ளுவதற்குச் சட்டம் இடம் தருகிறது. கவிஞர்கள் பதிவு செய்யப் பெறாத மக்களின் சார்பாளர்கள் (unacknowledged legislators) என்று பெயர் பெற்றவர்கள். அவர்கள் இக்காலத்தில் பெண்கள் விடுதலைக்குப் பெரிதும் தேவையானதும், அடிமைப்பட்டு உழலும் பெண் தன்னை விடுவித்துக் கொள்ள வாய்ப்புள்ளது மான மணவிலக்கினை ஏன் பாடவில்லை என்பது புதிராகவே உள்ளது.

சமுதாய சமத்துவம் கண்டு, பொருளியல் ஏற்றத் தாழ்வு போக்கும் பொதுவுடைமை பற்றி விரிவாகப் பேசப்பட்டுள் ளது. சமுதாயத்தைச் சீர்திருத்தும் சரியான தீர்வுகளாகக் கல்வியும் புரட்சியும் காட்டடப்படுகின்றன.

இக்காலக் கவிதைகள் அனைத்தையும் ஒருசேர ஆராயும் பொழுது பாடுபொருள் வன்மை கொண்டும், கவிஞர்தம் சீரிய நோக்கம் கொண்டும் இக்கால கட்டத்தைச் 'சீர்திருத்த இலக்கிய காலம்' என்று கூறலாம்.

# பின்னிணைப்புகள்

## பின்னிணைப்பு—1

### ‘பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள் (1967—1976)’ என்னும் இவ்வாய்வு குறித்த மேற்சிந்தனைகள் (Scope)

பத்தாண்டுக்கால எல்லையில் அமைந்த இவ்வாய்வில் கவிதைகளின் உள்ளடக்கத்தினையும் கட்டுக் கோப்பினையும் பகுத்துக் காணுகின்ற அளவில் மட்டுமே வாய்ப்புக் கிடைத்துள்ளது. இவ்வாய்வின் முடிவுகள் பின்வரும் தலைப்புகளில் மேலாய்வு செய்தற்கு வழிவகுக்கின்றன.

1. ‘பத்தாண்டுக் கவிதைகளில் சமுதாய சீர்திருத்தங்களும் அணுகு முறைகளும்’
2. ‘பத்தாண்டுக் கவிதைகளில் தமிழுணர்வு’
3. ‘பத்தாண்டுக் கவிதைகளில் உருக்காட்சி (Imagery)’
4. ‘பத்தாண்டுக் கவிதைகளில் நடையியல்’
5. ‘பத்தாண்டுக் காப்பியங்களில் பாத்திரப் படைப்புகள்’
6. ‘பத்தாண்டுக் கவிதை நாடகப் பாத்திரங்கள்’
7. ‘பத்தாண்டுக் கவிதைப் பின்னணிகள் (Textual Criticism)—ஓர் ஆய்வு’
8. ‘பத்தாண்டுக் கவிதைகளில் காப்பிய ஒப்பீடு’
9. ‘பத்தாண்டுத் தமிழ் நாடகங்களும் பிறமொழி நாடகங்களும் - ஓர் ஒப்பீடு’
10. ‘பத்தாண்டுப் புதுக்கவிதையும் மரபுக்கவிதையும் - ஓர் ஒப்பீடு’

## பின்னிணைப்பு (2)

இது
உங்களுக்குத்தான்
புவி
ஈரத்தோடு
. . . என்றும்
உங்கள்
கங்கைப் பையன்

ப. கங்கை கொண்டான் "கூட்டுப் புழுக்கள்"

பின்னிணைப்பு 3

# ஆண்டுவாரியாக நூல் வெளியீடு

*'1967-1976' - பத்தாண்டுகளில் வெளியாகி ஆய்வாளருக்குக் கிடைத்த நூல்கள்: 614*

*ஆண்டுக்குச் சராசரியாக நூல் வெளியீடு: 62*

| ஆண்டு | நூல்கள் எண்ணிக்கை |
|---|---|
| 1967 | 53 |
| 1968 | 53 |
| 1969 | 67 |
| 1970 | 55 |
| 1971 | 58 |
| 1972 | 64 |
| 1973 | 51 |
| 1974 | 60 |
| 1975 | 70 |
| 1976 | 79 |
| பத்தாண்டு எல்லைக்குள் வரும் என்று உறுதி செய்வதற்குரியவை: 4 | |

*1976-ஆம் ஆண்டுப் புள்ளி விவரப்படி புதினங்களை அடுத்துக் கவிதை நூல்களே தமிழில் அதிகம் வெளியாகி யுள்ளன என அறியலாம். புதினங்கள் 164 என்றும் கவிதைகள் 66 என்றும் அறிகிறோம்.*

**—ஆதவன் சுந்தரம் (தொ.ஆ)**

*வரும் பத்தாண்டுகளில் தமிழ்ப் புத்தக வெளியீடு, ப. 24*

## கருவி நூல் பட்டியல் (Bibliography)

## அடிப்படை நூல்கள் (Primary Sources)


1. அடியன் மணிவாசகன், கோவிலை நோக்கி வரும் கொடுமைகள், பேருந்து நிலைய பாலவிநாயகர் கோவில் திருப்பணிக் குழு திருவைகுந்தம், 1972
2. " திருவைகுந்தம், சிவகாமி அம்மை பிள்ளைத் தமிழமுது திருவருட் கழகம், திருவைகுந்தம், 1972
3. " குருவாயூரன் குளிர் மாலை, திருவைகுந்தம், 1973
4. " செந்தில் முருகன் சிரிக்கின்றான், வள்ளலார் பொது நெறி இல்லம், திருவைகுந்தம், 1976
5. அண்ணாதாசன் கலைஞர் காவியம், வானதி பதிப்பகம், சென்னை, 1971
6. அப்துல்கபூர், கா., மனவிளக்கு, திரீயெம் பப்ளிஷர்ஸ், சென்னை, 1967
7. " நபிமணிமாலை, புதுக்கல்லூரி நிர்வாகக்குழு, சென்னை, 1972
8. அப்துல்கபூர்சாகிப், பி.வி சித்திர கவிமாலை, டி.ஆர். நடராஜ ஐயர் நினைவு நூலக வெளியீடு, தஞ்சாவூர், 1969
9. அப்துல் மஜீது, மு., நாயக வெண்பா, புலவர் இல்லம், பனைக்குளம், 1968
10. " பெருமானார் அருள் வேட்டல், மேலது, 1975
11. அப்துல்ரகுமான், பால் வீதி அன்னம், சிவகங்கை, 1974
12. அபி, மௌனத்தின் நாவுகள், அன்னம், சிவகங்கை, 1974
13. அமலன், குறளதிகாரம், விமலை நூலகம், பெரம்பலூர், 1969
14. " 'காந்தி நாற்பது' திருச்சிராப்பள்ளிச் சர்வோதய சங்கம், திருச்சி, 1970
15. " 'இரங்கல் இருபது' பனிமாதா பதிப்பகம், பெரம்பலூர், 1971

16. ” 'திருமறை இருபது' சமத்துவ இளைஞர் மன்றம், பெரம்பலூர், 1971
17. ” 'பக்திப்பத்து' அருள்சோதி பதிப்பகம், பெரம்பலூர், 1971
18. ” 'பூண்டி புதுமை மாதா' பதிப்பகம். அருள் சோதி பதிப்பகம், பெரம்பலூர், 1971
19. ” 'சந்தன மாதா பதிகம்' பிரபா பிரசுரம், திருச்சி, 1972
20. ” 'நன்றிக் கடன்', பிரபா பிரசுரம், திருச்சி, 1972
21. ” 'மரியாள் பதினொன்று', விமலை நூலகம், பெரம்பலூர், 1973
22. ” 'என்றும் பதினாறு' அருள்சோதி பதிப்பகம், பெரம்பலூர், 1973
23. ” 'முருகு முப்பது', தமிழ் மன்றம், பெரம்பலூர், 1973
24. ” 'இசை ஏழு', விமலை நூலகம், பெரம்பலூர், 1975
25. ” 'இறைவன் இருபத்தைந்து' பெரம்பலூர், 1975
26. அய்யாச்சாமி, ர., 'பாலராமாயணம்', சென்னை புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிட், சென்னை, 1967
27. ” 'மோகன காந்தி' „ 1969
28. ” 'முத்துக் குவியல்', (பூவண்ணன், தொ.ஆ.) வானொலிச் சிறுவர் சங்கப் பேரவை, சென்னை, 1970
29. ” 'சிறுவர் சிலம்பு', மகாவீரர் 2500 ஆம் ஆண்டு நிர்வாண மகோத்துவ சமிதி, சென்னை, 1974
30. ” 'இதயச் சுவடி' மோகனப் பதிப்பகம், சென்னை, 1975
31. அரங்கசாமி, கா., 'கனகை' பாரி நிலையம், சென்னை, 1976
32. அரங்கசாமி, கி., 'அண்ணா அறுபது', திருக்குறள் பதிப்பகம், இராசிபுரம், 1968
33. ” 'அன்புக் கலம்பகம்' இராசைத் தமிழ்ச் சங்கம், இராசிபுரம், 1975

| | | |
|---|---|---|
| 34. | அரங்கநாதன், கா.தி., | 'எது சாதனை' காரமடை கோவை, 1969 |
| 35. | அரங்கநாதன், கு.ஆ., | சுந்தரகணேசர் பிள்ளைத் தமிழ், குமாரபாளையம், 1972 |
| 36. | அரங்கமுத்து, | 'பசுந்தமிழ்ப் பண்பு', கோவை, 1970 |
| 37. | அரங்க சீனிவாசன், | 'அன்னை கருமாரியம்மன் அந்தாதி' அன்னை நிலையம், சென்னை, 1970 |
| 38. | " | 'வங்கத்துப் பரணி' சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1972 |
| 39. | அரசுதாசன் | 'அழகுமலர்', அறிவுச் சுடர் நிலையம், சென்னை, 1967 |
| 40. | அரவிந்தன், மு.வை., | 'வெள்ளைமலர்கள்', முத்துப் பதிப்பகம், வளவனூர், 1976 |
| 41. | " | அரவிந்தன் கவிதைகள், 1976 |
| 42. | அரிமதி தென்னகன் | 'கலைஞர் மும்மணிக் கோவை', புதுச்சேரி, 1971 |
| 43. | " | 'மறத்தி', புதுச்சேரி, 1976 |
| 44. | " | 'கள்ளிப்பூ', புதுச்சேரி, 1976 |
| 45. | " | 'ஆனந்தரங்கன் பிள்ளைத் தமிழ்', புதுச்சேரி, 1976 |
| 46. | " | 'முகில் விடுதூது', செங்கேணி பதிப்பகம், புதுச்சேரி, 1976 |
| 47. | அருமைநாதன், அரு., | 'காலம் கண்ட கவிதை', பரிமளா பதிப்பகம், சென்னை, 1976 |
| 48. | அறங்காசிம் | 'கருணாநிதி கவிமாலை', சவகர் பதிப்பகம், திருப்பந்துருத்தி, (வரும்) |
| 49. | அன்புநிலவன் | 'கலை நிலவு' கலைச்செல்வி பதிப்பகம், பாகூர், 1968 |
| 50. | ஆடலரசு, செ., | 'ஆடலரசு கவிதைகள்' நண்பன் பதிப்பகம், சேலம், 1970 |
| 51. | ஆதித்தர், அ.கு., | 'துறையச் செல்லம்' சாந்தி நூலகம், சென்னை, 1967 |
| 52. | " | 'இளந்தமிழ் திருமுருகாற்றுப்படை' சென்னை, 1976 |
| 53. | ஆறுமுகம், தி.சு. (சிவதாசன்) | 'குறுக்குத் துறைக் குமரன் பிள்ளைத் தமிழ்', திருநெல்வேலி, 1971 |

| | |
|---|---|
| 54. " | 'குறுக்குத் துறைக் குறவஞ்சி', திருநெல்வேலி, 1972 |
| 55. " | 'குறுக்குத் துறைக் கொச்சகக் கலிப்பா', திருநெல்வேலி, 1972 |
| 56. " | 'குறுக்குத் துறைக் கலம்பகம்', திருநெல்வேலி, 1973 |
| 57. " | 'திருவுருவமாலைச் சிலேடை வெண்பா' திருநெல்வேலி, 1974 |
| 58. " | 'சிவனம்மாள் செய்யுள் திரட்டு', கைலாசபுரம், திருச்சி, 1974 |
| 59. ஆனந்தம் | 'கனியமுது' திராவிடப் பண்ணை, திருச்சி, 1970 |
| 60. " | 'அண்ணா காவியம்', தம்பி பதிப்பகம், சென்னை, 1974 |
| 61. ஆனைவாரி ஆனந்தன் | 'அபலையின் கடிதம்' தஞ்சை மாவட்ட எழுத்துலகம், பாபநாசம், (வரும்) |
| 62. இசையன்பன் (நா. உருத்திர மணி) | 'இசைத் தென்றல்' சின்னாளப் பட்டி, மதுரை, 1972 |
| 63. இராசேசுவரன், ப. (இறையரசன்) | 'இதய நிழல்' இளங்கோ பதிப்பகம், சென்னை, 1970 |
| 64. இராசேசுவரன், ப., | 'முத்தமிழ் முருகன்' தமிழ்நெறி மன்றம், சென்னை, 1974 |
| 65. இராமச்சந்திரன், பா., | 'தமிழ்காத்த போர்ப்பரணி', கொக்கிரகுளம், நெல்லை, 1969 |
| 66. " | 'சோவியத் நாட்டிற்குத் தென்றல் ஆற்றுப்படை' மேலது, 1970 |
| 67. இராமநாதன், ஐ.சோ., | 'தமிழினிமை', கோபாலபுரம், கோவை, 1976 |
| 68. இராமநாதக் கவிராயர், மீ., | 'திருமண வாழ்த்து நினைவு மலர்', மிதிலைப்பட்டி, 1971 |
| 69. இளங்கம்பன் | 'கானாஞ்சலி', புதுக்குரல் பதிப்பகம், பழநி, 1968 |
| 70. " | 'கீதாஞ்சலி கீர்த்தனைகள்' முன்னேற்றப் பதிப்பகம், காரைக்குடி, 1968 |
| 71. " | 'இசை மாலை' பூங்கொடி பதிப்பகம், கோவை, 1970 |
| 72. " | 'சிந்தனை மலர்கள்' பூங்கொடி பதிப்பகம், கோவை, 1970 |

| | | |
|---|---|---|
| 73. | ” | ‘ஆண்டாள்’ ‘மணிவாசகர் அருள் புகழ் மாலை’ சித்திரகூடம், பழநி, 1971 |
| 74. | ” | ‘அருள் வேட்டை’, சித்திர கூடம், பழநி, 1976 |
| 75. | இளங்கோ | ‘சாந்தி’, வெங்கலம் வெளியீடு, மானாமதுரை, 1967 |
| 76. | இளங்கோவன், சுப., | ‘மலரும் கவிதை’, இராமு புத்தக நிலையம், சென்னை, 1976 |
| 77. | இளங்கோவன், மணவை | ‘பன்னீர்ப் பூங்கா’, பகுத்தறிவு இலக்கிய மன்றம், சென்னை, 1974 |
| 78. | இளஞ்செழியன் (கிரிதரன்) | ‘தெய்வீகக் காதல்’, இரத்ன சோதி அச்சகம், மோகனூர், 1969 |
| 79. | இளவரசு. இரா., | ‘விடுதலை’ இலட்சுமி புத்தக நிலையம், தஞ்சாவூர், 1972 |
| 80. | இலக்குமணச் செட்டியார் | ‘குயில் நீ கூவாய்’, வேகுப்பட்டி, புதுக்கோட்டை, 1967 |
| 81. | ” | ‘காடப் பிள்ளை ஐயனார் பதிகம்’ மேலது, 1967 |
| 82. | ” | ‘வேவுநகர் ஏனமாரி அம்மன் துதிப்பாடல்கள்’, மேலது, 1967 |
| 83. | ” | ‘திருக்குறள் நூற்சிறப்பு’ மேலது, 1968 |
| 84. | ” | ‘முத்துக் கருப்பு விநாயகர் பதிகம்’ மேலது, 1968 |
| 85. | ” | ‘பத்திர காளியம்மன் துதிப் பாடல்கள்’ மேலது, 1968 |
| 86. | ” | ‘குடும்பக் கட்டுப்பாடு’ மேலது, 1969 |
| 87. | ” | ‘பூம்புகார் ஆற்றுப்படை’ மேலது, 1969 |
| 88. | ” | ‘அய்யப்ப சுவாமி துதிப் பாடல்கள், மேலது, 1970 |
| 89. | ” | ‘வேவூர் ஏனமாரி அம்மன் பூவிழாத்துதி இசைப்பாடல்’ மேலது, 1970 |
| 90. | ” | ‘காந்தி மகான் பெருமை’ மேலது, 1970 |
| 91. | ” | ‘மாமனும் மருமகளும்’ மேலது, 1971 |

| | |
|---|---|
| 92. ” | ‘பாரததேச பக்திப்பாடல்’ மேலது, 1971 |
| 93. ” | ‘தேனீ மலை ஸ்ரீ முருகக்கடவுள் திருப்புகழ் வண்ணப் பாடல்கள்’ மேலது, 1971 |
| 94. ” | ‘உலகியல் நூலறிவுப் பாடல்கள்’ மேலது, 1971 |
| 95. ” | ‘தமிழ்ப் பூம்பொழில்’ மேலது, 1972 |
| 96. ” | ‘பூந்தமிழ்ப் பொழிலின் பொன்மலர் கள்’ மேலது, 1972 |
| 97. ” | ‘ஸ்ரீ முத்துப் பழநி ஆண்டவர் பதிகம்’ மேலது, 1972 |
| 98. ” | ‘வண்ணப்பாடல்கள்’ மேலது, 1973 |
| 99. ” | ‘தமிழியற் சிறப்பு’ மேலது, 1974 |
| 100. இறைநகர் மறைமணி | ‘சாந்தி வயல்’ அருள் மலர் பதிப்பகம், சென்னை, 1975 |
| 101. இறையரசன் (சேசுராசா) | ‘கன்னிப் பாவை’ கலை வளர்ச்சிக் கழகம், மதுரை, 1978 |
| 102. இன்குலாப் | ‘இன்குலாப் கவிதைகள்’ அகரம், சிவகங்கை, 1972 |
| 103. இன்னாசி, கு., | ‘கவி அலங்கல்’ தமிழரசன் பதிப்பகம், நெல்லை, 1973 |
| 104. உலகக்குடிமகன் | ‘புரட்சிப் பூக்கள்’, எழுத்தாளர் கூட்டணி, பறம்புக்குடி, 1971 |
| 105. உலகநாதன், மு., | ‘உலகநாதன் கவிதைகள்’ 1, முத்துச் சிதம்பரனார் பதிப்பகம், மதுரை, 1967 |
| 106. ” | ‘விடுதலை முழக்கம்’, பாவேந்தர் தமிழ் எழுச்சி மன்றம், மதுரை, 1969 |
| 107. ” | ‘உலகநாதன் கவிதைகள்’ 3, மதுரை, 1973 |
| 108. ” | ‘அமுதக் கலயம்’ முத்துச் சிதம்பரனார் பதிப்பகம், மதுரை, 1974 |
| 109. உலகநாதன், வி.மு., | ‘நெஞ்சின் நிழல்’ வள்ளுவர் இலக்கிய வட்டம். சென்னை, 1976 |
| 110. எதிராசன், தி., | ‘முருகன் முறைவேண்டல்’ பாரதி நூலகம், திருவண்ணாமலை, 1968 |

| | | |
|---|---|---|
| 111. | ” | ‘நவக்கிரக நான்மணிமாலை’ ஆரணி, 1970 |
| 112. | எழில்மதி | ‘குடிக்குறள்’ ஆத்தூர், சேலம் மாவட்டம், 1972 |
| 113. | எழிலன், பெ., | ‘களங்கண்ட கலைஞர்’, மாங்குயில் பதிப்பகம், பெங்களூர், 1973 |
| 114. | ஏகாம்பரம் தென்னம்பட்டு | ‘மனக்குயிலின் மௌன கீதங்கள்’, சிவகாமி பதிப்பகம்’ தென்னம் பட்டு, 1976 |
| 115. | ஐசக் அருமைராசன் | ‘முல்லை மாடம்’, கிறித்துவக் கல்லூரி, மார்த்தாண்டம், 1969 |
| 116. | கங்கை கொண்டான் | ‘கூட்டுப் புழுக்கள்’ கங்கை நூலகம், சேலம், 1974 |
| 117. | கங்கை கொண்டான் & மலர் மன்னன் | ‘அண்ணா அறுபது’, அக்ரா பாளையம், ஆரணி வட்டம், 1968 |
| 118. | கண்ணப்பன், மா., | ‘குட்டி’, உமையவள் பதிப்பகம், காரைக்குடி, 1975 |
| 119. | ” | ‘மழலை மலர்கள்’, உமையவள் பதிப்பகம், காரைக்குடி, 1975 |
| 120. | ” | ‘கண்ணப்பன் கவிதைகள்’, உமையவள் பதிப்பகம், காரைக்குடி, 1975 |
| 121. | ” | ‘தமிழ் இசைப்பாமாலை’ உமையவள் பதிப்பகம், 1975 |
| 122. | கண்ணதாசன் | ‘கவிதைகள் தொகுதி—3’, வானதி பதிப்பகம், சென்னை, 1968 |
| 123. | ” | ‘திரை இசைப் பாடல்கள்’, தொகுதி 1, வானதி பதிப்பகம், சென்னை–17, 1970 |
| 124. | ” | ‘திரை இசைப் பாடல்கள்’, தொகுதி 2, வானதி பதிப்பகம், சென்னை–17, 1971 |
| 125. | ” | ‘கவிதைகள் தொகுதி—4’ வானதிபதிப்பகம், சென்னை–17, 1974 |
| 126. | ” | ‘கவிதைகள் தொகுதி—5’ வானதி பதிப்பகம், சென்னை–17, 1972 |
| 127. | ” | ‘கவிதாஞ்சலி’ மேலது 1973 |
| 128. | ” | ‘தைப் பாவை’, வானதி பதிப்பகம், சென்னை–17, 1974 |

| | |
|---|---|
| 129. ” | 'ஸ்ரீகிருஷ்ண அந்தாதி', ஸ்ரீ விசயா பப்ளிசர்ஸ் சென்னை, 1976 |
| 130. ” | 'கவிதைகள் தொகுதி–6', வானதி பதிப்பகம், சென்னை–17, 1976 |
| 131. ” | 'ஆட்டனத்தி ஆதிமந்தி', வானதி பதிப்பகம், சென்னை—17, 1976 |
| 132. கண்ணன், ப., | 'குறள் நெறி இசையமுது' தென்றல் நூற்பதிப்புக் கழகம், சலகண்டபுரம், 1967 |
| 133. கண்மதியன் | 'கவிதைகள் (1)' கதிரவன் பதிப்பகம், சென்னை, 1972 |
| 134. ” | 'கவிதைகள் (2). கதிரவன் பதிப்பகம், சென்னை, 1976 |
| 135. ” | 'குறளமுதம்', கதிரவன் பதிப்பகம், சென்னை, 1976 |
| 136. ” | 'கவியரங்கக் கவிதைகள்', கதிரவன் பதிப்பகம், சென்னை, 1976 |
| 137. கணபதி ஆ, நெல்லை | 'அங்கயற்கண்ணி ஆனை விடு தூது', ஆண்டாள் பதிப்பகம், சென்னை |
| 138. கணேசன், க., | 'முண்டகக் கண்ணி அம்மன் பாமாலை', பாற்கடல் பதிப்பகம், சென்னை, 1975 |
| 139. கந்தசாமிக் கவிராயர், மு.ரா., | 'கண்ணகி வெண்பா', பார்வதி பதிப்பகம், அம்பாசமுத்திரம், 1972 |
| 140. கபிலன், வே, | சி.பி.சி. உலா உலகப் பதிப்பகம், சென்னை, 1970 |
| 141. கம்பரப்பர் (ஆதித்தர்) | 'அண்ணாத்துரைக் கோவை' சாந்தி நூலகம், சென்னை, 1969 |
| 142. கயிலை அரசன் | 'பூம்புகாரின் புதுவரவு', அறிவாலயம், சென்னை, 1970 |
| 143. கருணாநிதி, மு., | 'கவியரங்கில் கலைஞர்', கலைஞர் நூலகம், சென்னை, 1971 |
| 144. கருமலைத் தமிழாழன் | 'நெஞ்சின் நிழல்கள்', எழுத்தாளர் முன்னேற்றக் கழகம், தருமபுரி, 1976 |
| 145. கலாப்ரியா | 'தீர்த்தயாத்திரை', திருநெல்வேலி, 1975 |
| 146. கலைக்கூத்தன் | 'கவிதைகள்' தமிழ்ப் படைப்பு மேம்பாட்டுக் கழகம், பம்பாய், 1973 |

| | |
|---|---|
| 147. ” | 'பூங்கோதை' மேலது 1979 |
| 148. கலைச்செழியன், புவனை | 'பாட்டுப் புதையல்'. தணிகைப் பதிப்பகம், சென்னை, 1971 |
| 149. கலைவாணன் | 'உதயம்', அன்னை நிலையம், சென்னை, 1969 |
| 150. கலைவாணன் | 'காவை முருகன் பிள்ளைத் தமிழ்', அன்னை நிலையம், (வி.உ) சென்னை, 1969 |
| 151. ” | 'பித்தன்', கலைவாணன் பதிப்பகம், திருச்சி, 1974 |
| 152. கழகம் (பதி.ஆ) | 'சிறுவர் பாட்டு', கழக வெளியீடு, சென்னை, 1968 |
| 153. கன்னிதாசன் | 'காஞ்சித் திருமகன்', நல்லூர், சுசீந்திரம், 1970 |
| 154. காமராசன், நா., | 'சூரியகாந்தி' தமிழ்ப் புத்தகாலயம், சென்னை–5, 1971 |
| 155. ” | 'கறுப்பு மலர்கள்', மேலது, 1971 |
| 156. காமாட்சி நாதன், மா.க., | 'வள்ளற் பெருமான் பிள்ளைத் தமிழ்' மாடக்குளம், மதுரை. 1970 |
| 157. கார்முகிலன் | 'நெஞ்சவலை' முகிலன் பதிப்பகம், ஆம்பூர் (வ.ஆ), 1968 |
| 158. காவிரி நாடன் | 'துணிச்சலான துளிர்கள்' பாப்பா பதிப்பகம், சென்னை, 1975 |
| 159. ” | 'பூமழை' மேலது. 1979 |
| 160. கிரி, பி.வி., | 'ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே' பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 1976 |
| 161. கிருட்டிணன், ஆ., | 'பாரதிக் கும்மி' ஆத்தூர், சேலம், 1972 |
| 162. கிருஷ்ணசுவாமி, பி.எஸ்., | 'கடல் துமி', ஹிக்கின் பாதம்ஸ், சென்னை, 1968 |
| 163. கிருஷ்ணசாமி ரெட்டியார், அ.வெ.ரா. | 'ஸ்ரீருத்ரம்' திருவடிப் பதிப்பகம், திருச்சி, 1975 |
| 164. கிருட்டிணமூர்த்தி, க., | 'பூமாலை' செம்மங்குடி, சீர்காழி, 1969 |
| 165. கிறித்தவ இலக்கியச் சங்கம், (தொ.ஆ) | 'சிறுவர் கீதங்கள்', சென்னை, 1968 |

| | |
|---|---|
| 166. கீரன், மனசை, ப. | 'கவிதைப் பாலம்', வேணி வெளியீடு, குரோம்பேட்டை, சென்னை, 1973 |
| 167. குமணன் | 'கலைஞர் உலா' அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, 1970 |
| 168. குமாரவேலன், இரா., | 'பூங்குன்றன் கவிதைகள்', மல்லிகை நிலையம், சென்னை, 1973 |
| 169. குயிலன் | 'பரிசு', குயிலன் பதிப்பகம், சென்னை–17,- 1967 |
| 170. குருசாமி, எஸ், | 'இசையமுதம்' முருகன் யோகாசன ஆசிரமம், தூத்துக்குடி, 1967 |
| 171. குலோத்துங்கன் (வா.செ. குழந்தைச்சாமி) | 'குலோத்துங்கன் கவிதைகள்', கலைவாணி புத்தகாலயம், சென்னை–17, 1970 |
| 172. குழந்தை | 'காமஞ்சரி' பாரி நிலையம், சென்னை–1, 1968 |
| 173. " | 'புலவர் குழந்தை பாடல்' வேலா பதிப்பகம், ஈரோடு, 1972 |
| 174. குழந்தைவேலன், க., | 'திருக்குறள் அமுதம்' அன்னை மகாலெட்சுமி புத்தகாலயம், மதுரை–5, 1975 |
| 175. குன்றக்குடி அடிகளார் | 'கவியரங்கில் அடிகளார்' இளங்கோ பதிப்பகம், சென்னை–17, 1970 |
| 176. கேசவராமசாமி. எஸ்., | 'நாகநாதர் நான்மணிமாலை', பறம்புக்குடி, 1969 |
| 177. " | 'நாகநாதர் பதிற்றுப்பத்து', நயினார் கோயில். 1971 |
| 178. கோ. (விந்தராசன் ஆ) | 'சோழ மாகாவியம்', தைநூலகம் நாச்சியார் கோவில், 1975 |
| 179. கோவிந்தராசன், வ., | 'இதய ஓடை' நன்செய்ப் பதிப்பகம், சென்னை–17, 1967 |
| 180. கோவூர் இசைதாசன் | 'பூக்கூடை' எழில் பதிப்பகம், சென்னை–56, 1973 |
| 181. கோவேந்தன், த., | 'ஒன்றே உலகம்' நன்செய்ப் பதிப்பகம், சென்னை–15, 1967 |
| 182. " | 'தோழனைப் பாடுவேன்' இளங்கோ பதிப்பகம், சென்னை–17, 1969 |
| 183. " | 'காந்தி மொழிக்குறள்' இளங்கோ பதிப்பகம், சென்னை–17, 1969 |

| | |
|---|---|
| 184. ” | ‘வைகையும் வால்காவும்’ பாப்பா பதிப்பகம், சென்னை–34, 1972 |
| 185. ” | ‘புதியதோர் உலகம் செய்வோம்’ இளங்கோ பதிப்பகம், சென்னை–17, 1973 |
| 186. ” | ‘சிவப்புக் குயில்கள்’, கலைஞன் பதிப்பகம், சென்னை–17, 1975 |
| 187. ” | ‘கல்விச் செல்வம்’ வண்ணக் களஞ்சியம், சென்னை–14, 1976 |
| 188. சக்கரைப் புலவர் | ‘தமிழகத்தின் கலைச்செல்வங்கள்’ அசோகன் பதிப்பகம், சென்னை–17, 1971 |
| 189. சக்திக் கனல் | ‘கனகாம்பரமும் டிசம்பர்ப் பூக்களும்’ அகரம் சிவகங்கை, 1976 |
| 190. சணமுக சுந்தரம் | ‘தமிழ்ச்சிந்து’ திரு.வி.க. பதிப்பகம், ஈரோடு, 1971 |
| 191. ” | ‘சிந்து மாலை’ மேலது 1972 |
| 192. ” | ‘வைரச் சிந்து’ மேலது, 1973 |
| 193. சண்முக சுப்பையா | ‘கண்ணன் என் தம்பி’ தாசு புத்தக நிலையம், நாகர்கோவில், 1972 |
| 194. ” | ‘கவிதைகள்’ எழுத்து பிரசுரம், சென்னை, 1975 |
| 195. சண்முகம், ஏ., | ‘பாட்டுப் பறவை’ அழகுப் பதிப்பகம், காரைக்குடி, 1968 |
| 196. ” | ‘ஒரு குயிலின் குரல்’ பாண்டியன் பதிப்பகம், சென்னை, 1971 |
| 197. ” | ‘செந்நெல் வயல்கள்’, மேலது, 1972 |
| 198. ” | ‘குருவிக் கரம்பை சண்முகம் கவிதைகள்’ மேலது, 1976 |
| 199. சண்முகம், சு., | ‘சாரல்’, வளர்மதி நிலையம், சிதம்பரம், 1967 |
| 200. ” | ‘கங்குல் வெள்ளம்’ கலைமகள் நூலகம், சிதம்பரம் (வி.உ.) 1968 |
| 201. ” | ‘பாதமலர்கள்’ மேலது (வி.உ.) 1970 |
| 202. ” | ‘செக்கர் வானம்’, மேலது (வி.உ.) 1971 |
| 203. சந்திரகாசன், சேர., | ‘கவிதைகள்’ திருமுருகன் பதிப்பகம், சேலம், 1969 |

| | |
|---|---|
| 204. சந்திரசேகரன், சீனி. | 'இதய ஓசை' பாப்பா பதிப்பகம், சென்னை, 1970 |
| 205. சந்திரபாரதி | 'படைப்பாற்றல்' ரமேஷ் பதிப்பகம், மதுரை, 1975 |
| 206. சரவணபவானந்தா | 'பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலர்' இராமன் பதிப்பகம், சென்னை, 1970 |
| 207. சவர்கலால், ச, | 'பொற்கிழிக் கவிதை', தமிழ்ச் சங்கம், திருப்பத்தூர், 1970 |
| 208. சற்குருதாசன் | 'இருடியர் பட்டிக் குருநாதர் பிள்ளைத்தமிழ்' இரெட்டியபட்டி சுவாமிகள் இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1971 |
| 209. சற்குருதாசன் | 'பேரின்ப வேட்கை', மேலது, 1972 |
| 210. சனார்த்தனம், ப., | 'செவியினுக்கணி' செயா அச்சகம், திருவனந்தபுரம், 1974 |
| 211. சாமி. பழனியப்பன் | 'மலர்கள்' வைரம் பதிப்பகம், சென்னை–5, 1969 |
| 212. சாலை இளந்திரையன் | 'பூத்தது மானுடம், பாரி நிலையம் (வி.உ.) சென்னை, 1968 |
| 213. ” | 'கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவை', பாரி நிலையம், (வி.உ.) சென்னை, 1968 |
| 214. ” | 'வீறுகள் ஆயிரம்' மேலது, 1970 |
| 215. ” | 'நஞ்சருக்குப் பஞ்சணையோ' அறிவியக்கப் பேரவை, சென்னை, 1972 |
| 216. ” | 'உரைவீச்சு' மேலது, 1975 |
| 217. ” | 'நடை கொண்டபடை வேழம்' தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1976 |
| 218. சிதம்பரநாதன், வ.ம., | 'அகர ஊசி ஐம்பது' கண்ண மங்கலம், வேலூர் (வ.ஆ.), 1976 |
| 219. சிதம்பரன், முகவை | 'நெருஞ்சிப்பூ', வள்ளுவம் வெளியீடு, சென்னை–44, 1968 |
| 220. சிதம்பரனார், சாமி, | 'அணைந்த விளக்கு', இலக்கிய நிலையம், சென்னை–24, 1974 |
| 221. சிவராமகிருஷ்ணன், ப., | 'முத்துமாலை' தமிழரசிப் பதிப்பகம், அருப்புக்கோட்டை, 1967 |
| 222. சிவிகைக் கிழார் | 'விடியுமா ?' சிவியாம்பாளையம், நாமக்கல், 1976 |

| | |
|---|---|
| 223. சிற்பி | 'சிரித்த முத்துக்கள்' மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1968 |
| 224. " | 'ஒளிப்பறவை' மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1971 |
| 225. " | 'சர்ப்பயாகம்', அன்னம் சிவகங்கை, 1976 |
| 226. சின்னமணி, எஸ்.ஆர்., | 'கவிதைக் கதம்பம்' கடையாலுருட்டி, நெல்லை மாவட்டம், 1969 |
| 227. சின்னண்ணன், அ., | 'கவிதைப் பூங்கா' பாரி நிலையம், சென்னை, 1972 |
| 228. " | 'தமிழிசை மஞ்சரி' கலையகம், சென்னை–30, 1976 |
| 229. சீனிச்சாமி, துரை | 'அந்தி', எழுத்து பிரசுரம், சென்னை, 1974 |
| 230. சீனிவாசராகவன், அ. (நாணல்) | 'வெள்ளைப் பறவை', மொர்குரி புத்தகக் கம்பெனி' (வி.உ.) கோவை–1, 1967 |
| 231. சுத்தானந்த பாரதியார் | 'குழந்தையின்பம்' சுத்தானந்த நூலகம், சென்னை–20, 1969 |
| 232. சுந்தரம், எஸ்.டி. | 'காந்தியுகம்' உலக நூலகம், சென்னை–14, 1971 |
| 233. " | 'கவியின் குரல்' மேலது, 1971 |
| 234. சுந்தரகணேசன், க.மு., | 'பழனி அந்தாதி' எழில் மலர்ப் பதிப்பகம், ஆத்தூர், 1967 |
| 235. " | 'புதுக்கோட்டை நாரதர் மலை, மாரியம்மன் பிள்ளைத்தமிழ்' எழில் மலர்ப் பதிப்பகம், ஆத்தூர் (சே), 1972 |
| 236. சுந்தர சண்முகனார் | 'அண்ணா நாற்பது' புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுச் சேரி–1, 1969 |
| 237. சுந்தரராசன், த.அ., | 'வேங்கையின் வேந்தன்' அழகாலய வெளியீடு, சென்னை, 1973 |
| 238. சுந்தரேசன், கே.என்., | 'மின்னிற்று' இராதா பதிப்பகம், கோவை–9, 1968 |
| 239. " | 'பழுத்தன' குறிஞ்சிப் பதிப்பகம், திருச்சி–11, 1969 |
| 240. " | 'காய்த்தன' மேலது 1970 |
| 241. " | 'பூத்தன' மேலது, 1970 |

| | |
|---|---|
| 242. சுந்தா | 'இதய மலர்கள்' அழகன் பதிப்பகம், மதுரை—1, 1970 |
| 243. சுப்பு ஆறுமுகம் | 'விடுதலை வேள்வி' மல்லிகைப் பதிப்பகம், சென்னை–17, 1969 |
| 244. ,, | 'காந்தி வந்தார்', இளங்கோ பதிப்பகம், சென்னை–17, 1969 |
| 245. சுப்பையன்,ஏ.தெ., | 'முறையீடு' பாட்டாளிகள் வெளியீடு, சென்னை–21, 1969 |
| 246. சுப்ரமணியம் புத்தனேரி,ரா. | 'அம்புலிப்பாட்டுப் பாடாதே', கழகம், சென்னை, 1974 |
| 247. சுமுகி | 'ஸ்ரீகுன்றக்குமரன் பொடிவிடுதூது' பவிசு நிலையம், மதுரை—1, 1974 |
| 248. சுரதா | 'சுவரும் சுண்ணாம்பும்' சுரதா பதிப்பகம், சென்னை–78,. 1974 |
| 249. ,, | 'துறைமுகம்' மேலது, 1976 |
| 250. செங்கை அழகன் | 'நெஞ்சப் பூக்கள்' நன்செய்ப் பதிப்பகம், சென்னை, 1969 |
| 251. செங்கைப் பொதுவன் | 'கொங்குக்குமரி பிள்ளைத்தமிழ்', சாந்தி பதிப்பகம், மோகனூர் (சே), 1969 |
| 252. செந்தமிழ்க்கிழார் (கருப்ப சாமி) | 'காவிரி' புளியம்பட்டி, அருப்புக் கோட்டை, 1973 |
| 253. செந்தமிழ்ச் செழியன் | 'இடிமுழக்கம்' வ.உ.சி. இலக்கியக் கழகம், சென்னை, 1974 |
| 254. ,, | 'பாதையும் பயணமும்' திருக்குறள் திருநெறிக்கழகம், சென்னை, 1975 |
| 255. செந்தமிழ்ச்செல்வன் | 'அண்ணா வனப்பியம்' என்ற அண்ணாகாவியம், பாப்பா பதிப்பகம், (வி.உ.) சென்னை–34, 1968 |
| 256. செந்தாழை இரான் | 'ஆத்ம வேதனை' கோமளா பதிப்பகம், (வி.உ.) நாகர்கோவில், 1975 |
| 257. செம்பை சேவியர் வீர பாண்டியன்,சுப., | 'புதுத்தென்றல்' பாரிநிலையம், (வி.உ.) சென்னை–1, 1972 |
| 258. செரீபு, கா.மு., | 'மச்சகந்தி' தேவி நிலையம், சென்னை–14, 1972 |
| 259. ,, | 'நபியே எங்கள் நாயகமே' சீதக்காதி நூல் வெளியீட்டகம்' சென்னை–21, 1972 |

| | |
|---|---|
| 260. செல்ல கணபதி | 'வாண்டுகளே உங்களைத்தான்', பழநியப்பா பிரதர்ஸ், சென்னை, 1976 |
| 261. செல்லப்பா, சி.சு., | 'மாற்று இதயம்' எழுத்து பிரசுரம், சென்னை, 1974 |
| 262. " | 'நீ இன்று இருந்தால்', எழுத்து பிரசுரம், சென்னை, 1974 |
| 263. செல்லமுத்து, கரு, | 'உதிரிப் பூக்கள்' இலக்கிய வட்டம், புதுக்கோட்டை, 1976 |
| 264. செல்வகணபதி, பொன் | 'கவிதைகள்' நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை–2, 1972 |
| 265. செல்வ பாரதி | 'பனிப்பூக்கள்' கலைஞன் பதிப்பகம், சென்னை–17, 1967 |
| 266. " | 'மயில் இறகுகள்' பூங்கொடி பதிப்பகம், சென்னை–4, 1975 |
| 267. செல்வராசன், மா., | 'வைகறை மலர்கள்', வண்ணமலர் வெளியீடு, சென்னை–14, 1973 |
| 268. செவ்வியன் | 'நெருப்புப் பூக்கள்' கோதை பதிப்பகம், சென்னை–78, 1975 |
| 269. சேதுராமன், வா.மு. | 'தமிழ் முழக்கம்' கவியரசன் பதிப்பகம், சென்னை–2, 1968 |
| 270. " | 'எண்ணச் சுடர்', மேலது, 1975 |
| 271. " | 'தாய்மண்', மேலது, 1976 |
| 272. சோதிவாணன், இரா., | 'ஒற்றையடிப் பாதை' சோராதே பதிப்பகம், சோளிங்கபுரம், 1976 |
| 273. சோமசுந்தரம் அரு., | 'பக்திப்பாக்கள்', பொன்முடி பதிப்பகம், காரைக்குடி, 1967 |
| 274. " | 'திரு.வி.க. மேலது, 1968 |
| 275. " | 'ஐம்பொறிகள்', மேலது, 1969 |
| 276. " | 'கம்பன் கண்ட அறநெறி', மேலது, 1971 |
| 277. " | 'மிருகங்கள்' மேலது, 1972 |
| 278. " | 'கதிர்காமமுருகன்', மேலது, 1973 |
| 279. " | 'நூலகம்' மேலது, 1973 |
| 280. " | 'பாண்டிமாதேவி', மேலது, 1974 |
| 281. " | 'ஐரோப்பா', மேலது, 1974 |
| 282. " | 'செக்கிழுத்த செம்மல்', மேலது, 1976 |

| | |
|---|---|
| 283. ” | ‘இருபது அம்சத் திட்டம்’, மேலது, 1976 |
| 284. ” | ‘மறைமலையடிகள் பிள்ளைத்தமிழ்’ மேலது, 1976 |
| 285. சோலை இருசன் | ‘எரியும் திரிகள்’, புரட்சிப் பண்ணை, சேலம்–7, 1972 |
| 286. சோழன் (அ. நடராசன்) | ‘பழக்குலை’ குறிஞ்சிப்பாடி (தெ.ஆ.), 1971 |
| 287. சைதை ஒடையான் | ‘போர்க் களத்தில் பாரதம்’ நன்செய்ப் பதிப்பகம், சென்னை–15, 1967 |
| 288. சௌந்தரா கைலாசம் | ‘புதிய விழிப்பு’ பொள்ளாச்சி, 1975 |
| 289. ஞானக் கூத்தன் | ‘அன்று வேறு கிழமை’ இலக்கியச் சங்கம், சென்னை, 1973 |
| 290. ஞானச் செல்வன் (கோ. திருஞான சம்பந்தன்) | ‘பாடிவந்த நிலா’ அறிவு நிலையம், திருவாரூர், 1968 |
| 291. ஞானம்பாடி | ‘திருவடிமலர்கள்’ சென்னை–24, 1973 |
| 292. தங்கப்பா, ம.இலெ., | ‘பாடுகிறேன்’ இளங்கோ பதிப்பகம், சென்னை–17, 1973 |
| 293. ” | ‘எங்கள் வீட்டுச் சேய்கள்’, தமிழிலக்கிய வெளியீடு, சென்னை–24, 1973 |
| 294. ” | ‘மலைநாட்டு மலர்கள்’, கலைஞன் பதிப்பகம், சென்னை–17, 1975 |
| 295. ” | ‘பாடல்கள் அல்ல’ அவ்வை நகர், புதுச்சேரி, 1976 |
| 296. தங்கவேல், அ., | ‘மழைப்பந்தல்’, தமிழ்க்கவிஞர் மன்றம், திருத்துறைப்பூண்டி, 1976 |
| 297. தங்கவேலு, ச., | ‘இன்னிசை அமுது’, பூதப்பாண்டி, 1969 |
| 298. தஞ்சைவாணன் (துரை. சீனிவாசன்) | ‘கூட்டுறவுக் குறவஞ்சி’, முத்தமிழ் மன்ற வெளியீட்டகம், சென்னை–18, 1968 |
| 299. ” | ‘தமிழ்த்தாயின் ஆணை’, மேலது, 1971 |
| 300. தட்சிணாமூர்த்தி, மா., | ‘திவ்யதரிசனம்’ செயகுமாரி ஸ்டோர்ஸ் (வி.உ.) நாகர்கோவில், 1976 |

| | |
|---|---|
| 301. தண்டபாணி தேசிகர், எம்.எம்., | 'இசைத் தமிழ்ப் பாமாலை', கலையகம், சென்னை–17, 1967 |
| 302. தண்டாயுதம், இரா., | 'மலரும் மலர்', தமிழ்ப்புத்தகாலயம், சென்னை–5, 1975 |
| 303. தணிகைச் செல்வன் | 'கவிதைகள்' முற்போக்கு இலக்கியப் பதிப்பகம், மதுரை–1, 1975 |
| 304. தம்பி சீனிவாசன், (அ. ஆசீர்வாதம்) | 'காலக்கறையான்' மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1976 |
| 305. " | 'சிவப்பு ரோஜாப்பூ', வானதி பதிப்பகம், சென்னை–17, 1976 |
| 306. தம்பி. சீனிவாசன் (அ. ஆசீர்வாதம்) | காலத்தின் ஒரத்தில்', மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1979 |
| 307. தமிழரசன் | 'கவிதைகள்' தமிழரசன் பதிப்பகம், இடைப்பாடி (சே) 1969 |
| 308. " | 'காதல் பாவை' மேலது, 1970 |
| 309. தமிழன்பன் | 'சின்னஞ்சிறு குழந்தைப் பாடல்கள்' கற்பனை நூற்பதிப்பகம், சென்னை–17 |
| 310. " | 'கவிதைகள்' மங்கள நூலகம், சென்னை–34 |
| 311. " | 'தோணி வருகிறது', மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1973 |
| 312. தமிழவேள் (ச. கிருட்டிண ராசா) | 'கவிதையும் காவியமும்', புலவர் பதிப்பகம், புதுச்சேரி–3, 1967 |
| 313. தமிழோவியன் | 'பாட்டுப்பூ' தமிழருவிப் பதிப்பகம், சென்னை–1, 1967 |
| 314. " | 'அழகின் அலைகள்', மேலது, 1968 |
| 315. தமிழ்ஒளி | 'பாடு பாப்பா', பாவாணர் பதிப்பகம், சென்னை–30, 1967 |
| 316. தமிழ்க்கனல் | 'கவிதைகள்', நால்வர் பதிப்பகம், கோவை–25, 1975 |
| 317. தமிழ்க்குமரன், தா.சு.ஆ., | 'தமிழருவி', தேவராசாத்தி வெளியீட்டகம், 1973 |
| 318. தமிழ்நம்பி | 'இதயப்பூங்கா', (வி.உ.) பாரி நிலையம், சென்னை–1, 1967 |
| 319. தமிழ் நாடன் | 'வேள்வி' பாபு புத்தக நிலையம், சேலம்–6, 1972 |
| 320. தமிழ்நாடன் | 'காமரூபம்', மேலது, 1973 |

| | |
|---|---|
| 321. ” | 'மண்ணின் மாண்பு', மேலது, 1973 |
| 322. தமிழ்ப் பரிதி | 'ஓ! ஓ! புரட்சி நெஞ்சங்களே! செயலக்குமி பதிப்பகம், ஈரோடு–3, 1975 |
| 323. தமிழ்மணி, அர., | 'நிலாமேடை', தாதகாபட்டி, சேலம், 1975 |
| 324. தமிழ் மாறன் | 'அண்ணா அறுபது' வானதி பதிப்பகம், சென்னை–17 1968 |
| 325. தமிழ்முடி | 'கீர்த்தனைகள்' தமிழ்முடி நிலையம், சென்னை–4, 1974 |
| 326. ” | 'பிள்ளையார் சிலை' வானதி பதிப்பகம், சென்னை–1967 |
| 327. தருமு. ஔரூப் சீவராம் | 'கைப்பிடியளவு கடல், மணி பதிப்பகம், சென்னை–1967 |
| 328. தாகா, அதிரை. மு., | 'கவிதைத்தாய்', அறிவுக்கதிர் பதிப்பகம், அதிராம்பட்டினம், 1967 |
| 329. ” | 'நபிபுகழ்மாலை', பொன்முடி பதிப்பகம், காரைக்குடி, 1974 |
| 330. ” | 'இருமணிகள்', அதிராம்பட்டினம், 1974 |
| 331. தாணு | 'கொங்கையின் இரகசியம்', சித்த மகுட பிரசுரம், சென்னை–30, 1969 |
| 332. தாமோதரன், தி.இரா., | 'எதிர்கோடுகள்', வெற்றிவேல் பிரசுரம், மதுரை–1, 1975 |
| 333. திருச்சி தியாகராசன் | 'வெளிச்சம்' (கவிதைச்சரம்) வேங்கைப் பதிப்பகம், சென்னை–24, 1974 |
| 334. திருச்சி பாரதன் | 'அழகு நிலா' மயில் பதிப்பகம், திருச்சி–1. 1972 |
| 335. ” | 'பார்வதி பாலன் பாமாலை' மேலது, 1972 |
| 336. ” | 'அறுபத்து வீடுடைய அழகன்', மேலது, 1974 |
| 337. திருச்சி பாரதன் | 'இசைத் தென்றல்', மேலது, 1975 |
| 338. ” | 'புவனேசுவரி தாயே', மேலது, 1976 |
| 339. திருப்பதி, எ.வே., | 'சிறுவர் இலக்கியம்', புது இலக்கியப் பதிப்பகம், சென்னை–1, 1967 |
| 340. திருமார்பன் (குரு. மாரியப்பன்) | 'காதலமுதம்', கவிதைப் பண்ணை, சாத்தூர், 1971 |

| | |
|---|---|
| 341. திருலோக சீத்தாராம் | 'கந்தருவ கானம்' கலைஞன் பதிப்பகம், சென்னை–17, 1967 |
| 342. திருவரசன் (எ.வே. திருப்பதி) | 'புதுமலர்' புது இலக்கியப் பதிப்பகம், (வி.உ.) சென்னை–1, 1969 |
| 343. திருவுடைமார்பன் | 'நிலவொளி', அன்னம் பதிப்பகம், சேலம்–9, 1972 |
| 344. துரை. கல்லை. ஆ., | 'இதயமலர்கள்' தமிழ்ப் புத்த காலயம், சென்னை–5, 1969 |
| 345. துரைக் கண்ணன், நாரண & சுப்ரமணியம் புத்தனேரி, ரா., | 'சின்னஞ் சிறுகிளியே', வானதி பதிப்பகம், சென்னை, 1970 |
| 346. துரை. சுவாமி, சி., | 'திருமறை' மனோன்மணி பதிப்பகம், சென்னை–17, 1968 |
| 347. துறைவன் (மொ.பெ.ஆ.) | 'வள்ளத்தோள் கவிதைகள்', சாகித்ய அகாதெமி, சென்னை–6, 1971 |
| 348. தெசிணி | '23 கவிதைகள்' பாரி நிலையம். (வி.உ.) சென்னை–1, 1967 |
| 349. தெசிணி | வைகறை வானங்கள், கவிதை வெளியீடு, சென்னை, 1974 |
| 350. தென்னவன் (ந. சுப்பையா) | 'மலர்ந்த பின்பு', தேனி, 1971 |
| 351. தேவதேவன் | 'குளித்துக் கரையேறாத கோபியர்கள்' தூத்துக்குடி, 1976 |
| 352. தேவநேயச் சித்திரன் | 'உரை', சித்திரச் செல்வி பதிப்பகம், ஆரூர், 1971 |
| 353. ” | 'கலைஞர் ஐம்பது', மேலது, 1974 |
| 354. தேவநேயப் பாவாணர் | 'இசைத் தமிழ்க் கலம்பகம்' (முதல் பகுதி) க.க. நகர், சென்னை–78 (வரும்) |
| 355. ” | 'இசையரங்கு இன்னிசைக் கோவை' உலகத் தமிழ்க் கழகம், பறம்புக்குடி, 1969 |
| 356. தேன்முகிலன் (தே. முத்துக் கிருட்டிணன்) | 'அன்னை' இராயபுரம், சென்னை–13, 1975 |
| 357. தேவி கருமாரிதாசர் | 'ஸ்ரீ ஆதி சங்கரர் பிள்ளைத் தமிழ்' சுவாமி நடேசனார் நிகேதனம், சென்னை–1, 1975 |
| 358. ” | 'காமாட்சியம்மை பிள்ளைத் தமிழ்' மேலது, 1975 |

| | |
|---|---|
| 359. ” | ‘சந்திரசேகரேந்திர சுவாமிகள் பிள்ளைத்தமிழ்’ சூப்பர்பவர் வெளியீடு, சென்னை—1, 1976 |
| 360. ” | ‘ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகள் பிள்ளைத் தமிழ்’ சூப்பர்பவர் வெளியீடு, சென்னை–1, 1976 |
| 361. தேவி கருமாரிதாசர் | ஸ்ரீமத் சுவாமி இராமதாஸர் பிள்ளைத்தமிழ்,. மேலது, 1976 |
| 362. நக்கீரன் | ‘இசையணங்கு’ தமிழ்மனை, வேலூர் (வ.ஆ.) 1967 |
| 363. ” | ‘அண்ணா நாற்பது’ நன்னன் நிலையம், சென்னை–5, 1968 |
| 364. ” | ‘உதிர்ந்த முத்துக்கள்’ மேலது, 1972 |
| 365. நடராசன், வெ., | ‘புதிய இராகங்கள்’ தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், பொள்ளாச்சி, 1975 |
| 366. நரசிங்கப் பெருமாள், ஆனை., | டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி தோழிவிடுதூது, புலவர் செந்தமிழ்க் கல்லூரி சென்னை, 1972 |
| 367. ” | ‘அருகன் அந்தாதி’ ஜைன இளைஞர் மன்றம், சென்னை, 1976 |
| 368. நவராசு செல்லையா | ‘செங்கரும்பு’ இராசமோகன் பதிப்பகம், சென்னை–33, 1972 |
| 369. நடேச கவுண்டர், கு., | ‘மயில் விடு தூது’ தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயில், பழநி |
| 370. நாகப்பன், அரு, | ‘கவிரங்கில் கம்பன்’ கண்ணா பதிப்பகம், சென்னை–17, 1975 |
| 371. நாச்சி குளத்தார் | ‘நன்னிலை நானூறு’ நாச்சி குளத்தார் பதிப்பகம், உதய மார்த்தாண்டபுரம், 1968 |
| 372. ” | ‘நபிமொழி நாற்பது’, திரீயெம் பப்ளிஷர்ஸ், சென்னை, 1969 |
| 373. ” | ‘செழுஞ்சுவைப்பா ஆயிரம்’ பாரி நிலையம் (வி.உ.) சென்னை–1, 1969 |
| 374. ” | ‘நன்னெறிச் சோலை’ பாரி நிலையம் (வி.உ) சென்னை–1, 1969 |
| 375. ” | ‘முதுமொழி வெண்பா’ மக்கள் பதிப்பகம், (வி.உ) சென்னை–23 (1971 |
| 376. ” | ‘மாணவர்க்கு’ மேலது, (வி.உ.) 1971 |

| | |
|---|---|
| 377. ” | 'நல்லுரை வெண்பா' மேலது (வி.உ.) 1972 |
| 378. ” | 'நல்வழிவெண்பா' தணிகைப் பதிப்பகம், (வி.உ.) சென்னை–1, 1972 |
| 379. ” | 'சில்லறைக் கோவை', தணிகைப் பதிப்பகம் (வி.உ) சென்னை–1, 1972 |
| 380. ” | 'நெஞ்சில் நிறைந்த நினைவுகள்' மேலது (வி.உ) 1972 |
| 381. ” | 'மக்கத்துப் பூங்கா' நாச்சிகுளத்தூர் பதிப்பகம்' உதய மார்த்தாண்ட புரம், 1976 |
| 382. நாச்சியப்பன், நாரா., | 'சான்றோர்' மணிவாசகர் நூலகம் சிதம்பரம், 1967 |
| 383. ” | 'செம்மை நலம்' மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1967 |
| 384. ” | 'கல்வி நெறி' மேலது, 1967 |
| 385. நாஞ்சில் ஷா., | 'பெண்மணியும் கண்மணியும்', பாவலர் பாசறை, சென்னை, 1975 |
| 386. நாரணோ ஜெயே ராமன் | 'வேலி மீறிய கிளை' க்ரியா சென்னை, 1976 |
| 387. நாவரசன் (அ. தனுக்கோடி) | 'திருமலைப் பூவை' நாவரசன் பதிப்பகம், சென்னை–4, 1973 |
| 388. நாவரசன், நன்னியூர் | 'கொள்கைப் பிரகடனம்' இலக்கிய வட்டம், கரூர், 1975 |
| 389. நாவழகன் (சி.என். சுந்தரம்) | 'கல்வெட்டுக்கள்' சென்னை–81, 1976 |
| 390. நாவுக்கரசன் | 'தமிழ்க்கனவு', பாரிநிலையம் (வி.உ.) சென்னை–1, 1970 |
| 391. நிர்மலா விஸ்வநாதன் | 'கண்ணாமூச்சி', கோவை, 1975 |
| 392. நீலபத்மனாபன் | 'கவிதைகள்' எழுத்து பிரசுரம், சென்னை, 1975 |
| 393. பக்தவத்சலன், மு., | 'அழகு ஆற்றுப்படை, செந்தமிழ் நிலையம், சென்னை, 1975 |
| 394. பகவதிப் பாண்டியன் த., | 'இயக்கம்' வள்ளுவம் வெளியீடு, சென்னை–44, 1968 |
| 395. பசும்பொற்கிழார் (இராசாராம்) | 'ஒரு நூறு உவமைக்குறள்' சித்த நெறிக் கழகம், பாலையம்பட்டி, 1970 |

| | |
|---|---|
| 396. பசும்பொற்கிழார் | 'சித்த நெறிப் பாடல்கள்', சிவானந்த சித்த நெறிப் பயிற்சிக் கழகம், பாலையம்பட்டி, 1972 |
| 397. பசுவய்யா (சுந்தரராமசாமி) | 'நடுநிசி நாய்கள்', க்ரியா சென்னை, 1975 |
| 398. பண்ணை சண்முகம் | 'வீரமாமுனிவர் பிள்ளைத் தமிழ்' தமிழ் இலக்கியக் கழகம், திருச்சி, 1976 |
| 399. பத்ம குமாரி | 'அருவிச்சாரல்' அன்பு நிலையம், சென்னை–1, 1967 |
| 400. பரந்தாமனார், அ.கி., | 'கற்பின் வெற்றி' பாரி நிலையம், சென்னை–1, 1975 |
| 401. பரமசிவன், க., | 'குமரிமகள்', கவிஞர் வெளியீடு, ஆரணி, 1969 |
| 402. பரிணாமன் (கிருட்டிணன்) | 'ஆகஸ்டும் அக்டோபரும்' நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (வி.உ) சென்னை, 1974 |
| 403. பழநி, ஆ., | 'அனிச்ச அடி', கழகம் சென்னை–1, 1973 |
| 404. பழநிவேலனார், வி.பொ., | 'திருமணப் பரிசு' சாமியப்பா நகர், திருத்துறைப்பூண்டி, 1971 |
| 405. பன்னீர்ச் செல்வன், தரங்கை | 'நறுந்துணர்' முதனை (தெ.ஆ) 1971 |
| 406. பாஸ்கரபிள்ளை, கே., | 'கலங்கரை விளக்கம்' தமிழ்ப் புத்தகாலயம், (வி.உ) சென்னை–5, 1974 |
| 407. பாரதிப்பித்தன் | 'நட்புறவுக் கவிமலர்கள்' நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (வி.உ) சென்னை, 1969 |
| 408. பாரதிநேசன் (ப.சு. இராமசாமி) | 'நாடும் நடப்பும்', பாரதி பேரவை, எட்டயபுரம், 1971 |
| 409. " | 'பாட்டும் பயனும்', மேலது, 1971 |
| 410. " | 'ஆசிய தாரகை', மேலது, 1975 |
| 411. பாரி | 'வெற்றி மாலை', உலா வெளியீடு, பொன்னேரி, 1968 |
| 412. பாலசுந்தரம், ச., | 'யான் கண்ட அண்ணா' தாமரை வெளியீட்டகம், தஞ்சாவூர், 1971 |
| 413. " | 'கலைஞர் வாழ்க', மேலது, 1973 |
| 414. பிச்சமூர்த்தி, ந., | 'குயிலின் சுருதி' புக்வென்சர், சென்னை–17, 1970 |

| | | |
|---|---|---|
| 415. | ” | 'கவிதைகள்' எழுத்து பிரசுரம், சென்னை, 1975 |
| 416. | பிரேம்லதாலால் | 'வள்ளியும் தோழரும்', கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1970 |
| 417. | புதுமை வாணன், மா., | 'தீக்குளித்த செம்மல் சின்னச் சாமி', கீரைத்துறை, மதுரை, 1968 |
| 418. | புதுமை வாணன் | 'கட்டில் வீணை', புதுமைப் பதிப்பகம், சேலம், 1975 |
| 419. | புலமைப்பித்தன் | 'புரட்சித் தீ' திருவள்ளுவர் மன்றம், சென்னை–14, 1967 |
| 420. | ” | 'பாவேந்தர் பிள்ளைத்தமிழ்' பாரதிதாசன் மன்றம், கோவை, 1970 |
| 421. | புவியரசு | 'இதுதான்' அன்னம், சிவகங்கை, 1975 |
| 422. | பூபதி, நெ.அ., | 'கலைஞர் அண்ணா' தேன்மொழி வெளியீடு, சென்னை–15, 1973 |
| 423. | பூமிநாதன், காரை.ந, | 'பொன் விரிப்பு' பொன்முடி பதிப்பகம், காரைக்குடி, 1970 |
| 424. | பூவண்ணன் | 'பாட்டுத் தோட்டம்', குழந்தை இலக்கியக் கழகம், சென்னை–9, 1970 |
| 425. | பெருமாள், தே.ப., | 'வாசவதத்தை' வானதி பதிப்பகம், சென்னை–17, 1969 |
| 426. | பெருமாள், ஏ.என்., | 'பால்மதி' ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் (வி.உ) நாகர்கோவில், 1975 |
| 427. | பேகன் (பாண்டியன்) | 'காதற் பரிசு', செல்லம் வெளியீட்டகம், மதுரை, 1970 |
| 428. | ” | 'திருக்கை வழக்கம்', மேலது, 1971 |
| 429. | ” | 'தமிழ்க் கீதாஞ்சலி', மேலது, 1974 |
| 430. | ” | 'பாவிடுதூது' மேலது (வரும்) |
| 431. | பொன்மாரி | 'அண்ணா பிள்ளைத் தமிழ்', புலவர் பண்ணை, சின்னாளபட்டி, 1972 |
| 432. | பொன்ராசன், ரா., | 'இளைய பாரதம்', பி.கே. புக்ஸ், மதுரை, 1976 |
| 433. | பொன்னடியான் | 'ஓர் இதயத்தின் ஏக்கம்', இந்திரா பதிப்பகம், சென்னை–35, 1969 |
| 434. | ” | 'ஒரு கைதியின் பாடல்கள்', மேலது, 1971 |

| | |
|---|---|
| 435. பொன்னிவளவன் | 'கல்லறை ரோஜா', முத்து வெளியீடு, சென்னை–13, 1973 |
| 436. " | 'கவிதைகள்' (2), மேலது, 1975, |
| 437. " | 'மாதவி காவியம்' மாதவி கலை மன்றம், சென்னை–21, 1975 |
| 438. மகாகவி (உருத்திரமூர்த்தி) | 'இரண்டு காவியங்கள்', பாரி நிலையம்,. சென்னை–1, 1974 |
| 439. மகி (குருசாமி) | 'மேகமோகம்' அன்னபூர்ணா பிரசுரம், சென்னை–61, 1970 |
| 440. மணி, நா.ஆ,சு., | 'காதல் களஞ்சியம்' கலாமணி பதிப்பகம், கரூர், 1974 |
| 441. மணி. சி. (வே. மாலி) | 'வரும் போகும்' க்ரியா, சென்னை, 1974 |
| 442. " | 'ஒளிச்சேர்க்கை' சாரல் வெளியீடு, சேலம், 1973 |
| 443. மணித்தாமரையார் (அடியன் மணிவாசகன்) | 'தமிழ் முழக்கம்', பொட்டல்புதூர், நெல்லை, 1968 |
| 444. மணிமொழி | 'தேன் கிண்ணம்', பூங்கொடி பதிப்பகம், சென்னை–1970 |
| 445. மணியன், இரா, | 'அண்ணாக் கோவை', கலை வாணி புத்தகாலயம், சென்னை–17, 1970 |
| 446. மணிவண்ணன் (நா. பார்த்த சாரதி) | 'கவிதைகள்', நவபாரதி பிரசுரம், கோவை–1, 1969 |
| 447. மணிவண்ணன், கோ., | 'சுந்தரி சபதம்', சுபாவிந்த் பதிப்பகம், மதுரை. 1976 |
| 448. மணிவண்ணன், நாரண, | 'இனிப்பும் சிரிப்பும்', பிரேமா இல்லம், நளன்புத்தூர், 1971 |
| 449. மணிவேந்தன் (மு.பி. பால சுப்ரமணியம்) | 'எத்தனை கோடி இன்பம்', முத்து நிலையம், இலஞ்சி, 1969 |
| 450. மதி | 'பாப்பாப் பத்து', நிலவகம், வீரன்குடிகாடு, 1974 |
| 451. மதிவாணன், பொன்னகர் | 'குளிர்காவிரி', புதுஇலக்கியப் பதிப்பகம், சென்னை–1, 1969 |
| 452. மதிவாணன்,மு., | 'கவிதைக் கனிகள்', தமிழன்னை நூலகம், கூறைநாடு, 1967 |
| 453. மாசிலாமணி, சோ., | 'ஓலைச்சுவடி', வள்ளலார் பதிப்பகம், மதுரை, 1969 |

| | |
|---|---|
| 454. மாடசாமி, சி. | 'இசைத்தேனமுது', புட்பம் பதிப்பகம், மதுரை–20, 1976 |
| 455. மாணிக்கம், சி., | 'தேனமுதம்', வானதி பதிப்பகம், சென்னை–17, 1968 |
| 456. மாணிக்கம், துரை. (பெருஞ்சித்திரன்) | 'ஐயை', 'தென்மொழி', சென்னை–5, 1968 |
| 457. " | 'பாவியக் கொத்து', மேலது, 1969 |
| 458. " | 'எண்சுவை எண்பது', மேலது, 1969 |
| 459. " | 'பள்ளிப் பறவைகள்', வள்ளுவர் நூலகம், இராசிபுரம், 1972 |
| 460. " | 'மகபுகுவஞ்சி', மேலது, 1973 |
| 461. மின்னுர் சீனிவாசன் | 'கவிதைகள்', பாரி நிலையம், சென்னை–1, 1972 |
| 462. " | 'வண்ண வண்ண மீன்கள்', மேலது, 1973 |
| 463. மீரா (மீ. இராசேந்திரன்) | 'மூன்றும் ஆறும்', மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1967 |
| 464. " | 'கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1971 |
| 465. " | 'ஊசிகள்', மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1974 |
| 466. மீனவன் | 'கொஞ்சும்', 'குழந்தை', வெண்ணிலா மன்றம், நாகைப் பட்டினம், 1972 |
| 467. மீனாட்சி. இரா., | 'நெருஞ்சி', சாரல் வெளியீடு, சென்னை, 1970 |
| 468. முகம்மது அலி, பா.ஐ., | 'கலைஞர் நூற்றந்தாதி', அழகிரி பதிப்பகம், சென்னை–24 |
| 469. முத்துக்கிருட்டிணன், மு., | 'குறளமுதம்' செல்வி பதிப்பகம், சங்ககிரி வட்டம், 1967 |
| 470. " | 'அழகு மலர்கள்', சித்திரகூடம், பழநி, 1975 |
| 471. முத்துக்கிருட்டிணன் & நிலவு சேகரன் | 'கவிதை வனம்', செல்வி பதிப்பகம், சங்ககிரி வட்டம், 1968 |
| 472. முத்துச்சாமி, இ.சு., | 'காதல் காவியம்', பாரி நிலையம், (வி.உ) சென்னை–1, 1971 |
| 473. " | 'கவிக் கடல்', மேலது, 1974 |
| 474. " | 'புன்னைப்பாட்டு', மேலது, 1975 |

| | |
|---|---|
| 475. முத்தெழிலன், மயிலை | 'நல்ல பாப்பா', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், மதுரை, 1967 |
| 476. ” | 'நல்ல பையன்', மேலது, 1968 |
| 477. ” | 'நல்ல மாணவன்', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், மதுரை, 1968 |
| 478. முத்தையா, நாக., | 'பச்சை விளக்கு', சிறுவர் இலக்கியப் பண்ணை, 1969 |
| 479. ” | 'குழந்தைகளுக்கு லெனின் கவிதைகள்,' அன்னை நிலையம், சென்னை–17, 1970 |
| 480. முடியரசன் | 'வீரகாவியம்', வள்ளுவர் பதிப்பகம், புதுக்கோட்டை, 1970 |
| 481. முருகு சுந்தரம் | 'கடை திறப்பு', சேலம் பதிப்பகம், சேலம், 1969 |
| 482. ” | 'பனித் துளிகள்',அரிமாப் பதிப்பகம், சேலம், 1974 |
| 483. ” | 'சந்தனப் பேழை', மேலது, 1975 |
| 484. முருகொளி | 'கனககிரி பிள்ளைத் தமிழ்', முருகொளிப் பதிப்பகம், வையப்பமலை, 1968 |
| 485. முல்லை நிலவழகன் | 'அழகின் அழைப்பு', ஓம் சரவணபவா பதிப்பகம், திருச்சி, 1969 |
| 486. முனியப்பன், பொ., | 'இறைவன் தந்த இயற்கை', கழகம், சென்னை, 1975 |
| 487. முனியாண்டி, ஆ, | 'பூக்கள்', சிட்டு பிரசுரம், மேட்டுப் பாளையம், (திரு), 1976 |
| 488. முனிரத்தினம், பெ.வா., | 'ஜவஹர்லால் நேரு' வானதி பதிப்பகம், சென்னை, 1972 |
| 489. மூவேந்தன் (ஏ.பி. தமிழரசு) | 'தமிழ் என் உயிர்', பூங்கொடி பதிப்பகம், சென்னை–4, 1968 |
| 490. ” | 'சுடர் விளக்கு', மேலது, 1970 |
| 491. மெய்யப்பா அருணாசலம் | 'மழலை அமுதம்', கோனாபட்டு, திருமயம், 1973 |
| 492. மேகலை | 'கடவுளைப்பார்', பாப்பா பதிப்பகம், சென்னை–34, 1969 |
| 493. மேகலை, தி.ச.மு., | 'இசுலாமியப்பண்பு', வேலா பதிப்பகம், ஈரோடு, 1974 |
| 494. மேத்தா, மு., | 'கண்ணீர்ப் பூக்கள்', கோவை, 1976 |

| | |
|---|---|
| 495. மோகனரங்கன், கோ., | 'கவிதைகள்', வசந்தா பதிப்பகம், சென்னை–16, 1968 |
| 496. ” | 'வைர மூக்குத்தி', மேலது, 1969 |
| 497. ” | 'சித்திரப்பந்தல்', மேலது, 1969 |
| 498. ” | 'கனவுப் பூக்கள்', மேலது, 1969 |
| 499. ” | 'புதுமனிதன்', மேலது, 1971 |
| 500. “ | 'காலக் கிளி', மேலது, 1972 |
| 501. ” | 'யாருக்குப் பொங்கல்', மேலது, 1973 |
| 502. ” | 'பள்ளிப் பறவைகள்', மேலது, 1974 |
| 503. ” | 'கயமையைக் களைவோம்', மேலது, 1976 |
| 504. ரகுநாதன் (மொ.பெ.ஆ.) | 'லெனின் கவிதாஞ்சலி', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1970 |
| 505. ராமசாமி, இரா., | 'நெஞ்சம் மறக்கவில்லை', பாளையங்கோட்டை, 1975 |
| 506. ராமானுஜ கவிராயர், டி.கே., | 'மகாத்மா காந்தி காவியம்', திருநெல்வேலி–6, 1975 |
| 507. ராமி | 'புள்ளிகள், கோடுகள் கோணங்கள்', அருண் வெளியீடு, மதுரை (மா) 1975 |
| 508. ராய.சொ., | 'காந்திக் கவிதை', அழகப்பர் கல்லூரி, காரைக்குடி, 1969 |
| 509. ராஜகோபால், கே., | 'பசப்பல்', எழுத்துப் பிரசுரம், சென்னை, 1974 |
| 510. ரெங்கராசன், முத்து, | 'வெண்பாவிலிருந்து', வில்லவன் வெளியீட்டகம், கம்பம் புதுப்பட்டி, 1971 |
| 511. லட்சுமணன், கே.எஸ்., | 'பாப்பாவுக்குப் பறவைகள்', வானதி பதிப்பகம், சென்னை, 1967 |
| 512. ” | 'பாப்பாவுக்கு மிருகங்கள்', மேலது, 1970 |
| 513. லெமன் | 'சிப்பாய் வருகிறார்', கலைமகள் வெளியீடு, சென்னை, 1971 |
| 514. வரதராசன், செ. | 'தமிழ்ப் பாவை' அண்ணி பதிப்பகம், கள்ளக்குறிச்சி, 1973 |
| 515. வரதராசன், மா., | 'இசை மலர்', இராகவன் பதிப்பகம், புதுக்கோட்டை, 1969 |

| | |
|---|---|
| 516. வரதராசன், வெ., | 'கலைஞர் வெண்பா,' சொந்தப் பதிப்பு, 1975 |
| 517. வழிப்போக்கன் | 'பயணம்', கவிதாலயம் காளையார் கோவில், 1970 |
| 518. வள்ளியப்பா, அழ., | 'ஈசாப் கதைப் பாடல்கள்' (2) பாரி நிலையம். சென்னை, 1968 |
| 519. " | 'பாட்டிலே காந்திகதை', குழந்தை புத்தக நிலையம், சென்னை, 1968 |
| 520. " | 'சுதந்திரம் பிறந்த கதை', பாரி நிலையம், சென்னை, 1968 |
| 521. " | 'பாப்பாவுக்குப் பாட்டு', பாரி நிலையம். சென்னை–1, (வி.உ), 1976 |
| 522. வலவன், மு. (மு.பா. சாரதி) | 'சொற்கோலம்', சுபதி பதிப்பகம், சென்னை, 1974 |
| 523. வல்லிக்கண்ணன் | 'அமர வேதனை', எழுத்து பிரசுரம்,. சென்னை, 1974 |
| 524. வாணன் | 'பறம்பு மலை', பொன்முடி பதிப்பகம், காரைக்குடி, 1974 |
| 525. வாணிதாசன் | 'எழில் விருத்தம்', பாரி நிலையம், சென்னை–1, (வி.உ) 1970 |
| 526. " | 'பாட்டரங்கப் பாடல்கள்', மேலது, 1972 |
| 527. வாலம், ஹா.கி., | 'பாரத சுப்ரபாதம்', மோகனா டிரஸ்ட் பதிப்பகம், சென்னை, 1972 |
| 528. வாலி | 'அம்மா' பொன்னம்மாள் பதிப்பகம், சென்னை–34, 1976 |
| 529. வாழப்பாடி சந்திரன் | 'பிள்ளைக் கவியமுது', நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், மதுரை, 1969 |
| 530. வான்முகில் | 'கடற்கரைக் கவிதைகள்', தமிழ்க் கவிஞர் மன்றம், சென்னை, 1974 |
| 531. வீரநாதக் கோனார் | 'அறநெறி' கலா மன்றம், அம்பலத்தாடி, 1972 |
| 532. " | 'திருவருள் திருவந்தாதி', சிறுவாலை, மதுரை, 1972 |
| 533. வீரையன், உதயை. மு., | 'அக்கினிக் குஞ்சுகள்', மக்கள் பதிப்பகம், சென்னை–23, 1974 |
| 534. வெள்ளியங்காட்டான் | 'கவிஞன்', குமணன் பதிப்பகம், கோவை–4, 1974 |

| | |
|---|---|
| 535. ” | 'தாயகம்', மேலது, 1974 |
| 536. வெற்றிச் செல்வன் | 'தமிழன்னை', வெற்றி நூலகம், உத்தமபாளையம், 1967 |
| 537. வெற்றியழகன் | 'அமைதிக்கடல் அண்ணா' அன்பு பதிப்பகம், சென்னை–5, 1969 |
| 538. வெற்றி வளன் (சூசை மாணிக்கம்) | 'கவிதைகள்' மதுரை–1, 1974 |
| 539. வேங்கடாசலம், தா., | 'தெய்வத் திருக்கீர்த்தனைகள்', அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இளம்பிள்ளை, 1974 |
| 540. வேங்கடேசன், ஆர்., | 'சிறுவர் சோலை', பிருதி பதிப்பகம், புதுச்சேரி, 1971 |
| 541. வேங்கடேசன், ஸான்., | 'அண்ணா பிள்ளைத்தமிழ்', அன்னை நிலையம், (வி.உ), சென்னை, 1969 |
| 542. ” | 'மழலைத் தேன்', முத்துப் பதிப்பகம், வளவனூர், 1976 |
| 543. வேலாயுதம், என்.எ., | 'இதய மலர்கள்', அன்பு நிலையம், நாகர்கோவில், 1967 |
| 544. வேலுச்சாமி, ப., | 'உயரும் கைகள்', பாட்டாளிகள் வெளியீடு. சென்னை, 1975 |
| 545. வேழவேந்தன், கா., | 'வண்ணத் தோகை' பூங்கொடி பதிப்பகம், சென்னை–4, 1972 |
| 546. வைத்திலிங்கம், மு., | 'வளரும் உள்ளம்', தேன்தமிழ்ப் பதிப்பகம், சேலம்–1, 1971 |
| 547. வைத்தியலிங்கம், கே.ஆர்., | 'முருகொளி', முருகொளிப் பதிப்பகம், வையப்ப மாலை, 1967 |
| 548. வைத்தீஸ்வரன். எஸ்., , | 'உதய நிழல்' புக்வென்சர், சென்னை, 1970 |
| 549. வைரமுத்து, இரா., | 'வைகறை மேகங்கள்', மோகன் பதிப்பகம், சென்னை–7, 1972 |
| 550. ஷேக் மதார், என்., | 'அழகைக் கண்டேன்', பழநியப்பா பிரதர்ஸ், சென்னை, 1968 |
| 551. ஜகன் | 'பாரதி கண்ட சமுதாயம்', ரோகிணி பதிப்பகம், மதுரை, 1967 |
| 552. ஜவஹர் | 'தொடக்கப்பள்ளிக்குத் தொண்ணூறு பாடல்கள்', நன்னூலருவி. நாச்சியார்கோவில், 1976 |

| | |
|---|---|
| 553. ஜெகந்நாதராஜா, மு.கு., | 'கற்பனைப்பொய்கை' விஸ்வசாந்தி பதிப்பகம், இராசபாளையம், 1972 |
| 554. ஸ்ரீ விஸ்வப்ரியா | 'பாடும் அலைகள்', தேன்தமிழ்ப் பதிப்பகம், சேலம், 1975 |

## தொகுப்பு நூல்கள்

| | |
|---|---|
| 555. அழகேசன், பொ. (பதி.ஆ.) | பாட்டிலே படைவீடுகள், தமிழ் மன்றம், பெரம்பலூர், 1971 |
| 556. அமலன் (பதி.ஆ) | முக்கனி. தமிழ் மன்றம், பெரம்பலூர், 1973 |
| 557. அறந்தை நராாயணன் (தொ.ஆ) | வெல்க வியத்நாம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை, 1969 |
| 558. அறிவுடை நம்பி, (தொ.ஆ) | கலைஞர் கவிதைக் கோவை, தணிகைப் பதிப்பகம், சென்னை, 1972 |
| 559. அன்பரசன், மு. (தொ.ஆ) | கவிஞர் நெஞ்சில் அறிஞர் அண்ணா, கல்வி வெளியீடு, சென்னை, 1969 |
| 560. – – – | 'கலைஞர்க்குக் கவிதை மாலை, கல்வி வெளியீடு, சென்னை, 1971 |
| 561. – – – | வண்ணப்பறவைகள், கல்வி வெளியீடு, சென்னை, 1972 |
| 562. – – – | நூறாண்டு வாழ்க, கல்வி வெளியீடு, சென்னை, 1973 |
| 563. ஆற்றலரசு & துரை, கல்லை ஆ. (தொ.ஆ) | நிலா நானூறு, அரசு பதிப்பகம், சென்னை, 1973 |
| 564. இமயத்தமிழன் (தொ.ஆ) | புத்துலகக் கவிதைகள் தமிழ்க் கவிஞர் மன்றம், திருவள்ளுவர், 1976 |
| 565. கண்ணிமை, இரா. (தொ.ஆ) | முக்கனிச்சாறு, குயில் பதிப்பகம், திண்டிவனம், 1969 |
| 566. சண்முகசுந்தரன், கு (தொ.ஆ) | வாழ்த்துமாலை, பூங்கொடி பதிப்பகம், கோவை, 1975 |
| 567. சாலை இளந்திரையன், (தொ.ஆ) | தமிழ்க்கவிதைகள், நேஷனல் புக் டிரஸ்ட். புதுதில்லி, 1976 |
| 568. சிவஞானம், கு. (தொ.ஆ) | பூஞ்சோலைக்கவிமலர்கள் (1) கவிஞர் பெருமன்றம், தஞ்சாவூர், 1975 |
| 569. செங்கை அழகன் (தொ.ஆ) | பாசறைக் கவிதைகள் தொகுதி 1, பாவலர் பாசறை, சென்னை, 1973 |

| | |
|---|---|
| 570. – – – | ஆயிரம் மலர்கள் பகுதி–1, பாவலர் பாசறை, சென்னை, 1974 |
| 571. செல்வராஜ்.வீ. (பதி.ஆ) | வளரும் பாரதம், மக்கள் இலக்கியப் பேரவை, அருப்புக் கோட்டை, 1967 |
| 572. சேதுராமன், வா.மு. (தொ.ஆ) | வாழ்க நீ எம்மான், கவியரசன் பதிப்பகம், சென்னை, 1969 |
| 573. சோமசுந்தரம், அரு. (தொ.ஆ) | திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ், பொன்முடிப் பதிப்பகம், காரைக்குடி, 1967 |
| 574. தமிழ்க்குடிமகன் (தொ.ஆ) | உணர்ச்சிப் பாடல்கள், இலக்கிய மன்றம், பறம்புக்குடி, 1968 |
| 575. நாதன், டி.பி. (தொ.ஆ) | மகிழம்பூ, பாவேந்தர் கவிஞர் மன்றம், அரக்கோணம், 1972 |
| 576. பசுபதி, ம.வே., (தொ.ஆ) | மாதங்கள், திருப்பனந்தாள், 1967 |
| 577. – – – | எண்கள், புதுக்குரல் பதிப்பகம், பழநி, 1969 |
| 578. – – – | ஆறுகள், அன்னபூர்ணா பதிப்பகம், திருப்பனந்தாள், 1973 |
| 579. புலமைதாசன் (தொ.ஆ) | கவிஞர் போற்றும் பெரியார், பகுத்தறிவு இலக்கிய மன்றம், சென்னை, 1974 |
| 580. பொன்னடியான் (தொ.ஆ) | அலைகள் ஆயிரம்–1, தமிழ்க் கவிஞர் மன்றம், சென்னை, 1973 |
| 581. – – – | அலைகள் ஆயிரம்–2, தமிழ்க் கவிஞர் மன்றம், சென்னை, 1974 |
| 582. பொன்னியின் செல்வன் & மெய்யடியான் (தொ.ஆ) | காதல்மழை, பாவலர் மன்றம், திருவையாறு, 1976 |
| 583. மணிமொழி & இராசேந்திரன், பி.எல். (தொ.ஆ) | கவிஞர் கண்ட கலைஞர், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1970 |
| 584. மரியவிசுவாசம் (தொ.ஆ) | முயற்சியின் வழிகாட்டி மு.வ. ஜான்சன் ராஜா பதிப்பகம், ஈரோடு, 1975 |
| 585. மார்ட்டின், ஜி. (பதி.ஆ) | வேளைநகர் பாமாலை, விமலை நூலகம், பெரம்பலூர், 1976 |
| 586. மீரா (தொ.ஆ) | புகழ் மண்டபம், மன்னர் கல்லூரி, சிவகங்கை, 1971 |
| 587. முத்தையா. இராம, (தொ.ஆ) | கண்ணோட்டத்தில் கலைஞர் கருணாநிதி, வானதி பதிப்பகம், சென்னை, 1971 |

588. மூவேந்தன் (தொ.ஆ) — கவிஞர் கண்ட அண்ணா, பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1969

589. லட்சுமணன், கே.எல். (தொ.ஆ) — கவிஞர் போற்றும் காந்தி மகான், அன்னை நிலையம், சென்னை, 1969

590. வலவன், மு. (தொ.ஆ) — அருந்தமிழ் வளர்த்த ஆன்றோர், சுபதி பதிப்பகம், சென்னை, 1969

591. விசுவநாதன், சு. (தொ.ஆ) — எதிரொலிகள், வள்ளுவம் வெளியீடு, சென்னை, 1967

592. விசுவநாதன், சு. (தொ.ஆ) — மூவர்தமிழ், அசோகன் பதிப்பகம், சென்னை, 1969

593. விரகை மணவழகன் (தொ.ஆ) — முத்தாரம், இளந்தமிழர் பதிப்பகம், நெய்வேலி, 1974

594. வெள்ளைவாரணம் தா.ம. (தொ.ஆ) — பாவலர் உலகம், பாவலர் மன்றம், திருப்பனந்தாள், 1968

595. உலகத்தமிழ் மாநாட்டுக்குழு — புகாரில் ஒருநாள், உலகத் தமிழ் மாநாடு, சென்னை, 1968

596. தங்க கலியமூர்த்தி முதலாய அறுவர் (தொ.ஆ) — தமிழருவி, பாவலர் மன்றம், திருவையாறு, 1976

597. திருச்சி வானொலி — விடுதலை வீரர்கள் ஐவர், கழக வெளியீடு, சென்னை, 1968

598. தூத்துக்குடித் தமிழ் எழுத்தாளர் மன்றம் — அண்ணாமலை, தூத்துக்குடி, 1969

599. புதுவை அரசு — பாரதி காட்டும் சுவைகள், செய்தி விளம்பரத்துறை, புதுச்சேரி, 1974

600. – – – — பாவலர் பார்வையில் பாவேந்தர், புதுவை அரசு, புதுச்சேரி, 1975

601. புலவர் நிறைநிலை மாணவர்கள் — மகிழம்பூ, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம், 1974

602. வங்கத்தமிழ் எழுத்தாளர்கள் — வங்கத்தமிழ், பாரதி தமிழ்ச் சங்கம், கல்கத்தா, 1970

603. – – – — சந்தனக் கனவு, கவிஞர்கள் பதிப்பகம், சிதம்பரம், 1971

## புதுக்கவிதைத் தொகுப்புகள்

604. – – – — ஆக்டோபஸும் நீர்ப்பூவும், சிவப்புரோஜா பதிப்பகம், பாளையங்கோட்டை, 1972

605. செல்வம், த.பீ. (தொ.ஆ) விதி. இலக்கியப்பண்ணை, இராஜபாளையம், 1973

606. – – – வெளிச்சங்கள், வைகறை, கோவை, 1973

607. சுப்பிரமணியம், எம். (தொ.ஆ) நாற்றங்கால், தலைஞாயிறு இலக்கிய அமைப்பு, தலைஞாயிறு அக்கிரகாரம், தஞ்சாவூர், 1974

608. மாணவர்கள் செவ்வந்தி, இஸ்லாமியக் கல்லூரி, வாணியம்பாடி, 1975

609. அமெரிக்கன் கல்லூரி மாணவர்கள் மரத்தடி மகாராஜாக்கள், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை, 1975

610. – – – உதயகீதங்கள், வண்ணங்கள் வெளியீடு, புதுச்சேரி, 1975

611. மீரா (தொ.ஆ) அன்னம், அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1976

612. மாணவர்கள் இலவசத்திற்கு ஒரு விலை & மயானத்தில் ஒரு தொட்டில், இஸ்லாமியக் கல்லூரித் தமிழ் மன்றம், வாணியம்பாடி, 1976

613. – – – ஊருணி, மஜ்ஹருல் உலூம் கல்லூரி, ஆம்பூர், 1976

614. – – – சிநேக புஷ்பங்கள், அகரம் (வி.உ) சிவகங்கை, 1976

## ஆ) துணை நூல்கள் (Secondary Sources)

1. அகமது பஷீர், அ., குழந்தை இலக்கியம், பழநியப்பா பிரதர்ஸ், சென்னை, 1973

2. அமிதசாகரர் யாப்பருங்கலக் காரிகை, கழக வெளியீடு, சென்னை, 1959

3. ஆதவன் சுந்தரம், (தொ.ஆ) வரும் பத்தாண்டுகளில் தமிழ்ப் புத்தக வெளியீடு, நேஷனல் புத்தக டிரஸ்ட். புதுதில்லி, 1978

4. ஆனைமுத்து, வே. (பதி.ஆ) பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், (முதல் தொகுதி) சிந்தனையாளர் கழகம், திருச்சி, 1974

5. இராமலிங்கம், மா., இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973

6. இளங்குமரன் புறத்திரட்டு, கழக வெளியீடு, சென்னை, 1972

7. இளங்கோ, பி.எஸ்., — சர்.பி. தியாகராயர் முதல் டாக்டர் கலைஞர் வரை, மாலைமணி பதிப்பகம், சென்னை, 1975

8. உருத்திரங்கண்ணனார், கடியலூர் — பட்டினப்பாலை, கழக வெளியீடு, 1967

9. ஐயனாரிதனார் — புறப்பொருள் வெண்பா மாலை, கழக வெளியீடு, சென்னை, 1959

10. கதிரேசச் செட்டியார் மு., — திருவெம்பாவை (கதிர்மணி விளக்கம்) மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையோர், மேலைச் சிவபுரி. 1952

11. கந்தசாமி, இல.செ., — புதுக்கவிதை ஒரு பார்வை, கலைச்செல்வம் பதிப்பகம், கோவை, 1981

12. கிரி. பி.வி., — கவிதை பிறந்த கதை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1976

13. கிருட்டிணசாமி, வெ., — குழந்தைக் கவிஞரின் இலக்கியத் திறன், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981

14. குமரவேலன், இரா., — தமிழ் நாடக ஆய்வு, அரசு பதிப்பகம், சென்னை, 1978

15. – – – — கவிதை, நாடகம் ஒரு கண்ணோட்டம், அரசு பதிப்பகம், சென்னை, 1979

16. கோபாலய்யர், தி.வே. (பதி.ஆ) — இலக்கண விளக்கம், பொருளதிகாரம் பாட்டியல், சரஸ்வதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர், 1974

17. சண்முகம் பிள்ளை, மு., — சிற்றிலக்கிய வளர்ச்சி, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1981

18. சாமிநாதையர், உ.வே. (பதி.ஆ) — தமிழ்விடு தூது, சென்னை, 1930

19. சாலை இளந்திரையன் — புதிய தமிழ்க்கவிதை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1969

20. சிவஞானமுனிவர் — திருக்கலைசைச் செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத் தமிழ், பிள்ளைத் தமிழ்க் கொத்து, (முதற்புத்தகம்), வெளியீடு, 1964

21. சீநிவாசராகவன், சு., — ஒரு நூற்றாண்டுத் தமிழ்க் கவிதை, மெர்க்குரி புத்தகக் கம்பெனி (வி.உ) கோயமுத்தூர், 1970

22. சுந்தரம்பிள்ளை. பெ., மனோன்மணியம், மொர்க்குரி புத்தகக் கம்பெனி (வி.உ) கோவை, 1969

23. சுப்பிரமணியன், ச.வே., இலக்கணத்தொகை – யாப்பு பாட்டியல், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1978

24. – – – காப்பியப் புனைதிறன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, 1979

24. அ. – – – தமிழில் விடுகதைகள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1975

25. சுப்புரெட்டியார், ந., கவிதையனுபவம், கழக வெளியீடு சென்னை, 1961

26, செகந்நாதன், ஆ., கண்ணதாசன் ஒரு கண்ணோட்டம், வானதி பதிப்பகம், சென்னை, 1975

27. – – – புதுக்கவிதை ஒரு திறனாய்வு திலகன் பதிப்பகம், மேலையூர், 1978

28. செட்டியார், வி.ஆர்.எம்., சிறந்த வசனகவிதைகள், சுந்தர் பதிப்பகம், காரைக்குடி, 1963

29. செயராமன், ந.வீ., சிற்றிலக்கியச் செல்வங்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1967

30. – – – புதுக்கவிதையியல், இலக்கியப் பதிப்பகம், சென்னை, 1980

31. சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ) பரிபாடல், கழக வெளியீடு, சென்னை, 1979

32. சோமசுந்தரனார், பொ.வே. (உ.ஆ) குறுந்தொகை, கழக வெளியீடு, சென்னை, 1972

33. ஞானசம்பந்தன், அ.ச., இலக்கியக்கலை, கழக வெளியீடு, சென்னை, 1976

34. தண்டாயுதம், இரா., தற்காலத் தமிழ் இலக்கியம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1973

35. தண்டி தண்டியலங்காரம், கழக வெளியீடு, சென்னை, 1960

36. தமிழவன் இருபதில் கவிதை, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் (வி.உ) நாகர்கோவில், 1971

37. – – – புதுக்கவிதை நாலு கட்டுரைகள், திருநெல்வேலி, 1977

38. தியாகரான், எம்.எஸ்., நா. காமராசன் கவிதைகள் (ஒரு திறனாய்வு) அணியகம், சென்னை, 1978

39. (திருவள்ளுவர்) திருக்குறள், கழக வெளியீடு, சென்னை, 1972

40. துரைசாமிப்பிள்ளை, ஔவை. சு. (உ.ஆ.) புறநானூறு, கழக வெளியீடு, சென்னை, 1972

41. தேவநாதன், வி.என். (பதி.ஆ) நாலாயிர திவ்வியப்பிரபந்தம், சென்னை, 1971

42. (தொல்காப்பியர்) தொல்காப்பியம் – பொருளதிகாரம் இளம்பூரணம், கழக வெளியீடு, சென்னை, 1956

43. – – – தொல்காப்பியம் – பொருளதிகாரம், நச்சினார்க்கினியம், கழக வெளியீடு, சென்னை, 1969

44. – – – தொல்காப்பியம்–பொருளதிகாரம் பேராசிரியம், கழக வெளியீடு, சென்னை, 1969

45. நந்தன்பிரபு நா. காமராசன் கவிதைகள் (ஒரு புதிய சகாப்தம்), அணியகம், சென்னை, 1977

46. நாராயணசாமி ஐயர், அ. (உ.ஆ), நற்றிணை நானூறு, கழக வெளியீடு, சென்னை, 1967

47. பாரதிதாசன் பாரதிதாசன், கவிதைகள் 1, செந்தமிழ் நிலையம், இராமச்சந்திர புரம், 1971

48. – – – நாள்மலர்கள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1978

49. – – – சேரதாண்டவம், பாரி நிலையம், சென்னை, 1949

50. – – – இளைஞர் இலக்கியம், பாரி நிலையம், சென்னை, 1958

51. பாரதிதாசன் பன்மணித்திரள், முத்தமிழ்ச் செல்வி அச்சகம், சென்னை, 1964

52. பாலசுப்ரமணியன், சி., கட்டுரை வளம், நறுமலர்ப் பதிப்பகம், சென்னை, 1977

53. – – – வாழையடி வாழை, பாரி நிலையம் (வி.உ.) சென்னை, 1974

54. பாலா, புதுக்கவிதை ஒரு புதுப்பார்வை, அகரம், சிவகங்கை, 1981

55. புதுமைப்பித்தன் — புதுமைப்பித்தன் சிறுகதைகள், சோமசுந்தரம், மீ.ப. (தொ.ஆ) நேஷனல் புத்தக டிரஸ்ட், புதுதில்லி, 1978

56. புலமைப்பித்தன் — எது கவிதை? சேகர் பதிப்பகம், சென்னை, 1976

57. பெரியகருப்பன், இராம., — புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு, சோலை நூலகம், மதுரை, 1982

58. மறைமலை, சி.இ., — இலக்கியக் கொள்கைகள், நீலமலர் வெளியீட்டகம், சென்னை, 1976

59. மறைமலையடிகள், — அம்பிகாபதி அமராவதி, பாரி நிலையம், சென்னை, 1954

60. மீனாட்சி சுந்தரம் பிள்ளை, — சேக்கிழார் பிள்ளைத் தமிழ் சுந்தரமூர்த்தி, (உ.ஆ), வேல் புத்தக நிலையம், (வி.உ) தூத்துக்குடி, 1967

61. முத்துச்சண்முகன் & நிர்மலா மோகன், — குறவஞ்சி, முத்துப் பதிப்பகம், மதுரை, 1977

62. – – –, — சிற்றிலக்கியங்களின் தோற்றமும் வளர்ச்சியும், முத்துப் பதிப்பகம், மதுரை, 1979

63. முத்துச்சண்முகன் & கிருட்டிணசாமி, வெ., — தமிழில் குழந்தைப் பாடல்கள், முத்துப் பதிப்பகம், மதுரை, 1981

64. முத்துராசன்., கு., — சிற்றிலக்கியச் சிந்தனைகள், தேன் தமிழ்ப் பதிப்பகம், சேலம், 1980

65. மூர்த்தி, து., — இக்காலக் கவிதைகள்–மரபும் புதுமையும், சென்னை தமிழியல் நிறுவனம், சென்னை, 1978

66. வரதராசன், மு., — தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 1985

67. " — இலக்கிய மரபு, பாரி நிலையம், சென்னை, 1968

68. வல்லிக்கண்ணன், — புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், அகரம், சிவகங்கை, 1977

69. வானமாமலை, நா., — புதுக்கவிதை–முற்போக்கும், பிற்போக்கும், மக்கள் வெளியீடு. சென்னை, 1975

70. வீராசாமி, தா.வே., — தமிழில் சமூக நாவல்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978

71. வையாபுரிப்பிள்ளை, எஸ். (தொ.ஆ) — சங்க இலக்கியம்—பாட்டும் தொகையும், பாகம்—1 & 2 பாரி நிலையம், சென்னை, 1967

72. ஜெயகாந்தன், — சினிமாவுக்குப் போன சித்தாளு, மினாட்சி புத்தக நிலையம், மதுரை, 1972

73. ALLADI VAGISWARI — Income Earning Trends and Social Status of the Harijan Community in Tamilnadu, Sangam Publishers, Madras, (Year not found).

74. HEIMSATH CHARLES, H., — Indian Nationalism and Hindu Social Reform, Oxford University Press, Bombay, 1964

75. JAMUNANAG — Rajaram Mohan Roy, Sterling Publishers (P) Ltd., New Delhi, 1972

76. JOHN MILTON — Complete Poems & Major Prose, Merrit Y. Hughes (Ed), Odyssey Press, New York, 1958

77. MANGALA MURUGESAN, N.K., — Self Respect Movement in Tamilnadu, 1920–1940, Koodal Publishers, Madurai (Year not found).

## ஆசிரியர் பெயர் குறிப்பிடப்படாத நூல்கள்

78. — சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (1) கழக வெளியீடு, சென்னை, 1971

79. — சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள் (3), கழக வெளியீடு, சென்னை, 1967

80. — சிற்றிலக்கியச் சொற்பொழிவுகள், (5), கழக வெளியீடு, சென்னை, 1962

81. — பன்னிருபாட்டியல், கழக வெளியீடு, சென்னை, 1970

## இ) ஆய்வேடுகள்:

### 1. நூலாக வெளிவந்தவை

சக்திபெருமாள், — தமிழ் நாடக வரலாறு, மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பிஎச்.டி. பட்டத்திற்கு அளிக்கப் பட்ட ஆய்வேடு, வஞ்சிக்கோ பதிப்பகம், மதுரை, 1979

## 2. வெளியிடப் பெறாதவை


1. மனோன்மணி. தி., கண்ணதாசனின் கவிதைகளில் பெண்மை, மதுரை காமராசர் பல்கலைக் கழக எம்ஃபில் பட்டத்திற்கு அளிக்கப்பட்ட ஆய்வேடு, 1977

2. ஆலீஸ், ஏ., கண்ணதாசனின் கவிதைநடை, மதுரை காமராசர் பல்கலைக்கழக எம்ஃபில் பட்டத்திற்கு அளிக்கப் பட்ட ஆய்வேடு, 1978

3. சேது, இரா., 20–ஆம் நூற்றாண்டுச் சமுதாய மறுமலர்ச்சிக்கு அண்ணாத் துரையின் சிறுகதை, புதினங் களின் கொடை, சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு பிஎச்.டி. பட்டத்திற்கு அளிக்கப்பட்ட ஆய்வேடு, 1979

4. அருச்சுன தட்சிணாமூர்த்தி, தமிழன்பன் புதுக்கவிதைகள் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு எம்ஃபில் பட்டத்திற்கு அளிக்கப்பட்ட ஆய்வேடு, 1980


## ஈ) கட்டுரைகள்


1. அபி., 'கற்பனை', அன்னம், சிவகங்கை, 1976

2. குயிலன், 'அந்தரநடை (புதுக்கவிதைகள்)', சமூகநிழல், நிழல்—17 மானாமதுரை, மார்ச்சி, 1980

3. சிற்பி, 'சொல்லாட்சி', அன்னம், சிவகங்கை, 1976

4. – – –, 'வெற்றிகளை விட...', வானம்பாடி இதழ்: 14, பொள்ளாச்சி,

5. – – –, 'குளிக்கப்போய்...' வானம்பாடி இதழ்: 14, பொள்ளாச்சி.

6. ஞானி, 'இன்றைய தமிழ்க் கவிதையில் ஒரு தேக்கம், கலை இலக்கியம் ஒரு தத்துவப் பார்வை, வேள்வி வெளியீடு, கோவை, 1975

7. தமிழண்ணல், 'அனிச்ச அடி ஆய்வுரை', அனிச்ச அடி, கழக வெளியீடு, சென்னை, 1973

8. தமிழண்ணல், ‘அறுபதாண்டுகளில் கவிதை நாடகங்கள்’, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக மணிவிழா மலர், கழக வெளியீடு, சென்னை, 1982

9. பாலா, ஒரு கவிதை உருவாகிறது’, வானம்பாடி இதழ்: 18, பொள்ளாச்சி, 1981

10. புவியரசு, ‘புதுக்கவிதையின் புதிய நெருக்கடி’, வானம்பாடி இதழ்: 15, பொள்ளாச்சி, 1978

11. பெருமாள், ஏ.என்., ‘அறுபதாண்டுகளில் அருந்தமிழ் நாடகம்’, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகமணிவிழா மலர், கழக வெளியீடு, சென்னை, 1982

12. மருதநாயகம், ச., ‘புதுக்கவிதை’, பூம்பொழில் சிறப்பு மலர், இலக்கிய வட்டம், கோயமுத்தூர், 1970

13. மறைமலை, சி.இ., ‘புதுக்கவிதை’, இலக்கியக் கொள்கைகள், நீலமலர் வெளியீட்டகம், சென்னை, 1976

14. மீரா., ‘உருவம்’, அன்னம், சிவகங்கை, 1976

15. முத்துச்சண்முகன் & பிரேமா, இரா., ‘காப்பியத்துள் காப்பியம்–குறுங் காப்பியம்; புலமை, தொகுதி–6, எண், 2, சென்னை, 1980

16. மேத்தா, மு., ‘கருத்தோட்டம்’, அன்னம், சிவகங்கை, 1976

17. யோகீசுவரன், பி., ‘அறுபதாண்டுத் தமிழ்க் கவிதை (1920–1980)’, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக மணிவிழா மலர், கழக வெளியீடு, சென்னை, 1982

## உ) நேர்காணல்

1. அமலன், பெரம்பலூர், நாள்: 10.6.1980
2. அரிமதி தென்னகன், தமிழாசிரியர், 98, ஆலைத்தெரு, குயவர்பாளையம், புதுச்சேரி, நாள்: 7.9.1979
3. இளங்கம்பன், ஆசிரியர், சித்திரகூடம், பழநி, நாள்: 10.12.1978
4. இளவரசு, இரா., தமிழ்ப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி, சென்னை, நாள்: 27.8.1981

| | |
|---|---|
| 5. உலகநாதன், மு., | தமிழ்ப்பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை, நாள்: 7.7.1980 |
| 6. எழில்மதி, | ஆசிரியர் ஆத்தூர், சேலம் மாவட்டம், நாள்: 4.4.1981 |
| 7. எழிலன், பெ., | 41. அன்னையரெட்டி தெரு, அலசூர், பெங்களூர், நாள்: 22.10.1980 |
| 8. குமரவேலன், இரா., | தமிழ்ப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை, நாள்: 16.7.1982 |
| 9. கோவேந்தன், த., | தமிழாசிரியர், சென்னை, நாள்: 18.6.1981 |
| 10. சாலை இளந்திரையன், | தமிழ்ப்பேராசிரியர், தில்லிப் பல்கலைக்கழகம், புதுதில்லி, நாள்: 10.5.1981 |
| 11. சிற்பி, | தமிழ்ப் பேராசிரியர், நா.ம. கல்லூரி, பொள்ளாச்சி, நாள்: 10.8.1982 |
| 12. செல்லப்பன், சிலம்பொலி., | பதிப்புத்துறை இயக்குநர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, நாள்: 9.9.1979 |
| 13. சேதுராமன், வா.மு., | தமிழாசிரியர், 1, சாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, நாள்: 17.11.1980 |
| 14. சோமசுந்தரம், அரு., | முதல்வர், செட்டிநாடு தனிப் பயிற்சிக் கல்லூரி, காரைக்குடி, நாள்: 13.4.1980 |
| 15. ஞானச்செல்வன் (கோ. திருஞானசம்பந்தன்), | தமிழாசிரியர், மேல்நிலைப் பள்ளி, திருவாரூர், நாள்: 26.10.1982 |
| 16. தங்கப்பா, ம.இலெ., | தமிழ்ப்பேராசிரியர், தாகூர் கலைக் கல்லூரி, புதுச்சேரி, நாள்: 10.8.1977 |
| 17. தண்டாயுதம், இரா., | தமிழ் விரிவுரையாளர், மலேசியப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர், நாள்: 6.6.1977 |
| 18. திருச்சி பாரதன், | செய்தியாளர், தினத்தந்தி, திருச்சி, நாள்: 26.5.1980 |
| 19. தேவநேயப்பாவாணர், ஞா., | இயக்குநர், சொற்பிறப்பியல் அகரமுதலித்துறை, சென்னை, நாள்: 12.7.1978 |
| 20. நாச்சிகுளத்தார், | வணிகர், பினாங்கு, மலேசியா, நாள்: 6.6.1977 |

| | |
|---|---|
| 21. பழநி, ஆ., | தமிழாசிரியர், மீ.சு., மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி, நாள்: 20.11.1979 |
| 22. புலமைப்பித்தன், | சட்டமேலவைத் துணைத் தலைவர், சென்னை, நாள்: 10.9.1982 |
| 23. பேகன் (பி. பாண்டியன்), | கோட்டாட்சித் தலைவர் (R.D.O) தஞ்சை, நாள்: 23.2.1979 |
| 24. பொன்னடியான், | சென்னை, நாள்: 6.1.1981 |
| 25. பொன்னிவளவன், | தமிழாசிரியர், மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி, சென்னை, நாள்: 15.9.1982 |
| 26. மாணிக்கம், துரை—(பெருஞ் சித்திரன்), | ஆசிரியர், தென்மொழி, திருவல்லிக்கேணி, சென்னை, நாள்: 29.8.1978 |
| 27. மீரா (மீ. இராசேந்திரன்), | தமிழ்ப்பேராசிரியர், துரைச்சிங்கம் அரசினர் கல்லூரி, சிவகங்கை, நாள்: 19.3.1978 |
| 28. முடியரசன், | தமிழாசிரியர், காரைக்குடி, நாள்: 20.11.1979 |

## முனைவர் மு. தமிழ்க்குடிமகன் எம்.ஏ., பி.எச்.டி.,

15.9.1938இல் சிவகங்கை மாவட்டத்தில் பிறந்த இவர், திருச்சித் தூய வளனார் கல்லூரி, சென்னைப் பச்சையப்பன் கல்லூரி ஆகியவற்றில் உயர்கல்வி பயின்றவர். மதுரை யாதவர் கல்லூரியில் பேராசிரியராகவும் கல்லூரி முதல்வராகவும் 20 ஆண்டுக் காலம் பணியாற்றியவர். தனித் தமிழ் இயக்கத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அது தொடர்பான பல்வேறு பணிகளைச் செய்தவர். பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகளை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றவர். 16க்கு மேற்பட்ட நூல்களை எழுதியவர். மனமாற்றம், கண்ணீர், அந்தமானைப் பாருங்கள் ஆகியவை பல்கலைக் கழகங்களில் பாடமாக இடம்பெற்றவை.

தந்தை பெரியாரின் மீது ஈடுபாடு கொண்ட பகுத்தறிவுக் கொள்கையாளர்.

நாடறிந்த நல்ல பேச்சாளர். பல வெளிநாடுகளுக்குச் சென்று வந்தவர்.

'அறிவு', 'கைகாட்டி' எனும் தனித்தமிழ் இதழ்களை நடத்தியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அன்பான அரவணைப்பால் தமிழகச் சட்டப் பேரவையின் தலைவர் (Speaker) பொறுப்பேற்று இரண்டாண்டுகள் பாராட்டுக்குரிய முறையில் பணியாற்றியவர். இன்று தமிழ் ஆட்சிமொழி அறநிலையத்துறை அமைச்சர்.